தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை

ஆறாம் தொகுதி

(2501 முதல் 3000 நூல்கள் வரை)

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை

ஆறாம் தொகுதி

(2501 முதல் 3000 நூல்கள் வரை)

பதிப்பாசிரியர்

முனைவர் த. கோ. பரமசிவம்
தலைவர், ஓலைச்சுவடித்துறை

தொகுப்பாசிரியர்

புலவர் ப. வெ. நாகராசன்
மோ. கோ. கோவைமணி

தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

ISBN : 81 - 7090 - 195 - 2

இந்நூல் மைய அரசின் தில்லி தேசிய ஆவணக்காப்பகம் வழங்கிய நல்கையின்வழி வெளியிடப்பெறுகிறது.

Published with the financial assistance of National Archives, Govt. of India, New Delhi.

தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு : 79 - 6

திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசித்திங்கள் - நவம்பர் 1992

நூல்	:	தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணை - தொகுதி-6
பதிப்பாசிரியர்	:	முனைவர் த. கோ. பரமசிவம்
பதிப்பு	:	முதற்பதிப்பு
விலை	:	உரு. 85-00
அச்சு	:	தமிழ்ப்பல்கலைக்கழக அச்சகம், தஞ்சாவூர்.

உள்ளுறை

1.	பதிப்புரை	v-xxxiii
2.	தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை (2501 முதல் 3000 நூல்கள்வரை)	1_689
3.	நூலாசிரியர் அகரவரிசை	691_695
4.	நூற்பெயர் அகரவரிசை	696_710
5.	பொருட்பகுப்பு வரிசை	711_713
6.	சுவடிகளின் பொருள்வாரி எண்ணிக்கை	714

தில்லி, தேசிய ஆவணக்காப்பக நல்கைத் திட்டம்

1989- 90

இத்திட்டத்தில் பணியாற்றியோர்

1. முனைவர் த. கோ. பரமசிவம்
   தலைவர், ஓலைச்சுவடித்துறை

2. புலவர் ப. வெ. நாகராசன்
   தொழில்நுட்ப உதவியாளர், ஓலைச்சுவடித்துறை

3. திரு மோ. கோ. கோவைமணி
   திட்ட உதவியாளர், ஓலைச்சுவடித்துறை

4. திருமதி ர. ஜெயலட்சுமி
   திட்ட உதவியாளர், ஓலைச்சுவடித்துறை

பதிப்புரை

இந்நூல் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஓலைச்சுவடித் துறையிலுள்ள தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணையின் ஆறாம் தொகுதியாகும். இதன்கண் 2501 முதல் 3000 வரையிலுள்ள நூல்களின் விரிவான விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. 500 நூல்களின் விளக்கங்கள் கொண்டது ஒரு தொகுதி என்னும் முறையில், ஏற்கெனவே வெளிவந்துள்ள ஐந்து (2500 நூல்கள்) தொகுதிகளுக்குப்பின் தொடரும் 500 நூல்களின் விளக்க அட்டவணையை இத்தொகுதி பெற்றுள்ளது.

ஆறாம் தொகுதியாம் இதில் சுவடிவிளக்கமுறை முதலியன எல்லாம் முதல் ஐந்து தொகுதிகளில் அமைந்துள்ளமை போலவே அமைக்கப்பெற்றுள்ளன. இத்தொகுதியின் தொகுப்புப் பணியை இத்துறையின் மூத்தத் தொழில்நுட்ப உதவியாளர் புலவர் ப. வெ. நாகராசன் அவர்களும், திட்ட உதவியாளர் மோ. கோ. கோவைமணி அவர்களும் மேற்கொண்டிருந்தனர். இத் தொகுதியில் இடம்பெற்றுள்ள சுவடிகள் அன்பளிப்பாகப் பெறப்பட்டும் விலைக்கு வாங்கியும் என இருநிலைகளில் இச்சுவடி நூலகத்தை வந்தடைந்தன. சுவடிகளை வழங்கிய அன்பர்களின் பட்டியல் இப்பதிப்புரையின் நன்றியுரைப் பகுதியில் காணத்தகும்.

பிற தொகுதிகளில் அமைந்துள்ள பின் இணைப்புகளைப் போலவே, நூலாசிரியர் அகரவரிசை, நூற்பெயர் அகர வரிசை, பொருட்பகுப்பு வரிசை, பொருள்வாரி சுவடி எண்ணிக்கை (ஆறு தொகுதிகளுக்கும்) ஆகியன முறைப்படி இத்தொகுதியிலும் அமைக்கப் பெற்றுள்ளன. அவை நூல் ஆய்வார்க்குப் பெரிதும் பயன்தரத் தக்கனவாம். சுவடி விளக்க அட்டவணைப்பணி

தொடரும் பணியாகும். சுவடிகளும் நூல்களும் வந்து சேரச் சேர இவ்வட்டவணைத் தொகுதிகளைப் போன்றே தொடர்ந்து தொகுதிகள் வெளியிடப்பெறும். தேசிய ஆவணக்காப்பகம் இத்தகு தொகுதிகளுக்கு நல்கை வழங்கி ஊக்குவிப்பதுடன் அவற்றைத் தொடர்ந்து வெளியிடுவதற்குரிய ஆக்கங்களையும் வழங்கி வருகிறது என்பது முதற்கண் குறிப்பிடத் தக்கதாம்.

ஆறாம் தொகுதியின் சுவடிகள்

முன் தொகுதிகளில் அமைந்த அமைப்பு முறை போன்றே, இத் தொகுதியிலுள்ள சுவடிகளும் ஆசிரியர் வகையிலோ, நூல் வகையிலோ, நூற்பொருள் அடிப்படையிலோ, ஏடுகளின் அளவு எண்ணிக்கை வகையிலோ அடைவு செய்யப் பெறாமல் - சுவடிகள் வந்து சேர்ந்த தொடர்ச்சியின் வண்ணமே தொடர் எண் கொடுக்கப்பெற்று இங்கு அட்டவணை செய்யப் பெற்றுள்ளன.

இத் தொகுதியில் இலக்கியம், இலக்கணம், மருத்துவம், சோதிடம், நாட்டுப்புறவியல், தத்துவம் போன்ற பல பொருள்களைப் பற்றிய நூல்கள் இடம் பெற்றுள்ளன. சுவடிகள் முழுமை பெற்ற நிலையிலும், குறை நிலையிலும் நல்ல நிலையிலும், பூச்சியரிப்புக்குள்ளாகிச் சிதைந்த நிலையிலும், ஒரு சில படித்தறிய முடியாத நிலையிலும் எனப் பலதரத்தில் அமைந்துள்ளன.

அளவு பற்றிய நிலையிலும் சுவடிகள் வேறுபட்டுள்ளன. ஓரேட்டைக் கொண்ட சுவடிகள் முழுமையாய்க் காணப்படுவதும் உண்டு. பல ஏடுகளைக் கொண்ட சுவடிகள் குறையாக இருப்பதும் உண்டு. அகத்தியர் யோகம் -2541 (ஓரேடு), அகத்தியர் சர்ப்ப ராஜ மாத்திரை -2516 (ஓரேடு), விஷபாக நிதானம்-2524 (ஓரேடு), கவுசிகர் கருத்த குழம்பு - 2515 (ஓர் ஏடு), புசிப்பு விதி - 2506 (2 ஏடு) போன்ற சுவடிகள் அளவில் சிறிய சுவடிகளாகக் காட்சி தருகின்றன.

திருவிளையாடற்புராணம் - 2561 (215 ஏடு), - 2567 (238 ஏடு), கந்தபுராணம் - 2563 (400 ஏடு), நபிகள் வரலாறு - 2802 (336 ஏடு) சுவடிகளும் உண்டு. ஆசிரியர் பெயர் கூட அறிய இயலாத சுவடிகள் பலவாகும். 250க்கும் மேற்பட்ட சுவடிகள் அத்தகைய நிலையின.

அச்சுவிவரம்

இத் திட்டப்பணி குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டிய கட்டுப்பாடுடையதாம். விரைவில் முடிக்க வேண்டிய சூழலால் இத் தொகுதியில் இடம் பெற்றுள்ள சுவடிகள் - நூல்களுக்கு அச்சான விவரம் தரக் கூடவில்லை. அச்சு நூல்களின் விவர அட்டவணை கிடைக்காததும் ஒரு காரணம். அத்துடன் மாற்றுச் சுவடிகள் காணும் இடங்கள் பற்றிய குறிப்பும் தரக்கூட வில்லை.

இத் தொகுதியில் இடம் பெற்றுள்ள பல நூல்கள் ஏற்கெனவே அச்சான நூல்களாகக் காணப்படுகின்றன. ஒரு சில சுவடிகள் அச்சு நூல்களைப் பார்த்து எழுதிய குறிப்பையும் காட்டுகின்றன. இலக்கிய இலக்கண நூல்களில் அச்சாகாத நூல்கள் இத்தொகுதியில் ஏதுமில்லை என்று கூற முடிந்த அளவுக்கு மருத்துவம், சோதிடம், நாட்டுப்புறப் பாடல்கள் போன்றவற்றின் நிலையைத் துணிந்து கூற முடியவில்லை. அவை பல திறத்தனவாகக் காணப்படுகின்றன. எனினும் மேம்போக்காக காணும்போது சில சுவடிகள் இன்னும் வெளியாகவில்லை என்பதை நாம் உணர முடிகிறது. இவ்வகை நூல்களுக்கெல்லாம் முறையான நூல் விவர அட்டவணை கிடைக்கப் பெறும் நாளில் தான் ஒரு நூல் அச்சானதா இல்லையா என்பதை உறுதி செய்யமுடியும்.

சிறப்புச் சுவடிகள்

இத் தொகுதியில் பல்வகைப் பொருள்களைச் சேர்ந்த சுவடிகள் பலவாக இருப்பினும் மருத்துவம் தொடர்பான சுவடிகளே மிகுதியாக இடம்பெற்றுள்ளன. சிறப்புநிலையில்

சில சுவடிகளைக் கூறமுடியும். இலக்கிய இலக்கண வகையில் சில பதிகங்கள், சிற்றிலக்கிய வகையினைச் சார்ந்த சில நூல்கள் குறிக்கத்தக்கன.

பதின்மர் உரையில் அடங்காத ஓர் உரையுடன் திருக்குறள் (2580) ஒன்று குறைச்சுவடியாக உள்ளது. நன்னூல் விருத்தி (2534) முழுமையுடையதாகக் காணப்படுகிறது. பிரமீசர் பதிற்றுப்பத்தந்தாதி (2542). பிரபுலிங்கலீலை (2551) அருள்மலையாண்டவர் திருப்புகழ் (2592), குற்றாலத் தலபுராணம் (2539), திருமுல்லை வாயில் அந்தாதி (2540), குடந்தையந்தாதி (2545), சிவஞானதீபம் (2541), சீவ சம்போதனை (2776) (கிரந்தலிபி இடையிடையே கலந்தநிலையில்), கொக்கோகம் போல மதனமோகன விலாசம் என்ற பெயரில் ஒரு சுவடி (2888) போன்ற சுவடிகள் குறிக்கத்தக்கது.

முத்ததிகாரம் (2616) என்னும் சுவடி யொன்று முத்தின் வகை, குணம், குற்றம் பற்றிய அறிவை வழங்குவதாகக் காணப்படுகிறது. தத்துவக் கீர்த்தனைகள் (2785), சேஷம்மா கீர்த்தனைகள் (2567), பாபநாச முதலிபதம் (2783) என மூன்று கீர்த்தனைச் சுவடிகள் குறிப்பிடத்தக்க இசை நூல்களாகும்.

சூரனூர் நொண்டி நாடகம் (2759), இரணியசம்மார நாடகம் (2771), குசலவ நாடகம் (2774) ஆகிய மூன்று நூல்கள் நாடகத்தமிழைச் சுட்டும் நிலையில் இடம்பெற்றுள்ளன.

நபிகள் வரலாறு (2802) என்னும் சுவடியொன்று 44 நபிகள் பெயரை அட்டவணைப்படுத்தித் தருவதுடன், 44வது நபியின் வரலாற்றை 336 ஏடுகளில் உரைநடையில் விரிவாகத் தந்திருக்கிறது. இஸ்லாமிய அன்பர் (சுபதுல்ரயிமானுடைய ஏடு) ஒருவரின் ஏடாகக் காணப்படும் இது குறிப்பிடத்தக்க சிறப்புடைய ஏடாகும்.

சித்தர் தத்துவத்திரட்டு (2650) என்னும் சுவடி ஒன்று 250 ஏடுகளில் பல்வேறு சித்தர்களின் மருத்துவம், யோகம்,

தத்துவம், ஞானம் தொடர்பான பாடல்களின் தெரிவாகக் காணப்படுகிறது. நூல் திரட்டு முயற்சியில் சித்தர் பாடல்களை இவ்வாறுத் தொகுத்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். இதன் விரிவான குறிப்பை 214 மற்றும் 215ம் பக்கங்களில் காணலாம்.

யமன் தோத்திரப்பத்து (2940) என்னும் நூலொன்று கூற்றுவனை வழிபடும் பத்துப்பாடல்களைக் கொண்ட நிலையில் முழுமையாகக் காணக்கிடக்கிறது. அப்பாடல்களில் காணப்படும் சந்தத் தமிழ்நடை உளங்கொளத்தக்கதாம்.

உலகினிற் கருவாரி திக்கொடிய அழல்தாவி
உள்வருதீ யினில்மூழ்கியே
உருவாகி இருவினைக் குளராகி யேகாசி
னியில்மேவி யேஉதித்துப்
பலபூஷ ணமுமிகவ ணிந்துநட மாடியே
பகராிய மழலைபேசிப்
பருவமத ரூபவடி வாகியே கருவிதப
ராக்ரமத ரூபனாகித்
கலவிமட வார்கள்தரு மயல்கபட நாடகக்
கடல்மூழ்கி யேயுழன்று
கருணைபெறு மடியரடி பரவுநெறி யறிகிலேன்
காத்தருள்வ தெந்தவிதமோ
இலகுபல உயிர்களுக் குயிராய்நி றைந்துவளர்
எந்தையே அந்தகா! வா
இணையிலா மேதிக்க டாவேறி யெனையாளும்
ஈசனே எமராசனே.

இவ்வாறே பத்துப் பாடல்களும் சந்த அருமையுடனும் பொருட் செறிவுடனும் காணப்படுகின்றன. கருடப்பத்து, அனுமன்பத்து, திருமால்பத்து என அமைகின்ற பதிகங்கள் போல இப்பாடல்களுக்கும் ஆசிரியர்பெயர் அறியக் கூடவில்லை.

சோதிடச் சுவடிகள்

இத் தொகுதியில் சில சோதிடச் சுவடிகள் காணப்படுகின்றமை குறிக்கத்தக்கதாம். சினேந்தரமாலை (2641), மனையலங்காரம் (2724), கூவல் சாத்திரம் (2752), கூவல் சல்லியம் (2753), பூமி சல்லியம் (2794), கூப சாத்திரம் (2755), சரநூல் (2634) போன்றவற்றுடன் பெயரறிய முடியாத சோதிடச் செய்திகளைத் தாங்கிய சுவடிகள் சிலவும் காணப்படுகின்றன. மனையலங்காரம், கூபசாத்திரம், கூவல் சல்லியம் போன்ற நூல்கள் தொழில்நுட்பஅறிவைக் காட்டுவதாகவும் தோன்றுகின்றன. இவை முழுச் சுவடிகளாக அமைந்திருப்பது நல்ல செய்தியாகும்.

மருத்துவச் சுவடிகள்

இத் தொகுதியில் பெருமளவில் மருத்துவச் சுவடிகள் இடம் பெற்றுள்ளது. அவற்றுள் குறிக்கத்தக்க இரண்டு சுவடிகள் இலக்கியத்தரமும் மருத்துவப் பொருட்சிறப்பும் கொண்டனவாம். அகத்தியர் வைத்திய காவியம் - 1500 (2571), அகத்தியர் வகாடம் - 1500 (2805) என்னும் சுவடி இத்துறையின் விரிவுரையாளர் முனைவர் வே. இரா. மாதவன் அவர்களால் விரிவாக ஆய்வு செய்யப்பெற்று பதிப்பிக்கப்பெற்றுள்ளது. அச்சுக்குத் தயாராக இருக்கும் அச்சுவடி, நூலாகவெளிவரும் போது சித்த மருத்துவ உலகு பெருமைகொள்ளும்.

இவ்வாறே, தன்வந்திரி வைத்தியக் கும்மி (2875) என்னும் மருத்துவச் சுவடியும் அவரால் விரிவாக ஆய்வு செய்யப்பெற்று அச்சுக்குத் தயாராக்கப் பெற்றுள்ளது. விருத்தப்பா, வெண்பா, அகவல் போன்ற பல்வேறு பாவகையில் மருத்துவச் செய்தியைக் கூற முன்வந்த நம்முன்னோர் பல்வேறு இலக்கிய வகைகளையும் பயன்படுத்தியுள்ளனர். மக்களிடம் அதிகம் பயின்ற கும்மி, குறம், சிந்து போன்ற இலக்கிய வகைகளிலும் தம் மருத்துவச் செய்தியைப் பரப்பியுள்ளனர். சட்டைமுனி ஞானக் குறம் (2925) என்னும் சுவடி எளிமையும் அருமையும் ஒருசேர

அமையப்பெற்ற நிலையில் தத்துவம் ஞானம் யோகம் போன்ற அரிய செய்திகளை வெளிப்படுத்துகிறது.

"வித்தையத்த போதுநித்திய போதமோ சிங்கி
மெத்தவுத்த திதுமேலோ ருரைத்தது சிங்கா
உருக்கியநெய் வெண்ணெயுள் ளுறையாதோடி சிங்கி
- அதில்
திருக்கென் றுமில்லைதெளிந்த தெளிவடா சிங்கா"

என்றவாறு குறவஞ்சி அமைப்பிலேயே நூல் முழுவதும் அமைந்திருப்பது காணத்தகுவதாம்.

ஒரு சுவடிக்கட்டிலேயே (2962_2986) 25 மருத்துவ நூல்கள் தொகுப்பாக அமைந்திருப்பது இத் தொகுதியின் சுவடிகளுள் குறிக்கத்தக்கதாம். நாடிசாத்திரம், சென்ம நிதானம், சரநிதானம், உடலறிவிளக்கம், சன்னிநிதானம், வலியஞ்சின்குணம், வாதநிதானம், பித்தம் நாற்பதின் குணம், சிலேற்பனநிதானம், கிரந்தியின் குணம், விக்கல்நிதானம் எனப்பல நோய்களின் தன்மையை உணர்த்தும் நிலையில், நோய்நாடி நோய்முதல்நாடி எனும் கொள்கையின் விளக்கமாக அமைந்துள்ள அந்நூல்கள் அரிய தொகுப்பாகக் கருத முடியும் சிறப்புடையன எனலாம்.

மருத்துவத்துடன் தொடர்புடைய மாந்திரீக நூல்கள் சிலவும் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இலவண பஞ்சாட்சரம் (2657), சத்துரு சங்காரம் (2658) என நூற் பெயருடன் காணப்படும் சுவடிகளுடன் நூற்பெயர் ஆசிரியர் பெயர் இல்லாத நிலையில் மாந்திரீகம், சல்லியம் என்ற பொதுப்பெயரில் அமைந்த சுவடிகளும் இத்தொகுதியில் காணப்படுகின்றன.

நிழல்குத்துச்சூத்திரம்_32 என்னும் சுவடி (2512) மாந்திரீகச்செய்திகளைக் குறைநிலையில் தருகிறது எனினும் செய்யுள் வடிவில் காணப்படும் அந்நூல் பல அரிய செய்திகளைக் கொண்டிருக்கிறது.

வடிவேல் சதகம் என்னும் நூல் (2582) முழுவதும் மருத்துவச் செய்திகளைத் தாங்கிய சதக வகை இலக்கியமாகும். 'வடிவேல்' என்னும் பெயர் மயக்கமூட்டினும் அது மருத்துவச் செய்திகளைத் தாங்கிய அரிய நூல் என்பதைக் கற்பார் உணர்வர். இவ்வாறு செய்யுள் வடிவில் நூலாசிரியர் பெயருடன் அமைந்த முறையான மருத்துவச் சுவடிகளுடன் திரட்டுகளாக, அனுபவக் குறிப்புகளாக உரைநடை வடிவில் எழுதித் தொகுக்கப் பெற்ற மருத்துவச் சுவடிகள் பல இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. அவை மருத்துவக் குறிப்புகள், மருந்து செய்முறை, நோயும் மருந்தும் போன்ற பொதுப் பெயர்களால் சுட்டப்பெற்றுள்ளன. அச்சுவடிகளில் காணப்படும் குறிப்புகள் நோயும் மருந்தும் ஆய்வார்க்கு மட்டுமல்லாமல் எல்லோர்க்கும் பயன்படும் எளிய முறையுடன் காணப்படுதல் சுட்டத் தகுந்த சிறப்பாகும். சிலவற்றை இங்கே அறிமுகப் படுத்துதல் தகும் என எண்ணுகிறேன்.

பீனி பீனிசத்துக்கு மருந்து:

கப்பம், ஈளை, சளி போன்ற தொல்லைகளால் அவதிப்படுவோர் எண்ணிக்கை கணிசமானதாகும். குறிப்பாகத் தென் தமிழகத்தின் பெரும் பகுதியில் இத்தொல்லைகளுக்கு இலக்கானோர் மிகுதி எனலாம். பீனிசம் என்பதும் இத்தொல்லைகளுள் அடங்கும் சுவாச நோயாகும். இதற்கு எளிய மருந்தொன்றை ஓரேடு (2806) குறிக்கின்றது.

> 'கொல்லங்கோவைக் கிழங்கு, குல்லாதண்டைப் பட்டை, கொடுவில்லி வேர், எருக்கலம்வேர் இவை வகை ஒன்றுக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு 1 மருந்து பூலாங்கிழங்கு விராகனெடை 5, ஏலம் விராகனெடை 5, மஞ்சள் விராகனெடை 5, வெந்தயம் விராகனெடை 5, நல்லெண்ணெய் படி 1 அரைச்சு எண்ணெயிலே கரைச்சு காய்ச்சி முழுகப் பீனிசம், தலை நாசியில் ரத்தம் விழுகிறது கீழாய் விழுகிறது தீரும்!

அதே ஏடு ஆறாத சிரங்குகளுக்கும் சிறந்தொரு மருந்தைக் கூறுகிறது.

> 'பொன்னரி தாராம் விராகனெடை 3, எருமை வெண்ணெய் ஒரு விளங்காய் அளவு கூடப் போட்டரைத்து வழித்து ஒரு கலயத்திலே போட்டுத் தீ எரிய விட்டுப் பொங்கி வருகிற சமயத்திலே இறக்கிக் குளிர்ந்த தண்ணீர் ஒரு சட்டியிலே ஊற்றிப்போட்டு மறு நாள் எடுத்துத் தடவி இலுப்பைப் புண்ணாக்கிட்டுத் தேய்த்து முழுகிப் போடச் சிரங்கு தீரும். இது கைகண்டது.

கல்லடைப்புக்கு மருந்து:

கல்லடைப்பென்பது சிறுநீர் கழிவதில் ஏற்படும் ஒருவகைத் தடை நோயாகும். இது பல்வெறு காரணங்களால் ஏற்படுகிறது. இக்கால மருந்துகள் ஏற்படுத்தும் பக்க விளைவுகள், காரை தொடர்பாக சத்து மிகுந்திருக்கும் தண்ணீர் போன்றவை சிறுநீர்ப் பாதையின் வழியை அடைத்துக் கழலைகளையும் கட்டிகளையும் கற்களையும் உண்டு பண்ணுகின்றன. இத்தடைகள் சிறுநீர்க் கழிப்பில் வேதனையை உண்டு பண்ணுவதோடு சில நேரங்களில் பேராபத்தையும் விளைக்கின்றன. இத் தடையை நீக்க எளிய மருந்தொன்றை ஒரு குறிப்பு (2809) தருகின்றது.

நீரடைப்புக்குத் தயிலம்:

> மாவிலங்கு வடக்குப்போன வேரும், நெருஞ்சி வேரும், சுடுகாட்டில் நிற்கின்ற பிராய்முட்டி வேரும், சிறுபூளை வேரும் இவையெல்லாம் வகைக்கு இரண்டு விராகனெடை போட்டு நறுக்கிக் காய்ச்சி மூன்று நாளைக்கு இந்தப்படி காய்ச்சிக் குடிக்கவும். கல்லடைப்பன் நீரடைப்பன் தீரும்'.

அகவை முதிர்வதால் முடியின் நிறம் மாறியும்

தோலின்தன்மை வேறுபட்டும் நரை திரை தோன்றுவது இயல்பு. ஆயின், அகவை முதிராமலே சிலருக்கு இளமையிலேயே நரை தோன்றுவதும் திரை படர்வதும் உண்டு. அத்தகையோர் நோயின் காரணமாகவே தமக்கு இவ்வாறு மாறுபட்ட சூழல்கள் வாய்த்ததாகக் கவல்வர். அவர்களுக்கும் எளிய மருந்தொன்றைப் பரிந்துரைக்கின்றது ஒரு குறிப்பு (2833)

நரை திரை மாற:

வால் மிளகு படி 1, அவுரி இலைச்சாறுபடி 1, அமரியிலைச் சாறுபடி 1 மூன்றும் ஒரு கலசத்தில் விட்டு சீல் போட்டு சீலை செய்து ஒன்பது நாள் புதைத்து எடுத்துக் கொண்டு அந்தி சந்தி அஞ்சு மிளகு வீதம் இரண்டு மண்டலம் கொள்ள நரை திரை மாறும். கை கண்டது. என்பது நரை திரை மாறுவதற்கு அச்சுவடி தரும் மருத்துவக் குறிப்பாகும்.

கரப்பன்:

கரப்பன் என்பது தோல் நோய்களுள் ஒரு வகையாகும். இந்நோய் கிருமிகளால் பரவுவதோடு ஆகாத உணவுப் பொருள்களாலும் பரவுகிறது, நிலைக்கிறது என்பர். இந்நோய் பல்லாண்டுகள் தொடரும் தன்மையதாகும். இதற்குத் தொடர்ந்த மருத்துவம் இன்றியமையாததாகக் கூறப்படுகிறது. இக் கொடிய நோய்க்கு எணணெய் ஒன்றைப் பரிந்துரைக் கின்றது இங்குள்ள சுவடி (2889) ஒன்று.

கரப்பனுக்கு எண்ணெய்:

நல்லெண்ணெய் படி 1, சிவனார் வேம்புச்சாறு படி 1/2, சிறு செருப்படிச் சாறு படி 1/2, செம்பொன் நெருஞ்சிச்சாறு படி 1/2, சித்திர மூலச்சாறு படி 1/2, சங்கங் குப்பிச்சாறு படி 1/2, கருநொச்சிச் சாறு படி 1/2, வேலிப் பருத்திச் சாறு படி 1/2, வெள்ளெருக்குச் சாறு

படி 1/2, நிலவாகைச்சாறு படி 1/2, நத்தைக் குறிச்சாறு படி 1/2, வெள்ளைக் காக்கணாம் வேர், மூக்கரைச் சாரணை வேர், பெருங்குடும்பி வேர், சங்க வேர், குப்பைமேனி வேர் வகைக்கு 3/4 பலம், சுக்கு, மிளகு, திப்பிலி, உள்ளி, வசம்பு, ஓமம், கடுகு, சீரகம், கார்போக வரிசி, கஸ்தூரி மஞ்சள், சித்தரத்தை வகைக்கு 3/4 பலம், பரங்கிப் பட்டை 5 பலம், பிரப்பங்கிழங்கு 21/2 பலம், இதுவெல்லம் வேர் வகையும் அரைத்து மேற்படி சாற்றில் கலக்கி எண்ணெயில் விட்டுப் பதத்தில் வடிக்கவும். ஆள்திறமறிந்து அந்தி விடிவேளை இரண்டு கரண்டி வீதம் மூன்று நாள் ஏழு பொழுது கொடுக்கவும். பத்தியம், உப்பில்லாத படிக்கு அன்னப்பால் வைத்துச் சாப்பிடவும். கரப்பன் பதார்த்தம், வாய்வுப் பதார்த்தம் ஆகா பத்தியம் நாற்பது நாள் தள்ளு. கை கண்டது. கரைப்பன், வண்டுகடி, சிரங்கு, மண்டைக்கரைப்பன் தீரும்!

நீண்டப் பட்டியலுடன் காணப்பட்டாலும் இம் மருந்தின் செய்முறை எளிமையுடன் காணப்படுதல் நோக்கத்தகுவதாம். இத்தகு எளிய குறிப்புகளையெல்லாம் இன்றைய மருத்துவ அறிஞர்கள் தாம் முன்வந்து ஆய்ந்தும் வெளிப்படுத்தியும் இவற்றின் எளிவந்த தன்மையையும் பெரு நன்மையையும் நிலை நாட்டுதல் வேண்டும்.

மருத்துவ நூற் கொள்கை:

தமிழ் மருத்துவம் குரு சீட பரம்பரையாக அனுபவ பக்குவத்தால் வளர்ச்சி பெறுவதும் வாழ்வதும் ஆகும். மருந்தின் குணம், நோயின் குணம், இவற்றை நன்குணர்ந்து பின் விளைவுகள், முறிப்பான்கள் போன்றவற்றையும் தெளிவாக உணர்ந்தாலன்றி முழுப் பயனையும் அடைய முடியாத மருத்துவம் இது. தேர்ந்த பக்குவமற்ற மருந்துகள் சில எதிர் விளைவுகளைக் கூட தோற்றுவித்து விடும். ஒரே மருந்தை காலையில் உட்கொண்டால் ஒரு பலனையும் மாலையில் உட்கொண்டால் வேறொரு பலனையும் பெற

முடியும். தூது வளைக்கீரைப் பொடியை நெய்யுடன் உட்கொண்டால் உடல் பருக்கும். அதைத் தேனுடன் உட்கொண்டால் உடல் மெலியும் (மருந்து செய்முறை 1937) மிகச் சாதாரணமாகப் பயன்படும் கீரை வகைகள் கூட சூழல் உடன் உண்ணும் துணைப் பொருள், உட்கொள்ளுவரோ வயது போன்றவற்றால் வேறுபட்ட பலன்களைக் கொடுக்க வல்லன என்பதைத் துல்லியமாக உணர்ந்திருந்தவர். நம் முன்னோர். எனவே அவர்தம் மருத்துவ நூற் கொள்கை சற்று கடினமாகக் கூட இருந்தது எனலாம். கிட்டத்தட்ட மந்தன (இரகசிய) அளவிலேயே பரிபாஷைகள், குறியீடுகள் மற்றும் சங்கேதங்கள் போன்றவற்றால் மருத்துவ முறகைள் காக்கப்பெற்று வழி வழியாகத் தொடர்ந்து வளர்க்கப் பெற்றன. அனுபவமற்றோர் பயன்படுத்துவதைத் தடை செய்வதே இதன் தொடக்க நோக்கமாகக் காணப்பட்ட போதிலும் பின்னாளில் அவை பிறரால் அறிய முடியாமலேயே மறைந்தொழிவதற்கும் காரணமாக அமைந்து விட்டதை இன்று நாம் உணர முடிகிறது. மருத்துவ நூல்களில் காணப்படும் குறிப்புகள், தொடக்க முடிவுப் பாடல்கள் இவற்றைச் சுட்டிக் காட்டுகின்றன.

ஆரியமாம் வாகடத்தின் உட்பொருளை ஆராய்ந்து
சீரியதோர் செந்தமிழாற் செப்புகின்றேன்- கூரிய தாய்
உள்ளநிதா னம்சிகிச்சை ஓத விநாயகவே
வள்ளலே என்மனத்துள் வா"

(சித்தர் வெண்பா- 2877)

அண்ணார் வலையில் அரண் சிவன்உ மையவளும்
பண்ணார வேவாதம் பாவித்தார் - கண்ணாய்
வடக்கிருந்த தன்னை வடிவாந் தமிழ்செய்தார்
திடமுடனே யூகிமுனி செப்பு.

(யூகி முனிவாத வைத்தியம் - 2835)

மாதுமை பாகல் சொன்ன வடமொழி நூலை யாய்ந்தே
ஓதிநான் முகத்தோ னாயுள் வேதமாய்ப்
போக்கப் பின்பு

மூதுரை யுணர்ந்த நாதன் முனிவனும் தமிழால்
செய்தான்
தீதிலா விழியி னுள்ள தோசத்தைத் தெளிந்து தானே
(தட்சணாமூர்த்திநயண விதி - 2840)

இம்மூன்று பாடல்களும் சித்தர்கள் வடமொழியிற் கண்ட மருத்துவச் செய்திகளைத் தமிழிற் செய்து வழங்கினர் எனக் கூறுகின்றன. சித்த மருத்துவத்தை ஆயுள் வேதத்துடன் இணைத்துக் கூறும் இச் செய்தி ஆய்வுக்குரிய ஒன்றாகும்.

கேளப்பா பதினென்பேர் மட்டும் தானும்
கிருபையால் என்கிட்ட இருந்த தென்றால்
தாளப்பா நோய் அறிந்து செய்தாயென்றால்
நலமாக உன்னைப் போல் வைத்யர் இல்லை
மானப்பா பெருநூலில் அலைய வேண்டாம்
மைந்தனே சிறுநூலை யூணிப் பாரு
வாளப்பா மானிடரே சுருக்காய்ச் சொன்னேன்
வகைதொகையாய் மச்சமுனி பாடல் முற்றே
(மச்ச முனி 8 - 2702)

கானென்ன சித்தருக்கும் உலகத் தோர்க்கும்
கருத்தாகச் சொல்லிவிட்டேன் வசூரி முற்றே
(அகத்தியர் வசூரி - 2884)

வையப்பா சகலகலைச் செய்தி யெல்லாம்
அழகாக அடக்கிவெகு தெளிவாய்ச் சொன்னேன்
அய்யமென்று நினையாதே பிழைபே சாதே
ஆத்தாளை அனுதினமும் மறவாதே நீ
செய்யாதே தீவினைதான் கொடிது பாவம்
செந்து வெல்லாம் ஈசனென்று தெளிந்து காணு
மெய்யான குருபதத்தைப் பணிந்து போற்றி
விளம்பினேன் கருக்கிடைச் சூத்திரந்தான்முற்றே
(கருக்கிடைச்சூத்திரம் - 2662)

என்றவாறெல்லாம், பொதுவாக உலகத்தவர் நன்மை யடையும் பொருட்டே இச்செய்திகளை வெளிப்படுத்தியதாக, எல்லோர்க்கும் வெளிப்படுத்தியதாகக் கூறுகின்றன. சில படால்களோ மறை பொருளில் கருத்தூன்றியுள்ளன. எனினும், எல்லோரும் பயன்படுத்த வேண்டும், எல்லோர்க்கும் பயன்பட வேண்டும். என்னும் நோக்கிலேயே நூல்கல் செய்யப்பட்டமையைச் சுட்டுகின்றன.

சில பாடல்கள் இதற்கு முரணான கருத்தையும் வெளியிடுகின்றன. மருத்துவம் என்பது ஒரு குறிப்பிட்ட அறிவினையுடையவர்க்கே பயன் தரும். அது தொடர்பாக எழுதப்படுகின்ற நூல்களும் பிறவும் அக்குறிப்பிட்ட அறிவினையுடையார்க்கே பயன்படும் பிறர்க்காக அவை எழுதப்பட்டனவல்ல என்னும் கொள்கையை வலியுறுத்துவது போல, கிட்டத்தட்ட ஆசான் மாணவர் முறைக்கு மட்டுமே உரியது என்பன போல அமைந்த குறிப்புகளும் இச் சுவடிகளில் காணப்படுகின்றன.

ஆமிந்த இருநூற்றுப் பதினாறுக்குள்
அடக்கிவைத்த பொருள்களெலாம் வெளியாய்ச் சொன்னேன்
ஓமிந்த வுலகத்தில் இந்நூல் கிட்டில்
உலகத்தில் சித்ததிக மாகிப் போவார்
தாமிந்தச் சாத்திரத்தான் கணியாது ஈந்தால்
தலைதெறித்துப் போகுமடா சத்யம் சொன்னேன்
நானிந்தப் படி சொன்னோம் யோகிக் கீவாய்
நலமான சூத்திரந்தான் முற்று முற்றே
(அகத்தியர் பூரண சூத்திரம் - 2577)

செய்யப்பா இந்நூல்தான் பதினாறுக்குள்
திரட்டிவைத்தேன் ஞானமெல்லாந் தீர்க்க மாக
மெய்யப்பா பன்னிரெண்டு வருடங் காத்து
மேன்மையுடன் திரிந்தாலும் வீணருக்குக்
கையப்பா இந்நூலைக் காட்டி டாதே
கர்மம்வந்து சேருமடா கண்டு பாரு

வையப்பா என்னூலாம் பதினாறு முற்றும்
(கப். ஞானம் - 2899)

ஓதியதோர் சூத்திரந்தான் பத்து மாகும்
ஒருவருக்கும் விற்காதே நூல்கொ டாதே
(அகத். சூத்திரம் - 2881)

விடாதே நூல்கல் ஒருத்தருக்கும்
கண்டால் ஒருநூல் வெளிவிடாத
காட்சி எழுதி முகித்ததுவே
(வைத். காண்டம் - 2719)

அல்லடா பசுக்களுக்கு நூலை யீந்தால்
அந்திர இடி விழுந்து தலைதெறிக்கும் பாரு
(இராமதேவர் பட்சணி - 2661).

இவ்வாறு அமைகின்ற விழிப்புணர்வுப் பாடல்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டியதன் தேவையை வலியுறுத்துகின்றன.

சுத்தனாய் இருந்தக்கால் சொல்வேன் பாரு (தந்வந்திரி வைத்தியத் திரட்டு - 2885) என்று சில நூல்கள் மருத்துவத் தகுதியைச் சுட்டியுள்ளன. சில நூல்கள் இவ்விதியின் அடுத்த கட்டத்துக்கு சென்று மிரட்டுகின்றன. பன்னிரெண்டு வருடங்கள் உடனிருந்து காத்திருந்தாலும் வீணர்களாயின் அவர்களுக்கு நூல் கொடுக்கக் கூடாது என்கின்றன, தகுதியைக் கணிக்காமல் நூல் வழங்கினால் கொடுப்பவனுடைய தலை தறிந்து விடும், இடி விழும் என்கின்றன. நூல் கொடாதே, நூல் விற்காதே என்கின்றன.

இவற்றையெல்லாம் நுண்ணின் ஆய்வு செய்தால் மருத்துவ நூல்கள் யாவும் தகுதி பெற்றாரே பயன்படுத்தத்தக்க அருமையுடையன என்னும் உண்மை, புலனாகும். மருத்துவன், நோயாளியின் மனநிலையறிந்து அவனுக்கு நம்பிக்கை யூட்டும் வசியத்தையும்

பெற்றிருக்கவேண்டும். வடித்த கலை வயித்தியற்கு வசியம் வேண்டும் (அகத்தியர் வைத்தியம் - 2831) என்று ஒரு சுவடி பரிந்துரைக்கின்றது.இப்படிப் பல்வேறு தகுதிகளுக்காக ஏற்படுத்தப் பெற்ற இத்தடைகள் நாளடைவில் மருத்துவ வளர்ச்சியை வாழ்வைத் தடை செய்யும் தடைக் கற்களாகவும் அமைந்து விட்டன. மந்தண முறை மருத்துவத்தால் அழிந்த சித்த மருத்துவ முறைகளை எண்ணி எண்ணி உருக வேண்டியுள்ளது. எஞ்சியுள்ள நூல்களையாவது அறிஞர் உலகு ஆய்வு செய்து வெளிப்படுத்தித் தமிழுக்கும் மருத்துவத்துக்கும் நலம் செய்வதாக.

பிற்குறிப்புகள் தரும் சிறப்புச் செய்திகள்

சுவடியின் இறுதியில் நூலுக்குப் புறம்பாகச் சில குறிப்புகள் காணப்படுவதுண்டு. சில சுவடிகளில் நூல் தொடங்கு முன்பே சுவடியின் முதல் பக்கத்தில் முகப்பு ஏட்டிலே கூட சில குறிப்புகள் காணப்படும். இக்குறிப்புகள் பெரும்பாலும் சுவடி உரிமையாளர் பெயர், நூற்பெயர், நூலாசிரியர் பெயர், சுவடி எழுதப்பட்ட காலம், எழுதத் தொடங்கிய காலம், நிறைவு செய்த காலம், எழுதியவர் பெயர் போன்ற விவரங்களைத் தரும். சில சுவடிகள் மிகச் சுருக்கமான விவரத்தைத் தரும். சில விரிவான விளக்கத்துடன் காணப்படும். இவை சுவடி வரலாறு, பயன் போன்ற செய்திகளைத் தருவதால் ஊன்றிப் பயில வேண்டிய தகுதியைப் பெறுகின்றன.

'கந்தசாமி சுவடி' சூடாமணி நிகண்டு - 2591
'சுபதுல் ரயிமானுடைய எடு' நபி வரலாறு - 2801
'வடமலைபிள்ளை குமரன் சின்னையன் ஏடு'
திருவிளையாடற்புராணம் - 2567

என மிகச் சுருக்கமாகச் சில குறிப்புகள் சுவடி உரிமையாளரின் பெயரை மட்டும் சுட்டி நிற்கின்றன.

சில சுவடிகளின் குறிப்புகள் இவ்வுரிமையைச் சற்று

விரிவாகவும் கூறுகின்றன.

> 'ஸ்ரீவல்லிபுத்தூ ரிலிருக்கும் அருணாசலம்பிள்ளைமகன் சாமிநாதன் சரநூல்'
>
> \- சரநூல் 2635.

> 'ஸ்ரீரங்கம் தெற்குவாசல் மூங்கிக்குத்துத் தெருவிலிருக்கும் அருணாசலம் எழுதி முகிந்தது முற்றும்'
>
> \- அருணாசலப்பத்து - 2589

> 'சுப்பிரமணியமா குருதேசிகர் அடிமையாகிய சுப்பிரமணியத் தம்பிரான் நன்னூல் நீடூழி வாழ்க'
>
> \- நன்னூல் விருத்தி - 2534

என்ற நிலையில் முகவரியுடன் அவ்வுரிமையைக் குறிப்பிடுகின்றன.

காலக் குறிப்புகள்

சுவடிக் குறிப்புகளில் காணப்படும் காலக் குறிப்புகள் வருடம், மாதம், நாள். நட்சத்திரம் போன்ற குறிப்புகளையே காட்டுகின்றன. சில சுவடிகள் கலியுகம், சாலிவாகன ஆண்டு கொல்லம் ஆண்டு போன்ற தொடர் ஆண்டுகளையும் குறிக்கின்றன. பின்னாளில் எழுதப்பெற்ற சுவடிகளில் ஆங்கில ஆண்டும் ஆங்கில மாதமும் தேதியும் கூட காணப்படுகின்றன. தொடர் ஆண்டுகள் காணப்படும் சுவடிகள் காலத்தைக் கணக்கிடுவதில் எளிமையையும் துல்லியத்தையும் சுட்டுவனவாக உள்ளன.

> 'பிரமாதி வருடம் தை மாதம் 12ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையும் பூர்வ பட்சத்து நவமியும் பரணி நட்சத்திரமும் விடிஞ்சு ஒரு சாமத்தில் சாதய யோக வேளையும் கும்பலக்னத்தில் சரநூல் எழுதி முற்றும்'
>
> \- சரநூல் - 2635

இத்தகு முழுமையான பஞ்சாங்கக் குறிப்புகள் தொடர் ஆண்டைக் குறிக்காத நிலையிலும் காலக் கணிப்பில் பெரிதும் எளிமையைச் செய்கின்றன எனலாம். எல்.டி. சுவாமிக்கண்ணு அவர்களின் பஞ்சாங்கக் கணிப்பைக் கொண்டு துல்லியமான காலத்தை நாம் உருதி செய்ய இவை போதும். ஆயின்,

> 'விரோதிகிருது வருஷம் ஆடி மாதம் 27ஆம் தேதி
> ஞானவாசிட்டம் எழுதி முடிந்தது'
>
> – ஞானவாசிட்டம் – 2546

> 'விரோதிகிருது வருஷம் ஆவணி மாதம் 28ஆம் நாள்
> எழுதி முடிந்தது'
>
> – மயில்பத்து– 2575

எனக் குறைவான குறிப்புகளைக் கொடுக்கும் இத்தகு சுவடிக் குறிப்புகள் காலக்கணிப்பில் குழப்பம் காட்டுவனவாம். அறுபது ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் விரோதிகிருது ஆண்டு எந்தக் காலத்தைச் சேர்ந்தது என்பதை எவ்வாறு உறுதி செய்வது! கடினமே நாளும் நட்சத்திரமும் இல்லாத இவ்வகைக் குறிப்பால் துல்லியக் கணிப்பு ஏற்படாது.

சில சுவடிகள் தொடர் ஆண்டுகளை மட்டுமே சிறப்பித்துக் காட்டியுள்ளன.

> '971ஆம் வருடம் கார்த்திகை மாதம் 13ஆம் தேதி
> சுக்கிர வாரம்'
>
> – திருவாதவூரர்புராணம் – 2543

> '928ஆம் வருடம் மாசி மாதம் 10ஆம் தேதி
> எழுதி முடிந்தது'
>
> – திருவாசகம் – 2547

இக்குறிப்புகல் ஒரு சுவடி எத்தனை ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதைக் காணக் துனை செய்வனவாம்.

'1950 ஆம் வருடம் டிசம்பர் மாதம் 1ஆம் தேதி கொல்லம் 1209 ஆம் வருடம் விஜய வருடம் கார்த்திகை மாதம் 16ஆம் தேதி ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்கா ராஜபாளையம் சீவல்பட்டித் தெரு அ. புளுகாண்டியா பிள்ளை என்ற சாந்தலிங்கம் அழகப்பப்பிள்ளை குமாரர் ஏடு.'

_ சருவபட்சினி _ 2920

என ஆங்கில வருடத்துடன் நம் தொடர் ஆண்டையும் இணைத்துக் காட்டித் துல்லியமாகக் கூறியுள்ள குறிப்புகளும் காணப்படுகின்றன. ஆங்கில ஆண்டு மாதம் மட்டுமே குறித்துள்ள சுவடிகளும் பிற்காலச் சுவடிகளில் காணப்படுகின்றன. இவ்வகைக் காலக்குறிப்புகள் சுவடியின் காலம் சுவடியில் காணப்பெறும் நூலின் காலம், பிற வரலாற்றுண்மைகளை யறியத்துணை செய்கின்றன. சில நேரங்களில் சமூகப் பொருளாதார மொழியியல் ஆய்வுகளுக்குத் துணை செய்யும் நிலையிலும் இவை அமைகின்றன. எனவே, சுவடிக்குறிப்புகளில் காணப்படும் காலக்குறிப்புகள் சிறப்புக்குரிய குறிப்புகளாகக் கருதப்படுகின்றன.

சுவடி எழுதுவோர்.

சுவடி எழுதுவோரில் தொழின்முறை எழுத்தர் பயின்முறை எழுத்தர் என இரு பிரிவினர் இருந்ததாக உணர முடிகிறது. பத்திரம், ஒப்பந்தம் போன்ற ஆவணங்களை எழுதுவோர் பிறர்க்காக எழுதினாலும் தமக்காக எழுதினாலும் எழுதியவர் பெயரைக் குறிப்பது வழக்கம். அத்துடன் கையொப்பத்தையும் அவை பெற்றிருக்கும். அவ்வாறே சுவடிகளின் குறிப்புகளில் சுவடி எழுதியோர் பெயர் காணப்படுவதும் ஈண்டுக் குறிப்பிடத் தக்க செய்தியாகும்.

'இராமலிங்கம் கையெழுத்து'

_ பிரமமுனி வைத். சுக். _ 2660

'சிவராமன் எழுதினது'

– சச்சிதானந்தமாலை – 2579

எனச் சிறு குறிப்புடன் அமைகின்ற சுவடிகளுடன் சற்று விரிவான செய்திகளைத் தாங்கி நிற்கின்ற சுவடிகளும் காணப்படுகின்றன.

'தம்பிக்கு நல்லவன் கோட்டையிலிருக்கும் இராமசாமிக் குருக்ளையர் பிள்ளை சுப்பய்யர் புஸ்தகம். பிரமாதி வருடம் மார்கழி 22ம் தேதி சுப்பையர் கையினால் எழுதியது'

– மாந்திரீகம் – 2644

'1015ஆம் வருடம் சித்திரை மாதம் 15ஆம் தேதி மேலகரத்திலிருக்கும் சுப்பிரமணியன் கவிராசர் அவர்கள் குமாரன் ராசப்பன் கவிராயர் எழுதி வருகிற புரபுலிங்கலீலை நீடுழி காலம் வாழ்க'

– பிரபுலிங்கலீலை – 2551

என முற்குறிப்பொன்றை எழுதுவோன், உரிமையாளர், காலம், இடம் ஆகிய விவரங்களுடன் தந்துவிட்டு, அச்சுவடியின் இறுதியில் அது முடிந்த நாளையும் குறிப்பிடுகின்றது அச்சுவடி.

'1015ஆம் வருடம் பங்குனி மாதம் 21ஆம் தேதி புந்தி வாரமும் பூரட்டாதி நட்சத்திரமும் சதுர்த்தசியும் கூடின சுபதினத்தில் பிரபுலீங்கலீலை எழுதி முகிந்தது.'

மேலகரம் ராசப்பக் கவிராயருக்குச் சற்றேறக் குறைய இச்சுவடியை (90 ஏடுகள்) எழுதுவதற்கு ஓராண்டுக்காலம் பிடித்திருக்கிறது என்னும் செய்தியை இது அறிவிப்பதாகவும் சுவடியின் காலத்தை உறுதிப்படுத்த இக்காலக் குறிப்பு துணைசெய்வதாகவும் நாம் உணரலாம்.

'1024ஆம் வருடம் பங்குனி மாதம் 24ஆம் தேதி பனையூர்

> மீனாட்சியம்மன் கோவிலிலிருந்து எழுதினது. குலசேகரராசா அவர்கள் கட்டிவைத்த கோயில். சொக்கர் மீனாட்சி அம்மன் கோயில். அதிலிருந்து எழுதினது நல்லசிவன். ஏடு நீடுழி காலம் வாழ்க. சொக்கலிங்கம் துணை'
>
> - மனையலங்காரம் - 2724

என ஏடெழுதியவன் எங்கிருந்து எழுதினான் என்ற இடவிவரத்தையும் சில சுவடிகள் சுட்டுகின்றன.

> 'இந்த ஞானம் இருநூறு பாட்டு விசையாந்திரத்தில் சுக்கிர வாரம் .... எழுதி முகிந்தது. முற்றும். ரங்கய்ய நாயக்கர் கையால் எழுதினது.'
>
> - சட்டைமுனி ஞானம் - 2822

ரங்கய்ய நாயக்கர் தாமே சுவடி எழுதுபவர் என்பது இக்குறிப்பால் உணரமுடியும் செய்தியாகும். இவருக்குப் பிறரும் சுவடி எழுதிக் கொடுத்திருக்கும் செய்தியை வேறு சில சுவடிகள் சுட்டுகின்றன.

> 'சர்வதாரி வருடம் ஆனி மாதம் 21ஆம் தேதி வியாழக்கிழமை குருவின் நாள் மக நட்சத்திரத்திலே பாளையங்கோட்டையில் மூணாம்பட்டாளம் நாலாங் கும்பினியிலிருக்கும் ரெங்கைய்ய நாயக்கருக்குத் திருப்புவனத்தில் இருக்கும் பிச்சபிள்ளை குமாரன் அழகப்பன் அகத்திய நாயனார் அருளிச் செய்த எண்பதும் எழுதிக் கொடுத்தேன்.'
>
> - அகத். சூத். - 2816

> 'இந்த ரசவர்க்கம் எழுதினது திருப்புவனத்தில் இருக்கும் பிச்சபிள்ளை குமாரன் அழகப்பன் எழுதி ரெங்கய நாயக்கருக்குக் கொடுத்தோம்.'
>
> - அகத். ரசவர்க்கம் - 2818

இவ்வாறே இச் சுவடிகளைத் தொடரும் சில நூல்களை

அழகப்பன் எழுதிக் கொடுத்தாகக் காணப்படுகிறது. அழகப்புன் அவர்களுடைய மகனும் சுவடி எழுதுவதில் வல்லவர் என்பதை இன்னொரு குறிப்பு காட்டுகிறது.

> 'இந்த ஞானம் எழுதினது திருப்புவனத்தில் இருக்கும் கோனேரி அழகப்பப்பிள்ளை குமாரன் சின்னதம்பி கையெழுத்து'
>
> - அகத். ஞானம் _ 2817

இவரே பூரண சந்திரவாலை (2828) என்ற சுவடியையும் எழுதிக்கொடுத்துள்ளார். எனவே, தந்தையும் மகனும் தொழில் முறை எழுத்தராக விருந்து பலருக்கும் சுவடி எழுதிக் கொடுத்த சூழலை இவ்வகைக் குறிப்புகள் காட்டுகின்றன எனலாம்.

இவ்வாறு எழுதுகின்றவர்கள் தமக்கு மூலமாக இருந்த சுவடியைக் குறித்துக் காட்டுவதும் உண்டு, நம் சுவடிகள், நூல்கள் எல்லாமே வழி வழியாக ஒன்றைப் பார்த்து ஒன்று எழுதப்பெற்று நிலைத்தனவன்றோ?

> 'இலட்சுமணப்பிள்ளை பெயரன் மாரிமுத்து புத்தகத்தைப் பார்த்து முத்தரசு எழுதினது'
>
> _ தர்க்கநூல் _ 2607

இவ்வாறு அமைகின்ற குறிப்பு சில சுவடிகளில் இன்னும் விரிவாகவும் காணப்படுகிறது.

> 'இந்தக் குருநாடி சாத்திரம் மேல்ப்பிரதி எழுதினபேர் எள்ளளவும் வாசிப்பில்லாத பேரானதால் அவ்வளவும் சுத்த அபத்தமாகி எழுதி இருந்ததைச் சாஸ்த்திரப் பிரதியினாலே எழுத வேண்டியதால் மனதிலுதித்து மேல்ப் பிரதியில் எழுதி இருந்தபடிக்கு எழுதி வைத்திருப்பதாய்ப் பெரியோர்கள் கோபஞ் செய்யாமல் சித்தத்தில் கொண்டருளிச் சொற்குற்றம் பொருள்குற்றம் அட்சர வித்தியாசங்களிருப்பதை

இன்னபடியென்று என்போலொத்த பேதைகளுக்கு அறிவுண்டாகும் படிக்கொடுத்து ரெட்சித்துக் காப்பாற்ற வேண்டுவது'

- அகத்- குருநாடி சாத்திரம் - 2947

இக்குறிப்புகள் தொழில்முறை எழுத்தரால் அதிகம் படிக்காதவர்கள் என்பதையும் அவர்களால் ஏடுகளில் பிழைகள் ஏற்பட்டிருக்கும் வாய்ப்புண்டு என்பதையும் உறுதி செய்வதாகும்.

திரும்பத்தருக

சுவடிகளில், அவையடக்கமாகத் தம்மைத் திருத்த வேண்டும் என்று எழுதி வைப்பது போல சுவடியைப் படிப்பார் படித்துவிட்டுத் திரும்பக் கொடுத்துவிட வேண்டும் என்றும் எழுதி வைத்துள்ளனர்.

'சாமிப் பண்டிதருடைய குருநாடி சாஸ்திர ஏடு. யாராவது இந்த ஏட்டை: எடுத்தால் தயவுசெய்து தந்திட வேண்டியது.'

- குருநாடி தாத்திரம் -2680

'செங்கத்துள்ளிருக்கும் காளியப்பக் கவுண்டர் குமாரன் நஞ்சப்பக்கவுண்டர் அவர்கள் சூரனூர் நொண்டி நாடகம் எடுத்தவர், வாங்கிக்கொண்டு போனவர் யாவரும் படித்து விட்டுக் கொடுக்கவும்'

- 2759

'நாராயணத்தேவர் தட்சிணாமூர்த்தி சித்திரவெண்பா. எடுத்தவர்கள் வாசித்துப் பார்த்துக் கொடுக்கவும்,'

- 2911

என்றெல்லாம் காணப்படுகின்றன. சில சுவடிகளில் திரும்பக் கொடுக்காதவர் பெறும் பழி பாவங்களைச் சுட்டி எச்சரித்தும் சில குறிப்புகள் காணப்படுகின்றன. இவை

நூலுடைமையில் நம் முன்னார்க்கிருந்த பற்றைப் புலப்படுத்துவனவாம்.

வாழ்த்தும் பயனும்

பிற்குறிப்பில் காணப்படும் சில குறிப்புகள் நூலின் வாழ்த்தைச் சுட்டுவதாகவும் நூற்பயனைச் சுட்டுவதாகவும் அமைந்திருக்கவும் காணலாம்.

பாடினோர் படித்தோர் கேட்டோர்
பரிவுடன் எழுதி வைத்தோர்
ஆடினோர் புதல்வர் பெற்றே
அகிலமேல் அநேகங் காலம்
வீடுபெற்று உய்ந்து மென்மேல்
வீரமும் பசுவும் பெற்று
நாடெலாம் மழைகள் பெய்து
நன்மையாய் வாழி தானே

- சூரனூர் நொண்டி நாடகம் - 2759

'இந்த அணியரங்கப்பத்து எழுதின பேர், படித்த பேர் படிக்கச் சொல்லிக் கேட்டபேர் ஸ்ரீமகாவிஷ்ணு பாதார விந்தம் சேரலாம்'

- அணியரங்கப்பத்து- 2574

இவ்வாறு பல்வேறு செய்திகளைத் தாங்கிய வண்ணம் சுவடிகளில் காணப்படும் குறிப்புகள் காணப்படுகின்றன. இவை மொழியாய்வார்க்கு, நூலாய்வார்க்கு, வரலாறு ஆய்வார்க்கு, நூல் பதிப்பிப்பார்க்குப் பெரிதும் பயன்தரத் தக்கனவாம். இவைவிரிக்கின் பெருகும். எனவே, எல்லா நூலுக்கும் பொதுவாக அமைந்த வாழ்த்தொன்றை நோக்கி அட்டவணையுள் செல்வோமாக.

அறியுமுக லன்னைபிதா குருவும் வாழி
ஆனதெய்வ வாலயமுந் தேவர் வாழி
நீதிபஞ்சாக் கரம்வேதா கமமே வாழி

நீதிபஞ்சாக் கரம்வேதா கமமே வாழி
பொறுமையுள வரசர்களு நீதிகளும் வாழி
பொய்யில்லாப் பத்தர்பத் தினிகள் வாழி
திறமுடைய பொன்மன்றின் நடனம் வாழி
தேசமெலாஞ் செழித்துமிக வாழி வாழி

\- விவேகசாரம் - 2923.

நன்றியுரை

ஓலைச்சுவடித்துறையின் நூலக வளர்ச்சிக்கும் சுவடி விளக்க அட்டவணைத் தொகுதிகளுக்கும் மூல காரணமாக விளங்குவது தமிழார்வலர்களின் நல்லெண்ணமே ஆகும். பலரின் ஒத்துழைப்பும் ஊக்கமும் சுவடி நூலகத்தை விரிவு செய்து இத்துறையை வளர்ப்பதில்முன்னிற்பதை நன்றியுடன் உணரமுடிகிறது. சுவடி வழங்கி ஊக்கம் தரும் அவர்களுக்கெல்லாம் முதற்கண் நன்றி பாராட்டுவதே சாலப் பொருத்தமுடையதாகும். தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறைக்குத் தமிழ்ச் சுவடிகளையும் பிற மொழிச் சுவடிகளையும் வழங்கியோர் பலராவர். திருக்கோயில்கள், திருமடங்கல் போன்ற சமய நிறுவனங்கள் முதலாகத் தனிப்பட்ட புலவர் குடும்பத்தினர், மருத்துவப் பரம்பரையினர், சோதிடர், கல்லூரி, பள்ளி ஆசிரியர் எனப் பலரும் இவ் அறக்கொடையில் இடம் பெற்றுள்ளனர். தங்களிடமிருந்த சுவடிகளின் பாதுகாப்பு, பாமரிப்பு, ஆகியவற்றுடன் அவை வெளிவரவேண்டும் என்ற அக்கறையையும் உளங்கொண்டு அவற்றையெல்லாம் வழங்கியுள்ளனர். இது ஓலைச்சுவடிகளுக்காகத் தனிப்பட்ட ஒரு துறையை உருவாக்கிச் சிறப்பித்திருக்கும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பால் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையைப் புலப்படுத்துவதாம். அவர்களின் நம்பிக்கையை உறுதி செய்யும் வண்ணம் இத்துறை அவர்களிடமிருந்து பெற்ற சுவடிகளை அறிவியல் முறைப்படி தூய்மை செய்து, பூச்சிநீக்கம் செய்து காப்பு எண்ணெய்பூசிப் பாதுகாத்து வருகிறது. இன்று அவற்றின் விளக்க அட்டவணையையும் தொகுதிகளாக . வெளியிட்டு

மகிழ்கின்றது.

ஓலைச்சுவடிகளை எவ்வாறேனும் தேடித் தொகுத்துப் பாதுகாக்க வேண்டும் என்னும் உயரிய எண்ணத்தில் சுவடி உரிமையாளர்க்கு ஊக்கத்தொகை வழங்கி, சுவடிகளைப் பெற்றுப் பாதுகாக்கும் முறை அண்மைக்கால மாகப்பின்பற்றப்படுகிறு. இது தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறைவேற்றி வருகின்ற குறிக்கத்தக்க சிறப்புச் செய்தியாகும்.

ஊக்கத் தொகை வழங்குவதற்கென்றே சுவடி மதிப்பீட்டுக் குழு ஒன்றை நிறுவி. சுவடிகளை உரியவகையில் மதிப்பிட்டு உரிய தொகையை வழங்கிப் பெற்ற சுவடிகளும் பலவாகும். இத்தொகுதியில் அத்தகு சுவடிகளும் இடம் பெற்றுள்ளன. எனவே, சுவடியை அன்பளிப்பாகவும் விலைக்கும் வழங்கிய அவ்வன்பர்களின் பட்டியலை இங்கே வெளியிடுவதில் தமிழ்ப் பல்கலைக்கழகம் பெருமையும் பூரிப்பும் கொள்கின்றது. அவர்கள் அனைவர்க்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம் பெரிதும் நன்றி பாராட்டுகின்றது. சுவடி நன்கொடையாளர்களின் பெயர்ப் பட்டியலை இங்கே இணைப்பதுடன் அவர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்று இத்துறையின் வண்ண அறிவிப்புப் பலகையில் நிரந்தரமாக இடம் பெற்றுள்ளது என்பதையும் நன்றியுடன் குறிப்பிடுகின்றேன்.

சுவடி நன்கொடையாளர் பட்டியல்

(எண்கள்: சுவடிகளின் தொடர் எண்களைக் குறிக்கின்றன)

1.	திரு. கந்தசாமி, இளம்பள்ளி, சேலம் மாவட்டம்	1952 - 1969
2.	சி. ஞானாம்பாள், செல்வபுரம், கோவை	2019 - 2033
3.	பேரா. வீரபத்திரன், வடசேரி	2151
4.	இரா. மாரியப்பன், இராசபாளையம்	2158

5. சி. சபாபதி முதலியார், முட்டியூர், தெ. ஆ. மாவட்டம் 2136
6. தணிகாசல கவுண்டர், ஆலம்பூண்டி, தெ. ஆ. மாவட்டம் 2137_2138
7. கொ. சீனிவாசரெட்டி, பிள்ளையார்பட்டி 2139
8. இரா. பாலகிருட்டிணரெட்டியார், கொல்லியங்குணம் 2140 _ 2142

சுவடி வழங்கி ஊக்கத்தொகை பெற்றோர் பட்டியல்

1. மேலகரம் சு. இராமலிங்கக் கவிராயர் 1970_2001
2. எஸ். சின்னாடார், அகஸ்தீஸ்வரம் 2002_2003, 2152_2157
3. ஆ. கண்ணன், கருங்குளம் 2004_2007
4. திருமதி. நளாயினி, இராசபாளையம் 2008_ 2018
5. கே. ஆர். சீனிவாசன், கோவை 2034_ 2135
6. டாகடர் பி. இராசலிங்கம், இராசபாளையம் 2159_ 2249
7. சிதம்பரக் குற்றாலம், நாகர்கோயில் 2250_ 2260

தாம் பொறுப்பெற்றுக்கொண்ட நாள்முதலாக இத்திட்டத்தின் வளர்ச்சி சிறப்பாக அமையவேண்டி அவ்வப்போது ஊக்கியும் ஆணை வழங்கியும் துணை நின்றவர் மாண்புநிறை துணைவேந்தர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் ஆவார். அவர்கள் வழங்கிய ஊக்கத்திற்கும் ஆக்கத்திற்கும் இத்துறை பெரிதும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையாதாகும்.

தில்லி தேசிய ஆவணக்காப்பகம் ஆண்டுதோறும் இத்துறையின் திட்டங்களை வரவேற்று நல்கை வழங்கி ஊக்கிவருகிறு. தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணையின் ஆறாம் தொகுதியாக இந்நூல் தேசிய ஆவணக்காப்பகத்தின் நான்காவது திட்டத்தின் வழி வெளிவருகின்றது. இத்திட்டத்திற்கு ரூ. 50,000 நல்கை வழங்கிச் சிறப்பித்த தில்லி

தேசிய ஆவணக் காப்பக இயக்குநர் மற்றும் அலுவலர்கட்கு இத்துறை பெரிதும் நன்றி பாராட்டுகிறது. இத்திட்டம் முறைப்படி நிறைவுறுவதற்கு வேண்டிய எஞ்சிய செலவை நம் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஏற்றுக்கொண்டது. எனவே, தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கும் இத்துறை தனிப்பட்ட நன்றி பாராட்டி மிகழ்கின்றது.

முன்பே குறித்த வண்ணம், இத்தொகுதியின் தொகுப்புப்பணியை மேற்கொண்டும் இடையிடையே என்னுடன், அச்சப்படிவங்களைத் திருத்தி உதவியும் சிறக்கப் பணிபுரிந்தவர்கள் இத்துற்றயின் தொல்நுட்ப உதவியாளர் புலவர் ப.வெ. நாகராசன் மற்றும் திட்ட உதவியாளர் திரு. மோ.கோ. கோவைமணி ஆவர். குறிப்பாக, புலவர் ப.வெ. நாகராசன் அவர்கள் இந்நூலுக்கு வேண்டிய அகராதிகளையும் முறைப்படி தொகுத்துத் தந்தார். இவர்களுடன் சுவடிகளுக்கு மருந்தெண்ணெய் பூசித்துணைபுரிந்த திருமதி ஆர். ஜெயலட்சுமி ஆகிய அனைவர்க்கும் என் நன்றியும் பாராட்டும் உரியன.

இத்தொகுதியை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்தவர்கள் நம் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகத்தினர் ஆவர். ஒத்துழைப்பு நல்கிய நம் அச்சகம் மற்றும் பதிப்புத் துறையினர்க்கு நான் நன்றி பாராட்டும் கடப்பாடுடையேன்.

முன் தொகுதிகளிற் குறிப்பிட்டவண்ணம் இந்தக் தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை ஒரு தொடரும் பணியாகும். இதைத் தொடர்ந்து ஏழாம் எட்டாம் தொகுதிகள் வெளிவர விருக்கின்றன. இவை தமிழ் ஆய்வார்க்கு, குறிப்பாக மொழிநூல், வரலாறு, பண்பாடு மருத்துவம், சோதிடம் முதலியவற்றை ஆய்வார்க்குப் பெரிதும் பயன்படவிருக்கின்றன.

இத்தொகுதின்கண் காணப்பெரும் பிழைகளையும் திருத்தவேண்டிய இடங்களையும் அறிஞர் உலகு சுட்டிக்காட்டுமேல் அவர்களுக்குப் பெரிதும் நன்றி

2501. திருவாதவூரர் புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. தொடர் எண்: 1951

ஆ. பொருட் பகுப்பு எண்: ந/163

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. நூலாசிரியர்: கடவுள் மாமுனிவர்

ஆ. நூற்பெயர்: திருவாதவூரர் புராணம்

இ. பொருள்: காப்பியம்

ஈ. செய்யுள்: 544

3. தோற்றக் கூறுகள்

அ. 98 ஏடு; 196 பக்கம்

ஆ. நீளம் 12 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 12 வரிகள்

உ. எழுத்து நிலை: தெளிவான கையெழுத்து

ஊ. சுவடியின் நிலைமை: 97-ஆவது ஏட்டிற்குமேல் இருக்க வேண்டியவை காணப்படவில்லை. உள்ளவை நல்லநிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பவளமால் வரையில் நிலவெறிப் பதுபோல்
பரந்தநீற் றழகுபச் சுடம்பிற்
திவளமா துடன்நின் றாடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும்போர்

தவளமா மருபபொன் றொடித்தொரு கரத்தில்
தரித்துயர் கிரிப்புற மெழுதும்
கவளமா களிற்றின் திருமுகம் படைத்த
கடவுளை நினைந்துகை தொழுவாம்

ஆ. முடிவு
அண்டர்கள் அண்டர் கோனை அன்புடன் எய்தி மாலும்
கண்டனர் புளக மெய்திக் கம்பித மாகி நின்று
விண்டனர் கசிந்து கண்ணீர் வேய்ந்தனர் மேனி எங்கும்
கொண்டனர் மகிழ்ச்சி செங்கை குவித்தனர் தில்லை
யுள்ளார். (126)

(இது வாது வென்ற படலம். இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2502 தாயுமானவர் பாடல்கள்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1952
ஆ. ற/230

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. தாயுமானவர்
ஆ. தாயுமானவர் பாடல்கள்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்: 1452

3. தோற்றக் கூறுகள்
அ. 113 ஏடு; 226 பக்கம்
ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 4.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 15 வரிகள்

உ. தெளிவான அழகிய கையெழுத்து

ஊ.1, 5, 53, 77, 78, 105, 108, 116, 122 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. உள்ளவை பெரும்பாலும் நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அங்கிங்கெ னாதபடி எங்கும்ப்ர காசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடுநி றைந்ததெது தன்னருள்வெ ளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும்ப டிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது சமயகோ டிகளெலாம்
தந்தெய்வ மெந்தெய்வமென்று

எங்குந்தொ டர்ந்தெதிர்வ ழக்கிடவும் நின்றதெது
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமாய்
என்றைக்கு முள்ளதெதுமேல்
கங்குல்பக லறநின்ற எல்லையுள தெதுவது
கருத்திற்கி சைந்தததுவே
கண்டனவெ லாமோன வுருவெளிய தாகவும்
கருதியஞ் சலிசெய்குவாம்.

ஆ. முடிவு

வயதும் படஎழுந்து பிணியும் திமிதிமென்று
வரவும் செயலழிந்துள் இருமலு மாகி
அனமும் செலுதலின்றி விழியும் சுடர்களின்று
முகமும் களைகளின்று சரியென நாடி
மனையின் புறவிருந்த இனமுங் குலைகுலைந்து
கலகஞ் செயஇருண்ட யமன்வரும் வேளை

ஏதுதுணை பழிகார மனமே.
தாயுமான சுவாமிகள் பாடல் முற்றிற்று.

(வண்ணத்தின் ஈற்றுக் கலையாகிய இது சுவடியின் 118ஆம் ஏட்டில் உள்ளது)

5. பிற செய்திகள்
தாயமானவர் பாடல்கள் ஆறாம் ஏட்டில் தொடங்கி 118 ஆம் ஏட்டில் நிறைவு பெறுகின்றன. முதல் 5 ஏடுகளில் அருளய்யர் பாடிய அவையடக்கம் என 45 பாடல்கள் உள்ளன. 118 ஆம் ஏட்டில் அருளய்யரின் அருள்வாக்கிய அகவலும் அதனை அடுத்துப் பொருளடக்கமும் இடம்பெற்றுள்ளன.

2503. அகத்தியர் பரிபூரணம் 1200

1. நூலகக் குறிப்புகள்
அ. 1953
ஆ. ல/370

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் பரிபூரணம் 1200
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 1200

3. தோற்றக் கூறுகள்
அ. 134 ஏடு; 268 பக்கம்
ஆ. நீளம் 35 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. சிறிய கையெழுத்து
ஊ. ஆங்காங்கு சிதைந்துள்ளது, சுமாரான நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீருலவும் பிரணவமாம் பாதம் போற்றிச்
சிவகாமித் தாயார்பொற் பாதம் போற்றி
ஏருலவும் - - - - - சிவ பாதம் போற்றி
இன்பமுற்ற சித்தருட பிரம்ம மான
பேருலவும் சரஸ்வதியின் நடனத் தாளை
பெருமையுள்ள குருநூலைப் பாடு தற்குக்
காருலவும் திருமேனி துதிக்கை யானை
கணபதிசெந் தாமரைத்தாள் காப்ப தாமே.

ஆ. முடிவு

மீறியே சிவமென்றும் கண்ட மென்றும்
மிருகமரி விஷ்ணுவென்றும் அயன்மா லென்றும்
காரவே நாரியொரு கமலி என்றும்
கருவாகி உருவாகிக் காண என்றும்
தாரியே மலையிரவி திவலை யென்றும்
தரித்துநின்ற தாய்கருத்தா லுபதே சித்தாள்
வாரிநின்ற ஜோதிவெளி தன்னில் வாழ்த்தி
வற்புறுத்திச் சொன்னகுரு நூலும் முற்றே. (1200)

2504. முந்திரி லக்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1954
ஆ. ற/231

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ----
ஆ. முந்திரிலக்கம்
இ. பல்வகை நூல்கள்
ஈ. உரைநடை: அச்சில் ஏறத்தாழ 6 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 43 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. வாரிப்பதப்படுத்தப்படாத இரட்டை ஓலைகள். முதல் ஏடு மிகவும் சிதைந்துள்ளது. 5ஆம் ஏட்டிற்குமேல் காணப்படவில்லை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முந்திரி லக்கம் முதலுடன் படிக்கத்
தந்தி முகத்தான் (தா)ளே சரணம்.
எண்ணிய லக்(கம்) இயல்புடன் படிக்கக்
கண்ணன் மரு(கன் கண)பதி காப்பு.

ஆ. முடிவு

710, 720, 730, 740, 750, 760, 770, 780, 790, 800, 810,

820, 830, 840, 850.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை).

2505. நாடி நிதானம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1955_1

ஆ. ல/371

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. - - - - - - -

ஆ. நாடி நிதானம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்: 49

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்

ஆ. நீளம் 35 செ.மீ., அகலம் 5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 16,17 வரிகள்

உ. அழகிய தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை. சுவடி ஏட்டெண் 86 இல் தொடங்குகிறது.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கரிமுகன் அடியை வாழ்த்திக் கைதனில் நாடி பார்க்கப்
பெருவிரல் அங்கு லத்தைப் பிடித்துடன் அடைவே
தொட்டால்

ஒருவிரல் ஓடில் வாதம் உகந்திரு விரலில் பித்தம்
தெரிவிரல் மூன்ற தாகில் சிலேற்பன நாடி யாமே. (1)

ஆ. முடிவு
சொன்னதோர் நாடி யெல்லாம் சுகங்களை ஆய்ந்து பார்த்துப்
பின்னைநீ மருந்து தானும் பேணியே செய்வ தென்று
முன்னது முறையாய்ச் சொற்ற முன்னனு பானம் கண்டு
அன்னமே அருந்தத் தீரும் அருந்தவ முனிவர் சொன்னார். (49)

நாடி முற்றும். பரஞ்சோதியே நம.

5. பிற செய்திகள்
யோகமுனி நாடிசாத்திரம் எனவும் இந்நூல் வழங்கப்படுகிறது.

2506. புசிப்பு விதி - நாடி நிதானம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1955_2
ஆ. ல/371

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. - - - - -
ஆ. புசிப்பு விதி – நாடி நிதானம்
இ. மருத்துவம்!
ஈ. செய்யுள்: 31

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 35 செ.மீ., அகலம் 5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 18 வரிகள்

உ. அழகிய தெளிவான கையெழுத்து

ஊ. நூல் 89 ஆம் ஏட்டில் தொடங்குகிறது. நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மானகாந் தரிதார் பெற்ற வாரணத் தடியைப் போற்றித்
தேனுறை பொதியில் வாழும் திருமுனிச் செல்வர் தாமும்
தீனுறு கவளத் தோடே தினசரி கறிகள் கூட்டில்
தானுற நடக்கும் நாடி தன்குணம் வகுத்துச் சொல்வார் (1)

ஆ. முடிவு

தினைச்சோறுங் கருந்திடுகில் சேயிழையே வாதநடை
மனையெலிதான் வளையோட்டம் வளர்பித்த நடைதானும்
புனைபுழுகுப் பிள்ளைநடை பொறிதடுக்குஞ் செற்புமந்தான்
சுனைபுனலிற் சுந்தரிதான் சுழிதிகைக்கும் நீச்சாமே. (31)

(இதற்குமேல் எழுதப்படவில்லை. நூல் முற்றுப் பெற்றதாகத் தோன்றவில்லை)

2507. பாலக்கிரக தோஷம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1955_3

ஆ. ல/371

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....

ஆ. பாலக்கிரகதோஷம், பறவைத்தோஷம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்: 136

3. தோற்றக் கூறுகள்
அ. 7 ஏடு; 14 பக்கம்

ஆ. நீளம் 35 செ.மீ., அ... ..ம் 5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 18 வரிகள்

உ. அழகிய தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை. நூல் 93ஆம் ஏட்டில் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கறைமிடற் கமலக் கண்ணர் கழல்களைப் போற்றி செய்யும்
பிறைநுத லணிந்த பேதைப் பெண்கொடி உமையாள் பெற்ற,
குறைவிலாக் குமரன் சீஷன் குறுமுனி குழந்தை தோஷம்
பறவைகள் பட்சி புள்ளு பலபல கிரிகை சொல்வார். (1)

ஆ. முடிவு

சுரமது தாகம் விக்கல் துரத்திடும் இருமல் தோன்றில்
பரமது மதுரம் சந்தம் பகர்ந்தநற் சீரம் ஏலம்

உரமுறு கோரோ சனையும் உற்றபே ரீந்து கொற்றான்
தரமிக அரைத்துச் சுண்டை தனித்தனி பாலிற்
கொள்ளே : (136)

(இதற்குமேல் எழுதப்படவில்லை. நூல் முடிந்ததாகத் தோன்றவில்லை)

2508. சுரநிதானம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1955_4

ஆ. ல /371

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ......

ஆ. சுரநி னம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்: 103

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்

ஆ. நீளம் 35 செ.மீ., அகலம் 5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 18 வரிகள்

உ. அழகிய தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை. நூல் ஏட்டெண் 101 இல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கூறும் வாத சுரம் தனக்குக்
குணமே சொல்லில் முகம்கறுக்கும்

ஈறும் உதடும் உலர்ந்திருக்கும்
உஷ்ணம் மிகுந்தே அழன்றுவரும்
மாறும் மயிர்க்குச் சிடுசையுண்டாம்
மலமே பந்தம் தாகக்கை
சீறும் இருமல் குளிர் நடுக்கல்
செய்யும் குணங்கள் இதுதானே (1)

ஆ. முடிவு
முந்திய மூலா தார முளையது கருகிற் றென்றால்
சுந்திய சூலை வாயு சுறுக்கெனத் தடித்து வீங்கிப்
பந்தியிற் பரிமாப் போலப் பாரிக்கும் பழுக்கும் பின்னை
வெந்திய வேகம் கொண்டு வெடிக்குமே யிலிங்க சூலை. (103)

(இதற்குமேல் எழுதப்பெறவில்லை. நூல் முற்றுப் பெற்றதாகத் தோன்றவில்லை.)

2509. கஷாய மருந்துகள்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1955_5
ஆ. ல /371

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. கஷாய மருந்துகள்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 98

3. தோற்றக் கூறுகள்
அ. 4 ஏடு; 8 பக்கம்
ஆ. நீளம் 35 செ.மீ., அகலம் 5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 17,18 வரிகள்

உ. அழகிய தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. நூல் 106 ஆம் ஏட்டில் தொடங்குகிறது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பந்தணை விரலாள் பசும்பொனின் நிறத்தாள்
பங்கய மங்கையர் போற்றும்
அந்தமி லாத அரன்கழல் போற்றி
யாயுறு வேதமா முனியும்
தொந்தன சுரத்தின் சுகங்களைச் சொல்லித்
தொகுத்துப்பின் தோஷங்கள் தீர
வந்தன கஷாய மருந்துகள் வகையும்
வைத்திட வளமையாய்ச் சொல்வார். (1)

ஆ. முடிவு

சேவகனும் திரிமூலம் தேவ தாரம்
சிறுநாகம் சண்பகப்பூ சிறிய தேக்கும்
காவகனாம் கலைக்கொம்பு ருத்தி ராக்கம்
கமழ்வாசன் பேரீந்து முந்தி ரி(க்)கை
கோவகனும் திரிகடுகோ டாமலகம் தானும்
கூட்டும்வகைக் கோர்கழஞ்சாய்க் குறுணிநீர்
தன்னில்
பாவகமாய்த் தீயெரித்தே எட்டொன்றாய்க் காய்ச்சிப்
பரிந்தருந்தச் சிங்நுவுடன் பிரலாபம் போமே. (98)

(இதற்குமேல் எழுதப்படவில்லை. நூல் முற்றுப் பெற்ற தாகத் தோன்றவில்லை.)

2510. சுர சிகிச்சை - குளிகை

1. நூலகக் குறிப்புகள்
அ. 1955_6

ஆ. ல/371

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ......

ஆ. சுர சிகிச்சை குளிகை

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்: 244

3. தோற்றக் கூறுகள்
அ. 13 ஏடு; 26 பக்கம்

ஆ. நீளம் 35 செ.மீ., அகலம் 5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 18 வரிகள்

உ. அழகிய தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை. நூல் 111ஆம் ஏட்டில் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
சுரும்பலர் குழலாய் கேளாய் சுரசிகிச் சைக்குத் தக்கோர்
விரும்பிய சகத்ர வேதி வெண்காரம் இலிங்கம் தாரம்
தரும்படி நீற்றுக் கல்லுச் சங்குநேர் வாளம் நாவி
ஒரும்படும் மிளகுஇது எல்லாம் ஒருநிறை யாகக் கூட்டி (1)

ஆ. முடிவு
அறந்தனை வளர்த்த தாயார் அதிகோப சுரதோ ஷத்தைச்
சிறந்தநல் நாடி பார்த்துச் செய்குறி குணங்(கள்) கண்டு
பிறந்தன குளிகை யெல்லாம் பிரித்ததை அறிந்து
சேர்த்தால்

இறந்துபோ வதுவே யில்லை இனியெண்ணெய்
விபரங்கேளே. (244)

குளிகை விதி முற்றும்.

2511. நிதிபெறு தீபம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1956

ஆ. ற/232

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . .

ஆ. நிதிபெறு தீபம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 23 ஏடு; 46 பக்கம்

ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8, 9 வரிகள்

உ. சற்றுத் தெளிவான எழுத்து. பிழைகள் மிகுதி.

ஊ. 23-ஆம் ஏட்டுக்குமேல் இருக்கவேண்டியவை காணப்படவில்லை. ஆங்காங்கு சிதைந்துள்ளது.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நிதிபெறு தீபம் என்னும் சாத்திரத்தை நீலகண்டமுடைய ஈசுரன் சொன்னதாயிருக்கிற சகலமான சாத்திரங்களிலும் சகலமான பூக்களிலுமெடுத்துக்

கொண்டு ஈசுரன் சொன்னதாயிருக்கிறவேறு பிறந்திருக்கப்பட்ட சாலோபமைஞ்ஞூறுமாயிருக்கும் மந்திரங்களை விடக் காரியமென்கிற ஆவத்திலே சிறுகச் சிறுகக் காணப்பட்டிருக்கும்.

ஆ. முடிவு

ஊசி மல்லிகை, வெள்ளைக் காக்கணம் வேர், வெள்ளெருக்கவேர் கண்டங்கத்திரிவேர், வசம்பு இதுவெல்லாம் சமன் கூட்டிக் கோசலம் வார்த்து அரைத்துக் கயறு பிடித்து நிழல்உலர்த்தலாக உலர்த்திப் பசுவின் நீரில் உறைத்துக் கையிலும் தடவி நெற்றியிலும் இட்டுப் போகவும். பாம்பு, தேள், நண்டு, தும்பி, காற்று, பலவகைப் பேதகமாக வருகிறதும் பிரமராட்சச கணங்கள் பூதப்பிசா.....

(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

5. பிற செய்திகள்

இச்சுவடியில் புதையல்கள் எத்தகைய இடங்களில் இருக்கும் என்பதுவும். அவற்றைக் கண்டறிந்து எடுப்பது எப்படி என்பதுவும் சொல்லப்பட்டுள்ளன.

2512. நிழல் குத்துச் சூத்திரம் 32

1. நூலகக் குறிப்புகள்
அ. 1957
ஆ. ழ/56

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. நிழல் குத்துச் சூத்திரம் 32
இ. மாந்திரீகம்.
ஈ. செய்யுள்: 32

3. தோற்றக் கூறுகள்
அ. 6 ஏடு; 12 பக்கம்
ஆ. நீளம் 20 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து. பிழைகள் மிகுதி
ஊ. முதல் ஏடு சிதைந்துள்ளது. ஆறாம் ஏட்டிற்குமேல் இருக்க வேண்டியவை காணப்படவில்லை. சுமாரான நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
ஆய்ந்துணர்ந்த பெரியோர்கள் (பற்)பல பேரும்
சதுரகிரி தனில்கூடி அறிவில் கூர்ந்து.
சேர்ந்துமிகப் பெரியோர்கள் பதினெண் பேரும்
திரமாக நிழல்குத்து முப்பத் திரண்டும்
ஏந்திழையாள் பாதமது சிரசில் கொண்டு.
எடுத்தகரு மூசிகையும் குண்டூசி பதினாறும்

நேர்ந்துமதி யொளிகூடி நிழலைப் பார்த்து
நின்விரலை ஊன்றிமறை யுங்காலை (1)

(இவ்வெண்சீர்விருத்தத்தின் பிற்பகுதி சரியாக இல்லை)

ஆ. முடிவு
தானாக இன்னமொரு செய்தி கேளு
சஞ்சீவி மூலிஎனச் சீந்தில் வேரை
கனமாக யமவென்று கார்த்தி கைக்குக்
காப்பிட்டு வேர்பிடுங்கி வைத்துக் கொண்டுச்
சினமான குண்டூசி அதன்மேல் வைத்துச்
சிற்பரனைத் தியானித்துக் கொப்புள் தாக்க
அகமதிலே குடல்படுவன் கோர மாகி
அடங்காத சிலந்தியது ஏகும் தானே. (29)

(இதற்கு மேல் ஏடுகள் இல்லை.)

5. பிற செய்திகள்
இதில் தமக்கு வேண்டாதவர்களுக்கு மாந்திரீக முறையில் பிணிகளையும் இறப்பையும் உண்டாக்கும் வழிகள் கூறப்பட்டுள்ளன.

2513. ரோமரிஷி பாடல்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1958
ஆ. ற/233

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ரோமரிஷி
ஆ. ரோமரிஷி பாடல்

இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்: 13

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 4 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சுமாரான நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
அருளுவேன் அகாரமென்ற ஞானந் தன்னை
அறியாமல் ஞானியவன் அதமாய்ப் போனான்
பொருளது ஒன்றுமில்லை சிவத்தின் தீட்சை
பூட்டுவேன் சத்தியுட தீட்சை யெல்லாம்
அருளவே சொன்னதல்லால் வேறொன் றில்லை
மார்க்கமென்ன அகாரமதே சிவமு மாகும்
தெருளவே உகாரமது சத்தி யாச்சு
சேரடா யிதுரெண்டு மொன்றாய்த் தானே (1)

ஆ. முடிவு
மௌனமென்ற மூன்றெழுத்தை ஒன்றாய்ச் சேர்த்து
வசனித்தேன் ஓர்யுகமும் ஒருநா ளாச்சு
கவனமொன்று மில்லையடா மவுனத் திற்குக்
காணலாம் பிரளயமுங் கண்கொள் ளாமல்
அவுனமென்ற பரத்துள்ளே பரமாய் நின்றே
அதில்நடனம் சிலம்பொலியு மனேகம் பார்த்தேன்
கவுனமென்ற மனத்தாலே மவுனம் பெற்று
கேசரத்தில் ரோமனென்னும் பேர்பெற் றேனே. (13).

2514. அகத்தியர் யோகம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1959

ஆ. ற/234

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் யோகம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்: 3

3. தோற்றக் கூறுகள்
அ. 1 ஏடு; 2 பக்கம்

ஆ: நீளம் 20.5 செ.மீ., அகலம் 4 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலையிலுள்ள ஓரேடு மட்டுமே உள்ளது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காப்பான கணபதியை யெழுப்பி மேலே
கருத்திலே மனமகிழக் கருதி யூதி
சேப்பான தீபமதில் சாரப் பூண்டு
சிவாசிவா நடுவாகி நிலையில் நின்றால்
கோப்பான புலத்தியனே நாதத் தோங்கும்
கும்பமே சதாநித்த மனது பூண்டு
வாய்ப்பானா லதுவல்லோ மௌன யோகம்
மற்றதெல்லாம் யோகமல்ல மடையர் தாமே. (1)

ஆ. முடிவு

ஆச்சப்பா கும்பகமும் தீர்ந்த பின்பு
        அரகரா சுழிமுனையில் மாந்தி நில்லு
மூச்சப்பா மற்றமற்ற யோக மெல்லாம்
        பொய்யாச்சே அல்லாமல் வருவ தில்லை
பேச்சப்பா ஒன்றுமில்லை வாசி யோகம்
        பெருமையுள்ள சிவராஜ யோகங் கேளு
காச்சப்பா நடுவாசி உள்ளுக்கு மேலே
        காட்டினோம் சிவராஜ யோகங் காணே. (3)

2515. கவுசிகர் கருத்த குழம்பு

1. நூலகக் குறிப்புகள்
   அ. 1960-1
   ஆ. ல/372

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. கவுசிகர்
   ஆ. கவுசிகர் கருத்த குழம்பு
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள்: அச்சில் ஏறத்தாழ 4 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
   அ. 2 ஏடு; 4 பக்கம்
   ஆ. நீளம் 30 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்ல நிலை
   எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
அருமறை மொழியில் யாவரும் பிழைக்கக்
குருவருள் தன்னால் குழம்புசூ ரணத்தைத்
தரைதனி லெங்கும் தயவுடன் அளித்துப்
பெருமையாய்க் கவுசிகன் பேருரை பெற்றேன்

ஆ. முடிவு
கண்டுஅவர் சொன்ன கைமுறைப் படியே
பத்திய மாகப் பரிவுடன் கேட்டு
உத்தமர் தம்மை உறவாக்கிக் கொண்டு
அவர்முறைப் படியே அறிந்து கொடுத்தால்
நவசித்தர் போலே ....

(இதற்கு மேல் ஏடுகள் இல்லை)

2516. அகத்தியர் சர்ப்பராஜ மாத்திரை

1. நூலகக் குறிப்புகள்
அ. 1960_2
ஆ. ல/372

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் சர்ப்பராஜ மாத்திரை 39
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 7

3. தோற்றக் கூறுகள்
அ. 1 ஏடு; 2 பக்கம்
ஆ. நீளம் 30 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9, 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சித்தனாய் இருப்பதற்கு யின்னம் கொஞ்சம்
செப்புகிறேன் மாத்திரையின் பேரைக் கேளு
அத்தனார் எனக்குரைத்த சர்ப்ப ராசன்
அவனியிலே உனக்குரைத்தேன் மச்ச கேந்த்ரா
மத்தகசந் தனைப்பிளக்கும் சிம்மம் தன்னை
மாரணம்செய் பகை(ப்)பே(ர்)தான் சர்ப்ப ராசன்
எத்திசையும் இவர்நாமம் கேட்ட போதே
ஏகுமடா சிங்கமுற்ற நோய்(க)ள் தானே. (1)

ஆ. முடிவு

ஆமேதான் சாதிக்காய் பத்ரி யோடே
அப்பனே இருவேலி விலாமிச் சம்வேர்
ஆமேதான் சந்தனமும் தேவ தாரம்
அகிலுடனே சிறுநாகம் முந்திரிகை கூட
ஆமேதான் குரோசானி தாளிசப்பத் திரியும்
அதிவிடையம் கல்நாரும் வசுவாசி யோடும்
ஆமேதான் மண்சிட்டி வெட்பாலை யாரும்
ஐங்கோல வித்துடனே முத்தக் காசே. (7)

5. பிற செய்திகள்

'இவை அகத்தியர் காண்டம் என்னும் நூலிலுள்ள சர்ப்பராசன் மாத்திரைப்பாட்டு 39' என்னும் செய்தி சுவடியில் எழுதப்பட்டுள்ளது.

2517. இராமதேவர் சோதிடம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1961

ஆ. வ/109

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. இராமதேவர்

ஆ. இராமதேவர் சோதிடம்

இ. சோதிடம்

ஈ. செய்யுள்: 11

3. தோற்றக் கூறுகள்
அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 20.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலையில் உள்ள இரண்டு ஏடுகள் மட்டுமே உள்ளன.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியிலே வேதியன்முன் அன்பாய்ச் சொன்ன
அருமறையின் பொருளான சோசி யத்தைச்
சாதியிலே முதலான ராமன் வாக்யந்
தவறாமல் சற்குருவின் பாதம் போற்றிச்
சோதியிலே செகச்சோதி சோதி யான
சோசியமாம் நவக்கிரக ராசி யப்பா
நீதியிலே நீடுலகில் நன்மை தின்மை
நேர்நிரைகள் சொல்வதற்கா யிந்நூல் பாரே (1)

ஆ. முடிவு

ஆமென்ற கிரகநிலை ரவிபுதனும் வெள்ளி
அமர்ந்திடுவா ரொருராசி யதனிலொரு மாதம்
போமென்ற நாளிரண்டே காலாகும் சோமன்
புத்தியுள்ள செவ்வாய்தான் மாதம் மூன்று
தாமென்ற சனியாண் டிரண்டரையா நிற்குந்
தயவான வியாழமொன்று கிரகநிலை யாகும்
நாமென்ற நாகங்கள் ஆண்டேயொன் றரையாம்
நாடுவான் கிரகநிலை நலமறிய முற்றே. (11)

2518. காகபுசுண்டர் ஞானம் 80

1. நூலகக் குறிப்புகள்
அ. 1962
ஆ. ற/235

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. காகபுசுண்டர்
ஆ. காகபுசுண்டர் ஞானம் 80
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்: 80

3. தோற்றக் கூறுகள்
அ. 17 ஏடு; 34 பக்கம்
ஆ. நீளம் 23.5 செ.மீ., அகலம் 4 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 1, 2, 16, 17 ஆகிய ஏடுகள் சிதைந்துள்ளன. எஞ்சியவை சுமாரான நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சிறந்தபரா பரமாகி யெங்குந் தானாய்த்
தீர்க்கமுடன் ரவிமதியும் ....
.... மைம்பூத மாய்கை தோன்றி
பல்லாயிரங் கோடியண்டம் படைத்த போது
வர .... னந்த உயிரு மாகி
மதபேத மாகவுந்தன் வடிவைக் காட்டிச்
சரம்பெருகி அண்டத்தில் எழுந்து நின்ற
சச்சிதா னந்தமதைப் பணிகு வோமே. (1)

ஆ. முடிவு

(பாரடா பரப்)பிரமத் துடனே சென்று
பரிதிமதி அக்கினியு மூன்று மொன்றாய்
நேரடா மறியாத யெதிரி ... .
நிச்சயமாய்ப் பார்த்திடவே நீறிப் போவான்
கூறடா கோடிசித்து ஆட லாகும்
குறித்திட.... ... பிரமத் தாலே
வீரடா யிந்நூலைக் கொடுத்தி டாதே
வெற்றியுடன் எண்பதுமே விளங்க முற்றே. (74)

2519. தட்சிணாமூர்த்தி ஆதாரக்கட்டளை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1963

ஆ. ட/243

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ......

ஆ. தட்சிணாமூர்த்தி ஆதாரக் கட்டளை

இ. தத்துவம்

ஈ. செய்யுள்: 8

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 23.5 செ.மீ., அகலம் 4 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சிதலரித்துள்ளது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சோதியெனும் பராபரையா ளாயி பாதம்
சொற்பெரிய நாதாக்கள் பாதம் போற்றி
வீதியெனும் எனையாண்ட நந்தி பாதம்
விண்ணகத்தில் வைத்துநான் தொழுதி றைஞ்சிப்
பாதிமதி தரித்தசிவன் நின்ற மார்க்கம்
.... பரிந்து காட்ட
ஆதியென் நின்றபர மூலத் துள்ளே
ஆத்துமமா நிறைந்துநின்ற கணபதியே காப்பாம். (1)

ஆ. முடிவு

பாரப்பா யிச்சடத்தில் வேறொன்றைப் பற்றிப்
பரிவாகக் கெட்டலைந்து போக வேண்டாம்
ஆரப்பா ஆத்மாவே சூட்சப் பாவை
அப்பனே யதிலிருக்கும் விவர மெல்லாம்

சேரப்பா ஒன்றுமில்லை வீடு மாகும்
சிமந்துநின்ற தந்தியதே பரமே யாகும்
வீரப்பா ஒன்றுமில்லை தந்தி கண்டால்
மெய்ஞ்ஞான போதகமும் அமிர்த முற்றே. (8)

2520. மேக நிதானம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1964-1

ஆ. வ/373

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. மேக நிதானம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்: 43

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 35 செ.மீ., அகலம் 5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 17 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வாதத்தின் சுரத்தின் மேக வருணனும் வளைப்பன் காளை
சாதசா பத்தி தானும் தனித்தனி .. — குஞ்

சீதமெக் காலும் .... செய்மருந் ததுவிற் கேள(ாய்)
வேதமே பேசுங் கண்டாய் மெய்யிது குணங்கள் தானே (1)

ஆ. முடிவு
எரித்திடு முழத்துந் தாக மெருவது போல நாக்கும்
வரித்திடும் வரண்டு பின்னை வாரியே மிகவும் வாங்கும்
விரித்திடும் மதங்கள் செய்யும் வீரிய வேகந் தீரத்
திருவெனும் மாதே நீயும் தீர்ந்திடு மருந்து செய்யே. (43)

மேக நிதானம் முற்றும்.

2521. மேகக் கோடாலி

1. நூலகக் குறிப்புகள்
   அ. 1964_2
   ஆ. ல/373

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. ------
   ஆ. மேகக் கோடாலி
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள்: 42

3. தோற்றக் கூறுகள்
   அ. 2 ஏடு; 4 பக்கம்
   ஆ. நீளம் 35 செ. மீ., அகலம் 5 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 16, 17, 18 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்ல நிலை
   எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திண்ணிய சீந்தில் தண்டு சிறுகவே நறுக்கி யாங்கே
ஒண்ணித்தே இடித்து நீயும் உதகத்தில் கரைத்துப் பின்னை
பண்ணிய சீலை தன்னில் படியவே வடிமற் றாநாள்
தண்ணியை இறுத்து மாவைச் சீலையில் கட்டித் தூக்கே (1)

(இஃது அமுத சர்க்கரை செய்யும் முறையின் தொடக்கச் செய்யுள்)

ஆ. முடிவு

பஞ்ச மூலக் கஷாயத்தில்
 பாதி உருண்டை யிட்டக்கால்
வஞ்சிக் கொடியே வெடிசுரமும்
 வலிய வேதியின் சுரமும்போம்
இஞ்சிச் சாற்றில் இட்டக்கால்
 இழைக்கும் இருமல் சுரம் தீரும்
கஞ்சான் கோரைச் சாற்றிலிடக்
 காசூலைச் சுரமும் காணாதே. (42)

மேகக்கோடாலி முற்றும்.

(இரண்டாமடியிலும் ஈற்றடியிலும் பிற்பாதி செவ்வையாக இல்லை)

2522. சன்னி நிதானம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1964_3
ஆ. ல/373

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. - - - - -

ஆ. சன்னி நிதானம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்: 130

3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்

ஆ. நீளம் 35 செ. மீ., அகலம் 5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 17,18 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அத்திமுகன் அடிபோற்றிச் சன்னிபதின்
மூன்றின்பே ரடைவும் சொல்லிப்
பத்திபடு குணம்குறியும் சாத்தியவ
சாத்ய நிலை பகர்ந்தங் குற்றால்
நித்தியலும் செயும்குடிநீர் அஞ்சனம்நஸ்
யம்தயிலம் நிறைந்த தூமம்
ஒத்துடனே கெண்டூஷ மறிவித்தல்
வுளசதம்வேது உரைக்க லுற்றேன் (1)

ஆ. முடிவு

சேற்பும சன்னிக் குணம்:

முந்துறு குளிரும் பித்து மூச்செறிந் தூமை போலச்
செந்துறச் சோம்புங் கண்ணுஞ் சிவந்திடுங் குளிருண்
டாக்கும்
சந்துறத் தலைதூக் கிட்டுச் சாலவும் செவியும் மந்தம்

செந்துவர் வாயி னாளே சேட்டும சன்னி கண்டாய். (3)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

5. **பிறசெய்திகள்:**
முதல் 114 பாடல்கள் ஒரு தொடராகவும் அடுத்த 13 பாடல்கள் ஒருதொடராகவும் எழுதப்பட்டுள்ள சுவடியில் மைக்காப்பெல்லாம் செய்த பிறகு வாத, பித்த, சிலேத்தும சன்னிகளைப் பற்றிய 3 பாடல்கள் எழுதப்பட்டுள்ளன.

2523. உதரநிதானம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1964_4
ஆ. வ/373

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ------
ஆ. உதர நிதானம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 181

3. தோற்றக் கூறுகள்
அ. 12 ஏடு; 24 பக்கம்
ஆ. நீளம் 35 செ. மீ., அகலம்5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 16, 17 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காரணக் கடவுள் பாகக் காந்தியாள் பெற்ற வெற்றி
வாரணத் தடியைப் போற்றி வளம்பொதி முனிவர் தாமும்
ஆரணத் தணங்கு கோபத் ததிசுர வேகம் தன்னில்
சீரண உண்டி யாலே சேர்ந்திடும் உதர சூலம். (1)

ஆ. முடிவு

வெப்பு பாவை :

குணமுள குளிரால் வெப்பால் குறியுடன் இடப்பா கத்தில்
நிணமொடு நீரும் கூடி நிமிர்ந்தது லாமி போல
உணர்வுடன் பிரட்டி யேறும் உயிர்குட்ல் கொளுக்கு
மாகில்
இணைமிகு வெப்புப் . வை என்று (தான்) உரைக்க ணாமே.
(181)

(இதற்குமேல் எழுதப்படவில்லை).

2524. விஷபாக நிதானம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1964_5
ஆ. ல/373

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. - - - - - -
ஆ. விஷபாக நிதானம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 13

3. தோற்றக் கூறுகள்

அ. 1 ஏடு; 2 பக்கம்

ஆ. நீளம் 35 செ. மீ., அகலம் 5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 15, 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுவடி 162-ஆம் எண்ணுள்ள ஏட்டில் உள்ளது. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வீங்கும் வற்றும் ஒருபக்கம்
மேனி வறண்டு வெளுப்பிடும்கண்
தூங்கும் தலையும் கனத்துநிற்கும்
துயரம் மிகுந்து தாகிக்கும்
வாங்கிப் பொசிக்க மாட்டாது
வாயு உடலில் விடம்போல
ஏங்கிக் கொல்லும் விஷபாகம்
இதுவே செய்யும் குணமாமே. (1)

ஆ. முடிவு

தலையும் வலித்து உடம்புலர்ந்து
தாதும் கெட்டுத் துயருண்டாய்
வலமும் தோன்றும் கண்போல
மனமு மடித்து மந்தமுமாய்
நிலையும் கெட்டுத் துயருண்டாய்
நினையாது அநேக நினைப்புண்டாய்
உலையும் வரட்சிப் பித்தமென
உரைக்க முனிவர் சொன்னாரே. (13)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2525. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்
அ. 1964_6

ஆ. ல/373

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. - - - - - -

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 7 ஏடு; 14 பக்கம்

ஆ. நீளம் 35 செ. மீ., அகலம் 5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 16,17,18 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சில பக்கங்களில் எழுதப் படவில்லை. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திரிகடுகு சாதிக்காய் கிராம்போடும் ஓமம்
திறல்சேரும் அதிவிடயம் வினைக்காசுக் கட்டி
வருபெருங்கா யம்சாதி லிங்கமதிக் கநிறை
சரிகஞ் சரக்கஞ் சாவிலைச் சாற்றில்
பொருவரிய சுண்டைக்காய் அளவுண்டை செய்து
புகலெருமைத் தயிராதல் தேனில் கொள்ள
வெருவும்வயிற் றுக்கடுப்பு மீளுவது முண்மை
மீண்டுமிதன் பெயர்கட்டு வங்காரி யாமே (1)

(இப்பாடலின் இரண்டாமடி செம்மையாக இல்லை.)

ஆ. முடிவு

அபத்தியம்:
கட்டிப்பால் இளநீர்சர்க் கரைமுந் திரிகை
கருப்பஞ்சாறு பணியாரம் பழம்நெய்
இட்டமுறும் பலாக்காய்பூ சணிக்காய்சு ரைக்காய்
எலுமிச்சங் கனிமிதுக்கங் காய்பேரீந்து கிழங்கு
பட்டியுறு கோழிஊர்ப் பன்றிகாட்டிற் பன்றி
பகர்நேய மாங்கிஷமும் பகலுறக்கம் தானும்
திட்டமுறச் சொர்ப்பனஇந் திரியமிவை கழிதல்
திகழ்முனிவன் அருள்செய்தான் செலக்கழிச்சல்
விலக்கே (௰)

(இதறகுமமன் எழுதப்படவில்லை. இப்பாடலின் யாப்பமைதி சரியாக இல்லை)

2526. அபரோட்ச ஆத்ம அநுபவ தீபிகை

1. நூலகக் குறிப்புகள்
அ. 1965
ஆ. டீ/244

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ------
ஆ. அபரோட்ச ஆத்ம அநுபவ தீபிகை
இ. தத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு; 40 பக்கம்

ஆ. நீளம்20.5 செ. மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10, 11 வரிகள்

உ. அழகிய தெளிவான கையெழுத்து எழுத்துப் பிழைகள் உள்ளன.

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சத்தியமாய் ஞானமாய் ஆனந்தமாய் ஆனந்த சொரூபமான சொற்பிரகாசப் பிரமமே நித்தியம். அப்பிரமம் ஆகாரமாகும் அகில செகச்சாலமும் சுப்பிரமமாகாரமாக விளங்கும் சுப்பிரமணியக் கடவுள் பாதாரவிந்தத்துக்குத் தெண்டம் பண்ணி அபரோட்ச ஆத்ம அநுபவ தீபிகை என்கின்ற சாஸ்திரம் கிரந்தத்திலுண்டானதைத் தமிழினால் அனுப்பனமாகச் சொல்லுகிறோம்.

ஆ. முடிவு

மோட்சமாகிறது இவ்விடம் அவ்விடம் என்கிற தில்லை. கிராமாந்திர லோகாந்திரமில்லை. அகதி ஞானம் முடிச்சுப் போனதே மோட்சம் என்று குருசாமி திருவுளம்பற்ற இந்த வார்த்தையைக் கேட்டுத் திருப்தியடைந்து கிருதார்த்தனானான்.

சங்கராசாரிய சுவாமிகளால் சொல்லப்பட்ட அபரோட்ச ஆத்ம அநு(பவ) தீபிகை என்கிற சூட்சுமக் கிரந்தத்தைத் தமிழினால் அதிகசூட்சுமமாகக் கிருபை பண்ணின சுப்பிரமணியக் கடவுள், குருசாமி சரணாரவிந்தமே கதி.

2527. சரஸ்வதி தோத்திரம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1966
ஆ. த/47

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. - - - - - -
ஆ. சரஸ்வதி தோத்திரம்
இ. பிற தோத்திரங்கள்
ஈ. செய்யுள்: 11

3. தோற்றக் கூறுகள்
அ. 6 ஏடு;12 பக்கம்
ஆ. நீளம் 23.5 செ. மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
சீரணி பத்தியும் புத்தியும் - நல்ல
செல்வமும் கல்வியும் தந்தருளே
ஆரணி காரணி சத்தியே- எங்கள்
அம்மை சரஸ்வதி அம்மையே. (1)

ஆ. முடிவு
பத்துப் பதிகமும் பாடவே - உந்தன்
பரம பதத்தினைத் தந்தருளே
அத்தி யரமமை வல்லியே. எங்கள்
அம்மை சரஸ்வதி அம்மையே.

2528 . கனகமணி லட்சியச் சுருக்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1967

ஆ. ல/374

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் கனகமணி லட்சியச் சுருக்கம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்: 81

3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு; 22 பக்கம்

ஆ. நீளம் 30 செ. மீ., அகலம்3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. சற்றுக் கிறுக்கலான கையெழுத்து. கூட்டெழுத்துகளின் ஆட்சி மிகை.

ஊ. சுவடியின் வலப்புறம் சிதைந்துள்ளது. 81 ஆம் பாடலின் ஈற்றடியிலிருந்து எழுதப்படவில்லை. சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பிரமபிதா விஷ்ணுசக்க ரத்தைச் சித்தர்
பேசினார் பலபலவாய்ப் பிரித்துச் சொன்னார்
திறமிதுவெல் லாம்வீர மில்லை யென்று
செப்புகிறேன் அகத்தியர் நூல் வாக டத்தில்
சிரமதனை அறுத்தஅரன் விந்து லிங்கம்
செந்திருமால் தேவிசெந்தி சிலையும் காந்தம்

பரமபதம் காட்டும்வெள்ளை மிளகு.சுக்கு
பதகவுரி யுடனறைப்பு இஞ்சிச் சாறே. (1)

ஆ. முடிவு
தானென்ற கொள்ளையொடு மதலைச் சொற்கள்
சற்றுமறி வில்லாமல் மயங்கும் புத்தி
ஊனென்ற நாவுலர்தல் உண்ணா வுள்ளே
ஊடறுக்கும் வியாதியெல்லாம் ஒழிந்து போகும்
தேனென்ற அமுர்தகவி பாடச் சொல்லும்
செகசால வித்தையெல்லாம் சிறக்கப் பண்ணும்
வானென்ற மதலைகழு மடையர் ஊமை
....

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2529. தேவாரப் பதிகங்கள்

1. நூலகக் குறிப்புகள்
   அ. 1968
   ஆ. ண/61

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. திருஞானசம்பந்தர், சுந்தரர்
   ஆ. தேவாரப் பதிகங்கள்
   இ. சைவத் திருமுறைகள்
   ஈ. செய்யுள்: 42

3. தோற்றக் கூறுகள்
   அ. 9 ஏடு; 18 பக்கம்.
   ஆ. நீளம் 17 செ. மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்.
உ. அழகிய தெளிவான கையெழுத்து'
ஊ. சுவடி 191-ஆவது ஏட்டில் தொடங்குகிறது. 199-ஆம் ஏட்டிற்கு மேல் இருக்க வேண்டியவை காணப்படவில்லை. மிகு சிதைவு
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம்:
மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே. (1)

ஆ. முடிவு
மன்னியசீர் மறை நாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க்கு அடியேன்
திருநீல கண்டத்துக் ....

(இது திருத்தொண்டத் தொகையின் பதினோராவது திருப்பாசுரம். இதற்குமேல் ஏடுகள் இல்லை)

5. பிற செய்திகள்
இச்சுவடியில் திருஞான சம்பந்தரின் திருநீற்றுப்பதிகம், நமச்சிவாயத் திருப்பதிகம், சுந்தர மூர்த்தி சுவாமிகளின் ஊர்த்தொகை, திருத்தொண்டத் தொகை ஆக மொத்தம் நான்கு திருப்பதிகங்கள் உள்ளன.

2530. நயன விதி

1. நூலகக் குறிப்புகள்
அ. 1969_1
ஆ. ல/375

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. - - - - - -
ஆ. நயனவிதி
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 169

3. தோற்றக் கூறுகள்
அ. 9 ஏடு; 18 பக்கம்
ஆ. நீளம் 35 செ. மீ., அகலம் 5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 17 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கருமணியில் தோன்றும் வியாதிகளுக்குப் பெயர்:
கருமணி காசம் மாசி கல்லிகம் கமலம் காவம்
கிருசிகம் கிதவம் கேரம் கிட்டிண காசம் கேதம்
முருசலம் முறுக்கு ரோகம் முழியது முழுங்கி கேலம்
நெரிமிரி வெள்ளை குந்தம் நீலகாசமும்பாசிசோகி (1)

(ஈற்றடியின் பிற்பாதியில் யாப்பமைதி இல்லை)

ஆ. முடிவு

ஆதியங் கடவுள் சொன்ன அருமறை வேத நூலை
நீதியா யாய்ந்து பார்த்து நின்முறை சுரவி யாதி
சோதிசெய் குணங்கள் தன்னைத் தொகுத்தறி குறிகள்
எல்லாம்
நாதியாம் முனிவர் சொன்ன நல்விதிப் பயன்கள்
முற்றும். (169)

2531. குளிகை விதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1969_2

ஆ. ல/375

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. - - - - - -

ஆ. குளிகை விதி

இ. மருத்துவம்

ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு;12 பக்கம்

ஆ. நீளம்35 செ. மீ., அகலம்5 செமீ,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 17, 18 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுவடி 205 ஆம் ஏட்டில் தொடங்குகிறது. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இராச தெண்டசுரன்:

ஊமத்தம் விரை, கெந்தகம், இரதம், நாவி, நேர்வாளம் இவை சமன்கொண்டு இஞ்சிச் சாற்றில் மூன்று நாள் அரைப்பு; நொச்சிச் சாற்றில் மூன்று நாள் அரைப்பு; குன்றியளவு உண்டைபண்ணிச் சர்க்கரையில் கொடுக்கச் சுரம் நிற்கும்.

ஆ. முடிவு

மகா சுராங்குசம்:

சுத்தம் பண்ணின இரதம் 6 பலம், சுத்தம் பண்ணின கந்தகம் 6 பலம், எலுமிச்சம்பழச்சாற்றில் முப்பது நாழிகை ஊறின நாவி 6 பலம், திரிகடுகு ஓரொன்று 3 பலம், பொன்னூமத்தம் விரை 8 பலம் இவையெல்லாம் பாகலிலைச் சாறு வார்த்து அரைத்து முந்த எழுதின மருந்தைக் குளிச்சு இரதம் முறிச்சு அரைத்து இலுமிச்சம்பழச்சாறு வார்த்தரைத்து இஞ்சிச் சாற்றிலும் பாகலிலைச் சாற்றிலும் மூன்று நாள் மத்திச்சுப் பயற்றுப் பிரமாணம் உண்டை பண்ணி வைத்துக் கொண்டு விஷம், சன்னிவாதம், கைகால் குளிர்ந்த சுரம், சுராதி சாரம் இவைகளுக்கு இஞ்சிச் சாற்றிலிடவும். கொல்லுகிற சுரமும் மீளும். இஞ்சிச் சாறு கிடையாவிட்டால் ஆடாதொடை, கொத்தமல்லி, பூசணித்தண்டு, பற்படாகம், கற்றாழஞ்சருகு சுக்கு இவை கூட்டி நாழிநீர்வார்த்து எட்டொன்றாக்கி இதில் ஓர் உருண்டையிட மீளும். வேறு

(இதற்குமேல் எழுதப்படவில்லை).

2532. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1969_3

ஆ. ல/375

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. - - - - - - -

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 120 பக்கம் வரும்

3. தோற்றக்கூறுகள்

அ. 36 ஏடு; 72 பக்கம்
நீளம் 35 செ.மீ., அகலம் 5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 17, 18 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நூல் 212_ஆம் ஏட்டில் தொடங்குகிறது. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நங்குல மாதே நல்ல வயிரவ தயிலம் கேளாய்
புங்கெண்ணெய் இலுப்பை நிம்பம் புனல்தீயின் சாறு சேவன
கங்குலை நீக்கும் தேவைக் கனியென்று பாய்ந்தோ னைஞ்சும்
அங்கவை சாறு மட்டை ஆமையின் நிணம்பூ நாகம். (1)

ஆ. முடிவு

இராச மிருகாங்கிசம்:

தங்கம் 1 பலம்; இரதம் 6 பலம்; துத்தநாகபற்பம் 1 பலம்; காந்த செந்தூரம் 1 பலம்; வங்க பற்பம் 1 பலம்; அருதார செந்தூரம் 3 பலம்; மனோசிலை 3 பலம்; உலோக செந்தூரம் 3 பலம்; வெள்ளி 1 பலம்; கந்தகம் 3 பலம்; பச்சநாபி 3 பலம்; திப்பிலி 10 பலம்; காவிக்கல்லு 3 பலம்; சாத்திரவேதி 3 பலம்; சாதிலிங்கம் 3 பலம் இவை சேரக் கற்றாழைச் சாற்றில் ஒருசாமம் அரைத்து, ஆடாதோடைச்சாற்றில் ஒரு சாமம் அரைத்து அடையாகப் பிடித்துப் பெரிய சோகிக்குள் வைத்து மறு சோகி கொண்டு மூடி ஏழுசீலை மண்செய்து ஓர் ஓட்டில் வைத்து உசரம் எரு அடுக்கிப் பொடி எருப்போட்டுத் தீப் போட்டு வெந்ததின் பிறகும் 8 நாள்ஆறவிட்டு எடுத்து இந்தச் செந்தூரத்துக்குச் சரி திப்பிலி போட்டுக் கருப்பம்பால் விட்டு அரைத்து ஒரு பணவிடை உண்டைபண்ணி நிழலிலுலர்த்தி இதிலோருண்டையும் திப்பிலிப்பொடி 3 பலமும் தேனில் இரண்டு நேரமும் 40 நாள் கொள்ள உழை மாந்தை, சுரமாந்தை, கசம், இராசரோகம், காசம், ஈளை, இருமல், எலிக்கடி, மந்தாரகாசம், சுவாச காசம், காய சுவாசம், செப்பும் கோபம் 96உம் தீரும். இதில் ஓர் உருண்டை பனங்கருப்புக்கட்டியில் வைத்து இரண்டு நேரமும் 40 நாள் கொள்ள சூலைக்கடுப்பும், புண்குடோரமும் தீரும். வேறு.

(இதற்குமேல் எழுதப்படவில்லை).

5. பிற செய்திகள்

இச் சுவடியின் முதல் ஆறு ஏடுகளில் தயில வகைகளும் அடுத்து இறுதிவரை பற்பச் செந்தூர வகைகளும் இடம் பெற்றுள்ளன.

2533. தேவாரப் பதிகங்கள்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1970
ஆ. ண/62

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. திருஞானசம்பந்தர் முதலியோர்
ஆ. தேவாரப் பதிகங்கள்
இ. சைவத் திருமுறைகள்
ஈ. செய்யுள்: 902

3. தோற்றக்கூறுகள்
அ. 105 ஏடு; 210 பக்கம்
ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 25 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. முதல் ஆறு ஏடுகள் காணப்படவில்லை. உள்ளவை நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பா(ய்)ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே (1)

ஆ. முடிவு
நல்லார்கள் சேர்புகலி ஞானசம் பந்தன்நல்ல
எல்லார் களும்பரவும் ஈசனை ஏத்துபாடல்

பல்லார் களும்மதிக்கப் பாசுரம் சொன்னபத்தும்
வல்லார்கள் வானோர் உலகாளவும் வல்லரன்றே. (12)
திருச்சிற்றம்பலம்

5. பிற செய்திகள்
சுவடியின் ஈற்றில் திருப்பதிக அட்டவணை எழுதப்பெற்றுள்ளது.

2534. நன்னூல் விருத்தி

1. நூலகக் குறிப்புகள்
அ. 1971
ஆ. ச/58

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. பவணந்தி முனிவர்
ஆ. நன்னூல் - சங்கரநமச்சிவாயர் விருத்தி
இ. இலக்கணம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 300 பக்கம் வரும்

3. தோற்றக்கூறுகள்
அ. 189 ஏடு; 378 பக்கம்
ஆ. நீளம் 31.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10, 11 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அருஉரு வாகிய அமலன தடியிணை
ஒருமையொ டுள்குதும் ஒளிபெறற் பொருட்டே

(இதற்கு முன்னால், "எண்ணிய எண்ணிய எய்துப," "தாமரை புரையும் காமர் சேவடி", தவளத் தாமரை தாதார் கோயில்", "சந்தனப் பொதியத் தடவரை" எனத் தொடங்கும் சுவடிக் காப்புப் பாடல்கள் எழுதப் பட்டுள்ளன).

ஆ. முடிவு

பேரறு பானிரண்டெண் ணான்கு வினைபொர் துத்தான்
ஓரறுபத் தெட்டிடைதான் மூவேழின் மேலொன்று
உரியிருபத் தொன்றாகச் சொற்சூத்தி ரத்தின்
விரியிருநூற் றோரைந்தாய் வேண்டு.

சொல்லதிகாரம் முற்றும்.

நமச்சிவாய குருபரன் பாதார விந்தமே துணை.

இ. பிற்குறிப்பு

சுப்பிரமணிய மா குருதேசிகர் அடிமையாகிய சுப்பிரமணிய தம்பிரான் நன்னூல் நீடுழி வாழ்க.

5. பிற செய்திகள்

இச்சுவடியில் முதல் இரண்டு ஏடுகள் ஒருவரால் எழுதப்பட்டுள்ளன. மீண்டும் வேறொருவர் கையெழுத்தில் முதலிலிருந்தே தொடங்கி எழுதப்பட்டுள்ளது. இரண்டாவது கையெழுத்து மிகத் தெளிவாக உள்ளது.

2535. வில்லிபாரதம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1972
ஆ. ந/164

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. வில்லிபுத்தூரார்
ஆ. வில்லிபாரதம்
இ. காப்பியம்
ஈ. செய்யுள்: 2062

3. தோற்றக்கூறுகள்
அ. 165 ஏடு; 330 பக்கம்
ஆ. நீளம் 43 செ.மீ., அகலம் 4 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 12 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நீடாழி யுலகத்து மறைநாலொ
டைந்தென்று நிலை நிற்கவே
வாடாத தவவாய்மை தவறாத
முனிராசன் மாபாரதம் செய்தநாள்
ஏடாக மகமேரு வெற்பாக
வெங்கூரெ ழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப்ப -
ணிந்தன்பு கூர்வாமரோ.

ஆ. முடிவு
இரவிமக னேகுதலும் அரவதுவ சன்றுணைவர்
விரவினர்வ ளைந்துதம புரவியணி தேர்விடவே. (66)

(இது பதின்மூன்றாம் போர்ச் சருக்கத்தின் 66_ஆம் பாடல். இதற்கு மேல் எழுதப்படவில்லை).

2536. ஞானவாசிட்டம்

1. நூலகக் குறிப்புகள்
   அ. 1973
   ஆ. ட/245

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. ஆளவந்தார் - வீரை
   ஆ. ஞானவாசிட்டம் - மூலமும் உரையும்
   இ. தத்துவம்
   ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

3. தோற்றக்கூறுகள்
   அ. 52 ஏடு; 104 பக்கம்
   ஆ. நீளம் 47 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. முதல் 65 ஏடுகள் காணப்படவில்லை. 85 ஆவது ஏடு முறிவு. உள்ளவை நல்ல நிலை
   எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இந்தப் பொருளைய மறுத்திளைப் பாறுமாறோர்
முந்தைக் கதைகேள் குணமுத்தி விவேகமுற்றோன்
விந்ைதப் புயத்தோன் பதுமப்பெயர் வேந்தன் மண்மேல்
சிந்தைக் கினிதாம் குணலீலையச் செம்மல்தேவி. (1)

(இது லீலை கதையின் தொடக்கம்).

ஆ. முடிவு

தான் இழைக்கின்ற நூலாலே சுற்றிக் கட்டுப்பட்டு இறக்கின்ற கொசகாரப் புழுவைப் போலத் தமது வசத்திலுண்டாகப்பட்ட என்கண், என்செவி, என் மூக்கு, என்தேகம், எனது பிறர் என்கின்ற கற்பனையினாலும் அந்த வாசனையினாலும் யாரும் பாசமாகிய மயக்கத்தை அடைவார்கள். இங்ஙனம் சொல்லப்பட்ட மனத்தினது கதையைக் குற்றம் தீர்ந்த உன் மனத்தினாலே நிச்சயித்து அந்த மனமானதை மாளும்படி செய்வாய். சகல தேசங்களுக்கும் அதிபதியாகிய இராகவனே என்று சமஸ்தமும் தெளிந்து அறியப்பட்ட வசிட்டப்பிரமரிஷி அருளிச்செய்தார் என்றவாறு.

மனத்தின் கதை முற்றும். ஆகக்கதை 9க்குப் பாயிரம் உட்படத் திருவிருத்தம் 411.

2537. சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1974

ஆ. ய/163

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை

ஆ. சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்: 103

3. தோற்றக்கூறுகள்

அ. 52 ஏடு; 104 பக்கம்

ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 4 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 13 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மாமேவு வான்பிறைமு டிப்பிறையி ரண்டென்ன
வாய்க்கடைத் தோற்றியவிரும்
மருப்பிரண் டென்னவங் கைக்கோடி ரண்டென்ன
மார்பின்முத் தாரமென்னப்
பாமேவு பேருதர பந்தமென வரைசூழ்ப -
டாமெனத் தாளின்முத்தம்
பதித்தகழ லெனவிரவ மேலோங்கு பேருருப்
பண்ணவனை யஞ்சலிப்பாம்
ஏமேவு ஞானசபை இறைவர்தம் மேனியினி -
ணங்குறவெ முப்புலகெலாம்
என்னுமறை யாதியாக் கொண்டவரு யிர்க்கருளும்
இயல்பனைத் துந்தெரித்து
நாமேவு மம்முதலொ டொன்றவினை யுருபுதொக
நான்கனடி யாதிசெய்து
நாற்சீரில் நானெறிவி ளக்கியொளிர் சேக்கிழார்
நற்றமிழ்க் கவிதழையவே.

ஆ. முடிவு

பண்புகெழு நின்சரித் திரமினிய பாவாற்ப -
ரப்பியதி ருக்கயிலாய
பரம்பரை உமாபதி சிவன்புகழு மவன்முனோர்
பைம்புகழும் அவன்வழிவரும்
நண்புபுனை தவர்புகழும் இனிமேலும் வருபவர்
நயப்புகழும் நீடுவாழ
நாடும்விதம் நீசெய்த மாபுரா ணத்தமரும்
நாயன்மார் பெருமைவாழ
விண்புகழும் நால்வர்திரு வாய்மலர்ந் தருள்திரா-
விடவேதம் என்றும்வாழ
மெய்யன்பில் நின்னால யப்பணிமு தற்புரிவி -
ருப்பமிக் கார்கள்வாழத்
திண்புவியெ டுத்துஏத்து சேவையர்கு லாதிபன்
சிறுதேர்உ ருட்டியருளே!
சிறுகோலெ டுந்தரசு செங்கோல்நி றுத்தினோன்
சிறுதேர்உ ருட்டியருளே.

2538. திருவொற்றியூர் வடிவுடையம்மன் பிள்ளைத்தமிழ்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1975
ஆ. ய/164

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கனகசபைத் தம்பிரான்
ஆ. திருவொற்றியூர் வடிவுடையம்மன் பிள்ளைத்தமிழ்
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள்: 101

3. தோற்றக்கூறுகள்
அ. 21 ஏடு; 42 பக்கம்.
ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10, 11 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
பூமேவு திருமாது மணிமார்பி லுறைகின்ற
புயல்வண்ண நெடுமாயனும்
புகழ்பெற்ற கலைமாது மறைநாவி லுறைகின்ற
புத்தேளும் மலர் துன்றிய
காமேவு கற்பகப் பொன்னுலகில் உறைகின்ற
காவலனும் முனிவோர்களும்
கருத்தில்உணர் வித்தேவல் செய்யுங்கு ணாலயக்
கடவுள்மலர் அடிகள்பணிவாம்
தேமேவு கொன்றைச்செ ழுந்தேன் து ளிக்கும்தி -
யாகப்பி ரான்வேணியாம்
செங்கொண்டல் கண்டுகண்டு உள்ளம்க ளிக்குமொரு
தெய்வமட மயிலையடியேன்
பாமேவும் ஆதிபுரி வைகுகிளி யைப்புலவர்
பன்னுதிரி புரசுந்தரப்
பாவையைக் கருணைமழைபொ ழிவிழிக் கொண்டலைப்
பரவுதமிழ் தழைக்கவென்றே.

ஆ. முடிவு
சொற்பயிலு மறைநெறிகள் வாழவந் தணராறு
தொழிலினொடு வாழவெற்றி
தோலாத அரையர்வணி கர்கள்வாழ வாழ்வுமிகு
சூத்திரர்கள் வாழ ஏனைப்

பற்பலகு லத்தினமர் வோர்களும் வாழ ஒளி
பரவுசிவ சமயம் வாழப்
பரசமய மாக்களும் பத்திநின் பாங்காப்ப-
தித்தினிது வாழநினது
கற்பனையில் நில்லா து மா றுபடும் இழுதையர்க-
ணங்களும் கொட்டம்நீங்கிக்
காதலொடும் வாழநின் திருவிழாப் பணிவிடை(கள்)
கவின்கொண்டுநாளும்வாழப்
பொற்புமலி யொற்றிநகர் வாழவடி வுடையம்மை
பொன்னூசல் ஆடியருளே
பூலோக கயிலாயர் பாலேக மானபெண்
பொன்னூசல் ஆடியருளே (10)

பொன்னூசல் முற்றும். ஆக 100. ஆகப்பருவம் 10க்குத் திருவிருத்தம் 100. திருவொற்றியூர் பிள்ளைத்தமிழ் எழுதி நிறைந்தது. கச்சியப்பதேசிகன் திருவடி வாழ்க.

2539. குற்றாலத் தலபுராணம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1976
ஆ. ப/73

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. திரிகூட ராசப்பக் கவிராயர்
ஆ. குற்றாலத் தலபுராணம்
இ. தலபுராணம்
ஈ. செய்யுள்: 915

3. தோற்றக்கூறுகள்

அ. 117 ஏடு; 234 பக்கம்

ஆ. நீளம் 24 செமீ., அகலம் 3 செமீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. முதல் 28 ஏடுகள் காணப்படவில்லை. 145-க்குமேல் இருக்க வேண்டியன இல்லை. உள்ளவை நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

விரைசெய் தாமரை வியன்கலை மாதுடன் மேவி
முருகு யிர்த்துநால் வாயுற வாரண முழங்கி
அரச மைந்துபூந் தண்டுக மண்டலம் அசைத்துப்
புரையி லாவனம் திசைமுகக் கடவுளைப் பொருவும். (1)

(இது திருப்புராண வரலாற்றின் முதல் பாடல்)

ஆ. முடிவு

இலவிதழ் விரியும் தோற்றம் இவர்கொலோ, தக்கன் வேள்வி
நலனவி நுகர்ந்தா ரென்ன நவிலவாய் திறத்தல் போலும்
புலனுற அடைந்தார் தம்மை புறஞ்சொலத் தகுமோ என்ன
அலரும்மாந் தளிர்கள் கையால் அமைத்துவாய் புதைத்தல் மானும் (10)

(இது தேவர்கள் சிவத்துரோகம் தீர்ந்த சருக்கத்தின் பத்தாம்பாடல். அடுத்த பாடலின் முதலிரண்டடிகளோடு இவ்வேடு முடிகிறது. இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

2540. திருமுல்லைவாயிலந்தாதி

1. நூலகக் குறிப்புகள்
அ. 1977
ஆ. ய/165

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. சிவஞான முனிவர்
ஆ. திருமுல்லைவாயிலந்தாதி
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள்: 101

3. தோற்றக் கூறுகள்
அ. 26 ஏடு; 52 பக்கம்
ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 4 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
மல்லை வினாயக னிந்தெம்மை யாளேற் றிவைபுகல்வே
றில்லை வினாயக னன்கெனு மில்லென் றிகழலெனுஞ்
சொல்லை வினாயக நைந்திரப் போர்க்கருள் சோதிபெற்ற
முல்லை வினாயகன் முல்லையந் தாதிக்கு முன்னிற்குமே.

ஆ. முடிவு
நண்ணத் திருவள வானந்த வீட்டி னயந்தெண்ணிடு
மெண்ணத் திருவள கத்தகழ்ந் தேகி யிரும்பருதி
வெண்ணத்திருவளர் கையேந்தி காணரும் வேந்தனமர்
திண்ணத் திருவள முல்லையிற் சேர்மின் திருத்தகவே. (100)

2541. சிவஞான தீபம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1978
ஆ. ட/246

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. இரேவண சித்தர்
ஆ. சிவஞான தீபம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள்: 173

3. தோற்றக் கூறுகள்
அ. 24 ஏடு; 48 பக்கம்
ஆ. நீளம் 47 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
விரைமருவும் கமலமலர் விரிஞ்சன் வாழ்வும்
விண்ணவர்கோன் அரும்பதமும் மிக்கோர் வாழ்வும்
திரைமருவு நதிபதியில் திருவின் கேள்வன்
செல்(வ)முமா றாதபெரும் சித்தி யாவும்
பரையுதவும் கரிமுகவன் செம்பொற் பாதம்
பற்றாக நம்போதப் பற்று நீங்கி
வரைவறுமன் பினிற்றொழுமெய் யடியார் பாதம்
வணங்குமடி யாரடியார் மதித்தி டாரே.

ஆ. முடிவு

கருமுகி னிகரன குழன்மடவரலியர்
களபமெ னகிலிணை கலவாரே
மருமல ரயனுட னரிமக பதிமிக
மனமுற மகிழ்பத மதியாரே
உருவித யிருவினை விதிபதி விபரித
முறுபிற வியனெறி உழலாரே
அருமறை முடிவினி னடமுடை யவனிணை
அடிதொழு மடியவர் அடியாரே. (173)

சிவஞான தீபம் முற்றிற்று. முற்றும்.

2542. பிரமீசர் பதிற்றுப்பத்தந்தாதி

1. நூலகக் குறிப்புகள்
அ. 1979
ஆ. ய /166

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. கச்சியப்ப முனிவர்
ஆ. பிரமீசர் பதிற்றுப்பத்தந்தாதி
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள்: 101

3. தோற்றக் கூறுகள்
அ. 20 ஏடு; 40 பக்கம்
ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அஞ்சிறைவண் டினம்புரளும் கரடமதக்
　　கலுழிவிண்ணோர்க்கு அலக்கண் காட்டும்
வெஞ்சினவே லவுணர்நெடும் படைமுழுதும்
　　பொருதடமுன் விசித்த நீலக்
கஞ்சுக்மே யெனவுடலம் போர்த்தொளிரும்
　　களிற்றுமுகக் கடவுள் வாசச்
செஞ்சரணப் போதிறைஞ்சிப் பிரமீசன்
　　றனைவழுத்தல் செய்வா மன்றே.

ஆ. முடிவு

தாயா யிரங்கி வளர்மதியில்
　　தகைபே ரிருளைத் துரந்தவருள்
ஓயா துள்கிக் கரைந்துருகி
　　ஒருவன் பிரம நகரெந்தைக்கு
ஆயா வளியேன் இடுமலர்கள்
　　அன்னோன் அடியின் மருவுமவன்
மாயா தளிப்ப என்சிரத்தில்
　　வனவார் கழற்பூ மருவுமே. (100)

2543. திருவாதவூரர் புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1980

ஆ. ந /165

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கடவுள்மா முனிவர்

ஆ. திருவாதவூரர் புராணம்

இ. காப்பியம்

ஈ. செய்யுள்: 541

3. தோற்றக் கூறுகள்
அ. 114 ஏடு; 228 பக்கம்
ஆ. நீளம் 27.5 செ.மீ., அகலம் 2 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 36 ஆவது ஏடு முறிவு. 90 ஆவது ஏடு காணப்படவில்லை.
ஈற்றில் சில ஏடுகள் சிதைந்துள்ளன. சுமாரான நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
காண்க: தொடர் எண். 1951

ஆ. முடிவு
ஞால மோங்குக நான்மறை நீடுக
சீல மன்னவன் செங்கோல் விளங்குக
கால மாமழை மன்னுக காதலால்
சாலும் ஈசன் அடியார் தழைக்கவே. (33)

பாதசேருவைச் சருக்கம் முற்றும்.

இ. பிற்குறிப்பு
971ஆம் வருஷம் கார்த்திகை மாதம் 13ஆம் தேதி சுக்(கிரவாரம்)..... இதற்கு மேல் ஏடு சிதைவு.

2544. கோயிற்புராணம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1981
ஆ. ப /74

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. உமாபதி சிவாச்சாரியார்
ஆ. கோயிற் புராணம்
இ. தலபுராணம்
ஈ. செய்யுள்: 414

3. தோற்றக் கூறுகள்

அ. 34 ஏடு; 68 பக்கம்
ஆ. நீளம் 47 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7, 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பொற்ப தப்பொது வார்புலி யூர்புகழ்
சொற்ப தப்பொருள் ஆய்குவ தூயவை
அற்ப கற்றொழ வாழணி கோபுரக்
கற்ப கத்தனி யானை கழல்களே

ஆ. முடிவு

மழைவ ழங்குக மன்னவ னோங்குக
பிழையில் பல்வளன் எல்லாம் பிறங்குக
தழைக அஞ்செழுத் தோசை தரையெலாம்
பழைய வைதிக சமயம் பரக்கவே. (53)

திருவிழாச் சருக்கம் முற்றும். கோயிற்புராணம் முற்றும். முதலது வியாக்கிரபாதச் சருக்கம் 58; இரண்டாவது பதஞ்சலிச் சருக்கம் 99; மூன்றாவது நடராசச் சருக்கம் 71; நான்காவது இரணியவன்மச் சருக்கம் 133; ஐந்தாவது

திருவிழாச் சருக்கம் 53; ஆகச் சருக்கம் ஐந்துக்குத் திருவிருத்தம் 414.

2545. குடந்தையந்தாதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1982

ஆ. ய/167

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை

ஆ. குடந்தையந்தாதி (திரிபு)

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்: 102

3. தோற்றக் கூறுகள்

அ. 26 ஏடு; 52 பக்கம்

ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சோதிக் களிற்றைய லோடுறு மாறு துதிசெயற்கா
நீதிக் களிற்றை வரையருந் தாப்பிழை நீங்கவரால்
சாதிக் களிற்றை யளர்நீர்க் குடந்தையந் தாதிசொல்வான்
ஆதிக் களிற்றை யடுத்தாம் அடுத்த அனைத்தும்வந்தே.

ஆ. முடிவு
பத்திக் கணங்கண மேனும் விடாது படர்குடமூக்
குத்திக் கணங்கணந் தோமற நோக்கியுங்கும் பிட்டுயவாங்
கத்திக் கணங்கண வென்னவோர் பால்நல்கு காரணனெம்
புத்திக் கணங்கண வப்பதித் தான்றன பூவடியே. (100)

2546. ஞான வாசிட்டம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1983
ஆ. ட/247

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ஆளவந்தார் - வீரை
ஆ. ஞான வாசிட்டம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள்: 2055

3. தோற்றக் கூறுகள்
அ. 217 ஏடு, 434 பக்கம்
ஆ. நீளம் 49 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. சற்றுக்கிறுக்கலான கையெழுத்து
ஊ. 28ஆவது ஏடு முறிந்துள்ளது. 55, 142 ஆகியவை இல்லை. உள்ளவை சுமாரான நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
போற்றி ராமன் புகல்வயி ராக்கியம்
தோற்று நூற்றிரு பத்திரண் டாஞ்சுகன்

சாற்று சீரிரு பத்தஞ்சு தற்பதத்
தேற்றம் வேண்டினர் நேரிருபத் தெட்டே (1)

ஆ. முடிவு
தாளவந்த மலரோன்றன் மனத்துதித்த
வசிட்டனயன் தன்பாற் கேட்டு
நாளவந்தான் போகாது ராமனுக்கங்கு
உபதேசம் நல்கி இங்கே
ஆளவந்தான் வீரையில்மா தவப்பட்டன்
அங்கிஷாவ தாரம் ஆகி
மீளவந்தான் வந்துதமிழ் வசிட்டரா
மாயணமும் விளம்பி னானே.

ஆக அதிகாரம் 44க்கு 2055.

இ. பிற்குறிப்பு
விரோதிகிருது வருஷம் ஆடி மாதம் 27ஆம் தேதி ஞானவாசிட்டம் எழுதி முடிந்தது. முற்றும்.

2547. திருவாசகம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1984_1
ஆ. ண /63

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. மாணிக்கவாசகர்
ஆ. திருவாசகம்
இ. சைவத்திருமுறைகள்
ஈ. செய்யுள்: 652

3. தோற்றக் கூறுகள்
அ. 57 ஏடு; 114 பக்கம்

ஆ. நீளம் 46 செ.மீ., அகலம் 3 செ

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ள

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 1, 2, 11-14, 33 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. சுவடியின் வலது ஓரம் சற்றே சிதைந்துள்ளது. பொதுவாக நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

....

.... மென் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டி

ஆ. முடிவு

செம்மைநல மறியாத சிதடரொடே திரிவேனை
மும்மைமல மறுவித்து முதலாய முதல்வன்றான்
நம்மையுமோர் பொருளாக நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. (9)

ஆகத்திருவாசகம் 652.

இ. பிற்குறிப்பு

928 ஆம் வருஷம் மாசி மாதம் 10 ஆம் தேதி எழுதி முடிந்தது.

2548. திருவிசைப்பா

1. நூலகக் குறிப்புகள்
அ. 1984_2
ஆ. ண/63

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. திருமாளிகைத்தேவர் முதலியோர்
ஆ. திருவிசைப்பா
இ. சைவத்திருமுறைகள்
ஈ. செய்யுள்: 288

3. தோற்றக் கூறுகள்
அ. 25 ஏடு; 50 பக்கம்
ஆ. நீளம் 46 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. எழுத்து நிலை:தெளிவான கையெழுத்து
ஊ. சுவடியின் நிலைமை: நூல் ஏட்டெண் 67இல் தொடங்குகிறது. 70ஆம் ஏடு காணப்படவில்லை. உள்ளவை நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்
அ. தொடக்கம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே (1)

ஆ. முடிவு
ஏயு மாறெழிற் சேதியர் கோன்தில்லை
நாய னாரை நயந்துரை செய்தன
தூய வாதுரைப் பார்துறக் கத்திடை
ஆய வின்ப மெய்தியிருப் பார்களே (10)

ஆகப்பதிகம் 28க்கு 288. திருவிசைப்பா முற்றும்.

2549. திருப்பல்லாண்டு

1. நூலகக் குறிப்புகள்
அ. 1984_3
ஆ. ண /63

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. சேந்தனார்
ஆ. திருப்பல்லாண்டு
இ. சைவத்திருமுறைகள்
ஈ. செய்யுள்: 13

3. தோற்றக் கூறுகள்
அ. 1 ஏடு; 2 பக்கம்
ஆ. நீளம் 46 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 9, 10 வரிகள்.
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

பொன்னின்மய...
புவனியெல் லாம்வா...
அன்னநடை மடவா ளுமைகோன் அடி
முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே

ஆ. முடிவு
எந்தையே எந்தாய் சுற்றமுற்று மெனக்கமுதாம்
எம்பிரா னென்று
சிந்தைசெயும் சிவன்சீ ரடியார் அடிநாய்
சென்று
அந்தமில்லா ஆனந்தச் சேந்தனெனைப் புகுந்து
ஆண்டுகொண் டாருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவ னேயென்று
பல்லாண்டு கூறுதுமே. (13)

திருப்பல்லாண்டு முற்றும்.

(இரண்டாமடி மாறுபட்டுள்ளது)

2550. திருமுல்லைவாயிலந்தாதி

1. நூலகக் குறிப்புகள்
அ. 1985
ஆ. ய/168

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சிவஞான முனிவர்
ஆ. திருமுல்லைவாயிலந்தாதி
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள்: 101

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்
ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 11, 12, 13 வரிகள்
உ. தெளிவான சிறிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
காண்க: தொடர் எண் 1977

ஆ. முடிவு
அன்புடை யாளியங் காக்குறுங் கானத் திவவசியென்
றன்புடை யாளியங் காக்குறுங் கானத் திவவசியே
தன்புடை யாளியங் காக்கு மதர்தனி யெய்தவிவள்
றுன்புடை யாளியங் காக்கு மொலிமுல்லைத்
தோன்றவதாள்
வன்புடை யாளியங் காக்கு மிடறன்ன வல்லிருளே. (96)

முல்லையந்தாதி முற்றும்.

(ஏட்டில் இப்பாடல் ஐந்தடியாக எழுதப்பட்டுள்ளது. இவ்வந்தாதியில் இன்னமும் நான்கு கட்டளைக் கலித்துறைகள் இருக்கவும் முற்றும் எனத் தவறாக எழுதப்பட்டுள்ளது.)

2551. பிரபுலிங்க லீலை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1986

ஆ. நூ/166

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சிவப்பிரகாசர் - துறைமங்கலம்

ஆ. பிரபுலிங்க லீலை

இ. காப்பியம்

ஈ. செய்யுள்: 1513

3. தோற்றக் கூறுகள்

அ. 90 ஏடு; 180 பக்கம்

ஆ. நீளம் 47 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூவாய் நெடுங்கோட் டுறுபசுந்தேன்
கைகான் முடங்கு பொறியிலிதன்
நாவாய் ஒழுகிற் றெனஉலகம்
அளந்த மாலும் நான்முகனும்
காவாய் எனநின் றேத்தெடுப்பத்
தானே உவந்துஎன் கரதலத்தில்
மேவா அமர்ந்த மாமணியைத்
தொழுது வினைக்கு விடைகொடுப்பாம் (1)

ஆ. முடிவு
புண்ணியர் உலகில் வாழ்க புலன்செரு நோன்பு வாழ்க
பெண்ணொரு பாகன் பூசை பேணிவாழ் அடியார் வாழ்க
கண்ணுத லொருவற் சார்ந்த கற்புடைச் சைவம் வாழ்க
அண்ணல்அல் லமன்சீர் கேட்கும் ஆதர வாளர்வாழ்க. (23)

மான்மியகதி முற்றும். ஆகவிருத்தம் 1153.

இ. முற்குறிப்பு
1015_ஆம் வருஷம் சித்திரை மாதம் 15_ஆம் தேதி மேலகரத்திலிருக்கும் சுப்பிரமணியன் கவிராசர் அவர்கள் குமாரன் ராசப்பன் கவிராசர் எழுதிவருகிற பிரபுலிங்கலீலை நீடுழி காலம் வாழ்க.

பிற்குறிப்பு
1015_ஆம் வருஷம் பங்குனி மாதம் 21_ஆம் தேதி புந்திவாரமும் பூரட்டாதி நட்சத்திரமும் சதுர்த்தசியும் கூடின சுபதினத்தில் பிரபுலிங்க லீலை எழுதி முகிந்தது.

2552. உலகந்தாதி

1. நூலகக் குறிப்புகள்
   அ. 1987
   ஆ. ய/169

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. நமச்சிவாயக் கவிராயர் - விக்ரமசிங்கபுரம்
   ஆ. உலகந்தாதி
   இ. சிற்றிலக்கியம்
   ஈ. செய்யுள்: 101

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்

ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. ஈற்றேடு மட்டும் முறிந்துள்ளது. மற்றவை நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முந்தாதி வேதப் பொருளான சிங்கை முதல்வியுல
கந்தாதி பாட வருள்செய்யு மேயெந்தை யார்சடைமேற்
பிந்தா திமகரச் ந்திர ரேகை பிடித்திதழிச்
செந்தாதி னாலோர் சிவப்பேற்றும் தாழ்கைச் சிறுகளிறே

ஆ. முடிவு

மேலைக் கடவு ளிடப்பாக முந்துள்ளும் வெள்ளருவி
மாலைப் பொதியமலைச் சாரலு நின் ....
காலைக் கமலமுங் கல்யாண விக்ரக காந்தியும்பொன்
ஓலைக் குழையுங் குழற்காடும் .... (100)

உலகந்தாதி முற்றும்.

5. பிற செய்திகள்

இது பாபநாசம் உலகம்மை மீது பாடப்பெற்ற சிற்றிலக்கியம் ஆகும்.

2553. சிதம்பர புராணம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1988
ஆ. ப /75

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. திருமலைநாதர் - புராண
ஆ. சிதம்பர புராணம்
இ. தலபுராணம்
ஈ. செய்யுள்: 813

3. தோற்றக் கூறுகள்
அ. 58 ஏடு; 116 பக்கம்
ஆ. நீளம் 46 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நீர்தாங்கு பார்தாங்கு நெடுமாலும்
மலரயனும் நிரந்து போற்ற
வார்தாங்கு புளகமிகு களபமுலை
மலைவனிதை மகிழ்ந்து காணத்
தார்தாங்கு சடாமவுலி நிலவெறிப்பப்
பொதுநடனந் தயங்கா நிற்கும்
சீர்தாங்கு வேதாந்த நாதாந்தப்
பரஞ்சுடரைச் சிந்தை செய்வாம்

ஆ. முடிவு

இந்த எல்லை மலைநாட் டிடத்தினும்
வந்த தெய்வ வடமொழி அப்படி
செந்த மிழ்த்தொடைப் பாவாற் றெரித்தனம்
முந்து மற்றதும் வந்தால் மொழிதுமால். (98)

ஒன்பதாவது துற்றெரிசனச் சருக்கம் முற்றும். ஆகச் சருக்கம் 9க்குத் திருவிருத்தம் 813.

5. பிற செய்திகள்

நூலுக்குரிய விநாயகர் காப்பு தனி ஏட்டில் எழுதப்பட்டிருந்து பிறகு விழுந்திருக்க வேண்டும்.

2554. திருவிடைமருதூர்த் திரிபந்தாதி

1. நூலகக் குறிப்புகள்
   அ. 1989
   ஆ. ய/170

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை
   ஆ. திருவிடைமருதார்த்திரிபந்தாதி
   இ. சிற்றிலக்கியம்
   ஈ. செய்யுள்: 102

3. தோற்றக் கூறுகள்
   அ. 26 ஏடு; 52 பக்கம்
   ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 4 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
சிதவா ரணங்குமு றுந்துறை மூழ்கித் திருமறையோ
ரிதவா ரணங்குல வச்செய் யிடைமரு தீசனென்றோ
மதவா ரணங்கு முலைப்பாகற் பாடுதற் காண்டபெரு
மதவா ரணங்கு வலயம்கொண் டாடும் வரந்தருமே

ஆ. முடிவு
கொள்ள வரையும் படருறுத் தாறின்பங் கூட்டியதா
னள்ள வரையும்பர் மேற்செய் மகாலிங்க நாதருல
கெள்ள வரையும் பழிபாவஞ் சுற்றி லிடைமருதர்
தெள்ள வரையுமொண் குஞ்சித மாய திருவடியே. (100)

திருவிடைமருதூரந்தாதி முற்றியது.

2555. தணிகைப் பதிற்றுப்பத்தந்தாதி

1. நூலகக் குறிப்புகள்
அ. 1990
ஆ. ய /171

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. கச்சியப்ப முனிவர்
ஆ. தணிகைப் பதிற்றுப்பத்தந்தாதி
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள்: 101

3. தோற்றக் கூறுகள்
அ. 10 ஏடு; 20 பக்கம்

ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது'
ஈ. ஒரு பக்கத்திற்கு 12 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. ஏற்றுச் சிதைவுற்ற நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
உயிர்க்குங் கைத்தல மொன்றுடை யாற்பணிந்
தயிர்க்கு மச்சம றுத்தடி யாருளஞ்
செயிர்க்கு மூாஞ்சிதை யுந்தணி கேசனைப்
பயிர்க்கு மேகமென் னப்பயில் விப்பரால் (காப்பு)

ஆ. முடிவு
அற்றவருக் கற்றபர மானந்தப் பெருவெள்ள
முற்றதிருத் தணிகைவரை யுறப்பணிந்தா ரேயன்றி
மற்றவரை வணங்குநரும் வணங்கினரை வணங்குநரும்
பற்றறுத்துத் துடைத்தார்கள் பங்கயத்தோன்
கையெழுத்தே.' (100)

திருத்தணிகையந்தாதி முடிந்தது.

2556. பெரிய புராணம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1991
ஆ. ண /64

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. சேக்கிழார்
ஆ. பெரியபுராணம்

இ. சைவத்திருமுறைகள்
ஈ. செய்யுள்: 4283

3. தோற்றக் கூறுகள்
அ. 328 ஏடு; 656 பக்கம்
ஆ. நீளம் 39 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 12 வரிகள்;
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. 219_223, 227_229 ஆகிய ஏடுகள் இல்லை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொட்க்கம்
உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஆ. முடிவு
வைய நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய வன்பர்வி ளங்குக
சைவ நன்னெறி தான்றழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே. (54)

திருவெள்ளானைச் சருக்கம் முற்றும். ஆகத் திருவிருத்தம் 4283.

இ. பிற்குறிப்பு
930_ஆம் வருடம் வைகாசி மாதம் 19_ஆம் நாள் வெள்ளிக்கிழமையும் பூருவபட்சத்துச் சதுர்த்தியும் திருவோண நட்சத்திரமும் பெற்ற சுபயோக சுபதினத்தில் செங்குவளை நாட்டில் திருப்பாற்கடல் ஆத்துப் போக்கு

திருக்குறுங்குடிக்கு வடபாலான செங்குளக்குறிச்சியில் ஸ்ரீவேங்கிடம் பிள்ளை வாத்தியாரவர்கள் குமாரன் சிவனடியார் அடியார் அடியார்க்கும் அடியானாகிய ரெங்கநாத வாத்தியார் தரித்திரதோசம் தீர்ந்து இகத்திலே...... (இதற்குமேல் ஏடுகள் இல்லை).

2557. கம்பரந்தாதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1992

ஆ. ய /172

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சிவஞான முனிவர்

ஆ. கம்பரந்தாதி

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்: 101

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்

ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11, 12 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து; பிழைகள் உள.

ஊ. சற்றே சிதைவுறு நிலை

எ. முழுமை?

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கருமங்கை யார மருமத்த ரேத்துசெ(ங்) காந்தளைநி
கருமங்கை யார மருமத்தர் வாழ்கச்சி போலவெப்பாங்

கருமங்கை யார மருமத்தர் வாய்மைத் திரப்பச்சென்ற
கருமங்கை யார மருமத்த முங்கடந் தெய்தலென்றே (1)

ஆ. முடிவு
பணியா தணங்கும் பரிசடி யாருதிர்ப் பட்டிடிற்செய்
பணியா தனந்தன் புகழுநிற் பீரென்று பாடிப்புத்தி
பணியா தனந்த முபசரி யாதுகம் பாவரவப்
பணியா தனந்தஞ் சமென்றழி வேனெப் படியுய்வனே. (94)

சிவமயம். கம்பரந்தாதி முற்றும்.

5. பிற செய்திகள்

100 பாடல்கள் இருக்கவேண்டிய பிரபந்தத்தில் 94 கவிகளே உள்ளன. ஆனால் கம்பரந்தாதி முற்றும் என் எழுதப்பட்டுள்ளது. நூற்காப்புச் செய்யுளும் காணப் படவில்லை. குறைச் சுவடியொன்றைப் பார்த்துச் செய்தபடியாக இருக்கலாம்.

2558. வாக்குண்டாம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1993_1
ஆ. ள/105

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ஔவையார்
ஆ. வாக்குண்டாம் - மூலமும் உரையும்
இ. நீதி நூல்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்
ஆ. நீளம் 47 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

ஆ. முடிவு

அறிவுடையோர் தாம் இறந்து போமளவும் இறந்து போகத்தக்க தீமையை உடைய செய்கைகளையே தமக்குப் பிறர் செய்தாலும் தம்மாலே ஆகுமளவும் நன்மையே செய்து தாம் அவரையும் காப்பார். எப்படியென்றால் மரங்கள(ானவை) தம்மை மனிதர் வெட்டுமளவும் அவருக்குங் குளிர்ச்சியாகிய நிழலையே கொடுத்து வெயில் அவர்மேலே படவொட்டாமல் மறைக்கும். இதுபோல என்றவாறு. தீங்கு செய்கின்றவருக்கும் நன்மையே செய்ய வேண்டுமென்பதாம். (30)

வாக்குண்டாமுரை முற்றிற்று.

5. பிற செய்திகள்

காண்க: தொடர் எண்: 1993_2.

2559. நல்வழி

1. நூலகக் குறிப்புகள்
அ. 1993_2
ஆ. ள/105

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ஔவையார்
ஆ. நல்வழி – மூலமும் உரையும்
இ. நீதிநூல்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 15 ஏடு; 30 பக்கம்
ஆ. நீளம் 47 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9, 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்றருவேன் – கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா

ஆ. முடிவு
திருமாதுக்குச் சமானமானவளே! பொன்னாலாகிய ஆபரணத்தை அணியும் அரசர் அதனை அணியாத

பெரிதாகிய கல்விப்பொருள் நிலைபெற்ற விவேகிகளுக்கு ஒப்பாகார். பிரகாசிக்கின்ற ஆபரணத்தையணிந்து கொள்கின்ற கைகால் முதலிய அவயவங்களானவை அதனை அணியாத உருவத்தைப் பார்க்கிற கண்களுக்கு ஒப்பாகுமோ? ஒப்பாகா என்றவாறு. மற்று அசை. (40)

5. பிற செய்திகள்
இச்சுவடி சென்னை கர்னாடக சரித்திர அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப் பெற்ற அச்சுப்புத்தகத்தைப் பார்த்து எழுதப்பட்டதாகும். அப்புத்தகத்தில் இடம் பெற்ற பிரசித்தப் பத்திரிகையும் இச்சுவடியின் இறுதியில் எழுதப்பட்டுள்ளது.

2560. வெற்றி வேற்கை

1. நூலகக் குறிப்புகள்
அ. 1994
ஆ. ள/106

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அதிவீரராம பாண்டியன்
ஆ. வெற்றி வேற்கை
இ. நீதிநூல்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்
அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 47 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
பிரணவப் பொருளாம் பெருந்தகை யைங்கரன்
சரணவற் புதமலர் தலைக்கணி வோமே.

வெற்றி வேற்கை வீர ராமன்
கொற்கை யாளி குலசே கரன்புகல்
நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னாற்
குற்றங் களைவோர் குறைவிலா தவரே.

ஆ. முடிவு
துணையோ டல்லது நெடுவழி போகேல்
புணைமீ தல்லது நெடும்புன லேகேல்
எழிலார் முலைவரி விழியார் தந்திரம்
இயலா தனகொடு முயல்வா காதே
வழியே யேகுக வழியே மீளுக
இவைகா ணுலகிற் கியலா மாறே.

வெற்றிவேற்கை முற்றிற்று.

2561. திருவிளையாடற் புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1995
ஆ. ப/76

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. பரஞ்சோதி முனிவர்
ஆ. திருவிளையாடற் புராணம்

இ. தலபுராணம்
ஈ. செய்யுள்: 3357

3. தோற்றக் கூறுகள்

அ. 215 ஏடு; 430 பக்கம்
ஆ. நீளம் 49 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 – 11 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. முதல் ஏடு காணப்படவில்லை. 170, 171 ஏட்டின் வலப்பக்கம் சிறிதளவு சிதைந்துள்ளது. 212-ஆம் ஏடும், 215-ஆம் ஏட்டிற்கு மேல் இருக்க வேண்டியனவும் காணப்படவில்லை. சுமாரான நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அறுகால்பீ டத்துயர்மா லாழிகடைந்
  தமுதையரங் கேற்று மாபோல்
அறுகாற்பே டிசைபாடுங் கூடன்மான்
  மியத்தையருந் தமிழாற் பாடி
அறுகாற்பீ டுயர்முடியார் சொக்கேசர்
  சன்னிதியில் அமரர் சூழும்
அறுகாற்பீ டத்திருந்து பரஞ்சோதி
  முனிவனரங் கேற்றி னானே (1)

ஆ. முடிவு

ஏத்தியருச் சனைசெய்து நினைவிலரி
  தாயன்பி லெளிய வட்ட
மூர்த்தியையங் கயற்கண்ணி யன்பனைமுப்
  போதும்போய் முடிதாழ்ந் தின்பம்
பூத்தமனத் தினரனைக்கை குவித்தேதேன்
  பொதிந்தசிறு புட்போ லந்த

மாத்தலனில் வசிட்டாதி முனிவர் தம்பேர்
வனஞ்செய்து வதிந்தார் மன்னோ. (53)

அர்ச்சனைப் படலம் முற்றும்.

(இதற்கு மேல் ஏடுகள் இல்லை)

5. பிற செய்திகள்:
சுவடியில் நூற்பெயர் திருவாலவாய்ப் புராணம் என உள்ளது.

2562. திருமந்திரம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1996
ஆ. ண/65

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. திருமூலர்
ஆ. திருமந்திரம்
இ. சைவத்திருமுறைகள்
ஈ. செய்யுள்: 1776

3. தோற்றக் கூறுகள்
அ. 83 ஏடு; 166 பக்கம்
ஆ. நீளம் 47 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. 61ஆம் ஏடு இல்லை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

ஆ. முடிவு
பெருந்தண்மை தானென நானென வேறா
இருந்தது மின்னலய தீச னறியும்
பொருந்து முடலுயிர் போலுண்மை மெய்யே
திருந்துமுன் செய்கின்ற தேவர் பிரானே. (14)

(இது சம்பிரதாயம் என்னும் பகுதியின் 14-ஆவது விருத்தம். .
இதற்குமேல் எழுதப்படவில்லை)

2563. சைவசமய நெறி

1. நூலகக் குறிப்புகள்
   அ. 1997
   ஆ. ப/248

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. மறைஞானசம்பந்தர்
   ஆ. சைவசமய நெறி
   இ. தத்துவம்
   ஈ. செய்யுள்: 726

3. தோற்றக் கூறுகள்
   அ. 20 ஏடு; 40 பக்கம்
   ஆ. நீளம் 47 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8, 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 16ஆம் ஏட்டிற்குமேல் சுவடியின் கீழ்ப்பாகம் சிதைந்துள்ளது. மற்ற ஏடுகள் நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
நல்லார் தொழும் வெண்ணெய் நல்லூர்ச் சிவாலயத்துட்
பொல்லார்தாள் யான்சூடும் போது

ஆ. முடிவு
இந்தமுறை தன்னில் இயன்றபடி தாமியற்றின்
வந்திடுமே முன்சொல் வரம்.

சைவ சமயநெறி சாற்றினன்சம் பந்தனுயிர்
மையலற வாய்க்க வரம்.

சைவசமயநெறி முற்றும்.

பொதுலட்சணம் 571 ஆசிரிய லட்சணம் 92 சீஷ லட்சணம் 38. ஆகச் சைவ நெறி விளக்கம் 726.

2564. உபமான சங்கிரகம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1998_1
ஆ. ச/59

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. இரத்தின கவிராயர்

ஆ. உபமான சங்கிரகம் - கேசாதி பாதம்
இ. இலக்கணம்
ஈ. செய்யுள்: 16

3. தோற்றக் கூறுகள்

அ. 1 ஏடு; 2 பக்கம்
ஆ. நீளம் 47 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
வேதத் தமிழ்மாறன் வெற்பனையார் கேசாதி
பாதத் துவமானப் பண்பெல்லாந் - தாதின்
முருகூர் மலர்க்குழலாய் மூதுரையாற் சொன்னேன்
குருகூ ரனைத்தொழுது கொண்டு.

ஆ. முடிவு
பாயற் பிடிவேழம் பைந்தூவி யன்னநடை
சாயற்கு மின்னமிர்தந் தான்மயிலாம் - சேயிழையாய்
மாந்தளிர்பொன் செண்பகப்பூ மாமேனி யம்மேனி
பூந்திதலை வேங்கைபசும் பொன். (16)

உபமான சங்கிரகம் முற்றும். கேசாதி பாதம் முற்றும்.

2565. உபமான சங்கிரகம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 1998_2
ஆ.ச/59

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. கடிகைப் புலவர்
ஆ. உபமான சங்கிரகம் _ பாதாதி கேசம்
இ. இலக்கணம்
ஈ. செய்யுள்: 30

3. தோற்றக் கூறுகள்
அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 47 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
அம்புயஞ் சுணங்கனாக் கனிச்சமாந் தளிரிணை
செம்பஞ்சு முயல்வயின் செயலையுள் ளடிக்கே (1)

ஆ. முடிவு
வாடா விளக்க மாமலர் மாலை
யோடாக் கிளிநிதி யுடன்றிருப் பாரதி
மேனகை யுருவசி மேவுதி லோத்தமை
யானயிந்தி ரைமற்ற ரம்பைநா கப்பெண்

கொல்லியம் பாவைநீர்க் கோதைசூர் மகளிர்
தல்லவு மகளிருக் கனைத்தென மொழியே. (30)

உபமான சங்கிரகம் முற்றும்.

பாதாதிகேசம் முற்றும்.

2566. முதுமொழிக்காஞ்சி

1. நூலகக் குறிப்புகள்
 அ. 1998_3
 ஆ.ச/59

2. உள்ளீடு: நூல் விவரம்
 அ. கூடலூர் கிழார் - மதுரை
 ஆ. முதுமொழிக் காஞ்சி
 இ. பதினெண்கீழ்க்கணக்கு
 ஈ. செய்யுள்: 95

3. தோற்றக் கூறுகள்
 அ. 3 ஏடு; 6 பக்கம்
 ஆ. நீளம் 47 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
 இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
 ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
 உ. தெளிவான கையெழுத்து
 ஊ. நல்ல நிலை
 எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் (1)
ஓதலில் சிறந்தன் றொழுக்க முடைமை

காதலில் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல் (2)

ஆ. முடிவு

நிற்றல் வேண்டுவோன் தவம்செயல் தண்டான் (4)

வாழ்க்கை வேண்டுவோன் சூழ்க்கை தண்டான் (5)

(இவை தண்டாப் பத்து. இதற்குமேல் எழுதப்படவில்லை)

5. பிற செய்திகள்

மேலும் இதனுள் கம்பராமாயணம் சடாயுமோட்சப் படலத்தின் சில பாடல்களும், சில தனிப்பாடல்களும் இடம் பெற்றுள்ளன.

2567. திருவிளையாடற்புராணம்

1. நூலகக் குறிப்புகள்
   அ. 1999
   ஆ. ப/77

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. பரஞ்சோதி முனிவர்
   ஆ. திருவிளையாடற் புராணம்
   இ. தலபுராணம்
   ஈ. செய்யுள்: 3366

3. தோற்றக் கூறுகள்
   அ. 238 ஏடு; 476 பக்கம்
   ஆ. நீளம் 30 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து

ஊ. முன்னும் பின்னும் சிற்சில ஏடுகள் வலப்புறத்தில் சிதைந்துள்ளன

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானையின் செய்யபொற் பாதமே. (1)

ஆ. முடிவு

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும் பரவுக வரங்க ளின்ப
நல்குக உயிர்கட் கெல்லா நான்மறைச் சைவ மோங்கிப்
புல்குக வுலக மெல்லாம் புரவலர் செங்கோல் வாழ்க.

இ. பிற்குறிப்பு

வடமலை பிள்ளை குமாரன் சின்னையன் ஏடு.

2568. கந்தபுராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2000

ஆ. ந/167

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கச்சியப்ப சிவாசாரியர்

ஆ. கந்தபுராணம் - சூரபன்மன் வதைப்படலம் முடிய

இ. காப்பியம்

ஈ. செய்யுள்: 2893

3. தோற்றக் கூறுகள்

அ. 400 ஏடு; 800 பக்கம்

ஆ. நீளம் 40 செ.மீ., அகலம் 4 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10_14 வரிகள்

உ. இருவரால் எழுதப்பட்ட தெளிவான கையெழுத்து

ஊ. முதல் 22 ஏடுகள் இல்லை. இறுதி 100 ஆம் ஏட்டின் வலப்புறம் சிதைந்துள்ளது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மறைமுதற் குடிலை தன்னின் மறைபொருண் முறைக டாவி
வெறிகமழ் கமலப் புத்தேள் விடைகொடான் மயங்கக் கண்டு
சிறையிடை யவனை வைத்துச் செகமெலாம் படைத்துத் தாதை
குறையிரந் திடவேர் விட்டுக் குறுமுனிக் கதனை யீந்தான். (68)

ஆ. முடிவு

வீசுறு சுடர்வே லையன் சூர(னின்) முதலைச் சாடித்
தேசுறு மஞ்ஞை யூர்ந்து வந்தது தெரிந்து போர்செய்
காசினி யிடையே நின்ற கணங்களும் வீரர் யாரும்
... .ஏமு தார்த்துச் சூழ்ந்தார். (505)

சூரபன்மன் வதைப்படலம் முற்றும்.

2569. சைவ சமய நெறி

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2001_1
   ஆ. ட/ 249

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. மறைஞான சம்பந்தர்
   ஆ. சைவ சமய நெறி
   இ. தத்துவம்
   ஈ. செய்யுள்: 726

3. தோற்றக் கூறுகள்
   அ. 13 ஏடு: 26 பக்கம்
   ஆ. நீளம் 49 செ. மீ., அகலம் 3 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்ல நிலை
   எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

   அ. தொடக்கம், ஆ. முடிவு
   காண்க: தொடர் எண் 1997.

2570. நித்திய கன்ம நெறி

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2001_2
   ஆ. ட /249

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சிம்பர நாத முனிவர்

ஆ. நித்திய கன்ம நெறி

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்: 760

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்

ஆ. நீளம் 49 செ. மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 – 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அத்தனரு ளாகமத்தை ஆராய்ந்த வர்வினிற்செய்
நித்திய கன்ம நெறிதனக்கு – முத்திதரும்
அன்னத்தா னத்தான் பரவைமுகத் த்ானருளுங்
கன்னத்தா னத்தானே காப்பு

ஆ. முடிவு

இதம்பெற இந்நூல் உரைத்தான் அருமைச்
சிதம்பர நாதமுனி தேர்ந்து.
ஓதினார் கற்றோர் உறுகிரிகை செய்தாரில்
பாதிஅதில் பாதி பலன்.

ஆகக் குறள் 760.

5. பிற செய்திகள்

நட்சத்திரம், இராசி, நாழிகை, தமிழ் வருடங்கள், மாதங்கள் பற்றிய மூன்று ஏடுகளும் இச்சுவடியில் உள்ளன.

2571. அகத்தியர் 1500

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2002
   ஆ. ல 7376

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. அகத்தியர்
   ஆ. அகத்தியர் 1500
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள்: 1473

3. தோற்றக் கூறுகள்
   அ. 309 ஏடு; 618 பக்கம்
   ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. முதல் 50 ஏடுகள் வலப்பகுதியின் மேல் பக்கத்தில் சிறிதளவே சிதைந்துள்ளன
   எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
. . . , கணேசன் பாதம் பணிந்துமுக் குணங்க ளாய்ந்து
வாகடச் சுவடி யெல்லாம் வகைவகை தொடுத்துச் சொன்னேன்
ஆகம விதியி னூலால் அடர்ந்திடு நோய்கட் கெல்லாம்
போகநல் மருந்து சொல்வோம் புலத்தியா பொருந்தக் கேளே (1)

ஆ. முடிவு
ஒண்ணான வெந்நீரே பரிமாற்றம் கண்டாய்
ஓகோகோ பத்தியங்க ளுரைத்து வைப்போம்—

பண்ணாகும் பத்தியத்தின் படிநின் றோர்க்குப்
பாழான தீவினைக ளில்லை யில்லை
நன்றாக மண்டலந்தான் மருந்து கொள்ளு
நாடாது பிணியனைத்து மகன்றே யோடும்
எண்ணாதே விசாரங்கள் பண்ணி டாதே
என்மக்காள் முத்தியும்வந் தெய்தும் தானே.

5. பிற செய்திகள்

நூலினை அடுத்துச் சில ஏடுக்ளில் மருத்துவச் செய்திகள் சில உள்ளன.

2572. வைத்திய அகராதி

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2003
   ஆ. ல/377

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. ....
   ஆ. வைத்திய அகராதி
   இ. மருத்துவம்
   ஈ. உரைநடை: அச்சில் ஏறத்தாழ 80 பக்கம்வரும்

3. தோற்றக் கூறுகள்
   அ. 31 ஏடு; 62 பக்கம்
   ஆ. நீளம் 35 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 10, 11 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்ல நிலை
   எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அக்காள்	-	ஆண்மரம்
அகங்காள்	-	மரம்
அகடம்	-	மார்பு
அகடு	-	வயிறு
அகலிடம்	-	பூமி
அகலியம்	-	மாப்போர்
அகிலம்	-	பூமி
அக்காற்	-	கருப்பு

ஆ. முடிவு

நானி	-	யானை
நீபம்	-	கடம்பு
நீர்மேல் நெருப்பு	-	கொட்டபாசி
நீர்	-	தண்ணீர்
நீர்சாரல்ச் சலாகை	-	சந்திரகாந்தம்
நீர்வாளம்	-	செந்திணைகுள்ளநரி
நீடுவர்ப்பம்	-	நெய்தல்
நீல்வாகை	-	செம்பசளை

2573. திருவொற்றியூர் நவரத்தினம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2004_I

ஆ. ய / 173

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. திருவொற்றியூர் வடிவுடையம்மன் நவரத்தினம்

இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள்: 9

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்
ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. மிக மிகச் சிதைந்த நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சுந்தரி நிரந்தரி திகம்பரி பரம்பரி
க(மங்)கலி க்ருபாவிமகிடா
சூரசங் காரிபரி பூரணி .... சடாதரி
துரந்தரி அனந்த ரூபி
சூட்சியரு ளாட்சிகம லாட்சிமிகு காட்சிதரு
தூலசூட் சுமகாரணி
சூலிதய சாலிகுண சாலிபுண் ணியசாலி
சுபசகித பாக்யசாலி
சுந்தரி .... சம யத்தியிம வானருள்செய்
கவுரிபாண் டியகுமாரி
கருணாக டாட்சி ....
கதம்ப வன .... –
....

(நூல் 9 இரட்டித்த இரட்டையாசிரிய விருத்தங்களால் ஆனது).

ஆ. முடிவு

....

....

அத்திமுகன் முருகனைப் பெற்றவடி வேயுன்றன்
அடிமைகளை ஆளும்வடிவே
ஆதிவடி வேபெருஞ் சோதிவடி வேதியாகர்
அகமகிழா னந்தவடிவே
அயனிலங் குந்தேவர் துதியிலங் கும்மொற்றி
யம்பதியி லங்குதெளரி ·
அன்னநடை யெனுமெல்லி மின்னுகொடி யிடைநல்லி
அன்னைவடி வுடைவல்லியே. (9)

திருவொற்றியூர் வடிவுடையம்மை நவரத்னம் (முற்றிற்று).

2574. அணியரங்கப்பத்து

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2004_2
   ஆ. ய/ 173

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. ....
   ஆ. அணியரங்கப் பத்து
   இ. சிற்றிலக்கியம்
   ஈ. செய்யுள்: 10

3. தோற்றக் கூறுகள்
   அ. 4 ஏடு; 8 பக்கம்
   ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து

ஊ. இரு ஓரங்களிலும் செல்லரித்துள்ளது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பொன்னிநதிப் புனலாடப் பெறுவே னாகில்
பொன்மதில்ஏ ழுங்கடந்துட் புகுவே னாகில்
மண்ணுமணிப் பெட்டகஞ்சூழ்ந் திடுவே னாகில்
மரகதப்பூ மேனியற்கண் வைப்பே னாகில்
....
.... பணிவே னாகில்
இன்னமும்நான் இப்பிறப்பே வேண்டு கின்றேன்
ஈசனே அணியரங்கத் தம்பி ரானே. (1)

ஆ. முடிவு

அட்டதிக்கும் வெற்றிகொண்டாய் அரக்கர் தன்னை
ஐயிரண்டு தலையறுத்தாய் அதுவு மன்றிக்
கொட்டமுடன் விசுவகர்னன் தன்னைக் காத்தாய்
குவலயத்தி லுன்பெருமை தீரப் போமோ
மட்டெழுத்து மூன்றுள ... .
.... சிறையில்வைத்தாய் மானு பாவா
எட்டெழுத்தும் உன்பொருளா யிலங்கும் ரூபா
ஈசனே அணியரங்கத் தம்பி ரானே. (10)

அணியரங்கப் பத்து முடிந்தது. முற்றும்.

இ. பிற்குறிப்பு

இந்த அணியரங்கப் பத்து எழுதின பேர், படித்த பேர், படிக்கச் சொல்லிக் கேட்டபேர் ஸ்ரீமகா விஷ்ணு பாதார விந்தம் சேரலாம்.

விரோதிகிருது வருடம் வைகாசி மாதம் 16-ஆம் நாள் எழுதி முடிந்தது. முற்றும்.

2575. மயில் பத்து

1. நூலகக் குறிப்புகள்
அ. 2004_3
ஆ. ய /173

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. மயில் பத்து
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள்: 10

3. தோற்றக் கூறுகள்.
அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 31 செ. மீ., அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி
ஊ. இரு ஓரங்களிலும் செல்லரித்துள்ளது.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
கொஞ்சமெனும் வயதுமிக்கு(ப்) பத்த னானே
கூறியதோர் சதகமதே கேளாய் தானே
நெஞ்சகந் தன்னிலே இருக்கத் தானே
நீர்ச்சுழற்பூச் சியைப்போல அலையு றேனே
பஞ்ச(ர்)களைப் போல்தவித்து வாடு றேனே
பராமுகமா யிருப்பதுவும் ஞாயந் தானோ
வஞ்சனைகள் செய்யாத பழனி வேலே
மயிலேறி அடியேன்முன் வருகு வாயே. (1)

ஆ. முடிவு

ஏதுவச மருயுருக்க பயமல்லா பக்கத்து
வயதான புரிந்தவகை கணக்கு எல்லாம்
....
உண்மையிது தெரியாது நம்பு வேனோ
காதுதான் கேட்கலையோ மந்த மாச்சோ
கமலமுகம் நோக்கியிட கடாட்சம் வைத்து
மாதுபுன்ம் சென்றதுபோல் பழனி வேளே
மயிலேறி அடியேன்முன் வருகு வாயே. (10)

இ. பிற்குறிப்பு

விரோதிகிருது வருடம் ஆவணி மாதம் 28-ஆம் நாள் எழுதி முடிந்தது.

2576. சேஷம்மா் கீர்த்தனைகள்

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2004_4
   ஆ. ய / 173

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. சேஷம்மாள்
   ஆ. சேஷம்மா கீர்த்தனைகள்
   இ. பல்வகை நூல்கள்
   ஈ. செய்யுள்: 17

3. தோற்றக் கூறுகள்
   அ. 16 ஏடு; 32 பக்கம்
   ஆ. நீளம் 31 செ. மீ., அகலம் 3 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6, 7 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து, பிழைகள் மிகுதி
ஊ. மிகச் சிதிலம்
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

(பல்லவி)

சச்சிதானந்த இச்சையால்வந்த இடைச்சி யசோதைபாலர்
இச்சயாசுக உச்சிதபோக லட்சுமி மணவாளர் — (சச்சி)

(அனுபல்லவி)

முச்சகங் காத்துக் குட்சிக்குள்வைத்து
ரட்சித்த ஜெகன்னாதர்
அச்சணந்தனில் மச்சம்போல் நின்ற
அச்சறா நாலும்வேதர் — (சச்சி)

(சரணம்)

ஏகறாச்சீர சாகரந்தன்னில்
நாகர்மேல்பள்ளி கொண்டாய்
வேகமாய்நந்த கோகுலம்பூந்த
னேகம்பால்வெண்ணெ யுண்டாய் — (சச்சி)

(இராக, தாளக் குறிப்புகள் இல்லை. பல்லவி முதலியன தொகுப்பாசிரியரால் காட்டப்பட்டனவாகும். சுவடியில் எந்த அடையாளமும் இல்லை).

ஆ. முடிவு

(பல்லவி)

சாரங்கேசா சாரங்கேசா
நீரேகதி அய்யா .....(சாரங்)

(அநுபல்லவி)

திக்குவேறுயாரும் இல்லை
ஸ்ரீஹரி நீரே கதி அய்யா .....(சாரங்)

(சரணம்)

....மத்தகோர் சம்சாரம்மெய் யென்றேன்
உந்தன் காரியமறியாமலே கலங்கி நின்றேன்
இப்போ நாராயண நாம மந்திர ருசி கண்டேன்
உம்மைச் சேரவே வழியிதுவென்று பூரித்து
நின்றேன் .....(சாரங்)

5. பிற செய்திகள்

இக்கீர்த்தனைகளில் வாக்கேய முத்திரை ஆதிசேஷ என வருகிறது. இப்பாடல்களையடுத்து முத்துத்தாண்டவரின் "பூலோக கயிலாச கிரி" என்னும் கலியாணிராகக் கிருதி முதலியனவும், மாரி முத்தா பிள்ளையின் 'ஏதுக்குதவி இந்தக் காயம்' என்னும் சாவேரி ராகப்பாடலும் எழுதப்பட்டுள்ளன.

2577. அகத்தியர் பூரண சூத்திரம் 216

1. நூலகக் குறிப்புகள்

அ. 2005

ஆ. ல /378

2. உள்ளீடு: நூல் விவரம்.

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் பூரண சூத்திரம் 216

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்: 216

3. தோற்றக் கூறுகள்

அ. 68 ஏடு; 136 பக்கம்

ஆ. நீளம் 19 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சற்றே சிதைந்த நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கார்செறி மெய்யன் வெண்மைக்
        க(டவுளு)ங் காணாப் பர்தீம்
ஓர்பொரு ளுண்மை தன்னைப்
        பூரண நூலி லோதத்
தார்செறி கொன்றை சூடி
        தாய்சர சோதி கந்தன்
ஆர்மத யானைப் பிள்ளை
        யார்பதங் காப்புத் தானே.

ஆ. முடிவு

ஆமிந்த இருநூற்றுப் பதினா றுக்குள்
        அடக்கிவைத்த பொருள்களெலாம் வெளியாய்ச்
                                        சொன்னேன்
ஓமிந்த வுலகத்தில் இந்நூல் கிட்டில்
        உலகத்தில் சித்ததிக மாகிப் போவார்
தாமிந்தச் சாத்திரந்தான் கணியா தீந்தால்
        தலைதெறித்துப் போகுமடா சத்யம்
                                        சொன்னேன்
நாமிந்தப் படிசொன்னோம் யோகிக் கீவாய்
        நலமான சூத்திரந்தான் முற்று முற்றே. (216)

5. பிற செய்திகள்

சுவடியில் அகத்தியர் என்னும் பெயர் இல்லை. பிற சுவடிகளில் இந்நூல் இவ்வாறு காணப்படுவதால் இப்பெயர் கொள்ளப்பெற்றது. பாம்பு தடை கட்டுதல் பற்றிய தனியேடு ஒன்று இச்சுவடியினிடையே உள்ளது.

2578. சல்லியம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2006

ஆ. மூ /57

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. சல்லியம்

இ. மாந்திரீகம்.

ஈ. செய்யுள்: 97

3. தோற்றக் கூறுகள்

அ. 18 ஏடு; 36 பக்கம்

ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியாம் மாந்தி ரீகம் ஆய்ந்தவர் முனிவர் தம்மில்
நீதிசேர் சல்ய னென்போன் நிலத்தினில் செய்த நூலைத்

தீதறு தமிழி னாலே செப்பவே புழைக்கை யான்றன்
சோதிசேர் செம்பொற் பாதம் சூடினேன் சென்னி மீதே. (1)

ஆ. முடிவு

வாமமா முகத்தி னார்க்கு
வந்திவள் முன்னே நிற்பாள்
வாமமா முகத்தி னார்க்கு
மருவிய கருமம் செய்வாள்
ஏமமுஞ் சாமந் தானும்
இருப்பளே இடது பக்கம்
காமனை வென்ற பேர்க்குக்
கைகண்ட வித்தை தானே. (97)

5. பிற செய்திகள்

இதனை அடுத்து எட்டு ஏடுகளில் சில மருத்துவச் செய்திகள் உள்ளன.

2579. சச்சிதானந்த மாலை

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2007
   ஆ. ட / 250

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. ....
   ஆ. சச்சிதானந்த மாலை
   இ. தத்துவம்
   ஈ. செய்யுள்: 31

3. தோற்றக் கூறுகள்
   அ. 12 ஏடு; 24 பக்கம்

ஆ. நீளம் 22 செ.மீ., அகலம் 3 செமீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் உள
ஊ. மிக் மிகச் சிதிலமான நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சச்சிதா னந்த மென்று
தண்மையாய் மகிழ்ந்து கேட்போர்
உச்சிமேற் பார்வை யாகி
உள்வழி திறந்து முப்பாழ்
வச்சிர வொளியும் தாண்டி
மகிழ்ந்தொரு வாசல் கண்டு
நிற்சிவ னிற்க ளத்தே
நிரா.... சோதி சேர்வர்.

ஆ. முடிவு

பரமுமிது பொருளுமிது வழியுமிது தெளிவுமிது
பதினாலு லோகமிதுவே
பாசவினை யால... வு மோகமே மோகமிது
பாழுபா ழானதேகம்
உரமுமிரு காலோசை இரவுபகல் மாறி (யே)
.... சாரமதிலே
ஒளியிலொளி யாகவுப நிடதநட னமாய
ஊழிவிதி யாளியெனவே
சிரமகுட முடிவிலே கனகமணி யசைவிலே
சிவஞான தீபமதுபார்
திருமருவு சிவசோதி மதிபெருகு கதிவி(டு)
தெரிசினைக ளா(கி) முடியும்
சரமுமிது பதிசேவை சகலகலை யநுராகம்
சாயுச்ய பாதமதுவே

தற்பரா னந்தசபை நிட்களா னந்தசிவ
சச்சிதா னந்தகுருவே. (30)

முற்றும்.

இ. பிற்குறிப்பு
சிவராமன் எழுதினது. 976 விரோதிகிருது வருடம் ஆவணி மாதம் முதல் தேதி ஆதித்த வாரம்.

5. பிற செய்திகள்
காப்புப்பாடலையடுத்து வேற்று எழுத்தில் ஒரு சொற்றொடர் எழுதப்பட்டுள்ளது.

2580. திருக்குறள்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2008
ஆ. ங / 29

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. திருவள்ளுவர்
ஆ. திருக்குறள் - ஓர் உரையுடன்
இ. பதினெண் கீழ்க்கணக்கு
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 141 ஏடு; 282 பக்கம்
ஆ. நீளம் 39.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சற்றுச் சிதிலமான நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

எழுத்துகளுக்கெல்லாம் அகார எழுத்து முதலா யிருக்குறாப் போலே உலகத்துக்கெல்லாம் சரு . . . . யனான சுவாமி முதலென்றவாறு. (1)

ஆ. முடிவு
பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்.

ராசாவண்டையிலே நாம் வெகு நாளாயிருக் குறோ மென்று நினைச்சு நன்மையில்லாத காரியங்களைச் செய்தால் அஃது அவனுக்குக் கேடுதருமென்றவாறு.
அரசன் கோபித்தால் பிராணகானி வருமென்பதாம். (10)

ஆகக்கவி 700.

(இதற்குமேல் எழுதப்படவில்லை.)

இமுற்குறிப்பு
1832 டிசம்பர் மாதம் 24. நந்தன வருடம் மார்கழி மாதம் 12 ஆம் தேதி சோமவார நாள் உத்திராட நட்சத்திரம் திதி திருதியை இன்றைய தினத்தில் திருவள்ளுவர் குறள் எழுதத் துவக்கினது.

5. பிற செய்திகள்

இது பரிமேலழகர், மணக்குடவர், காளிங்கர், பருதியார் உரை அன்று. பெரும்புலவர் ச.தண்டபாணி தேசிகர் அவர்கள் தம் உரைவளப் பதிப்பில் பழைய உரை என்றும் சைவ உரை என்றும் வழங்கப்படுவதும் அன்று. இது வேறோர் உரை. மிக வெள்ளையாக உள்ளது.

2581. குமரேச சதகம்

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2009
   ஆ. ய/174

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. குருபாத தாசர்
   ஆ. குமரேச சதகம்
   இ. சிற்றிலக்கியம்
   ஈ. செய்யுள் 12

3. தோற்றக் கூறுகள்
   அ. 15 ஏடு; 30 பக்கம்
   ஆ. நீளம் 25 செ.மீ., அகலம் 2 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்ல நிலை
   எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூமேவு புல்லை பொருந்துகும ரேசர்மேல்
தேமே வியசதகஞ் செப்பவே - கோமேவிக்
காக்குஞ் சரவணத்தாள் கம்பகும்பத் தைந்துகரக்
காக்குஞ் சரவணத்தான் காப்பு.

ஆ. முடிவு

ஞாயநெறி தவறாமல் ராஷ்சியபரி பாலனம்
நடத்துமவ னேமன்னவன்
ராசயோ சனைகண்டு உறுதியா கியசேதி
நவிலுமவ னேமந்திரி
நேயமுட னேதன்ச ரீரத்தை எண்ணாத
நிருவாகி யேசூரனாம்
நிலைமேவுமி லக்கணமி லக்கியம றிந்துசொல்
நிபுணகவி யேகவிஞனாம்
ஆயதொரு வாகடந் தா துடன்நி தானமும்
அறிந்தமுதி யோன் வயித்தியன்
அகமின்றி யயலின்றி அன்புடன் பொழிந்துவிட்
டவனேமெஞ் ஞானியெனலாம்
மாயவச கோதரம னோன்மணிக் கன்பான
வரபுத்திர வடிவேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.. (12)

(இதற்கு மேல் எழுதப்படவில்லை)

இ. முற்குறிப்பு

விளம்பி வருடம் வைகாசி மாதம் 20 ஆம் தேதி எழுதினது.

2582. வடிவேல் சதகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2010

ஆ. ய /175

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. வடிவேல் சதகம்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்: 84

3. தோற்றக் கூறுகள்

அ. 81 ஏடு; 162 பக்கம்

ஆ. நீளம் 26 செ. மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 19ஆம் ஏடும் 80 ஆம் ஏட்டிற்குமேல் இருக்க வேண்டியனவும் காணப்படவில்லை. சற்றுச் சிதைவுற்ற நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

எங்களுக்கு நாளும் இரங்கி வர (மருளும்)
துங்கவள்ளி தெய்வானை துணைவன்மேல் - இங்கிதமாய்
வடிவேல் சதகம் மகிழ்ந்துரைக்க மூவர்க்கும்
கடவுள் துதிக்கையோனே காப்பு.

ஆ. முடிவு

அரசெருக் கிலையுடன் முருக்கிலை விண்ணியிலை
ஆமணக் கிலைதானுமே
அலரியிலை தாமரை செந்தாழை யிலையிலும்
அமுதுண்ண லாகாதுகாண்
புரசுமா விலைபலா விலைதாளை தென்னையிலை
புன்னையிலை காஞ்சியிலையும்
புகழ்வாழை யிலை .... விலைதன்னி லுண்ணலாம்
பொற்பள்ள யத்தைநிகராம்
உரைசெயும் வேம்புபல் லொழிவதாம் ஆலுக்கும்
உயர்செல்வம் உண்டாகுமே
உறுதியாம் பல்வேலு பூலுக்குப் போகங்கள்
ஓங்கிடும் நாயுருவியே
திரள்வசீ கரமுண்டாம் முறுவலத் தீட்டினால்
செங்கோடன் மனதிலகலா
திருமருவு தெய்வானை வள்ளிமண வாளனே
செயமுருக வடிவேலனே. (84)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

இ. முற்குறிப்பு

நந்தன வருடம் பங்குனி மாதம் .. ஆதித்த வாரமும் கூடிய சுபதினத்தில் எழுதினது.

(தேதி எழுதுவதற்குரிய இடம் வெற்றிடமாக விடப்பட்டுள்ளது)

2583. புவனை அகவல்

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2011
   ஆ. த /48

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. புவனை அகவல்

இ. பிறதோத்திரங்கள்

ஈ. செய்யுள்: 4

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 25 செ. மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரகர சிவசிவ ஆதிய ராபரை
பரம பராபரை பரமு முனக்கே
அரிநாம மொன்று மட்சரத் தாளை
திரியோம் என்னும் சிற்பரத் தாளை
உருவொளி யாளை உத்தமிக் கொழுந்தை
அருளொளி யாளை ஆதிய னாதி

ஆ. முடிவு

சவ்வி லுதித்த சகலலட் சுமியே
ஒவ்வில் பயனை உற்றறி வித்து
என்குரு வாயிருக் கும்பரா சக்தி
கங்கண கிரியும் கிலியும் கணபதி
தந்தைக்கு முன்னைவந் துதித்தவன் தமக்கும்
ஆதர நீயே சிவசிவா சரணம்.

சிவானந்தம். புவனை அகவல் முற்றும்.

இ. பிற்குறிப்பு
சங்கரலிங்கம் பிள்ளை குமாரன் அருணாசலம் பிள்ளை நெட்டெழுத்து.

2584. எழுத்தாணி லட்சண நூல்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2012
ஆ. வ / 110

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. எழுத்தாணி லட்சண நூல்
இ. சோதிடம்
ஈ. செய்யுள்: 2

3. தோற்றக் கூறுகள்
அ. 1 ஏடு; 2 பக்கம்
ஆ. நீளம் 24.5 செ.மீ., அகலம் 2 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
தன துகை விரலங் குஷ்டம்
தனதெழுத் தாணி தன்னை
அனுதின மளந்து பார்த்தே
ஆறினில் பெருக்கி யேழில்

இனிதுடன் கழித்த மிச்சம்
　　இல்லவள் ஒன்றில் சாவாம்
அனைவரும் புகழ்வரர் ரெண்டில்
　　ஆனதோர் பிணியு முண்டாம். (1)

ஆ. முடிவு
பிரமர்தன் முகம தாகில்
　　பெரும்பதம் பெற்று வாழ்வார்
வரிசிவன் முகம தாகில்
　　வடிதமிழ் வாது வெல்லும்
அரிமகன் முகம தாகில்
　　அரசர்சந் தோஷ மாவார்
பரவிய யேழில் சாவாம்
　　புகரெழுத் தாணி நூலே. (2)

5. பிற செய்திகள்
நூல் முழுவதுமே இவ்வட்டவணையில் அடங்கி விட்டது.

2585. அருணகிரி அந்தாதி

1. நூலகக் குறிப்புகள்
அ. 2013
ஆ. ய /176

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. குகை நமசிவாயர்
ஆ. அருணகிரி அந்தாதி – மூலமும் உரையும்
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 69 ஏடு; 138 பக்கம்

ஆ. நீளம் 24 செ. மீ., அகலம் 2 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 4, 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. முதல் 32 ஏடுகள் காணப்படவில்லை. உள்ளவை நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

என்றுமரு ணேசர் இருபதத்தை நம்பாதார்
குன்றில் வனத்தில் குகையதனில் - சென்று
திரிந்தென் பலமருந்து தின்றுசில காலம்
இருந்தென் இராமலிருந் தென்.

(இது 33 ஆவது வெண்பா)

ஆ. முடிவு

உம் மகிமையாகிய அருணகிரி அந்தாதியைப் பத்தியுடனே படிக்கப்பட்ட பத்தசெனங்கள் உயிராகிய பயிர்கள் எல்லாம் வாடிப் போகாமல் பூமியின் மேலே மகா சந்தோஷமாய் ஆனந்த வெள்ளத்தேன் நிறையப் பட்டவரே உம்மை எண்ணாதவர்களின் முப்புரத்தை எரித்த அண்ணாமலையப்பனே! சகல சீவன்களையும் உம் அமிர்தமென்னப்பட்ட கண்ணினாலே பார்த்துக் கா என்றவாறு. (100)

2586. ஞானக் கும்மி

1. நூலகக் குறிப்புகள்

அ. 2014

ஆ. ற /236

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அம்பிகை தாசன்

ஆ. ஞானக்கும்மி

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்: 153

3. தோற்றக் கூறுகள்

அ. 28 ஏடு; 56 பக்கம்

ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 2 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நூல் 76 ஆம் ஏட்டில் தொடங்குகிறது. 86 ஆம் எண்ணிட்ட ஏடு காணப்படவில்லை. சிதைவுற்ற நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

எட்டென்று சொல்லவும் நானறியேன் – அம்மா
எந்நாளும் உன்பாதம் நெஞ்சில்வைத்தேன்
சட்டமாய்ச் சொல்லித் தமிழ்பாட – (என்றும்)
சரஸ்வதீ நாவில் குடியிருப்பாய் (1)

ஆ. முடிவு

வாழி ஞானப் பொருள்வாழி – நித்திய
வஸ்துவும் சத்தியும் தான்வாழி

ஆழி சூழ்புவி தான் வாழி - வாலை
அம்பிகை தாசன் வாழியதே. (153)

5. பிற செய்திகள்

நூலின் ஈற்றுக் கண்ணியிலிருந்து ஆசிரியர் பெயர் யூகிக்கப் பெற்றது. அது வாலையம்பிகைதாசன் எனவும் இருக்கலாம்.

2587. மீனாட்சியம்மை அகவல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2015

ஆ. ய / 177

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. மீனாட்சிதாசன்

ஆ. மீனாட்சியம்மை அகவல்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்: 6

3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு; 22 பக்கம்

ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 2 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நூல் 10 ஆம் எண்ணிட்ட ஏட்டில் தொடங்குகிறது. சிதைந்த நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மதுரைவாழ் சொக்க லிங்கர்
மனமகிழ்ந் திடவே சேரும்
அதிரச மான எங்கள்
அம்மைமீ னாட்சி தன்மேல்
பொதுவுள அகவல் தன்னைப்
பிரபல மாகப் பாட
மும்மதம் பொழியுந் தொந்தி
முக்கண்ணர் காப்புத் தானே. (1)

(ஈற்றடியில் எதுகை அமையவில்லை. நூல் 5 காப்பு விருத்தங்களையும் ஓர் அகவலையும் கொண்டுள்ளது.)

ஆ. முடிவு;

....

வைகைநா டாளும் மகிபதி க்ருஷ்ணன்
துய்யதோர் செல்வன் சொல்லிய தமிழ்தான்
மீனாட்சி தாசன் விளம்பிய அகவல்
தானாட்சி யாகத் தான்கேட் பவர்கள்
வையக மெல்லாம் வரிசையாய்ப் படிக்கச்
செய்யும்மீ னாட்சிநின் திருவடி சரணம்.

(இதனை அடுத்து மூலமந்திரம் எழுதப்பட்டுள்ளது).

2588. அருணாசலப் பத்து

1. நூலகக் குறிப்புகள்
அ. 2016_1
ஆ. ய/178

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. அருணாசலப் பத்து
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள்: 10

3. தோற்றக்கூறுகள்
அ. 4 ஏடு; 8 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 2 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
உ. சற்றுக் கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
கர்த்தனேகயி லாசனேகரைக் கண்டனேவிஷ முண்டவா
சித்தனேசிவ யோகனேதிரு நீறணிவிடை யாளனே
நிர்த்தனேபரி பூரணாஉமை நேசனேசரு வேசனே
அத்தனேஎனை ஆளுவாய்அரு ணாசலம்அரு ணாசலம்.

ஆ. முடிவு
விரிசடைதனில் தும்பையம்புலி முக்கியவெயணி முக்கணா
கரியுரித்தரி பிஞ்ஞகாகர சூல ..... த ராதலா
நரிபரியென சங்கைசெய்தவ நாதவேதப ராபரா
அரிபணிந்திடு பாதனேஅரு ணாசலம்அரு ணாசலம்

2589. அருணாசல வருகைப் பத்து

1. நூலகக் குறிப்புகள்
அ. 2016_2
ஆ. ய/178

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. அருணாசலவருகைப் பத்து
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள்: 10

3. தோற்றக்கூறுகள்
அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 2 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்
உ. சற்றுக் கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
நினைவாகி மூல நிலையாகி நேமம்
நிசருப மான வடிவே
மனமாயை மூடி அறிவேக லங்கி
மனமுங்க லங்கி வெகுவாய்
இனமோடி ருந்து ......திரு லைந்து
எமதூதர் ஓடி வருமுன்
மனவேக மாக அருணாச லேச
வரவேணு மெந்த னருகே.

ஆ. முடிவு
சூதாடி நின்ற சிவசூத்தி ரங்கள்
        சுழியாய மைந்த சுழியே
பாதாதி கேசம் மிடலாடி நின்ற
        படுகாளி யாடும் நடனம்
வேதாள மாட மதியாட மூவர்
        விளையாடி நின்ற வெளியே
வாதாடி நின்ற அருணாச லீச
        வரவேணு மெந்த னருகே.

இ. பிற்குறிப்பு
ஸ்ரீரங்கம் தெற்குவாசல் மூங்கிக்குத்துத் தெருவிலிருக்கும் அருணாசலம் எழுதி முகிந்தது. முற்றும்.

2590. ஞானமார்க்க அட்சரம்

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2017
   ஆ. ட/251

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. ....
   ஆ. ஞானமார்க்க அட்சரம்
   இ. தத்துவம்
   ஈ. செய்யுள்: 2

3. தோற்றக் கூறுகள்
   அ. 2 ஏடு; 4 பக்கம்
   ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்

உ. சற்றுக் கிறுக்கலான கையெழுத்து
ஊ. சுமாரான நிலை
எ. முழுமை?

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும்
மூன்றெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலப் பெருவெழுத்தும் -
நெஞ்செழுத்தும்
பேசுமெழுத் தோரெழுத்தும் பேசா வெழுத்(த)து(வு)ங்
கூசாமல் சொல்லக் கொடி.

(இது உமாபதி சிவத்தின் கொடிக்கவி வெண்பா).

ஆருயிர்க்கும் ஆதார மானவெழுத் தகாரம்
ஆனந்தக் கூத்தாக நின்றவெழுத் தகாரம்
பாரெழுமுன் னெழுந்தபரப் பிரம ... மகாரம்
பாழான வெளியில்நின்று பறந்தமுத லகாரம்
சீரான மூன்றெழுத்தும் எட்டெழுத்து மகாரம்
சிந்தையுட னஞ்செழுத்தே பெற்றவெழுத் தகாரம்
நேராக நின்றெழுத்து நெட்டெழுத்து மகாரம்
நீதியுடன் நின்றநிலை சீஷனிலை யிதுவே.

ஆ. முடிவு

அஞ்செழுத்துக் குயிரெழுத்தை அறிந்து பார்த்தே
அரியெழுத்து முதலெழுத்தை அறிந்து நோக்கிப்
பிஞ்செழுத்தை ஆராய்ந்து முன்னே வைத்துப்
பேரெழுத்தி லோரெழுத்தைப் பெருக்கக் கூட்டி
விஞ்செழுத்தி லீரெழுத்தே ஆகு மாகும்
மிகவெழுத்தி லோரெழுத்து விந்து வாகும்
அஞ்செழுத்து முறைமைதனை அறியா மூடா
அரியெழுத்து முறைமைதனை அறிந்து பாரே.

5. பிற செய்திகள்

இவ்விரு விருத்தங்களும் கொடிக்கவி வெண்பாவின் விளக்கமாகத் தோன்றுவதால் அச்செய்யுளும் தரப் பட்டுள்ளது. சுவடி முற்றிலும் இந்த அட்டவணையில் அடங்கி விட்டது.

2591. சூடாமணி நிகண்டு

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2018
   ஆ. ?/60

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. மண்டல புருடர்
   ஆ. சூடாமணி நிகண்டு - மூலமும் உரையும் (11-ஆம் தொகுதி)
   இ. இலக்கணம்
   ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
   அ. 20 ஏடு; 40 பக்கம்
   ஆ. நீளம் 43 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்திகள்; பலவித வரிகள்
   உ. விரைவாக எழுதப்பட்ட இயல்பான கையெழுத்து
   ஊ. 8-ஆவது ஏடு காணப்படவில்லை. சுவடியின் இடப்புற ஓரம் சிதைந்துள்ளது
   எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முடிவில்இன் பத்து மூவா முதல்வனைப் போற்றி செய்தே
அடிதொறும் இரண்டும் ஒன்றும் ஆதியில் பொருள்அ
டக்கி
நடைபெறுக .... னகரவீறு எதுகை யாகப்
படியில்ஓர் சொற்பொருட்பல் விதத்தொகை பகர
ஓற்றா(ம்).

ஆ. முடிவு

கிஞ்சுகம் என்பது முருக்கமரம், சிவப்புக்கும் பெயர். கிருட்டிணன் என்பது க(ண்ணன்), அருச்சுனனுக்கும் பெயர். கஞ்சனம் என்பது கண்ணாடி, கரிக்குருவிக்கும் பெயர். பஞ்சமென்பது சிறுவிலைக்காலம், ஐந்துக்கும் பேர். பகழி என்பது அம்பு, அம்புக்(கூட்டுக்கும்) பெயர். வஞ்சனை என்பது மாயை, பொய்க்கும் பெயர். மாயன் என்பது திருமால், க(ருந்)தோனுக்கு பெயர் என்றவாறு.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

இ. முற்குறிப்பு

கந்தசுவாமி சுவடி.

2592. அருள்மலையாண்டவர் திருப்புகழ்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2019

ஆ. த/47

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. நஞ்சையப்புலவர் - திங்களூர்

ஆ. அருள்மலையாண்டவர் திருப்புகழ்

இ. பிறதோத்திரங்கள்

ஈ. செய்யுள்: 9

3. தோற்றக் கூறுகள்

அ. 18 ஏடு; 36 பக்கம்

ஆ. நீளம் 26.5 செ.மீ.; அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி

ஊ. சிதைவுற்ற நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

(தந்தன தந்தனத் தான தத்தன .... தனதானா)

சென்றரு ளின்பமுற் றேப னித்துளி
யென்றதி லுஞ்சிறுத் தேபெ ருத்தொளி
சிந்தையில் விந்துநற் றாய்வ யிற்றினில் உருவாகித்
திங்களி ரைந்தினிற் றான்வெ ளிப்பட
வந்திரு கொங்கையிற் பால்கு டித்திட
செண்பக .... ற் போலெ டுத்தனர் கையிலேதான்

நன்றின்ச மைந்தனைத் தாமு ருத்தினர்
தந்தன ரென்றுநட் பாய்வ ளர்த்தனர்
நம்பவ ருந்திமெய்ப் பார்வை யுற்றனர் சுதனானேன்
நன்குச தங்கைமெய்க் காறை யிட்டனர்
தண்டைவிளங்குகைக் கேத ரித்தனர்
நஞ்சையன் என்றெனைப் பேரு மிட்டனர்
சுதனானேன்

என்றும கிழ்ந்துசற் றேறி னைத்தினம்
உன்பதம் நெஞ்சதிற் றான்வ ழுத்தினன்
இன்பமு டன்திருக் கார ணத்துடன் விளையாடி
எந்தன்ம னற்றொழத் தாள்கொ டுத்துன
தன்புட னெந்தனைத் தான்வ ளர்த்தபின்
என்றுமு ...சலிப்பேது இத்தனை தொழில்தானே

மன்றல்மி குந்தவித் தார சித்திர
செங்கை யம்புயந் தோயு மக்கினி
மைந்தன்ம யங்கிடத் தான லைப்பது நவமேதான்
வந்துவ ரங்களிப் போது தந்தருள்
என்று ... சலிப் பேர்பி றப்புகள்
மஞ்சுல வும்பொன்முத் தேய ருட்கிரி முருகோனே.

(ஏழாங்கலையின் குறிப்புச் சிதைவு ஏடெழுதியோர் பிழையாகலாம்)

ஆ. முடிவு

(தந்ததன தத்ததன தத்ததன தந்தனா ... தனதானா)

அஞ்சுமுத லெட்டுநிலை தொட்டவழி கண்டனோ
அங்கைதனி விட்டபயிர் நட்டமொழி விண்டனோ
அந்திபக லுற்றதுகை கற்றவெளி கண்டனோ
மயலாலே
ஐங்கணைகள் பட்டபுகர் தெட்டவும றிந்தனோ
அன்பர் ... னத்துறையி னத்துறைசெ றிந்தனோ
அண்டைவரு முட்டர்களி ருட்ட ....
.... புவிமீதே

மிஞ்சியத ரித் ....
விந்துமுதல் விட்டபொருள் கட்டமதி சென்றனோ
விண்டலமு தித்தமுது சத்தியொடு நின்றனோ
தெரியாதே

வெம்புசுத நட்பொருத மைக்கநெறி தங்கவே
விஞ்சைபகர் மெய்த்தொனித னித்தனிமு ழங்கவே
வருவாயே

சஞ்சலமு ..... க்கியச வுக்கிய .... சங்கனே
தண்டமிழ்வி ரித்தருளு ரைத்தபிர சங்கனே
தந்திமுக னைத்துணைப டைத்தசெய துங்கனே
வடிவேலா
தந்தைசொல்வி ளக்கியப மூக்கமுயர் சொந்தனே
தன்குலமு சத்தியதி சைக்குள்வளர் அந்தனே
குருநாதா

செஞ்சரண முத்திரை... ... .சந்தமோ
செங்கமலை விற்றிகிரி அத்திமலை நந்தி ...
தென்பழனி வட்டமலை திட்டமலை செந்திலூர்
உறைவோனே
தெம்புபுரி சற்குணவி தச்சன்து ரந்தரா
சிந்தைகுடி பற்றியது ரத்தனநி ரந்தரா
திங்கள்நகர் பெற்றருள்கி ரிக்குள்நய சுந்தரா
முருகோனே. (9)

(நான்கு, ஆறாங்கலைகளில் விடுபாடுகள் உள்ளன. சந்தக் குழிப்புகள் தொகுப்பாசிரியரால் தரப்பட்டவை. சுவடியில் இல்லை).

2593. கல்லாடத் திரட்டு

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2020
   ஆ. ற/237

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. கல்லாடர்

ஆ. கல்லாடத் திரட்டு
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்
ஆ. நீளம் 25.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான சிறிய கையெழுத்து
ஊ. மிகமிகச் சிதைவுற்ற நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
திங்கள் முடிபொறுத்த பொன்மலை யருவி
கருமணி கொழித்த தோற்றம் போல
இருகவுள் கவிழ்த்த மதநதி யுவட்டின்
வண்டினம் புரளும் வயங்குபுகர் முகத்த
செங்கதிர்த் திரள்எழு கருங்கடல் போல
முக்கண்மேல் பொங்கும் வெள்ளம்எறி கடத்த

ஆ. முடிவு
வேயின்மென் றோள்மெலிந் தேரளி வாடி
விழிபிறித்தாய்ப்
பாய ... . பண்டைய லல்லள் பவளச்செவ்வி
யாயின ... . மானசிற் றம்பலத்தான்
சேயின் காட்சியிற் பட்டன ளாமித் திருந்தியே.

வண்டமா புரிகுழ லொண்டோடி மெலிய
வாடா நின்ற கோடாய் கூறியது. (208)

5. பிற செய்திகள்

கல்லாடத்தில் சில பாடல்களைத் தேர்ந்தெடுத்து அதற்கிணையான திருக்கோவையார்ச் செய்யுளுடனும் அந்நூற் கொளுவுடனும் எழுதப்பட்டுள்ளது. கடவுள் வாழ்த்துப் பாக்கள் இரண்டும் நூற்குரிய அகவல்கள் ஆறுமாக இச்சுவடியில் மொத்தம் எட்டுப் பாடல்கள் உள்ளன.

2594. திருவாட்போக்கிப் புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2021

ஆ. ப/78

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. வைத்திய நாத தேசிகர்

ஆ. திருவாட்போக்கிப் புராணம்

இ. தலபுராணம்

ஈ. செய்யுள்: 356

3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு; 40 பக்கம்

ஆ. நீளம் 44 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 12 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. முதற்சில ஏடுகள் உடைந்துள்ளன. 3, 6, 24 ஆகிய ஏடுகள் இல்லை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பெரும்புவன மிவற்றினையும் பெற்றதொரு சிற்றுதரக்
கரும்பினொடு மொருமுக்கட் கனியு ....
.... திருமலையிற் சிறந்ததென்றும்
இருந்தருளும் வேழமுகன் இணையடித்தா மரைபணிவாம்.

ஆ. முடிவு

அஞ்சிறை வண்டு ருண்டு
 மலர்கெழு மஞ்சி லோதிப்
பஞ்சிமெல் அடியாள் பாகன்
 பதிபல தொழுது போற்றி
மஞ்சிவர் சோலை சூழ்ந்த
 மாநதி பலவு மாடிக்
கஞ்சமா மலரோன் அன்னான்
 காவிரி நதியைச் சார்ந்தான். (20)

(இது ஒன்பதாவது ரோமசர் பூசித்த சருக்கத்தின் இருபதாவது பாடல். இதற்குமேல் எழுதப்படவில்லை).

2595. கருவூரார் பூசாவிதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 2022_1
ஆ. ற/238

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கருவூரார்
ஆ. கருவூரார் பூசாவிதி
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்: 31

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்

ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 2 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியென்ற வாலையிவள் இருந்த வீடு
ஆச்சரிய மெத்தமெத்த அதுதான் பார்நீ
சோதியந்தம் நடுவீடு பீட மாகச்
சொகுசுபோல் இனிதிருந்தாள் துரைப்பெண் ஆத்தாள்
வீதியென்ற ஆறுதெரு அந்த வீதி
விளையாடி நின்றவெகு மானி கண்டாய்
பாதியந்தம் மதிசூடி யிருந்த காமி
பத்துவய தாகுமிவள் வாமி தானே. (1)

ஆ. முடிவு

தெளிவுதனில் நல்லவழி வழியுங் கூடும்
மகத்தான வேதாந்தஞ் சித்தாந்தங் காட்டும்
ஒளிவுதனில் ஒழிவுதரும் மூர்த்தி சொல்ல
உறப்பனத்தில் உறப்பனமாய் இறுகு தோறும்
வெளிப்பதனில் ஒளியாகி நாதத் துள்ளே
விளங்கிநின்ற வாலைப்பெண் ஆதி தாமே,

(இது 31ஆம் கவி. இதற்குமேல் எழுதப்படவில்லை)

இ. பிற்குறிப்பு

கோவிந்தசாமி சுவடி. கருவூரார் பூசாவிதி.

2596. சட்டைமுனி ஞானம் 100

1. நூலகக் குறிப்புகள்
அ. 2022_2
ஆ. ற/238

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. சட்டைமுனி
ஆ. சட்டைமுனி ஞானம் 100
இ. தத்துவம்
ஈ. செய்யுள்: 101

3. தோற்றக் கூறுகள்
அ. 26 ஏடு; 52 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 2 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கயிலாச பரம்பரத்தில் என்னை யாண்ட
கடவுளெனுந் தட்சிணா மூர்த்தி பாதம்
கயிலாசத் தெனையீன்ற மாயி பாதம்
கருணையுடன் போற்றியே ஞானஞ் சொல்வேன்
கயிலாச நிற்குணமே நிர்மலமே தேவா
காட்டுகின்றீர் கேசரியைச் சின்மயமாய்க் கையில்
கயிலாச பரம்பரையாய் வந்த பேர்க்குக்
கடைப்பிள்ளை ஞானத்தைப் பாடுறேனே. (1)

ஆ. முடிவு

மவுனமொன்றி எனையாண்ட தட்சிணா மூர்த்தி
        மலர்பணிந்த ஞானமிது நூறுஞ் சொன்னேன்
மவுனமென்ற நாதாக்கள் பதத்தைப் போற்றி
        வகையோடே இரண்டுகண்டம் வரதனாச் சொல்லி
மவுனமன்றி ஞானப்பொய் என்று சொல்லி
        வாகான சேகண்டி போட்டேன் நூற்றில்
மவுனமன்றோ சமரசந்தான் மக்காள் மக்காள்
        வாகான ஞானமுறை முற்றுங் காணே. (101)

2597. அகத்தியர் 8

1. நூலகக் குறிப்புகள்
    அ. 2022_3
    ஆ. ற/238

2. உள்ளீடு: நூல் விவரம்
    அ. அகத்தியர்
    ஆ. அகத்தியர் 8
    இ. மருத்துவம்
    ஈ. செய்யுள்: 8

3. தோற்றக் கூறுகள்
    அ. 2 ஏடு; 4 பக்கம்
    ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 2 செ.மீ.,
    இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
    ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
    உ. தெளிவான கையெழுத்து
    ஊ. நல்ல நிலை
    எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தெரிசினமா மஞ்சில்யவ சிங்வங்அங்உங் கென்றே
திரும்பவே ஐங்கிலியு மங்கென் றோது
சரிதையொடு கிரிகையது யோக ஞானம்
தப்பாது உங்கிலியும் சவ்வென் றோது
பரிசமொடு பூரணத்தில் எங்கும் வாய்வு
பார்க்கையிலே ஓம்சிவய வசியென் றோது
துரியமடா துரியத்தில் அப்பூ முப்பூ
சூட்டினேன் பாறையுப்பைச் சொல்லு றேனே. (1)

ஆ. முடிவு

சுழியான அகாரமே உகார மாச்சு
சசுத்தாய எழுத்தெல்லாம் இதினா லாச்சு
சுழியாத பொருளடா இதினா லாச்சு
அனைத்துயிர்க்கும் பிறப்பிறப்பும் இதினா லாச்சு
வழியான வழிகண்டு சேர்ந்தார் சித்தர்
வழியறியா மூடனென்ற கழுதை மாடு
ஒழியாகு சோதிமணி இவனே யாகும்
உயர்வையந்த நாகமணி ஏற்குந் தானே. (8)

2598. போகர் பூசாவிதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 2022_4
ஆ. ற/238

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. போகர்
ஆ. போகர் பூசாவிதி
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்: 44

3. தோற்றக் கூறுகள்

அ. 12 ஏடு; 24 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 2 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாரப்பா வாலைதனைத் தியானஞ் செய்யப்
பாங்கான நவகோணம் இட்டுச் சூழச்
சேரப்பா இருவளையம் வாசல் நாலும்
சிறப்பாக ரீங்காரம் இட்டு நன்றாய்க்
காரப்பா கீழ்வாசல் கணபதியும் கந்தன்
கருணையுள்ள செயவீர வாகு தேவர்
ஆரப்பா அறைகளிலே கிழக்குத் தொட்டே
அகாரமுடன் உகாரச்வ்வும் மகாரம் போடே (1)

ஆ. முடிவு

காணப்பா பானத்தைப் பிரித்து நன்றாய்க்
கைமுறையாய்க் கால்வாங்கி ஆசான் சொன்னார்
ஆணப்பா ஆண்பிள்ளை ஆரென் றக்கால்
அமிர்தமுண்டு நிலையில்நின்றோன் அவனே சித்தன்
வீணப்பா மற்றதெல்லாம் நாய்வால் பற்றி
வெள்ளத்தைக் கடந்ததுபோ லென்று தேறிப்
பூணப்பா இந்தமுறை யாருங் காணார்
பொற்புயர்ந்த சூத்திரந்தான் முடியும் முற்றே. (44)

போகர் சூத்திரம் முற்றும்.

2599. சட்டைமுனி சூத்திரம் 8

1. நூலகக் குறிப்புகள்
அ. 2022_5
ஆ. ற/238

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. சட்டைமுனி
ஆ. சட்டைமுனி சூத்திரம் 8
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்: 8

3. தோற்றக் கூறுகள்
அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 2 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியெனுங் கயிலாச மாயி பாதம்
அழகான யெனையீன்ற ஐயர் பாதம்
சோதியெனுந் தென்பொதிகை ஆசான் பாதம்
தொழுதிரஞ்சி வேதாந்த சூட்சம் சொல்வேன்
ஊதியே உம்மென்றும் அம்மென் றாணி
ஓதிடவே சாபமெல்லாம் ஓடிப் போகும்
சாதினையாய் வகாரமது சிகாரங் கூட்டி
வருந்திடவே பத்துலட்சம் வசிய மாமே (1)

ஆ. முடிவு

ஆச்சப்பா பெண்ணுக்கே உபதே சித்தும்
அப்பனே அமுரியது வாங்கிக் கொண்டு
பாச்சப்பா கர்ப்பத்துக் கிதுவே யாச்சி
பாடியதோர் இக்கருவை மறைத்தா ரப்பா
நாச்சப்பா இந்தஉப்புக் குகையி னுள்ளே
உத்தமனே துருசுயதுச் சுன்ன மாகும்
மூச்சப்பா இதுவெல்லாம் வெளியாய்ப் பாடி
முடித்துவிட்டேன் எட்டினுள்ளே மூடு வீரே. (8)

2600. போகர் சூத்திரம் 8

1. நூலகக் குறிப்புகள்

அ. 2022_6

ஆ. ற/238

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. போகர்

ஆ. போகர் சூத்திரம் 8

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்: 8

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 2 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஒண்ணான வேதாந்த சூத்திரந்தா னப்பா
ஓதுகிறேன் ஆதியுமை பாதம் போற்றிப்
பண்ணான வைப்புமுதல் வாதம் ஞானம்
பாங்கான பிராணாயம் குளிகை சித்து
நன்றான கருவித்தை யாகச் சொல்லி
நாட்டுறேன் துலோத்தோ ருன்னி யோரும்
கன்றான ஆறுதல மட்ச ரந்தான்
கைமுறையாய்ச் சொல்லிவிட்டேன் காணு வீரே. (1)

ஆ. முடிவு

ஆச்சிந்த வகையாலே சித்தர் செய்தார்
ஆதியெனும் பார்வதித்தாய் அருளே பற்றிப்
போச்சப்பா தாயினுட வித்தை எல்லாம்
புகழான குருவருளால் கண்டு தேறு
பேச்சற்ற குருவருளை வாங்கிக் கொண்டால்
பாழான பரகதிக்கு இடமே யாவார்
பாசமற்ற குருபதத்தில் பொருளை எல்லாம்
பாங்கான மனதுவைத்துப் பகரு வாரே. (8)

முற்றும்.

2601. தோற்ற ஒடுக்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2023_1
ஆ. ட/252

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. தோற்ற ஒடுக்கம்
இ. தத்துவம்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 12 ஏடு; 24 பக்கம்
ஆ. நீளம் 25 செமீ, அகலம் 2.5 செமீ,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பராபரமாகிய பரமேஸ்வரன் தராதலம் படைக்கத் தான் நினைத்தருளப் பராபரத்திற் பரந்தோன்றி, பரத்திற் சிவந்தோன்றி, சிவத்திற் சக்தி தோன்றி, சக்தியில் விந்து தோன்றி, விந்துவில் நாதம் தோன்றி, நாதத்திற் சதாசிவந் தோன்றி, சதாசிவத்தில் மகேசுவரன் தோன்றி, மகேசுவரனில் உருத்திரன் தோன்றி, ...

ஆ. முடிவு
தேவருக்கு அபயாத்தம் கொடுத்தருளி அபிஷேகமுஞ் சூட்டி சித்தாந்தமும் வேதாந்தமுங் கடந்த நாதாந்த முடிவான அமிர்த பஞ்சாட்சரத் திருவை நிலையிற் சூதம் புகட்டி இப்படி உணர்த்தியருளிய முறை மையை உட்பட்டுத் தேடாதவன் சிவஞானியல்லனென்று இந்த முறைமையை உட்பட்டுத் தேடின் பெரியோர்களுக்குப் பராபத்திலுத்திரங்களும் வெளியாயிருக்கும் என்றவாறு.

பிண்டத்தில் கண்டபொருள் அண்டத்தில் காண வேணும். ஆத்தும தரிசனம் முற்றும்.

இனிமேல் தத்துவ தரிசனம் அனுக்கிரகம் பண்ணி அனுக்கிரகஞ் செய்கிறார்.

திருச்சிற்றம்பலம்.

5. பிற செய்திகள்
நூலின் முகப்பில், "ஆதிவ ஸ்ருவ நயினார் கபில மகாரிஷி சாட்சியாகத் திருநந்தீசுரர் திருமூலதேவருக்கு அருளிச் செய்த தோற்றவொடுக்கம்" என எழுதப்பட்டுள்ளது.

2602. அகத்தியர் பூசாவிதி

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2023_2
   ஆ. ட/252

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. அகத்தியர்
   ஆ. அகத்தியர் பூசாவிதி
   இ. பல்வகை நூல்கள்
   ஈ. செய்யுள்: 123

3. தோற்றக் கூறுகள்

அ. 32 ஏடு; 64 பக்கம்
ஆ. நீளம் 25 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வானத்தா வியபொதிகை மகத்தான
        ரிஷியுடைய வாக்கின் நேர்மை
பானத்தா வியபூசை பரிவான
        சிவயோகம் பண்போர் கேளீர்
மீனத்தா வியராசி விளங்கிநின்ற
        மேசமுதல் மீனந் தானும்
சேனத்தா வியதுவரத்தின் சென்மரா
        சிக்கருவைச் செப்பு றேனே. (1)

ஆ. முடிவு

வாறாக இப்படியே நாமிருந்து வாழ்ந்தோம்
        மைந்தனே நவகோடி சித்தருக்குப் பீடம்
தாறாகக் காணாயவ் வேட மீந்தோம்
        சார்வான மேருவுக்குத் தெற்கில் எல்லாம்
கூறாக நம்முடைய வேடங் கண்டால்
        குறுக்கொன்றும் சொல்லார்கள் சித்தர் தாமும்
வீறான தசதீட்சை எல்லார்க்கு முண்டு
        வெறும்பாட்டை வெளியாகப் பாடி னாரே. (123)

2603. கொங்கணர் மௌன உபதேசம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2023_3
ஆ. ட/252

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. கொங்கணர்
ஆ. கொங்கணர் மௌன உபதேசம்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்: 12

3. தோற்றக் கூறுகள்
அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 25 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கூறுகின்ற சீடரைநீ சேர்க்க வேண்டாம்
கோடிதனம் ஈந்தாலும் குறிசொல் லாதே
மாறுகின்ற புத்திகண்டால் முகம்பா ராதே
வாதமுண்டே இல்லையென்று வழியைப் போக்கு
தேறுகின்ற புத்தியுள்ள சீட னாகில்
திருட்டுவகை பிரட்டுவகை செய்ய மாட்டான்
ஆறுகின்ற குணம்பாரு வணக்கம் பாரு
அறிந்ததற்குக் குணங்கண்டு அணைத்தி டாயே. (1)

ஆ. முடிவு

ஓங்கையிலே நினைவாக ஓங்கு ஓங்கு
ஒருகடிகை இருகடிகை நின்ற தானால்
வாங்கையிலே பளிச்சென்று மூலந் தானாய்
மைந்தனே புக்கிடவோ வருடம் நாலாம்
பாங்கையிலே இதுஉரைத்தால் ஆரும் பாரு
படிப்படியாய் நிஷ்களத்தின் பாங்காய்த் தோன்றும்
தேங்கையிலே குளிர்ந்தமதி என்றும் சிறந்து
தேகமப்பா பொன்னிறம்போல் சேர்க்குந் தானே. (12)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2604. செயமுனி மனை நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2024_1
ஆ. ற/239

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. செயமுனி
ஆ. செயமுனி மனை நூல்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்: 33

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 19 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சாணான்கு கோல்கொண்டு தப்பாமல் நான்கெல்லை
கோணா தளந்து குழிமாறிப் - பூணார்ந்த
இப்புவியின் மாதே இருநான்கில் ஈவீரால்
கெற்பக் கிரகநிலை கேள். (1)

ஆ. முடிவு.

எண்பதி லுயர்ந்தது இயைந்த உத்தமம்
மின்பயி லதிற்கிழி வியலுந் துன்பம்
என்றபுற னாட்டிய வைய்யள் முன்னமே
தென்புற உரைத்த தென்றெளிய முள்ளமே. (32)

5. பிற செய்திகள்

இதனையடுத்து இரண்டு ஏடுகளில், பொருத்தத்தில் ஆகும் குணம், ஆகாத குணம் பற்றி எழுதப்பட்டுள்ளது.

2605. சோதிடச் செய்திகள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2024_2

ஆ. ந/239

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. சோதிடச் செய்திகள்

இ. சோதிடம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ: 9 ஏடு; 18 பக்கம்
ஆ. நீளம் 19 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்குப் பல பத்திகள்; பலவித வரிகள்
உ. தெளிவான சிறிய கையெழுத்து
ஊ. சிதைவுற்ற நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
1க்கு சிம்மம், திங்கள், பூசம், ஆயிலியம் 27ஆ. 8. சி. 9 நவமி, கடகம், நிஷ்பஞ்சகம், தான்னியன், தேவகணம்.

3க்கு கருடன், வெள்ளி, சதையம் ஆ. 81, ஆ. 12. சி.7 துவாதசி, மீனம், நிஷ்பஞ்சகம், சக்தி, ராட்சத கணம்.

ஆ. முடிவு
2229 .... வெள்ளி, உத்திரம் 83
2237 .... ஞாயிறு, திருவாதிரை 99
2269 .... திங்கள், ஸ்வாதி 63
2293 .... பூரம், ரேவதி 65

இதற்கு உட்பட்டது எடுக்க 9 சூத்திர பொருத்தம் 410.

2606. சோதிடச் செய்திகள்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2024_3
ஆ. ற/239

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. சோதிடச் செய்திகள்

இ. சோதிடம்

ஈ. செய்யுள்: 62

3. தோற்றக் கூறுகள்

அ. 13 ஏடு; 26 பக்கம்

ஆ. நீளம் 19 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்

உ. தெளிவான சிறிய கையெழுத்து

ஊ. முதல் மூன்று ஏடுகள் இல்லை. மிகச் சிதைவுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆய்ந்தசீர் மகமே சோதி ஆரல்பார் சதயம் காரி
சேர்ந்திடி லமுத யோகம் சித்திரை புரட்டை அஸ்த்தம்
வாய்ந்தஉத் திரத்தோ டாயில் சனிவரில் மரண மென்க
தீர்ந்தது செல்லா நாள்கள் சித்தயோ கங்க ளென்பார். (24)

ஆ. முடிவு

கன்னிலை தேவர்க் காகுங் கனமறை யோர்க்கு
வேம்பாம்
மன்னவர்க் காச்சா தேக்கு வசியருக் கிலுப்பை
யாகுந்
தென்னுட னுசிலை யார்க்குஞ் சேர்ந்திடு நிலையா
மென்றே
இன்னவை தமிழி னாலே இயம்பினர் வேதத் தோரே. (85)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2607. தர்க்க நூல்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2025
ஆ. ற/240

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. தர்க்க நூல்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்: 118

3. தோற்றக் கூறுகள்
அ. 33 ஏடு; 66 பக்கம்
ஆ. நீளம் 1 செ.மீ., அகலம் 1 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. 12, 13, 28 ஆகிய ஏடுகள் காணப் படவில்லை. மிகச் சிதைவுற்ற நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சித்திதரும் புத்திதரும் செந்தமுதி லாராய்ந்து
முத்திதரும் முக்கணவன் முன்நின்று
சத்தி சிவத்தாணை தற்பரனா மைங்கரனைப்
பத்தியுட நெஞ்சே பணி.

ஆ. முடிவு

காணுகிறேன் வைகுண்ட பதமே போற்றிக்
கைலாசச் சட்டைமுனி பதமும் போற்றி

ஊனுகின்ற சற்குருவின் பாதம் போற்றி
உத்தமியாள் வாலையுட பதமும் போற்றிப்
பேணுகின்ற சித்தர்களும் சீவுன் வாழி
பேரான அஷ்டதிசை எட்டும் வாழி
காணுகிறேன் சிவகுருவின் பதமே வாழி
கண்டவர்க்குங் கண்டாறாக் காட்சி முற்றே (118)

இ. பிற்குறிப்பு

இலட்சுமணப் பிள்ளை பெயரன் மாரிமுத்து புத்தகத்தைப் பார்த்து முத்தரசு எழுதினது.

1832-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 12-ஆம் தேதி ரங்கைய வாத்தியார் எழுதிக் கொடுத்தது. இதில் பிழை இருந்தால் திருத்தி அடியேனை இரட்சிக்கவும்.

2608. திருவாசகம்

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2026-1
   ஆ. ண/66

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. மாணிக்கவாசகர்
   ஆ. திருவாசகம்
   இ. சைவத்திருமுறைகள்
   ஈ. செய்யுள்: 40

3. தோற்றக் கூறுகள்
   அ. 6 ஏடு; 12 பக்கம்
   ஆ. நீளம் 27.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து
ஊ. சுவடி 52-ஆம் ஏட்டில் தொடங்குகிறது. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழினகை கண்டுநின் திருவடி தொழுதோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (1)

ஆ. முடிவு

புன்புலா லாக்கை புரைபுரை கலந்து
பொன்னெடுங் கோயிலாய்ப் புகுந்தென்
என்பெலா முருக்கி யெளிமையாட் கொண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே யிறப்போர் பிறப்பொடு மயக்காற்
றுடற்கெலா மதுத்தந்த சோதி
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (10)

பிடித்த பத்து முற்றும்.

5. பிற செய்திகள்

திருப்பள்ளியெழுச்சி, திருக்கழுக்குன்றப்பதிகம், அருட் பத்து, பிடித்த பத்து ஆகிய நான்கு பகுதிகள் மட்டும் உள்ளன.

2609. விநாயகர் அடைக்கலப் பதிகம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2026_2
ஆ. ண /66

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ......
ஆ. விநாயகர் அடைக்கலப் பதிகம்
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள்: 11

3. தோற்றக் கூறுகள்
அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 27.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

செய்யாள் பொருந்தி வளர்குளந்தை
நகரந் தழைக்கச் செகத்திலுள்ளோர்
நையா வண்ணம் அருள்புரிந்து
நாலெட் டறமுந் தழைந்தோங்க
மையாள் விழியாள் வல்லவையை
மருவும் புயனே முக்கண்ணா
அய்யா பொன்னம் பலக்களிறே
அடியேன் உந்தன் அடைக்கலமே. (1)

ஆ. முடிவு

மின்னும் பிறைபோல் மருப்பழகும்
வேழ முகமும் முக்கண்ணும்
பொன்னம் பலவர் திருச்சரணம்
பரவி யுகந்து புகழ்ந்தேத்தி
என்னும் புருகிப் பனுவல்பத்தும்
இசைத்தேன் எழுதிப் படித்தவர்கள்
கன்னஞ் சிறக்கக் கேட்பவர்கள்
வாழ்வார் சேர்வார் கயிலாசம். (11)

2610. ஆதிமூலப் பத்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 2026_3

ஆ. ண / 66

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. ஆதிமூலப் பத்து

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்: 9

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 27.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முடிவு மன்றியே முதலு மாகினாய்
        முதலு மன்றியே முடிவு மாகினாய்
வடிவு மன்றியே வண்ண மாகினாய்
        வண்ண மாகிநின் றெண்ண மாகினாய்
படியை யுண்டசெம் பவள வாயினால்
        பாலை யுண்டுநீ பாவை தன்கையால்
அடிக ளுண்டுநீ அமுத தென்சொலாய்
        ஆதி மூலமே ஆதி மூலமே. (1)

ஆ. முடிவு

ஆதி மூலமே அந்த மூலமே
        அம்ப ரத்தினின் றசையு மூலமே
சோதி மூலமே சுருதி மூலமே
        சொல்லொ ணாததோர்க் கிச்சை மூலமே
சாதி மூலமே சமய மூலமே
        சங்கு சக்கரந் தரித்த மூலமே
ஆதி மூலமென் றோரை வாழ்விப்பாய்
        ஆதி மூலமே ஆதி மூலமே. (9)

மூலப்பத்து முற்றும்.

5. பிற செய்திகள்

பத்துப்பாடல்கள் இருக்க வேண்டிய இடத்தில் 9 பாடல்களே உள்ளன. ஆனால் மூலப்பத்து முற்றும் என எழுதப் பட்டுள்ளது.

2611. திருக்குறள்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2027
ஆ. ஈ /30

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. திருவள்ளுவர்
ஆ. திருக்குறள்- ஒரு பழைய உரை
இ. பதினெண்கீழ்க்கணக்கு
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 9 ஏடு; 18 பக்கம்
ஆ. நீளம் 45 செ.மீ., அகலம் 4 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

என்றது உயிரெழுத்துப் பனிரெண்டும் அகர முதலானது போல பரமே சுபரனு மென்றவாறு.

ஆ. முடிவு
கொன்றன்ன இன்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்.

என்றது நன்றியைக் கொன்ற தீயவர்க்குப் பல நன்மை செய்து ஒரு குற்றம் செய்யிற் பல காலுஞ் செய்நன்றி தீதாய்விடு மென்றவாறு. (4)

(இது செய்நன்றியறிதல் அதிகாரத்தின் 4-ஆம் குறள். இதற்குமேல் ஏடுகள் இல்லை)

5. பிற செய்திகள்
சுவடியின் தொடக்கத்தில் "இன்பமாயதறா திடையோங்கவும்" என்னும் விநாயகர் வணக்கமும், "ஆயிரத்துமுந்நூற்று", "கடுகைத்துளைத்து" என்னும் திருவள்ளுவமாலைப் பாடல்களும் எழுதப்பட்டுள்ளன.

2612. நவகண்ட ககிஷம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2028_1
ஆ. ம / 58

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அகத்தியர்
ஆ. நவகண்ட ககிஷம்
இ. மாந்திரீகம்
ஈ. செய்யுள்: 38

3. தோற்றக் கூறுகள்
அ. 11 ஏடு; 22 பக்கம்
ஆ. நீளம் 13.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து
ஊ. சுவடி 16-ஆம் ஏட்டில் தொடங்குகிறது. சற்றுச் சிதைந்துள்ளது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
கார்மொழி மூல வட்டக் கணபதி பாதம் போற்றிச்
சீர்மொழி மறைநால் வேதந் தெளிந்துள்ள
மவுன மாகக்
கூர்மொழி யதிக சூட்ச(ங்) கொண்டநவ சித்தி சகிவும்
சார்மொழி சாஷ்த்தி யான தாண்டவம் பிரித்துச்
-சொல்வோம் (1)

ஆ. முடிவு
உண்டாகும் வாத வித்தை உதயமாம் யோகப் போக்கு
தண்டாகும் பிரிவு மோகனத் த .... தாக்கிக் காந்த
உண்டாகும் வசிய வித்து வேஷ (ணம்) ....

(இது 39-ஆம் பாடலின் முதல் மூன்றடிகள். இதற்குமேல் எழுதப்படவில்லை)

2613. போகர் பூசாவிதி

1. நூலகக் குறிப்புகள்
அ. 2028_2
ஆ. பு/58

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. போகர்
ஆ. போகர் பூசாவிதி

இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்: 44

3. தோற்றக் கூறுகள்
அ. 19 ஏடு; 38 பக்கம்
ஆ. நீளம் 13.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சுவடியின் இடப்புறம் சற்றுச் சிதைந்துள்ளது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு
காண்க: தொடர் எண் 2022_4.

2614. கோரக்கர் கற்பம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2028_3
ஆ. மு/58

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. கோரக்கர்
ஆ. கோரக்கர் கற்பம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 30

3. தோற்றக் கூறுகள்
அ. 7 ஏடு; 14 பக்கம்
ஆ. நீளம் 13.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து. எழுத்துப் பிழைகள் மிகுதி
ஊ. சுவடியின் இடப்பக்கத்து மேற்புறம் சிதைந்துள்ளது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
கோரக்கர் மூலி குருவினுப தேசம்
நேரொக்கக் கொண்டு நிலையறி வாளர்க்குச்
சீரொக்கப் பாயுஞ் சிவபதந் தானே. (1)

ஆ. முடிவு
சித்தர் தன் மூலியைச் சிந்தையுள் நேசமாய்
நித்தமுஞ் சா ...... நினைத்ததெல் லாந்தரும்
பத்திசெய் யாம(ற்) பழித்தே இகழ்ந்தவர்
எத்தனை நாளும் ..... வார் நரகிலே. (30)

5. பிற செய்திகள்
இதனையடுத்து நான்கு ஏடுகளில் உடற்சக்கரம் பற்றிய செய்திகள் உள்ளன.

இதே நூல் கோரக்கர் பூரண நூல் என்ற பெயரிலும் வழங்குகிறது. காண்க தொடர் எண்: 2143.

2615. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2029_1
ஆ. மு/59

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. மாந்திரீகம்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 4 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்

ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

புல்லுருவி வகை: -
பிரண்டைமேற் புல்லுருவியை அவிட்ட நட்சத்திரத்தில் கொண்டு வந்து முடியில் கட்டப் பன்றி கூசாமல் குத்தலாம்; வாய்விடாது. கடப்புமேற் புல்லுருவிக்கு மக நட்சத்திரத்தில் கொண்டு கையில் கட்ட நாய் தொடராது.

ஆ. முடிவு

வாலை தோத்திரம்: -
ஓம் பத்திரகாளி நாம் வரச் சொல்லிச் சொல்லி நான் தேடின பேரை சிந்தை கலக்கி நான் கருதின பேரைக் கட்டிப்பிடித்து நான் வருந்தின பேரை மருந்துக்குமே மங்களதோறு வையடி பிடி சாமங்கள் தோறும் தட்டி எழுப்பு எரி எடுஎடு போடுபோடு கொண்டுவந்து

என்காலின் கீழே போடச் சிவா. வெள்ளிக் கிழமையன்று வெள்ளை அரளிப்பூக் கொண்டு வந்து 808 பூ செபிக்கவும்.

5. பிற செய்திகள்
நூலை அடுத்து இரண்டு ஏடுகளில் மருத்துவச் செய்திகள் உள்ளன.

2616. முத்ததிகாரம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2029_2
ஆ. மு/59

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. முத்ததிகாரம்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்: 17

3. தோற்றக் கூறுகள்
அ. 9 ஏடு; 18 பக்கம்
ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
முத்துவகை ரத்தினத்தில் முத்ததிகா ரந்தமியே(ன்)
சிந்தை தனில்நினைந்து செப்புவேத் – தொந்தியுரு

பேழைவயிற் றைங்கரனும் பேரா யிரமுடைய
காளைமுகில் காரனுங் காப்பு.

ஆ. முடிவு
சேர்ந்திருந்த சிப்பிப் பறனும் பொடியும்
சேர்ந்தவகை நாற்பதுமே செப்பியபின் - நூற்பன
மென்றே தெளிந்தென்றே புதமா யின்னம்
வகைபெரி யோரியம் புவரே அவ்வகையே
அன்னமெனும் மாதே அறி.

அகவல் முற்றும்.

(இப்பாடல் கலிவெண்பாவாகவோ, ஆசிரியப்பாவாகவோ இல்லை. பிழையற்ற பாடம் தேவை).

இ. முற்குறிப்பு
இராமசாமி முத்ததிகாரம்

2617. பரப்பிரம்ம வாக்கியம்

1. **நூலகக் குறிப்புகள்**
   அ. 2030
   ஆ. ப/253

2. **உள்ளீடு: நூல் விவரம்**
   அ. ....
   ஆ. பரப்பிரம்ம வாக்கியம்
   இ. தத்துவம்
   ஈ. செய்யுள்: 13

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 5 ஏடு; 10 பக்கம்
   ஆ. நீளம் 22 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாய் நின்றதொரு பொருளை நோக்கிப்
பொய்யன்றி மெய்யுரைத்தோர் பெரியோர் பாதம்
காரணமாய் எந்நாளுங் கருத்தி லாய்ந்து
கதிர்முனையி லாடிநிற்குங் கடவு ளானை
நாரணனும் நான்முகனும் அறியா ரென்று
நால்வேத மோதுகின்ற ஞாயந் தன்னைச்
சீரணமாய்ப் போகாமல் எட்டு நாலுஞ்
சேர்ந்துவொரு சுழியேறத் தெரியுந் தானே (1)

ஆ. முடிவு

உறவானால் பிரிவதில்லை யுகாந்தங் கோடி
உருபொருளாய் நிரந்தரமாய் உணர்ந்தோர்க்
கெல்லாம்
துறவாநீ துறவுக்கு இதுவே மார்க்கஞ்
சொற்பெரிய வேதாந்தஞ் சூட்டுமறை நூல்கள்
மறவாமல் இருந்துகொண்டு மதியைத் தாண்ட
மாசற்ற அனுபூதி வந்து கொள்ளும்
இறவேது பிறவேது எல்லை யேது
ஏகநிரா மயச்சுடராய் இருத்த லாச்சே. (13)

பிரம வாக்கியம் முற்றும்.

5. பிற செய்திகள்

இறுதி ஏட்டில் கீழ்க்காணும் இரண்டு வெண்பாக்கள் இடம் பெற்றுள்ளன.

தென்னைமரத் துச்சியிலே தேங்காய் இருக்குதே
என்னமாய்த் தின்னநமக் கெய்துமோ - கன்னமிடுங்
கள்ளாதோட் டக்கா ரனுமேஒன் றானால்
தள்ளுவா ரில்லையுன்னைத் தான்

(மூன்று நான்காவது அடிகட்கிடையே தளை தட்டுகிறது.)

நாட்டு முயலுக்கு நாலேகால் நான்பிடித்த
மோட்டு முயலுக்கு மூன்றேகால் - தீட்டுபுகழ்
முக்கால் முயலு முழுமுயலும் ஆனாக்கால்
அக்கால் இதுவென் றறி.

2618. இருநூற் சமரசம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2031-1

ஆ. டி/254

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ஆறுமுக முனிவர்

ஆ. இருநூற் சமரசம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள்: 13

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்

ஆ. நீளம் 20.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. மிகமிகச் சிதைவுற்ற நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
நல்லார்தெ .... ரு பொல்லார் புகழ்பல
சொல்வார்க் ......ல்லா முடியுமே.

ஆ. முடிவு
(முன்பகுதி மிகு சிதைவு)
தனியாம் பரம்பிரம்மம் வழிபடா மையையிநூல்
சகலர்க்குச் சிவமெந்தையே
தகுநமச் சிவயகுரு வருளாறு முகமுனிவன்
சமரசம் செய்ததிதுவே. (13)

2619. முந்நூற் சமரசம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2031_2
ஆ. ட/254

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. முந்நூற்சமரசம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள்: 3

3. தோற்றக் கூறுகள்
அ. 1 ஏடு; 2 பக்கம்
ஆ. நீளம் 20.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. மிகமிகச் சிதைவுற்ற நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
முந்நூற் சமரச முற்று ....
முன்னே பரவிய மூர்த்தியை வாழ்த்தவே

ஆ. முடிவு
ஓராறு முப்பதின் மூன்றெட் டுடன்மூன் றொருவைந்தே
ஓரே .... மூன்றொடு .... பதின்மூன்றே
ஓர்மூன் றொருமூன் றினோடு முதல்வழிசார் புடன்படவே
ஓர் துறை சைவரு சாமிநா தக்குரு ஓதியதே.

(மூன்றாமடியில் யாப்புச் சிதைகிறது)

5. பிற செய்திகள்
இந்நூலாசிரியர் திருவாவடுதுறை ஜாமிநாத தேசிகரின் மாணவர் எனப் புலனாகிறது.

2620. சிவசமவாத கண்டனம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2031_3
ஆ. ட/254

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. சிவசமவாத கண்டனம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள்: 41

3. தோற்றக் கூறுகள்
அ. 9 ஏடு; 18 பக்கம்
ஆ. நீளம் 20.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சிதைவுற்ற நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
சிவனடி யார்திரு வுள்ள மகிழ்ந்திட
சிவசம வாதிகள் சிந்தை கலங்கிட
சிவசம வாதிசொற் கண்டனஞ் செய்திடச்
சிவனருள் ஐங்கரன் சேவடி யேத்துவாம். (1)

ஆ. முடிவு
மலத்தின் மறைதல் கேவலம்பின்
மாயிர கருவி யுடனேசஞ்
சலத்தை யடைத லேசகலம்
சிவனருள் சேர்தல் சுத்தமெனும்
நலத்தைக் கழித்துத் தற்சுகத்தை
நாட்டு வார்க்கு நரகமே
விலக்கும் வழிநூற் சித்தாந்தத்
தென்றும் விருத்தப் பாவாமே. (41)

சிவசமவாத கண்டனம் முற்றும்.

2621. சற்குணக் குரவன்றன்னொடு புலம்பல்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2031_4
ஆ. ப/254

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. சற்குணக் குரவன் தன்னொடு புலம்பல்
இ. பிற தோத்திரங்கள்
ஈ. செய்யுள்: 32

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்
ஆ. நீளம் 20.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சிதைவுற்ற நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஐங்கலை யாதி யாறும் அறுத்துநீ யளித்த வாழ்வு
தங்கிடக் கண்டு நாயேன் தன்னியல் படைவ தென்றோ
கங்குலும் பகலுந் தோன்றாக் கயிலைமா மலையை நீக்கி
மங்கலத் துறைசை தன்னின் வந்தவே லப்ப தேவே. (1)

ஆ. முடிவு

ஐம்புல வேட ராலே அனேகநாள் அவதிப் பட்ட
வம்பனை யுவரி நீக்கி வாழ்வித்த வாழ்வே போற்றி
சம்புவே நமச்சி வாயா சரக்கரை முதலே போற்றி
நம்பனே போற்றி முத்து வேலப்ப நாம போற்றி. (32)

சற்குணக் குரவன் தன்னொடு புலம்பல் முற்றும்.

5. பிற செய்திகள்

இந்நூல் துறைசையாதீனம் வேலப்பதேசிகர் அவர்களைப் போற்றுகிறது.

2622. ஞானாகம விளக்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2031_5
ஆ. ட/254

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. ஞானாகம விளக்கம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள்: 25

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்
ஆ. நீளம் 20.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. மிகமிகச் சிதைந்துள்ளது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சொல்லரு மிருளை யோட்டுஞ் சூரியன் போலச்
சிந்தை
அல்வினை யோட்டும் ஞான ஆகம விளக்கம் பாடச்
செல்வமாம் பெண்ணை சூழ்ந்த திருவெண்ணை
நல்லூர் தன்னில்.
நல்லவர் பரவும் பொல்லார் நற்பதங் காப்ப தாமே (1)

ஆ. முடிவு

மறையுமாய்ப் பொருளா யென்றன்
மனத்திடை வந்தா யென்று

பறையுமோர் வார்த்தை தன்னிற்
படுத்தினா யென்னை யென்றும்
அறையும்வா சகத்தின் உண்மை
அடைவுடன் அறியா ரெல்லாம்
குறைவிலா கமத்தைப் பாச
நூலெனக் கூறு வாரே. (25)

ஞானாகம விளக்கம் முற்றும்.

2623. நவமத கண்டனம்

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2031_6
   ஆ. டீ/254

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. ....
   ஆ. நவமத கண்டனம்
   இ. தத்துவம்
   ஈ. செய்யுள்: 22

3. தோற்றக் கூறுகள்
   அ. 5 ஏடு; 10 பக்கம்
   ஆ. நீளம் 20.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. மிகச் சிதிலமடைந்துள்ளது
   எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சிவனருள் வேதஞ் சைவம் தெளிந்ததே சிகர்போற் செப்பும்
அவரவர் மதசங் கற்பம் நிராகரித் தாசான் கூறும்
நவமத விரிவை நாடி நசையினால் தொகுத்துப் பாட
கவலைவேர் களையுந் தில்லைக் கற்பகங் காப்ப தாமே.

ஆ. முடிவு

அறிவாம் உயிருக் கைந்தறிவேன்
 அறிவாம் பாதத் தருள்குருவாய்
நெறியாம் ...... யார்பின்பு
 நீக்கும் வழக்கே தானந்தக்
குறிவே றுணரா தோர்முதலாய்க்
 கோணா நிற்கு முத்தியெனில்
செறிவாந் தெளிவு மிறுமாப்புஞ்
 சேரா தோரச் சைவர்களே. (22)

நவமத கண்டனம் முற்றும்.

2624. திருமேனி விளக்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2031_7
ஆ. ட/254

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. திருமேனி விளக்கம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள்: 30

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு, 14 பக்கம்
ஆ. நீளம் 20.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சிறிதளவு சிதிலமடைந்துள்ளது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நிலவிய தில்லை மூதூர் நெடியமா மதில்சூழ் கோயில்
குலவிய கோபு ரத்தில் குடதிசை வாயில் தென்பால்
பலர்புகழ் கற்ப கத்தின் பாததா மரையைப் பாடி
நலமது புரியும் மேனி விளக்கத்தை நவிலு வாமே. (1)

ஆ. முடிவு

பாங்கிலா ..... வெள்ளம் பருகியே களிப்பி னோடும்
ஓங்கிய பணிகள் செய்தாங்கு ...... நிழலும் போல
நீங்கிடா திருந்தார் இந்த நெறியெலா முணரா .....
தாங்கிய மேனி யோரார் சைவவந் தனையோர் தாமே. (30)

திருமேனி விளக்கம் முற்றும்.

2625. கொடிக்கவி - மூலமும் உரையும்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2032
ஆ. ஞ/26

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. உமாபதி சிவாச்சாரியர்

ஆ. கொடிக்கவி - மூலமும் உரையும்

இ. மெய்கண்ட சாத்திரம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 8 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 13 ஏடு; 26 பக்கம்

ஆ. நீளம் 20 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. மிக மிகச் சிதைவுற்றுள்ளது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சார்பு நூல் பண்ணின கொற்றவன் குடி முதலியார் கொடிப்பாட்டு நாலும் ஒரு சாத்திரமாகச் சாத்திரம் எல்லாத்திலும் ஏற்பட்ட சங்கையை நாலு கொடிப் பாட்டாகத் திருவுளம் பற்றின தெனவறிக.

ஆ. முடிவு

உதாரணம் திருவுந்தியாரில்,

நஞ்செய லற்றிந்த நாம ....

.....ன்செய்கை தானென் றுந்தீபற

தன்னை ... . தென் றுந்தீபற. (4)

ஆகையால் இந்த .... வகையுங் கண்டு கொள்க.

திருவாவடுதுறை மரபில் நமசிவாயத் தம்பிரானிட்ட கொடிக்கவியுரை முற்றியது.

5. பிற செய்திகள்
சுவடியின் ஈற்றுப் பகுதியால் உரையாசிரியர் பெயர் விளங்குகிறது.

2626. சிவஞான போதச் சிற்றுரை

1. நூலகக் குறிப்புகள்
அ. 2033
ஆ. ஞ/27

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. சிவஞான போதச் சிற்றுரை
இ. மெய்கண்ட சாத்திரம்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 34 ஏடு; 68 பக்கம்
ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
அநாதி மலமுத்த பரம பதியாகிய பரசிவனானவன் ஆதியிலே தம்மாற் செய்யப்பட்ட இருபத்தெட்டுத் திவ்வியாகமங்களுள் ஒன்றாகிய ரௌரவ ஆகமத்திலே பாப விமோசன படலத்திலே உள்ள பன்னிரண்டு சூத்திரங்களை எடுத்துச் சிவஞான போதம் எனப்

பெயரிட்டுச் சம்சார வியாதிக்குத் திவ்வியௌஷதமாகத் திருநந்தி தேவருக்கு உபதேசித்தருளினார்.

ஆ. முடிவு

முக்த்யே - முக்தியின் பொருட்டு, ஸதஹ - (குருவும் சாதகப் புத்திரக சமயிகளாகிய சங்கமரும் என்கிற) நல்லோர்களை, ப்ராப்ய - அடைந்து, வேஷம் - வேடத்தையும் (ஆதார லக்ஷணையினாலே வேடமெனப்பட்ட வேடதாரி களாகிய அவர்களையும்), ஸீவாலயா-சிவாலயத்தையும் (ஆதார லக்ஷணையினாலே இலிங்கத்தையும்), பஜேத் - பிரதக்ஷிண நமஸ்கார முதலியவற்றாலே சேவிப்பானாக, ஏவம் - இப்படியே, ஸிவஞானபோதே - சிவஞான போதத்திலே, ஸைவாகம நிர்ணயம் - சைவப் பொருட்டுணிபை, வித்யாத் - அறிக என்றவாறு.

(குறிப்பு: தொடக்கமும் முடிவும் காட்டப் பெற்றுள்ளவற்றில் கீழ்க்கோடிட்ட பகுதிகள் கிரந்தலிபியில் உள்ளன)

5. பிற செய்திகள்

இது வடமொழிச் சிவஞான போதத்திற்கு, "யாழ்ப்பாணத்திலே உள்ள திருநெல்வேலியூரில் வேளாளர் குலத்திலே பாண்டி மழவர் மரபிலே அவதரித்து வளர்ந்து சிதம்பரத்திலே வசித்த சைவசமய ஸ்தாபகராகிய ஞானப்ரகாச குருவாற் செய்யப்பட்ட சிவஞான போதவுத்தி என்னும் பெயருடைய உரையினின்று" கருத்துரையும் பதப்பொருளும் அவசிய விசேஷ உரையும் மாத்திரம் மொழிபெயர்த்து எழுதப்பெற்ற நூல். இத்தமிழ் மொழிபெயர்ப்பாளரின் பெயர் அறியக் கூடவில்லை.

நூலின் இறுதியில் வடமொழிச் சிவஞான போதச் சூத்திரங்கள் பன்னிரண்டும் மூல பாடமாகத் தரப்பட்டுள்ளன.

2627. கருவூரார் ரசவாத நொண்டி

1. நூலகக் குறிப்புகள்

அ. 2034

ஆ. ல/379

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கருவூரார்

ஆ. கருவூரார் ரசவாத நொண்டி

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்: 124

3. தோற்றக் கூறுகள்

அ. 53 ஏடு; 106 பக்கம்

ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. சற்றுக் கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீருலவு கற்பமுறை போதம் மீறும்
செல்வரகத் தியபோக நாதரீசர்
நாருலவுந் திருமூலர் சட்டை நாதர்
நமையனெனுங் கொங்கணவர் சகத்ர வேதை
பாருலவு கரவிலாக் கோரக்க நாதர்
கயிற்சேய் நரார்ச்சனர் காளை மேகர்
சீருலவு போகநிறை நாதர் தந்த
பாலனென்னக் கருவூரார் பாடல் தானே (1)

ஆ. முடிவு

சிந்து:

வந்திடும் நாலரைப் படியாக - ஆறு
மாத்தைக் காடியாறு படியாக
தொந்தமாய்ப் பழந்தனைக் காடிவிட்டடித்துச்
சுருக்கிட அரிதாரம் துடியடக்கிக் கட்டும்
- (வந்திடும்)

வந்திடும் தரணியில் உப்புத் தன்னைத்
தண்ணீரில் கரைத்துத் தானே தெளியவைத்து
அந்தத்தண் ணீரால் கானமிடுங் கறியுப்பு
அதையரைத்துக் காடை... மிடக் கட்டா குமப்பா
(வந்திடும்)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2628. ரோமரிஷி ஞானம் - 51

1. நூலகக் குறிப்புகள்

அ. 2035_1
ஆ. ட/255

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ரோமரிஷி
ஆ. ரோமரிஷி ஞானம்_51
இ. தத்துவம்
ஈ. செய்யுள்: 52

3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு; 40 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சுமாரான நிலை. ஓரத்தில் சிதைந்துள்ளது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூலாதா ரத்தொளியாய் வெளியாய் ரூபாய்
முக்கோண வட்டமதில் முளைத்த தேவி
மேலான பாதமது போற்றி போற்றி
மெஞ்ஞானச் சித்திமுதல் வாதஞ் சொல்வேன்
ஆலகால முண்டதொரு அய்யர் பாதம்
அழகான பார்வதியாள் அருளைப் போற்றிச்
சாலோக சாமீப சாரூ பந்தான்
சாயுச்யங் கடந்தபதந் தானே காப்பாம். (1)

ஆ. முடிவு

வாழ்ந்ததொரு ரோமர்சொன்ன ஐம்பத் தொன்றும்
வகையோடே பார்த்தவர்கள் யோகி யாவார்
ஆழ்ந்ததொரு ரிஷியாவார் சித்த ராவார்
அழகான ஞானிசா யுச்ய ராவார்
போழ்ந்ததொரு மாணாக்கார் சொன்ன நூலைப்
பொதிகையின்மேற் றமிழ்முனிவர் தெரிந்து
கொண்டு
ஏழ்ந்ததோர் உலகுக்கு வேணு மென்று
இயம்பினார் ஐம்பதின்மே லொன்று முற்றே. (51)

2629. மருத்துவச் செய்திகள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2035_2
ஆ. ட/255

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. மருத்துவச் செய்திகள்
இ. மருத்துவம்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 75 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 74 ஏடு; 148 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து. பலவகையானவை
ஊ. இறுதியில் சற்றே சிதைந்துள்ளது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முப்பூ :- பூநீறு பலம் 5, சவுக்காரம் பலம் 5, உத்தமத் தக்காளிச் சார்விட்டு அரைத்து புடம் 5 குக்குடபுடம் போட்டுத் துருசு சமன்சேர்த்து வீரம், பூரம் வகைக்குப் பலம் 1/4 கூட்டி முன்சார் விட்டரைத்துக் காயவைத்துக் கிளிஞ்சற் சுன்னம், கற்சுன்னம் பூநீறு அமுரிவிட்டுப் பிசரி வில்லைக்கிக் கீழ்மேல் வைத்து ஒரு சாமம் ஒரு சுன்னம் இரண்டு சட்டிவாய் பொருந்தினதாய் எடுத்து அதில் ஒரு சட்டிக்கு விரல் மந்தம் சுண்ணாம்பு பூசி உலர்த்தவும்.

ஆ. முடிவு

சாதிலிங்க பற்பம்:- சாதிலிங்கம் பலம் 1; வெள்ளை நொச்சி வேர்த் தயிலம் இரண்டு படி, எட்டுச் சாமம் சுருக்கு கொடுக்கவும். அப்பால் எடுத்து வேலிப்பருத்திப் பால்

மேற்படி கட்டிக்கு ஓலைக்கனம் அடித்து உலர்த்தி இப்படி மூன்று தரம் அடித்து உலர்த்தி அரசங்கொழுந்து தேங்காய்ப் பிரமா(ணம்.....)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2630. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2036_1

ஆ. மு/60

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. மாந்திரீகம்

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுள்: 75

3. தோற்றக் கூறுகள்

அ. 61 ஏடு; 122 பக்கம்

ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உதிரமதே உயர்பென்ற மூல சீவன்
அலங்கார பிரணவமே இதுவு மாக

பதியான வட்டமிது ..... பீடு
பாங்கான குண்டலியும் வல்லமையு மாக
விதியான விதியெல்லா மிதனா லாகும்
வேதாந்த சித்தாந்த மிரண்டு மிங்கே
பதியான ரவிமதியி னுடனே யொட்டி
வாலையென்ற எழுத்தினால் தாக்கு தாக்கே.

ஆ. முடிவு
வாங்கப்பா சங்குநீ ரிதற்கொவ் வாது
மஞ்சளிலே குத்தப்பா சிவந்து போகும்
ஏங்கிநீ யலையாதே மாறஞ் சுக்கும்
இவ்வண்ணம் செய்யாதே விபரங் கேளு
தாங்குதலை மாறஞ்சுச் ச . . . .

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2631. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2036_2
ஆ. மூ/60

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 75

3. தோற்றக் கூறுகள் .
அ. 14 ஏடு; 28 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூதமஞ்சு பொறிகளஞ்சு புலங்க ளஞ்சு
புகழான கன்மயிந்தி ரியங்க ளஞ்சு
நாதமெனு ஞானவிந்தி ரியங்க ளஞ்சு
நலமான கரணமது நால தாகும்
சீதமெனும் அறிவொன் று நாடி பத்து
திசைவாய்வு பத்துடனே செயல்க ளஞ்சு
மாதமெனு கோசமஞ்சா மாதார மாறு
மண்டலங்கள் மூன்றும் மலம தாமே. (1)

ஆ. முடிவு

தானேதா ... மடா வப்பு வுக்குச்
சனித்ததிலே ..... தேயு வாகில்
ஆனேசே ளிதுமூன்று நாளில் தீரும்
அதுமீறில் மூன்றானாள் மரண மாகும்
தேனேதான் வாயுவுக்கு இரண்டு நாளில்
தீருமிது மிஞ்சிடிலோ திரமாய்க் கொல்லும்
நானேயா காசமொரு நாளில் கொல்லும்
நன்றான உபயமஞ்சா நாளில் சாவே. (75)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2632. மச்சமுனி வேதாந்தம் 800

1. நூலகக் குறிப்புகள்
அ. 2036_3
ஆ. மு/60

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. மச்சமுனி
ஆ. மச்சமுனி வேதாந்தம் 800
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்: 105

3. தோற்றக் கூறுகள்

அ. 25 ஏடு; 50 பக்கம்
ஆ. நீளம் 24 செமீ, அகலம் 2.5 செமீ,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. மிகக்கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வாங்கிச் சட்டியிலே யிட்டுநீ முலைப்பால் ....
ஓங்கிவிடு அவிப்புடமா யெரிக்கும் போது
ஒடுங்கியே மைபோல கருகிவளைந் துருகும் பாரே. (1)
(யாப்பமைதி இல்லை)

ஆ. முடிவு

அணைவாளெந் நேரமுன்னைப் பிரிய மாட்டாள்
அறியலுற்ற நாலுகால் சீவனா னாலும்
இணையாகப் பிரிக்கவுமோ கூடா தப்பா
பிரமலிபி யுண்டானால் பிரிவா ரேதோ
துணிவாக லிங்கமெழுகிதற்குப் பேராம்
சொல்லியே எவர்எவர்கள் என்று நேரும்
பணிவாக மாண்டவனும் இளமை யான
பார்த்தெடுத்துக் கொடுவீணாத் தண்டின்
நெய்யே.! (105)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

5. பிற செய்திகள்

மச்சமுனி 800 என்னும் நூலும் இதுவும் ஒன்றா வேறா எனப்பார்க்கப்படவேண்டும்.

2633. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 2037

ஆ. ல/380

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 75 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 67 ஏடு; 134 பக்கம்

ஆ. நீளம் 20.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சற்றே சிதிலமடைந்துள்ளது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நட்டுக்கு மருந்து:

கொமுஞ்சிவேர், எருக்கம் பழுப்பு, அதின்வேர் வகையொன்றுக்கு ஒரு பாக்களவு, வேலிப்பருத்தி ஒருபிடி.

இந்த மருந்தெல்லாம் ஆழாக்கு விளக்கெண்ணெயில் வேக வைத்து ஒரு காசிடை உள்ளுக்குக் கொடுத்து மேலும் பூசவும், தீரும்.

ஆ. முடிவு
ஊமத்தங்காயின் உச்சியில் தொளைத்து அதற்குள்ளே பூநாகம் வைத்துக் காராம் பசுச்சாணத்தில் பொதித்து உலர்த்தி நாயுருவி சமூலத்துடனே பிடுங்கி இச்சிச் சுப்பி, அத்திச் சுப்பி, ஆலஞ் சுப்பி, அரசஞ் சுப்பி, இண்டஞ் சுப்பி, இந்தச்சுப்பி வகை . . . . . சரியாகக் . . . . த்திருநீற்று . . . . பிசைந்து உள்ளுக்குக் கொடுக்கப் பிரியமாம். பெண்களுக்கு இப்படிச் செய்யவும்.

5. பிற செய்திகள்
ஈற்றில், "இதுவோ திருவரங்கம்", "இதுவோ திருநகரி" எனத் தொடங்கும் வைணவத்துதி வெண்பாக்கள் உள்ளன.

இச்சுவடியில் மருத்துவச் செய்திகளைவிட மாந்திரீகச் செய்திகளே மிக அதிகமாக உள்ளன.

2634. சர நூல் உரை

1. நூலகக் குறிப்புகள்
அ. 2038
ஆ. வ/111

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. . . . .
ஆ. சர நூல் உரை
இ. சோதிடம்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்
ஆ. நீளம் 25 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்னப்பட்ட சாத்திரத்தை அறியாதார்க்கும் மன நினைவினாலே அறிய வேண்டிப் பரமேசுரி பரமேசுரனை வணங்கிக் கேட்கப் பரமேசுரன் சர நூல் அன்பினாலே பார் என்றவாறு. (1)

ஆ. முடிவு

எறும்பு கடை யானை முதலா எல்லாப் பிராணிகளுக்கும் சரம் சரி. இரவு பகல் இருபத்தோராயிரத் தறுநூறு சுவாசம் ஓடும் என்று பரமேசுரன் பரமேசுரிக்குச் சொன்னவாறு. (51)

சர நூலுக்கு உரை முற்றும்.

5. பிற செய்திகள்

நூலையடுத்து ஓர் ஏட்டில் காலசரம் என்னும் தலைப்பில், "வெள்ளிவெண் திங்கள் விளங்கும் புதனிடம் தெள்ளிய நாயறு செவ்வாய் சனிவலம் உள்ளிய பொன்னே வளர்பிறைக் கிடமதாம் தெள்ளிய தேய்பிறை வலமெனச் செப்புவாம்" என ஒரு கலிவிருத்தமும், எவ்வெப்போது சுவாசத்தின் நீளம் எவ்வெவ்வளவு அங்குலம் இருக்கும் எனக் கூறும் பாடலொன்றும் எழுதப்பட்டுள்ளன.

2635. சர நூல் - மூலமும் உரையும்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2039
ஆ. வ/112

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. சர நூல் மூலமும் உரையும்
இ. சோதிடம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 48 ஏடு; 96 பக்கம்
ஆ. நீளம் 25 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7-8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 22ஆம் ஏடு முறிந்துள்ளது. மற்றவை நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
உமைமாதுக் கீச னுரைத்தசர நூலை
யமையாப் பொருளையறி விப்பக் - கமையாப்
புவிமடந்தை போர்மடந்தை பூமடந்தை யோதுங்
கவிமடந்தை யீங்கிதற்கோர் காப்பு.

ஆ. முடிவு
ஈன சாதியிலே பிறந்தாராகிலுஞ் சற்குருவின் முகத்தினால் இச்சர நூலினைக் கேட்டு அவ்வழிபாடுகள் தப்பாது

நடக்கு மனிதரென்றும் நாமென்றும் இரண்டில்லை. அதெப்படி என்னில் மின்னிலே பிறந்த செந்தழலை யடுக்கின்றதெல்லாம் அக்கினி சொரூபம் போல் . . . . . . பிறவியில் பிறப்புமற்று அவமிருத்துச் சாக்காடில்லை. தம்முடைய சடையில் அணிந்த சந்திரனுக்குவமை எப்படியேதோ என்னில்,

"முற்பதி னைந்தில் முளைத்துப் பெருத்தது
பிற்பதி னைந்தில் பெருத்துச் சிறுத்தது
அப்பதி னைந்தை யறியவல் லார்க்குச்
செப்பரி யான்கழல் சேர லு மாமே"

இது பரமேசுரன் பார்வதிக்கு அருளிச்செய்த சர நூல். ஆகையாலே இச்சர நூலை மனிதர் முகாந்திரமாக அறியவேணுமென்றவாறு. சர நூல் முற்றும்.

இ. பிற்குறிப்பு

ஸ்ரீவில்லிபுத்தூரிலிருக்கும் அருணாசலம் பிள்ளை மகன் சாமிநாதன் சர நூல். பிரமாதி வருடம் தை மாதம் 12ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையும் பூர்வ பட்சத்து நவமியும் பரணி நட்சத்திரமும் விடிஞ்சு ஒரு சாமத்தில் சாதய யோக வேளையும் கும்ப லக்னத்தில் சர நூல் எழுதி முற்றும்.

2636. இராமதேவர் ஆயிர்த்திரட்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 2040
ஆ. ற/241

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. இராமதேவர்
ஆ. இராமதேவர் ஆயிரத் திரட்டு

இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்: சுமார் 100

3. தோற்றக் கூறுகள்

அ. 23 ஏடு; 46 பக்கம்
ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 4 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 11-29, 31 ஆகிய ஏடுகள் இல்லை. உள்ளவை நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வாரான வசியமுத லெட்டு வித்தை
    மகத்தான மையினுட திலதப் போக்கு
கூரான செயநீரின் மெழுகின் போக்கு
    கூர்மையுள்ள செந்தூரஞ் சரக்கின் வைப்பு
நேரான வேதையிலே அனந்தம் போக்கும்
    நிஷ்ட்டைமுதற் சமாதியினுட் கற்பப் போக்கு
தேராத மனத்தோர்க்கு ஞானப் போக்கும்
    தீட்சையொடு கருக்குருவும் திறமி தாமே. (10)

ஆ. முடிவு

முத்தான சிவமதுவே ஆத்துமா வாகும்
    முழங்கிநின்ற நாதமடா சோதி யாகும்
சித்தான சித்ததுதான் அறிவா னந்தம்
    சின்மயமாய் நின்றதுவே விந்து வாகும்
வித்தான வித்ததுதான் ஒளிகண் பார்வை
    வேதாந்த பூரணமே தான்தா னாகும்
பத்தான திசதீட்சை தன்னி லேதான்
    பத்தியுடன் தன்னறிவாய்ப் பதிவாய் முத்தே (1001)

சம்பூர்ணம்.

5. பிற செய்திகள்

9, 39 ஆகிய இரண்டு ஏடுகளிலும் முதல் பக்கத்தில் சில வரிகள் மட்டுமே எழுதப்பட்டு மறுபக்கம் எழுதாமல் விடப்பட்டுள்ளது. இது சில பாடல்களைத் தெரிவு செய்து எழுதுவதற்காக விடப்பட்டுள்ளது போலும்.

2637. உரிச்சொல் நிகண்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 2041
ஆ. ச/61

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. காங்கேயன்
ஆ. உரிச்சொல் நிகண்டு
இ. இலக்கணம்
ஈ. செய்யுள்: 220

3. தோற்றக் கூறுகள்

அ. 31 ஏடு; 62 பக்கம்
ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவற்ற கையெழுத்து
ஊ. சிதைவுற்ற நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருமாலுஞ் செங்கமல மேயானுங் காணாப்
பெருமான் பிறைசூடும் பெம்மான் – அருஞ்சூர்த்தி

நன்னெஞ்சி னான்மறையோன் றில்லை நடம்புரிவோன்
என்னெஞ்சின் மேய விறை. (1)

ஆ. முடிவு

ஞானம............ . மாமென்பர்
நூனமாங் குன்றலு நிச்சயமு - மான
மறைமந் திரம்வேத மாவாம் புரவி
சிறைவண்டு சூதந் திரு. (36)

பத்தாவது ஒருசொற் பலபொருட் பெயர்த்தொகுதி முகிந்தது முற்றும்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2638. புவன கோசரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2042
ஆ. டி/256

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. போகர்
ஆ. புவன கோசரம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள்: 209

3. தோற்றக் கூறுகள்

அ. 56 ஏடு; 112 பக்கம்
ஆ. நீளம் 25.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7-9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து
ஊ. மிகச் சிதைவுற்ற நிலை. 36_38 ஏடுகள் இல்லை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பேர்பெருகு புவனகோச ரத்தைப் பேச
பேருலகில் மாணாக்காள் புகழ்ந்து கேளீர்
சீர்பெருகு மண்டாண்டத் தத்துவமும் பிரித்துச்
சின்மயத்தி னருளாலே செப்ப வேண்டித்
தாரணிந்த யீசனன்று மாயிக்குச் சொல்லத்
தாயான யீஸ்வரியும் நந்திக்குச் சொல்லக்
கார்பெருகு நந்தியெங்கள் மூலருக்குச் சொல்லக்
கருணையுயர் மூலகுரு எனக்குச் சொல்லப்
பார்புகழும் போகனென்பேர் வாக்கியமாய்ச்
சொன்னேன்
பரன்காப்பு .... கணேசன் காப்பே. (1)

ஆ. முடிவு

ஒன்றாகக் காண்பதுவே காட்சி யாகும்
உத்தமனே மற்றதெல்லாம் பரப்பு ஞானம்
நின்றாக நவகண்டந் தன்னை யப்பா
நேராகக் குளிகையிட்டு யேறிப் பாரு
குன்றாகு மகமேரு வனைத்து மொன்றாய்க்
கூறுகிற பரிசாலே குறுக்கேது மில்லை
மன்றாகுங் கோசரங்கள் தத்து வங்கள்
மகத்துடையோர் பொருட்டாலே
வாழி முற்றே. (209)

போகநாதர் நாயனார் அருளிச்செய்த புவன கோசரம். சம்பூர்ணம்.

2639. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2043_1

ஆ. மூ/61

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. மாந்திரீகம்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்

ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. பலவகையான வரிகள்

உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகமிக மலிந்துள்ளன

ஊ. சிதைவுற்ற சுவடி

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முலைக்குத்துக்கு எண்ணெய் மந்திரம்:-

ஓம் குரு வாழ்க குருநாதன் வாழ்க எந்தன் வாழ்க எந்தன் ஆசாரி வாழ்க, எவ்வாணை மறக்கினும் குருவாணை மறவேன்.

முலைக்குத்தென்று முன்னெதிரேவந்தாள் நாலுமது

கேட்டுப் பின்னெதிரே வந்தேன். முலைக்குத்துப் பரமே சுபரியானே போந்திரங்கிப் போ போ. எண்ணெ யோதித் தடவ நீவப் போம்.

ஆ. முடிவு

ஓம் அங்அங் ஆங் அகோர சங்கார ருத்திர ஹ்ரூங் அகோர கால சங்கார ருத்திரா ஓம் கிரியும் கிரியும் கிலியும் அய்யும் அரியும் ஆங் அங் ஹூம் சிதம்பர தாண்டவா சிவசிவ சிவாயநம செயநம செயநம சிவாய நம வாசிநம சிவாய பூதப்ரேத நாசய நாசய சவும் அம் இம் இம் உம் உம் படுபடு அப்பு அப்பு.

(இதற்கு மாக மந்திரம் எனத் தலைப்பிடப்பட்டுள்ளது. அநேகமாக மாரக மந்திரமாக இருக்கலாம்.)

5. பிற செய்திகள்

மந்திரங்களுக்குரிய யந்திரங்களும் எழுதப்பட்டுள்ளன.

2640. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 2043 _2

ஆ. ழ/61

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . .

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்
ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு பலவகையான வரிகள்
உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி
ஊ. மிகச்சிதைவுற்ற நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உள்மூலம், புறமூலம், ரத்தமூலம், சீமூலம் நாலுக்கும்:-

சுக்கு பலம் 2, கடுகு பலம் 1/2, மிளகு பலம் 1/2, வெள்வெங்காயம் பலம் 2, சாதிக்காய் விராகனெடை 2, மராட்டிய மொக்கு விராகனெடை 2, ஏலம் விராகனெடை 2, இந்துப்பு விராகனெடை 2, பெருங்காயம் விராகனெடை 2, திப்பிலி விராகனெடை 2 பத்து வகையும் வெவ்வேறே பொடி பண்ணி வைத்துக்கொண்டு களுச்சுக்காய்க் கொழுந்து ஒரு பிடி கொண்டு வந்து விளக்கெண்ணெய் அரைப்படி காயவைத்து இந்தக் கொழுந்து போடப் பொங்கிவரும். பிறகு திப்பிலிப் பொடி மறுபடி மராட்டிய மொக்குப்பொடி பிறகு இந்துப்புப் பொடி பிறகு வெள்வெங்காயப் பொடி இந்த அஞ்சு வகையும் போட்டுப் பொங்கி நின்னதும் அஞ்சு வகையும் போடவும்.

ஆ. முடிவு

மூலக்கழிச்சலுக்கு:-

வரகரிசி நாழி சோறு கொதிக்கின்ற போது நாயுருவி இலை ரெண்டு பிடி கொண்டு வந்து கூடப் போட்டு

பொங்கி இறக்கி வச்சுக்கொண்டு மூன்றுநாள் நல்லெண்ணெய் விட்டுத் திண்ண மூலக்கழிச்சல் தீரும்.

2641. சினேந்திர மாலை

1. நூலகக் குறிப்புகள்

அ. 2044
ஆ. வ/113

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. சினேந்திர மாலை - மூலமும் உரையும்
இ. சோதிடம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 100 ஏடு; 200 பக்கம்
ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. மிகக் கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மலிந்துள்ளன
ஊ. மிகச் சிதைவுற்ற நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆழிசூழ் வையத்துக் கண்டத்துக் கப்பாலும்
ஊழிசூழ் பொய்கடந்த உண்மையினை-வாழிய
எண்ணறியான் ஏற்றறியான் எவ்வுயிர்க்குந் தானான்
தன்னொளியான் பாதம் சரண்.

ஆ. முடிவு

...............உதயமாகச் சரராசிக் கவிப்பிலும் வங்கம் வருமென்க. உதயத்துக்கு மூன்றாமிராசியில் புதன் வியாழன் (இருப்பினும்) நோக்கிலும் கடுக வருமென்றவாறு. (3)

சமுத்திர யாத்திரை முதலான மரக்கலம் வரவு காண்டம் முற்றும்.

ஆக வெண்பா 426. (இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2642. அவத்தைக் குறி லட்சணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2045_1

ஆ. ல/381

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. அவத்தைக்குறி லட்சணம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்: 18

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 17.5 செ.மீ., அகலம் 2 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்ல நிலை. நூல் 21ஆம் ஏட்டில் தொடங்குகிறது

எ. முழுமை?

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

எண்ணிய அவத்தை சொல்வோம் இனியகை மார்பு மூக்கு
நண்ணிய செவியோ டுந்தி நலம்பெறக் குளிர்ந்து காயில்
திண்ணிமா னுச்சி பங்கி யாயெனி நாடி யோடில்
மண்ணினில் கடிகை யஞ்சில் மரணமென் றறிந்து
கொள்ளே. (1)

ஆ. முடிவு

பார்க்கும்பேர் நாக்கு முள்ளுப் பாரித்தால் வாத மாகும்
வார் . . .கு முகம்சி வந்து மஞ்சனி பித்த மாகும்
சேர்க்குடன் வழுவ ழுத்தால் சேற்றுமமென்
றோத லாகும்
ஏர்க்கவே சனிரோ கைக்கு இவ்வச மிருக்கு தென்றார். (18)

(இதற்குமேல் எழுதப்படாததால் நூல் முற்றிற்றா என அறியக்கூடவில்லை.)

2643. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 2045_2
ஆ. ல/381

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 46 ஏடு; 92 பக்கம்

ஆ. நீளம் 17.5 செ.மீ., அகலம் 2 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. மிகக்கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி

ஊ. 1 _ 24, 29, 30, 33, 35, 36, 38, 40, 47, 48, 50, 52, 55, 57, 60, 61, 66, 67, 68, 74, 77, 80, 81, 84, 85, 90, 92 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. உள்ளவை நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தயிலம் - மேகத்துக்கு

நூறு வருசத்து வேப்பம் பட்டை கொண்டு வந்து இருபத்தைந்து பலத்துக்குத் தூணி நீர்விட்டு எட்டொன்றாக்கி இறுத்துக்கொண்டு நல்லெண்ணெய் படி 2 விட்டு . . . . அரைத்துப் போட்டுப் பதமாகத் தயிலம் வடித்து முழுகி வரச் சகல பந்துவாகும்.

ஆ. முடிவு

பதத்திலிறக்கி வைத்து அந்தத் தயிலம் சிரசுமுதல் பாதம் வரையில் பூச முகச்சுரப்பு, நெஞ்சுப் புகைச்சல், வயிற்றுக் கடுப்பு, தேகத்து வீக்கம், அன்னத்து வேவும், சகலபாண்டு வீக்கமும் தீரும். இந்தத் துவாலை மூணரைநாள் ஏழுபொழுது பூசி நாலாம் நாள் இளவெந்நீர் வைத்து அன்னப்பாலும் மிளகும் அரைத்து ஸ்நானம் பண்ணவும்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை).

2644. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2046

ஆ. மு/62

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. மாந்திரீகம்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 68 ஏடு; 136 பக்கம்

ஆ. நீளம் 28.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி.

ஊ. முதல் ஏடு காணப்படவில்லை. மிகமிகச் சிதைவுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

......தெரியாது. அந்த கல்லும் பூனையும் காணலாகாது. மூன்றுக்கும் பூனை லிங்கம் நிழலுலர்த்தித் தூளாக உலர்த்திப் பொன், வெள்ளி, செம்பின் மணி சமைத்து அதின் உள்ளே வைத்துக் குளிசமாடிக் கொள்ளவும். இது கையில் இருக்க தேவர்களுக்குங் காணவராது.

ஆ. முடிவு

தேன்மெழுகு, கோரோசனை, பொன் அரிதாரம்,

கோஷ்டம், சதுரக்கள்ளிப்பால், புங்கம் பருப்பு, கழற்சிப்பருப்பு, தேன்மெழுகு விராகனெடை 7 இதுகளை வகைக்கு விராகனெடை 1 அரைத்து உண்டை பண்ணி அனலில் காட்டித் தேள் கொட்டிய வீரயில் வைக்கவும். தேள் விஷம் தீரும்.

இ. பிற்குறிப்பு

தம்பிக்குநல்லவன்கோட்டையிலிருக்கும் இராமசாமிக் குருக்களையர்பிள்ளை சுப்பய்யர் புஸ்தகம். பிரமாதி வருடம் மார்கழி மாதம் 22ஆம் தேதி சுப்பய்யர் கையினால் எழுதினது.

5. பிற செய்திகள்

இடையிடையே யந்திரங்கள் வரையப்பட்டுள்ளன. இச்சுவடிக்குப்பிறகு 6 ஏடுகளில் இத்தகைய ஜாலச் செய்திகள் எழுதப்பட்டுள்ளன.

2645. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்

அ. 2047

ஆ. ல/332

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 26 ஏடு; 52 பக்கம்

ஆ. நீளம் 24 செமீ, அகலம் 2.5 செமீ,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6_8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. மிகமிகச் சிதைவுற்ற நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஏலாதி சூரணம்:-

ஏலம், இலவங்கப் பட்டை, இலவங்கப் பத்திரி, ... செவ்வியம், முத்தக்காசு, கொத்தமல்லி, பேரீச்சம்பழம், முந்திரி, ... சாதிக்காய், சாதிப்பத்திரி, வெட்டிவேர், வாமீச்சவேர், ... நன்னாரிவேர், நற்சீரகம், கிராம்பு, சிறுதேக்கு, சுக்கு, ... நொச்சிக்காய், சத்திசாரனை வேர், நிலப்பனைங்கிழங்கு, ...

ஆ. முடிவு

இந்த ஒன்பது நாளைக்குஞ் சாயங்கால நாசிக்கும் ஒரு காசிடை நெய்விடவும். இந்த நெய்க்கப்பால் சூலை, கபாலவாயு, நேத்திரவாயு, மண்டைக்கனம், கரப்பன், தலையிடிக்கிறது, மண்டையில் குத்துகிற ரோகம், கெந்ததாளி, மண்டைப்புத்து, மண்டைமாதேவி, காதுகுத்துகள், காதுகேளாததுகள், பல்கூசுகிறதுகள், மூக்கிலே சிராய்விழறது, நவபீனிசங்கள் இதுயெல்லாம் தீரும். இதுக்குப் பத்தியம் ஒன்பது நாளைக்குப் பாலுஞ் சோறும். வேறொன்றும் ஆகாது. பாக்கு போட்டுக் கொள்ளவும்.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2646. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2048
ஆ. ல/383

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 165

3. தோற்றக் கூறுகள்

அ. 57 ஏடு; 114 பக்கம்
ஆ. நீளம் 20 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. மிகக் கிறுக்கலான கையெழுத்து; பிழைகள் மிகுதி
ஊ. ஒரு பெரிய சுவடியின் 58ஆம் ஏடு முதல் 111ஆம் ஏடுவரை கொண்ட சுவடி இது. உள்ள ஏடுகளுக்குப் பின்னால் ஒன்று முதல் ஏட்டெண்கள் கொடுக்கப் பட்டுள்ளன. சுமாரான நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நல்லது விப்பிலப் பிஞ்சு பாக்கு வெற்றிலையும்
சுண்ணாம்பாம் நிலவுப்பானே.
அரைத்துப் பணவெடை கற்பூர மதுகூட்டு நிலவுப்பானே
சுருக்கா தித்தன் முகம்பார்க்க மூன்றுநாள்
வைத்திடப்பா நிலவுப்பானே.

நாலாம்நாள் கவசத்தை வாங்கிவிடு
சொன்னேன் நிலவுப்பானே.

ஆ. முடிவு

சொல்லென்ற கோச பீசந் துணிப்புட னறிய மாட்டார்
வல்லதோர் கொங்க ணய்யர் வரசட்டை நாதர் தாமும்
நல்லதோர் மூலர் தாமும் நானன்றி மொழிந்த தல்ல.
கருவூரார் துணை.

5. பிற செய்திகள்

இதனையடுத்து ஆறு ஏடுகளில் வேறு மருத்துவச் செய்திகள் உள்ளன.

2647. பட்சி சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2049
ஆ. வ/114

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. பட்சி சாத்திரம்
இ. சோதிடம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 23 ஏடு; 46 பக்கம்
ஆ. நீளம் 25 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 4, 5 எண்ணிட்ட ஏடுகள் முறிந்துள்ளன. சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

விதிநூல்கள் பொய்த்திடினும் வெற்புநிலை சாய்ந்திடினும்
மதியிரவி தென்வடக்காய் வந்திடினும் - அதியதொரு
ஆதிநூல் பொய்த்தாலும் அஞ்சுபஞ்ச பட்சிநிலை
மேதினியில் பொய்யாது மெய்.

(இரண்டாம் அடியின் மூன்று நான்காவது சீர்களிடையே தளை தட்டுகிறது).

ஆ. முடிவு

மேடமொடு தேள்அரிவி ரும்பியவல் லூறு
மிக்ககட கம்மிதுனம் மெல்லியலும் ஆந்தை
கூடுசிலை மீனமொடு கூறுவது காகம்
கோலும்விடை யும்பெரிய கோழியென லாகும்
நீடுகுடம் மாமகரம் நீலமயில் ஆகும்
நின்றபடி ராசிநிலை நிச்சயமி தென்ன
வீடுபெறு கும்பமுனி தாமுரைசெய் நூலை
மேதினியி லுள்ளவர்(கள்) விரும்பினது தாமே.

5. பிற செய்திகள்

இதற்கடுத்து பட்சிகளுக்கான நட்சத்திர அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.

2648. நாடிசாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2050
ஆ. ல/384

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. நாடி சாத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 39

3. தோற்றக் கூறுகள்
அ. 8 ஏடு; 16 பக்கம்
ஆ. நீளம் 24 செமீ., அகலம் 2.5 செமீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் ஏராளம்
ஊ. சுமாரான நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
கொள்ளுக வாதம் ரெண்டும் பித்தமும் ஒருகா லோடிக்
கள்ளமாய் உதிரம் விம்மிக் கனக்கவே வாய்வு கொள்ளுந்
தெள்ளற கோதை யாரைச் சிறந்தசிந் தனையுண்
டென்றும்
ஒள்ளிய வாத பித்தந் தொந்தமென் றுரைக்க லாமே. (1)

ஆ. முடிவு
கோதை மாதே கேள்குருகில்
நடையா குங்கோ ....

....கொடிய சூலையென்றும்
....
காவினாலைக் கருங்குயில்கள்
நடக்கில் கன்னி யிளமாதே
கேள்பா வையென்று ஆக்கிவைக்கும்
பாரப் பாரீ சுரமேகம். (39)

நாடி சாத்திரம் முற்றும்.
(இப்பாடல் வடிவம் விளங்கவில்லை)

2649. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2051
ஆ. மூ/63

2. உள்ளீடு நூல் விவரம்
அ. ....
ஆ. மாந்திரீகம்
இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 4 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 20.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்
உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி,
ஊ. 1, 4 ஆகிய ஏடுகள் இரட்டை ஓலைகள். நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சூடன் எரி பதங்கம்:

கோழிமுட்டை வெள்ளைக் கருவை சிரட்டையில் விட்டுக் கொள்ளவும். கோழி வெண்காரமும் குஞ்சு பொறித்ததோடும் சமன் எடுத்துப் பொடிபண்ணி முன் சொன்ன வெள்ளைக் கருவில் போட்டு ஒரு நாழிகை நன்றாய் மத்திச்சு வைக்கவும். ஒரு நாழிகை சென்ற பிறகு சீலை வடிகட்டிக் கொள்ளவும். சுத்த சலமாம்.

ஆ. முடிவு

நந்திதீரு மந்திரம்:-

எண்ணாயி ரத்தி எழுநூறு மந்திரம்
அண்ணாவி சொன்னா ரடியேன் அறிந்தேன்
சொன்னானஞ் சிகப்புசேர் பச்சை நீலம்
வண்ணா னறிவான் வகாரத் திரையமே.

கட்டு, லிங்கம், கெந்தகம் இரும்பிலிட; லிங்கம், பாடாணம் வங்கத்திலிடவும்; மந்திரம், விஞ்சை செவிக்கவும். எட்டுஞ் சித்தியாம். வேறு.

(இதற்குமேல் எழுதப்படவில்லை.)

2650. சித்தர் தத்துவத் திரட்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 2052
ஆ. ற /242

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர் முதலியோர்

ஆ. சித்தர் தத்துவத் திரட்டு

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள். அச்சில் ஏறத்தாழ 500 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 250 ஏடு; 500 பக்கம்

ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சில ஏடுகள் மிகச் சிதைந்துள்ளன; பல ஏடுகள் ஓரளவு சிதைந்துள்ளன. எனினும் பொதுவாகச் சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கேளப்பா அண்டத்தில் மவுன தீட்சை
கெடியான கேசரத்தில் காணுங் காணும்
நாளப்பா மந்திரங்கள் ஒன்று மில்லை
நாவில்லை பாவில்லை நானென்ப தில்லை
சூளப்பா அகண்டவெளி கோடி பானு
சுடர்கோடி காந்தியது தோற்றும் தோற்றும்
வாளப்பா இதுவல்லோ மவுன தீட்சை
மகத்தான குருச்சொல்லி மாட்டு வாரே

(இது அகத்தியர் தீட்சை விதி 200 என்னும் நூலின் 41-ஆம் கவி)

ஆ. முடிவு

அன்பத்தோ ரெழுத்தெல்லாம் ஓரெழுத்தே யாகி
அண்டபிண்டம் தானாகி அமர்ந்த நாதன் (55)

சொன்னாலே அறிவுவரும் சுழுத்திக் கப்பால்
தோற்றுமங்கே மெஞ்ஞானம் தோற்றும் தானே (64)

(இவை சுப்பிரமணியர் சுத்த ஞானம் 100 என்னும் நூலின் 55, 64-ஆம் பாடற் பகுதிகள்)

5. பிற செய்திகள்

அகத்தியர் தீட்சைவிதி 200, பூசை விதி 200, பரிபாஷை 500, கலைஞானம் 1200, சௌமியம் 1200, பரிபூரணம் 1200, பூரணகாவியம் 1000, வைத்தியபூரணம் 400, பூரண சூத்திரம்215, மதிவெண்பா 100, சிவயோகம் 100, காயசித்தி 100, யோகசாதனை 14, ஞானகாவியச் சுருக்கம் 16, கன்ம காண்டம், வைத்தியம் 600, வைத்தியம் 1200, ஞானம் 60, வைத்திய சிந்தாமணி 500.

சுப்பிரமணியர் மெஞ்ஞானம் 200, ஞானம் 100, சுத்த ஞானம் 100.

சட்டை நாதர் வாதம் 1000, முன் 100, பின் 100, மெஞ்ஞானம் 30, சடாட்சரம் 108, வைத்தியம் 100, குருநூல் 50, வாதம் 16, யோகம் 16, ஆறுமுகம்.

இராமதேவர் பூசை விதி 200, வைத்தியம் 1000.

நந்தீசர் 300, பிரமமுனி 250, தன்வந்திரி 300

கொங்கணவர் கடைக்காண்டம் 500, சுருக்கம் 35, முதற் காண்டம் 1000, நடுக்காண்டம் 1000, பிற்காண்டம் 1000, தண்டகம்.

கடப்பிள்ளை ஞானம் 100, ராசரிஷி ஏகாட்சர ஞானம் 37.

போகர் 7000, ரத்தினச் சுருக்கம் 360, முப்பூ 50.
திருமூலர் பூரணசூத்திரம் 43, ஞானம் 500

கருவூரார் 95, பூசை விதி 31

பதஞ்சலியார் 54, விசயானந்தர் 100, அறிவு சிவானந்தர் 30.

மச்சமுனி 25, சிவவாக்கியம், அவ்வை ஞானக்குறள்.

வால்மீகர் 16, 10, திருவள்ளுவர் 1500, ஏரானசிங்கம் 52.

சுந்தரானந்தர் பூசை விதி 50, ஞானம் 51.

ரோமரிஷி யோகம் 16, குருநூல் 50, டமரானந்தர் சூத்திரம் 16.

சங்கராச்சாரியார் உடலறிவிளக்கம் 100, பாலானந்தர் ஞானக்கும்மி.

காலாங்கிநாயன் கற்பவிதி 84, பட்சணி 51.

கும்ப .முனிக்கும் சட்டை முனிக்கும் தர்க்கம் 120 ஆகிய நூல்களிலிருந்து முழுப்பாடல்களும், பாடற் பகுதிகளும் திரட்டப்பட்டுள்ளன. நூற்பெயர், அதில் பாடல் எண் ஆகியவை தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளன. இடப்பக்கம் பொருள் தலைப்பு எழுதப் பட்டுள்ளது. தீட்சை, பூசை, தியானம், யோகம், ஞானம், வீடு பற்றிய சித்தர்களின் கொள்கைகளைத் தொகுத்து ஆய்ந்து முடிவு காண விழைவாருக்கு இச்சுவடி ஒரு சிறந்த மூலநூல் என்னலாம். பலதரமான ஆய்வுகளுக்கு இடமளிக்கும் ஒரு சிறப்பான தொகுப்பு இது.

2651. சல்லியம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2053
ஆ. டீ/64

2. உள்ளீடு : நூல் விவரம்
அ. ....
ஆ. சல்லியம்
இ. மாந்திரீகம்
ஈ. செய்யுள்: 34

3. தோற்றக் கூறுகள்
அ. 10 ஏடு: 20 பக்கம்
ஆ. நீளம் 26.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி
ஊ. மிகச் சிதைவுற்ற நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
காண்க தொடர் எண்: 2006

ஆ. முடிவு
பிறந்திடு கருடன் முட்டை பெரியதோர் கூடும் பார்த்துச்
சிறந்ததோர் குஞ்சு தானால் செய்வது விலங்கு காலில்
பறந்திடும் பொழுது தானே விலங்கது பத்தால் வேரை
அறிந்துகொள் ளதனைக் தெறிக்கும் அதுவொரு
திவிலச் சுத்தே. (34)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2652. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்

அ. 2054

ஆ. ல/385

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 8 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு; 40 பக்கம்

ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இரசம், பாடாணம், புழுகு, பொறிகாரம் இவை நான்கும் சமன் கூட்டியரைத்துப் பனத்தில் தடவி உருக்கவும். பனபுளியும் வெடியுப்பும் சமன் கூட்டியரைத்துத் தீயில் வாட்ட தயிலம் வரும். அந்தத் தயிலத்தை ஒரு பனத்தில் தடவி அந்தப் புளியினாலே பனத்தைப் பொதிந்துருட்டி புடமிடச் சுத்தி.

ஆ. முடிவு

கிரந்தி வந்த பேருக்கு மருந்து:-

பெரிய சங்கையுடைத்து நொறுக்கி வெந்நீர்விட்டு அரைத்து மூன்று உருண்டை மூன்று நாட்களுக்குக் கொடுக்கவும். ஒன்பது நாளைக்குப் பத்தியம் காக்கவும். பத்தாம் நாள் தலைமுழுகவும். ஒரு மாதத்துக்குக் சுரப்பன் பண்டம் ஆகாது. கிரந்திநோய் தீரும்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2653. அகத்தியர் சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2055_1

ஆ. ல/386

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் சூத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்: 36 + 12

3. தோற்றக் கூறுகள்

அ. 13 ஏடு: 26 பக்கம்

ஆ. நீளம் 24.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

செம்புவெள்ளை பற்பம்:-

பாரப்பா செம்பினுட வெள்ளை கேளு
பரிவான தாம்பிரத்தைக் கையில் வைத்துச்
சேரப்பா பதினாலு பலமே போட்டுச்
சேர்ந்திருக்கும் போதுள்ளே மருந்து கேளு
சாரப்பா அண்டமது பலந்தா னொன்று
சடியநவச் சாரமது ரெண்டு போடு
சீரப்பா கல்வத்தில் தூள தாக்கிச்
சேர்ந்த தோர்கார முறையே போடே (1)

ஆ. முடிவு

ஆமப்பா வீழ்ந்திடவே வயித்தியமே பாரு
அட்டதிசை மேய்க்கஉனை ஆரும்வாழ்த்து லோகம்
நாமப்பா வயித்தியத்தில் மருந்தை யெல்லாம்
நலமாகக் குறுக்கிவைத்தேன் முப்ப தாகும்
வாமப்பா யிந்தவகை மருந்தை யெல்லாம்
வையத்தில் வைத்தியன்பேர் உரைக்கநோய்க
ளோடும்
தாமப்பா யெட்டிரண்டும் இருபத் தஞ்சும்
தடையறவந் ததனாலே சத்தி யாமே (36)

அகத்தியர் சூத்திரம் முற்றும்.

5. பிற செய்திகள்

நூலுக்குமுன் வைத்திய நூற்பட்டியல் ஒன்றும், சகல ரோகமும் தீர்க்கும் இரசாயனம் என ஒன்றும் இரண்டு ஏடுகளில் சொல்லப்பட்டுள்ளன.

இந்நூலையடுத்துக் காளமேக நாராயண செந்தூரச் செய்முறை (12 பாடல்கள்) எழுதப்பட்டுள்ளன.

2654. மருத்துவச் செய்திகள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2055_2

ஆ. ல/386

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. மருத்துவச் செய்திகள்

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 22 ஏடு; 44 பக்கம்

ஆ. நீளம் 24.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி

ஊ. சுவடி ஏட்டெண் 14-இல் தொடங்குகிறது. 35ஆம் ஏட்டுக்கு மேல் இருக்க வேண்டிய ஏடுகள் இல்லை. உள்ளவை நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆவாரம்பூ உள்ளரும்பு தள்ளி இதழ்ப்பூவை எடுத்து 15 நொறுங்க இடித்துக் கொண்டு மறுபடி கல்லுரலில் போட்டு இரும்புப்பூண் போட்ட உலக்கையினாலே நாலு சாமம் இரண்டு படி தென்னங்கள் அள்ளும்படியாய் இடித்து மெழுகுபதமானதன் பிறகு அந்த அவுஷதத்தை, எடுத்துக்கொண்டு அந்தி சந்தி ஒரு கொட்டைப் பாக்களவு சாப்பிட்டு வரவும். பத்தியம்: மோரும் பழைய சாதமும்.

(இஃது இரத்த சிங்கிக்கு)

ஆ. முடிவு

விரைவகை சரக்குவகை பட்டைவகை இவையெல்லாம் தூள் பண்ணி ஒரு சட்டியில் அரைப்படி பசுவின் பால் விட்டு வேடு கட்டி வேட்டின்பேரில் தூளெல்லாம் பசுவின் நெய்விட்டுப் பிசரிப் புட்டுவைத்து இறக்கி உலர்த்தி மறுபடி தூள் பண்ணி வடிகட்டின தூளுக்கு மூன்றிலொன்று சீனிச் சர்க்கரை பசுவின் பால் விட்டு சீனிப்பா ......

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2655. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2055_3

ஆ. ல/386

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்: 148

3. தோற்றக் கூறுகள்

அ. 18 ஏடு; 36 பக்கம்

ஆ. நீளம் 24.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி

ஊ. சுவடி ஏட்டெண் 68 இல் (45_ஆம் பாடலோடு) தொடங்குகிறது. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஓரொரு நாளா யூறி கழுவியே உலர்த்திப் போடு
பாரொடு நல்ல சுத்தி பச்சையின் துருசு கேளு
வாரொரு பசுவின் நீரில் தெரிபடி நாலுக் குள்ளே
சீருடன் கழுவி வெய்யில் சிறப்புடன் உலர வையே (45)

ஆ. முடிவு

சொன்னது தொகைதான் நூறு ஐம்பதும் சூச்ச மாகும்
முன்னமே சொன்ன நூலின் முக்கிய முன்னூல் சூச்சம்
வன்னனம் பாரு லோக மாரண மாதி சூச்சம்
அன்னமே சொன்ன நூறு ஐம்பதும் அறிவீர் முற்றே (148)

5. பிறசெய்திகள்

நூலையடுத்து, ஐந்து ஏடுகளில் சில நோய்களுக்குரிய சிகிச்சைகள் எழுதப்பெற்றுள்ளன.

2656. வைத்திய தர்க்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2055_4
ஆ. ல/386

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ......
ஆ. வைத்திய தர்க்கம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 7 + 1

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு: 4 பக்கம்

ஆ. நீளம் 24.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி

ஊ. நூல் 86,87 ஆம் எண்ணிட்ட ஈரேடுகளில் உள்ளது. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பார்பூத்த பூங்குழலாள் கமல மாது
        பைந்தொடியை நாமகளைப் பணிந்து போற்றிச்
சீர்பூத்த வயித்திய நூல் விருது தர்க்கம்
        செகத்திலே பாடுதற்குச் செயலேதென்றால்
கார்பூத்த பூங்குழலாள் கவுரி . . . . . .
        கயிலாசம் வாழுகின்ற கன்னி மைந்தன்
மார்செறிந்த வள்ளியுட அன்பன் முன்னோன்
        மருவுடைய ஐங்கரனும் காப்ப தாமே

ஆ. முடிவு

பிடித்துரைக்கும் கல்தனக்குப் பேர்தான் ஏது
        பிறமூல தேவதையும் பேர்தான் ஏது
அடுத்திருந்த முலைப்பால்தான் அதுதான் ஏது
        அ . . . . . லும் பெருவிறலும் அறிந்து சொல்லும்
தடித்திருந்த கயரேது மைதான் ஏது
        தவறாமல் சாத்திரங்கள் தானோ சொல்லும்
படித்தறியும் பண்டிதரே இந்த நூலைப்
        பழுதுவராது இன்னதென்று பகர்ந்தி டீரே (7)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2657. இலவண பஞ்சாட்சரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2055_5

ஆ. ல/386

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ....

ஆ. இலவண பஞ்சாட்சரம்

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 13 ஏடு: 26 பக்கம்

ஆ. நீளம் 24.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து பிழைகள் மிகுதி

ஊ. நூல் 87ஆம் ஏட்டின் இரண்டாம் பக்கம் தொடங்குகிறது. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இலவணம் அஞ்சு பூதம் இதுவஞ்சும் பேரு மென்ன
இலவணம் சேர்த்து நாமம் இதுவுயிர் ஆகும் பூமி
இலவணம் சத்தி ருத்ரன் இனியமால் அயன் ஆ காசம்
இலவணம் இரவி சோமன் இதுவஞ்சும் உடலு மாமே (1)

ஆ. முடிவு

ஓம் அம் ஸ்ரீரியும் உம் நம் சிவயநம

(இது) மூல பஞ்சாட்சரம். செபிக்க மோக்ஷ முண்டாகும்

அம் கிச் சிவய நம

(இது) யோக பஞ்சாட்சரம். செபிக்க யோக சித்தியுண்டாம். ஆக 25 மந்திரமும் சத்தியோசாத மூலமந்திரம். இதற்கு உரு 1,00,000 செய்க.

இலவண பஞ்சாட்சரம் முற்றும்.

5. பிற செய்திகள்

இதில் 21 விருத்தங்களும் பல மூலமந்திரங்களும் சில யந்திரங்களும் உள்ளன.

2658. சத்துரு சங்காரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2055_6

ஆ. ல/386

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. சத்துரு சங்காரம்

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுள். அச்சில் ஏறத்தாழ 8 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 24.5 செமீ., அகலம் 3.5 செமீ.,

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9, 10 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி
ஊ. நூல் 101 ஆம் ஏட்டில் தொடங்குகிறது. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஓம் . அரஹர நமசிவாய ஆனந்த ரூபனாய
ஆதி கேசனாய அட்சரப்ர தட்சணாய
அதிரதம கேசனாய ஆதிபுவ னாதியாய
அமரர் அடமட திரிசூலி டமரானந்தீ
ஆனந்த பயிரவி நடன பயிரவி
காள பயிரவி காளகண்ட பயிரவி

ஆ. முடிவு

சிவசிவகை லேசனே சிவானந்த ரூபனே
நித்தனே அத்தனே நீலமயி லேசனே
சத்தனே மத்தனே சூர[illegible]ங் காரனே
அகிலபுவ னந்தொழும் ஆதியே சோதியே
ஆறு முகப்பெரு மானே சரணம்.

ராமசெயம்

5. பிற செய்திகள்

காப்பேட்டில் ஆறு யந்திரங்கள் வரையப்பட்டு உள்ளன. ஆனால் அவ்வேடு முறிந்துள்ளது.

2659. சௌந்தரிய லகரி

1. நூலகக் குறிப்புகள்

அ. 2056
ஆ. ப/179

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. கவிராச பண்டிதர்
ஆ. சௌந்தரிய லகரி
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள்: 102

3. தோற்றக் கூறுகள்
அ. 52 ஏடு; 104 பக்கம்
ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி
ஊ. பல ஏடுகள் சிதைந்துள்ளன. சிதைவுற்ற நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
மொழிந்தமறை நூலியற்றும் முகபடா
மணிந்துமுது ஞான தானம்
பொழிந்துதனத் தில்மணியென் றிருசுடரும்
புனைகளிற்றைப் போற்றல் செய்வாம்
வழிந்துபெரும் புனல்பரந்து வடவரையிற்று
உலகேழு மேழு மொக்க
அழிந்திடினு மழியாத அபிராமி
பாடல்வள மளிக்க வென்றே.

ஆ. முடிவு
சேமநிதி யேயமுர்தே தேனேநன் குணக்கடலே
யாமளையே யன்பர்மனத் திருந்துமுரைக் கடங்கர்தே
கோமகளே யம்மேநின் கோகனகத் தாள்வழுத்தும்
மாமறைபோ லென்பாடல் வண்டமிழுங் கொள்வாயால் (102)

5. பிற செய்திகள்

ஒவ்வொரு பாடலுக்கும் பிரயோக விதியும் யந்திரமும் தரப்பட்டுள்ளன.

2660. பிரமமுனி வைத்திய சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2057

ஆ. ல/387

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. பிரமமுனி

ஆ. பிரமமுனி வைத்திய சூத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்: 385

3. தோற்றக் கூறுகள்

அ. 65 ஏடு; 130 பக்கம்

ஆ. நீளம் 34.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீரரு ளான சோதி சின்மய ஞான மூர்த்தி
ஆரணிக் கொன்றை சூடும் ஆறணிந் தானைப் போற்றி
வாரணி ரிஷிகள் பாதம் வணங்கியே வயித்ய நூலைக்
காரண மாகப் பாடக் கணபதி காப்புத் தானே. (1)

ஆ. முடிவு

வாரான கருவெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
வாதமொடு வயித்தியமும் வகையாய்ச் சொன்னேன்
கூரான செந்தூரம் பற்பஞ் செயநீர்
குருமுடிக்கும் வகையெல்லாம் குறியாச் சொன்னேன்
வாரான அஞ்சனமும் திலதம் சொன்னேன்
வசியமொடு அழைப்புவித்தை மாரணமுஞ் சொன்னேன்
ஆரான வாசிமுதல் ஞான யோகம்
அடங்கிநின்ற கருக்கிடைசூத் திரந்தான் முற்றே. (385)

இ. பிற்குறிப்பு

இராமலிங்கம் கையெழுத்து

2661. இராமதேவர் பட்சணி

1. நூலகக் குறிப்புகள்

அ. 2058_1
ஆ. ல/388

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. இராமதேவர்
ஆ. இராமதேவர் பட்சணி
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 108

3. தோற்றக் கூறுகள்

அ. 38 ஏடு; 76 பக்கம்
ஆ. நீளம் 22 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியந்தம் நடுவிருந்த சோதி பாதம்
அகண்டபரி பூரணமே யறிவே காப்பு
நீதிகலை வாணிகுரு கந்தன் காப்பு
நிரஞ்சனமாம் நிற்குணமா மதீதங் காப்பு
பாதியாந் துளிர்கனலுங் காவோன் றான
பட்சணியை நிச்சயமாய்ப் பரங்கள் காப்பு
வீதியாம் பட்சணியை விளங்குஞ் சித்தி
விக்கினேசப் பிள்ளையார் காப்புத் தானே (1)

ஆ. முடிவு

சொல்லடா யினமறிந்து வாசி யோகஞ்
சூட்டடா சகலகலைச் சேதி யெல்லாங்
கல்லடா காயச்சித்தி யோக மார்க்கங்
கருவென்ற ஓங்கார மாதி யாகும்
அல்லடா பசுக்களுக்கு நூலை யீந்தால்
அந்த்ரஇடி விழுந்துதலை தெறிக்கும் பாரு
எல்லடா நவகோடி சித்து மாடும்
வேதாந்த பட்சணிய தீத முற்றே. (108)

இராமதேவர் பட்சணி முற்றும்.

5. பிற செய்திகள்

29, 30, 31 ஆகிய ஏடுகள் இருபடிகள் எழுதப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன.

இதே பெயரில் இந்நூலகத்தில் வேறொரு சுவடி (எண். 530) உள்ளது. அது 51 பாடல்களை உடையது. அது முற்றிலும் வேறு நூலாகத் தோன்றுகிறது.

2662. கருக்கிடை சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2058_2

ஆ. ல/388

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. கருக்கிடை சூத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்: 159

3. தோற்றக் கூறுகள்

அ. 55 ஏடு; 110 பக்கம்

ஆ. நீளம் 22 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இருபக்கமும் எழுதப்பட ்ள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. முதல் 29 ஏடுகள் காணப் படவில்லை. நூல் 365-ஆம் பாடலில் தொடங்கி முடிவு வரை உள்ளது. உள்ளவை நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கூரான சிமிழ்வித்தை சொல்லக் கேளு
குறிப்பான சுக்கிர வார நாளில்
பேரான மதியத்தில் கழுவில் சென்று
புகழான பலிபூசை நடத்தி யேதான்
ஊரான யிருபுறமுந் தரித்துப் போட்டு
உடலுள்ளே பாய்ந்திருந்த கட்டை வாங்கி
வேரான கெட்டைபக்கம் அரவு நாளில்
வெகுளாமல் எட்டுவகைச் சிமிழ்தான் செய்யே (365)

ஆ. முடிவு
வையப்பா சகலகலைச் செய்தி யெல்லாம்
அழகாக அடக்கிவெகு தெளிவாய்ச் சொன்னேன்
அய்யமென்று நினையாதே பிழைபே சாதே
ஆத்தாளை அனுதினமும் மறவா தேநீ
செய்யாதே தீவினைதான் கொடிது பாவம்
செந்துவெல்லாம் ஈசனென்று தெளிந்து காணு
மெய்யான குருபதத்தைப் பணிந்து போற்றி
விளம்பினேன் கருக்கிடைச்சூத் திரந்தான்
முற்றே. (524)

2663. தத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2059_1
ஆ. ட/257

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. பெயர் தெரியாத ஒரு தத்துவ நூல்
இ. தத்துவம்
ஈ. செய்யுள்: 43

3. தோற்றக் கூறுகள்
அ. 18 ஏடு; 36 பக்கம்
ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான பெரிய கையெழுத்து
ஊ. முதல் ஏடு இல்லை. உள்ளவை நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆத்தென்று கொங்கணர்க்கு யானுஞ் சொன்னோம்
அப்படியே கண்டருக்குக் கொங்கணர்தான் சொன்னார்
ஏத்தென்றும் பூரணத்தின் விசாலம் போல
இயல்பாகச் சித்தரெல்லாம் இப்படியே செய்வார்
மாத்தென்றுஞ் சம்போகம் என்முறைதா னப்பா
வாகான மேருவென நாமஞ் சொல்லுங்
காத்தொன்றும் வாலைதனை நித்தம் நித்தம்
கருணைமற வாமலே பூசை செய்யே. (4)

ஆ. முடிவு

பெருமையுடன் மனந்தானே லயிச்சு தென்று
பெருகியுடன் ஒன்றாகிப் புத்தியி லாடி
உருமையென்ற குண்டலியாம் பேஜகத் துள்ளே
ஓட்டினார் பற்பம்பேர் மூலத் துள்ளே
அருமையுட முன்னான்கு கலைகள் ரெண்டும்
அப்போது சுழியென்ற மூலத் தேறும்
பருமையுறுங் காயத்தில் கதியும் நேராய்ப்
பாயு(ம)டா சற்குருவின் ஞானந் தானே.

சற்குரு பாதமே துணை

5. பிற செய்திகள்

இறுதியில் செம்பு சுத்தி செய்யும் முறை எழுதப் பட்டுள்ளது.

2664. சடாதார தேவிபூசை

1. நூலகக் குறிப்புகள்

அ. 2059_2
ஆ. டி/257

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ......
ஆ. சடாதார தேவி பூசை
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்: 19

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு: 12 பக்கம்
ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 3 செ.மீ
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான பெரிய கையெழுத்து. பிழைகள் மிகுதி
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

செப்பினார் கும்பமுனி தீட்சை பாரு
தெளிவாகு மச்சமுனி ஞானம் பாரு
ஒப்பினேன் திருமூலர் ஞானம் பாரு
உண்மையுள்ள சட்டைமுனி ஞானம் பாரு
நம்பினேன் நால்வருட ஞானம் பார்த்தால்
நெகிழாது அறிவங்கே பரத்தில் மூளுந்
தப்பிதிலே யேதுமில்லை சடாதா ரத்தின்
சக்கரத்தின் மவுனசத்தி பூசை கேளே (1)

ஆ. முடிவு

முன்போ லேப்பம் பரிமளிக்கும்
முன்கால் குரங்கு மிகுந்துநேரம்
இன்ப மான தொண்டைகம்மும்
இதுவே சுரமுந் தீபரமாம்

அன்று மில்லா விக்கல்வரும்
அக்னி மந்தம் பசியில்லை
தன்பேர் சீர்ண சுரமென்று
தன்மந் திரியுந் தெரிந்துரைத்தான். (19)

இ. பிற்குறிப்பு
சு. ச. ரூ முத்துசாமி புலவன்

5. பிற செய்திகள்
இதனையடுத்து மகளிர் பூப்பெய்யும் நாட்பலன் மூன்று ஏடுகள்; இரசவாதச் செய்திகள் மூன்று ஏடுகள்; மருத்துவச் செய்திகள் பத்து ஏடுகள் உள்ளன.

2665. பிரமமுனி வைத்தியம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2060
ஆ. ல/389

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. பிரமமுனி
ஆ. பிரமமுனி வைத்தியம் 700
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 711

3. தோற்றக் கூறுகள்
அ. 123 ஏடு; 246 பக்கம்
ஆ. நீளம் 34.5 செ.மீ., அகலம் 4 செ.மீ.,
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9, 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருவளரும் மெஞ்ஞான சோதி பாதய
செப்பரிய கணேசனொடு கந்தன் காப்பு
அருவுருவா யாதியந்தம் வெளியுந் தாண்டி
அகன்றுநின்ற சின்மயத்தின் பாதம் போற்றிப்
பரிவுடைய பூரணத்தின் சூட்சா சூட்சம்
பதிவிருந்த மனோன்மணித்தாய் பாதம் போற்றிக்
குருவருளாய் நாதாக்கள் பாதம் போற்றிக்
கூறுகிறேன் வயித்தியசூத் திரந்தான் பாரே. (1)

ஆ. முடிவு

ஆமென்ற குப்பிமுறை யெருப்பு திட்டம்
அஞ்சுசுன்னம் அஞ்சுநீர் உருக்கினமுங் குடோரி
தேமென்ற குகைதிட்டங் குருமுடிக்குங் காலஞ்
செந்தூரஞ் சத்திறங்குங் காலஞ் சொன்னேன்
நாமென்ற சயநீர்தான் இறங்குங் காலம்
ஊற்றுமுலற புடத்திட்டம் இவையெல் லாந்தான்
ஆமென்ற வகைவிபர மாகச் சொன்னேன்
அறியாத பிள்ளைக்கும் அறிய வேண்டி
பாமென்ற இந்நூலைப் பாடினேன்யான்
பக்திமுத்தி எழுநூற்றிச் சிலுவான முற்றே (711)

முற்றும்

5. பிற செய்திகள்

இதே நூல் பிரமமுனி எண்ணூறு என்ற பெயரில் அச்சாகியுள்ளது. இதுவே நிறையப் பாடவேறுபாடுகளுடன் போகர் வைத்தியம் 700 எனவும் வழங்கப்படுகிறது.

2666. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2061
ஆ. ல/390

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 841

3. தோற்றக் கூறுகள்

அ. 34 ஏடு; 68 பக்கம்
ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான அழகிய கையெழுத்து
ஊ. 1-42, 73-81, 81க்கு மேல் இருக்க வேண்டிய ஏடுகள் காணப்படவில்லை. உள்ளவை நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இரும்பு காந்தம் அப்பிரகம் இசை(யு)ம் நிமிளை
/செம்புடனே
இரும்புங் கெவுரி சலாசத்து யடங்காச் சூதங் கெந்திரவி
கரும்பின் மொழியே பூநாகம் கலந்த பூரங் கருநாகந்
திருப்புந் திசைக்குள் சார்முதலச் சேர்மித் துருவாங்
கிளஞ்சியென்னே. (435)

ஆ. முடிவு

ஆட்டையில் சூதந் தானும் அப்பனே வெள்ளை யாகுங்
காட்டையில் சூதந் தன்னைக் கவளித்துக் குகையில்
வைத்து
நீட்டிய காரங் குத்தி நிலைபெற யுருக்க ஆடுஞ்
சூட்டிய வேதை யோடுஞ் சூத்தறை யறிந்து பாரே.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2667. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 2062
ஆ. வ/391

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 52 ஏடு; 104 பக்கம்
ஆ. நீளம் 23.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. சுமாரான நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பெரிய சேர்வை பூரம் விராகனெடை 1, இலிங்கம் வி 1, வெள்ளைக் குங்கிலியம் துத்தம் வி 1, துருசு வி 1, இரசம் வி1, சூடன் வி 1, கந்தகம் வி 1 இவையெல்லாம் கல்வத்தில் போட்டுப் பசுவெண்ணெய் போட்டு அரைத்துத் துணியில் தடவிப் புண்ணில் போடவும். ஆறாத புண்ணும் ஆறும். கை கண்டது.

ஆ. முடிவு

சலமஞ்சரி:-

கந்தகம், காந்தம், அயப்பொடி, வெங்காரம், சீனாக்காரம், சங்குப்பொடி , சலாசத்து, சாத்திர பேதி, கல்நார் இவை வகைக்கு ஒரு விராகனெடை, வெடியுப்பு பலம் 1 இவைகளைக் கல்வத்திற் போட்டுப் பொடிசெய்து துளையில் வைத்து ஊதி உருகின பிறகு எடுத்துக் கல்வத்தில் போட்டுப் பொடிசெய்து வைத்துக்கொண்டு பணவிடை வீதம் இளநீர், பழச்சாறு, வெந்நீர், சரிப்பா கியாழத்தில் கொடுக்கக் கவுசி, நீராம்பல், பாண்டு, வீக்கம் தீரும்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2668. சௌமிய சாகரம் 1000

1. நூலகக் குறிப்புகள்

அ. 2063

ஆ. ம/243

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. இராமதேவர்

ஆ. சௌமிய சாகரம் 1000

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்: 898

3. தோற்றக் கூறுகள்

அ. 152 ஏடு; 304 பக்கம்

ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான சிறிய கையெழுத்து

ஊ. சுமாரான நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அண்டமெனுங் கேசரியார் பாதங் காப்பு
அருள்பெருகும் பூரணத்தின் திருவே காப்பு
குண்டமெனுங் குண்டலியார் குரியே காப்பு
குருவான பராபரத்தின் குணமே காப்பு
மண்டலங்கள் மூன்றுமொன்றாய் நிறைந்து நின்ற
மகத்தான ரவிமதியின் சுடரே காப்பு
பிண்டமெனும் பொருளான அண்ட பிண்டம்
பேரண்டம் நிறைந்தகண பதிகாப் பாமே (1)

ஆ. முடிவு

ஆச்சப்பா வாயுவுட வகுப்புச் சொன்னேன்
அடங்கிநின்ற ஆகாச வகுப்புக் கேளு
பேச்சப்பா ஒன்றுமில்லை நாகந் தானும்
பேரண்ட மானதொரு ஆகா சந்தான்
நீச்சப்பா சூதமுடன் வழலை பூரம்
நிலையான துத்தமுடன் அயக்காந் தந்தான்

காச்சப்பா பாரசிதம் பாடாணம் விந்து
கல்லான சுக்காங்கல் கல்லு மாமே. (898)

ஆமப்பா ஆகாசந் தன்னைப் பார்க்க
அடங்கிநின்ற சரக்கதுவும் பத்தே பத்து
நாமப்பா கண்டபடி சொன்னேன்.
குருபாதங் கதி. சிவமயம்.

5. பிற செய்திகள்

இச்சுவடியில் பல சித்தர்களின் அட்டகரும முறைகளும் இரசவாதச் செய்திகளும் உள்ளன. ஈற்றுப்பாடல் ஒரு விருத்தப்பகுதியாக மட்டும் உள்ளது. ஆனால் சிவமயம் போட்டு முடிக்கப்பட்டு விட்டது.

2669. கிரியாக் கிரமம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2064
ஆ. ற/244

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. கிரியாக் கிரமம்
இ. பல்வகை நூல்கள்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 131 ஏடு; 262 பக்கம்
ஆ. நீளம் 43.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து. பிழைகள் மிகுதி

ஊ. 61, 62, 64, 75, 95-103, 105-115, 117-154, 184-194, 196-199, 201, 204-211, 214, 215, 218-223, 225-240 ஆகிய ஏடுகளும் 242க்கு மேல் இருக்க வேண்டியனவும் காணப்படவில்லை. பல ஏடுகள் முறிந்துள்ளன. சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பிரபஞ்சத்துக்கெல்லாம் அதிகமா யிருப்பாராய்; சாந்தனாய் இருப்பாராய்; அனாதியாய் இருப்பாராய்; அவையவங்களோடேயும் இருப்பாராய்; . . . . மாயும் இருப்பாராய்; ஞான சக்தி கிரியாசக்தி சுரூபமாயும் இருப்பாராய் இருக்கிற சிவனைக் குறித்து நமஸ்காரம் பண்ணி பாரம்பரியமாயிரு. நமஸ்காரம் பண்ணிக் குருவங் கிஷத்தில் கிரமமாகப் பிறந்திருக்கிற பேர்களையும் நமஸ் காரம் பண்ணிக் கிரியாக்கிரமமென்கின்ற . . . . கிரிகைகள் முதலாக உள்ள கிரிகைகளை நன்றாகச் செய்கிறேன்.

ஆ. முடிவு

பின்பு ஆதார சத்தி முதலாகச் சத்தியாந்தமான ஆசன மந்திரங்களைப் பீடத்திலே நிறுத்தி, லிங்கத்திலே புறத்தில் பிரமங்களையும் சிரசுமுகம் இருதயம் குய்யம் பாதமென்கிற அங்கங்களிலே தண்டபங்கிநியாசமாக நிசித்து ஊர்த்துவம், பூர்வம், தட்சிணம், உத்திரம்-பச்சிமம் என்கிற முகங்களிலே . . . . . நியாசமாக நிசித்துப் பின்பு கலா . . . நியாசம் நிசிக்கும்படி. ஓம் ஈசான ஸ்சர்வவித்யா.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

5. பிற செய்திகள்

சைவ சமயச் சடங்குகளின் செய்முறை மந்திரங்களோடு உள்ளது.

2670. மச்சமுனி தீட்சை விதி

1. நூலகக் குறிப்புகள்
அ. 2065
ஆ. டி258

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. மச்சமுனி
ஆ. மச்சமுனி தீட்சை விதி
இ. தத்துவம்
ஈ. செய்யுள்: 101

3. தோற்றக் கூறுகள்
அ. 12 ஏடு, 23 பக்கம்
ஆ. நீளம் 30.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
மூலத் துதித்தே முக்கோணச் சக்கரத்துள்
காலச் சிகாரக் கடவுளே - வாலைக்
கணபதியே நந்தியுறுங் குண்டலிக்குள் ளாசானே
கணபதியே தீட்சைவிதி காப்பு. (1)

ஆ. முடிவு
எரியுமொளி கண்டால் ஏகவெளி யாச்சு
விரியாது மன்புப் பூரணம் பேசிடும்

தரியாது நோய்கள் சகல விகற்பமுந்
துரியமாந் தீட்சை சொல்லவொரு நூறே (101)

மச்சமுனியார் தீட்சை நூறும் எழுதி முகிந்தது.
சம்பூர்ணம்.

2671. சண்ட மாருதக் குழம்பு

1. நூலகக் குறிப்புகள்
அ. 2066
ஆ. ல/392

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. சண்ட மாருதக் குழம்பு
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 66

3. தோற்றக் கூறுகள்
அ. 16 ஏடு; 32 பக்கம்
ஆ. நீளம்30 செமீ, அகலம் 3 செமீ,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8_10 வரிகள்
உ. சற்று வேகமாக எழுதப்பட்ட கையெழுத்து. பிழைகள் மிகுதி
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
அண்டாண்டம் வானத்த ளாவுமலை சூழும் _ வெளி
அற்புதபுஷ் கரணிபதன் தீரத்தில் வாழும் _ கதிர்

மண்டலமண் டரண்டங்க ளுலாவிய வாசி - மதி
மண்டலஞ் ...... ஞானோப தேசி - சுழி
நின்றிலங்கும் தென்பொதிகை வளர்தேச நாயன் - செகம்
நீடுலகம் புகழ்சித்தர் பூசிக்கும் நேயன் - அருள்
கண்டுபிறக் காமல்பத பங்கயத்தை நாடி - பிர
சண்டமா ருதக்குழம்பை அருளுவேன் தேடி. (1)

ஆ. முடிவு
பட்சமிந்தப் படியவிழ்தம் அதிகாலை
ஒருவேளை ....
துச்சவினை அகன்றஷ்ட குன்மம்வலி
மூலமெட்டும் தொலைந்து போகும்
கஷ்டமென்ற கருமமெல்லாம் .... தாலுங்
...... கருதி னோங்காண்
இஷ்டமெனும் பத்தியந்தான் இயம்பிடுவீர்
அன்னமிது வேளை தானே. (66)

5. பிற செய்திகள்

நூலின் இறுதியில் இக் குழம்பில் சேர்க்கப்படும் சரக்குகளின் பட்டியல் இடம் பெற்றுள்ளது.

2672. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2067
ஆ. மூ/65

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. மாந்திரீகம்
இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 26 ஏடு; 52 பக்கம்
ஆ. நீளம் 11.5 செமீ., அகலம் 3 செமீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அய்யுங் கிலியுஞ் சவ்வும் சவ்வும் கிலியும் வவ்வும் அம்மே அம்மே ஆயி ஆயி ஈஸ்வரியே! நான் இரவும் பகலும் உருக உருக திருமுகம் என்முக மாகச் சிவா.

ஆ. முடிவு

மயான ருத்திரத் தியானம்:-

ஓம் கிரியும் அரியும் மயான ருத்திராயா என சத்துரு வாதிகள் சங்கரி வா, சிவ பூசை (செய்ய)வும்.

5. பிற செய்திகள்

இதில் பல யந்திரங்கள் இடம் பெற்றுள்ளன.

2673. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்

அ. 2068
ஆ. ல/393

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில். ஏறத்தாழ 5 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு; 40 பக்கம்
ஆ. நீளம் 17.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4-7 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
ஆறுவகைத் திராவகம்: வெடியுப்பு பலம் 4, சீனாக்காரம் பலம் 4, சோற்றுப்பு பலம் 4, இந்துப்பு பலம் 4, வளையலுப்பு பலம் 4, நவச்சாரம் பலம் 4, மேகத்திராவகம் சயம், ஈளை இவற்றுக்கு ஆறுவகை திராவகம்.

ஆ. முடிவு
தேரிலிப் பற்பம் திலதமிடில் வேதாளம்
கூரிலைவேல் கொண்டுமுன்னம் கூத்தாடும் - சீரியதோர்
பாதாதி கேச மதில்பற்பம் மந்தரிக்கப்
பூதமேதா மோவறியேன் யான்.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2674. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 2069

ஆ. ல/394

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 27 ஏடு; 54 பக்கம்

ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நீர்ச்செறிப்பு: சுண்ணாம்பு நீருக்குள் தண்ணீரும் நல்லெண்ணெயும் கலந்து குடிக்க நீர்ச்செறிப்பு தீரும்.

மூன்றுபடி தண்ணீர் சட்டியில் விட்டு நல்லெண்ணெயும் சுண்ணாம்பையும் கடைந்து வெண்ணெய் எடுத்துப் பருவில் போட மாறும்.

ஆ. முடிவு

கெர்ப்பத்துக்கு எண்ணெய்: பாகலிலைச் சாறு, கொம்மட்டிச் சாறு, வெற்றிலைச் சாறு, எருக்கிலைச்

சாறு, வீழிச் சாறு, வகைக்கு சாறு நாழி. வேப்பெண்ணெய் ஆமணக்கெண்ணெய் இவ்வளவு, மெழுகுப் பதத்தில் வடித்து இறக்கி ஒரு காசெடை கொடுத்து வரவும்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2675. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 2070

ஆ. ல/395

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 76 ஏடு; 152 பக்கம்

ஆ. நீளம் 23 செமீ., அகலம் 2.5 செமீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. மிகக் கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி.

ஊ. 1-147, 164-166 ஆகிய ஏடுகளும் 227க்கு மேல் இருக்கவேண்டியனவும் காணப்படவில்லை. மிகச் சிதைவுற்ற நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தந்தநோய் மருந்து:-

போமென்ற தந்தநோய் முப்பத்தி ரெண்டும்
        போகவே உப்பையொரு பலந்தான் வாங்கி
வேமென்ற எருக்கம்பால் மேனிச் சாறும்
        விட்டரைத்து வில்லைதட்டிக் காய வைத்து
ஆமென்ற சூட்டிலிட்டு மேலோடு மூடி
        அப்பனே முழுப்புடத்தில் இட்டு வாங்கு
ஆமென்ற பொடிசெய்து வேறே வைத்து
        அயப்பொடியும் துருசுதுத்தம் காசுக் கட்டி (159)

ஆ. முடிவு

ரசபற்பம்: ரசத்தைக் கல்வத்திலே விட்டுச் செருதுளசிச் சாறு விட்டுச் சாமம் இரண்டு அரைத்து, வில்லை தட்டிக் காயவைத்து, ஓட்டில் வைத்து மூடி. இரண்டு சீலைமண் செய்து ஒரு வெராட்டியில் புடம் போடவும். பற்பமாகும்.

அநுபானம் அறிந்து சகல ரோகத்துக்கும் பண(வெ)டை வைச்சு வெல்லத்தில் கொடுக்கவும். கிரந்தி, அரையாப்பு, மேகம், சன்னி, வாதம் தீரும். வாய் வேகாது. புளி தள்ளவும்.

2676. கருவூரார் பலதிரட்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 2071
ஆ. ற/245

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கருவூரார்
ஆ. கருவூரார் பலதிரட்டு
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்: 253

3. தோற்றக் கூறுகள்.

அ. 98 ஏடு; 196 பக்கம்
ஆ. நீளம் 28.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. முதல் இரண்டு ஏடுகள் இல்லை. 3_10 ஏடுகள் சிதைந்துள்ளன. சுமாரான நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தானென்ற சூதமோர் கழஞ்சி ரண்டு
        தப்பாமல் அந்தெடைக்குக் கெந்தி கூட்டித்
தானென்ற முருக்கஞ்சார் பீங்கானி விட்டுக்
        கருத்துடனே மத்திப்பாய் தினம்பத் தப்பா
ஊனென்ற மெழுகாதிம் செம்பை யொடைத்து
        நன்றாய்நொ றுக்கியதில் பழச்சாறு விட்டு
வானென்று பிசரியதைக் குகையில் வைத்து
        வளம்பெறவே யின்னமொரு வகைதான் கேளே. (12)

ஆ. முடிவு

பாடினேன் மந்திரமுந் தந்திரமும் கூடப்
        பரிபாசை நாமமெல்லாம் பருவ மாகி
ஊடினேன் அதிதிராசி நாளும் சொன்னேன்
        உற்பனமாம் வேளையுடன் அதுவுஞ் சொன்னேன்

நாடினேன் இதுவெல்லாம் சத்தி மார்க்கம்
தவன்பெரிய சிவன்மார்க்க விதிகை சொல்வோம்
தேடினேன் அண்டபகி ரண்டத் தப்பால்
சிதம்பர கர்மத்துக் கெதிர்கா ணேனே. (253)

கருவூரார் பலதிரட்டு முற்றும்.

இ. பிற்குறிப்பு
இது இராமசாமி பக்தர் ஏடு.

2677. திருமூலர் 200

1. நூலகக் குறிப்புகள்
அ. 2072
ஆ. ந/246

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. திருமூலர்
ஆ. திருமூலர் 200
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்: 201

3. தோற்றக் கூறுகள்
அ. 23 ஏடு; 46 பக்கம்
ஆ. நீளம் 19 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
எண்ணா யிரத்தி லிருநூறு மந்திரம்
அண்ணாவி சொல்ல அடியேன் அறிந்தேன்
செண்ணான் சிவப்புச சேர்பச்சை நீலம்
வண்ணான் அறிவான் வகாரத் திறையே. (1)

(மூன்றாமடியில் இரண்டு மூன்று சீர்களுக்கிடையே தளை தட்டுகிறது.)

ஆ. முடிவு
குருவான தந்தையே நந்தீச ரப்பா
திருமூலர் நானே செய்தொழில் சொன்னேன்
கருவூரான் கொங்கணன் பேர னிவர்களைத்
தருபோக னெனசெயதமமுளடினேன் (201)

திருமூலர் பாடல் முற்றிற்று.
(முதலடியைத் தவிர மற்றவை தெளிவாக இல்லை)

2678. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்
அ. 2073
ஆ. ல/396

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 132 ஏடு; 264 பக்கம்
ஆ. நீளம் 22.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான பலவகைக் கையெழுத்து
ஊ. மிகச்சிதைவுற்ற நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
மதன காமேசுர உருண்டை:-
வங்கண வேளான் மதனகா மேசுரத்தை
இங்கிதமாய் சொல்லக்கேள் இந்நூலை - பங்கமறச்
சொல்லக்கேள் மின்னரசே சொகுசாக இம்மருந்தை
அல்லல் தவிர்க்கும் அதிமதுரம் - வெல்லரிய
செங்கழுநீர் கோட்டம் சிறுதேக்கு சுண்டைவிரை
பங்கமில்லாச் சாதிக்காய்ப் பத்திரியும் - உண்கநல்ல

ஆ. முடிவு
கருதுநா னாழி நீரைக் காய்ச்சியே பாதி யாக்கி
ஒருபிடி பழைய சம்பா அரிசியை அதிலே போட்டுப்
பெருகவே பாக மான பின்னதைப் புசிப்பீ ராகில்
அதிதாகம் மூர்ச்சை தாபம் அமர்ந்திடும் சுரமும் போமே.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2679. தத்துவக் கட்டளை

1. நூலகக் குறிப்புகள்
அ. 2074
ஆ. ட/259

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. தத்துவக் கட்டளை

இ. தத்துவம்

ஈ. உரைநடை, அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 37 ஏடு; 74 பக்கம்

ஆ. நீளம் 25 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து; பிழைகள் மிகுதி

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கிரேதா, திரேதா, துவாபர, கலியுகங்களை வென்ற குருசுவாமி அவருடைய ஸ்ரீபாத கமலங்களிலே ஞானம் பத்தி வைராக்கியமென்ற புஷ்பங்களினாலே யர்ச்சித்து நமஸ்காரம் செய்து பெரியோர்முன் சிறியோன் புன்மையாக உரைக்குஞ் சொல்லை உண்மையாகக் கொண்டு பிரசாதித்தருள வேணும். பிரசாதம் பெற்று அடியேனும் முறையாக நின்றதேதென்னில், உரையாவது ஞான சீஷன் கேட்கும்படி அறிகவென்றது.

ஆ. முடிவு:

காயாபுரி என்னும் பட்டணம் முழுதும் வெந்து, ஞானக் கழனியாக வெட்டி, ஞான அக்கினியினாலே சுட்டு, பள்ளமுள்ளதெல்லாம் நிரவி, தொண்ணூற்றாறு அங்குலங் கொண்ட நிலத்தில் கரபூஷணமென்னும் பயலாள் அசவையென்னும் எருது பூட்டி, குருவென்னும் கலப்பை கொண்டுழுது, சமாதானம் செய்து, மோக

மென்னும் எருவைப்போட்டு, முளையில்லா வித்தைத் தெளித்து, அறிவென்னும் வாய்க்கால் கட்டி, சமாதான மென்னும் மதகு திறந்து, சாந்தமென்னும் நீரைப் பாய்ச்சி, மெஞ்ஞானமென்னும் தானியம் விளைந்து, இந்தத் தானியத்துக்கு வன்னம் வரும் ஒளியுமாய் மின்மினிப் பிரகாசம் போன்றிருக்கும் இனிச் சாந்தமென்னும் ரூபம் சரூபத்தை -

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2680. குருநாடி சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2075-1
ஆ. ல/397

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. குருநாடி சாத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 19

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. மிகவும் கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்பெறு முனிவர் வேதந் தெளிந்துபின் னுலகத் தோர்கள்
பேர்பெறு கருவி லுற்ற பிணியது பலது ணர்ந்து
ணர்பல நாடிக் கெல்லாம் உயர்பெரு நாடி மூன்றில்
சேர்குரு நாடி நேர்மை செயலுடன் கூற லுற்றார்.

ஆ. முடிவு

சன்னியிருந் தெழுந்தவகை விபர மென்னில்
சாரமுடன் சிங்குவைதான் மூலஞ் சேரில்
வன்னியொடு தண்ணீரும் வாய்வுங் கூடி
வழுவாத சிங்குவையோ ... .

(இது 20வது பாடல். இதற்குமேல் ஏடுகள் இல்லை)

இ. முற்குறிப்பு

சாமிப்பண்டிதருடைய குருநாடி சாஸ்திர ஏடு. யாராவது இந்த ஏட்டை எடுத்தால் தயவுசெய்து தந்திட வேண்டியது.

2681. குருநாடி சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2075_2
ஆ. ல/397

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. குருநாடி சாத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 101

3. தோற்றக் கூறுகள்

அ. 28 ஏடு; 56 பக்கம்
ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
காண்க: தொடர் எண் 2075_1

ஆ. முடிவு
செய்தியா வய்ய நாடி சிக்கென நிற்கு மாகில்
உய்வதோ இல்லை என்ப உற்றறி சுரமே நச்சி
கையுளே துடிக்கும் நாடி கமலையை யனைய மாதே
மெய்யுறு மூளை வெற்பு மேவுகில் குணத்தைக் கேளாய்.
(101)

குருபாதமே கெதி.

5. பிற செய்திகள்

இச்சுவடியின் முதல் ஏடு அழிந்து விட்டபிறகு வேறொன்று எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

2682. சட்டைமுனி நிகண்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 2076
ஆ. வ/ 398

2. உள்வீடு: நூல் விவரம்

அ. சட்டைமுனி
ஆ. சட்டைமுனி நிகண்டு
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 1259

3. தோற்றக் கூறுகள்

அ. 141 ஏடு; 282 பக்கம்
ஆ. நீளம் 23 செமீ, அகலம் 25 செமீ,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. சுமாரான நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியந்த மில்லாத பூரணத்தை நோக்கி
அடுத்துநின்ற உன்மனைத்தாய் பதத்தைப் போற்றிப்
பாதியந்த மாகநின்ற உமையாள் சொல்லப்
பாங்கான சின்மயத்தின் கருணை யாலே
ஓதியந்த வாதமென்ற நூலுக் கெல்லாம்
உயரவைத்த நாகமணிக் கிரீடம் போலே
சாதியந்த குணத்தோடு நிகண்டு சொல்லச்
சச்சிதா னந்தவெளி காப்புத் தானே. (1)

ஆ. முடிவு

நாட்டினேன் செயவீரம் வராக வித்தை
நலமான உப்பினுட உறுதி சொன்னேன்
பூட்டினேன் வாதத்தில் பூதஞ் சொன்னேன்
புகழான இருபத்து அஞ்சு அங்கம்
ஆட்டினேன் பலநூலில் இல்லை இலலை
ஆச்சர்யம் நிகண்டினுட தொகையைக் கேளு

நீட்டினேன் ஆயிரத்து இருநூற் றின்மேல்
நேரான நிகண்டினுட கடைதான் முற்றே. (1259)

சட்டைமுனியார் நிகண்டு முற்றும்.

2683. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2077
ஆ. மூ/66

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. மாந்திரீகம்
இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை: அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு; 38 பக்கம்
ஆ. நீளம் 17 செமீ., அகலம் 2 செமீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவகை வரிகள்
உ. தெளிவான சிறிய கையெழுத்து
ஊ. சுமாரான நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உன்மத்தம் கொள்ள: ஓம் நமோ பகவதே ...ட்டாமயே தாராய, நமோ ருத்திராய, விலிவிலிவியாக்கிர சர்ப் பரட்சணாய, குலகுரு வசண்ட பிரசண்ட கிலிகிலி சுவாகா. ஆக்கிரீசனும்.

ஆ. முடிவு
பெண்வசியம்: தன் பெண்டாட்டி வேண்டா திருந்தால் அவளுடைய கயவளி நீறும், செருப்படி சாறும் பதத்தில் காய்ச்சித் தண்ணீர், சோறு, பால்களிலே ஒரு காசெடைவிட்டுக் கொடுக்க வசமாவாள். இது நல்ல கை கண்டது.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2684. தீட்சை நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2078_1
ஆ. ற/247

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. பெயர்தெரியாத ஒரு தீட்சை நூல்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்: 19

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்
ஆ. நீளம் 24.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4, 5, 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை?

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
விட்டகுறை வந்தவர்கள் மேன்மை தன்னை
விள்ளவென்று மெல்லடியில் வீழ்ந்தி டாயே

சட்டமாய்ச் சொல்லக்கேள் குருவின் பத்தி
சத்தியமே நித்தஞ் சாந்தஞ் சீலந்
தட்டமிடும் பொய்யகற்றி நிந்தை யற்று
தன்னுயிர்போல் மன்னுயிரைத் தானி னைத்தல்
விட்டவிடந் தொட்டவிட மெட்டிக் கொள்வான்
விட்டகுறை வந்தவன்றன் விதமி தாமே. (1)

ஆ. முடிவு
சாத்திரங்கள் பார்க்கவென்றால் சாகரத்துக் கதிகம்
சங்கையது தெளியவென்றால் கால மில்லை
சூத்திரத்தைச் சொல்லுகிறேன் மாணா கேளு
சுகஞான மார்க்கத்தின் தீக்ஷை யைத்தான்
நேத்திரத்தின் நினைவைமெல்ல வழுத்திப் பாரு
நிலைக்குமட்டுங் காலாலே தலையை யேத்து
பாத்திரத்திற் கவலையற்று நின்றா யானால்
பரிபூர்ண ஞானமென்று பகர லாமே.

(இது 19_ஆம் பாடலாக இருக்கவேண்டும். இதற்கு மேல் எழுதப்படவில்லை).

5. பிற செய்திகள்

சுவடியின் காப்பேட்டில் முற்றிலும் வேறுபட்ட ஒரு கையெழுத்தில் "சந்திரானந்தர் ஞானம்" என எழுதப் பட்டுள்ளது. இது இந்நூற்பெயர்தானா என உறுதி செய்யப்படவேண்டும்.

2685. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2078_2
ஆ. ற/247

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. பெயர்தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்
ஈ. செய்யுள். அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 18 ஏடு, 36 பக்கம்
ஆ. நீளம் 24.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நூல் ஏட்டெண் 10இல் தொடங்குகிறது. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அண்டமெனுங் கேசரியாள் பாதங் காப்பு
 அருள்பெருகும் பூரணத்தின் அறிவே காப்பு
குண்டமெனுங் குண்டலியின் குறியே காப்பு
 குருவான பராபரத்தின் குணமே காப்பு
மண்டலங்கள் மூன்றுமொன்றாய் நிறைந்து நின்ற
 மகத்தான ரவிமதியின் சுடரே காப்பு
பிண்டமெனும் பொருளான அண்ட பிண்டம்
 பேரண்டம் நிறைந்தகண பதிதான் காப்பே. (1)

ஆ. முடிவு

காணுதற்குப் பிரமமுனி பே(சு)ம்முறை கேளு
 கமலமென்ற பிரமமடா கல்லுப் பாச்சு
பேணுகிற கல்லுப்பை யென்ன சொல்வேன்
 பேசாத மௌனமடா விந்து விந்து
தோணுகின்ற விந்துவென்ன வாகா ஞ்ந்தான்
 சுடரான தீபமடா சுத்த வெள்ளை
பானுவினில் போட்டாலுங் கரையா துப்பு
 பச்சையென்ற மிச்சமடா கல்லுப் பாமே. (355)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

5. பிற செய்திகள்

பாட்டெண்கள் தொடர்ச்சியாக இல்லாததால் பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூலில் இருந்து திரட்டப்பட்டதாகக் காணப்படுகிறது.

2686. சுப்பிரமணியர் ஞானம் 1

1. நூலகக் குறிப்புகள்

அ. 2079_1

ஆ. ற/248

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . .

ஆ. சுப்பிரமணியர் ஞானம் 1

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்: 1

3. தோற்றக் கூறுகள்

அ. 1 ஏடு; 2 பக்கம்

ஆ. நீளம் 13.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

(இப்பாடல் ஒன்றே நூலாகும்)

செந்திரு அண்டவரை மனதைத் தானும்
செலுத்தியே சிறுவாசற் குள்ளே நின்று

அந்திர மானதொரு அசைவைப் பார்த்து
ஐம்புலனே அண்டமதில் சேர்க்கும் போது
சுந்தரம்போல் சிலம்பொலியும் காதில் கேட்கும்
சுப்ரமண்ய னென்றுசொல்லிப் பேருங்
கொண்டேன்
மந்திரம்போல் கும்பமுனி மகனே நீயும்
அன்புடனே என்றுதான் வருந்த முற்றே.

சிவமயம்.

(இது 2687 தத்துவ நூலின் முதல் ஏடாக இருத்தலின், அந்நூலுக்குரிய காப்புச் செய்யுளாகவும் இருத்தல் கூடும்.)

2687. தத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2079_2
ஆ. ற/248

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. . . . .
ஆ. பெயர் தெரியாத ஒரு தத்துவ நூல்
இ. தத்துவம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 8 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 14 ஏடு; 28 பக்கம்
ஆ. நீளம் 13.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சொல்லிறந்த இடமெங்கே முப்பா ழெங்கே
துவாரபா லகரெங்கே முதற்பா ழெங்கே
நல்லசங்க நிதியெங்கே வைகுண்ட மெங்கே
நாரணனும் ஆலிலைமேல் துயின்ற தெங்கே
அல்லல்படும் ஐம்பூத ஒடுக்கம் எங்கே
ஆறஞ்சு இதழ்ரெண்டும் முளைத்த தெங்கே
சொல்லவல்ல ருண்டானால் அவரை நாமும்
தொழுதுகுரு வெனப்பணிந்து வணங்க லாமே.

ஆ. முடிவு

துங்கநிறம் பூண்டகண நாத ரென்றும்
துவாரபா லகருடைய சுருதி யென்றால்
சங்கநிதி தோற்றும்வை குண்டந் தோற்றும்
சாகரத்தில் பள்ளிகொண்ட மாலுந் தோற்றும்
அங்கனுரை தரிசிக்கி லயனுந் தோற்றும்
அப்பாலும் பரப்பந்தி தோற்றும் அப்பால்
மங்கைபிரான் கயிலாய மனையைக் கண்டால்
மானிடத்தில் பிறவியொழிந் திருப்பார் தாமே.

முற்றும்.

(இது 'சுப்பிரமணியர் ஞானம் ஒண்ணு' என்னும் நூலாகவும் இருக்கலாம்.)

2688. காகபுசுண்டர் ஞானம் 80

1. நூலகக் குறிப்புகள்

அ. 2079_3
ஆ. ம/248

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. காகபுசுண்டர்
ஆ. காகபுசுண்டர் ஞானம் 80
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 80

3. தோற்றக் கூறுகள்
அ. 43 ஏடு; 86 பக்கம்
ஆ. நீளம் 13.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம். ஆ. முடிவு.
காண்க: தொடர் எண் 1962

2689. நவக்கிரக கதிஷம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2080-1
ஆ. மு/67

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. நவக்கிரக கதிஷம்
இ. மாந்திரிகம்
ஈ. செய்யுள் 47

3. தோற்றக் கூறுகள்
அ. 10 ஏடு; 20 பக்கம்
ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
ஞாயிறு பதின்மூன் றாறு நல்மதி செவ்வாய் எட்டு
போயுறு புந்தி ஐந்து புகழ்தருங் குருவே பத்து
வேயுறு வெள்ளிஈ ராறு விளங்கிய சனிபதி னொன்றே
ஓயுறு ராகு வொன்பான் கோத்திடுங் கேதேழ் பாரே. (1)

ஆ. முடிவு
பாரென்ற கக்கிஷத்தில் வித்தை யெல்லாம்
பரிபாஷை கடைசியிலே நாலாங் காண்டம்
சீரென்ற எழுத்தெல்லாம் முற்றும் சொன்னோம்
செகசாலஞ் ஆடுதற்கு அதுவும் வேணும்
பேரென்ற சாலத்துக் கிதுவில்லா விட்டால்
பிழைமோசம் வந்துவிடும் பிராண னோடே
காரென்ற குருபதத்தை நித்தம் நித்தம்
கருத்துகந்து உந்தனுக்குச் சொல்வார் முற்றே. (47)

2690. கடைப்பிள்ளை நவக்கிரக கக்கிஷம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2080_2
ஆ. மூ/66

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கடைப்பிள்ளை
ஆ. கடைப்பிள்ளை நவக்கிரக சுகிஷும்
இ. மாந்திரீகம்
ஈ. செய்யுள் 81

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்
ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியென்ற மூலமந்த்ரம் அறியேன் ஓதி
அறிந்தபின்பு நவக்கிரகக் கக்கி ஷத்தை
நீதியுடன் கருக்குருவாய் விளங்க வேண்டி
நிலையறிந்த கொங்கணவர் பாதம் போற்றி
ஓதியதோர் மந்திரத்துத் தியான மான
ஊமையென்ற வேதபூ ரணனார் காப்பு
சோதியென்ற ஆதார மூல மாகித்
துலங்கிநின்ற கணபதிதாள் உட்கொண்டேனே. (1)

ஆ. முடிவு

உண்மையுள்ள கிரகமதை அறிந்து கொண்டு
உத்தமனே சகலகலை வாசி யேறி
நன்மையுள்ள நாட்டமதாய் நயனம் பார்த்து
நயனமென்ற கண்ணறிந்து விண்ணை நோக்கித்

தன்மையுடன் தன்னறிவே தானா மென்று
தன்னொளியும் விண்ணொளியு மொன்றாய்க் கண்டு
சின்மயமும் தன்மயமும் உண்மை யாகத்
தெளிந்துசிவ சிவமயமாய்த் தெளிவாய் முற்றே. (௫)

முற்றிற்று.

2691. போகர் முதற் காண்டம் 360

1. நூலகக் குறிப்புகள்
அ. 2081
ஆ. ற/249

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. போகர்
ஆ. போகர் முதற்காண்டம் 360
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 361

3. தோற்றக் கூறுகள்
அ. 70 ஏடு; 140 பக்கம்
ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
கரிமுகன் பதம்போற்றிக் கடவுள்பதம் போற்றிக்
கடாக்ஷித்து எனையீன்ற ஆயிபதம் போற்றி

அரியயனின் பதம்போற்றி வாணிபதம் போற்றி
அருள்தந்த லட்சுமிதா யாயிபதம் போற்றித்
துரியமாம் பாட்டரென்ற மூலர்பதம் போற்றித்
துணையான காலாங்கி அய்யர்பதம் போற்றி
நிர்விகற்பச் சமாதியுற்ற ரிசிகள்பதம் போற்றி
நின்றந்துநின்ற பூரணமே காப்புத் தானே. (1)

ஆ. முடிவு
போதித்த பெரியோர்கள் ரிஷிகள் சித்தர்
புத்தியுள்ள னென்றுசொல்லி அடியே னுக்கு
வாதித்த ரிசிசித்தர் சொன்ன புத்தி
மனதில்வைத்து வாசியுட வண்மை பர்த்து
ஏதித்தே மாயிரத்தில் சுருக்க மாக
எடுத்துரைத்தே னெல்லோரு மெனைப்போ லாகச்
சோதித்த யோகத்தின் மார்க்கந் தன்னைத்
துணையான முந்நூறுஞ் சொச்சந் தானே. (361)

போகநாதர் அருளிய முதல்காண்டம் அஷ்டாங்க யோகம் ஞானம் முற்றும்.

5. பிற செய்திகள்

5_6; 63_64 ஏடுகளுக்கிடையே இரண்டு சிறிய ஓலைகளில் விடுபட்ட பாடல்கள் எழுதி இணைக்கப் பட்டுள்ளன.

2692. சுப்பிரமணியர் மகாவிஞ்சை 25

1. நூலகக் குறிப்புகள்

அ. 2082_1

ஆ. மூ/68

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. சுப்பிரமணியர் மகாவிஞ்சை 25

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுள் 23

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்

ஆ. நீளம் 30 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்மேவும் வாலையபி ராமி சூலி
திரிபுரசங் காரிதவு மாசி வாமி
தார்மேவும் மயிடசங் காரி துர்க்கை
சாமுண்டி சங்கரி தந்த மைந்தன்
கார்மேவும் தந்திமுகன் ஒற்றைக் கொம்பன்
கருணைதிரு நாயனிரு கமல பாதம்
பார்மீதில் அறுமுகவின் குறுமு னிக்குப்
பகர் சர்வ பட்சணிக்குக் காரச்செவ் வேளே. (1)

ஆ. முடிவு

அருள்கின்ற விஞ்சைதனை ஆருக் கென்றால்
அரன்மாலைப் பணிவோர்க்கும் அறிவுள்
ளோர்க்கும்
குருவின்பதம் பணியும்நன் றிமறவா தாற்கும்
குணம்மிகுந்த பெரியோர்க்கும் கொடுக்க லாகும்

அருளுடைய மன்றுநெஞ்சர் வஞ்சர்லோபர்
- மாதர்கள்மேல்
ஆசைவைத்து மகாவிஞ்சை வணங்கிப் பாரே. (22)

(ஈற்றடி சீர் அமைப்பு சரியில்லை)

பொருளாசை வைத்துயிரை வதைசெய் வோர்க்கும்
.... பொய்சொல் வோர்க்கும்
....
பொற்கோடி ஈந்தாலும் புகலொண் ணாதே

சுப்பிரமணியார் மகாவிஞ்சை இருபத்தைஞ்சும் முடிந்தது.

முற்றிற்று.

5. பிற செய்திகள்
நூலின் தொடக்கத்தில் நூற்பெயர் "சர்வ சங்கார பட்சிணி விஞ்சை" என உள்ளது.

2693. அம்மன் அகவல்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2082_2
ஆ. மு/67

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. அம்மன் அகவல்
இ. பிற தோத்திரங்கள்
ஈ. செய்யுள் 1. அச்சில் ஏறத்தாழ 6 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்
அ. 3 ஏடு; 5 பக்கம்
ஆ. நீளம் 30 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
பூவினில் வாழும் பொன்னே மின்னே
மூவர்கள் முதல்வி தேவர்கள் தலைவி
சதுர்மறை இறைவி சகலமும் உணர்வி
பதுமநல் வடிவி பரவெளி இறைவி
மரகத வடிவி வரைதனில் உறைவி
கரதல கபாலி கருணையில் நிமலி

ஆ. முடிவு
சதாசிவ புத்திரா சண்டப்ர கண்டா
அரிதிரு மருகா உமைதிருப் புதல்வா
ஆறு முகமும் பனிரெண்டு கையும்
சக்தி வேலும் சடாட்சர நீறும்
ஊனும் தீர்த்தம் பிரம்பு கமண்டலமும்
நானும் காணுதல் வருவாய் பெருமாளே.

அம்மன் திருப்புகழ் முற்றும்.

5. பிற செய்திகள்

சுவடியில் அம்மன் திருப்புகழ் என இருப்பினும் இது வண்ணப்பாவன்று. ஈற்றில் சில அடிகள் மட்டிலும் முருக பரமாக உள்ளன. பிழை மலிந்த சுவடி

2694. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்

அ. 2083

ஆ. ல/399

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 57 ஏடு, 114 பக்கம்

ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 3-5 வரிகள்

உ. பலவகைக் கையெழுத்து

ஊ. மிகச் சிதிலமடைந்த நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இரச செந்தூரம்: இரசம் பலம் 1 ஒரு சீசாவில் விட்டு நாய்வேளைச் சாற்றில் மிதக்கவிட்டு ஒரு சட்டியில் மணல் கொட்டி அதன் மீது சீசாவை வைத்து அடுப்பேற்றி தீபாக்கினியாக ஒரு சாமம் எரிக்கவும். முன்விட்ட சாறுகண்டின பிறகு கதிர்னால் கிண்டிவிட்டு மறுபடியும் சாறுவிட்டு சீசா வாயிற்கு சீல்போட்டு மூடி, சட்டி மூடி ஒரு சாமம் எரிக்கவும். செந்தூரம் ஆகும்.

ஆ. முடிவு
குதிரை வலிப்பு, காக்கை வலிப்பு, மான் வலிப்பு, முயல் வலிப்பு, சத்தியா அப்பப்போ வரும் வாய்வு, மூர்ச்சை, வாய்வுத் தலைவலி, பட்சவாத வலிப்பு, அசிரணவலி, குழந்தைப் பிள்ளைகளுக்கு மாந்த வலிப்பு, வாதம் 84 வகைக்கும், குன்மம், சூலை, மலவாதம், மூலரோகம், விரைவாதம், பட்சவாதம், மறுத்துர ரோகம், பாசீச சூலை, ஆம சூலை இவையெல்லாம் தீரும். இதைத் துளைபோட்டுச் சூடு காட்டவும்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2695. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2084
ஆ. மூ/69

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. மாந்திரீகம்
இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை . அச்சில் ஏறத்தாழ 80 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 135 ஏடு; 270 பக்கம்
ஆ. நீளம் 24 செமீ., அகலம் 2.5 செமீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவகை வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
விஷத்துக்கு மருந்து: கோடகசாலை சமூலம் உரைத்துப் பூச நல்ல பாம்பு விஷமும் தீரும்.

ஆ. முடிவு
பல யந்திரங்களும் மந்திரங்களும் உள்ளன.

5. பிற செய்திகள்
இடையிடையே சிற்சில மருத்துவச் செய்திகளும் உள்ளன.

2696. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்
அ. 2085_1
ஆ. ல/400

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. .. ..
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 4 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
கன்னப்புற்றுக்கு மருந்து: அரிதாரம் பலம் 1 சாதிலிங்கம் பலம் 1 காந்தம் பலம் 1 ஆக மூன்றும் கொடிகள்ளிப் பால்விட்டு அரைத்து .... பசுவின் வெண்ணெய் போட்டு அரைத்துப் புற்றில் போடவும். கரைந்து போம். இது கை கண்டது.

ஆ. முடிவு
கண்ணில் நீர்ப்பாய்ச்சலுக்கு: சுக்கு, மிளகு, சதகுப்பை, சமுத்திராப்பழம்,கிராம்பு, ஓமம், கருஞ்சீரகம், நற்சீரகம், நெல்லிப்பருப்பு, இஞ்சி .... வகைக்குப் பலம் 1.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2697. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2085_2
ஆ. ல/400

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. மாந்திரீகம்
இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை_ அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 18 ஏடு; 36 பக்கம்
ஆ. நீளம் 16 செமீ, அகலம் 2.5 செமீ,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவகை வரிகள்

உ. மிகக் கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பார்வை பார்க்க மந்திரம்:-
சிவகெருடா சிவபுதி ஆதிகெருடா அண்டரண்ட
பாதாள கெருடா அனுமகெருடா அனுமாசி கெருடா விசம் நஞ்சது
நஞ்சது நல்விசம் அறது போது போது நயினார் ஆனை போதும் போம்.
ஓகாளி ஓபிடாரி ஓம் நமசிவாய நம.

ஆ. முடிவு

ஆகருஷணம்: -
ஞாயிற்றுக்கிழமை செத்தவனைப் பார்த்து மறுநாள் காடாற்று முன்னேபோய் கரியும் ஓடும் திருநீறும் எடுத்துக் கொண்டுவந்து நமக்கு வேண்டினவள் பேரும் நாளும் கரிகொண்டு ஓட்டில் எழுதி சவ்வாது புனுகும் பூசி வாசல் படிக்குக் கீழ்வைத்து மருகட்படுத்தி அந்தத் திருநீற்றைப் பூசிக்கொண்டு ஏகாந்தமாக இருக்க அவள் வருவாள்.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2698. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2086
ஆ. மூ/70

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. மாந்திரீகம்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 4 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 13 ஏடு; 26 பக்கம்

ஆ. நீளம் 21.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 4-6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூல மந்திரம்:- ஓம் அய்யுங் கிலியும் சவ்வும் சவ்வும் கிலியும் ஐயும் குறத்தியும் சிறிப்பும் நமோ நமோ சிவ ஓம் மோக மோகயே சுவாகா.

ஆ. முடிவு

நங்காபிடு- சிங்ஙாபிடு- வங்ஙாபிடு- யங்ஙாபிடு உச்சாடு- உச்சாடு. சிங்ஙா உச்சாடு- வங்ஙா உச்சாடு- யங்ஙா உச்சாடு நங்கா உச்சாடு உச்சாடு உருத்தி .... 30 வருடத்தில் பரிபாரினும் தீப தூபம் அலத்தம் ஓமம் மது மாங்கிசம் படப்பு சூட்டுத பிச்சி சுடுகோழி பூசையோடு கூடு செய்து கருஞ்சேவல் வேறடுக்கவும் சிவந்த பொற்பம் வச்சு சேவிக்கவும்.

மூலமந்திரம்.

2699. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்
அ. 2087
ஆ. ல/401

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 2 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4-5 வரிகள்
உ. இருவகைக் கையெழுத்து. இரண்டும் கிறுக்கல். பிழைகள் மிகுதி
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
பிரவிடை ஆகாதவளுக்காக மருந்து: இரத்தினாதி என்பது ஓரிலைத்தாமரை. இதில் மிளகு, பூண்டு, கருஞ்சீரகம் சேர்த்து அரைத்துச் சமன் பசுவின் வெண்ணெய் சேர்த்துக் கொடுக்கவும். நாளும் அந்தி, சந்தி கொடுக்கவும். உடனே ருது ஆவாள்.

ஆ. முடிவு
அயமெழுகு, பித்த வெட்டைக்கு அரப்பொடி சேர் 1 நல்லெண்ணெயில் ஊறப் போட்டுக் கழுவிக் காய

வைத்துக் கல்வத்தில் போட்டுப் பழச்சாறு விட்டு அரைத்து மறுபடி பொத்தலைக் கய்யான் சாறுவிட்டு அரைக்கவும். கரிசாலைச்சாறு விட்டு அரைத்து மெழுகாகிற பக்குவத்தில் ஒரு மாங்காய் அளவு பசுவெண்ணெய் போட்டு அரைத்து மெழுகு எடுத்துத் தூதுவளங்காய் வீதம் குடுத்து வறுத்து வெண்ணெய் போட்டு அரைக்கிறதற்குமுன், சுக்கு 1 பலம், மிளகு 1 ப, சீரகம் 1 ப, கருஞ்சீரகம் 1 ப, மல்லி 1 ப இவைகள் எல்லாம் வறுத்துப் பொடிபண்ணிக் கல்வத்தில் போட்டு வெண்ணெயும் போட்டு அரைத்து எடுத்துக் கொள்ளுகிறது. பத்தியம்: இச்சாபத்தியம், சோகை, பாண்டு, காமாலை, ரெத்த விருத்தி இவைகளெல்லாம் தீரும். கை கண்டது.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2700. கொக்கோகம் - மூலமும் உரையும்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2088
ஆ. ற/250

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அதிவீரராம பாண்டியன்
ஆ. கொக்கோகம் - மூலமும் உரையும்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 27 ஏடு; 54 பக்கம்
ஆ. நீளம் 30 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 8, 11, 12 ஆகிய ஏடுகள் காணப் படவில்லை. உள்ளவை நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
கன்னலன்றி வேம்புநுகர் காமத் துரோகியர்போல்
பின்னைமற்றோர் தெய்வத்தைப் பேசேனே - எந்நாளும்
சாற்றுவதும் காமகலை சாதிப்ப தும்கரணம்
போற்றுவதும் காமனடிப் போது.

ஆ. முடிவு
மிண்டு பேசும் வெடித்த குரலினாள்
கொண்ட கணவனைப் பற்றிக் கொடுங்கையால்
அண்டி மோதித் தழுவிட எண்ணுவாள்
கண்டு கூறும் ..... கழுதையே.

(ஈற்றடியின் மூன்றாவது சீர் விடுபட்டு விட்டது. இது 28 ஆம் பாடல். இதற்குமேல் எழுதப்படவில்லை.)

2701. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2089
ஆ. மு/71

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. மாந்திரீகம்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 41 ஏடு; 82 பக்கம்

ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 2 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. மிகச் சிதைவுற்ற நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பிள்ளை பிறந்தவுடனே பித்தத்தில் மிடறு கட்டும் . . . நாய்போன்று விடாது மலமும் . . . . துள்ளி கைகாலசந்தசந்து சும்மா விம்மிக்கிடக்குமெனில் கள்ளமான செங்கிரந்தி இதுவென்று கண்டுகொள்ளே.

ஆ. முடிவு

பத்தாம் மாதம் மந்திமிதி என்னும் பேய் அணுகும். அதன் குணம்:-

"உடம்பைச் சொருகும் சோபிக்கும் உட்கார்ந் திருக்கச் சலிக்காது" அதற்கு அரிசியும் என்னும் "கல்கண்டும் சர்க்கரையும் வாழைப்பழமும் பாக்கிலையும் தூபதட்சிணையுடன் களித்து ஊருக்கு வடக்கே பேர்சொல்லி வைக்கவும்.

5. பிற செய்திகள்

இதனுள் சில மருத்துவச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

2702. மச்சமுனி 8

1. நூலகக் குறிப்புகள்
அ. 2090_1
ஆ. ல/402

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. மச்சமுனி
ஆ. மச்சமுனி 8
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 8

3. தோற்றக் கூறுகள்
அ. 4 ஏடு; 8 பக்கம்
ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி
ஊ. மிக மிகச் சிதைந்த நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாய் நின்றகர சக்தி பாதம்
போற்றிசெய்தேன் தாயேஉன் பாதங் களை(யே)
தாரணமாய் மானிடர்கள் பிழைக்க வேண்டிச்
சதாசிவனை மனுக்கேட்டு மருந்து சொன்னேன்
காரணமாய் நாதாக்கள் பதினெண் பேரும்
கட்டிவைத்தார் அதன்பிறகு நூல்க ளெல்லாம்
வாரணமாய் என்தாயாள் உபதே சித்தார்
வயித்தியந்தான் (எட்டிலே) பாடினேன் பாரே. (1)

ஆ. முடிவு

கேளப்பா பதினெண்பேர் (மட்டுந்) தானும்
 கிருபையால் என்கிட்ட இருந்த தென்றால்
நாளப்பா நோய்அறிந்து செய்தா யென்றால்
 நலமாக உன்னைப்போல் வைத்யர் இல்லை
மாளப்பா பெருநூலில் அலைய வேண்டாம்
 மைந்தனே சிறுநூலை யூணிப் பாரு
வாளப்பா மானிடரே சுருக்காய்ச் சொன்னேன்
 வகைதொகையாய் மச்சமுனி பாடல் முற்றே. (8)

2703. திருமூலர் 8 - கிரந்தி எண்ணெய்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2090_2
ஆ. ல/402

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. திருமூலர்
ஆ. திருமூலர் 8 _ கிரந்தி எண்ணெய்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 8

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி
ஊ. மிக மிகச்சிதைந்த நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தாதாவே நந்தி தயவாய் உரைத்தமொழி
மாதாவே என்தாயே ..... மனோன்மணியே
ஆதார மான அறுமுகத்தோன் பாதம்
வேதாந்தப் பூரணமும் மெய்ப்பொருளுங் காப்பாமே. (1)

ஆ. முடிவு

தானான .....ச் சித்தி யாகச்
சாதகமாய்ச் சிவாயநம அங்ஹ்ரீம்ஸ்ரீம் என்று
கோனான விநாயகனைப் பூசை பண்ணிக்
குருவென்று எண்ணெய்தனை வைத்துக் கொள்ளு
வீணான வீணருக்குக் கொடாதே என்றும்
விருதாவாய்ப் போகுதென்று என்குருதான்
சொன்னார்
தானான மேகத்தில் பிறந்த ரோகம்
சதாகுருவின் எண்ணெயிலே தீரும் முற்றே. (8)

திருமூலர் பாடல். எட்டுப்பாட்டுள் கிரந்தியெண்ணெய் முற்றும்.

2704. அகத்தியர் பச்சை 16

1. நூலகக் குறிப்புகள்

அ. 2090_3
ஆ. ல/402

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் பச்சை 16
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 15

தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி
ஊ. மிக மிகச் சிதைவுற்ற நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரிதாரம் பிருதிவியே வாகி நிற்கும்
ஆனதொரு சவ்வீரம் அப்பு வாகும்
பெரிதான கெவுரிதான் தேயு வாகும்
பின்னுமொரு வெள்ளையுந்தான் வாயு வாகும்
விரிவான லிங்கமது ஆகாச மாகும்
விரும்பியே பச்சையுடன் மாட்ட லாகும்
தெரியாத வயித்தியரே என்னூல் பாரு
சித்தர்கள் சொன்னவித்தை சிகத்தில் பாரே. (1)

ஆ. முடிவு

ஏற்றிடில் சன்னி . . . .
எலும்புருக்கி குஷ்ட்ட ரோகம்
பார்த்திடும் பரங்கி சூலை
பல்தடி முதலா யுள்ள
தீர்த்திடும் வைத்ய ரேசெக
தலத்திலே மானி டர்கள்
எல்லோர்க்கும் . . . .
. . . . (16)

(பாடல் யாப்பமைதி சரியில்லை. இதற்குமேல் எழுதப்படவில்லை)

2705. கொங்கணர் கருக்குளிகை 8

1. நூலகக் குறிப்புகள்
அ. 2090_4
ஆ. ல/402

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. கொங்கணர்
ஆ. கொங்கணர் கருக்குளிகை 8
இ. மருத்துவம்
ஈ. செய்யுள். 8

3. தோற்றக் கூறுகள்
அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 16 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி
ஊ. மிகச் சிதைவுற்ற நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
பாடுகிறேன் பார்வைக்கு ஐங்கரனே காப்பு
பரிவான சின்மயத்தின் பாதங் காப்பு
நாடுகிறேன் சித்தருடை (பாதங்) காப்பு
நாதாந்த மனோன்மணித்தாய் பாதங் காப்பு
(தேடுகி)றேன் எந்நூல்போல் நூல்க ளெல்லாம்
செப்பார்கள் பார்வைக்குச் சித்த ரப்பா
சூடுகிறேன் பார்வைத்தி நூல்க ளெல்லாம்
சுருக்கியே சொல்லுகிறேன் கேளும் கேளும். (1)

ஆ. முடிவு
பாரடா தீட்சைநீ நினைக்கா விட்டால்
 பாங்கான கருக்குளிகை பொய்யாய்ப் போகும்
ஆரடா இப்படிநீ அறிந்து கொண்டு
 அப்பனே கொடுத்தக்கால் சித்தி யாகும்
சேரடா கருக்குளிகை சித்தர் தானும்
 திரமாக நூல்களிலே சொல்ல வில்லை
வாரடா எட்டுக்குள் கருக்குளிகை தானும்
 மைந்தனே அடக்கமே ஆச்சே முற்றும். (8)

கொங்கணர் பாடல் கருக்குளிகை எட்டுப்பாட்டு முற்றும்.
சம்பூரணம்.

2706. மருந்துசெய்முறை

1. நூலகக் குறிப்புகள்
 அ. 2091.1
 ஆ. ல/403

2. உள்ளீடு: நூல் விவரம்
 அ. ....
 ஆ. மருந்து செய்முறை
 இ. மருத்துவம்
 ஈ. செய்யுள்: 57

3. தோற்றக் கூறுகள்
 அ. 17 ஏடு; 34 பக்கம்
 ஆ. நீளம் 20 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
 இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
 ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
 உ. தெளிவான கையெழுத்து
 ஊ. ஓரிரு ஏடுகள் சற்றே சிதைந்துள்ளன. பொதுவாக நல்ல நிலை
 எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்:

கற்பலேகியம்:-

உடம்பே காயும் நெஞ்சரிக்கும்
உஷ்ணம் மிகுந்து தாகிக்கும்
வடம்போல் குடல்கள் தான்கொழுத்து
வலித்தே மலமும் சொருக்கென்று
திடம்போம் சிறுத்துக் கழிவாகிச்
செரியா மலமுத் திரமும்விழும்
புடம்போல் மேனி தான்காய்ந்து
பொருந்துங் கைகால் கடுக்குமிதே. (1)

ஆ. முடிவு:

பாணமே கைகால் பருத்திடா துருட்டிடு
சேண மிளகி(ள) நீரி லருந்திடு
ஆண புளியுப்பு மாகா து காத்திடு (57)
கோணமது கற்பம் குழந்தைக்கு மாமே.

வேறு-சர ராமபாண குளிகை

எலுமிச்சம் பழச் சாற்றிலே மூன்று நாழிகை யரைத்து அம்மியுடனே மூன்று நாள் வெய்யிலில் உலர வைத்து மேற்படி மிதிபாகல் சாறு பிழிந்துவைத்துக் கொண்டு ஏழு நாள் தினமொன்றுக்கு நாழிகை அரைத்து இந்தப்படி ஏழுநாளும் அரைத்துப் பதத்தில் சிறு பயறு பிரமாணம் கயறுருட்டி நிழலுலர்த்தலாக உலர்த்தி சிமிழிலே வைத்துக்கொண்டு நேரமொன்றுக்குக் கால்பலம் மிளகு இரண்டு படி சலத்திலே போட்டு அரைக்கால் படியாய்க் குறுக்கி அதிலே ஒரு குளிகை உரைத்துக் கொடுக்கவும். இந்தப்படி அந்திசந்தி நாலுபோது

அஞ்சுபோது கொடுக்கவும். மறுபத்தியம் காத்து மிளகு .. .. மேற்படி எண்ணெய் முழுகவும். (இதற்குமேல் எழுதப்படவில்லை)

5. பிற செய்திகள்

கற்பலேகியம், இந்துப்பு லேகியம், இந்துலேகியம், குக்கிலரசாயனம், திப்பிலாதி லேகியம், தேங்காய் லேகியம் முதலியவற்றின் செய்முறைகளும் இவற்றால் தீரும் நோய்களும் பாடல்களாக உள்ளன. இவை ஒருவரால் பாடப்பெற்றனவா அன்றிப் பல நூல்களிலிருந்து திரட்டப்பெற்றனவா என அறியக் கூடவில்லை.

2707. பெரிய சுர ராமபாணக் குளிகை

1. நூலகக் குறிப்புகள்

அ. 2091_2
ஆ. ல/403

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. பெரிய சுர ராமபாணக் குளிகை
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 8

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 20 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
வாத சுரத்துக்கும் வாந்தி சுரத்துக்கும்
சேதப் படுத்தும் சிலேற்ப சுரத்துக்கும்
காத நமனான் களித்த சுரத்துக்கும்
நாத னருள்செய்த நாட்சுர பாணமே. (1)

ஆ. முடிவு
நாளஞ்சும் தள்ளி .... தள்ளி
கோள்பக்கம் தள்ளி கு...... மிளகதால்
பாளப்பா அச்சுரம் பண்பாய் அரோக்கியம்
நீளப் பாஅட நிலைச்சுரம் போகுமே. (8)

2708. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்
அ. 2091_3
ஆ. ல/403

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. செய்யுள். அச்சில் ஏறத்தாழ 5 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 20 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நிலவாகை பூவரசு செங்கத் தாரி
நெடுமால்தன் வாகனவேர் அமுக்கி ராவேர்
சிலகலிச்சி வெள்வேம்பு சிறுபிரப்பங் கிழங்கு
சித்தருட மூலியுடன் இசங்கு மூலம்
குலங்குப்பை மேனிநொச்சி வெள்ளறுகு தும்பை
குப்பியொடு ... முருக்கு சுருள்ளி நேராய்ப்
பலஞ்சரியாய் மேனிமுத்து உள்ளிவரை யிடித்துப்
பாத்திரத்தில் கடைசாரப் புரட்டி யூற்றே. (1)

(இது கரைப்பன், மேக சூலை, குட்டம், பிளவை, வீக்கம், புற்று எண்ணெய்.)

ஆ. முடிவு

பேசாதே ஒருவருக்கும் சுருக்கு மெத்த
பேசினால் அழிந்துவிடும் வைத்தியமாங் கொஞ்சம்
ஆசானைப் பதம்பணிந்து கேட்டாலும் சொல்லார்
ஆதிசிரோ மணித்தாயாள் எனக்குச் சொன்னாள்
கூசாதே வாதுசொல்லித் தயிலம் ஏற்றிக்
குடியில்நின்ற இடிபோகும் கூர்விலிமெய் யாகும்
ஈசான மூர்த்தியுட செபத்தைச் செய்து
இருபேருக் கமுதளித்து ...... செய்யே. (6)

கரைப்பன் புற்றுவிற்கு சேங்கொட்டைக்கருக்கில் குத்தித் தயிலம் வடித்துக் கொண்டு தொட்டுப் போடவும்.

5. பிற செய்திகள்

இப்பாடல்கள் ஆறும் ஒருவரால் இயற்றிச் சேர்க்கப்பெற்றவையா பலநூல்களிலிருந்து திரட்டப் பெற்றவையா என அறியக் கூடவில்லை.

2709. மச்சமுனி சூத்திரம் 80

1. நூலகக் குறிப்புகள்
அ. 2092_1
ஆ. ல/404

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. மச்சமுனி
ஆ. மச்சமுனி சூத்திரம் 80
இ. மருத்துவம்
ஈ. செய்யுள். 80

3. தோற்றக் கூறுகள்
அ. 10 ஏடு; 20 பக்கம்
ஆ. நீளம் 30.5 செமீ, அகலம் 3 செமீ,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ.நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
நடமாம் மகாரத் திரையம் சொலக்கடவி
கடத்தா னைமுகன் காப்பு - திடமான
சாரத் துறையும் தனிசூடன் தண்ணீரும்
காரத் துறைகனகங் காண்.

பொன்னனி மூலம் போக்கிரச வாதம்
நன்னய மாக நாட்டினான் பாட்டன்
சன்னியின் உண்டை சவுக்காரந் தாண்டிப்
பின்னொரு கார மொத்துக்கொண் டாரே.

ஆ. முடிவு
விடாதே பிரமன் மேல்வீடு பட்டணம்
படாதே மேல்ருத் திரன்பட் டணமாம்
அடாதே மயேசுரன் மதத்தர் அடிமுடி
கொடாதே கொடுக்கும் கூறு மவுனமே. (80)

மச்சமுனி நாயனார் சூத்திரம் 80.

5. பிற செய்திகள்:
மச்சமுனி சூத்திரம் 82 என்ற பெயருடன் இந்நூலகத்திலுள்ள 1880_2 எண்ணுள்ள சுவடியும் இந்நூலே போலும்.

2710. போகர் சூத்திரம் 68

1. நூலகக் குறிப்புகள்
அ. 2092_2
ஆ. ல/404

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. போகர்
ஆ. போகர் சூத்திரம் 68
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள். 68

3. தோற்றக் கூறுகள்
அ. 9 ஏடு; 18 பக்கம்
ஆ. நீளம் 30.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9-10 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
சீர்மிகுந்த பேரனெங்கள் நந்தீச ரப்பா
வாரமுட னெனைவளர்த்த மூலரென் தந்தை
பாரில்வளர் கருவூரார் கொங்கணரென் பிள்ளை
காரமுடன் சாரவித்தை வகையறிவார் மெய்யே. (1)

ஆ. முடிவு
உரைத்தேன் கருக்குரு வொன்றுமொளி யாமல்
நிறைத்தேன் சிவனுமையாள் நீதிமுறை யானைவைத்தேன்
பரைக்கே நீபூசை பண்பாகச் செய்துகொண்டால்
குருக்காணு மப்பா குறையாது முற்றுமே. (68)

2711. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்
அ. 2092_3
ஆ. ல/404

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 8 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 8 ஏடு: 16 பக்கம்.
ஆ. நீளம் 30.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சவ்வீரச் சுன்னம்: சவ்வீரம் ஒரு கழஞ்சிக்கு வெள்ளை வெங்காயம் தோலைப் போக்கி இரண்டு கழஞ்சு எடுத்து அரைத்து வீரத்துக்குப் பொருந்திய அகலில் வை. சுண்ணாம்பு சீலை ஒன்று செய்து ஒருசாண் குழிவெட்டி அரைச்சாண் குழிவரையில் மணல் போட்டு அதன்மேல் அகல் வைத்து மேலும் மணல் போட்டு, காட்டு எரு இருபதில் புடம் போடச் சுன்னம். மறுநாள் உதயத்தில் எடுக்கவும். சுன்னமாம். இது கை கண்டது.

ஆ. முடிவு

நடுவில் கலசம் வைத்து மேலும் சுண்ணாம்பு கொண்டு மூடி ரெண்டு சாமம் நெல் பொறியுமட்டும் எரித்து எடுத்து வைத்துக் கொள்ளவும். இப்படிக் கட்டின . . . . ரெண்டுக்கு நாலு வெள்ளிய பற்பம் சூதம் சேர்ந்த வெள்ளி மேற்படி பற்பத்திற்குச் சமனெடையும் கூட்டி வெள்ளெருக்கம் பாலை வார்த்து அரைத்து பில்லை செய்து உலரக் காயவைத்து சுண்ணாம்பில் ஒருசாமம் வைத்து எரித்து எடுத்துக்கொள்ளவும். குரு சகாயம்.

5. பிற செய்திகள்

பலரால் அவ்வப்பொழுது எழுதப்பெற்ற குறிப்புகளாகத் தோன்றுகின்றன.

2712. அகத்தியர் லோகமாரணம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2093_1
ஆ. ல/405

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் லோக மாரணம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 150

3. தோற்றக் கூறுகள்
அ. 38 ஏடு: 76 பக்கம்
ஆ. நீளம் 25.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து பிழைகள் மிகுதி
ஊ. 1, 8, 16 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. உள்ளவை நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆச்சிந்தப் பற்பத்தை வைத்துக் கொண்டு
அளவில்லா வித்தைதனை ஆடும் ஆடும்
பாச்சிந்த வகையரி .... தன்னைப்
பாய்ச்சினால் ஏழரைக்குப் பாயும் பாயும்
வாச்சிந்தச் சொன்னபற்பம் வியாதி யெல்லாம்
தீரவென்றால் அநுபானம் அறிந்து போடும்
காச்சிந்த அநுபானம் சொல்லக் கேளும்
கண்டாத்ரி லேகியத்தில் வைத்துட் கொள்ளே (38)
(இதனையடுத்த சிலபாடல்களும் எழுதப்படவில்லை)

ஆ. முடிவு
சொன்னது தொகையாம் நூற்றி யைம்பதும் சூட்ச மாகும்
முன்னமே செ(ா)ன்ன (நூ)லின் முக்கிய மிந்நூல் சூட்சம்
அன்னமே பாரு லோக மாரணம் அதிக சூட்சம்
அன்னமே ..... நூற்றி யைம்பதும் அறிவீர் முற்றே. (150)
அகத்தியவயித்திய சாத்திரம் முகிந்தது. முற்றும்.

இ. பிற்குறிப்பு
1868 ஆம் வருடம் ஆனி மாதம் 21 ஆம் தேதி திங்கட்கிழமை சோமவாரம் சே(ா)தி நட்சத்திரம் கூடின சுபதினத்தில் அகத்தியர் சாத்திரம் முகிந்தது.

முற்றும்.

2713. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்
அ. 2093_2
ஆ. ல/405

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. செய்யுளும் உரைநடையும்

3. தோற்றக் கூறுகள்
அ. 71 ஏடு: 142 பக்கம்
ஆ. நீளம் 25.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது!
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மண்டை சூலைக்கும் பீனிசத்துக்கும் எண்ணெய்: பிச்சியிலைச் சாறு ஆழாக்கு, வெள்ளெருக்குச் சாறு ஆழாக்கு, குன்றிலைச் சாறு ஆழாக்கு, புளியிலைச் சாறு ஆழாக்கு ஆக ஒரு படி. கந்தகம் 1/2 பலம், அதிமதுரம் 1 பலம், வெட்பாலையரிசி 1பலம், கார்கோவரிசி 1 பலம், சீரகம் 1 பலம், சுக்கு 1 பலம், மிளகு 1 பலம், திப்பிலி 1 பலம், வாளுவை 1 பலம், கருஞ்சீரகம் 1பலம், வசம்பு 1பலம், மஞ்சள் 1 பலம். கந்தகமல்லாமல் மற்ற மருந்தெல்லாம் சாறு (வி)ட்டரைத்து எண்ணெயில் கலந்து காய்ச்சிவடித்து வடித்த எண்ணெயில் . . . . : பொடித்துப் போட்டுக் கலக்கி மத்திச்சு முழுக வேண்டியது. மண்டை சூலையும் பீனிசமும் சூலையும் நீரும் புண்ணும் சலமும் தீரும்.

ஆ. முடிவு

பருகவே எருமை மோரில் பண்பதா யூரல் போகும் கருந்திருக்குஞ் சுத்தி சத்தி சாராயத்தில் யுகரவே யூரல் போகும் ஒருநாளிச் சுத்தி யாச்ச முகரவெங் காரத் துக்குமூத்திர மூன்று நாளே. (35)

இப்பாடலில் யாப்பு தெளிவாக இல்லை. இதற்குமேல் எழுதப்படவில்லை)

5. பிற செய்திகள்

இது ஒரு மருத்துவக் கதம்ப ஏடு ஆகும்.

2714. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 2094

ஆ. ல/406

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்.

ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 2 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு: 8 பக்கம்

ஆ. நீளம் 11 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5-7 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் ஏராளம்

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

குத்தெலி கடித்தால் மருந்து:-

அருகுவேரை மூன்றுநாள் பசுவின் பாலில் கொடுக்கத் தீரும். பத்தியம், மூன்று நாள் உப்பு ஆகாது. ஏழாம் நாள் கஞ்சு முழுக்கு. ஒன்பதாம் நாள் முக்கூட்டெண்ணெய் முழுக்கு.

ஆ. முடிவு

முகவாய்வுக்கு, ஒருதலையிடிக்கு, கழுத்துப் பிடிக்கு கருநொச்சிச் சாறு 1/4 படி, கத்தட்டிச் சாறு 1/4 படி, கருவெப்புச் சாறு 1/4 படி செவ்வரளிச் சாறு 1/4 படி, கருஞ்சீரகம் 1 பலம். வெள்ளை மிளகு 1 பலம், ஒருதலை ஒத்தை வெள்ளைப் பூடு 1 பலம், நல்லெண்ணெய் 1/2 படி மேற்படி எண்ணெயில் . . . . மூன்றும் அரைச்சு எண்ணெயில் போட்டு மேற்படி சாறு வடிகட்டி

எண்ணெயில் போட்டு ஊறவைத்து மறுநாள் எண்ணெயைக் காய்ச்சிநீர்வற்றி மெழுகு பதம் வரும்போது எண்ணெயை வடித்துக் கொண்டு கடுக மறு சட்டியில் வைக்கவும்.

பத்தியம்: பழைய சோறு ஆகாது. பகல் நித்திரை ஆகாது. இதுதவிர வேறுபத்தியம் இல்லை.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2715. இராசி ஆருடம்

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2095_1
   ஆ. வ/115

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. ....
   ஆ. இராசி ஆருடம்
   இ. சோதிடம்
   ஈ. செய்யுள். 36

3. தோற்றக் கூறுகள்
   அ. 18 ஏடு: 36 பக்கம்
   ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
   இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்
   உ. கிறுக்கலான கையெழுத்துபிழைகள் மிகுதி
   ஊ. முதல் மூன்றேடுகள் காணப்படவில்லை. சிதைவுற்ற நிலை
   எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாசமா சிவலை சேரு(ம்) பால்பழ முறைவ தாகும்
தேசமே போனார் மீள்வர் சேயிழை மணமும் நன்றால்
தூசிபொன் பூமி கொள்ளத் துலைவறா வின்ப மெய்தும்
வாசமென் குழலி னாளே வந்திடு மேஷந் தானே.

ஆ. முடிவு

மற்றது மீனந் தானும் மன்னனே சொல்லக் கேளாய்
உற்றதோர் மனித ராலும் ஊடிய தெய்வத் தாலும்
அற்றதோர் பகையு முண்டு ஆனதோர் நிலைமை தன்னில்
இற்றது பொருளா(னா)லும் இயல்புடன் கூட வேணும்.

பனிரெண்டு ராசி முற்றும்.

2716. தொடுகுறி சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2095_2
ஆ. வ/115

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. தொடுகுறி சாத்திரம்
இ. சோதிடம்
ஈ. செய்யுள். 9

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு: 4 பக்கம்
ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி

ஊ. இரண்டாம் ஏட்டை அடுத்து இருக்க வேண்டியவை காணப்படவில்லை. சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இந்தச் சக்கரத்தில் இருக்கிற அட்சரத்தில் ஒன்றைத்தொட்டு அந்த அட்சரத்தைப் பற்றி வாசித்தால் ஏதாகிலும் நாம் நினைத்த காரியங்களை உள்ளதைச் சொல்லும்.

(அட்சரம் என இருந்தாலும் மூன்றுக்கு மூன்று கட்டத்தில் ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்களே எழுதப்பட்டுள்ளன. சீதா சக்கரம் போல)

ஆ. முடிவு

வேண்டிய தெல்லாம் சேரும் வினையது நீங்கிப் போகும்
பூண்டதோர் மணியும் பொன்னும் பொருளது
வந்து சேரும்
மாண்டவர் பங்கில் நின்று ... விளக்க மாகும்

(இதற்கு மேல் ஏடுகள் இல்லை. இஃது ஒன்பதாம் எண்ணிற்குரிய இரண்டாம் பாடல்).

2717. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2095_3

ஆ. வ/115

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. மாந்திரீகம்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு: 32 பக்கம்

ஆ. நீளம் 21 செமீ., அகலம் 3.5 செமீ.,

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி.

ஊ. சிதைவுற்ற நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாம்பு விசத்துக்கு மந்திரம்:

திசவணத்தில் திருக்கூத்தாடையில் அத்தியும் சுத்தி மிதிக்கத் தீந்துது விசம் போயி போயி மரு மாயமே விசமில்லை இந்தோ இந்திரன் அருஞ்ச கையிலே ....

(ஏட்டில் உள்ளபடியே தரப்பட்டுள்ளது)

ஆ. முடிவு

பயிரவ சுவாமி கவசம்:-

....

முப்பத்திமுக்கோடி தேவர்கள் பாதமானேவாவா. நாற்பத்தெட்டு ஆயிரங்கோடி ரிஷிகள் பாதமானே வாவா. என்னையும் யென்னையும் படைத்த ஆதி சிதம்பர மூர்த்தி பாதமானே வாவா. ஓம் யிரியும் சிரியும் வடுகா வடுகா பயிரவ தேவாய நம.

இதுக்கு உரு 108.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2718. சல்லியம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2096

ஆ. மூ/72

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. சல்லியம்

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுளும் உரைநடையும்

3. தோற்றக் கூறுகள்

அ. 5+22 ஏடு; 54 பக்கம்

ஆ. நீளம் 40 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. பல ஏடுகள் சிதைந்துள்ளன. சுவடியின் தொடக்க ஏடுகள் காணப்படவில்லை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நாதமும் விந்து தானும் நங்கிலி மயிர்மா ணிக்கம்
ஓதிய மந்தி ரங்கள் ஒருவிடு மாட னாகும்
பாதியாம் சாமந் தன்னில் படுக்கையில் சென்றெ ழுப்பும்
சோதனை கருவில் செய்யச் சூறையிட் டாடு வாரே. (52)

ஆ. முடிவு:

குருவரு ளாலே கண்டு குறிப்புட னறிய வேணும்
குருவருள் தானே தெய்வம் குருவருள் தானே முத்தி

....
குருவிரு பாத மாண்டு கொண்டனன் சென்னி மீதே. (100)

சல்லிய முற்றும்.

(ஏட்டில் மூன்றாமடி எழுதப்படாமல் வெற்றிடமாக உள்ளது).

5. பிற செய்திகள்

இச் சுவடியின் முதல் 5 ஏடுகளில் சல்லிய நூல் 52 ஆம் பாடல் முதல், நூல் முடிய எழுதப்பட்டுள்ளது. அடுத்துள்ள 22 ஏடுகளில் இயந்திரங்களும் பிரயோக விதிகளும் இடம் பெற்றுள்ளன.

2719. வைத்தியக் கடைக்காண்டம் 600

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2097
   ஆ. ல/407

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. ....
   ஆ. வைத்தியக் கடைக்காண்டம் 600
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள். 600

3. தோற்றக் கூறுகள்
   அ. 44 ஏடு; 88 பக்கம்
   ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
   இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து,
   ஊ. முதல் 78 ஏடுகள் காணப்படவில்லை. உள்ளவற்றிலும் பல ஏடுகள் சிதைந்துள்ளன
   எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

.... (த)யிலத்தை வடிக்கும் போது
சுந்தரமே முன்சொன்ன மருந்து அஞ்சும்
அன்னநடை அம்மிதனில் பொடித்துப் போடு
அகலமாம் தாளிதனில் ஓலைப் பூவும்
பின்னமன்றிப் பிச்சிப்பூ முல்லையிரு வாச்சி
பெருவாசஞ் செண்பகப்பூக் கொழுந்துமரு வட்டம்
வன்னமாய்ப் பாத்திரத்தில் அஞ்சுந் தூவி
வடிதாளிக் கீழ்நிரம்ப நெல்லுப் போடே.

ஆ. முடிவு

உண்டா மெழுநூல் வயித்தியத்தில்
ஒடுக்கம் சூத்ரம் ஐம்பதுண்டு
பண்டாங் குருவா நூற்றன்பதிற்
பாரும் வழலைப் போக்கைம்பதுண்டு
வெண்டா நூல்கள் இது போதும்
விடாதே நூல்கள் ஒருத்தருக்கும்
கண்டாய் அருநூல் வெளிவிடாத
காட்சி யெழுதி முகிந்ததுவே (626)

வைத்தியங்கடைக்காண்டம் அறுநூறு எழுதி முகிந்தது.
முற்றும்.

2720. சூலை நிதானம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2098
ஆ. ல/408

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. சூலை நிதானம்

இ. மருத்துவம்
ஈ. செய்யுள். 76

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு 30 பக்கம்
ஆ. நீளம் 20 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. மிகக்கிறுக்கலான கையெழுத்து. பிழைகளும் விடுபாடு
களும் அதிகம்
ஊ. சிதைவுற்ற நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியான் வகுத்து நால்வர்க் கருளிச்செய் ஆயுள் வேதத்து
ஓதிய சூலையீ ரோன்பா னுறுபெருங் குணங்க டம்மைத்
தீதுறு சாத்தி யங்கள் அசாத்தியம் செய்ம ருந்து
கோதையே இவைகள் எல்லாம் குறித்து நீ யறிந்து
கொள்ளே. (1)

ஆ. முடிவு

திருகுக் கள்ளி வேர்பட்டை
சிறக்கத் தட்டி யரைப்படியும்
உரிய எண்ணெய் த்னிலிட்டே
ஊறிக் காய்ந்தால் வடிகொண்டே
இருகால் கரங்கள் பொருத்துகளில்
வைத்துத் தடவி வெந்நீரில்
மருவும் புளியின் இலைகூட்டி
மாதே வார்க்கில் வலிவிடுமே. (76)

(இதற்குமேல் எழுதப்பெற வில்லை)

2721. ஆறாதார தரிசனம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2099_1
ஆ. ற/251

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. ஆறாதார தரிசனம்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள். 31

3. தோற்றக் கூறுகள்

அ. 17 ஏடு: 34 பக்கம்
ஆ. நீளம் 30 செமீ, அகலம் 3 செமீ,
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. 16ஆம் ஏட்டுக்குமேல் இருக்க வேண்டியவை காணப்படவில்லை. உள்ளவை நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நாற்சதுரம் மேவிவளர் கணேசனுக்கும்
நல்லருளைத் தந்தருளும் பிரமாவுக்கும்
பாற்கடலில் பள்ளிக்கொண்ட திருமாலுக்கும்
பன்னிரெண்டின் மேல்நின்ற இந்திரர்க்கும்
மேற்சதுர மானமயேஸ் வரர்தமக்கும்
விந்துவதில் நின்றிலங்கும் சதாசிவனுக்கும்
தீர்க்கமுடன் நாவாற யாவருக்கும்
செய்பூசை செப்புகிறேன் நினக்குச்செயவே.

இப்பாடலும் இதனையடுத்து "நாதமென்று" எனத் தொடங்கும் விருத்தமும் நூலுக்குப்புறம்பானவை போலும். மூன்றாவதாக உள்ள " கும்பிட்டுக் கொண்ட" என்னும்செய்யுளே முதற்பாடலாகக் காட்டப்பட்டுள்ளது.

ஆ. முடிவு

கலித்துறை :-

கலிகாலந் தன்னில் மாயைப் பெருங்குழி கடந்து மென்மேல்
நலியாது தேகம் வலுவாகும் விந்து நாதமதாயல்
சலியாது காயம் அழியாது தேகம் சாவிலைகாண்
மெலியாது உள்ளம் வசியைவா வென்று விரும்பினனே. (29)

(முதல் மூன்றடிகளிலும் தளை தட்டுகிறது. இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

2722. அகத்தியர் தீட்சை 10

1. நூலகக் குறிப்புகள்

அ. 2099_2
ஆ. ற/251

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் தீட்சை 10
இ. மருத்துவம்
ஈ. செய்யுள். 10

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு 4 பக்கம்
ஆ. நீளம் 30 செமீ, அகலம் 3 செமீ,
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வானைத்தா வியமகாப் பொதிகை தன்னில்
மகத்தான ரிஷியினுட வாக்கு நேர்மை
பானைத்தா வியபூசை வாம பூசை
பரிவான சிவயோகப் பண்பே கேளீர்
மீனைத்தா வியரா‑சி மீன ராசி
விளங்கிநின்ற கன்னிமுதல் வில்லு மேடஞ்
சேனைத்தா வியராசி யாந்து லாத்தின்
சென்மரா சிக்கருவைச் செப்பு றேனே.

ஆ. முடிவு

தானென்ற ஆட்சியோடு உறவு விட்டுச்
சத்துருவா மஙகிசத்தில் கிரகங்கள் நின்றால்
மானென்ற உலகத்தே ஆசை கொண்டு
மாளுமட்டும் புலம்பியல்லோ மாள்வா ரய்யோ!
கோனென்ற ராசியுள்ளே கோளைப் பாரு
கூறான அங்கிசத்தின் ஏற்றம் பாரு
பானென்ற கற்பமுண்ணச் சொன்னேன் மைந்தா
பாருலகி லறிந்தவர்க்கு மறையீ வேனே. (10)

5. பிற செய்திகள்

இந்நூற்பெயர் த.ப.க சுவடி எண் 156_4 இல் இருந்து (நூல் எண் 263) கண்டறியப்பட்டது. இப்பாடல்கள் அகததியர் தீட்சை நிதி என்னும் ஒருபெரும் நூலின் பகுதி போலும். (காண்க. நூல் எண் 569)

இதையடுத்து இரண்டு ஏடுகளில் புணர்ந்த காலத்தைக் கொண்டு கரு ஆணோ பெண்ணோ என அறியும் வகை கூறப்பட்டுள்ளது.

2723. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்
அ. 2100
ஆ. ல/409

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 71 ஏடு 142 பக்கம்
ஆ. நீளம் 26.5 செமீ., அகலம் 3 செமீ.,
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. 1-16, 30, 34, 35, 42-50, 52, 59-60, 66, 84-93, 101-103, 110-116, 118உக்கு மேல் இருக்க வேண்டிய ஏடுகள் இல்லை. உள்ளவை நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
கண்டந் தன்னில் மேல்மூண்டு
கதிக்க மண்டை வரட்சிதன்னால்

துண்டப் புருவங் கூடுதலில்
        சுழியில் கண்ணில் குத்துண்டாம்
மண்டுந் துயர மிகவுண்டாய்
        வலைபோல் கண்ணுந் தெரிவரிதாய்
மண்டை முழுது மிதுகுற்றும்
        வகுத்துங் கபால வியாதியிதே.

ஆ. முடிவு

சதுரக் கள்ளிவிரை 1/4 படி, பங்கம் பாளைவிரை 1/4 படி, காஞ்சுரம் விரை 1/4 படி, நொச்சிவேர் 1/4 விராகனெடை வெறும்புடத்தில் தயிலம் வாங்கின பிறகு வகைக்கு வேப்ப எண்ணெய் 4 படி, நல்லெண்ணெய் 4 படி, பசுவின் பால் உழக்கு, நொச்சிச் சாறு உழக்கு, குப்பைமேனிச்சாறு உழக்கு, கண்டங்கத்திரிச்சாறு உழக்கு, கையாந்தகரைச்சாறு உழக்கு, பொன்னாங் காணிச் சாறு உழக்கு......

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2724. மனையலங்காரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2101
ஆ. ற/252

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. மனையலங்காரம் - மூலமும் உரையும்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 28 ஏடு 56 பக்கம்
ஆ. நீளம் 21.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
மனைதனில் வந்து நின்று வாகுடன் பார்த்து நோக்கி
அளவது நீளம் பார்க்கில் ஆனதோர் மனையை நோக்கி
நன்மனை எடுக்க லுற்ற நாயகன் ராசி தன்னை
முன்வலம் ஆகக் கொள்ளில் முன்மதன் என்றும்
வாழ்வான்
பின்னிடை யாகக் கொள்ளில் பிணியொடு கேடதாமே. (1)

ஆ. முடிவு
சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை, தை, மாசி இந்த எட்டு மாதங்களுக்கும் திசை மாதங்கள் என்று பேர். இந்த மாதங்களிலே வீடுகட்டவும், மனை குடிபுகவும் நன்று. பங்குனி, ஆனி, புரட்டாசி, மார்கழி இந்த நான்கு மாதங்களும் மூலை மாதங்களா படியினாலே வீடுகட்டவும். மனை குடிபுகவும் ஆகா.

அயன் நூல் சாத்திரம் முற்றும்.

இ. பிற்குறிப்பு
1024ஆம் வருடம் பங்குனி மாதம் 24ஆம் தேதி பனையூர் மீனாட்சியம்மன் கோவிலிலிருந்து எழுதினது. குலசேகர ராசா அவர்கள் கட்டிவைத்த கோவில். சொக்கர் மீனாட்சி அம்மன் கோவில், அதிலிருந்து எழுதினது நல்லசிவன். ஏடு நீடூழி காலம் வாழ்க. சொக்கலிங்கம் துணை.

2725. ஆரூட நூல்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2102
ஆ. வ/116

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. ஆரூட நூல்
இ. சோதிடம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 80 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 64 ஏடு: 128 பக்கம்
ஆ. நீளம் 21.5 செ.மீ., அகலம் 2 செ.மீ.,
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4_5 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 1_16 ஏடுகள் இல்லை. உள்ளவை நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
வெள்ளாட்டியைக் கொண்டால் நல்லதாகாதோ?:

1. வெள்ளாட்டியைக் கொண்டால் ஒருத்தாடிக்குப் போய்விடும்
2. ஏற்றுக் கொண்டால் மேலுண்டு.
3. ஏற்றுக் கொண்டால் ஆணிவரும்.
4. உத்தியோகம் ஆலசியத்திலேயாகும்.

ஆ. முடிவு
இந்தக்குறி படுமோ படாதோ?

6. இந்தவிசை அழைக்கப் போனால் வருவார்கள்.
7. இந்தப் பந்தனம் ஆலசியமாய் விடுவார்கள்.
8. இவர்பேரில் சமுசயம்.
9. இந்த உடைமை வசமாகும்.

(இதற்கு மேல் ஏடுகள் இல்லை)

2726. கொங்கணர் தண்டகம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2103_1
ஆ. ற/253

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. கொங்கணர்
ஆ. கொங்கணர் தண்டகம்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள். 56

3. தோற்றக் கூறுகள்
அ. 15 ஏடு: 30 பக்கம்
ஆ. நீளம் 20 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. அழகிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அண்டமெனு ஏமகூட மலையில் வாழும்
ஆதிநந்தி கைலாசர் மூலர் போகர்
எண்டிசையும் நடனமிடும் சிலம்பைக் கண்டே
ஏகாந்த கொங்கணவர் பாதம் போற்றிக்
கண்டதொழில் அடக்கமதாய்த் தண்ட கத்தில்
கருவாகப் பாடுதற்குக் கமலங் காப்பு
மண்டலத்திற்கு ஆதார மான நந்தி
மகத்தான (மூ)லகண பதிகாப் பாமே. (1)

ஆ. முடிவு

ஆமப்பா தண்டகந் தன்னைப் பார்த்து
ஆதியந்த பூரணத்தை அறிவால் கண்டு
ஓமப்பா குண்டலியைக் கண்டு தேறி
உண்டாகும் —சியைநீ உகந்து நின்றால்
நாமப்பா சொல்லுகிறோம் மண்விண் ரெண்டும்
நாட்டமாய்க் கண்டுகொள்ளும் ஆதி யந்தம்
தாமப்பா தன்னிலையில் தானாய் நின்றால்
சதாகாலம் பூரணத்தில் சார்வாம் முற்றே. (51)

2727. கடைப்பிள்ளை ஏகாட்சர பூரணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2103_2
ஆ. ற/253

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கடைப்பிள்ளை
ஆ. கடைடபிள்ளை ஏகாட்சர பூரணம் (பூசாவிதி)

இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 37

3. தோற்றக் கூறுகள்
அ. 12 ஏடு; 23 பக்கம்
ஆ. நீளம் 20 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. அழகிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
ஆதியென்ற சுழிமுனையை தியானம் பண்ணி,
அதன்பிறகு
அரிநமோ நன்றாக என்று சொல்லி,
நிரஞ்சனமாகச் சற்குருவே துணையென்று எண்ணி,
ஓதியதோர் மந்திரத்திற்கு ஈறாய் நின்ற
ஓம் நமோம் கணபதி காப்பாமே. (1)

ஆ. முடிவு
பண்ணப்பா பூசைவிதி நன்றாய்ப் பாரு
பக்திகொண்டு தீட்சையிலே பதிவாய் நில்லே
நண்ணப்பா ... .

(இது 37ஆம் பாடல். இதற்குமேல் எழுதப்படவில்லை)

2728. மலைவாகடம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2104
ஆ. ல/410

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. மலை வாகடம்

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 48 ஏடு; 96 பக்கம்

ஆ. நீளம் 25 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சிதைவுற்ற நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கோராக்க முட்டி வகை நாக அர்ச்சுனர் காஞ்சியில் அல்லநாதன் கோவிலுக்கும் உமையாள் கோவிலுக்கும் நடுவே ஒரு பிள்ளையார் கோவிலுண்டு. அதற்குப் பிறகு ஒரு கிணறு உண்டு. அதன் கரையிலே ஒன்பது முழக்கல்லுண்டு. எழுதிகிடக்குது. இதுக்கு ஒரு பிரமாணங் கண்டங் கண்டமாகக் கீறிக்கிடக்கும் காஞ்சியில் கல்வெட்டி வைத்துப் பாண்டவரும் வாலியும் ஸ்ரீவிட்டுணுவும் தங்களத்தம் வைத்தார்கள்.

ஆ. முடிவு

சிலைமண் செய்து நானாழி கரிப்பட உருக்கச் செம்பாம். இந்தச் செம்பு முக்கழஞ்சு உள்ள மாற்றில் பொன்னரைக் கழஞ்சும் இது ரெண்டும் கூட்டி உருக்கிக் காண்டாகம் போலேதாயு மூடியுமாகக் கொட்டியதில் கழஞ்சு ரசம்

விட்டு மனோசிலை கால கெ.செம்புக்கம்பி கொண்டு கட்டித் திருவாட்டான் காலில் வைத்து நூற்றிருபது ...... இலுப்பை எண்ணெய் விளக்கேற்றி வைத்து அந்தக் காண்டாகம் வைத்து ....

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2729. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2105

ஆ. மூ/73

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ......

ஆ. மாந்திரீகம்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 17 ஏடு; 34 பக்கம்

ஆ. நீளம் 35 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்

உ. தெளிவான கையெழுத்து. யந்திரங்களும் விளக்கமாக உள்ளன

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்.

கணபதி அட்சரம்:-

அஞ்சானையும் ஆறுமுக கணபதியும் நரசிங்கார மூர்த்தியும் அநுமாராயின்னம் முன்நிற்கச் சிவா. சகல சூனியத்துக்கும்.

ஆ. முடிவு
மாடனுக்குரிய யந்திரம்.

5. பிற செய்திகள்
இச்சுவடி முழுவதிலும் பலயந்திரங்கள் மூலமந்திரத்துடனும் பூசை முறையுடனும் எழுதப்பட்டுள்ளன.

2730. சட்டைமுனி நிகண்டு

1. நூலகக் குறிப்புகள்
அ. 2106_1
ஆ. ல/411

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. சட்டைமுனி
ஆ. சட்டைமுனி நிகண்டு
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 1124

3. தோற்றக் கூறுகள்
அ. 107 ஏடு; 214 பக்கம்
ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 4 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்
உ. சற்றுக் கிறுக்கலான கையெழுத்து
ஊ. மிகச் சிதைவுற்ற நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
காண்க: தொடர் எண் 2076

ஆ. முடிவு
பாரே உபரசம் பார்க்கலாம் சித்திக்கு
தாரேநற் பாசாணம் தான்பின்பு தின்னலாம்
வேரே தழையே விழுந்து சிலையாகில்
தாரேநற் கொள்ளத் தொலையாத கற்பமே. (1124)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2731. சட்டைமுனி வகாரம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2106_2
ஆ. ல/411

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. சட்டைமுனி
ஆ. சட்டைமுனி வகாரம்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 203

3. தோற்றக் கூறுகள்

அ. 31 ஏடு; 62 பக்கம்

ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 4 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்,

உ. தெளிவான கையெழுத்து

ஊ. ஈற்றில் இருக்கவேண்டிய ஏடுகள் காணப்படவில்லை. சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நிற்குணமாய் நிர்மலமாய் நிரஞ்சனமு மாகி
நேரான பூரணமாய் மனமெட்டாத
சற்குணமாய்ச் சமரசமாய் ஆறுந் தாண்டிச்
சச்சிதா னந்தவெளிக் கப்பால் நின்ற
தற்குணமாய் எனையாண்ட சின்மயத்தைப் போற்றிச்
சமர்சமாய் வேதாந்த வாதஞ் சொல்வேன்
நற்குணமாஞ் சனகாதி ரிஷிகள் பாதம்
நலம்பெறவே நாவில்வைத்துப் பாடு றேனே. (1)

ஆ. முடிவு

கட்டியதோர் பாஷாணக் கருவோ கோடி
காட்டையிலே மெழுகாகும் உபரசங்க ளெல்லாம்
முட்டையிலே கவசித்து ரவியிற் போட
மூன்றுமொன்றாய்க் கரைந்துள்ளே மெழுகு மாகும்
நெட்டையிலே இம்மெழுகு பரிச வேதை
நேரான அண்டவித்தை சரக்கெல்லாங் கொல்லும்
கட்டையிலே வாசி ....
.... (203)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2732. இந்திர சாலம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2107
ஆ. ற/254

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அகத்தியர்
ஆ. இந்திரசாலம்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 52

3. தோற்றக் கூறுகள்
அ. 9 ஏடு; 18 பக்கம்
ஆ. நீளம் 30.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 3 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காரணமாய் மூலவட்டந் தன்னில் நிற்கும்
கணபதியும் வல்லபையுந் தேவர் காப்பு
பூரணமாய் பராபரையுஞ் சிவனு நந்தி
பொருந்திநின்ற பஞ்சகர்த்தாக் கணங்கள் காப்பு
மாரணமாந் தேவினை யாடும் எந்தன்
மாலயனு யருள்சேர்ந்த குமாரன் காப்பு
நாரணனும் நான்முகனும் அரியாய் நின்ற
நலமான வேதங்கள் காப்புத் தானே. (1)

ஆ. முடிவு

பாரப்பா இன்னமொரு பேதனந்தான் கேளு
        பாங்கான தைவேளை பிடுங்கிக் கொண்டு
நேரப்பா லிங்கத்தில்ப் பூசிப் பின்பு
        நீங்காமல் நீயவளைப் புணர்ந்தா யானால்
ஆரமிட்ட திரியோடே புணர்ந்தா யானால்
        சாகுமட்டும் உனைப்பிரியாள் பாரு பாரே.

(இப்பாடலில் மூன்றடிகளே உள்ளன. இதற்குமேல் எழுதப்படவில்லை)

5. பிற செய்திகள்

இந்நூலின் பெயர் இத்துறையின் சுவடி நூலக நூல் எண் 276 ஆல் அறியப்பட்டது.

2733. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்

அ. 2108

ஆ. ல/412

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ......

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 8 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்

ஆ. நீளம் 22 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சவ்வீர செந்தூரம்:- சவ்வீரம் . . . . 1, கெந்தகம் . . . 1, அரப்பொடி . . . . 1, ஆக நான்கு மருந்தும் சரிஎடை வாங்கி எருக்கலம் பால்விட்டு ஏழுநாள் அரைத்து வைத்துக் கெங்காசலக் குப்பியில் அடைத்து நெல்பானைக்குள் வைத்து நாற்பது நாள் கழித்து எடுத்துப் பார்த்தால் செந்தூரமாய் இருக்கும். அந்தச் செந்தூரத்தைக் கருப்பு கட்டியில் ஒரு பணவிடை மருந்து கொடுக்கவும். பத்தியம் காக்கவும். வாய்வு, குன்மம் தீரும்.

ஆ. முடிவு

கோழிகுஞ்சு, முட்டைத் தோட்டை சுத்த சிலத்தில் நனையப் போட்டு ஊறப் போட்டு சலவையுரித்துப் போட்டு நன்றாய்க் கழுவி சிறு நீரில் சுண்ணாம்பு முவருப்புங் கரைத்துத் தெளிவித்து இதிலிந்த. . . . . போட்டு வத்த காய்ச்சியெடுத்து அஞ்சுதரம் சுத்த சிலம்விட்டுக் கழுவிப் போட்டு காயவைத்து மண் குகையிலிட்டுச் சில்லிட்டு சீலைமண் செய்து குகைய . . . . க உலர்த்தியெடுத்து ஆற வைத்து குகைதீர்ந்து . . . .மேலோடு மூடி மண்செய்து வைத்திருக்க பொலிந்து நீரும் பற்பமாம்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2734. குரு நாடி 15

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2109_1
   ஆ. ல/413

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. குருநாடி 15
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 15

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்
ஆ. நீளம் 18 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காலொடு கைகள் தானும் கழுத்தும்மெய்க் குடைத்துக் காட்டும்
மேலொடு கண்கள் தானும் விழிகனல் எரித்து நிற்கும்
பால்முலை வயிறு தானும் பற்றியே சுரள வாங்கும்
ஆலிலை வயிறு நோவாம் இருளுவந் தணைந்த காலே. (1)

ஆ. முடிவு

சாத்துகின்ற பெருவிரலில் பூத நாடி
சங்கையுடன் ஆள்துண்டி வாத மாகும்
ஏத்தகரம் நடுவிரலில் பித்தம் என்க
இசைந்ததிரு விரலதுவே அய்ய நாடி
கோர்த்தசிறு விரலதுவே மரண நாடி
கூர்ப்புடனே பரப்பளவில் செவிட தாகும்
மாத்தமில்லா குருநாடி தன்னை ஆய்ந்த
மலருவதார் ஏறுதில்லை ஆய்ந்து பாரே. (15)

o

குருவே துணை.

2735. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்
அ. 2109_2
ஆ. வ/413

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 31 ஏடு; 62 பக்கம்
ஆ. நீளம் 18 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4_7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வயிற்று வலிக்கு:
மூசூரைச் சாரணை வேர் கொண்டு வந்து தண்ணீர்விட்டுக் கழுவிப் போட்டு வில்லையாய் நறுக்கிக் கொண்டு, உரலில் போட்டு பசுவின் பால்விட்டு இடித்து, அப்பால் அம்மியில் அரைத்து வில்லையாய்த் தட்டி ரவியில் காயவைத்து, அப்பால் பொடிசெய்து வடிகட்டி, எடைக்கெடை சீனி கலந்து விரகடிப் பிரமாணம் சாப்பிட குன்மம் முதல் ஆறும் தீரும் காண். மண்டலம் சாப்பிடவும். இச்சாபத்தியம்.

ஆ. முடிவு:

வங்க பற்பம்: —

ஆவரை இலையை . . . . . ப்படுத்தி, கோணியினில் பரத்தி, வங்கத் தகட்டைப் பிச்சுப் போட்டு மேலே பொடியைப் போட்டுச் சுருட்டி இருபுறமும் நெருப்பு வைக்கவும். பற்பமாம்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை).

2736. சட்டைமுனி வகாரம் 1000

1. நூலகக் குறிப்புகள்
   - அ. 2110_1
   - ஆ. ந/255

2. உள்ளீடு: நூல் விவரம்
   - அ. சட்டைமுனி
   - ஆ. சட்டைமுனி வகாரம் 1000
   - இ. பல்வகை நூல்கள்
   - ஈ. செய்யுள் 1001

3. தோற்றக் கூறுகள்
   - அ. 101 ஏடு; 202 பக்கம்
   - ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 4 செ.மீ.,
   - இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   - ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
   - உ. தெளிவான கையெழுத்து
   - ஊ. 1_33, 42_45, 59, 60, 80, 88_91, 111, 114_119, 122, 125, 125, 129, 130_132 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. மிகமிகச் சிதைவுற்ற நிலை.
   - எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கோடியொன்று சேர்ந்ததுவுங் கொஞ்சங் கொஞ்சங்
குறுகாது விரிந்தோடுங் கூறப் போகா
நாடியின்று தங்கமே சுண்ணாம் பானால்
நாதமென்ற வேதைமட்டும் தொடர்ந்தே ஆடும்
வாடிநின்று மயங்காதே தங்கம் வித்து
மற்றதெல்லாம் வித்தல்ல சூதம் விந்து
ஓடிநின்ற யிராகமெல்லாந் தங்கத் தாலே
உத்தமனே சூதத்தால் வண்ண மாச்சே. (217)

ஆ. முடிவு:

ஒன்றான சின்மயத்தின் பதத்தைப் போற்றி
உற்றதொரு கயிலாசத் தேக மாக
நன்றாக ஈன்றதா யுன்மனையைப் போற்றி
நலமான நாதாக்கள் பதத்தைப் போற்றிக்
கன்றான கயிலாச தேகமாய் வந்த
காரணமா மூலருட பதத்தைப் போற்றித்
தன்றான வாதநூ லாயிரமுஞ் சொல்லிச்
சாதகமாய்ப் பாடிவிட்டேன் வாதம் முற்றே. (1001).

இ. பிற்குறிப்பு

சட்டைமுனி நாயன் அருளிச் செய்யப்பட்ட வகாரம் ஆயிரம் சாதாரண வருஷம் சிங்க மாதம் 25ஆம் தேதி ஆதி வாரமும் அஸ்த நட்சத்திரமுங் கூடின அமிர்த யோகத்தில் எழுதி முற்றுதலானது. சம்பூரணம்.

பேரூர் - இத்தலம் கோயமாபுரி நகரத்திலிருந்து.

5. பிற செய்திகள்

இந்நூல் சட்டைமுனி சூத்திரம் 1000 எனவும் சில ஏடுகளில் வழங்கப்படுகிறது.

2737. சட்டைமுனி முன்ஞானம் 100

1. நூலகக் குறிப்புகள்

அ. 2110_2

ஆ. ற/255

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சட்டைமுனி

ஆ. சட்டைமுனி முன் ஞானம் 100

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 100

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு; 32 பக்கம்

ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 4 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நூல் ஏட்டெண் 160 இல் தொடங்குகிறது. மிகச் சிதைவுற்ற நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூலமுதல் ஆறுதலங் கீழே தள்ளி
முதிர்ந்துநின்ற மேலாறும் அடுத்து நோக்கிக்
கோலமுடன் உன்மனையைத் தாண்டி யேறிக்
கொடியதொரு ஞானசக்திக் குள்ளே மைந்தர்
பாலமென்ற கேசரியா மவுந்த நாடிப்
பராபரமாம் அந்தத்தின் ஞானம் முற்றிக்
காலமென்ற பிறப்பிறப்புங் கடந்து போகுங்
கைவிட்ட சூத்திரம்போற் சடமு மோங்கே. (1)

ஆ. முடிவு

ஆகவப்பா இருபத்தி யஞ்சு நூறு
அறைந்திட்டேன் வாதவித்தை அறிந்து கொள்ளு
ஆகவப்பா இதுக்குள்ளே ஞானம் நூறு
அப்புறத்தே சொன்னதொரு ஞானம் நூறு
ஆகவப்பா இருபத்தி யேழு நூறு
அறிந்தமட்டுஞ் சொல்லிவந்தேன் அறிந்த வல்லோர்
ஆகவப்பா பார்த்துரை .... இகபரமுஞ் சித்தி
ஆதியென்ற குருவருளால் சொன்னேன் முற்றே. (100)

இ. பிற்குறிப்பு

1850ஆம் ஆண்டு சாதாரண வருடம் கன்னி, மாதம் 8ஆம் தேதி .... வாரம் உத்திரட்டாதி பிரதமையுங் கூடின அமிர்த யோகத்தில் எழுதி முற்றுதலானது.

2738. சட்டைமுனி பின்ஞானம் 100

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2110_3
   ஆ. ற/255

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. சட்டைமுனி
   ஆ. சட்டைமுனி பின்ஞானம் 100
   இ. தத்துவம்
   ஈ. செய்யுள் 101

3. தோற்றக் கூறுகள்
   அ. 7 ஏடு; 14 பக்கம்
   ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 4 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சுவடி ஏட்டெண் 176இல் தொடங்குகிறது. 177, 181, 183, 184, 186–188 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. மிகச் சிதைவுற்ற நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆ. முடிவு

காண்க: தொடர் எண்: 2022–2

இ. பிற்குறிப்பு

1850ஆம் ஆண்டு சாதாரண வருடம் கன்னி மாதம் 9ஆம் தேதி சோம வாரம் ரேவதி நட்சத்திரமுந் துதிகையுங் கூடின சுபயோகத்தில் முற்றுதலானது.

2739. சட்டைமுனி காயகற்பம் 100

1. நூலகக் குறிப்புகள்

அ. 2110–4

ஆ. ற/255

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சட்டைமுனி

ஆ. சட்டைமுனி காயகற்பம் 100

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்: 101

3. தோற்றக் கூறுகள்

அ. 14 ஏடு; 28 பக்கம்

ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 4 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நூல் 192ஆம் ஏட்டில் தொடங்குகிறது. 204, 205 எண்ணிட்ட இரண்டேடுகள் காணப்படவில்லை. பல ஏடுகள் முறிந்துள்ளன. மிகச் சிதைவுற்ற நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாடுகிறேன் காயகற்பம் ஐங்கரனே காப்பு
பரிவான சின்மயத்தின் பாதங் காப்பு
நாடுகிறேன் சித்தருட பாதங் காப்பு
நாதாந்த மனோன்மணித்தாய் பாதங் காப்பு
சூடுகிறேன் என்றாலும் என்நூலைப் போலச்
சொல்லார்கள் காயசித்திக் கிதுதா னப்பா
சூடுகிறேன் காயசித்திக் காதி யங்கம்
சொல்லுகிறேன் நன்றாகக் கேளு கேளே. (1)

ஆ. முடிவு

பாரப்பா காயசித்தி செய்யும் மார்க்கம்
பஞ்சிட்டுப் பாரம்வைத்தாற் போலே சொன்னேன்
ஏரப்பா சித்தர்சொன்ன கற்பத் துக்கும்
என்னுடைய நூலுக்கும் இசைத்துப் பாரு
தூரப்பா தொட்டுமுடி வரைக்குஞ் சொன்னேன்
சொல்லாதே ஒளித்திட்டார் சித்த ரெல்லாம்
காரப்பா குருபதத்தைக் காத்தால் சித்தி
காயசித்தி பாடினது காட்சி முற்றே. (101)

இ. பிற்குறிப்பு

1850ஆம் வருடம் சாதாரண வருடம் கன்னி மாதம் 15ஆம் தேதி ஆதிவாரம் . . . . சுபதினத்தில் எழுதி முற்றுதலானது.

5. பிற செய்திகள்

இதே நூல் சட்டைமுனி. கற்பம் 100 எனவும் வழங்கப்படுகிறது. காண்க: இத்துறையின் சுவடி நூலக நூல்எண் 1164.

2740. சட்டைமுனி சூத்திரம் 200

1. நூலகக் குறிப்புகள்
   - அ. 2110_5
   - ஆ. ற/255

2. உள்ளீடு: நூல் விவரம்
   - அ. சட்டைமுனி
   - ஆ. சட்டைமுனி சூத்திரம் 200
   - இ. மருத்துவம்
   - ஈ. செய்யுள் 204

3. தோற்றக் கூறுகள்
   - அ. 26 ஏடு; 52 பக்கம்
   - ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 4 செ.மீ.,
   - இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   - ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்
   - உ. தெளிவான கையெழுத்து
   - ஊ. நூல் 224ஆம் ஏட்டில் தொடங்குகிறது. 239, 242, 243, 245, 246, ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. மிகமிகச் சிதைவுற்ற நிலை
   - எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சூத்திரம் ஓதும் முன்னே சொல்லுவேன் கணேசன் காப்பு
சாத்திரம் நிறைந்து பொங்கிச் சராசர மேழுந் தானாய்த்

தோத்திரப் பொருளு மற்றச் சொல்லற்று மனமு மற்றுப்
போற்றிடும் பொருளாய் நின்ற பூரணங் காப்புத் தானே.
(1)

ஆ. முடிவு

பாரடா நிமிளையென்ற சுண்ணத் தோடு
பரிவான வீரமிட்டுச் சீனம் போட்டு
நேரடா புளுகிட்டு மத்திச் சேதான்
நிலையான சாரத்தின் மேலே பூசிக்
காரடா ரவியில்வைக்கப் பொங்கி நீறும்
கடும்சுண்ணங் கடுஞ்சுண்ணம் சார வேகம்
ஆரடா அதனுடைய வேதை சொல்வார்
அற்புதமோ நிற்புதமோ சுண்ணத் தாட்டே. (204)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2741. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2111
ஆ. மூ/74

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. மாந்திரீகம்
இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 32 ஏடு; 64 பக்கம்
ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 14 வரிகள்
உ. தெளிவான சிறிய கையெழுத்து
ஊ. 3-6, 9, 25 ஆகிய ஏடுகள் இல்லை. சுமாரான நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

'அரிலும் ஆதிமூலாய பரமகுருவே நமா' அகத்தியரை அழைத்துவந்த மாரன் சீரனே வாவா. நான் அகத்தியன் அல்லவோ மாரன் சீரனே என்னை நோக்கிய சத்துருவை நோக்கித் தம்பன மார மோகன்மார வசீகர மார உச்சாடன் மார அக்கு மார கத்திமார தோட்ட மார நாபமார பல்லி மார பிசாசு மார எதுரேறி எதுரேறி இருளனை அடி ......

ஆ. முடிவு

ஓம் அம் ஔ வும் அக்கினி ரீங்கார உத்தண்ட வீரபத்திரா என சத்திராதியை நான் நினைத்த பேரைப் பிடி பிடி மறிமறி துள்ளு துள்ளு அடி அடி கொல்லு ஓம்பட்டு சிவ ஓம்பட்டு சிவ ஓம்பட்டு சிவா. இதற்குச் சக்கரம்.

5. பிற செய்திகள்

இச்சுவடியில் யந்திரங்கள் அழகாக வரையப்பட்டுள்ளன.

2742. சூடாமணி நிகண்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 2112
ஆ. ச/62

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. மண்டல புருடர்

ஆ. சூடாமணி நிகண்டு 11ஆம் தொகுதி - மூலமும் உரையும்.

இ. இலக்கணம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 36 ஏடு; 72 பக்கம்

ஆ. நீளம் 40 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு இரு பத்திகள். பத்திக்கு 4,5 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. 1, 2, 10, 35, 38-43 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. சில சிதைவு. பொதுவாகச் சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இகல்பகை வலிபோர் முப்பேர் இகுளையே தோழி
நட்பாம்
புகரென்ப மழைக்கோள் குற்றம் புறகெனும் நிறமு
முப்பேர்
நகமலை உகிர்ம ரப்பேர் நகைமகிழ்வு ஒளிசி ரிப்பாம்
ககனம்விண் படைகா டென்ப கடவுள்தே முனிநன்
மைப்பேர்

ஆ. முடிவு

எண் என்பது எள், இலக்கம், எளிமை, சோதிட நூல், ஆலோசனைக்குப் பெயர். கண் என்பது இடம், மரக்கணு, மூங்கில், கண்ணுக்குப் பெயர். காஞ்சி என்பது மாதரி டையணியுள் ஏழு கோவை, ஓர் பண்ணுக்கும் பெயர். விண் என்பது மேகம், தேவலோகம், ஆகாயத்துக்கும் பெயர்.

விபுலமென்பது பூமி, அகலம், பெருமைக்கும் பெயர். பண்ணை என்பது கழனி, குளம், மருதநிலம், விலங்கின் படுக்கையிடத்துக்கும் பெயர். (18)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

2743. சர நூல் - மூலமும் உரையும்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2113
ஆ. வ/117

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. சர நூல்-மூலமும் உரையும்
இ. சோதிடம்
ஈ. செய்யுளும் உரையும். அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 17 ஏடு; 34 பக்கம்
ஆ. நீளம் 25.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6_7 வரிகள்
உ. தெளிவான பெரிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஏழு நிலைகொண் டெழுந்த திருவாசல்
வாழும் படிநின்ற வாரணமே - தாழுஞ்
சடையான் புலியூர் தனியானைக் கன்றே
கடையாம் பிறப்பின்றிக் கா.

உமைமா துக் கீசன் உரைத்த சர நூல்
அமையாப் பொருளையறி விப்பான்- அமையாப்
புவிமடந்தை பூமடந்தை போர்மடந்தை யான
கவிமடந்தை இக்கதைக்கே காப்பு.

ஆ. முடிவு

அக்கினி உதிக்கும் போது சுவாசம் எட்டுவிரல் நீளம் மேல்நோக்கி ஓடும். வடிவு முக்கோணம்; நிறம் சிவப்பு; இதில் யாதொரு காரியமும் மத்திமம் என்றறியவும். வாயு உதிக்கும்போது கண்டத்தில் பிளக்கும் சுவாசம் நாலு விரல்நீளத்தில் ஒரு பக்கத்திலே ஓடும். வடிவு 84 . . .

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2744. திரிபுரை மாலை

1. நூலகக் குறிப்புகள்

அ. 2114
ஆ. ய/180

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . .
ஆ. திரிபுரை மாலை
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 30

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்
ஆ. நீளம் 19 செ.மீ., அகலம் 2 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகளும் விடுபாடு களும் மிகுதி

ஊ. ஓரிரு ஏடுகள் வலப்புறத்தே சிதைந்துள்ளன. பொது வாக நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மாதரி வீரி வயரவி காளி வி(ம)லைகுண
பூதரி யேக புராணந்தி காரணி பொற்கிரிவாழ்
நீதரி மந்திரச் சாடாட் சரியென்னு மென்னெஞ்சகத்து
ஆதர வாய்நின் றுதவும் திரிபுரை ஆனந்தியே. (1)

ராசவசிகரம்.

ஆ. முடிவு

எந்நேரம் உன்னைத் துதித்திடும் பேருக் கிடர்தவிர்த்து
நன்னய மாகவந் தாண்டுகொள் வாய்(நல்) நயமிலகும்
பன்னாகம் பூண்ட பரமர் இட(மவிர்) மெய்த்தவளே
புன்னை மலர்க்குழ லாளே திரிபுரை கோமளையே. 30

வாலையம்பிகை திரிபுரை மாலை எழுதி முகிந்தது.

முற்றும்.

இ. பிற்குறிப்பு

பிரமோ(தூத) வருஷம் ஆனி மாதம் முதல் தேதி காமாட்சியம்மன் கோவில் ஸ்தானிகம் மகாராஜராஜஸ்ரீ முத்துசாமி அய்யங்கார் குமாரன் செண்பக மாலை அய்யங்கார் திரிபுரை மாலை நீடூழி வாழ்க.

5. பிற செய்திகள்

இச்சுவடியில் அனைத்துப் பாடல்கட்கும் பிரயோக சக்கரமும் பயனும் மட்டும் உள்ளன.

நூலுக்குமுன் மூன்றேடுகளில் சில தனிப்பாடல்களும், இறுதியில் மூன்றேடுகளில் சில யந்திரங்களும் உள்ளன.

2745. வாமதேவர் சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2115

ஆ. ற/256

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. வாமதேவர்

ஆ. வாம தேவர் சூத்திரம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள். 63

3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு; 40 பக்கம்

ஆ. நீளம் 28.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ள.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6_8 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியந்த மேநிறைந்த சோதி பாதம்
அகண்டபரி பூரணத்தின் அறிவைக் கூட்டிப்
பாதியாய் முப்பொருளு மூன் றும் ஒன்றாய்ப்
பரவெளியாய் நின்றபரா பரையின் பாதம்
நீதியாய் வாரணத்தின் முகவன் பாதம்
நிறைந்தமலர் வாணிகுரு கந்தன் பாதம்
சோதியாம் நாதாக்கள் பாதம் போற்றிச்
சொல்லுவேன் சூத்திரத்தைச் சொல்லு வேனே. (1)

ஆ. முடிவு

என்னடா வலக்கரத்தால் சிரசைத் தந்தால்
அந்திடக் கரத்தில் மூன்றுவிடும் எந்திரம்
நன்னவே சூட்சாதி சூட்ச மாகச்
சாத்திரத்தால் வேதிநூலை யாராய்ந்து பார்த்து
இன்னமின்னம் சூட்சத்தில் வெளியாய்ச் சொன்னேன்
வீண்நாயாய்த் திரியாதே விரைந்து பாரே. (63)

(இப்பாடல் ஏட்டில் மூன்றடியாகத்தான் உள்ளது. இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2746. அகத்தியர் ஞான காவியம் 1000

1. நூலகக் குறிப்புகள்

அ. 2116_1
ஆ. ட/260

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் ஞான காவியம் 1000 - முதல் சருக்கம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 100

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு; 38 பக்கம்
ஆ. நீளம் 30 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8, 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியந்தப் பூரணமாய்ச் சுழியாய் நின்ற
அமர்ந்தசுழி மூலகண பதியே போற்றி
நாதிமறை யோர்களரன் உமைக்குச் சொன்ன
ஞான .... ரவியே போற்றி
நீதிமதி ரேசகமாய் பூரகமாய் நின்ற
நிகழ்ந்தபதி பாசஉப நிடமே போற்றி
சாதிபல உயிரெறும்பு சிவமே யான
சச்சிதா னந்தபரி பூரணமே போற்றி. (1)

ஆ. முடிவு

பாரடா காவியந்தான் அஞ்சு காண்டம்
பரிவான சவுமியசா கரமும் பாரு
ஏரடா இதனுடைய கோவை நாலும்
என்மகனே பார்த்துநீ ஈவாய் வாழ்வாய்
நூறடா சருக்கமது பாடல் நூறுள்
உண்மையென்ற மூலகண பதியே சொன்னோம்
ஏரடா இரண்டா(ன) சருக்கம் காண
எடுத்துரைப்போம் மெஞ்ஞானத் தாதி முற்றே. (100)

தேவி சகாயம். குருதுணை.

2747. அகத்தியர் ஞான காவியம் 1000

1. நூலகக் குறிப்புகள்

அ. 2116_2
ஆ. ட/260

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் ஞான காவியம் 1000 - இரண்டாம் சருக்கம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 101

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு; 38 பக்கம்

ஆ. நீளம் 30 செமீ., அகலம் 3.5 செமீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8, 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நூல் 20ஆம் எண்ணிட்ட ஏட்டில் தொடங்குகிறது. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதிமதிக் கப்பானி றைந்தரவி மெஞ்ஞான
அதீதசுட ரொளியினுட அகண்டம் போற்றி
சோதிம்தி மூலவெளிக் கப்பால் நின்ற
சுழிமுனையின் மும்மலக்குண் டலியே போற்றி
பாதிமதி யெவ்வுயிர்க்கும் பதியாய் நின்ற
பரப்பிரம சர்வசரஸ் வதியே போற்றி
வேதிமதி ஞானக்கடல் விளங்கா நின்ற
விளங்குதுரி யாதீத மெஞ்ஞானம் காப்பே. (1)

ஆ. முடிவு

ரெண்டான ஒன்றுடனே மூன்று சொன்னோம்
நேர்மையதாய் நூற்றிரண்டு பாட லுக்குள்
தென்றான தேறுவோர்க் கிந்நூல் வேணும்
சிவயோகி மவுனிகளும் இந்நூல் கொள்வார்
நன்றான ஞானமிது ஆயிரந்தான் மைந்தா

ஞானசித்தர் முனிவர்களுக் கிந்நூல் வேணும்
அன்றான சருக்கமிது இரண்ட தாச்சு
அருளினோம் ஆதாரம் ஆதி முற்றே. (101)

இரண்டாஞ் சருக்க முற்றும்.

இ. பிற்குறிப்பு
தெய்வானை நஞ்சன் எழுதினது.

2748. வள்ளித் திருமணக் கீர்த்தனைகள்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2117
ஆ. ஞ/257

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. வள்ளித் திருமணக் கீர்த்தனைகள்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 42 ஏடு; 84 பக்கம்
ஆ. நீளம் 14 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து

ஊ. 42ஆம் ஏட்டிற்குப்பிறகு இருக்க வேண்டியவை காணப் படவில்லை. நல்ல நிலை

ஏ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வந்திடும்நா ரதர்முனிவன் பரண்மீ துற்ற
வள்ளியுட மெய் யழகும் வடிவுங் கண்டு
விந்தைரதி யோசசியோ கமல மாதோ
மேனகையோ உத்தமிப்பெண் மின்னாள் தானோ
இந்தவுலகு இவளைப்போல் கண்ட தில்லை
என் றுமன யோசனையாய் எண்ணி எண்ணித்
தொந்தமென்ற புனங்காக்கும் பெண்ணைப் பார்த்துச்
சூட்சமதாய் முனிவசனஞ் சொல்லு வானே.

ஆ. முடிவு

நேத்தில்லா வேங்கைமரம் இன்னைக் கேது
நினைத்தவுட னேமரமா மோஎன்று வேடர்
கோத்திரத்தில் பெரியநம்பி ராச னோடு
கூடவந்த குறவரும்யோ சனைகள் செய்து
ஆத்திமனந் தேர்ந்துவனஞ் சுற்றிப் பார்த்தே
அவரவர்கள் பலவிதமாய் நினைந்தெல் லோரும்
சேத்தியுடன் வேங்கைமரம் தன்னைப் பார்த்து
....

(இதற்குமேல் ஏடுகள் இல்லை

5. பிற செய்திகள்

தருவும், ஆசிரிய விருத்தமும் மாறி மாறி இடம் பெற்றுள்ளன. உரையாடல் வசனங்கள் காணப் படவில்லை. சுவடியில்' பெயர் இல்லை. உரையாடல்கள் இல்லாததால் கீர்த்தனைகள் எனப் பெயரிடப்பெற்றது.

2749. மீனாட்சியம்மன் விருத்தம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2118
ஆ. த/50

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. மீனாட்சியம்மை விருத்தம்
இ. பிற தோத்திரங்கள்
ஈ. செய்யுள் 5

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. மிகக் கிறுக்கலான கையெழுத்து. பிழை மயம்
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருநிரந் தரிசடாட் சரிசாம் பவிகௌரி
        திரிசூலி மாமதங்கி
சிவசத்தி ருத்திரி ரு ....
        ...... பன் னகபூஷணி

5. பிற செய்திகள்

மேலே காட்டப்பெற்ற தொடக்கப் பகுதியில் பெரும்பகுதி இவ்வட்டவணைத் தொகுப்பாசிரியரின் யூகபாடமாகும். ஆறு பக்கத்திலும் ஒரு சீர் கூடத் தெளிவாக இல்லை. எனவே எடுத்துக்காட்டப் பெறவில்லை.

2750. (அட்டகர்ம) நிகண்டு

1. நூலகக் குறிப்புகள்
அ. 2119
ஆ. ந/258

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. (அட்டகர்ம) நிகண்டு
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 200

3. தோற்றக் கூறுகள்
அ. 20 ஏடு; 40 பக்கம்
ஆ. நீளம் 22 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
உன்னிய பொதிகை வாழும் ஒருமுனி அருளை யோதி
இன்னில நிகண்டு பாட இந்திர சால நூலில்
பன்னிய பாசை தோணப் பண்டித வேதன் நாவும்
கன்னியும் உமையும் ஈசன் கந்தனும் காப்புத் தானே. (1)

ஆ. முடிவு
பாரினில் இந்த முறைப்படி பார்த்து
தேறுநீ பாவம் செய்யவும் வேண்டாம்

ஆறிநீ பாரு அறுபத்து நாலும்
நேரிரு நூறு நிகண்டிது முற்றே. (200)

திரட்டு சாலத்திறவுகோல் அட்டகர்மத்து இந்த நிகண்டு எழுதினது முற்றும்.

2751. சோதிடச் செய்திகள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2120_1
ஆ. வ/118

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. சோதிடச் செய்திகள்
இ. சோதிடம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தழ 12 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 14 ஏடு; 28 பக்கம்
ஆ. நீளம் 19.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரிகள்
உ. சற்றுக் கிறுக்கலான கையெழுத்து
ஊ. முதல் நான்கு ஏடுகள் காணப்படவில்லை. உள்ளவை நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

(புதுமனைக்கு வாஸ்து நாட்டும்) குழியில் தோன்றுதல்:
எருத்தோன்றில் சாவு; புழுத்தோன்றில் பெருத்த மனையதாகும்;
எலும்பு தோன்றில் புருஷன் சாவான்; வெண்டலையோடு காணில் வேந்தரால் கேடுண்டாகும்

ஆ. முடிவு

முடிபெருத்து வட்டமிட்டால் திருவே சேர்வாள்
மூன்றிலொரு பங்குடைந்தால் முசிய வாழ்வு
கடுகளவு உள்விழுந்தால் ரத்தம் சேரும்
கண்முகங்கள் வேறானால் கர்ம நாசம்
அடியவரை யீடேற்றுங் கந்தன் (முன்னோன்)
ஐம்முகனே தேங்காய்க்குக் காப்புத் தானே.

(இது சுபகாரியத்தில் தேங்காய் உடைந்ததற்குப் பலன்).

5. பிற செய்திகள்

இச்சவடியில் மனையடி சாத்திரச் செய்திகள், திருமணப் பொருத்தம் பற்றிய செய்திகள், சில சகுனங்கள் எல்லாம் இடம்பெற்றுள்ளன.

2752. கூவல் சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2120_2
ஆ. வ/118

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. கூவல் சாத்திரம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 8 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்

ஆ. நீளம் 19.5 செமீ., அகலம் 3.5 செமீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. சற்றுக் கிறுக்கலான கையெழுத்து

ஊ. நூல் 18ஆம் ஏட்டில் தொடங்குகிறது. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நாக ராச னான ஆதி
        சேடன் முன்பு நண்ணிய
கூக மான சாத்தி ரக்கு
        ணங்கள் தன்னை யேமொ ழிந்து
ஆக மான செம்பொன் மார்பில்
        ஆதி யந்த மாய்நி றைந்து
ஏக போக மான சங்கர்
        ஈஸ்வ ரிக்கு ரைத்ததே.

ஆ. முடிவு

முல்லை கரிசல் முழுப்பாலை தான்வெளுப்பு
கல்லாங் குறிஞ்சி சிவப்பாகும் - நல்ல
மருதம் களி, மணல் நெய்தல் நிற(மாம்)
பரஞ்சொல்லி (யுள்ள) படி.

கொடிப்புற்றாவது புதுமணல் வைக்கும். ஊமைப் புற்றாவது கண் திறவாமல் போனா போலே இருக்கும். பல கண் புற்று கண் திறக்கும்.

2753. கூவல் சல்லியம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2120_3

ஆ. வ/118

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. கூவல் சல்லியம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 3 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 19.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆவாரை, ஆல், அரசு, அத்தி, இச்சி, மருது, புங்கு, புளி, இலுப்பை, நொச்சி, வஞ்சி, ஏழிலம்பாலை, நீர்ப்பலா, பாச்சட்டி, மாவிலிங்கி, இவை மரக்கரு .....

ஆ. முடிவு

இரா முன்போது பகல் பின்போது கீரினாப் போலே கீரிக் கிழக்கு நோக்கி இருந்து வடமேல் மூலையிலே முகத்தை வைத்து முன்பு போலே எண்ணிக் காண்பது. அன்று சந்திரன் நின்ற நாள் போய்ச் சந்திரன் நின்ற நாழிகை

அளவும் எண்ணுவது. அதைப் பெருநீர் என்பது. இராகு நின்ற வரை படுகிறது என்றறிவது. வெள்ளி நின்ற வரையிலும் நீருண்டென்பது. வியாழன் நின்ற வரையிலும் பூமி சல்லியம் என்பது. உத்திராடத்தின் பின்பே அபிசித்தை நிறுத்துவது . முன்பு அனுசம் முதல் நாள்களெல்லாம் 2 1/2 நாழிகையில் பெறும் என்பது. கீழ்நீர் முற்றும்.

2754. பூமி சல்லியம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2120_4
ஆ. வ/118

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. பூமி சல்லியம்
இ. பல்வகை நூல்கள்
ஈ. உரைநடை. அச்சில் ஒரு பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 1 ஏடு; 2 பக்கம்
ஆ. நீளம் 19.5 செமீ., அகலம் 3.5 செமீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

நூல்:
வினவின சொன்னபோது அடி அளந்து அதன்மேலே 28 ஐக் கூட்டி 16க்கு ஈந்தால் ஈயாத சேடம்: 1 தலையோடு; 2 எலும்பு; 3விட்டிகை; 4ஓடு; 5விறகு; 6தெய்வம்; 7 சாம்பல்; 8 கரி; 9பிணம்; 10தானியம்; 11பொன்; 12கல்; 13தவளை; 14 கொம்பு; 15நாய்; 16 இல் சால்.

இவையால் 16 பொருளுமறிந்து முன்பு கிணற்றுக்குச் சொன்ன சக்கரத்தாலே இன்ன இடத்திலே கிடக்கு தென்று கீழ்நீருக்குச் சொன்ன கோடுகளின் கதிர்களாலே இத்தனை ஆழத்தே கிடக்குதென்று சொல்லுவது. பூமி சல்லியம் முற்றும்.

5. பிற செய்திகள்
இச்சுவடியிலுள்ள செய்தி இவ்வளவே.

2755. கூப சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2120_5
ஆ. வ/118

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. கூப சாத்திரம்
இ. பல்வகை நூல்கள்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ ஒரு பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 1 ஏடு; 2 பக்கம்
ஆ. நீளம் 19.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது'
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நிலக்கரு அறிதல்: கழுத்தடி வட்டாரத்துக்குள்ளே கொடுப்பை, தகரை, பொடுதலை, கரிப்பான், குளப் பாலை, பரட்டை, வெப்பாலை, காத்தட்டி, நீர்ப்பூலா, மாவிலங்கு, வேர்ப்பூலா, தக்காளி, முன்னை, சித்திரப் பாலாடை, அம்மான்பச்சரிசி, ஒத்தைஆவாரை, ஒற்றைப்பிராய், கூச்சந்திராய், சிவதை, குருற்றொட்டை, கோடகசாலை, சிறியாநங்கை, பிறியாநங்கை, ஊமைப்புத்து உண்டாயிருந்தால் பெரிதாகிய தண்ணீர் மிகுந்திருக்கும்.

ஆ. முடிவு

ராசி விவரம்: பன்னிரெண்டு ராசியும் கீரி விநாயகனைப் பிடித்து வைத்து தெட்சணை, தாம்பூலம், நிறைநாழி வெல்லம் வைத்துத் தீப தூபங் கொடுத்துத் தேங்காய்க்கு மஞ்சள் தடவி மூன்றுமுறை சுற்றி ஒரு ராசியில் வைக்கச் சொல்லவும். வைத்தால் மகரம், கும்பம், மீனம், கர்க்கடகம், கன்னி இந்த ஐந்து ராசிக்குச் சலம் ராசியானதால் கடும்பாறை இல்லாமல் இரண்டு ஆள் அல்லது இரண்டரை ஆள் உயரத்துக்குள்ளே பெருத்த ஊற்று, மிகுந்த சலம்; நல்ல தண்ணீர் காணும். இடபம், துலாம், மிதுனம் மூன்று ராசிக்கும் கடும்பாறை அருண்டை ஊற்றும்/இருபத்தஞ்சு காணுக்குமேல் முப்பது காணுஞ்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2756. திருமூலரகவல்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2121
ஆ. ற/259

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. திருமூலரகவல்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 5

3. தோற்றக் கூறுகள்
அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 22.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சிதலரித்துள்ளது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூலா தார விநாயக னாகிய
நாலிதழ்க் கடவுளை நம்பி இருந்து
ஆறா மிதழ்மேல் கூறும் பிரமனை
மாறாப் பொருளென வருந்தியங் கிருந்தும்
பத்தா மிதழ்மேல் பரிவுட னிருந்த
அத்திரு வண்ணனை யமலனென் றிருந்தும்
ஆதிரண் டிதழ்மே லமர்ந்தருத் திரனை
நீறணி மேனே நித்தனென் றிருந்தும்

ஆ. முடிவு

பதிவச மாகிப் பாச மறுத்துக்
கதியிது வென்று கட்டுரை செய்து
அடியினும் முடியினும் அங்கெங்குந் தானாய்
விடியுங் கதிர்போல் விளங்கிய வாரே.

முற்றும்.

சிவன ருளாவி திரோத மலமஞ்சும்
அவன ருளாகு மரன்திரு நாமம்
சிவமு தலாகத் தெளிந்துநின் றோதப்
பவம தகன்று பரைசிவ மாமே.

2757. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2122

ஆ. மு/75

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. மாந்திரீகம்

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 60 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 64 ஏடு; 128 பக்கம்

ஆ. நீளம் 31.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 1-19, 33-43, 69, 93-127, 131-135 ஏடுகள் இல்லை. மிகச் சிதைவுற்ற நிலை'

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தாழவே முழங்கால் ஆழந் தப்பாமல் குழியை வெட்டி
நீள்குட நீரை விட்டு நின்றுபத் திரியைப் போட்டுப்
பால்வலம் புரியு மாகில் வாழ்வுகள் மிகவுண் டாகும்
நீளிடம் புரியு மாகில் நிதியுடன் தளர்வும் உண்டாம்
ஊழ்விழுந் துறையு மாகில் உடன்பகை மிகவுண் டாமே. (6)

ஆ. முடிவு

வடிவுள குமரா மதனுட மைத்துனா
மூவா திபாக்கும் முதலாய் முளைத்த
தேவா திபனே சேவகா சரணம்
சரணஞ் சரணஞ் சரவணா சரணஞ்
சரணஞ் சரணந் தானுவே சரணம்
முத்தா சரணம் மூர்த்தி சரணம்
கத்தா சரணம் கருணா சரணம்
சரணம் சரணம்நின் அருளே சரணம்.

குமரன் துணை.

2758. வருடாதி நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2123
ஆ. வ/119

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. இடைக்காடர்
ஆ. வருடாதி நூல்
இ. சோதிடம்
ஈ. செய்யுள் 60

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்.
ஆ. நீளம் 19.5 செமீ., அகலம் 4 செமீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 12 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதி பிரயவத்தில் அம்புவியின் மானிடர்க்குச்
சோதனையாய்ச் சாவுதுன்பம் தோன்றுமே - நீதிதரு
பசுக்கள்மெத்தத் தான்மெலியும் பாரின் மழையுண்டாம்
பருத்திஉப்பு ஆமணக்குப் பால். (1)

ஆ. முடிவு

அற்செயத்தின் மாரிவிளை வற்பமெனச் சொன்னாலும்
நற்செயங்காண் மேவு நலமுண்டாம் - இப்புவியில்
மாரியுண்டு வெள்ளாண்மை வாடாது தான்விளையும்
சீரிணங்கி ஓங்குந் திரு.

இ. பிற்குறிப்பு

1034ஆம் வருடம் சித்திராவுத்தி வருடம் சித்திரை மாதம் 12-ஆம் தேதி வியாழக்கிழமையும் அஸ்வினி நட்சத்திரமுங் கூடின அன்று பகல் நாழிகை 14-உக்குக் கடக லக்கினத்தில் எழுதி முடிந்தது முற்றும்.

5. பிற செய்திகள்

நூலின் பெயர் சுவடியில் இடைக்காடர் சாத்திரம் என உள்ளது. இறுதியில் வருடபலன் பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது.

2759. சூரனூர் நொண்டி நாடகம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2124
ஆ. ய/181

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. சூரனூர் நொண்டி நாடகம்
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 31 ஏடு; 62 பக்கம்.
ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 2.5 செமீ,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. ஓரளவு சிதைந்த நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
மந்திரப் புயத்துவள்ளல் வனத்தினில் வாழுந் தேவர்
சுந்தரத் த–கும் போன்ற சூரனூர் ஐயர் பேரில்
பைந்தமி ழாலே நொண்டி பாரினில் பாடி யாடக்
கந்தனார் தனக்கு மூத்த கணபதி காப்புத் தானே

ஆ. முடிவு
பாடினோர் படித்தோர் கேட்டோர்
பரிவுடன் எழுதி வைத்தோர்

ஆடினோர் புதல்வர் பெற்றே
அகிலமேல் அநேகங் காலம்
வீடுபெற்று உய்ந்து மென்மேல்
வீரமும் பசுவும் பெற்று
நாடெலாம் மழைகள் பெய்து
நன்மையாய் வாழி தானே.

இ. பிற்குறிப்பு
செங்கத்துள்ளிருக்கும் காளியப்பக் கவுண்டர் குமாரன் நஞ்சப்பக் கவுண்டர் அவர்கள் சூரனூர் நொண்டி நாடகம், எடுத்தவர், வாங்கிக் கொண்டு போனவர் யாவரும் படித்துவிட்டுக் கொடுக்கவும்.

2760. இராசி ஆரூடம்

1. **நூலகக் குறிப்புகள்**
   அ. 2125
   ஆ. வ/120

2. **உள்ளீடு: நூல் விவரம்**
   அ. ....
   ஆ. இராசி ஆரூடம்
   இ. சோதிடம்
   ஈ. செய்யுள் 18

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 10 ஏடு; 20 பக்கம்
   ஆ. நீளம் 16.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து

ஊ. 10ஆம் ஏட்டிற்குமேல் இருக்க வேண்டியவை காணப் படவில்லை. சிதிலமடைந்த நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மேசராசி பலன்:
மேசத்தில் வந்து நின்று வினவிய கருமங் கேட்கில்
மோசங்கள் ஒன்றும் இல்லை மொய்குழல் வரவு நன்று
தேசமே போனார் மீள்வார் செய்வினை மணமும் உண்டு
வாசமாங் குழலி னாளே வந்திடும் மேசந் தானே. (1)

ஆ. முடிவு

கன்னிராசி பலன்:
கன்னியில் வந்து நின்று காரியம் வினவிக் கேட்கில்
அன்னமின் நடையி னாளே அங்கத்துக் கிடையூ றுண்டு
மன்னிய பொருள்தான் போகில் மனிதர்கை சிக்க வில்லை
உன்னுடை மனையி லேதான் வைத்துநீர் மறந்து விட்டீர்
பன்னிய வடதி சைக்கண் பார்த்திடில் பொருளுங் காணும். (3)

2761. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்
அ. 2126
ஆ. ல/414

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்
ஈ. உரைநடை— அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 128 ஏடு; 256 பக்கம்.
ஆ. நீளம் 16.5 செ.மீ., அகலம் 2 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
கார்த்திகைப் பூடு, கையான், வெள்ளை விஷ்ணுகரந்தை, பனிதாங்கிமூலி, உன்விந்து சேர்த்து தலைத்தயிலத்தில் அரைத்துச் சிமிழில் வைக்கவும். மோகினி மந்திரம் 1008 முறை சேவித்துத் திலதமிடவும். ஸ்ரீம் ஓம் வசிய மோகினி வாவா வருக வருக.

ஆ. முடிவு
கார்போக அரிசி, மிளகு, தேசாவரம், களிப்பாக்கு, வேல்பட்டை, ... சரக்கு வகை சமன் கால்பலம் எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும்.
(வேறு) புள்ளிமான் தோலைக் கடுகச் சுட்டுப் பசுவின் பாலில் சாப்பிடவும். இதற்குமட்டும் பத்தியம் இல்லை. எல்லா விஷமும் நீங்கிவிடும்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

5. பிற செய்திகள்

இச்சுவடியில் சில மாந்திரீகச் செய்திகளும் உள்ளன.

2762. பட்சி சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2127
ஆ. வ/121

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. பட்சி சாத்திரம்
இ. சோதிடம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 61 ஏடு; 122 பக்கம்.
ஆ. நீளம் 30.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்குப் பல வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உன்னி யொருவன் உரைத்த முதலெழுத்தைப்
பன்னிப் பறவையாய்ப் பாவித்து - வன்னி
உதையா திசைபட்சி உண்மை யுரைக்க
கதைகா வியப்பொருளே காப்பு. (1)

ஆ. முடிவு
பூரட்டாதி ஒன்றும், உத்திரட்டாதியும் ரேவதியுங் கூடியது. மீனம் 4 1/4, பங்குனி மாதம் பரையன் முதல்

பாதம், வியாழன் இரண்டாம் பாதம், சனி மூன்றாம் பாதம், சனி நான்காம் பாதம், வியாழன் புரவம், காகம், அமரம், ஆந்தை, பூர்ணம் ஆக 65 நாழிகை மயில் இதுர்க்களாதி.

நட்சத்திரம், இராசிக்கிரப்பாகம், ராசி பட்சதிதி முகிந்தது முற்றிற்று.

2763. கொக்கோகம்

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2128
   ஆ. ற/260

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. அதிவீரராம பாண்டியன்
   ஆ. கொக்கோகம்
   இ. பல்வகை நூல்கள்
   ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
   அ. 161 ஏடு, 322 பக்கம்
   ஆ. நீளம் 21.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
   உ. அழகிய கையெழுத்து
   ஊ. மிகவும் சிதைவுற்ற நிலை
   எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பதுமினி சித்தினி பகர்ந்த சங்கினி
இதமுறும் அத்தினி என்னு நால்வருண்
முதலவ ளுத்தமி மற்ற மூவரும்
அதிகமற் றவரவ ரடைவிற் றாழ்வரே.

ஆ. முடிவு

கன்னலஞ் சிலையா லுலகெலாம் புரக்கும்
கவின்மதிக் கவிகைநா யகனும்
மன்னிய ரதியும் முறைமுறைப் புணர்ந்து
வாழிகா மாகமம் வாழி
பொன்னெடுந் தடந்தோள் ஆடவர் வாழி
புளகிதக் களபமுத் தார
வன்னமென் முலையார் வாழியெந் நாளும்
மலர்க்கணை ஐந்தும்வா ழியவே.
முற்றிற்று.

5. பிற செய்திகள்

நூலின் காப்பு வெண்பா காணப்படவில்லை.

2764. குருநாடி

1. நூலகக் குறிப்புகள்

அ. 2129
ஆ. ல/415

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. குருநாடி

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 232

3. தோற்றக் கூறுகள்

அ. 41 ஏடு; 82 பக்கம்
ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
ஓங்காரங் கொண்டெழுந்த பிரணவத்தின் செய்கை
உற்றுணர்ந்து சூத்திரமாய் உரைத்த வாறும்
ஆங்காரங் கொண்டதொரு மனத்தைத் தேற்று
அறிவுவஞ் சுருவமெனும் ஆராய்ந்த நேர்மை
பாங்கான நாடிநரம் பான வாறும்
பலமுறைதா னாராய்ந்து பாடி வைத்தேன்
நீங்காத கணபதியும் கந்தன் தானும்
நிசமாக வந்துதவுங் காப்புத் தானே. (1)

ஆ. முடிவு
பிங்கலை யான நாடி பித்தக்கால் தன்னைப் பற்றி
வன்கலை ... ... மூட்டு
முன்பிலே சுழினை நாடி மூலத்தைப் பற்றி யேறி
அன்பிலே ... ... தான் சுடரை மேவித்
தன்பமாய் அவர்க்கும் ஒன்றாய்த் தானது நிற்குந் தானே.
(232)

(இதற்குமேல் எழுதப்படவில்லை).

5. பிற செய்திகள்

அகத்தியர் குருநாடி சாத்திரம், சூத்திரம் இரண்டிலும் முதலாவதாகக் காணப்பெறும் "சீர்பெறு முனிவர் தேவர்" என்னும் பாடல் இதில் மூன்றாவதாகக் காணப்படுகிறது. ஆனால் அதற்குப் பிறகு இருநூல்களும் வேறுபடுகின்றன.

2765. இராமதேவர் கருக்கடைச் சூத்திரம் 500

1. நூலகக் குறிப்புகள்

அ. 2130
ஆ. ல/416

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. இராமதேவர்
ஆ. இராமதேவர் கருக்கடைச் சூத்திரம் 500
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 523

3. தோற்றக் கூறுகள்

அ. 119 ஏடு; 238 பக்கம்
ஆ. நீளம் 26.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 17, 50 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. மிகச் சிதைவுற்ற நிலை'
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியந்த மேநிறைந்த சோதி பாதம்
அகண்டபரி பூரணத்தின் அறிவைக் கூடி
பாதியாய் முப்பொருளாய் மூன்றாய் ஒன்றாய்ப்
பரவெளியாய் நின்றபரா பரையின் பாதம்
நீதியாய் வாரணத்தின் முகவன் பாதம்
நிறைந்தமலர் வாணிகுரு கந்தன் பாதம்
சோதியாம் நாதாக்கள் பாதம் போற்றிச்
சொல்லுவேன் சூத்திரத்தைச் சொல்லு வேனே. (1)

ஆ. முடிவு

வுய்த்தனப்பா சகலகலை தேதி எல்லாம்
வளமாக அடக்கிவெகு தெளிந்து சொன்னேன்
அய்யமென்று நினையாதே பிழைபே சாதே
ஆத்தாளை அனுதினமும் மறவா தேநீ
செய்யாதே தீவினைதான் கொடிய பாவம்
சேர்ந்தவெல்லாம் நிசமென்று தெளிந்து காணும்
மெய்யான குருவார்த்தை தெளிந்து போற்றி
விளம்பினேன் கருக்கிடைசூத் திரந்தான் முற்றே.
(523)

இ. பிற்குறிப்பு

சர்வசித்து வருடம் ஆவணி மாதம் 15ஆம் தேதி அனுச நட்சத்திரம் சத்தமி . . வாரநாள். . பூர்வ பட்சத்தில், நல்ல சுபமூகூர்த்தத்தில் மேட்டுப்பாளையம் மன்னார் குமாரன் மங்கபதி இராமதேவர் 523 பாட்டு சாத்திரம் எழுதி முகிந்தது. முற்றும்.

2766. சசிவன்ன போதகம்

1. நூலக்க் குறிப்புகள்

அ. 2131

ஆ. டீ/261

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. சசிவன்ன போதகம் - மூலமும் உரையும்

இ. தத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 56 ஏடு; 112 பக்கம்.

ஆ. நீளம் 22 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நல்ல சொற்பொருள் நாடி நடத்தவும்
எல்லை காணரும் பேரின்பம் எய்தவும்
வெல்லும் யானை முகத்தனை மேவிவாழ்
வல்ல பைக்குரி யானை வழுத்துவாம்.

ஆ. முடிவு

என்பது, ஞானியைத் தான் நன்றான. தேவதைகள் தான் இவர்களுக்கெல்லாம் மேன்பாடாய்ப் பெற்றது

குருவினுடைய கிருபையினாலே பெற்ற பேர், அந்தச் சிவன் தானே மானிட ரூபமாய் வந்து, சிவன் தன்னைத் தடுத்தாட்கொண்டு, அந்தச் சிவன் தன்சொரூபத்தை அடைந்தான் என்று இருக்கு, யதிர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதமும், மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபி, நிருத்தம், சித்தி, சோதிடம் என்னும் ஆறு சாஸ்த்திரமும், பதினெண்புராணமும் மற்ற லோகத்திலுண்டான சகல சமஸ்தமானதும் முறையிடுவதென்றவாறு.

சசிவன்ன போதகம் முற்றும்.

2767. கொங்கணர் நடுக்காண்டம் 1000

1. நூலகக் குறிப்புகள்

அ. 2132
ஆ. ல/417

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கொங்கணர்
ஆ. கொங்கணர் நடுக்காண்டம் 1000
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 1009

3. தோற்றக் கூறுகள்

அ. 68 ஏடு; 136 பக்கம்.
ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. அழகிய சிறிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை. 43_72, 82_85 ஆகிய ஏடுகள் இல்லை/
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நடுக்காண்டம் பாடுகிறேன் பூரணமே காப்பு
நலமான சுண்ணாம்புக் காடு காடு
அடுக்கென்ற வங்கமொன்று நாகம் ஒன்று
அப்பனே யீயமொன்று உருகும் போது
தடுக்கென்ற சூதமொன்று அதிலே விட்டுத்
தாளகமாஞ் சுன்னமொன்றும் அதிலே தூவி
முடுக்கென்ற உப்பாலே பூரச் சுன்னம்
மூட்டியொரு இடையிட்டு வருத்தி டாயே. (1)

ஆ. முடிவு

காணிது தூர மல்ல காத்ததின் பொருள தல்ல
காணிது அண்ட ரண்டம் கடந்துழுன் நாடு தப்பா
காணுநீ மனத்தை யுன்னிக் கலந்தும ஊட்டி னாக்கால்
காணிது வேறே யில்லை கரையில்லை கவிதான் முற்றே.
(1009)

கைலாசக் கொங்கண மூர்த்தி நாயனார் நடுக்காண்டம் ஆயிரம் முற்றிற்று.

2768. காய கற்பவிதி 51

1. நூலகக் குறிப்புகள்

அ. 2133
ஆ. ல/418

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ஏலேலே சிங்கர்?
ஆ. காய கற்பவிதி 51
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 51

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்
ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆடியதோர் நடனதிரு மூலத் தாலே
ஆட்டான சிதம்பரத்தின் ஆட்ட மெல்லாம்
கூடியதோர் பெரியோர்கள் பதினெண் பேரைக்
குலாவியே தெண்டனிட்டுப் பாதம் போற்றி
நீடியதோர் திருவள்ளுவர் பாதங் காத்து
நினைத்தபடி பாடுகிறேன் முத்தி தானுந்
தேடியதோர் தேட்டெல்லாம் இதனுக் குள்ளே
திறமாகும் அன்பத்தோர் அட்சரங் காப்பே. (1)

ஆ. முடிவு

தானான மந்திரமோ அன்பத் தொன்று
தாக்கத்தில் கல்வியெல்லா மேல்வி ளங்கும்
ஊனான உடம்பிறப்பு நாலே யாச்சு
ஒருமனதாய்க் கண்டோர்க்கு விதியை மாற்றிப்
பானான அமிர்தமுண்ட தர்மத் தாலே
பரமசிவ னானென்பார் உலகில் தானும்
ஊனான முப்பொருளைக் கண்ட வாதி
முழக்கமடா அன்பத்தி யொன்று முற்றே. (51)

இ. பிற்குறிப்பு

ஏலேலே சிங்க செட்டியார் அருளிய காய கற்பவிதி ஐம்பத்தொன்றும் முற்றிற்று.

2769. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 2134
ஆ. ல/419

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 34 ஏடு; 68 பக்கம்
ஆ. நீளம் 17 செமீ., அகலம் 2 செமீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. மிகவும் சிதிலமடைந்த நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

விஷசுரத்துக்கு மோர் எண்ணெய்:
வெள்ளாட்டு மோர் படி 4, நல்லெண்ணெய் படி 2, சித்திரமூலம் வேர், செவ்வேர், மொட்டு நன்னாரி வேர், தேவதாரம், சீந்தித்தண்டு, சிறுகீரை வேர், சுக்கு, கோஷ்ட்டம், பேன்மிளகு, மஞ்சள், அதிமதுரம், இந்துப்பு, சந்தனம், எலுமிச்சவேர், சாதிக்காய், தென்னங்குரும்பை, பூலாங்கிழங்கு, வகை 1க்கு விராகனிடை 3 சேர்த்து அரைத்து எண்ணெயில் கலந்து காய்ச்சி மெழுகு பதத்தில்

வடித்து முழுக விஷசுரம், அத்திசுரம், குளிர்சுரம் இவையெல்லாம் போகும்.

ஆ. முடிவு

பழத்துச்சாறு கோவைச்சாறும் . . . . மொட்டு வெள்ளைச் சுளையும் மூன்றுங் கூட்டிக் கொடுக்கவும், . . . னிக்கு கைகண்டது. குளிர் வருவதற்கு முன்னால் கொடுக்கவும். . . . . கோழிச்சாறு கொடுக்க வேண்டியது. இப்படி மூன்று நாள் தின்கவும். . . . .தழையை வற்ள வைத்து இடித்துக் களி கிண்டி தின்கவும்.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

5. பிற செய்திகள்

இடையிடையே சோதிடச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

*

2770. சட்டைமுனி காயகற்பம் 200

1. நூலகக் குறிப்புகள்

அ. 2135

ஆ. ல/420

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சட்டைமுனி

ஆ. சட்டைமுனி காயகற்பம் 200

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 201

3. தோற்றக் கூறுகள்

அ. 56 ஏடு; 112 பக்கம்

ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. அழகிய சிறிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை. இறுதி ஆறு ஏடுகள் இடப்பக்கம் முறிந்துள்ளன
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாடுகிறேன் காயகற்பம் ஐங்கரனே காப்பு
- பரிவான சின்மயத்தின் பாதம் காப்பு
நாடுகிறேன் சித்தருட பாதங் காப்பு
நாதாந்த மனோன்மணித்தாய் பதமே காப்பு
தேடுகிறே னென்றாலு மென்னூல் போலச்
செப்பார்கள் காயசித்தி சித்த ரப்பா
சூடுகிறேன் காயசித்திக் கதிச யங்கள்
சொல்லுகிறேன் நன்றாகக் கேளு கேளே. (1)

ஆ. முடிவு

பணிமாறுங் காலத்தே மணியி (னோடும்)
- (பாங்)கான சேகண்டி நாத ஓசை
பணிமாறுங் (காலத்தே) மவுன தோத்திரம்
பத்தியுரு வாலைகையில் யேகி யீந்துப்
பணிமாறுங் காலத்தே சகல சித்தும்
பரிவான ...வென்று கையில் வாங்கிப்
பணிமாறுங் காலத்தே ....அண்டம்
பண்ணுவாய் தீட்சைவிதி தீட்சை முற்றே. (201)

2771: இரணிய சம்மார நாடகம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2136
ஆ. ற/261

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. இரணிய சம்மார நாடகம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 75 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 78 ஏடு; 156 பக்கம்

ஆ. நீளம் 43.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு மூன்று பத்திகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை. 58ஆம் ஏடு இல்லை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தென்திசைக் கடவுள் தன்னைச் செகதல மீதில் வீழ்த்தி
அன்றுமார்க் கண்டர் தம்மை அன்புடன் பாது காத்த
கொன்றையை அணிந்தோ னீன்ற குஞ்சர முகவன் தானும்
வென்றிகொள் ளாகு மீதில் விரைவினில் வருகின் றாரே.

ஆ. முடிவு

"பளா பளா சபாஷ்! அடா! வாடா பிரகலாதா! என்னை ஏளனமாகச் சொல்ல வந்தாயே! கோளரியான சிம்மத்தையும் உன்னையுங் கொன்று என்னுடைய வாளுக்குத் தண்டஞ் செய்யப் பண்ணுகிறேன்" என்று கத்தி கேடயம் எடுத்துக்கொண்டு, நரசிம்மமூர்த்தியுடன் எதிர்க்கின்ற விதங் காண்க.

இ. பிற்குறிப்பு

சாதாரண வருஷம் மாசி மாதம் 12ஆம் தேதி புதவாரம் எழுதி முடிந்தது.

2772. வில்லிபாரதம் - மூலமும் உரையும்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2137
ஆ. ந/168

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. வில்லிபுத்தூரார்
ஆ. வில்லிபாரதம் - மூலமும் உரையும்
இ. காப்பியம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 140 ஏடு; 280 பக்கம்
ஆ. நீளம் 44 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. 1-283 வரை ஏடுகள் இல்லை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
கோடிதேர் கிம்புரி கோட்டு வாரணம்
நீடிய வயங்கொள் நிருத ராதியாய்த்
தேடிவான் துணையொடு சேர்ந்த வேந்தெதிர்
பேடி துணையெனப் பெயர்வ தோசொலாய். (49)

ஆ. முடிவு
அர்ச்சுன மகாராசனும் கர்ண மகாராசனும் எதிர்க்கின்ற வேளையில் சூரியபகவானுடைய குமாரன் கர்ண

மகாராசனுக்குக் கிரீடபதியான ராச்சியாதிபதிகள் படைத்துணையாக அநேகம் கோடி இராசாக்களும் படைத்தலைவரும் வந்து, தங்கள் தங்கள் கைவில்லை வளைத்து, சீறிக்கொண்டு பெருமையுள்ள சிங்கத்தின் பேரிலே எண்ணிக் கையில்லாத ரிஷபங்கள் எதிர்த்தாப்போலே வந்து, அர்ச்சுன இராசன்பேரிலே எதிர்த்தார்கள் என்றவாறு. (310)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2773. அரிச்சந்திர புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2138

ஆ. ந/169

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ஆசுகவிராசர்

ஆ. அரிச்சந்திர புராணம் - மூலமும் உரையும்

இ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரைநடையும்.அச்சில் ஏறத்தாழ 300 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 252 ஏடு; 504 பக்கம்

ஆ. நீளம் 43 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சிறிது சிதிலமடைந்த நிலை. 5, 56, 135 ஆகிய ஏடுகள் பாதிக்குமேல் உடைந்துள்ளன

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாயிரம்

சீர்கொண்ட செழுங்கமலத் திசைமுகனும்
        நெடுமாலும் சிவனும் என்னும்
பேர்கொண்ட மூவுருவும் ஈருருவும்
        ஓருருவாய்ப் பிறக்குந் தொல்லை
நீர்கொண்ட வன்றத்தும் தாபரத்துஞ்
        சங்கமத்தும் நிறைந்து நின்றோன்
தார்கொண்ட தாளிணைக்கொன் றமிழ்க்கொண்ட
        வன்பினோடும் தலைமேற் கொள்வாம்.

ஆ. முடிவு

முன்னமு னக்குச் சொன்னது றத்தின் மொழிமாறி
அன்னது கைக்கொண் டின்ன தந்தேன் அவனேயான்
நன்னக ரோடும் பொன்னொடு முற்றும் நனிதந்தேன்
இன்னமெ னக்குப் பொன்தர வென்றால் இடமுண்டோ?

(இது சூழ்வினைக் காண்டத்தின் 95ஆவது விருத்தம். இதற்குமேல் ஏடுகள் இல்லை).

இ. முற்குறிப்பு

('வெள்ளைக் கலையுடுத்தி' என்னும் வெண்பாவை அடுத்து) துந்துபி வருடம் ஆடி மாதம் 2ஆம் தேதி புதன்கிழமை பஞ்சமி, பூரட்டாதி நட்சத்திரம் உதிச்சு நாலு நாழிகைக்குக் கடக லக்கினத்தில் வரதன் தாங்கல் பிரம கவுண்டர் மகன் முத்துக் கவுண்டர் குமாரன் கோவிந்தனுக்குத் தும்பூரகண் மகன் கோவிந்தபிள்ளை குமாரன் வரதன் அரிச்சந்திர புராணம் எழுதத் தொடங்கினது.

2774. குசலவ நாடகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2139

ஆ. ற/262

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. குசலவ நாடகம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 60

3. தோற்றக் கூறுகள்

அ. 111 ஏடு; 222 பக்கம்

ஆ. நீளம் 34.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை. 14, 17, 26, 27, 36, 41, 46, 49, 51, 52, 54, 55, 67, 79, 81-83, 99, 110, 111, 112, 114-119 ஆகிய ஏடுகள் இல்லை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தேரணி மன்ன யோத்தித் தெசரத ராம சந்திரன்
வாரணி தனத்தாள் சீதை மைந்தர்மேல் தமிழி னாலே
பார்தனில் நாட கத்தைப் பரிவுடன் பாடு வோர்க்கு
வாரண முகனே உந்தன் மலர்ப்பதங் காப்புத் தானே. (1)

ஆ. முடிவு

முனிவரே சொல்லக் கேளீர் மொய்குழல் சீதை மைந்தர்
தனியுமை பணியும் ராமர் தம்பிமார் மூவர் கூட

அனைவரும் புவியில் வீழ அஸ்திரந் தொடுத்து விட்டான்
இனியொரு வசன மில்லை எழுந்துமே நடந்தி டீரே.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

5. பிற செய்திகள்
இச்சுவடியில் மெய்யெழுத்துகள் புள்ளிபெற்றுள்ளன.

2775. நாலடியார் - மூலமும் உரையும்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2140
ஆ. ந/31

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. சமண முனிவர்கள்
ஆ. நாலடியார் - மூலமும் உரையும்
இ. பதினெண்கீழ்க்கணக்கு
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்
அ. 26 ஏடு; 52 பக்கம்
ஆ. நீளம் 35 செ.மீ., அகலம் 4 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. அழகிய தெளிவான கையெழுத்து
ஊ. மிகவும் சிதிலமடைந்த நிலை. 11_14, 17, 18, 20_22, 24, 28, 29, 35_64, 67_72 ஆகிய ஏடுகள் இல்லை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
வானிடு வில்லின் வரவறியா வாய்மையாற்
கானிலந் தோயாக் கடவுளை-யானிலஞ்
சென்னி யுறவணங்கிச் சேர்த்துமெம் உள்ளத்துள்
உன்னி யவைமுடிக வென்று.

ஆ. முடிவு
கண் மூன்று உடையானும் - மூன்று கண்ணினை உடையவனும்; காக்கையும் - காக்காயும்; பை - படத்தினை உடைய; அரவும் - சர்ப்பமும்; எனை - என்னை; ஈன்ற- பெற்ற; யாயும் - தாயும்; பிழைத்தேன் - பிழைத்ததில்லை; பொன் - பொன்னை; ஈன்ற - கொடுத்த; கோங்கு - கோங்கினுடைய; அரும்பன்ன - அரும்புபோலும்; முலையாய் - முலையுடையவளே; பாங்கனார் - நாயக ரானவர்; பொருள்வ ன் - பொருளினிடத்திலே; சென்றநெறி - வழியே; பிழைத்தது - பிழை செய்ததுவே. போனா: (400)

நாலடி நானூறும் எழுதி முடிந்தது.

இ. பிற்குறிப்பு
விபவ வருடம் சித்திரை மாதம் 10ஆம் தேதி புதன்கிழமை தசமி, அவிட்ட நட்சத்திரம் (சுபதினத்தில் எழுதி முடிந்தது).

2776. சீவசம்போதனை

1. நூலகக் குறிப்புகள்
அ. 2141
ஆ. ட/262

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. சிவசம்போதனை

இ. தத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 200 ஏடு; 400 பக்கம்

ஆ. நீளம் 43.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து. இடையிடையே கிரந்தலிபி மிகுதியாக உள்ளது

ஊ. மேற்பகுதி பழுதடைந்துள்ளது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூவுலகும் வந்திறைஞ்ச மூவர் முதலாகி
மூவுலகுந் தானே முழுதுணர்ந்தான் - மூவுலகின்
உட்பொருளாய் ஓங்கி உயர்பொருளாய் நிற்கின்ற
அப்பொருளாம் எங்கட் கரன்.

ஆ. முடிவு

தேவேந்தர் மாமுனிவன் சிவசம் போதனையைப்
பாவேந்தன் நற்றமிழாற் பாடினான் - நாவேந்தர்
சொல்லாற் பொருளாற் றொகுத்துரைப்பார் சிந்திப்பார்
புல்லார்கள் நாற்கதியிற் புக்கு.

இ. பிற்குறிப்பு

பூண்டி அய்யங்கார் வேம்பூண்டி சிங்கபுரிக்கு எழுதிக் கொடுத்த சிவசம்போதனை முற்றும்.

சுக்ல வருடம் புரட்டாசி மாதம் 6ஆம் தேதி மங்கள வாரம் உத்திரட்டாதி நட்சத்திரம் இந்த சுபதினத்தில் எழுதிமுடிந்தது முற்றும்.

5. பிற செய்திகள்

இந்த உரை மணிப்பிரவாளத்தில் அமைந்துள்ளது.

2777. உவமான சங்கிரகம்

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2142_1
   ஆ. ச/63

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. இரத்தின கவிராயர்?
   ஆ. உவமான சங்கிரகம் (கேசாதி பாதம்)
   இ. இலக்கணம்
   ஈ. செய்யுள் 15

3. தோற்றக் கூறுகள்
   அ. 4 ஏடு; 8 பக்கம்
   ஆ. நீளம் 35.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
   உ. அழகிய தெளிவான பெரிய கையெழுத்து
   ஊ. நல்ல நிலை. 2ஆம் ஏடு இல்லை
   எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காப்பு

வேதத் தமிழ்மாறன் வெற்பனையார் கேசாதி
பாதத் துவமானப் பண்பெல்லாந் - தாதின்
முருகூர் மலர்க்குழலாய் மூதுரையாற் சொல்வன்
குருகூ ரனைத்தொழுது கொண்டு.

ஆ. முடிவு

பாயற் பிடிவேழம் பைந்தூவி அன்னநடை
சாயற்கும் இன்னமுதந் தான்மயிலாஞ் - சேயிழையாய
மாந்தளிர்பூஞ் செண்பகப்பூ மாமேனி யம்மேனி
பூந்திதலை வேங்கைபசும் பொன். (15)

உவமான சங்கிரகம் முற்றும்.

2778. இரத்தினச் சுருக்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2142_2

ஆ. ச/63

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. இரத்தின கவிராயர்?

ஆ. இரத்தினச் சுருக்கம்

இ. இலக்கணம்

ஈ. செய்யுள் 71

3. தோற்றக் கூறுகள்

அ. 13 ஏடு; 26 பக்கம்

ஆ. நீளம் 35.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்
உ. அழகிய தெளிவான பெரிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை. 2_6, 13ஆம் ஏடுகள் இல்லை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்.

அ. தொடக்கம்

பிரிவாற்றாமைக்குரிய குறிகள்:
சோருந் துகிலுந் வளைகலை நாணுந் துணிந்துமடல்
ஊருந் தொழிலும் ஒளிகூர் பசலையும் ஓடரிக்கண்
நீருங் கிழியும் பருமணற் கூடலும் நின்றரற்றும்
ஊருந் தனியு மறைபோன நெஞ்சமு முண்டென்பரே. (1)

ஆ. முடிவு
உணரும் படியே உரைத்தவற்றை எல்லாம்
இணர்மென் றொடையா மியல்பாற் - றுணையெழுத்தாற்
சொல்ல்ர்ய்ச் சொல்லின் தொகுதி தனைத்தொடுக்க
வல்லார்க் கணிபெறலா மால். (71)

இரத்தினச் சுருக்கம் முற்றிற்று.

2779. கோரக்கர் பூரண நூல்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2143
ஆ. ல/421

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கோரக்கர்
ஆ. கோரக்கர் பூரண நூல்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 30

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்
ஆ. நீளம் 32.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கோரக்கர் மூலிக்குக் குருவின் உபதேசம்
நேரொக்கக் கொண்டு நிலையறி வாரில்லை;
நேரொக்கக் கொண்டு நிலையறி வாளர்க்குச்
சீரொக்கப் பாயுஞ் சிவபதந் தானே. (1)

ஆ. முடிவு

சித்தர்தன் மூலியைச் சிந்தையுள் நேசமாய்
நித்தமுஞ் சாதிக்க நினைந்ததெல் லாந்தரும்;
பத்தியில் லாமற் பழித்தே இருந்தவர்.
மெத்தவே நாளும் வீழுவார் நரகிலே. (30)

5. பிற செய்திகள்

இதே நூல் கோரக்கர் கற்பம் என்ற பெயரிலும் வழங்குகிறது. காண்க: தொடர் எண். 2028_3.

2780. கரும சாந்தி

1. நூலகக் குறிப்புகள்

அ. 2144
ஆ. மூ/76

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. கரும சாந்தி
இ. மாந்திரீகம்
ஈ. செய்யுள் 42

3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு; 22 பக்கம்
ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான அழகிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கேளப்பா கருமத்தை ஒழிக்க வென்றால்
 கெடியான சிதம்பரத்தை நிலத்தில் கீறி
ஆளப்பா அஞ்செழுத்தை உள்ளே சாத்து
 அறைதோறும் மாறி(மாறி) எழுத்தை நாட்டு
மீளப்பா அஞ்சுவர்ணம் அடைத்துக் கொண்டு
 மெய்யான எழுத்தையதில் மேலே சாத்தி
நாளப்பூா நான்குதிசை தன்னி லேதான்
 நன்றான தென்வடக்கு முக்கோண மாமே. (1)

ஆ. முடிவு
உரைக்கவே கேளீ ரய்யா உலகத்தி லேழைக் காகச்
சுருக்கமாய்க் கரும சாந்தி செய்யவே தொலைந்து போகும்
பெருக்கமாய் இதுபோற் செய்தால் பிறை... ... .

(இது 43ஆம் பாடல். இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

2781. அகத்தியர் லோகமாரணம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2145
ஆ. ல/422

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் லோக மாரணம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 151

3. தோற்றக் கூறுகள்
அ. 20 ஏடு; 40 பக்கம்
ஆ. நீளம் 32.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. 9, 10 ஆகிய ஏடுகள் இல்லை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
சீரணி கொன்றை சூடும் சிவனிரு பாதம் போற்றி

வாரண முகத்தோன் பாதம் வணங்கிநூற்
றன்பதும் சொல்ல
மூரணி வாச ஞானம் சரஸ்பதி போற்றி போற்றி
காரண மான செஞ்சொல் கர்மசூத் திரங்காப் பாமே. (1)

ஆ. முடிவு
சொன்னது தொகைதான் நூற்று அன்பது சூட்ச மாகும்
முன்னமே சொன்ன நூலில் முக்கிய முன்னூல் சூட்சம்
வன்னமே பாரு லோக மாரண மதனில் சூட்சம்
அன்னமே சொன்ன நூற்று அன்பதும் அறிவீர்/முற்றே.
(151)

2782. உலக நீதி

1. நூலகக் குறிப்புகள்
அ. 2146
ஆ. ள/107

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. உலகநாத பண்டிதர்
ஆ. உலகநீதி
இ. நீதிநூல்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்
அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 38.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்திகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. வாரிப்பதப்படுத்தப்படாத ஏடு
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாப்புச் சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் இகழ வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்.

ஆ. முடிவு

சேராத இடங்களிலே சேர வேண்டாம்
செய்தநன் றி ஒருநாளும் மறக்க வேண்டாம்
ஊர்தோறும் குண்டுணியாய்த் திரிய வேண்டாம்
உத்தமரை மனமுரியால் உரைக்க வேண்டாம்.
(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

இ. முற்குறிப்பு

செல்லப்பன் உலகநீதி

2783. பாபவிநாச முதலியார் பதம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2147
ஆ. ற/263

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. பாபவிநாச முதலியார்
ஆ. பாபவிநாச முதலியார் பதம்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு, 6 பக்கம்
ஆ. நீளம் 25 செமீ., அகலம் 3 செமீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சிதிலமடைந்த நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

(பல்லவி)

திருவாய்க் கெதிர்வாயுண்டோ - சிவனே (திரு)
தேவரீர் சித்தம்

(அநுபல்லவி)

அருள்ழுந்து குணத்திரண்டு பெரும்பேரைப் பெற்றும்
ஆமென்றல்ல வென்று அழிவழக்கானால் (திரு)

ஆ. முடிவு

(சரணம்)

முசுகுந்தன் தனக்காக வந்ததும் முத்தி
மோட்சத்தில் அவனியாக இருந்ததும்
திசையில் யாவர்க்கும் வரந்தந்ததும் சேர்ந்த
செவந்தி மலர்க்கு கந்ததும்
விசைமால்தனைக் கமல மானென இவர்க்கு
நாயகமாய் எவர்க்கும் நாயகம்
பசுபதி ஆரூர்ப் பதியில் வளர்ந்திடு
பசும்பொன் மேனியில் வருந்தத் தியாகரைப்

(பல்லவி)

பார்க்கப் பார்க்கச் சோதிமயம் பாரா
பரமனைநினை மனமே. (பார்க்க)

2784. நாதாந்தத் திறவுகோல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2148_1

ஆ. ட/263

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. நாதாந்தத் திறவுகோல்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 99

3. தோற்றக் கூறுகள்

அ. 12 ஏடு; 24 பக்கம்

ஆ. நீளம் 25 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. மிகச் சிதைவுற்ற நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இருளொளி வளிமூன் றாகி இயங்குமுப் பாலுக் கப்பால்
பெருவெளி கயிலை மீதே பேரொளி யாகி எங்குங்
குருவழிக் குலத்துக் கெல்லாம் கோதிலா ஞான மான
திருவருள் உருவ மான திருவடி நெஞ்சில் வைப்பாம். (1)

ஆ. முடிவு

சுகமாயை யாகிய ஆணவ மேமல மாவதெல்லாம்
சுகமான ஈ.்க்க (மவை)நீங் கிற்சிற் பரமாயை

சுகமான துக்கச் சுகந்தர மான சுடரகற்றிச்
சுகமான பேரொளிப் பாதார விந்தத்தை
மன்னிநில்லே. (99)

நாதாந்தத் திறவுகோல் முற்றும்.

2785. தத்துவக் கீர்த்தனைகள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2148_2
ஆ. ட/263

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . .
ஆ. தத்துவக் கீர்த்தனைகள்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள். அச்சில் ஏறத்தாழ 3 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 25 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. மிகுதியும் சிதிலமடைந்தநிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

(பல்லவி)

எப்போ வருவானோ என்னய்யன்
எப்போ வருவானோ? (எப்போ)

(அநுபல்லவி)

எப்போ வருவானோ ஈரெழுத்தாலே
இருவினை நீக்கியெனை யாண்டுகொண்டு
ஒப்பிலா ஓமென் றெழுத்திலுதித்த
ஓர் அஞ்சில் ரெண்டடியேற் குரைசெய்ய (எப்போ)

ஆ. முடிவு

மண்ணையும் மேவிச் சதமெனக் கிளக்கின்ற
மாயாவி னோதம் தெரியவராது
நிண்ணயமெது சடலத்தை நம்பாதேபோ
நீர்மேற் குமிழி சரீரம் அநித்யம்
பண்ணிய பாவம் தொலைத்தமெய் ஞானத்தின்
பாக்கிய ....

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2786. சித்தர் ஆனந்தக் களிப்பு

1. நூலகக் குறிப்புகள்

அ. 2148_3
ஆ. ட/263

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அமிர்தானந்தச் சித்தர்?
ஆ. சித்தர் ஆனந்தக் களிப்பு
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 25 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சிதிலமடைந்த நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அஞ்சக் கரத்தையும் நீட்டி - அதன்மேலே
அகார உகாரத்தை நாட்டி
மிஞ்சக் கரத்தையும் பூட்டி - மற்றும்
மேலான தொண்ணூற் றறுவரைக் கூட்டி
நெஞ்சக் கரத்தையும் தீட்டி - நி.....
சித்தம்புத்தி ... தாங் காரங் காட்டி
பஞ்சக் கரத்திலே ஓட்டி - சித்தன்
பாடிப்பாடிப் பாதம் ஆடிக்கொண் டான்டி. (1)

ஆ. முடிவு

எட்டுருத் தட்டானுங் கூடி - ஒரு
ஏழைத்தட்டான் வீட்டி லெண்ணைக்
கொண்டுபோய்
கட்டுரை பித்தளை வாங்கிக் - கருகக்
காயக் குகைவைத்தி ... .
நெட்டுர மருந்தைப் பிழிந்தார் - அது
நேரொக்கத் தங்கமு மானது கண்டே
அட்டாச் சரத்துள் நின்றாடி - அமிர்
தானந்தச் சித்தன் ஆடிக்கொண் டான்டி. (4)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2787. திருமூலர் ஞானம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2148_4
ஆ. ட/263

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. திருமூலர்
ஆ. திருமூலர் ஞானம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 98

3. தோற்றக் கூறுகள்
அ. 10 ஏடு; 20 பக்கம்
ஆ. நீளம் 25 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. மிகவும் சிதிலமடைந்த நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
ஒண்ணாகக் கண்டிடும் உத்தம ஞானத்தைப்
பண்ணாய்ப் பொறியஞ்சும் பதையாமல் வேண்டிடு
கண்ணான கற்பத்தால் காயம் செயம்பண்ணில்
அண்ணார்ந் தலையாது அடங்கலுஞ் சித்தியே. (1)

ஆ. முடிவு
மூலத்தே அவ்வென்று முன்னே ஊனு
முளைகொண்டா லங்கென்று பின்னே ஊனு

காலத்தே பழிச்சென்றால் சிங்கென் றூனு
கைமுறைதான் மூன்றுவகை காணும் காணும்
தாலத்தே மின்னினுட ஒளிபோல் காணும்
தயங்காதே மனமுள்ள .... ஊனு
ஆலத்தே யுண்டசிவன் முக்கண் மூர்த்தி
அடங்காத தீயொளியா மழித்துப் பாரே. (98)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

5. பிற செய்திகள்

இதனை அடுத்து மருத்துவப் பாடல்கள் இரண்டு எழுதப்பட்டுள்ளன.

2788. மணிவாசகர் தெளியுண்மைப் போதகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2149
ஆ. ட/264

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. மணிவாசகர் தெளியுண்மைப் போதகம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 14

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 24.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து
ஊ. சிறிது சிதிலமடைந்த நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
ஆதியடி மூலபர மேழ்பு விக்கும்
ஆதார வீடுலிங்க முதல்முக் கண்ணன்
சோதியடி மேல்விசிறி யாடி நிற்கும்
தோற்றமுள்ள தத்துவத்தோ டாட்டுங் கூத்தன்
சேதியிது மேலகன்றே உருகி அன்பால்
தெளியுண்மைப் போதகமென் றறிவி னாலே
ஓதியநூல் விளங்கிவான் முகமஞ் சாகி
உணர்ந்தெழுத் தஞ்சதனை முந்தஉரை செய்வாம். (1)

ஆ. முடிவு
ஞானவழி புகுவார் பெருந்துறை நாட்டில்
நற்கமலப் பொற்பாத மிரண்டேழ் புவிக்கும்
ஆனமணி நாவசைய ஓசை யுண்டாம்
அண்டபிண்டத் தொருவெளியாய் .... நிற்கும்
வானவநாட் டுடையார்நீ ரான தன்னை
மருவியமா ணிக்கவா சகனின் நூலைத்
தானவனாய் நின்றுபொரு ளுரைத்தார் இந்தத்
தமிழறிந்தோர் தனையறிந்து தலைவ னாமே. (14)

மணிவாசகர் தெளியுண்மைப் போதகம் முற்றும்.

2789. தென்கரை நாட்டுப் பட்டயம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2150
ஆ. ற/264

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. தென்கரை நாட்டுப் பட்டயம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 1 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 1 ஏடு; 2 பக்கம்

ஆ. நீளம் 37.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சுபநமஸ்து. ஸ்ரீமன் மகா மண்டலீசுபரன் பாசைக்-கித் தப்புவராத கண்டன் ஆரிய தளவி பாடன் ஆரிய மோகந் தவிழ்த்தான். துளுக்க தளவிபாடன் துளுக்கர் மோகந் தவிழ்த்தான். தொட்டியர் தளவிபாடன் தொட்டியர் மோகந் தவிழ்த்தான். ஒட்டியர் தளவிபாடன் ஒட்டியர் மோகந் தவிழ்த்தான். பல நாளுக்குறைவராத மன்னன்

ஆ. முடிவு

வாரணவாசி - வெள்ளொட்டு பெரியணன்கனபுரம் நஞ்சியன் ஆறநாட்டு மசக்காளிவேலன் குறுப்ப நாட்டு ரகுநாதன் ஒடுவெங்கைநாடு முத்துவேலப்பன் நல்லுரிக்கி நாடு வாணுவராயன் வாரக்கநாடு பொங்கான் காவலிக்க நாட்டு உடையணன் .....

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2790. பலதிரட்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 2151
ஆ. ல/423

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. பலதிரட்டு
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 279

3. தோற்றக் கூறுகள்

அ. 139 ஏடு; 278 பக்கம்
ஆ. நீளம் 18 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாடுகிறேன் பலதிரட்டு முடிவை எல்லாம்
பதறாமல் சிதறாமல் பண்பாய்க் காணப்
பாடுகிறேன் சாத்திரமும் சூத்திரமும் அளந்து
பழசையெல்லாம் சுருக்கியொரு மாலை யாகப்
பாடுகிறேன் குருக்கிடையும் கருக்கிடையும் பார்த்துப்
பராபரத்து நிலைமுதலாய்ப் பக்தி யாகப்
பாடுகிறேன் வேதாந்த முடிவை எல்லாம்
பராபரையுங் கணேசன்குகன் காப்புப் பாரே. (1)

ஆ. முடிவு

சொல்லுவாய் எனையாண்ட அதீத வாழ்வே
  சொல்பெரிய பூரணமே சொரூப சித்தி
இல்லையென்று சொல்லவில்லை நன்றாய்க் கேளு
  என்மகனே பூரணத்தில் ஏறி நில்லு
தில்லைநட ராசர்போல்ச் சூட்ச தேகம்
  சித்தித்தால் அதுசொரூப சித்தி யாகும்
நல்லோர்கள் அறிவார்கள் புல்லோர் காணார்
  நாதாந்த வஸ்துவை நாடி நில்லே. (279)
  (இதற்குமேல் எழுதப்படவில்லை)

5. பிற செய்திகள்

இறுதியில் 10 ஏடுகளில் வேறு சில மருத்துவக் குறிப்புகள் காணப்படுகின்றன.

2791. சட்டைமுனி வகாரம் 1000

1. நூலகக் குறிப்புகள்

அ. 2152
ஆ. ற/265

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சட்டைமுனி
ஆ. சட்டைமுனி வகாரம் 1000
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 1013

3. தோற்றக் கூறுகள்

அ. 175 ஏடு; 350 பக்கம்
ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. 14, 52, 105, 106, 124, 131, 132 ஆகிய ஏடுகள் இல்லை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
காண்க: தொடர் எண்: 2106_2

ஆ. முடிவு
காண்க: தொடர் எண் 2110_1

இ. பிற்குறிப்பு
பொதிகை மாமுனி சட்டநாதரது சூத்திரம் 1000, சாதாரண வருடம் ஐப்பசி மாதம் 3ஆம் தேதி எழுதி முகிந்தது.

5. பிற செய்திகள்
இந்நூல் சட்டைமுனியார் சூத்திரம் 1000 எனவும் வழங்கப்படுகிறது.

2792. அகத்தியர் லோக மாரணம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2153
ஆ. ல/424

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் லோக மாரணம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 151

3. தோற்றக் கூறுகள்
அ. 35 ஏடு; 70 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 2 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்; ஆ. முடிவு
காண்க: தொடர் எண் 2145

2793. சௌந்தரிய லகரி

1. நூலகக் குறிப்புகள்
அ. 2154
ஆ. ய/182

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. கவிராச பண்டிதர்
ஆ. சௌந்தரிய லகரி
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 110

3. தோற்றக் கூறுகள்
அ. 54 ஏடு; 108 பக்கம்
ஆ. நீளம் 23.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
காண்க: தொடர் எண் 2056

ஆ. முடிவு
வேத நுண்பொரு ளா தி சுந்தரி
வீற டங்கலு மாயமே
ஈத நிந்துமி டர்கொ ளுங்கவி
ராச பண்டிதன் ......
நாத ரஞ்சனி தாள்பெ றுந்திரு
நாமம் ஒன்பதும் நூறுமே
ஓதி டின்பர போக முஞ்சிவ
லோக மும்பெறு வார்களே. (104)

2794. தட்சிணாமூர்த்தி சால நிகண்டு

1. நூலகக் குறிப்புகள்
அ. 2155-1
ஆ. ல/425

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. தட்சிணாமூர்த்தி
ஆ. தட்சிணாமுர்த்தி சால நிகண்டு
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 202

3. தோற்றக் கூறுகள்

அ. 34 ஏடு; 68 பக்கம்

ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை. முதல் ஏடு காணப் படவில்லை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வலுக்குமே மஞ்சட் கிழங்கினில் பாவை
குலுக்கச் செய்து கொடிமூலம் சுற்றிவை
வலுக்குறை யாமல் மறைவாய் அடுக்கிவை
இருக்குந் நேரம் எடுத்துப் பிணங்கிடே (7)

ஆ. முடிவு

பாருநீ இந்த முறைப்படி பார்த்துத்
தேருநீ பாவம் செய்யவும் வேண்டாம்
ஆருநீ பாரு அறுபத்தி நாலும்
நேரிரு நூறும் நிகண்டது முற்றே. (202)

தட்சிணாமூர்த்தி சால நிகண்டு எழுதி முகிந்தது முற்றும்.

2795. சல்லியம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2155_2

ஆ. ல/425

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. சல்லியம்
இ. மாந்திரீகம்
ஈ. செய்யுள் 43

3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு; 22 பக்கம்
ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7-8 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
காண்க: தொடர் எண் 2006.

ஆ. முடிவு
தரணியில் அனுமன் சித்தித் தானவர் கருவைத் தொட்டு
கரணமு நாளும் கெட்டுக் கால்டி மண்ணில் செய்ய
விரணமும் உபாதி காணும் வீடெலாம் குரங்காய்த்
தோணும்
தரணத்தில் அதிச யங்கள் சத்துரு பேதங் கொண்டே. (43)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2796. பரமானந்தர் மௌன ஞானம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2156-1
ஆ. ட/265

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. பரமானந்தர்
ஆ. பரமானந்தர் மௌன ஞானம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 64

3. தோற்றக் கூறுகள்

அ. 25 ஏடு; 50 பக்கம்
ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாடுகிறேன் பெரியோர்கள் பாதம் போற்றிப்
        பதறாமல் சிதறாமல் மாலை யாக
வேடுவன் தான் எடுத்தபுழு ரூபம் போலே
        வேதாந்த ஞானமதை விதித்தோன் பாதம்
ஆடுகிறேன் அரியயனார் மலர்த்தாள் பாதம்
        ஆணித்தி இட்டிருந்த ஆசான் பாதம்
பாடுகிறேன் பரமானந்த மௌன ஞானம்
        பங்கயன்மால் உபதேசம் பாதங் காப்பே. (1)

ஆ. முடிவு

நிலைத்திடாய் பெரியோர்கள் பாதம் போற்றி
        நிதியான வாழ்வதுவை நினைவில் தாக்கிக்
கலைத்திடாய் கலங்காமல் இருந்து தேறிக்
        கரசியா றான துவைக் கனிந்து போற்றி

துலைத்திடாய் பூலோக மாயை நீக்கித்
தூக்கிநின்று ஆடினவன் தரியில் சேரும்
அலைத்திடாய் மன துருகி மனதோன ரித்து
மார்க்கமாய் மனந்தேறு மௌனம் முற்றே. (64)

மௌனஞானம் முகிந்தது. முற்றும்.

2797. பரமானந்தர் புலம்பல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2156_2
ஆ. டி/265

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. பரமானந்தர்
ஆ. பரமானந்தர் புலம்பல்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 12

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நடுவணையில் நின்றானை நாள் தோறும் போற்றிசெய்து
தொடுகுழியைப் பார்த்துமென்நாள் தோத்திப் பிடியாமல்

படுகுழியி லேவீழ்ந்த பாவையர்மே லாசையுற்றுத்
தடுமாறி யேதங்கித் தாழ்ந்தனையே (நீ) மனமே. (1)

ஆ. முடிவு
நௌவினையை நீக்கி நடுக்கதவின் தாள்திறந்து
ஓளவிப் பிடித்தே அகவைஇடஞ் சென்றக்கால்
தௌவ்வியமின் வேட்டான் தரநாடுங் கண்டாயே
பௌவியமா யாராய்ந்து பாதையறி வாய்மனமே. (12)

5. பிற செய்திகள்
நகரத்தில் தொடங்கி நௌகாரத்தில் முடியும் 12 பாடல்களை உடையது இப் புலம்பல்.

2798. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2157
ஆ. மு/77

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. மாந்திரீகம்
இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 30 ஏடு; 60 பக்கம்
ஆ. நீளம் 22 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5-6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. மிகவும் சிதிலமடைந்த நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாம்புபிடிக்க மந்திரம்

ஓம் ஒருவிரல் கீரி, இருவிரல் குக்கிய, மூவிரல் நந்தை, நால்விரல் சிகம், அய்விரல் பட்சி அங்கே என்றும் பிறங்கை யிடிப்பு விட்டத்தே ஓட்டிப் பிடித்த கையும், இருப்புக்கை இருப்புக்கையல்ல, உடுக்குக்கை உடுக்குக் கையல்ல, நெருப்புக்கை நெருப்புக்கை கொண்டு எண்ணிப் பாம்பை வாரிப் பிடித்தேன்.

ஆ. முடிவு

வடக்கே போற கள்ளிவேரைப் பார்த்துப் பெண்ணுடைய பெயரை எழுதி, ஆணுடைய பெயரை எழுதிப் பச்சை ஓட்டில் எழுதி வேரோட வைத்து று துண்டாக நருக்கவும். ஞாயிற்றுக்கிழமை அடசல்குஞ்சு பெலி குடுக்கவும். பழம், தேங்காய், சூடம், சாம்பிராணி காட்டவும்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2799. அகத்தியர் 36

1. நூலகக் குறிப்புகள்

அ. 2158
ஆ. ல/426

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் 36

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 37

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்
ஆ. நீளம் 22 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அருள்விளை(யும்) அகண்டபரி பூரணமாய் நின்ற
ஆதியந்த பரைசிற்பரை பதத்தைப் போற்றித்
துருவமதாய் முன்னூற்றில் வைத்திய வாதம்
சொல்லிவிட்டேன் அதைக்குறுக்கி முப்பத் தாறாய்க்
கருவடக்கம் இல்லாமல் வைத்திய வாதம்
கைமுறையாய்ப் படவெள்ளை பாடினேன்யான்
ஒருமனதாய் வாதிகளே இதனைச் செய்யில்
உலகத்தோர் நோய்களெல்லாம் ஓடும் பாரே. (1)

ஆ. முடிவு

ஆமப்பா இந்தடவே வைத்தியம் பாரு
அட்டதிசை மேய்க்கஉனை வருத்தும் லோகம்
நாமப்பா வைத்தியமதில் மருந்தை எல்லாம்
நலமாகக் குறுக்கிவைத்தேன் முப்பத் தாறில்
வாமப்பா இந்தவகை மருந்தை எல்லாம்
வயத்தால்பேர் உரைக்கையிலே நோய்களோடும்
தாமப்பா எட்டிரண்டு மிருபத் தஞ்சும்
தடையறவே உருவேறச் சித்தி யாமே. (37)

2800. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்

அ. 2159

ஆ. ல/427

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்.அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 48 பக்கம்

ஆ. நீளம் 20.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8-9 வரிகள்

உ. தெளிவான சிறிய கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தாமிர சுத்திக்கு அகாரம்:

அகாரம் பலம் 5, அஞ்சாம் காச்சல் வெடியுப்பு பலம் 10 இருப்புச் சட்டியில் இவைகள் உருகும் பக்குவத்தில் 5 பலம் அகாரம் பொடித்துக் கொடுக்க வாங்கிச் சுன்னமாகும். வேறே பொடிசெய்து சீசாவில் பத்திரப்படுத்தவும்.

ஆ. முடிவு

துருசு சுன்ன மடக்கு:

துருசு சுன்னம் 1 விராகன் எடைக்கு ரசம், வீரம் சேர்த்து மேற்படி அண்டவெள்ளை அர்க்கப் பாலால் அரைத்து முன்போல் கல் சுன்னத்துக்குக் கீழ் வைத்து ஓடு மூடி சீலை செய்து 10 எருவில் புடமிடவும். இப்படி மூனு தொந்தம் செய்யத் துருசுக்குள் செம்பு, செம்பு செத்துச் சுன்னமாம். இந்தச் சுன்னத்தால் ரசம் கட்டும்.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

இ. முற்குறிப்பு
அகத்தியர் பாடல், மருந்து வாகடம், இமாம்சாகேப் ஏடு, இமாமு சாயபு அவர்கள் குமாரன் இமாமு சாயபு மேல்விலாசம் எழுதினது.

2801. வைத்திய அகராதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 2160
ஆ. ல/428

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. வைத்திய அகராதி
இ. மருத்துவம்
ஈ. அச்சில் ஏறத்தாழ 350 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 340 ஏடு; 680 பக்கம்
ஆ. நீளம் 34.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு நான்கு பத்திகள்
உ. தெளிவான சிறிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காப்பு

நிலமாதி எவ்வுலகும் படைத்த நாதன்
நிமலனறி யேகபரன் கருணை தேடி
நலம்பெறவே சித்தரா திகணத் தோர்கள்
நாட்டமுடன் பாடிவைத்த நூல்க ளெல்லாம்
பலந்தரவே யாராய்ந்து யதிர்ச்சி இல்லை
பாகமுடன் தேர்ந்தெடுத்து வயித்தியஞ் செய்ய
பொலநிறைந்த பராபரனின் குமாரன் சுரய
பொற்புறுதாள் சென்னிவைத்தேன் காப்புத்
தானே. (1)

ஆ. முடிவு

ஆதியந்த மில்லாத பிதாச்சுதனில் பிரித்து
ஆண்டவனார் கிருபையினால் வைத்திய பாகம்
தீதுபல நோய்கடந்து தீர்க்க வென்று
திறமையுடன் அட்சரம் முப்பத்து நாலாய்
ஓதியதொல் வயித்தியத்தின் ... .
உண்மைதனை அகராதி யாகச் செய்தேன்.
நீதியுள்ள ஆண்டவரே கிருபை செய்யும்
நித்தியமுந் துதிபுகழ்ச்சி உமக்கே ஆமன்.

இ. முற்குறிப்பு

1956ஆம் . ஆண்டு செப்டம்பர் மாதம் 15ஆம் தேதி இராமநாதபுரம் ஜில்லா ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா ராஜபாளையம் சேவல்பட்டித் தெரு, 4, அழகப்பபிள்ளை மகன் புளுகாண்டியாபிள்ளை என்ற சாந்தலிங்கம் ஏடு. ஒன்றாவது ஏடு.

1858ஆம் வருடம் எழுதியது.

ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலுகா சந்தைப்பேட்டை யிலிருக்கும் அந்தோணி உபதேசி மகன் புதுமை உவாத்திக்குரிய வைத்திய அகராதிப் புத்தகம்.

பிற்குறிப்பு

1858ஆம் வருடம் சுவாயமாத தையில் துவக்கி ஆகஸ்டு மாதம் 30ஆம் தேதி திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு எழுதி முடித்தேன். புதுமை உவாத்தி. அந்தோணி உபதேசி மகன் புதுமை உவாத்தியுடைய புத்தகம்.

5. பிற செய்திகள்

சித்த மருத்துவத்தில் நடைமுறையிலுள்ள கைமுறைகளை அகர வரிசைப்படுத்தி உரைநடையும் பழைய நூற்பாடல்களும் விரவிவரத் தொகுக்கப்பட்ட ஒரு சிறந்த தொகுப்பு.

2802. நபிகள் வரலாறு

1. நூலகக் குறிப்புகள்

அ. 2161

ஆ. ம/44

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. நபிகள் வரலாறு

இ. உரைநடை இலக்கியம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 325 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 336 ஏடு; 672 பக்கம்

ஆ. நீளம் 33.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்ல நிலை. 2-11 ஏடுகள் இல்லை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மாரீசு வரலாறு

ஆண்டவன் மாரீசு என்று ஒரு நெருப்பை உண்டாக்கினான். அந்த நெருப்புக்குப் புகையும் சூடும் இல்லை. அதிலொரு படைப்புப்படைத்தான். அந்தப் படைப்பு பெரும் படைப்பாக இருக்கும். சான்னென்றொருவனை மாரீசு என்கிற நெருப்பினாலே படைத்தேன் என்று ஆண்டவன் குரானில் சொல்லி இருக்கிறான். அவனுக்கு மாரீசு என்னும் பேர் வைத்தான். அவனுக்காக நெருப்பினாலே ஒரு பெண்ணைப் படைத்தான். அவளுக்கு மாரிசத்து என்று பேர் வைத்தான்.

ஆ. முடிவு

சுபோ என்கிற சூரிய உதயம் தொழுகைக்காக அலியார் பள்ளிவாசலுக்கு வந்து தொழுகை செய்யும்போது அந்த

வேளையில் புனைமூலத்து மாதுப்பட்டவன் அலி என்ற காயப்பட்டு வட்டம் ஓடிப் போய்விட்டான். இதைக் கேள்விப்பட்டு அலினார் வந்து அந்தக் காயத்தைப் பார்த்து வெகுசாய் அழுது புனைமூல சீமை என்கிறவனைப் பிடித்து வரச்சொல்லி அவனைக் காவலில் வைத்தார்கள். அவர்களை நந்புடைய மைதானத்தில் அடக்கம் செய்தார்கள். அலியனார்க்கு அப்போது வயசு 63ஆக இருந்தது.

நாற்பத்தி நாலாவது அலியினுடைய வரலாறு முகிந்தது.
முற்றும்.

இ. முற்குறிப்பு
சுபுதுல்ரயிமானுடைய ஏடு

5. பிற செய்திகள்

நூலின் தொடக்கத்தில் ஓர் ஏட்டில் நாற்பத்தி நான்கு நபிகளின் பெயர்களும் நூற்பயனும் கொடுக்கப் பட்டுள்ளன.

2803. அகத்தியர் கர்ம சூத்திரம் 300

1. நூலகக் குறிப்புகள்

அ. 2162
ஆ. ல/429

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் கர்ம சூத்திரம் 300
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 302

3. தோற்றக் கூறுகள்

அ. 43 ஏடு; 86 பக்கம்
ஆ. நீளம் 25.5 செ.மீ., அகலம் 4.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 13 வரிகள்
உ. அழகிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாய் மூலமுத லாறா தாரம்
 புரியட்டந் திசைவாய்வு நாடி மூன்றுங்
காரணமாய் இடைபின்னாற்ச் சுழினை யாகிக்
 கலந்துநின்ற வாதபித்தம் சிலேற்பன மாகி
மாரணமாய்ச் செடத்தினுள்ளே தத்து வங்கள்
 மனம்புத்தி யாங்காரஞ் சித்தத் தாலே
வாரண்மாய் நடத்துவித்த கர்மத் தாலே
 வந்ததடா நோய்களெல்லாம் மனிதர்க் காமே. (1)

ஆ. முடிவு

வரிசையாய்ச் சொல்லுகிறேன் கணைக ளேது
 மாந்தமொடு சுழிதுறப்பு வலிக ளேது
பரிசமாங் கரப்பனொடு பரங்கி யேது
 பட்சியொடு பறவையுட தோஷம் யேது
தரிசனமாங் கண்களிலே வருவ தேது
 தீர்க்கமடா சிறுவர்க்குத் தேவா மிர்தம்
சரிசனமாம் இந்நூலின் கர்ம தர்மம்
 கட்டான மருந்துவகை கணக்கு முற்றே. (302)

இ. பிற்குறிப்பு

அகத்திய மூர்த்தியருளிச் செய்த கர்ம சூத்திரம் எழுதி முடிந்தது. முற்றும்.

2804. குணவாகடம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2163_1
ஆ. ல/430

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .....
ஆ. குணவாகடம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 72

3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்
ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6_8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியங் கடவு ளாரின் அடியிணை போற்றிப் போற்றித்
தீதறு வியாதி தன்னைத் தெளிவுடன் அறிய வேண்டிக்
கோதிலா நல்லோர் பேசுங் குணமிது பாடல் தன்னை
நீதிசேர் படியின் மீதே நெறியுடன் உரைத்தார் மேலோர். (1)

ஆ. முடிவு
வெப்புப் பாவை அப்புக்கால்
மிகவுண் டாகி வுடல்வற்றிக்
கைப்பு புளிப்பு மிகத்தேடிக்
கனல்போல் மேனி வெதும்பல்செயும்
உப்பும் வயிறு தனில்பிறமும்
ஒருபக் கத்தே தாழக்கிடக்கும்
வெப்புப் பாவை இதுவென்ன
வியனார் முனிவோர் சொன்னாரே. (72)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2805. அகத்தியர் வாகடம் 1500

1. நூலகக் குறிப்புகள்
அ. 2163_2
ஆ. ல/430

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் வாகடம் 1500
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 1456

3. தோற்றக் கூறுகள்
அ. 304 ஏடு; 608 பக்கம்
ஆ. நீளம் 31 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாகுடன் கணேசன் பாதம் பணிந்துமுக் குணங்க ளாய
வாகடச் சுவடி யெல்லாம் வகைவகை தொகுத்துப்
/பார்த்தே
ஆகம விதிநூ லாலே அடைந்திடும் நோய்கட் கெல்லாம்
போகநல் மருந்து சொல்வோம் புலத்தியா புரிந்து பாரே.
(1)

ஆ. முடிவு

ஆமப்பா வாகடத்திற் சூத்திரத்தை மைந்தா
அறைந்திட்டேன் நூலொன்றும் அடக்க மில்லை
வேமப்பா நோயெல்லாம் படுதீய்ப் பற்றி
வேறுள்ள நூல்களெல்லாம் விபரங் கேளு
சோமப்பா இந்தநூல் தொகையே தென்றால்
சொல்லுகிறேன் ஆயிரத்தஞ் ஞூறு சொல்லும்
நாமப்பா உள்ளபடி சொல்லி வைத்தோம்
நாதாக்கள் கிடாஷத்தால் சூத்திரந்தான் முற்றே.
(1456)

5. பிற செய்திகள்

அகத்தியர் வைத்திய காவியம் 1500 எனவும் இந்நூல் வழங்கப்பெறுகிறது.

2806. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 2164_1
ஆ. ல/431

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 177 ஏடு; 354 பக்கம் (1 முதல் 180 வரை)
ஆ. நீளம் 34.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6_9 வரிகள்
உ. தெளிவான பல கையெழுத்து
ஊ. நல்ல நிலை. 37, 88, 179 ஆகிய ஏடுகள் உடைந்துள்ளன
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பீனிசத்துக்கு மருந்து:
கொல்லங்கோவைக் கிழங்கு, குள்லாதண்டைப் பட்டை, கொடுவில்லிவேர், எருக்கலம் வேர் இவைவகை ஒன்றுக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு 1 மருந்து பூலாங்கிழங்கு விராகனிடை 5, ஏலம் விராகனிடை 5, மஞ்சள் விராகனிடை 5, வெந்தயம் விராகனிடை 5, நல்லெண்ணெய் படி 1 அரைச்சு எண்ணெயிலே கரைச்சு காய்ச்சி முழுகப் பீனிசம், தலை நாசியில் ரத்தம் விழுகிறது, சீழாய் விழுகிறது தீரும்.

ஆ. முடிவு

ஆராத சிரங்குக்கு மருந்து:
பொன்னரிதாரம் விராகனிடை 3, எருமை வெண்ணைய் ஒரு விளங்காய் அளவு கூடப்போட்டரைத்து வழித்து ஒரு

கலையத்திலே போட்டுத் தீ எரிய விட்டுப் பொங்கி வருகிற சமயத்திலே இறக்கிக் குளிர்ந்த தண்ணீர் ஒரு சட்டியிலே ஊற்றிப் போட்டு மறுநாள் எடுத்துத் தடவி இலுப்பைப் புண்ணாக்கிட்டுத் தேய்த்து முழுகிப் போடச் சிரங்கு தீரும். இது கைகண்டது.

2807. வரரிஷி பகவான் வாகடம்

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2164_2
   ஆ. ல/431

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. வரரிஷி பகவான்
   ஆ. வரரிஷி பகவான் வாகடம்
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 134

3. தோற்றக் கூறுகள்
   அ. 15 ஏடு; 30 பக்கம். (181 முதல் 196 முடிய)
   ஆ. நீளம் 34.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்ல நிலை. 189ஆம் ஏடு இல்லை
   எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
சீர்பெறு வாக டத்துத் தெளிந்துரை வகுத்த நாடி
யேர்பெறு சரீரந் தன்னி லியங்குவ லக்க ணத்தை

பேர்பெறு வாத பித்தஞ் சேத்தும பேதங் கூற
கார்பெறு தந்தி வண்ணன் கணபதி வணக்கஞ்
செய்வாம். (1)

ஆ. முடிவு

வசம்பு திரிகடுகு பெருங்காயம்
வலிய சயிந்தஞ் சமன் கூட்டி
இசைந்த இலுமிச்சம் பழச்சாற்றில்
இயல்பா யரைத்துக் கலருபண்ணிச்
சிவந்த பூனை எழுப்பிச்சில்
வளமாய்ப் பாவனை செய்தபின்பு
உசந்த நம்பப் பழச்சாற்றில்
உரைத்தே கண்ணி விடுவாயே. (134)

2808. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2164_3
ஆ. ல/431

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 23 ஏடு; 46 பக்கம் (197 முதல் 220 வரை)
ஆ. நீளம் 34.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7_8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. 217ஆம் ஏடு இல்லை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

விளக்கெண்ணை வெட்பாலை வாலுளுவை வசம்பு
வெள்ளுள்ளி அரைப்பல மிக்கநிரை மாடை
அழகான பசுமஞ்சட் சாறுரண்டு கரண்டி
அழகான குறிஞ்சாலின் இலையும்பல மறையாங்
கிழக்காக அடுப்பேற்றி எண்ணெயுடன் கலந்து
கீழறியே வடித்துமேல் பூசியுள்ளுங் கொண்டால்
விளக்கானது போலெரியும் பழஞ்சுரமும் அலிண்டு
வாய்நடுக்க லுடன்வெப்பு மேலிட் கும். (1)

ஆ. முடிவு

முள்ளியு முருங்கை வேரு
முத்தெருக் கிலையும் வேருங்
கள்ளியும் வசம்பு சுக்குக்
கலந்துடன் வெந்த எண்ணெய்
துள்ளிமேல் துள்ளி வார்க்கத்
துர்செவி நோய்க ளெல்லாந்
தெள்ளியான் ஒருவன் செய்த
தீமைபோல் தீரு மன்றே. (144)

5. பிற செய்திகள்

இந்நூல் வரரிஷ பகவான் வாகடத் (தொடர் எண்.2164_2) தின் தொடர்ச்சியாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

2809. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 2164_4

ஆ. ல/431

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 21 ஏடு; 42 பக்கம்(221 முதல் 245 வரை)

ஆ. நீளம் 34.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை. 225, 238, 239, 242 ஆகிய ஏடுகள் இல்லை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நீரடைப்புக்குத் தயிலம்:
மாவிலங்கு வடக்குப் போன வேரும், நெருஞ்சி வேரும், சுடுகாட்டில் நிற்கின்ற பிராய்முட்டி வேரும், சிறுபூளை வேரும் இவையெல்லாம் வகைக்கு இரண்டு விராகனிடை போட்டு நறுக்கிக் காய்ச்சி மூன்று நாளைக்கு இந்தப்படி காய்ச்சிக் குடிக்கவும். கல்லடைப்பன் நீரடைப்பன் தீரும்.

ஆ. முடிவு
முசுமுசுக்கை இலையைத் துவைத்துப் பிழிந்து கருப்புக் கட்டி கூட்டிப் பசுவின் பாலில் கலந்து குடிக்கப் பித்தம் பிதற்றுகிறதும் நிற்கும். இப்படி மூன்று நாள் தின்னவுந் தீரும்.

2810. அகத்தியர் தீட்சாவிதி 800

1. நூலகக் குறிப்புகள்
அ. 2165
ஆ. ல/432

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் தீட்சாவிதி 800
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 809

3. தோற்றக் கூறுகள்
அ. 179 ஏடு; 258 பக்கம்
ஆ. நீளம் 33 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8-9 வரிகள்
உ. தெளிவான சிறிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
வானைத்தா வியமகா பொதிகை தன்னில்
மகத்தான ரிசியுடைய வாக்கின் நேர்மை

பாணைத்தா வியபூசை வாம பூசை
பரிவான சிவயோகப் பண்போர் கேளு
மீனைத்தா வியராசி மீன ராசி
விளங்கிநின்ற கன்னிமுதல் வில்லு மேலுஞ்
சேனைத்தா வியராசி யாந்து லாத்தின்
சென்மரா சிக்கருவைச் செப்பு றேனே. (1)

ஆ. முடிவு
தானிட்டால் அதீதமங்கே வீரிட்டுக் கட்டும்
துரையேது ஆச்சென்று சொல்ல வேண்டாம்
ஆளிட்ட வெள்ளியிட்டால் வெள்ளிமலை யாகும்
அப்பனே குருபண்ணி வங்கத்திலப் போடு
நாளிட்ட வெள்ளியடா பத்தும் பத்தாம்
நலமான உபரசமும் வெள்ளி யாக்குங்
கோளிட்ட வெள்ளிக்கு வெள்ளி வித்து
கூறி தாய் பொன்னுக்குப் பொன்தான் (809)
வித்தே.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2811. அகத்தியர் சாலம் 1200

1. நூலகக் குறிப்புகள்

அ. 2166_1
ஆ. ல/433

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் சாலம் 1200. இரண்டாம் காண்டம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 200

3. தோற்றக் கூறுகள்

அ. 43 ஏடு; 86 பக்கம் (1 முதல் 43 வரை)
ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
சித்திக்குந் தேவ ரமுதுண் டவர்ரிசி வசிய....
முத்திக்கு மூல பதமே போற்றி முன்னுரைமோ
பத்திக்குஞ் சால மிருநூறு பாதமுந் தானுரைக்க
அத்திக் கரியுரி கொண்டான் பதும்பத மாகியதே. (1)

ஆ. முடிவு
பாராதே சில்கொடுமை செய்தி டாதே
பரமவிதி சிவகாமி பாதத் தாணை
கூறாதே யாவருக்கும் பாத கத்தைக்
கொல்லாதே சீவசந்து நீயென் றெண்ணு
சேராதே ஊண்கொழுப்பு யீடு வாடை
செய்யாதே செத்தபின்பு கருவை நாளும்
ஏறாதே இரண்டாங்காண் டத்தை விட்டே
எறியாதே இருநாறு மிந்தா முற்றே. (200)
இரண்டாங் காண்டம் முற்றும்.

2812. சுந்தரானந்தர் கேசரி 56

1. நூலகக் குறிப்புகள்
அ. 2166_2
ஆ. ல/433

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சுந்தரானந்தர்
ஆ. சுந்தரானந்தர் கேசரி 56
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 56

3. தோற்றக் கூறுகள்

அ. 17 ஏடு; 34 பக்கம் (44 முதல் 60 வரை)
ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதிபரா பரையான மூல நாயன்
அறுமுகத்தை மனதிலெண்ணி அன்பாய்ப் போற்றி
சோதியென்ற ஆயிபதந் தன்னைப் போற்றி
சொற்பெரிய மனோன்மணித்தாய்ப் பாதம் போற்றி
பாதிபிறை வீடதிலே சுமந்த மால்தான்
பாரிலெச்சி மிப்பாதந் தன்னைப் போற்றிச்
சோதியாய மாகியென்ற கேசரியே நாயில்
சொல்லவே கணபதியின் பாதங் காப்பே. (1)

ஆ. முடிவு

வீசுறேன் பத்தியந்தான் புளிப்பா கரது
விதமான உப்பும்மோ ரும்மா காது
வாசியே பூசணிக்காய் உளுந்தா காது
ஆகியதோர் கடுகுவா டையா காது

மாசிலன்ற மைதுனங்கள் கிட்டவா காது
மக்களே மாங்கிஷங்கள் மச்சமா காது
பேசினேன் சேம்பிலையின் அவரையா காது
இவைதன்னில் பத்திரமாய் கருக்கொண் டாயே. (56)

2813. பூசாவிதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 2166_3
ஆ. ல/433

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. பூசாவிதி
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 42

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம் (61 முதல் 66 முடிய)
ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
ஆனை முகத்தனை ஆதி கணேசனை
நாணய மாக நடுமந் திரத்தனை
வாணப் பரனை வடிவுமுக் கண்ணனை (1)
நாணய மாக நடுவுள்வைப் போமே.

ஆ. முடிவு

முத்தி பிறந்தது முப்பால் வெளியிலே;
சத்தி பிறந்தது சற்குரு பாதத்தில்;
பத்தி பிறந்து பராபர மானது;
சித்தி பிறந்து சிலவாறு சித்தியே. (42)

பூசாவிதி முகிந்தது. முற்றும்.

2814. சுந்தரானந்தர் வாதமுறை 110

1. நூலகக் குறிப்புகள்

அ. 2166_4
ஆ. ல/433

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சுந்தரானந்தர்
ஆ. சுந்தரானந்தர் வாதமுறை 110
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 110

3. தோற்றக் கூறுகள்

அ. 29 ஏடு; 58 பக்கம் (67 முதல் 95 வரை)
ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6_7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியந்த மறநிறைந்த சட்டை நாதர்
அன்பான சேயென்ற பிள்ளை யாகிச்
சோதியந்தத் துள்ளிருக்கும் சுடரைப் போற்றிச்
சுந்தரமென் றேபேரும் இட்டார் எங்கள்
நாதாந்தத் திருமூலர் புண்ணாக் கீசர்
நாதாக்கள் ஈசர் பதம் போற்றி யேதான்
மேதினியில் அன்புடனே வாதம் பார்த்தேன்
வேதாந்தச் சிற்பரைதாள் காப்ப தாமே. (1)

ஆ. முடிவு

தானென்ற குருமூலம் அறிய வேணும்
சத்திசிவம் ரெண்டையுமே காண வேணும்
தானென்று கும்பிடும்கல் லறிய வேணும்
தட ன அண்டவித்தை செய்ய வேணும்
தானென்ற கற்பத்தை யுண்ண வேணும்
சாதகமாய்த் தீட்சைவிதி கற்க வேணும்
தானென்ற பூசைவிதி யறிய வேணும்
சாத்திரத்தில் இதுநூற்றுப் பத்து முற்றே. (110)

சுந்தரானந்தர் நூல் முற்றும்.

இ. பிற்குறிப்பு

சருவதாரி வருடம் கார்த்திகை மாதம் 27ஆம் தேதி சுந்தரானந்தர் வாதமுறை நூற்றுப் பத்தும் எழுதி முகிந்தது முற்றும்.

2815. அகத்தியர் பூசாவிதி 36

1. நூலகக் குறிப்புகள்

அ. 2166_5
ஆ. ல/433

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் பூராவிதி 36
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 36

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம் (96 முதல் 101 முடிய)
ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதிய ராபர னான அரனடிப் பாதம் போற்றிச்
சோதியாம் வாலை யம்மன் துணையடிக் கமலம் போற்றி
நீதியான் கணேசன் ஆனை நின்மலப் பாதம் போற்றித்
தீதிலா இந்த நூலே செப்பினேன் புலத்தியா கேளே. (1)

ஆ. முடிவு

காற்றுநீ இருந்தா யானால் கறைகண்ட ருளி னாலே
ஏற்றதோர் உச்சி வாசல் இன்பமாய்த் திறக்கும் பாரு
நாற்றிசை மதிக்க வங்கே நண்ணுவார் கயிலை நாதர்
போற்றியே வணங்கி னாக்கால் போதவே யருள்செய்
வாரே. (36)

2816. அகத்தியர் சூத்திரம் 80

1. நூலகக் குறிப்புகள்

அ. 2166_6
ஆ. ல/433

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் சூத்திரம் 80
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 80

3. தோற்றக் கூறுகள்

அ. 21 ஏடு; 42 பக்கம் (102 முதல் 122 முடிய)
ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரன்கயிலை விட்டுநான் தட்சணத்தில் வந்து
அனவரத கோடிசித்தர் முனிவர்ரிஷி களுமாய்ப்
பரந்ததொரு பொதிகைதனில் இருக்கும் போது
பாடினோம் வாதமொடு வயித்தி யந்தான்
நிரந்தரமாய் லெட்சம்ரெண்டு லெட்சம் பாடி
நிறுத்தினபின் சூத்திரமாய்க் குறுக்கிப் பிழைக்க
அரந்தநோய் மருந்துவகை கர்மந் தீர்க்கும்
அகச்சூட்சம் மந்திரமெந் திரஞ்சிவமே தானே. (1)

ஆ. முடிவு

நூலென்ற சித்தாந்தம் வேதாந்த முதலாய்
நுண்ணிமையாய்ப் பாடிவைத்தோம் இனிமேல் இல்லை
பாலென்ற தொன்றிலே பிறந்தநெய் போலப்
பரிந்துபார் நூலெல்லாம் பலிதமாய்க் காணும்
ஆலென்ற மரந்தனிலே விழுதோடு மரம்போல்
அறிந்தறிந்து நூலெல்லாம் ஆராய்ந்து பாரு
காலென்ற கண்நோக்கிப் பாரு சொன்னேன்
கற்றறிந்தோர்க் கென்பதுதான் காட்சி முற்றே. (80)

அகத்திய நாயனார் அருளிச்செய்த சூத்திரம் எண்பதும் முற்றும்.

இ. பிற்குறிப்பு

சர்வதாரி வருடம் ஆனி மாதம் 21ஆம் தேதி வியாழக் கிழமை குருவின் நாள் மகா நட்சத்திரத்திலே பாளையங் கோட்டையில் மூணாம்பட்டாளம் நாலாங் கும்பினியி லிருக்கும் ரெங்கைய்ய நாயக்கருக்குத் திருப்புவனத்தில் இருக்கும் பிச்சபிள்ளை குமாரன் அழகப்பன் அகத்திய நாயனார் அருளிச்செய்த எண்பதும் எழுதிக்கொடுத்தேன்.

2817. அகத்தியர் ஞானம் 100

1. நூலகக் குறிப்புகள்

அ. 2166_7
ஆ. ல/433

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் ஞானம் 100
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 100

3. தோற்றக் கூறுகள்

அ. 32 ஏடு; 64 பக்கம் (123 முதல் 154 முடிய)
ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6-7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்
பூமியென்றுந் திரியென்றும் படைத்த வாறும்
காரணமாய்த் தேவியெங்கும் நிறைந்த வாறும்
கற்பமுண்டு ரிஷிகள்சா காத வாறும்
வாரணமாய்ப் பறவையொடு நாற்கால் சீவன்
மானிடர்க ளுருகின்ற குலத்தின் வாறும்
தாபரமாய் விருச்சமாய்ப் புல்ல தாகிப்
பாதாள சாகரமும் படைத்த வாறே. (1)

ஆ. முடிவு

வெளியோடே வெளிச்சேரு மீறுந் தண்ணீர்
விதமாக அப்புடனே சேர்ந்து போகும்
மொழியோடே தேயுவது சேர்ந்து போகும்
உத்தமனே மண்ணுடனே மண்ணுஞ் சேரும்
அழியாத வாயுவினில் வாயு சேரும்
அஞ்சுமொன்றாய்க் கூடினால் ஆன்மா வாகும்
வழியோடே இவ்வண்ணம் அறிந்து கொண்டால்
மானிடரே காயசித்தி ஞான முற்றே. (100)

அகத்தியர் அருளிச்செய்த ஞானம் நூறும் எழுதி முகிந்தது.
முற்றும்.

இ. பிற்குறிப்பு

இந்த ஞானம் எழுதினது திருப்பழவனத்தில் இருக்கும் கோனேரி அழகப்பப்பிள்ளை குமாரன் சின்னதம்பி கையெழுத்து.

2818. அகத்தியர் இரசவர்க்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2166_8

ஆ. ல/433

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் இரசவர்க்கம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 150

3. தோற்றக் கூறுகள்

அ. 21 ஏடு; 42 பக்கம் (155 முதல் 175 முடிய)

ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உலகமுழ யாவையும் உண்டு படைத்திடு
மோங்கிய மால்மருகன்

பலகலை யாயுரு வேதமும் நேர்படு
 .... தமிழாலே
சலமுடன் அறுசுவை ரசமெனும் வர்க்கஞ்
 சாற்றிட என்நாவில்
கலகல நற்பதம் நடனமி டத்திரு
 கணபதி காப்பாமே. (1)

ஆ. முடிவு
புவியில் நவக்கோள் கதிரவனால்
 பொங்கி எழுந்த நவதான்யம்
அவியில் பொசிக்கச் செ ... விரை
 அநேக விதமுண் டயனறிவான்
அவனி யுரைத்தார் பலவிதமாய்க்
 கண்டு கேட்டு பொசித்துணர்வாய்
பவனி யடக்கிச் சூட்சமதாய்ப்
 பதியத் தானிய வர்க்கமிதே. (150)

தானிய வர்க்கம் முற்றும்.

இ. பிற்குறிப்பு
இந்த ரசவர்க்கம் எழுதினது திருப்புவனத்தில் இருக்கும் பிச்சபிள்ளை குமாரன் அழகப்பன் எழுதி ரெங்கய நாயக்கருக்குக் கொடுத்தோம்.

2819. மருந்துசெய்முறை

1. நூலகக் குறிப்புகள்
 அ. 2166_9
 ஆ. ல/433

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ......
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. செய்யுள். அச்சில் ஏறத்தாழ 8 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம் (176 முதல் 181 முடிய)
ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5-6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்பு செய்திகள்

அ. தொடக்கம்

கோமட்டிக்காய் லேகியம்:

பூமருவும் வேதமருள் பூத்தவந்தி அன்னரிய
சோமலிங்கர் பாதம் தொழுதுகந்து - நாமவரிக்
குமட்டிக்காய் லேகி யத்தைக் கூறக்கேள்.

ஆ. முடிவு
நல்லசதி றானவெள் ளாட்டு வீறாமீன்
குறவை சித்திரமாம் விளக்கெண்ணை
நல்ல சிறப்பான போதில் முழுகு
வெந்நீரும் பத்திய மாகவே கொள்ள
நல்ல பதறாமல் ஆள்கண்டு பத்தியஞ் சொல்லு
தீராத ரோகமெல்லாம் தீரு மென்றே
....
.... முனிவர் செப்பினார் தானே.

5. பிற செய்திகள்

குமட்டிக்காய் லேகியம், வாத சன்னிக்குத் தயிலம், சித்திரவல்லாதி லேகியம் ஆகிய மூன்று மருந்துகளின் செய்முறை கூறும் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

2820. அகத்தியர் பின்னூல் 80

1. நூலகக் குறிப்புகள்

அ. 2166_10
ஆ. ல/433

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் பின்னூல் 80
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 83

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு; 38 பக்கம் (182 முதல் 200 முடிய)
ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8_9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முன்னூலெண் பதுசொன்னேன் முதலே காப்பு
மூலத்தில் நின்றகண பதியே போற்றி

பின்னூலெண் பதுசொல்ல ஆயி காப்பு
பேரான என்குருமா முருகன் காப்பு
அன்னாளில் ஈசனுப தேசத் தாலே
அகத்தியரும் என்றனக்குப் பேரும் ஆச்சு
பொன்னான வாதத்தில் லட்சங் காப்பு
பூட்டினது பூரணரூத் திரத்தைக் கேளே. (1)

ஆ. முடிவு
ஞானமென்ன யோகம்விட்டா லதுவும் ஞானம்
நாலைவிட்ட யோகமென்ன மரண யோகம்
யானமென்ன ரசத்தைவிட்டால் சுரபானம்தான்
பரிகார நூலைவிட்டால் பலகாரந்தான்
கோனமென்ன வழலைவிட்டால் ரசவா தந்தான்
குடல்வாதம் வேதமல்லால் குணமா காது
கானமென்ன இந்நூலெண் பதையுந் தொட்டால்
காசினியில் இவன்யோகி கடந்தான் முற்றே. (83)

அகத்தியர் பின்னூல் எண்பதுவும் முற்றும்.

2821. சட்டைமுனி முன்ஞானம் 100

1. நூலகக் குறிப்புகள்

அ. 2166_11
ஆ. ல/433

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சட்டைமுனி
ஆ. சட்டைமுனி முன் ஞானம் 100
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 101

3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு; 40 பக்கம் (201 முதல் 220 முடிய)
ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7-11 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தாங்கிநின்ற சரிகையிலே நின்றுசடம் விழுகில்
தப்பாது கிரிகையுள்ளே சாரப் பண்ணும்
வாங்கிநின்று கிரிகைவிட்டு விழுந்த தானால்
மகத்தான உடலெடுத்து யோகம் பண்ணும்
ஓங்கிநின்று யோகம்விட்டு விழுந்த தானால்
உத்தமனே உயர்ந்துநின்ற ஞானந் தோற்றும்
பாங்குநின்ற யச்சனமே மவுன முத்தி
பரிவாக வாய்த்தவர்க ளறிந்து கொள்ளே. (1)

ஆ. முடிவு

ஆகுமப்பா வாதத்தில் பத்து நூறு
அடுத்துரைத்த நிகண்டதுவும் பனிரண்டு நூறு
ஆகவப்பா ஞானமிது ரெண்டு நூறு
அப்பனே கற்பமது ஒன்றே நூறு
ஆகவப்பா சூத்திரத்தில் ரெண்டு நூறு
அறியடா ரெண்டுபத்து ஏழு நூறு
ஆகவப்பா தோஷமுண்டு மயங்க வேண்டாம்
ஆதியென்ற குருவருளால் சொன்னேன் முற்றே. (101)

இ. பிற்குறிப்பு

இந்த நூறு பாட்டும் வீரக்கோட்டத்தில் எழுதி முடிச்சது. முற்றும்.

2822. சட்டைமுனி ஞானம் 100

1. நூலகக் குறிப்புகள்

அ. 2166_12

ஆ. ல/433

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சட்டைமுனி

ஆ. சட்டைமுனி ஞானம் 100

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 101

3. தோற்றக் கூறுகள்

அ. 22 ஏடு; 44 பக்கம். (221 முதல் 242 முடிய)

ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8_9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆ. முடிவு

காண்க: தொடர் எண் 2022_2.

இ. பிற்குறிப்பு

இந்த ஞானம் இருநூறு பாட்டு விசையாந்தரத்தில் சுக்கிர வாரம் அசுபதி நட்சத்திரம் பத்து மணிக்கு அமிர்த வேளையில் இருநூறு பாட்டு எழுதி முகிந்தது. முற்றும். ரங்கய்ய நாயக்கர் கையால் எழுதினது.

2823. கயிலாசமூர்த்தி வாதம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2166_13

ஆ. ல/433

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கயிலாசமூர்த்தி

ஆ. கயிலாசமூர்த்தி வாதம் - நடுநூல் ஞானம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 50

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம். (243 முதல் 251 முடிய)

ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை. 249ஆம் ஏடு முறிந்துள்ளது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நிற்குணமாய் நிர்மலமாய் நிரஞ்சனமு மாகி
நேரான பூரணமாய் மனமெட் டாதே
சற்குணமாய் சமரசமாய்த் தானுந் தாண்டி
சச்சிதா னந்தவெளிக் கப்பால் நின்ற
தற்குணமா யெனையாண்ட சின்மயத்தைப் போற்றிச்
சமரசமாய் வேதாந்த வாதஞ் சொல்வேன்
நற்குணமாஞ் சனகாதி ரிஷிகள் பாதம்
நலம்பெறவே நாவில்வைத்துப் பாடு றேனே. (1)

ஆ. முடிவு

சொல்லுவார் உலகத்தில் யோகங் கோடி
சொற்பெரிய அட்டாங்க மார்க்கங் கோடி
சொல்லுவார் ஞானமுதல் சாத்திரங்கள் கோடி
துரியத்தே நிற்கிறது சொற்ப மோடா
சொல்லுவார் வாதமென்றும் ஆசை பூண்டு
சோதியொத்த வாமத்தைத் தூஷிப் பார்கள்
சொல்லுவார் சொல்கேட்டே அலைவார் கோடி
துலங்கிநின்ற சாத்திரத்தைக் காணார் காணே. (50)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2824. அகத்தியர் பச்சை 16

1. நூலகக் குறிப்புகள்

அ. 2167_1
ஆ. ல/434

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் பச்சை 16
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம். (1 முதல் 3 முடிய)
ஆ. நீளம் 27.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க: தொடர் எண் 2090_3

ஆ. முடிவு

ஏற்றிடில் சன்னி தோஷம் எழும்பிடில் குட்ட ரோகம்
பார்த்திடில் பராங்கி சூலை பல்கடி முதலா யுள்ள
புகைத்திடில் தீரும் என்று பொருப்புமேல் இருந்து
/சொன்னார்.' (16)

(பாடல் மூன்றடியுள்ளதாகவே எழுதப்பட்டுள்ளது)

அகத்திய நாயனார் அருளிச்செய்த வயித்தியம் பதினாறு எழுதி முகிந்தது முற்றும்.

2825. அகத்தியர் வைத்தியம் 50

1. நூலகக் குறிப்புகள்
   - அ. 2167_2
   - ஆ. ல/434

2. உள்ளீடு: நூல் விவரம்
   - அ. அகத்தியர்
   - ஆ. அகத்தியர் வைத்தியம் 50
   - இ. மருத்துவம்
   - ஈ. செய்யுள் 50

3. தோற்றக் கூறுகள்
   - அ. 9 ஏடு; 18 பக்கம். (4 முதல் 12 முடிய)
   - ஆ. நீளம் 27.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
   - இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நாடியதோ ரகண்டபரி பூரணமாய் நின்ற
நாதமுத்துக் கணேசனொடு கந்தன் காப்பு
ஆடியதோர் சிவனாரும் என்னைப் பெற்ற
ஆத்தாளும் நாவுதனில் குடிகொண் டேதான்
பாடியதோர் வயித்தியமைம் பதுதான் சொல்வேன்
பண்பான புலத்தியனே இந்நூ லோடே
தேடியதோர் பூரணசூத் திரத்தில் நன்றாய்த்
தீட்சையொடு கருக்குருவும் திரமி தாமே. (1)

ஆ. முடிவு

கண்டாக்கால் வாதமெல்லாம் அடிக்கீழ் போற்றும்
கருவான சவுக்கார மகிமை தன்னை
விண்டாக்கால் அழிந்திடுவாய் நூல்கொ டாதே
வேதாந்த ஞானியென்றால் ஈயான் பாரு
தொண்டுசெய்வாய் பதினாறு வருஷங் காத்துச்
சோதிச்சுப் பின்புதா னீவார் அப்பா
சண்டமா ருதம்போலே வெளிய தாகச்
சாற்றினதோர் வயித்தியமைம் பதுதான் முற்றே. (50)

இ. பிற்குறிப்பு

அகத்திய நாயனார் அருளிச்செய்த வயித்தியம் ஐம்பது எழுதினது. விரோதிவருடம் பங்குனி மாதம் 13ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மங்கள வார நாள் சுவாதி நட்சத்திரம் கூடிய தினத்தில் மூணாம் பட்டாளத்திலிருக்கும் ரெங்கநாயக்கருக்குத் திருப்புவனத்திலிருக்கும் பிச்ச பிள்ளை குமாரன் அழகப்பன் எழுதிக் கொடுத்தேன்.

2826. அகத்தியர் கர்ம காண்டம் 300

1. நூலகக் குறிப்புகள்

அ. 2167_3

ஆ. ல/434

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் கர்ம காண்டம் 300

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 299

3. தோற்றக் கூறுகள்

அ. 42 ஏடு; 84 பக்கம். (13 முதல் 54 முடிய)

ஆ. நீளம் 37.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாய் மும்மூலப் பொறியில் சூடாய்ப்
புகையெழும்பி மேகமதாய்ச் சிரசில் சூடாய்க்
காரணமாய் நீர்கலந்து பீனிசம் போலக்
கொள்ளுமகன் எழுந்தவாய்வு கபால மெல்லாம்
சீரணமாய்ப் போகாது வாத பித்தம்
சிலேற்பனந்தான் மூன்றாலே நோய்க ளெல்லாம்
தாரணையாய்த் திசைவாய்வில் மூன்று வாய்வாம்
சமானனொடு பிராணனும் பானம் தானே. (1)

ஆ. முடிவு

சித்தியுண்டா மவுனத்தில் சொல்லு வோர்க்குத்
தெளிவான மனதுண்மை அறிவி னோடு
பத்தியாய் நிலைத்தபின்பு பாதும் போச்சு
பஞ்சபொறி பண்ணாண்மை பறந்து தய்யா
புத்தியாய்ப் பிழைப்பதற்குச் சாகாதே சொல்லு
புகழான மனவாசி வாயு வேகம்
முத்தியாய் இருவினையும் அற்ற தேகி
முதலான சொக்கர்பத முத்தி தானே. (299)

அகத்தீசபர நாயனார் அருளிய கர்மகாண்டம் முன்னூறு எழுதிமுகிந்தது முற்றும்.

இ. பிற்குறிப்பு

விரோதி வருடம் சித்திரை மாதம் 25ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆதித்தவாரம் பூர்வ பட்சத்தில் 15 நாழிகையில் எழுதி முகிந்தது. பிச்சபிள்ளை குமாரன் அழகப்பன் கையெழுத்து.

2827. அகத்தியர் 205

1. நூலகக் குறிப்புகள்

அ. 2167-4

ஆ. ல/434

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் 205

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 204

3. தோற்றக் கூறுகள்

அ. 33 ஏடு; 66 பக்கம். (55 முதல் 87 முடிய)
ஆ. நீளம் 27.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாய் மும்மூலப் பொறியில் சூடாய்ப்
புகையெழும்பி மேகமதாய்ச் சிரசில் சூடாய்க்
காரணமாய் நீர் கலந்து கண்ணில் ரோகம்
கனலெழுந்த வாய்வதனால் சூலை ரோகம்
மாரணமாய் வாதத்தில் எழுந்த மேகம்
மருவியதோர் பித்தத்தால் கிராணி யாச்சே
(தாரணமாம் வாயுவினால் குன்ம மாச்சு
சாந்தசிலேற் பனங்கூடிச் சயம தாமே.) (1)

ஆ. முடிவு

(ஈவதிந்த நூற்றொகைதான் இருநூற் றைந்து
இகத்திலுள் ளோர் பிழைக்கவென்று இரங்கிச்
சொன்னேன்
தாயிருந்த தவமுனக்குத் தவக்க மில்லாத்
தனம்பெறவே இந்நூலைச் சாற்றி னேன்யான்;)
நோய்மிகுந்து சாவில்லை யொருநா ளுந்தான்
நுண்மையாய்ச் சரக்கெல்லாம் நீற்றிக் கொண்டு
வாயமுடன் எண்ணெயொடு கிருத்தஞ் செய்து
வைத்திடுவாய் அனுபானம் வைத்தியம் முற்றே. (204)

(இப்பாடல்கள் மூன்றடி, இரண்டடி உடையனவாகவே எழுதப்பட்டுள்ளன. விடுபாடுகள் வேறு சுவடி கொண்டு நிரப்பப்பெற்றன)

இ. பிற்குறிப்பு
. . . . . வருடம் மாசி மாதம் 10ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று 25 நாழிகையில் சுக்கிர வாரமுங் கூடிய சுபயோக சுபதினத்தில் அகத்தீச நாயனார் அருளிச்செய்த வயித்தியம் இருநூற்று நாலும் ரெங்கநாயக்கருக்கு எழுதிமுகிந்தது முற்றும்.

2828. பூரண சந்திர வாலை

1. நூலகக் குறிப்புகள்
அ. 2167_5
ஆ. ல/434

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. . . . .
ஆ. பூரண சந்திர வாலை
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 200

3. தோற்றக் கூறுகள்
அ. 22 ஏடு; 44 பக்கம். (88 முதல் 109 முடிய)
ஆ. நீளம் 27.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
மூச்சுவிடும் போதிருந்த ரசவா தப்பெண்
மோகனபூ ரணசந்திரோ தயத்தைப் பாட

ஆச்சரிய மாயிரத்து இருநூற்று ஐந்து
அரன்சொன்னா ரதிலிருந்த இருநூறு தானும்
நீச்சுமில்லை நிலையுமில்லை கரையுங் காணோம்
நெடுந்தூரம் வரைகோடும் நெளித மில்லை
பேச்சரிய ஆயியுட பதத்தைப் போற்றிப்
பிதற்றுகிறேன் குமரகுரு பரன்காப்ப தாமே. (1)

ஆ. முடிவு
வாருரை சந்திர வாலைமெய் நூலைப்
பேருரை செய்பெரி யோரென நாடிச்
சீருரை செய்தொழில் தேறுவார் சித்தர்
ஏருரு வாய்இரு நானுரை முற்றே. (200)

பூரண சந்திர வாலை எழுதி முகிந்தது. முற்றும்.

இ. பிற்குறிப்பு
சர்வதாரி வருடம் மாசி மாதம் 16ஆம் தேதி வியாழக்கிழமை குருவார நாள் மூல நட்சத்திரம் கூடிய தினத்தில் பாளையங்கோட்டையிலிருக்கும் பட்டாளத்தில் 4 கும்பினி ரெங்கய்யனுக்குப் பூரணசந்திர வாலை எழுதிக் கொடுத்தது. திருப்புவனத்திலிருக்கும் அழகர்பிள்ளை குமாரன் சின்னத்தம்பி கையெழுத்து.

2829. அகத்தியர் இரத்தினச் சுருக்கம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2167_6
ஆ. ல/434

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் இரத்தினச் சுருக்கம் 360

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 369

3. தோற்றக் கூறுகள்

அ. 68 ஏடு; 136 பக்கம். (110 முதல் 177 முடிய)
ஆ. நீளம் 27.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8_11 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாம் நிறைந்தகுரு பரைதாள போற்றிப்
 புகலுகிறேன் வயித்தியரத் தினச்சுருக்கந் தன்னை
வாரணமா முகத்தோனைப் பணிந்து போற்றி
 வயித்தியந்தான் இந்தமுன்னூற் றறுப துக்குள்
காரணமாய்ச் செந்தூரம் பற்பம் லேஹ்யம்
 கருவான தயிலமொடு கிருதம் எண்ணெய்
சூரணமாங் கிஷாயமொடு கலிக்க மாத்ரை
 கருக்குகுரு நாடிமுதல் சொன்னோம் பாரே. (1)

ஆ. முடிவு

முழுகவே வியாதியெல்லாங் கடலே புக்கும்
 முக்கியமாய் அகத்தியர்க்கும் செபம்தான் பண்ணு;
நெழுகவே கணபதித்தி யானம் பண்ணு;
 நேராகத் தேவியைத்தான் பூசை பண்ணு;
தழுகவே சிவந்தனையே பூசை பண்ணு;
 தவறாத வியாதியெல்லாம் தவறுண் டேபோம்
மழுகாது வயித்தியத்தைச் செய்தா னாகில்
 வையகத்தில் ஏற்பராம் ஈசன் முற்றே. (369)

இ. பிற்குறிப்பு

விரோதி வருடம் சித்திரை மாதம் 7ஆம் தேதி வெள்ளிக்கிழமை சுக்கிரவார நாள் அசுபதி நட்சத்திரங் கூடிய சுபதினத்தில் வயித்திய ரத்தினச் சுருக்கம் 360 பாட்டுக்கும் மேல்பாடத்திலிருந்து 349 பாட்டும் நாலாங்கும்பினி ரங்கய்ய நாயக்கனுக்கு எழுதி முகிந்தது முற்றும்.

2830. தன்வந்திரி நிகண்டு 300

1. நூலகக் குறிப்புகள்
   - அ. 2167_7
   - ஆ. ல/434

2. உள்ளீடு: நூல் விவரம்
   - அ. தன்வந்திரி
   - ஆ. தன்வந்திரி நிகண்டு 300
   - இ. மருத்துவம்
   - ஈ. செய்யுள் 303

3. தோற்றக் கூறுகள்
   - அ. 51 ஏடு; 102 பக்கம். (185 முதல் 235 முடிய)
   - ஆ. நீளம் 27.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
   - இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   - ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
   - உ. தெளிவான கையெழுத்து
   - ஊ. நல்ல நிலை
   - எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
ஆயிதிரோ தாயினுட மற்ற கூறு
அன்பான மனோன்மணியின் அடியே போற்றி
மாயிதிரோ தாயென்னும் மனோன்ம ணித்தாய்
வளர்த்ததொரு வாலையுட பாதம் போற்றி
மாயிதிரோ தாயிகண பதியே யென்று
வாழ்த்தினேன் வல்லபையின் ஆதி போற்றி
நாயிதிரோ தாயிகளான் ஆன சக்தி
நலமான வயிரவன் தன் பாதம் போற்றே. (1)

ஆ. முடிவு
ஆமப்பா இந்நூலை பதனம் பண்ணு
அப்பனே நல்லோர்கள் பதனஞ் செய்வார்
வாமப்பா இந்நூலை எடுத்துக் கொண்டு
வளமாக நீயெடுத்துப் பூசை பண்ணு
காமப்பா கல்வியாறு எல்லாந் தோன்றும்
கனமான இந்நூலைக் கைவி டாதே
நாமப்பா முன்னூறும் பாரு பாரு.
நலமான கருக்கிடைநீ கண்டதுதான் முற்றே. (303

2831. அகத்தியர் வைத்தியம் 108

1. நூலகக் குறிப்புகள்
அ. 2168_1
ஆ. ல/435

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் வைத்தியம் 108
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 108

3. தோற்றக் கூறுகள்

அ. 27 ஏடு; 54 பக்கம். (1 முதல் 27 முடிய)
ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்மேவும் பொதியிலகத் தியனைப் போற்றிச்
செகத்திலுள் ளோர் பிணிதவிர்க்குஞ் செந்தூ
ரத்தோர்
ஏர்மேவும் பற்பகன்ன வகைகள் எல்லாம்
இயம்பெனக் கொங்கணவர் கேட்கச் சொன்னார்
(இயற்றமி ழோசையிற் தாவினிதிற்)
பார்மேவு முறையதனை உலகத் தோர்க்காய்
பனுவல்செய் அடியனுக்குள் அன்புடன் பாராய்
கார்மேவும் ஐம்பூத வடிவாய் எங்கும்
காப்பவனாய் புரப்பவனாய் களிக்கின் றேனே.

(இரண்டாவது அடியில் அடைப்பிற்குள் உள்ள பகுதி மிகுதியாக உள்ளது)

ஆ. முடிவு

•எடுத்ததொரு வெண்ணைதனை வைத்துக் கொண்டே
இயல்பாகப் பொடுகுதலை கார ருக்குக்
கொடுத்ததனைத் தேய்த்தபிற கரைப்புத் தேய்த்துக்
கூசாமல் குளிர்சலத்தில் முழுகச் சொல்லு

தொடுத்ததொரு சிரசிலுறும் புண்ணி னோடுந்
தூயவெள்ளைப் பொடுகெல்லாந் தொலைந்து
போகும்
வடித்தகலை வயித்தியற்கு வசியம் வேண்டும்
வகையாக உனக்குரைப்பேன் வசியந் தானே. (108)

அகத்தியர் பாடல் நூற்றெட்டும் முற்றும்.

2832. பலசரக்கு நிதானம் 320

1. நூலகக் குறிப்புகள்
அ. 2168_2
ஆ. ல/435

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ......
ஆ. பலசரக்கு நிதானம் 320
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 265

3. தோற்றக் கூறுகள்
அ. 34 ஏடு; 68 பக்கம். (28 முதல் 61 முடிய)
ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூச விரணப் பொருமல்போம் பொன்முதலாய்
ஆசையுள்ள பண்ட மனைத்துண்டாம் - நேசமாய்த்
தின்றிடிலோ பாண்டு(நோய்) தீர்க்குமிது தேன்மொழியீர்
குன்றிய மண்ணின் குணம். (1)

ஆ. முடிவு

கடுகிய நடையுண் டாக்குங் கனத்ததோர் விசத்தைப் /போக்கும்
குருகிடும் இருமல் ஈளை குளிர்ந்ததோர் காசம் போக்கும்
மருவரைக் கண்ணி னாளே மாந்தளிர் போலும் மேனி
முடுகிய தாகம் போக்கும் முயலுட குணங்கள் தானே. (265)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2833. மருத்துவச் செய்திகள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2168_3
ஆ. ல/435

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. மருத்துவச் செய்திகள்
இ. மருத்துவம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 75 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 77 ஏடு; 144 பக்கம். (62 முதல் 138 முடிய)
ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7-9 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ராச வீர செந்தூரம்:
ஆதியந்த மயமான சுந்தரம தாக
எந்தநகர் வந்தருள புரிந்துனது கிருபை
தந்தருள ஆகவேணும் இதுபாகமாய்
ஓதுசூத மய்வீர சாரமது இத்து
பலவகை யாகவே ஒத்துநாளை யும்நீ
நிருத்திடுமுத்து மூன்றுதின் உத்தமாய்
சோதியாக பதமாய் சிவந்திட சொல்லு
போகாம அல்லியே சேருவில் லாமல்சிறு
சூட்டுப்பிடினில் நவசட்டியிட்டு வருத்திடு
தீதில்லா மதுபோது மானபதம் வீரம்
ஏத்தவரை சோதிகேள் தீர்க்க மாய்முரு
மார்க்கமாய் மலர்நிற்கவே வருசிவக்குமே.

ஆ. முடிவு

நரைதிரை மாற:
வால்மிளகு படி 1, அவுறியிலைச் சாறு படி 1, அமறியிலைச் சாறு படி 1 மூன்றும் ஒரு கலசத்தில் விட்டு சீல் போட்டு சீலை செய்து ஒன்பது நாள் புதைத்து எடுத்துக்கொண்டு அந்தி, சந்தி அஞ்சு மிளகு வீதம் இரண்டு மண்டலம் கொள்ள நரைதிரை மாறும். கைகண்டது.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

இ. பிற்குறிப்பு
அழகப்ப பிள்ளை குமாரர் புளுகாண்டியா பிள்ளை, ராஜபாளையம். 1219ஆம் வருடம் கார்த்திகை மாதம் 16 ஆம் தேதி.

2834. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2169
   ஆ. ல/436

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. ....
   ஆ. மருந்துசெய்முறை
   இ. மருத்துவம்
   ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
   அ. 96 ஏடு; 192 பக்கம்
   ஆ. நீளம் 14 செ.மீ., அகலம் 2 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்ல நிலை
   எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
துருசு சுத்தி:
நீலத்துத்தம் பலம் 1 ஒரே கட்டியாய் வாங்கி காவி மண் அரைத்து ஒருவிரல் கனம் மண்கவசம் செய்து மேல்

சீலைமண் செய்து அஞ்செருவிற்புடமிட பளிங்கி போல நீரும். அப்பால் வெடியுப்பு பலம் 1/4 வெளவங்கம் பலம் 1/4 சித்தண்டம் பலம் 1/4 இந்த மூன்றும் உமிநீர் விட்டரைத்து அல்லது பூநீர் கரைத்ததெளிவாவது விட்டரைத்து வில்லை தட்டிக் காயவைத்துச் சீலைமண் செய்து பத்தெருவில்ப் புடமிடச் சுன்னமாகும். மேற்படி சுன்னத்தை உமி நீர் விட்டரைத்து மேற்படி கட்டிக்குக் கவசம் செய்து சுண்ணாம்புத்துணி சுத்தி குறுணி உமியில் புடமிட கொடுமையாயுள்ள சுன்னமாகும்.

ஆ. முடிவு

கெந்தித் தைமிலம்:
கெந்தி பலம் 20, வீரம் பலம் 2, சூடன் பலம் 5, மூன்றுங் காய்ச்சு. வெடியுப்பு பலம் 5, வெள்ளைக் குங்கிலியம் பலம் 2 இவை அஞ்சும் கல்வத்திலிட்டுக் கோழிமுட்டை ஆறு மஞ்சள் கருவிட்டு நன்றாக அரைத்துக் கலசத்தில் வைத்துச் சில்லுப் போட்டு ஆறு சீலை செய்து துருலதமறுப் போட்டு மேற்படி கலசத்துக் கழுத்து வரை மணல் செம்பிலே கலசம் வைத்துப் புடம் போட்டுத் தைமிலம் இறக்கவும்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2835. யூகிமுனி வாதவைத்தியம் 1000

1. நூலகக் குறிப்புகள்

அ. 2170_1
ஆ. ல/437

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. யூகிமுனி
ஆ. யூகிமுனி வாத வைத்தியம் 1000

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 282

3. தோற்றக் கூறுகள்
அ. 30 ஏடு; 60 பக்கம்
ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. 8, 10, 14 ஆகிய ஏடுகள் இல்லை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
அண்ணார் வலையில் அரன்சிவன்உ மையவளும்
பண்ணார வேவாதம் பாவித்தார் - கண்ணாய்
வடக்கிருந்த தன்னை வடிவாந் தமிழ்செய்தார்
திடமுடனே யூகிமுனி செப்பு.

ஆ. முடிவு
ஆணுடனே பெண்ணும் அடவாகசேர்ந் தாக்கால்
தானேச்சிப் பால்கரந் தாட்டிகமாம் - பேணும்
வருத்து முயிர்போலே வாதமே செய்தால்
தருகும் புளிஉப்பு தாக்கு. (282)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2836. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்
அ. 2170_2
ஆ. ல/437

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 3 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்
ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு மூன்று பத்திகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அண்டவாய்வுக்கு:
சித்திரை மூலம் வேர்ப்பட்டை பலம் 1, கருங்குறுவை அரிசி பலம் 1/4, பச்சை தண்ணீரில் ஊறப்போட்டு அரைத்து 14 வில்லை செய்து 1/4 பசுநெய்யில் அறை வேக்காடு வேகவைத்து காலையில் ஒரு வில்லை நெய்யும், சாயந்திரம் ஒரு வில்லை நெய்யும் சாப்பிடவும்..தீரும்.

ஆ. முடிவு

சிந்தாமணி செந்தூரம்:
இரசம் விராகனிடை 20, கெந்தி 30, வெங்காரம் 10, ரசத்தைக் குழியம்மியில் போட்டுக் கெந்தகமும் வெங்காரமும் அதன் மேலே பொடிபோட்டு அம்மி, குழவி கொண்டு நொறுக்கத் தட்டத்தகடு போலாகும். இரசம் மாறும் மட்டும் இரண்டையும் போட்டே தட்டவும். இரசம் மாண்டதின் பிறகு ரெட்டைச் சீலையில் ஒரு கொட்டைப் பாக்களவு கிழியாய்க் கட்டி ஒரு பானையில்

பாதிமட்டும் மண்ணிட்டு அதின்மேலே கிழிகட்டின மருந்தை வைத்துச் சூள் பதித்துப்பிறகு பானை நிறம்ப மண்விட்டு வட்ட ஒடு போட்டுச் சீலை செய்து கணுக்காலளவு ஆழமும் பறிசையளவு அகலமும் குழிவெட்டிக் குழியில் இந்தப் பானையை வைத்துக் கவிழ்த்துப் புடம்போட்டு விநாயகன் பூசை பண்ணித் தீயிடஆறாமல் ஒருகால் தீ போட்டு வேகவிட்டு வயிரவன் பூசைசெய்து எடுத்துப்பார்க்கச் செந்தூரம் சூரம்பழம் போலே இருக்கும்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2837. குணவாகடம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2171_1

ஆ. ல/438

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. குணவாகடம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் '16

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சுக்குக் குணம்:

நெஞ்செரிப்பு நீர்தோஷம் நீங்கா கிராணியறும்;
மிஞ்சுமதி சார மிளைப்பும்போங் - கொஞ்சமல்ல
தீபனமா மீளையறும் தீரா வியாதியறுந்
தாப மறுஞ்சுக்குத் தான்.

ஆ. முடிவு

கொட்டத்தின் குணம்:

கொட்டங்.. ...வித்தியுறுங் சூறுசுரம் வாராது
மட்டில்லா மாதர் வசியமாம் - துட்டகபம்
வாந்தி கண்நோய்காய்ச் சல்கண்டு போகும்
சாந்தியாங் கொட்டமிது தான்.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2838. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 2171_2
ஆ. ல/438

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 28 ஏடு; 56 பக்கம்

ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு மூன்று பத்திகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இந்துப்பு பலம் 1, சவுக்காரம் பலம் 1, நேர்வாளம் பலம் 2, காயம் விராகனிடை 4 இவற்றை அரைத்து வில்லை தட்டிப் பூண்டு பலம் 7, முற்றின தேங்காய் 8 துருவிக் கொண்டு நான்குபடி தண்ணீர் பானையில் விட்டு வடிகட்டிப் பாதி பூண்டு பரப்பி, அதுமேலே பாதி பூண்டு பரப்பி, அதுமேலே வில்லையைவைத்து அதுமேல் பூண்டு வைத்து அதுமேல் பூவை வைத்துச் சட்டி மூடிச் சீலைமண் செய்து அடுப்பேற்றித் தண்ணீர் 1 படி இருக்க இறக்கி ஆறவிட்டுப் பிசைந்து பிழிந்து கொண்டு ஆவின் பால் படி 2, ஆவின் நெய் படி 1 கலக்கி அடுப்பேற்றிக் கமலம்போல் எரித்துப் பொன்னிறமான பதத்தில் நிறுத்து.

ஆ. முடிவு

கலங்கொம்பு பிளந்து வெள்ளைக் குண்டுமணியிலை கொடி இடிச்சுக் கீழும்மேலும் வைத்துக் கண்புடம் போட்டெடுக்க மறுபடி அந்தச் சார்விட்டரைத்து வில்லை தட்டிக் காயவைத்து உருட்டி யடிக்கில் அந்தபடி கொடியிலை போலும் கீழும் மேலுமாய் வைத்துக் கண்புடம் போட் தீரும்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2839. புலத்தியர் 1200

1. நூலகக் குறிப்புகள்

அ. 2172
ஆ. ல/439

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. புலத்தியர்
ஆ. புலத்தியர் 1200
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 1114

3. தோற்றக் கூறுகள்

அ. 178 ஏடு; 356 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மனிதவா கடத்துக் கெல்லாம் மதியணி சடையாய் சோதீ
பனியது போலே வந்த பாவமாம் வியாதிக் கெல்லாம்
இனியதன் குறிப்புங் காட்டி இல்லவா மன்ன ரோகம்
புனிதனே அறிய ஓர்தாய் போற்றியே நின்றாள் போற்றி. (1)

ஆ. முடிவு:
ஊது முன்னே சன்னிவகை ஓடி யொளிக்கும் உள்வீக்கம்
ஏதஞ் செய்யும் பிறவீக்கம் பிறகே நடந்து கடந்தேகும்
ஏதஞ் செய்யுஞ் சூனியமும் பிசாசு பூத மெல்லாமுங்
காத வழிக்கப் பாலேகும் கரிய விழியின் மடமாதே. (1114)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2840. தட்சிணாமூர்த்தி நயனவிதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 2173
ஆ. ல/440

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. தட்சிணாமூர்த்தி
ஆ. தட்சிணாமூர்த்தி நயனவிதி
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 197

3. தோற்றக் கூறுகள்

அ. 21 ஏடு; 42 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 13_14 வரிகள்
உ. தெளிவான சிறிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மாதுமை பாகன் சொன்ன வடமொழி நூலை யாய்ந்தே
ஓதிநான் முகத்தோ னாயுள் வேதமாய்ப் போக்கப் பின்பு
மூதுரை யுணர்ந்த நாதன் முனிவனுந் தமிழால் செய்தான்
தீதிலா விழியி னுள்ள தோஷத்தைத் தெளிந்து தானே.

ஆ. முடிவு

பங்கையைக் கணத்து நோக்கிற்
பருகை யுறுத்துநட வாதே
செங்கையைக் கண்ணி லொத்தார்
தன்னா ரிலைக்கரி மாங்காய்
அங்கையில் வெற்றிலை யேந்தார்
அருகிருந் தாரோடும் பேசார்
மங்கையை உகப்பத னாலே
மருத்துவன் சொன்னதும் பாலே. (197)

நயனவிதி முற்றும்.

2841. கிரிகை 18

1. நூலகக் குறிப்புகள்

அ. 2174_1

ஆ. மு/78

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . .

ஆ. கிரிகை 18

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 5 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அடுக்கிரியம், பாதக்கிரியம், உத்தமக்கிரியம், பிசாசுக்கிரியம், மயக்குக்கிரியம், மயிமக்கிரியம், அமத்திக்கிரியம், சுவர்ணக்கிரியம், செந்துருவக் கிரியம், மதமுக்கிரியம் ஆகப் பதினெட்டும் பிடித்தால் செய்யுங் குணம். வெறியாகிய பல வியாதிகளை வாதபித்த சிலேற்பனங்களை வருத்துவிக்கும். இதனுடைய குணங்களுக்கும் பரிகாரத்துக்கும் விபரம்......

ஆ. முடிவு

இந்த மந்திரம் அம்பத்தோர் .... எழுதிக்கொள்ளவும். அடக்கிறவன் பேறெழுதிக் கொள்ள இந்தச் சீட்டு எழுதி அனுப்பினால், இந்தச் சீட்டு அவன் கையில் பிடித்தால் வியாதியும் பறந்து தீரும். அல்லவென்றால் தீராது என்று சொல்வது. பதினெட்டுக்கும் பார்க்கலாம். இந்தப் பதினெட்டு மந்திரங் கைகண்டது.

2842. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2174_2
ஆ. மூ/77

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . .
ஆ. பெயர்தெரியாத ஒரு மருத்துவ நூல்
இ. மருத்துவம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு; 32 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8-10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாரப்பா லோகமென்ற உருக்குத் தன்னை
        பாடுகிறேன் புலத்தியனே பண்பாய்க் கேளு
சீரப்பா இதன்பெருமை சொல்லப் போகா
        திசைமுகமாம் உதையாக்கிணி செந்தூர மென்பார்
வாரப்பா சூதமொன்று கெந்தி ரண்டு
        வளமான காந்தமது பலமு நாலு
நேரப்பா உருக்குத்தூள் பலமு நாலு (1)
        நெகிளாட்டு சுற்றாழை சாறு வார்த்தே.

ஆ. முடிவு

அன்னத்தின் பேதிஅரை அரைக்கால் கூட்டிடு
சொன்ன சவுக்காரந் துகைமுக் குழச்சதாம்
வண்ணமுள்ள சீனக் காரமும் ஒன்னறை
இன்னிரை யெல்லாவாய் யிடித்திடே.
o (இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2843. விரணரோக குணவாகடம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2175_1

ஆ. ல/441

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. விரணரோக குணவாகடம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 60

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம். (1 முதல் 8 முடிய)

ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தக்கதோர் சிரங்க முத்து தயங்கிய பிடரி கன்னஞ்
சிக்கெனும் அக்குள் போன்று சிவந்தடி கொள்ளிற் செக்கு
மிக்கதோர் வெப்பு முண்டாம் மீறியே பணைத்துத்
தோன்றில்
தொக்கசெவ் வாயீ தென்று சொல்லுவார் இதனைக்
காணே. (1)

ஆ. முடிவு

வெப்பொடு சுரம்பா ரிப்பு மிகுந்துதான் விட்ட பின்பு
செப்பிநீர் மொக்குள் போலத் தேகமே எங்குந் தோன்றித்

தப்பறப் பழுத்து விண்டு கருகதா யுலர்ந்து போனால்
கொப்புள்வை சூரி என்றே கூறுவார் இதனைத் தானே. (60)

விரணகுணவாகடம் முற்றும்.

2844. குணவாகடம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2175_2

ஆ. ல/441

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. குணவாகடம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் /21

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம். (9 முதல் 14 வரை)

ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6_7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சித்தா கேளாய் சிங்கிசுரஞ்
சீறு மிருமும் இளைப்பு முண்டாம்

முத்தா மூலந் தானுருகி
　　முயங்கு முடலைத் தான்பர்கூ
வத்தா வயது கடுத்துளைந்து
　　மலமுஞ் சலமுங் கருகிவிழுங்
பத்தாம் நாளில் மரணமென்னப்
　　பறையே யடியும் பண்டிதரே. (1)

ஆ. முடிவு
தின்னும் பிடாரி பூசணியும் திகழு சூரை காக்கணமும்
மன்னும் நெருஞ்சி முக்கவளை மலையா முள்ளி சேவகனும்
பின்னும் பிரமி வேர்க்கொம்பு பெரிய கடுக்காய்
'தான்றிக்காய்
முன்னும் படிபோல் காரமிட்டு முயங்க காய்ச்சிக்
குடிமின்னே. (21)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2845. சட்டைமுனி வைத்திய மரணநாடி

1. நூலகக் குறிப்புகள்
அ. 2175_3
ஆ. ல/441

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. சட்டைமுனி
ஆ. சட்டைமுனி வைத்திய மரண நாடி 25
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 24

3. தோற்றக் கூறுகள்
அ. 7 ஏடு; 14 பக்கம். (15 முதல் 21 முடிய)
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வாதமது முன்னெழுந்து சுழன்று சற்றே
மயிலதுபோல் நடைநடந்து மயங்கு மாகில்
சேதமதே இல்லையென்றும் ஆறாம் மாதம்
செப்பலாம் மரணமென்று தீர்க்க மாக
நாதமது குறைந்துவிட்டி லைப்போல் கண்டால்
நாளெட்டில் மரணமென்றே நம்ப லாகும்
பேதமது சொல்லரிது பிசகி டாது
பெரியவராம் ராசமுனி பேசுங் காலே. (1)

ஆ. முடிவு

நடையிதுவே அறிந்தக்கா லாறா தாரம்
நாள்தனிலே அறிவார்கள் நாத னாவார்
விடைதனிலே யேறிவருஞ் சிவனார் சொல்லை
வேதாந்த ராசமுனி வெளியில் போட்டார்
கடைதனிலே இன்னமொரு சூட்சஞ் சொல்வேன்
கருத்தறியா நாளதுவே இனித்த தானால்
.... (24)
....

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2846. சர்ப்பநூல் சுருக்கம் 36

1. நூலகக் குறிப்புகள்
அ. 2176
ஆ. ல/442

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சுப்பிரமணியர்?
ஆ. சர்ப்ப நூல் சுருக்கம் 36
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 35

3: தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 24 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 12 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆறுமுகக் கடவுளிரு பாதம் போற்றி
அகத்தியமா முனியுரைத்த சித்தரா ரூடம்
கூறுகின்ற தூதன்வரு வடிவுங் கையில்
கொண்டுவரு வதுங்குறியுங் குணமுந் தேர்ந்து
ஏறுகிற திசையுமவன் வந்து சொன்ன
எழுத்தைஎண்ணிப் பார்த்துவிரல் எண்ணு மாறுந்
தேறுகிற ஆண்பெண்(ணும்) இடங்கீழ் மேலுஞ்
சேர்ந்தஇடம் இன்னதென்று தெளியும் வாறே. (1)

ஆ. முடிவு

உப்பாகும் முருங்கை லிங்கஞ் சாறும்
உத்தம தாழிவேளை மேனி யாகும்
கொப்பாகும் முருங்கையா தண்டை யாகுங்
குழிமுண்டான் சாரதிலுங் குணமாம் பூச

இப்பாரில் விஷத்திறந்தோர் வேறோர் சென்மம்
எடுக்காது வைகுண்டம் எய்த லாகும்
தப்பாது செந்தூர்வாழ் சுப்ர மண்ய
சுவாமிசொன்ன முப்பத்தோ டாறு முற்றே. (35)
சர்ப்பநூல் முப்பத்தாறும் முற்றும்.

2847. தன்வந்திரி வைத்தியம் 200

1. நூலகக் குறிப்புகள்

அ. 2177
ஆ. ல/443

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. தன்வந்திரி
ஆ. தன்வந்திரி வைத்தியம் 200
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 203

3. தோற்றக் கூறுகள்

அ. 46 ஏடு; 92 பக்கம்
ஆ. நீளம் 33 செமீ., அகலம் 3.5 செமீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியந்த மில்லா தகண்டபரி பூரணமாய்ச்
சோதியந்த வாழ்மயிலே சொற்பெரிய - வாதியேகேள்
சாதியந்த மானதொரு (தாயே) சரஸ்பதியே
வாதியென்ற பாங்கிலுறை வாய். (1)

ஆ. முடிவு

பாரப்பா நால்வேதத் தொகுப்பைக் காணு
பண்பான வேதாந்தக் குறியைக் காணு
ஆரப்பா வாசியுட் குறியைக் காணு
அப்பனே கண்ணோட்டம் அறிந்து பாரு
நேரப்பா நின்றநிலை தன்னைக் காணு
நன்றான கருவிதளோ ரடக்கங் காணு
நாரப்பா நாதாந்த வயித்தியமாம் இந்நூல்
நலமான கருக்கிடைதான் இருநூறு முற்றே. (203)

2848. மூலிகை அகராதி

1. நூலகக குறிப்புகள்

அ. 2178

ஆ. ல/444

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. மூலிகை அகராதி

இ. மருத்துவம்

ஈ. உரைநடை/அச்சில் ஏறத்தாழ 8 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு; 22 பக்கம்

ஆ. நீளம் 35.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு நான்கு பத்திகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை. 1 முதல் 13 முடிய ஏடுகள் இல்லை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆலா - தண்ணீர் அளந்த பூ கொன்றிகுணம்;
ஆலாதம் - கடைக்கொல்லி;
ஆலாதல் - மலர்தல்;
ஆலாபத்தம் - இலாமிச்சு;
ஆலாம்பூ - சுணா;
ஆலாமஞ்சள் - செவ்வியம்;
ஆலி - நஞ்விடை;
ஆலோசி - பசலை......

ஆ. முடிவு

சகசர் - சிறுகுறிஞ்சர்
சகடம் - தமரத்தை
சகம் - பூமி
சகாகாசா - சீதேவி
சகாமாம்பு - பாம்புகொல்லி
சகுணம் - கிழங்கு
சகுந்தம் - கழுகு
சர்க்கரை - கரும்பின்கட்டி

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2849. பாலகிரிகை

1. நூலகக் குறிப்புகள்

அ. 2179
ஆ. மூ/79

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. பாலகிரிகை

இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை: அச்சில் ஏறத்தாழ 8 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம். (3 முதல் 9 முடிய)
ஆ. நீளம் 35 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 12 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. 1, 2 ஏடுகள் இல்லை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முதல் பிறந்தநாள் ஆசாரி என்னும் பேயணையும். அதன்குணம் முலையுணராது கொட்டாவி கொள்ளும். இதுக்குப் பச்சரிசிச் சோறும் பணியாரமும் புதுச்சட்டியில் பொங்கிச் சட்டியோடு எடுத்து மூன்றுமுறை சுற்றி நான்கு வழியுங் கூடுகின்ற இடத்திலே பேயின் பேர் சொல்லி வைக்கத் தீரும்.

ஆ. முடிவு

முதலாமாண்டில் கன்னத்திலே வீங்கும்; நீர்விட்டு நிற்கும்; நடக்கமாட்டாது; வீங்கின இடத்திலே புள்ளடியாகச் சுடவும். இதுக்கு மருந்து எருக்கம் வேரும், சதிர்க்கள்ளி வேரும்; புற்று மண்ணும் வெதுப்பிப் பூசவும்.

5. பிற செய்திகள்

இதனையடுத்து மாட்டின் குணங்கள் சிலவும் மருத்துவச் செய்திகள் சிலவும் இடம்பெற்றுள்ளன.

2850. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 2180_1

ஆ. ல/445

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை, அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 24 ஏடு; 48 பக்கம்

ஆ. நீளம் 35 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9,10 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. 1_57, 67, 70_84, 86, 87, 89, 91_96, 98_102, 104, 107 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. உள்ளவை நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

........ஒரு உருண்டை சண்பகப் பூவில் அரைத்துத் தொப்புளிற் பூசப் பத்துமுறை வயிறு கழியும். இந்த உருண்டையைப் பொடிசெய்து மல்லிகைப்பூவில் பிரணி கூட்டி அந்தப் பொடியை அதிலே தூவி முகர்ந்து பார்க்க வயிறு கழியும்.

ஆ. முடிவு

மாட்டுக்கு நிலவேம்பும் பூவரசம் பூவும் பிறங்கை நாரி இலையும் கூட்டி உலர்த்தி மிளகும் கூட்டிப் பொடிசெய்து

காடியிலாகுதல் எருமை மோரிலாகுதல் குடிக்க எந்த வியாதியும் மீளும். கைகண்ட உச்சிதம்.

5. பிற செய்திகள்

ம்ாட்டுவாகடச் செய்திகள் ஒன்றிரண்டு மட்டும் உள.

2851. குரு நாடி சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2180_2
ஆ. ல/445

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. குரு நாடி சாத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 44

3. தோற்றக் கூறுகள்
அ. 5 ஏடு; 10 பக்கம். (ஏட்டெண் 113 முதல்)
ஆ. நீளம் 35 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
காண்க: தொடர் எண் 2075_1

ஆ. முடிவு

கயறேது பையேது கணந்தா னேது
கருத்துடனே கமலமுகம் கால்தா னேது
வயறேது வாயேது வன்னி யேது
வயித்தியரே இந்தஉண்மை மகிழ்ந்து சொல்வோம்
கயறான தேராகு பைவை குண்டம்
கருத்துடனே கமலமுக மனோன்மணியே யாகும்
வயறான தேமாயன் வன்னி ருத்ரன்
வயித்தியரே இந்தநூல் மகிழ்வித் தோமே. (44)

குருநாடி சூத்திரம் முற்றும்.

5. பிற செய்திகள்

இந்நூற்பெயர் அகத்தியர் குருநாடி சூத்திரம் என உள்ளது. இதனை அடுத்து அகத்தியர் ஞானத்திரட்டு எனச் சில மாந்திரீகச் செய்திகள் உள்ளன.

2852. அகத்தியர் வாதத் திரட்டு 48

1. நூலகக் குறிப்புகள்
   - அ. 2180_3
   - ஆ. ல/445

2. உள்ளீடு: நூல் விவரம்
   - அ. அகத்தியர்
   - ஆ. அகத்தியர் வாதத்திரட்டு 48
   - இ. மருத்துவம்
   - ஈ. செய்யுள் 48

3. தோற்றக் கூறுகள்
   - அ. 3 ஏடு; 6 பக்கம். (ஏட்டெண் 120 முதல்)
   - ஆ. நீளம் 35 செமீ., அகலம் 3.5 செமீ.,
   - இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 121ஆம் ஏடு காணப்படவில்லை. உள்ளவை நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
வாதந்தான் எண்ப தற்கும் வருகின்ற பக்க வாதம்
சீதவே நடுக்கு வாதம் சிறந்திடும் முடக்கு வாதம்
சூதமே அசந்த வாதம் தோன்றிடு முகத்தில் வாதம்
பேதமாம் வாதம் தீர பெருந்திடு மருந் து கேளே. (1)

ஆ. முடிவு
செய்யதோர் கண்ட மாலை சிறந்திடும் பவுத்தி ரங்கள்
வெய்யவிப் புருதி வீக்கம் மேவிய துடையின் வாழை
பைய்யபூண் சூலை யோடும் பரந்திடும் பிளவை வீக்கம்
துய்யதோர் அரையாப் போடும் தொடங்கிய மருந்து
கேளே. (43)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

5. பிற செய்திகள்
இந்நூல் தட்சிணாமூர்த்தி வைத்தியம் 50 எனவும் வழங்கப்படுகிறது.

2853. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்
அ. 2180_4
ஆ. ல/445

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. உரைநடை, அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம். (ஏட்டெண் 134 முதல்)
ஆ. நீளம் 35 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. 138ஆம் ஏடு காணப்படவில்லை. உள்ளவை நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஓடு விப்புருதிக்கு:

முருங்கைப் பட்டையும், சிறுகீரை வேரும், வெள்வெங்காயம், ஆன்பூடும் இவை ஒரொன்று இரண்டு கழஞ்சு கூட்டிச் சிற்றாமணக்கு எண்ணெய்யில் எரித்து எண்ணெயும் கடுகுமாகத் தின்று வரவும். இப்படித் தின்று மேலும் பூச விப்புருதி நீங்கும். கைகண்டது.

ஆ. முடிவு

திமிர்வாதக் கரப்பனுக்கு

அசமோதாகம் பலம் 5, வெள்ளைப்பூண்டுபலம் 5, பெருங்காயம் பலம் 10, சதகுப்பை பலம் 2, சாதிக்காய் பலம் 5, சாதிப்பத்திரி பலம் 2, காந்தம் பலம் 3,

அரப்பொடி பலம் 5 இவை கூட்டிச் சூரணம் பண்ணி வெருகடி தேனிலாவது நெய்யிலாவது தின்னவும். பத்தியம் பிடிக்கவும். மருந்துக்கு முன்னாலே முட்டையொன்று குடிக்கவும். மறுநாள் பச்சை இஞ்சிச்சாறு குடிக்கவும். அதுக்கு மருநாள் மருந்து தின்னவும். மீன், மாமிசம் தவிர்க்கவும்.

2854. போகர் பூஜாவிதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 2180_5

ஆ. ல/445

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. போகர்

ஆ. போகர் பூஜாவிதி

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 13

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம். (ஏட்டெண் 142 முதல்)

ஆ. நீளம் 35 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாரப்பா வாலைதனை தியானம் செய்யப்
பாங்காக நவகோண மிட்டு சூழச்

சேரப்பா இருவளையம் வாசல் நாலு
சிறப்பாக ஓங்கார மிட்டு நன்றாய்க்
காரப்பா கீழ்வாசல் கணபதியும் கந்தன்
கருணையுள்ள செயவீர வாகு தேவர்
ஆரப்பா அறைகளிலே கிழக்குத் தொட்டு
அகாரமுடன் உகாரமும் சவ்வும் போடே. (1)

ஆ. முடிவு

கூடியங்கே யவரவரைக் கண்டு பேசு
கூசாமல் அனவரதம் குமிறி யாடும்
தேடியெங்கும் இந்தமுறை கிட்டா தப்பா
தேவிமுதல் சிவனங்கே திருநடனஞ் செய்வார்
நாடிநின்று வாடாதே யெந்தாய் பூசை
நல்லவர்க்கே எய்துமடா கதிமிக் கில்லை
பாடியிந்தப் பதின்மூன்று பாட்டுக் குள்ளே
பரைபூசை சிவபூசை பணிந்தி டாயே. (13)

போகநாயகர் பூசாவிதி முகிந்தது முற்றும்.

2855. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2180_6
ஆ. ல/445

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 120

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம். (ஏட்டெண் 146 முதல்)
ஆ. நீளம்35 செ.மீ., அகலம்3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
வாவெனவே சிலேத்துமத்தின் வந்த கிரந்திகளும்
போவெனவே நாவிலிடப் போகுமே - பாவனையாய்
வாகான பீனிசமும் மற்றும் சளிதீர
ஆக்கிராணம் பண்ணில்அரத்தை. (1)

ஆ. முடிவு:
காணும் மருந்தெல்லாம் கல்வமதி லேயரைத்துப்
பூணும் . . . . .தனில் பூண்டெரித்து - வேணுமென
உள்ளருந்தி மேல்பூச ஓடும் விஷசுரமும்
கள்ளமுள்ள சன்னியதும் கண்டு. (120)

(இதற்குமேல் தொடர்ச்சி விளங்கவில்லை)

5. பிற செய்திகள்

இதனையடுத்துச் சில மருந்து செய்முறைகள் கூறப் பெற்றுள்ளன.

2856. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 2181
ஆ. ல/446

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து-

இ. மருத்துவம்

ஈ. உரைநடை, அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு; 38 பக்கம்

ஆ. நீளம் 35 செ.மீ., அகலம்3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்ல நிலை, 10, 11, 12, 15 ஆகிய ஏடுகள் இல்லை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தண்டுவிட:
சங்கங்கொழுந்து 3, சர்பாலை வேர், நிலப்பனங்கிழங்கு ஆக இந்த மருந்து மூன்றும் ஒரு எலுமிச்சங்காயளவு அரைத்துக் கொடுக்கத் தீரும்.

ஆ. முடிவு

வரட்டையடைப்பனுக்கு மருந்து:
விளக்கெண்ணெய் 1 ஆழாக்கு, வில்வயிலை ஒரு பிடி, பிறட்டு ஒரு பிடி, கடுக்காய் 5 இந்த மருந்து அம்மியில் அரைத்து அந்த எண்ணெயில் கலக்கி அரைப்படி வெந்நீர் காய்ச்சி ஆறவைத்து அதில்விட்டுக் கலக்கி இப்படி இரண்டு பொழுது கொடுக்கவும். தீரும்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

5. பிற செய்திகள்

சுவடியின் தொடக்கத்தில் வாகட வினோதம் எனப் பெயர் எழுதப்பட்டுள்ளது. இடையிடையே பல மாந்திரீகச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

2857. இராமதேவர் கருக்கிடைச் சூத்திரம் 500

1. நூலகக் குறிப்புகள்

அ. 2182
ஆ. ல/447

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. இராமதேவர்
ஆ. இராமதேவர் கருக்கிடைச் சூத்திரம் 500
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 392

3. தோற்றக் கூறுகள்

அ. 63 ஏடு; 126 பக்கம்
ஆ. நீளம் 28.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சிறிது சிதிலமடைந்த நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க: தொடர் எண். 2130.

ஆ. முடிவு

செய்யவே கருத்தோடு சூட்ச மாகச்
　　　செப்புறேன் அஞ்சனத்தைத் திரமாய்க் கேளு
செய்யவே சாதிக்காய் பன்றிக் கொம்பு
　　　தேவாங்குப் பித்துடனே கழுதைக் கண்ணுஞ்
செய்யவே மீளவெட்டிச் சமனாய்க் கொண்டு
　　　சிறப்பான தைலத்தால் அரைத்து மைபோல்
செய்யவே அஞ்சனமாம் பார்க்கும் போது
　　　செகமெல்லாம் திறந்துநிற்கும் சியமாம் பாரே. (392)

(இதற்கு மேல் எழுதப்படவில்லை)

இ. பிற்குறிப்பு

பரிதாபி வருடம் ஆடிமாதம் 27ஆம் தேதி திங்கட்கிழமை ரோகிணி நட்சத்திரம் எழுதி நிறைந்தது முற்றும்.

2858. இராமதேவர் கருக்கிடைச் சூத்திரம் 500

1. நூலகக் குறிப்புகள்

அ. 2183
ஆ. ல/448

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. இராமதேவர்
ஆ. இராமதேவர் கருக்கிடைச் சூத்திரம் 500
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 103

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு; 38 பக்கம்
ஆ. நீளம் 33 செமீ., அகலம் 3.5 செமீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சிறிது சிதிலமடைந்த நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
காண்க: தொடர் எண் 2130

ஆ. முடிவு
காணவே வங்கமொரு பலத்துக் கப்பா
கடித்தான தங்கமொன்று நாக மொன்று
பூணவே சூதமொன்று பூர மொன்று
புகழான சூதத்தின் ரெட்டி கெந்தி
ஆணவே மல்லிகைச் சாற்றா லாட்டி
அப்பனே பொடிபண்ணிக் குப்பிக் கேற்றி
நாணவே வலுகுகையில் மேலே வைத்து
நலமான கமலம்போல் எரித்தி டாயே. (103)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

5. பிற செய்திகள்
இந்நூற் பெயர் சுவடியில் "இராமதேவர் வாதத்திறவுகோல்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2859. கருவூரார் பலதிரட்டு

1. நூலகக் குறிப்புகள்
அ. 2184_1
ஆ. ந/266

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கருவூரார்
ஆ. கருவூரார் பலதிரட்டு
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 25

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 4.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாடுகிறேன் பலதிரட்டு முடிவை எல்லாம்
பதறாமல் சிதறாமல் பாக மாக
பாடுகிறேன் சாத்திரங்கள் அனந்தத் துள்ளே
பருக்கயெனை பிறக்கவொரு பாக மாக
பாடுகிறேன் கருக்கிடையும் நன்றாய் . . . .
பருவமுடன் ஒருமித்துப் பாரு பாரு
பாடுகிறேன் வே(தாந்)த முடிவை யெல்லாம்
பரையரனுங் கணேசன்குரு காப்புப் பாரே. (1)

ஆ. முடிவு

கூட்டியே சட்டியிலே கருக்கிக் கொண்டு
கூசாமல் ஏரண்டத் தயில மூட்டிக்
காட்டியே பாலரிட கண்ணில் தீட்டக்
காசினியில் மறைப்பெல்லாஞ் சொல்லு வார்கள்;

நாட்டியே காட்டுமல்லி வேரை வாங்கி
நயமாகக் கருக்கியதைத் தயிலஞ் சேர்த்துப்
போட்டிடவே கையதிர்க்கும் வெண்சா ரணைபோல்
பூட்டிடுவாய் பாலர்கண்ணில் புதையல் செப்பும். (25)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2860. பிரமமுனி வைத்தியம் 700

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2184_2
   ஆ. ற/266

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. பிரமமுனி
   ஆ. பிரமமுனி வைத்தியம் 700
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 26

3. தோற்றக் கூறுகள்
   அ. 8 ஏடு; 16 பக்கம்
   ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 4.5 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 8_10 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. சுவடியின் தொடக்கத்தில் பெரும்பகுதி காணப்படவில்லை. உள்ளவை நல்ல நிலை
   எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆட்டுவது மல்லிகையின் சற்றால் பாவ
அரைத்ததனைப் பொடியாக்கிக் குப்பிக் கேற்றி
மாட்டிடுவாய் வாலுகையின் மேலே வைத்து
மறவாமல் முத்தீயும் பனிரண்டு சாமம்
ஆட்டியே எரித்தாற விட்டு வாங்கில்
அருணன்போற் செந்தூர மாகும் பாரு
ஊட்டிடவே நவலோக நூற்றுக் கொன்று
உட்புகுந்து பத்தரையே மாற்றுக் காணும்
தீட்டியே பொருளென்ன தள்ளு தள்ளு
தினம்பணந்தா னுள்ளுக்குக் கொண்டு தேரே. (688)

ஆ. முடிவு

காண்க: தொடர் எண். 2060

இ. பிற்குறிப்பு

1012ஆம் வருடம் புரட்டாசி மாதம் 18ஆம் தேதி புந்தி வாரமும் மகம் நட்சத்திரமும் அமரபட்ச திரியோதசியும் கூடின சுபதினத்தில் எழுதி முற்றுப் பெற்றது.

2861. அகத்தியர் முப்பு 16

1. நூலகக் குறிப்புகள்

அ. 2184_3
ஆ. ற/266

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் முப்பு 16
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 4.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காணப்பா கந்தகத்தின் தயிலஞ் சொல்வேன்
கைமுறையாய்க் கந்தகமும் பலமும் பத்து
பூணப்பா கல்வத்தில் போட்டுக் கொண்டு
புகழாக வெள்ளைத்தா மரைப்பூச் சாற்றால்
தோணப்பா இருபதுநாள் ஆட்டு ஆட்டு
துடியான அழிஞ்சில்வித்து பலமும் போடு
ஊணப்பா மூன்றுநாள் அரைத்து வாங்கி
உத்தமனே நன்றாக உலர்த்தி டாயே. (1)

ஆ. முடிவு

தானென்ற சிவந்தவுப்பு காரீயத் துள்ளே
சாதகமாய்ப் பத்திலொன்றை இட்டா யானால்
வேனென்ற வெண்கமலம் போலிருக்கு மப்பா
வேதாந்தத் துருசிட்டு ...... ஓதில்
கோனென்ற பொன்னாகும் பத்து மாற்று
கொள்ளையடா வாதமெல்லாம் முப்புக் குள்ளே
தேனென்ற மொழியாட்குச் சிவன்தான் சொன்னார்
செய்கையெல்லாம் சூத்திரமாய்ச் செப்பினேனே. (16)

முற்றியது.

2862. பதஞ்சலி சூத்திரம் 20

1. நூலகக் குறிப்புகள்

அ. 2184_4

ஆ. ற/266

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. பதஞ்சலி முனிவர்

ஆ. பதஞ்சலி வாத சூத்திரம் 20

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 21

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 4.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8-10 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூமலியும் கண்ணாடன் பாதம் போற்றிப்
புகலுவேன் வாதத்தின் திறவு கோலை
நாமுரைப் போ மைநான்கு பாடற் குள்ளே
நலமாக வாதவித்தை ஞானம் பார்க்கு;
சோமுற்ற மேனியனார் உபதே சித்தார்
துறையறியும் பதஞ்சலிதன் சூத்ரத் துள்ளே
ஏமவித்தைக் காதியென்ற வஸ்து உப்பை (1)
இதையறிய மாட்டாமல் ஏங்கி னாரே.

ஆ. முடிவு

வாழவே நடுவெழுத்தை யாகாரந் தன்னில்
நாட்டிவைத்தால் தலையெழுத்து பிரகா சிக்கும்
மீளவே கண்டெழுதும் மேல்கீ ழாக
....
தாழவே வேண்டாங்காண் ஐம்பத் தொன்று
தலையெழுத்துக் குள்ளாக்கிச் சிறந்து போச்சு
கோழுமே வாராது மறலி யாவான்
கூறியவா தத்திறவு கோல்தான் முற்றே. (21)

பதஞ்சலி மகாமுனிவர் அருளிச்செய்த வாதசூத்திரம் 20 முற்றியது.

2863. பிரமமுனி கருக்கிடை சூத்திரம் 250

1. நூலகக் குறிப்புகள்

அ. 2184_5
ஆ. ற/226

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. பிரமமுனி
ஆ. பிரமமுனி கருக்கிடை சூத்திரம் 250
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 251

3. தோற்றக் கூறுகள்

அ. 24 ஏடு; 48 பக்கம்
ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 4.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. 5_18 வரிர ஏடுகள் இல்லை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியென்ற பூரணமெஞ் ஞான சோதி
அகண்டபரி பூரணத்தி னடிபணிந்து போற்றிச்
சோதியென்ற சத்திகண பதிதாள் போற்றிச்
சொற்பெரிய ஆறுமுகன் பாதம் போற்றி
நீதியாய் நாதாக்கள் பாதம் போற்றி
நிறைத்திட்டேன் சாத்திரங்கள் அனேகங் கோடி
பாதியாய் நூல்களெல்லாம் பார்த்துத் தேர்ந்து
பாடினேன் கருக்கிடைதா னிருநூற்றைம் பதுவே. (1)

ஆ. முடிவு

பார்க்கவே நாதாக்கள் சொன்ன மார்க்கம்
பலநூலும் ஆராய்ந்து பார்த்துத் தேறு
ஆர்க்கவே எண்ணூற்றிற் பாடி வைத்தேன்
ஆதிதொடுத் தந்தம்வரை யதீத மாக
காக்கவே எண்ணூற்றைக் கருதிப் பாரு
கண்ணாடி முகம்போலக் காணும காணும்
பார்க்கவே அதைக்குறுக்கி சூத்ர மாகப்
பாடிவிட்டேன் இருநூற்றைம் பதுதான் முற்றே. (251)

பிரமரிஷி சூத்திரம் 250 முகிந்தது முற்றும்.

இ. பிற்குறிப்பு

கொல்லம் 1009ஆம் வருடம் புரட்டாசி மாதம் 16ஆம் தேதி சோம வாரமும் அமரபட்சமும் கூடின சுகதினத்தில் ரேவதி நட்சத்திரமும் கூடின சுபதினத்தில் ராஜமான்னிய ராஜஸ்ரீ சிவலாகுளம் அய்யம்பெருமாள் வாத்தியார் சுவாமியவர்கள் மாட்டியம் பட்டாள ராமசுவாமி அவர்களுடைய மேல்பாடம் பார்த்து இந்த சூத்திரம் இருநூற்றன்பதும் எழுதிச் சாட்டுபத்து இருளப்பனுக்குக் கொடுத்தது. இருளப்பன் எழுதினேன். முற்றும்.

இப்படிக்கு ஆடிமாதம் 3ஆம் தேதியில் மேற்படி பாடம் பார்த்து எழுதினதாவது. இப்படிக்கு வெங்கிட சாமி கையெழுத்து.

2864. காவிய சூத்திரம் 16

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2184_6
   ஆ. ற/226

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. ....
   ஆ. காவிய சூத்திரம் 16
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்
   அ. 3 ஏடு; 6 பக்கம்
   ஆ. நீளம் 34 செ.மீ., அகலம் 4.5 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்ல நிலை
   எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதிபரா சக்திசிவ உமையே காப்பு
　　அகண்டவெளிக் கெட்டாத அறிவே காப்பு
நீதிதரு மாதிகுரு கணேசன் காப்பு
　　நின்றிலங்குங் குண்டலித்தாய் நேசங் காப்பு

சோதிமறை நான்கினையும் பார்த்துத் தேர்ந்த
சொரூபமென்ற காவியசூத் திரமே காப்பு
வீதிபொரு ளாதார மூலத் துள்ளே
இருள்கடந்து அக்கினிக்குள் ளாதி காப்பே. (1)

ஆ. முடிவு
அடக்கிவைப்பாய் குருவரனே யீந்தி டாதே
உள்சத்தின் பாகமெல்லாம் அடைவாய்ச்
/சொன்னேன்
மடக்கொடிபோ லொருபெண்ணைத் தேடிக் கொண்டு
வையமதில் வாழ்ந்துண்டு சித்த னாகி
முடக்கிவைப்பாய் லோகமெல்லாம் துச்சனரைக்
/கண்டால்
மூடர்களைச் சேராதே மூத்தவளும் நிற்பாள்
துடக்கியவள் மோகமதில் வீழ்ந்தி டாதே
துதிசெய்வாய் பராபரத்தில் முற்று முற்றே. (16)

இ. பிற்குறிப்பு
ஆனி மாதம் 29ஆம் தேதி எழுதி முகிந்தது.

2865. மச்சமுனி 800

1. நூலகக் குறிப்புகள்
அ. 2185
ஆ. ல/449

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. மச்சமுனி
ஆ. மச்சமுனி 800
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் '800

3. தோற்றக் கூறுகள்

அ. 149 ஏடு; 298 பக்கம்
ஆ. நீளம் 26.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான சிறிய கையெழுத்து
ஊ. முதல் நான்கு ஏடுகள் பழுதடைந்துள்ளன. சுமாரான நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியந்த வேதவித் தார மெந்தன்
        ஆதிகுரு வென்றதொரு பிண்ணாக் கீசர்
சோதியொளி வெளியான சொருபா னந்தர்
        சூட்சசடா தாரபீசம் துரியா தீதம்
ஓதுமொரு பிரணவரீங் கார பீடம்
        உன்மனைக்கே வெகுதூர வேதாந்த நாதன்
ஆதிசரா சரரூப விந்து நாதம்
        பரப்பிரம மூலகனே சன்காப் பாமே. (1)

ஆ. முடிவு

வித்தகத்தென் பதத்தாணை வெளிவி டாதே
        வேதாந்த மனோன்மணித்தாய் பாதத் தாணை
சித்தருக்காம் இந்தயெண்ணூர் பெருநா லப்பா
        சிவம்தங்கு பெரியோருக்கு ஆகும் (ஆகா)
மத்தொருத்தற்கு; இந்நூலைப் பதனம் பண்ணி
        வைத்தாலும் அவர்க்குமுத்தி வாய்க்கும் வாய்க்கும்
பத்தருக்குப் பாடிவைத்த சதமெட் டான
        பதிவாகும் பெருநூல்மெஞ் ஞான முற்றே. (800)

மச்சமுனி சுவாமி பெருநால் 800 முற்றும்.

இ. பிற்குறிப்பு
ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா தெற்கு சங்குளம் கீழ்மத்தியில் இருக்கும் மொய்தீன் பாட்ஷா துரை எழுதிய ஏடு.

5. பிற செய்திகள்
கட்டென்ற பிரமாவின் கட்டே யானை
கணபதியின் கட்டென்ன கட்டே யானை
விட்டுணுவின் கட்டென்ன கட்டே யானை
வேலவர்நற் கட்டென்ன கட்டே யானை
எட்டிவிஞ்சையய்யனார் கட்டே யானை
ஈஸ்வரனார் கட்டென்ன கட்டே யானை
துட்டபயிரவிக்கட்டு வீர பத்ர
துர்க்கையின் கட்டுள்ளே(தான்) சுருங்கத் தானே.

என்னும் பாடல் சுவடியின் இறுதியில் எழுதப் பெற்றுள்ளது.

2866. மருத்துவச் செய்திகள்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2186
ஆ. ல/450

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. மருத்துவச் செய்திகள்
இ. மருத்துவம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 170 ஏடு; 340 பக்கம்
ஆ. நீளம் 35.5 செ.மீ., அகலம் 4 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவகை வரிகள்
உ. பலவகைக் கையெழுத்து
ஊ. முதல் ஏடு இல்லை. உள்ளவை சுமாரான நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

(பிள்ளைபிறந்த) ஏழாநாள் ஏழாமாசம் ஏழாம் வருசம் உத்திரகேசரி என்னும் பேயணையும் அதின் குணம் வகிக்கும், வெதும்பும், வாந்தி பண்ணும், உச்சிக் குளியும், இளைச்சிருக்கும். இதுக்குப் பெலி மாவினாலே எருமை பண்ணிச் சந்தனந் தெளித்து எருக் கம்பூச்சூட்டி உச்சி நேரம் நாலு சந்தியில் வைக்கவும். வேப்பிலையும் கோழி இறகும் புகையிடவும்.

ஆ. முடிவு

திண்ணுவந்தால் வயதுசொல்ல முடியா தப்பா
செம்புவனம் பஞ்சவர்ணம் ஆகத் தோன்றும்
பண்ணுதமிழ்க் கரைகண்டான் கோடி பாடும்
பரவாசல் சிவவாசல் ரெண்டுங் காணும்
உண்ணறிய மோனவரி தோன்றும் தோன்றும்
கேளுங்கோ கெவனசித்தி உரைத்துப் போகும்
அன்னபலன் வருத்துமங்கே மலமும் சாகும்
அப்பனே மூதண்ட சித்தாட லாமே.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

5. பிற செய்திகள்

இதனுள், மாந்திரீகச் செய்திகள் சிலவும் இடையிடையே இடம்பெற்றுள்ளன.

2867. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்
அ. 2187
ஆ. ல/451

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 125 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 149 ஏடு; 298 பக்கம்
ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கணபதி லேகியம்:
சுக்கு, திப்பிலி, மிளகு, நறுக்கு, மூலம், தாளிசை பத்திரி, ஏலம், கிராம்பு, சாதிக்காய் பத்திரி வகைக்கு பலம் 1/2; கசகசா பலம் 1/2; அதிமதுரம் பலம் 1/4; பருத்திக்கொட்டைப் பால் படி 1/2; கண்டங்கத்திரி, தூதுவளை, துளசி இவைகளின் சாறு படி 3/4; முன்மருந்தெல்லாம் இளவறுப்பாய் வறுத்துத் தூள்

செய்து கொண்டு மேற்படி.. பாலையும் சாற்றையும் சட்டியில் விட்டு இரண்டு பலம் கருப்புக் கட்டியும் ஒரு பலம் கற்கண்டும் ஒன்றாகப் போட்டுப் பாகு செய்து மேற்கண்ட பொடியைத் தூவிக்கிண்டி மெழுகு பதத்தில் பசுவின் நெய் படி 1/4, தேன் படி 1/4 விட்டுக் கிண்டி இறக்கி வைத்துக் கணபதி பூசை செய்து ஒரு வேளைக்குநெல்லிக்காய்ப் பிரமாணம் கால் மண்டலம், அரை மண்டலம் சாப்பிடவும்.

ஆ. முடிவு

சுரத்துக்கு கெவுரிக்குளிகை:
வெள்ளைப் பாடாணம், கெவுரி, சூதம் வகைக்கு விராகனிடை 1 இவைகளைக் கிளிக்கட்டி மிளகுக் கஶாயத்தில் இரண்டு சாமம் எரித்து ஊமத்தஞ் சாற்றிலும், கொம்பன் பாகல் சாற்றிலும், வகைக்கு இரண்டு சாமம் அரைத்து உளுந்திடை குளிகைக் கட்டி, மோர், இளநீர், வெந்நீர், காடியில் வேளைக்கு ஒரு உருண்டைவீதம் ஆறு பொழுது கொடுக்கச் சகல சுரமுந் தீரும். ஆறுநாள் வரை புளித்தள்ளி, உப்புவறுத்துக்கூட்டவும். எட்டாம்நாள் தலைக்குத் தண்ணீர்விட்டுப் புளி கூட்டவும். (இதற்குமேல் ஏடுகள் இல்லை)

இ. முற்குறிப்பு
1719ஆம் ஆண்டு மனிதர்கள் வைத்திய சாத்திரம் பூர்வீகமாக சேகு மதார் மாவுத்தர் மகன் சேக் காசீம் சாயபுக்குக் கொடுத்தது.

5. பிற செய்திகள்
முதல் ஐந்து ஏடுகளில் மருந்துகளின் அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.

2868. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 2188

ஆ. ல/452

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை, அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 151 ஏடு, 302 பக்கம்

ஆ. நீளம் 22 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. முதல் 11 ஏடுகள் இல்லை. இறுதி 7 ஏடுகள் இடப்புறம் முறிந்துள்ளன. சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தலைவலிக்கு மருந்து:
முற்றின இலுப்பை வேரை முலைப்பாலில் அரைத்து பூசத் தலைவலி நிற்கும்.

ஆ. முடிவு

இருமலிளைப்புக்கு:
ஆடாதொடைச் சாறு 3/4 படி, கண்டங்கத்தரிச் சாறு 3/4 படி, தூதுவளைச்சாறு 3/4 படி, சங்கம்சாறு 3/4 பட

பாடவரைச்சாறு 3/4 படி, முக்கரட்டை இலைச்சாறு 3/4 படி, நீர்முள்ளிச் சாறு 3/4 படி, அயிரிச்சாறு 3/4 படி, நொச்சிச்சாறு 3/4 படி, உத்தமதாளிச்சாறு 3/4 படி, கையாந்தகரைச் சாறு 3/4 படி, தைவேளைச் சாறு 3/4 படி, பிரமி இலைச்சாறு 3/4 படி, அம்மான் பச்சரிசிச்சாறு 3/4 படி. இந்தச் சரக்கெல்லாம் கூட்டிப் பசுவின் நெய் நாழி கூட்டிக் கலந்து இதுக்கு ..... 1/2 பலம், வால்மிளகு 1 பலம் நடுவட்டமொத்திருக்கும். இதுக்கு மஞ்சட்டியும் பற்படாகமும் பொடிசெய்து நெய்யிற் குழைத்துக் கொடுக்க மாறும்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2869. கற்ப முப்புக் குருநூல் 100

1. **நூலகக் குறிப்புகள்**
   அ. 2189
   ஆ. ல/453

2. **உள்ளீடு: நூல் விவரம்**
   அ. ....
   ஆ. கற்ப முப்புக் குருநூல் 100
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 103

3. **தோற்றக் கூறுகள்**
   அ. 29 ஏடு; 58 பக்கம்
   ஆ. நீளம் 17.5 செ.மீ., அகலம் 2 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. முதல் 9 ஏடுகள் இல்லை. உள்ளவை நல்ல நிலை
   எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காணாது முறைக்காய்ச்சல் ஈளை மாந்தம்
காமாலை பெருவயிறு கணைம யக்கம்
வாணாளை யோட்டிவைக்கும் வலிகுன் மங்கள்
வாந்திபண்ணும் சத்திகுன்மம் வயிற்று நோயும்
ஊணாக உருக்கிவைக்கும் உள்ரோ கங்கள்
உள்மாந்தை வெளிமாந்தை உமிழ்நீ ரோட்டம்
வீணாகப் பரந்தோடுந் தாள கத்தால்
மேனியெல்லாந் தங்கநிற மென்ன லாமே. (29)

ஆ. முடிவு

இதில் அகர, உகார, மகார, சிகார கற்பங்கள் சாப்பிடும் முறையும் முப்பு முடிக்க வேண்டிய விதிகளும் குருமுடிக்க வேண்டிய பக்குவங்கள் யாவுஞ் சொல்லி இருந்தாலும் அகார, உகார கற்பங்கள் மட்டும் சாப்பிடும் முறைகளை விரித்துரைக்கவில்லையே என்றால் புலத்தியர் கற்ப நூலில் விரித்துரைத்ததால் இதில் விரித்துக் கூறவில்லை. அகார உகார கற்பந் தெரிந்துகொள்ள வேண்டுமானால் புலத்தியர் கற்ப நூலில் தெளிவாகக் கூறியிருக்கிறது பார்த்துக் கொள்ளவும். இதற்குத் தீட்சை விதி முக்கியம் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்காக மனோன்மணி தீட்சை 100 இதில் சேர்த்து இருக்கிறது பார்த்துக் கொள்ள வேண்டியது.

(103ஆம் பாடலை அடுத்து இவ்வுரைநடைக் குறிப்புடன் சுவடி முடிகிறது.)

2870. திருமூலர் நாடி

1. நூலகக் குறிப்புகள்

அ. 2190_1
ஆ. வ/454

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. திருமூலர்
ஆ. திருமூலர் நாடி
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 112

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு; 38 பக்கம். (30 முதல் 48 முடிய)
ஆ. நீளம் 17.5 செ.மீ., அகலம் 2 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ.. ஒரு பக்கத்திற்கு 7,8 வரிகள்
உ. தெளிவான சிறிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உன்னிய கர்ப்பக் குழியாம் வெளியிலே
பன்னிய ரோகம் பகர்ந்த பிருதிவி
வன்னியும் வாய்வுமே சுக்கிலம் வன்னிசமன்
அன்னவ ழுற்சிக் குதக ....

ஆ. முடிவு

தின்றிட நோயெல்லாஞ் சிந்தைகெட்டே யோடும்
பன்றுகெட்டே வாய்வுக்குப் பக்கத்தில் சேர்ந்து
தன்றிய லோகர்க்குத் தானாகச் செய்முறை
மன்றிய சித்தர் மகாவியாதி போக்குமே. (112)

திருமூல நாயனார் நாடி வயித்தியம் முற்றிற்று.

2871. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்
அ. 2190_2
ஆ. ல/454

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. உரைநடை: அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 87 ஏடு; 174 பக்கம்
ஆ. நீளம் 17.5 செ.மீ., அகலம் 2 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8,9 வரிகள்
உ. தெளிவான சிறிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சகல பேதிக்கும் மருந்து:
அசமதாகம் நீர்விட்டரைத்து நெல்லிக்காயளவு ....நீறிய சுண்ணாம்பு இரண்டும் சேர்த்து ஒரு சிரட்டையினுள்ளே பூசி எரிகின்ற அடுப்பில் கவிழ்த்துத் தீபத்துடனே அடுப்பிலொரு சட்டி காய வைத்துப் பனங்கருப்புக்கட்டி எலுமிச்சைக் காயளவு போட்டு இளகி வரும்போது சுக்கு பலம் 2 பொடித்துத் தூவி இளகி இருக்கின்ற போது சிரட்டை தணலானதை மெல்லக்

கோர்த்துச் சட்டியில் போட்டு ஒருபடி சலம்விட்டு அரைக்கால் படியாக்கிக் கொடுக்கவும். சகல பேதியும் நிற்கும்.

ஆ. முடிவு

சகல வாய்வுக்கும் தயிலம்:
ஓம உப்பு பலம் 5, நாட்டுக் கற்பூரம் பலம் 3, புதினா உப்பு பலம் 1/2 இந்த மூன்றும் . . . .சீசாவில் போட்டுக் குலுக்கி வெய்யிலில் வைக்கத் தயிலமாகும். பத்திரமாய்க் காற்று ஏறாமல் வைத்துக் கொண்டு கொடுக்கவும்.

விபரம்: அரை அவுன்ஸ் தண்ணீரில் அஞ்சு சொட்டு போட்டுக் கொடுக்கவும். சகல பேதி, காலராவுக்கும், வாய்வுப் பிடிப்பு, வீக்கம், சூலை, சன்னி, இசிவு இதுகளுக்கும் மேல் தேய்க்கலாம். உள்ளுக்கும் கொடுக்கலாம்.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2872.மாந்திரீகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2190_3
ஆ. ல / 454

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . .
ஆ. மாந்திரீகம்
இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 2 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 7 ஏடு; 14 பக்கம்
ஆ. நீளம்17.5 செ.மீ., அகலம் 2 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 68 வரிகள்
உ. தெளிவானசிறிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
கோபுரம்தாங்கிப்பூடு. றங் லங் என்று நூற்றெட்டு முறை சொல்லி வேர் அறாமல் பிடுங்கி, வளையமாடிக் கால்பெருவிரல் கொண்டு அழுத்திக் கொள்ள வேட்டளுது.

ஆ. முடிவு
இலாட தென்காஞ்சி மணம் பாத்திரம் கம்பம் முசிங்கி குதுரேசிலங்கே மதுரைக்குத் தெற்கு ஆட்டுகடி கோழிகடி யோககரை தன்னில் லெக்ககுடவிரரெட்படி நாலு மறுந்துடா ஆத்தான் கரைதனில் அம்மா பகபதித்திரு விழத்துக்கு ஏற்றபடி சிவ.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2873. வால்மீகர் பூதநாடி சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2190_4
ஆ. ல/454

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. வால்மீகர்

ஆ. வால்மீகர் பூத நாடி சாத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்

ஆ. நீளம் 17.5 செ.மீ., அகலம் 2 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5_7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அய்விர லைந்து நாடி அதுசெய்யும் வகையைக் கேளீர்
மெய்விர லொன்று வாதம் மொழிவிர லொன்று பித்தம்
நெய்நடு விரலே சிலேத்மம் நேர்விரல் பூத நாடி
மைசிறு விரலே என்ன வகுத்தார்வால் மீகர் தானே. (1)

ஆ. முடிவு

திரைந்திடும் பூத நாடி நெருப்பது போலே சுட்டால்
சிரைந்திடும் பில்லி யாகும் செய்குணம் பரீட்சை கேளீர்
குறைந்திடாக் குரங்கு நாயும் கூட்டமும் பயமும் நாட்டம்
மறைந்திட மயக்கஞ் செய்யும் வால்மீகர் உரைத்த வாறே
(16)

முற்றும்.

2874. மரண நாடி

1. நூலகக் குறிப்புகள்

அ. 2190_5

ஆ. ல/454

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. மரணநாடி

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 22

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்

ஆ. நீளம் 17.5 செ.மீ., அகலம் 2 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. தெளிவான சிறிய கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சன்னியெழும் போதிலந்த நாடி மூன்றும்
சாதகமாய்ச் சுழல்வண்டு தண்ணீர் மீதே
உன்னிபற வைபறக்கும் சத்தம் போல
ஓடிநிற்கும் வாதபித்த சிலேற்ப மெல்லாம்
கன்னியது சாதகமாய் வருமே யாகில்
கதிப்பாகும் பம்பரம்போல் வாத பித்தம்
பின்னியது விட்டிலைப்போல் தெறித்து வீழில் (1)
பேசிலது மரணமென்று பிரித்துச் சொல்லே.

ஆ. முடிவு

காலுங் கையும் புறம்வீங்கிக்
கண்டஞ் சோர்ந்து நாவறண்டு
மேலுங் கனத்தே வெப்பெய்தி
மிகுந்த தாக முண்டாகித்
தோலுந் தசையும் படபடத்துத்
துய்ய நெஞ்சில் குலைந்திடிக்கில்
மாலும் பிரமா வந்தாலும்
மறித்துப் பிழைப்ப தரிதாமே. (22)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

5. பிற செய்திகள்

இதையடுத்துச் சில மருத்துவச் செய்திகள் எழுதப் பெற்றுள்ளன.

2875.தன்வந்திரி வைத்தியக் கும்மி 300

1. நூலகக் குறிப்புகள்

அ. 2191_1

ஆ. ல/455

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. தன்வந்திரி

ஆ. தன்வந்திரி வைத்தியக் கும்மி 300

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 300

3. தோற்றக் கூறுகள்

அ. 89 ஏடு; 178 பக்கம்.(1 முதல் 88 முடிய)

ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ.நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
அண்டரண்ட மாகிநின்ற (ஆதி) காப்பு
ஆனந்த மாகிநின்ற உமையாள் காப்பு
குண்டமெனுங் குண்டலியின் குறியே காப்பு
குமரகுரு வேல்முருகர் பாதம் காப்பு
புண்டரிக மானதிரு மாலுங் காப்பு
புகழ்பிரமன் முதற்குலீசர் ஐவர் காப்பு
சண்டனெனும் மாருதிபோல் வைத்யக் கும்மி
சாற்றுகிறேன் தன்வந்த்ரி வலிமை பாரே. (1)

ஆ. முடிவு
ஒப்புடனே தன்வந்த்ரி கருக்கி டையாம்
முந்நூறும் உவந்துயா வருந்தான் படிக்க
மெய்ப்புடனே மாந்தர்க்கு யோக மாக
மேன்மையாய்ப் பாடினார் ஞானப் பெண்ணே. (300)

தன்வந்திரி பகவான் திருவாய்மலர்ந்தருளிய வைத்தியக் கும்மி

முற்றும்

இ. முற்குறிப்பு
பதினெண் சித்தர்களில் மகா மகத்துவம் பொருந்திய தன்வந்திரி என்பவர் திருவாய் மலர்ந்தருளிய வைத்தியக்கும்மி கருக்கிடை 300. 1084ஆம் வருடம் புரட்டாசி மாதம் 17ஆம் தேதி இராஜபாளையம் கிருஷ்ணம ராஜபாளையம் புதியவராகம் பிள்ளை குமாரர் வைத்தியர் இருளாண்டியா பிள் ளையவர்களால் எழுதப்பட்டது.

2876. அகத்தியர் வைத்தியக் கும்மி

1. நூலகக் குறிப்புகள்

அ. 2191_2

ஆ. ல/455

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் வைத்தியக் கும்மி

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் ' 55

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு; 32 பக்கம். (89 முதல் 104 முடிய)

ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கும்மியடிப் பெண்கள் கும்மியடி
குருபாதங் காணவே கும்மியடி
நம்மையாளும் விநாயகர் பாதத்தை
நாடிக் கும்மியடி யுங்கடி - மானே
கும்மியடி யுங்கடி - தேனே
கும்மியடி யுங்கடி - இந்த
தேசம் செழிக்கவே கும்மியடி (1)

ஆ. முடிவு

ஆறா தாரம் தொல்லையடி அதற்
கப்பாலே ஒன்றுமே இல்லையடி
சீராக வேநின்று உன்னிப்பார்த்து பெண்கள்
சிறந்து கும்மிய டியுங்கடீ. (55)

வைத்தியக்கும்மி முற்றுப் பெற்றது.

2877. சித்தர் வெண்பா 105

1. நூலகக் குறிப்புகள்

அ. 2191_3
ஆ. ல/455

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. சித்தர் வெண்பா 105
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 97

3. தோற்றக் கூறுகள்

அ. 26 ஏடு; 52 பக்கம்.(105 முதல் 130 முடிய)
ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
ஆரியமாம் வாகடத்தின் உட்பொருளை யாராய்ந்து
சீரியதோர் செந்தமிழாற் செப்புகிறேன் - கூரியதாய்
உள்ளநிதா னம்சிகிச்சை ஓத விநாயகனே
வள்ளலே என்மனத்துள் வா. (1)

ஆ. முடிவு
நெல்லிக்காய் திப்பிலி நெற்பொரி சுக்குடன்
நல்ல நறுநெய்யில் உண்பீரேல் - இல்லையில்லை
...... இருமலும் ஈளை யதிலில்லை
மேவும் சிதம்பர .... (97)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2878. நசகாண்ட வெண்பா 100

1. நூலகக் குறிப்புகள்
அ. 2191_4
ஆ. ல/455

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. வீரமாமுனிவர்
ஆ. நசகாண்ட வெண்பா 100
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 100

3. தோற்றக் கூறுகள்
அ. 26 ஏடு; 52 பக்கம். (132 முதல் 157 முடிய)
ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
திசைமேவும் தென்கிரியிற் சேர்முனிநூ லாய்ந்து
நசகாண்ட மென்று நவில - அசைவில்
உருவில்லா னொன்றா னொருபொருளான் பூவோர்க் (1)
ப ருளான் பதங்காப்ப தாம்.

ஆ. முடிவு
பார்த்தலத்தி லிந்நூலைப் பாடினே னென்நாவால்
சீர்த்திநிறை சூத்திரமாச செப்பவே - பார்த்தவுடன்
சிந்தும்பொய் என்றுதிற செய்வீர்வீ ணாகும் (100)
முந்துமெய்என் றோதுமின்னூல் முற்று.

நசகாண்ட மூலம் முற்றுப் பெற்றது.
(பிற்பாதியில் யாப்பமைதி சரியில்லை)

2879. சட்டைமுனி சூத்திரம் 16

1. நூலகக் குறிப்புகள்
அ. 2192
ஆ. ல/456

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. சட்டைமுனி
ஆ. சட்டைமுனி சூத்திரம் 16

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்
ஆ. நீளம் 14.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காணப்பா ஆதியென்ற வஸ்த்து வித்தை
கைமுறையாய்ச் சொல்லுகிறேன் கவடு நீக்கி
ஊணப்பா பொற்சிலை(யைப் போன்ற) பெண்ணை
உத்தமனே நோயில்லா தவளாய்ப் பார்த்தே
ஆளப்பா மன்மதன்போல் அன்பின் பெற்றே
அவளுக்கு நோயில்லா தறிந்து கொண்டு
பூணப்பா பெண்தானு மாதவிடை யானால்
புகழாகப் பின்காலில் வாங்கு வாங்கே. (1)

ஆ. முடிவு

தானென்ற கற்பூர மிட்டசுண்ணத் தோடு
சாரமிட்டுக் காரமிட்டு வீர மிட்டு
ஊனென்ற விந்துவிட்டு மத்திச் சப்பா
உத்தமனே சரக்கனைத்தும் தொட்டு ஆட்டு
கோனென்ற நவலோக ....
....த்தில் தேய்த்துப் போடு
வானென்ற ரவியினுள்ளே தங்க மாகு
மாத்ததுவும் முப்பத்தஞ்சு மாத்து (மாத்தே). (16)

2880. தட்சிணாமூர்த்தி வைத்தியம் 21

1. நூலகக் குறிப்புகள்

அ. 2193
ஆ. ல/457

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. தட்சிணாமூர்த்தி
ஆ. தட்சிணாமுர்த்தி வைத்தியம் 21
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 23

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்
ஆ. நீளம் 25.5 செ.மீ., அகலம் 4.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கேளப்பா நவலோக மார ணந்தான்
    கெடியான வயித்தியமா மிருநூற் றஞ்சில்
தேளப்பா கொட்டினது போல்நின் றாக்கால்
    திக்குசொல்வேன் இரும்புக்குத் தாரங் கெந்தி
வாளப்பா வெள்ளியிரு வங்கத் துக்கு
    மால்தேவி வெடியுப்பு வெள்ளை சீனம்
சூளப்பா செம்புக்குத் தாரங் கெந்தி
    சூதமொடு துருசுவெள்ளை சாரமிரு மூன்றே. (1)

ஆ. முடிவு

மஞ்சளுடன் இருவகையும் பலமாக அரைத்து
வளமான யெண்ணெயிலே கூட்டிக் காய்ச்சு
கஞ்சமென்ற பற்பமுதற் தயிலத் துக்குச்
சாரஇரு பத்தொன்றிற் சாற்றினேன் பாரே. (23)

முற்றும்.

(இப்பாடலின் முற்பாதி சுவடியில் எழுதப்படவில்லை.)

இ. பிற்குறிப்பு

தட்சிணாமூர்த்தி வைத்தியம் 205க்கு சூத்திரம் 23ம் இராமசாமி பிள்ளையவர்களுக்கு எழுதிக் கொடுத்தேன். கல்லிக்கோட்டையில் மச்சு வீட்டிலிருக்கும் பிண்டி நாட்டுக்காரன் அய்யம் பெருமாள்.

1009ஆம் வருடம் மாசி மாதம் 5ஆம் தேதி மந்த வாரமும் கார்த்திகை நட்சத்திரமும் பூர்வபட்சத்தில் தசமியுங் கூடின சுபதினத்தில் முகிந்தது. முற்றும்.

5. பிற செய்திகள்

இதனையடுத்துச் சில மருத்துவச் செய்திகள் எழுதப்பெற்றுள்ளன.

2881. அகத்தியர் சூத்திரம் 10

1. நூலகக் குறிப்புகள்

அ. 2194_1
ஆ. ல/458

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் சூத்திரம் 10

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் /11

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்
ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியொரு காரணத்தில் பரைதா னீன்ற
அடங்காத சர்வசூத் திரந்தான் காப்பு
வேதியனும் மாயவனும் தானாய் நின்று
விமலனார் விசுவனுக்கு வரத்தை யீந்தார்
ஓதியதோர் சூத்திரந்தான் பத்து மாகும்
ஒருவருக்கும் விற்காதே நூல்கொ டாதே
பாதிமதி சடைக்கணிந்த யீச னாலே
பகிர்ந்திட்டேன் சூத்திரந்தான் பத்து மாமே. (1)

ஆ. முடிவு

பத்தும்பார் எட்டிரண்டும் பாரு பாரு
பாங்குடனே இந்தவகை யாருஞ் சொல்லார்
திட்டமுடன் பாடிவைத்தேன் எண்ப துக்குள்
திரமாகப் பாடினதோர் இந்நூ லைப்பார்
கட்டாக முன்சொன்ன நீரைக் கொண்டால்
கையடக்கம் வேதையெல்லாம் செய்து பாரு
திட்டமா ரன்நாண உண்மை சொன்னேன்
சிவசிவா சூத்திரந்தான் பத்தும் முற்றே. (11)

2882. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2194_2

ஆ. ல/458

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர்தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 11

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்

ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி.

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாம் மங்கைபங்கன் பாதம் போற்றிப்
புகழ்ந்தனவே சிவகாமி பாதம் போற்றிக்
காரணமாய் அறிவில்நின் று மனத்தை போற்றிக்
கந்தனுக்கு கருணைபெற சீஷ னாகி
வாரணமா முகத்தோனைப் பணிந்து போற்றி
வல்லமையா லிந்நூலின் பொருளைக் காணச்
சீரணமாய்ப் போகாமல் தெளிந்து சொல்வேன்
சிதம்பர(மே) மனதில்வைப்பார் ஒண்தாள் காப்பே. (1)

ஆ. முடிவு

நீரதற்குச் செந்நீரால் (துடைத்துக்) கொண்டு
நிலைமைபெற குருவதனை மீறப் பூசி
ஆறுகின்ற பாசாணம் அறுபத்தி நாலும்
அப்பனே வுருகிபுட மான வாறு
தேறும்நவ லோகமது கனபுடமு மாகும்
சிவப்பதற்குச் செந்நீரில் குருவைக் கட்டி
ஆறுக்கு முரிச்சாத்தில் புடமே இட்டு
ஆனவெள்ளி.... ....

(இது 11ஆம் பாடல். இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2883. அகத்தியர் 16

1. நூலகக் குறிப்புகள்

அ. 2195
ஆ. ல/459

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் 16
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்
ஆ. நீளம் 14 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான சிறிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமே தெய்வமென்று உரைத்தீ ரய்யா
பூரணத்தை இன்னதென்று புகல வேணும்
காரணத்தைச் சொல்லுகிறேன் நினைவாய்க் கேளு
கலையான பதினாறும் பூரணமே யாகும்
மாரணமாய் உலகத்தோர் மதிம யங்கி
மதிகெட்டுப் பூரணத்தை இழந்தா ரப்பா
வாரணத்தில் மனம்வைத்துப் பூரணத்தைக் காக்கில்
வாசியென்ற சிவயோக வாழ்க்கை யாச்சே. (1)

ஆ. முடிவு

பிரித்துரைத்தேன் சூத்திரமீ ரெட்டுக் குள்ளே
பித்தர்களே நன்றாகத் தெளிந்து பார்க்கில்
விரித்துரைத்த நூல்களுட மார்க்கந் தோன்றும்
விள்ளாதே இந்தநூ லிருக்கு தென்று
கருத்துடனே அறிந்துகொள்ளு கலைமா றாதே
காரியத்தை நினைவாலே கருதிக் கொள்ளு
சுருதிசொன்ன செய்தியெல்லாஞ் சுருக்கிச் சொன்னேன்
சூத்திரம்போல் பதினாறுந் தொகுத்தேன் முற்றே. (16)

முற்றும்.

2884. அகத்தியர் வசூரி சூத்திரம் 80

1. நூலகக் குறிப்புகள்

அ. 2196_1
ஆ. ல/460

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் வசூரி சூத்திரம் 80
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 82

3. தோற்றக் கூறுகள்

அ. 22 ஏடு; 44 பக்கம்
ஆ. நீளம் 19 செ.மீ., அகலம் 4 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாய் நிறைந்துநின்ற சோதி பாதம்
போற்றிசெய்து அனுதினமும் புகழ்ந்தங் கேத்திக்
காரணமாய் மாலயனுந் தேடிக் காணாக்
கடவுள்பதம் போற்றிசெய்து கருணை பெற்றே
ஆரணமால் மருகனெனு முருகன் கந்தன்
அடியிணையைப் போற்றிசெய்து அன்பி னாலே
வாரணமா மதம்பொழியு மைங்கரனை நித்தம் (1)
மனதகமாய் அனுதினமும் வணங்கி யேத்தே.

ஆ. முடிவு

தானென்ற வசூரியது குணமுஞ் சொன்னேன்
தருவான லட்சணமும் இதமுஞ் சொன்னேன்
தேனென்ற சாத்தியமும் அசாத்தியமும் சொன்னேன்
திரமான பத்தியமும் பாகஞ் சொன்னேன்

வானென்ற அன்னமது விபரஞ் சொன்னேன்
வளமான இந்தமுறை மார்க்க மெல்லாம்
கானென்ற சித்தருக்கும் உலகத் தோர்க்குங்
கருத்தாகச் சொல்லிவிட்டேன் வசூரி முற்றே. (82)

இ. பிற்குறிப்பு

1314ஆம் வருடம் சித்தார்த்தி வருடம் வைகாசி மாதம் 26 ஆம் தேதி பூர்வ பட்ச தசமியும் மங்கள வாரமும் பூரம் நட்சத்திரமுங் கூடின அன்று பகல் நாழிகை 17க்கு கன்னியா லக்கனத்தில் வசூரி சாத்திரம் சாமிநாதன் எழுதி முடிப்பித்தது.

2885. தன்வந்திரி வைத்திய முப்புத்திரட்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 2196_2
ஆ. ல/460

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. தன்வந்திரி
ஆ. தன்வந்திரி வைத்திய முப்புத்திரட்டு
இ. மருத்துவம்
ஈ. செய்யுள். 14

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்
ஆ. நீளம் 19 செ.மீ., அகலம் 4 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11, 12 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சித்தென்ன ஊமைதனைத் தேர்ந்து சொன்னேன்
சிறப்பான வழலையுட மார்க்கங் கேளு
அத்தென்ன வைத்தியத்தின் வழலை கேளு
அன்பான பூமியுட நாத மப்பா
சுத்தனா(ய்) இருந்தாக்கால் சொல்வேன் பாரு
சொற்பெரிய உவர்ப்பூவைக் கொண்டு வந்து
நத்தென்ன படியொன்று அளந்து கொண்டு (15)
நலமான எட்டாவ திங்கள் பாரே.

ஆ. முடிவு

ஆச்சப்பா மாதுதீட்சை மார்க்கஞ் சொன்னேன்
அப்பனே தைலத்தின் மார்க்கங் கேளு
வாச்சப்பா மும்மூர்த்தி தைலஞ் சொல்வேன்
வளமான புங்கம்வேர்ச் சாறுபடி யொன்று

(இது 29ஆம் பாடற் பகுதி; இதற்குமேல் எழுதப்படவில்லை)

5. பிற செய்திகள்

தன்வந்திரி வைத்திய சூத்திரம் 200இல் உள்ள வைத்திய முப்பு பற்றிய பாடல்களை மட்டும் தொகுத்த நூலாகக் காணப்படுகிறது.

2886. இராமதேவர் சூத்திரம் 216

1. நூலகக் குறிப்புகள்

அ. 2197
ஆ. ல/461

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. இராமதேவர்
ஆ. இராமதேவர் சூத்திரம் 216
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 216

3. தோற்றக் கூறுகள்

அ. 73 ஏடு; 146 பக்கம்
ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6, 7 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. 30 _ 42 முடிய ஏடுகள் இல்லை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியந்த மேநிறைந்த சோதி பாதம்
        அகண்டபரி பூரணத்தி னறிவில் கூட்டிப்
பாதியாய் முப்பொருளு மூன்று மொன்றாய்ப்
        பரவெளியாய் நின்றபரா பரையின் பாதம்
நீதியாய் வாரணத்தின் முகவன் பாதம்
        நிறைந்துமலர் வாணிகுரு கந்தன் பாதம்
சோதியாய் நாதாக்கள் பாதம் போற்றிச்
        சொல்லுவேன் சூத்திரத்தைச் சொல்லுவேனே. (1)

ஆ. முடிவு

வையப்பா சகலகலை சேதி யெல்லாம்
　　வளமாக அடக்கிவெகு தெளிவாய்ச் சொன்னே(ன்)
அய்யமென் று நினையாதே புறம்பே சாதே
　　ஆத்தாளை அனுதினமும் மறவா தேநீ
செய்யாதே தீவினைதான் கொடிது பாவம்
　　சேர்ந்துவெல்லா நிசமென் று தெளிந்து காணும்
மெய்யான குருபதத்தைப் போற்றி ....
　　விளம்பினேன் திரட்டுசூத் திரந்தான் முற்றே. (216)

இராமதேவர் இருநூற்றுப் பதினாறு முற்றும் எழுதி
முகிந்தது முற்றும்.

5. பிற செய்திகள்

சில மருத்துவச் செய்திகள் 5 ஏடுகளில் காணப்படுகின்றன.

2887. கொக்கோகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2198
ஆ. ற/267

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அதிவீரராம பாண்டியன்
ஆ. கொக்கோகம்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுளும் உரைநடையும் அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 122 ஏடு; 244 பக்கம்
ஆ. நீளம் 17.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கன்னலன்றி வேம்புநுகர் காமத் துரோகிகள்போற்
பின்னைமற்றோர் தெய்வத்தைப் பேசேனே - எந்நாளுஞ்
சாற்றுவதுங் காமகலை சாதிப்ப துங்கரணம்
போற்றுவதுங் காமனடிப் போது.

ஆ. முடிவு

மாதர் வாழி வனமுலை வாழியென்
நாதன் ஐங்கணை வாழிநற் காமநூல்
வேத மான விரகமும் வாழிமெய்க்
காதல் கூருங் கலவியும் வாழியே. (107)

ஆறாம் அத்தியாயம் முற்றும்.

2888. மதனமோகன விலாசம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2199
ஆ. ற/268

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. மதன மோகன விலாசம்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 27

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்
ஆ. நீளம் 17.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. அழகிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை. 4ஆம் ஏடு இல்லை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காருலவு குழல்மாதர்க்கு அமுத நிற்குங்
கருவையறிந் தாடவன்தான் கலவி செய்யச்
சீருலவு குறிகள்பல தொழில்கள் செய்யச்
சேர்ந்துகட்டுந் தலமறியத் தெய்வந் தோன்ற
ஏருலவு குரலறிய எழுது கின்ற
இடமறியச் செபமறிய விணங்க விந்தப்
பாருலவு மதனமோ கனவி லாசம்
பாடுதற்கு மூலகண பதியே காப்பு.

ஆ. முடிவு

வெல்லுவாய் தத்துவங்கள் தொண்ணூற் றாறும்
விற்பனமா யறிவதற்கு விபரங் கேளு
சொல்லுவேன் ஆதிகுரு சாத்திர நூலிற்
தொகையாய்முன் முப்பதையுந் தொகுத்துப் பாரு
அல்லு பகல் கண்கெட்ட கழுதை போலே
அலையாதே மனமுறைத்தா லாகு மெல்லாம்
நல்லதாம் மதனமோ கனவி லாசம்
நாட்டினேன் மூவொன்ப திற்குள் முற்றே. (27)

முற்றும்.

2889. வைத்திய அட்டவணை

1. நூலகக் குறிப்புகள்

அ. 2200
ஆ. ல/462

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. வைத்திய அட்டவணை
இ. மருத்துவம்
ஈ. செய்யுளும் உரைநடையும் அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 236 ஏடு; 472 பக்கம்
ஆ. நீளம் 17 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. பலவகை கையெழுத்து
ஊ. 151ஆம் ஏடு முறிந்துள்ளது. 26, 27, 186-189, 229-231 ஆகிய ஏடுகள் இல்லை. உள்ளவை நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்:

கண்ணுக்கு வெள்ளைப் பொடி:

சீனக்காரம் பலம் 3 சட்டகப்பையில் போட்டு துருசு பலம் 1 கூடப்போட்டு நன்றாய் உருக்கி நீர்வதத்தமதனிலும் திருப்பிப் போட்டு உருக்கி அம்மியில் போட்டு நன்றாய் நுணுக்கிக் குழலில் அடைத்துக் கொண்டு முலைப்பாலில் போட கண் பூ, சிவப்பு, புழுவெட்டு, கண்வலி, மாலைக்கண் இவைகள் தீரும்.

ஆ. முடிவு

கரப்பனுக்கு எண்ணெய்:

நல்லெண்ணெய் படி 1, சிவனார் வேம்புச் சாறு படி 1/2, சிறுசெருப்படிச்சாறு படி 1/2, செம்பொன் நெருஞ்சிச் சாறு படி 1/2, சித்திரமூலச் சாறு படி 1/2, சங்கங்குப்பிச்சாறு படி 1/2, கருநொச்சிச் சாறு படி 1/2, வேலிப்பருத்திச் சாறு படி 1/2, வெள்ளருக்குச் சாறு படி 1/2, நிலவாகைச் சாறு படி 1/2, நத்தைக்குறிச்சாறு படி 1/2, கழுதைலத்திச் சாறு படி 1/2, கழுதை மூத்திரம் படி 1/2; வெள்ளைக் காக்கணாம் வேர், மூக்கரைச்சாரணை வேர், பெருங்குடும்பிவேர், சங்கவேர், குப்பைமேனி வேர் வகைக்கு 3/4 பலம்; சுக்கு, மிளகு, திப்பிலி, உள்ளி, வசம்பு, ஓமம், கடுகு, சீரகம், கார்போக அரிசி, கஸ்தூரி மஞ்சள், சித்தரத்தை வகைக்கு 3/4 பலம்; பரங்கிப்பட்டை 5 பலம், பிரப்பங்கிழங்கு 2 1/2 பலம் இதுவெல்லாம் வேர் வகையும் அரைத்து மேற்படி சாற்றில் கலக்கி எண்ணெயில் விட்டுப் பதத்தில் வடிக்கவும். ஆள் திறமறிந்து அந்தி விடிவேளை இரண்டு கரண்டி வீதம் மூன்றுநாள் ஏழுபொழுது கொடுக்கவும். பத்தியம்: உப்பில்லாத படிக்கு அன்னப்பால் வைத்துச் சாப்பிடவும். கரைப்பன் பதார்த்தம், வாய்வுப் பதார்த்தம் ஆக பத்தியம் நாற்பது நாள் தள்ளு. கைகண்டது. கரைப்பன், வண்டுகடி, சிரங்கு, மண்டைக்கரைப்பன் தீரும்.

இ. பிற்குறிப்பு

திருமங்கலம் தாலுகா . . . .
தொட்டியப்பட்டியிலிருக்கும் முத்துத்தேவர் வைத்திய அட்டவணை ஏடு.

2890. அகத்தியர் வாகடம் 1500

1. நூலகக் குறிப்புகள்

அ. 2201_1
ஆ. ல/462

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் வாகடம் 1500 (திரட்டு)
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 25

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 23 செமீ., அகலம் 3.5 செமீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
காண்க: தொடர் எண். 2163_2.

ஆ. முடிவு
ஒன்றாக வாயில்நிறுத் திரவிமேல் மின்ன
நன்றாகத் தான்தானும் இரவிமறைந் திருந்த
பொன்றாக மூன்று திங்கள் பொருத்தவுடன் பொன்றுவர்
(கன்றாக) நிலைய வீழ்வார்காண் பட்சம் ரெண்டே. (25)

(யாப்பமைதி சரியில்லை. இதற்குமேல் எழுதப்படவில்லை)

5. பிற செய்திகள்

சுவடியில் அகத்தீசர் வாகடச் சுருக்கம் என உள்ளது.

2891. மங்கை வெண்பா

1. நூலகக் குறிப்புகள்

அ. 2201_2
ஆ. ல/462

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. மங்கை வெண்பா
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
பூமேவு செம்பொன் இருந்தட வாவிசூழ்
மாமேவும் இன்பவள மங்கையே - காமேவு
மேலம் பரத்தர் விரும்பும் புவியளந்த (1)
மாலம் பரத்தர் மனை.

ஆ. முடிவு

வந்துவளக் கொம்பசைய வந்துலவ மாவினமு
வந்துமலர் மீதுதுயின் மங்கையே - முந்துபுக
ழாங்கமலச் சங்கரனார் அக்கலர் பூசிக்கு
மோங்கமலச் சங்கரனார் ஊர். (16)

குருகடாட்சம் உண்டாம்.

5. பிற செய்திகள்

பொதுவாக ஊர்வெண்பா 100 பாடல்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இதில் 16 தான் உள்ளன. இது சைவ நூல்.

2892. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்

அ. 2201_3
ஆ. ல/462

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. உரைநடை, அச்சில் ஏறத்தாழ 8 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தங்கச் செந்தூரத்துக்கு வகை:
தங்கம் பணவிடை 3, காரீயம் பணவிடை 1/4, நாகம் பணவிடை1 கூட்டி துணிசுற்றி கரியில் வைத்து ஊதி எடுத்து பொடிபண்ணி அதோட´வெடியுப்பு விராகனிடை 7, காரீயம் விராகனிடை 5, இரசம் பணவிடை 1, கெந்தகம் பணவிடை 1 புதுச்சட்டியிலே போட்டுக் கற்றாழை வேர் கொண்டு கிண்டி மஞ்சப் பதத்துலே கெந்தகம் போட்டுக் கிண்டவும் செந்தூரமாம்.

ஆ. முடிவு

கந்தகக் கட்டு:
வெடியுப்பும் சிறுநீருப்புங் கூட்டிப் பிசரி வெயிலிலே மூன்றுநாள் வைத்துப் பிறகு உருக்க உருகும். அஞ்சனக்கல்லு, சிப்பி அஞ்சனக்கல் விராகனிடை 1, தாளகம் விராகனிடை 1, கெந்தகம் விராகனிடை 1, நாகம் விராகனிடை 1, இரசம் விராகனிடை 1 இந்த அஞ்சும் சமன்கூட்டி சத்துவிட்டரைத்து உருண்டை பண்ணி காயவைத்துச் சுண்ணாம்புச் சாம்பல் குகை பிடித்து அந்தக் குகையில் உருண்டை வைத்து மேல் மூடி சந்து பந்தனச் சீலைமண் செய்து சிறுபுடம் இடவும். அப்பால் நாகம் விராகனிடை 1, வீரம் விராகனிடை 1, இரசம் விராகனிடை 1 மூன்றும் செயநீருக்கு வைக்கிறது. அந்தச் செயநீரில் உருண்டையில் ரேக்கு சத்தி செயநீரில் வீரம், பூரம் பணவிடை பொடிபண்ணிப் போட்டு ரேக்குச் சுத்தின உருண்டையைத் தோச்சுத் தோச்சு வாட்ட ரேக்கு வாங்கி வாங்குமட்டும் வாட்டவும்.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2893. சாமுத்திரிகா லட்சணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2202

ஆ. வ/122

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. சாமுத்திரிகா லட்சணம்

இ. சோதிடம்

ஈ. உரைநடை, அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 14 ஏடு; 28 பக்கம்

ஆ. நீளம் 19.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பெண்கள் லட்சணம்:
பெண்களிலே பதிவிரதையாய் இருக்கிறவர்களை விவாகம் பண்ண வேண்டுமென்றுதிருவுளம் பற்றி அவர் களை விவாகம் பண்ணு முன்னமே பதிவிரதை என்று எப்படி அறிகிறதென்று அகத்திய மாமுனிவர் கேட்கச் சுப்பிரமணிய சுவாமி திருவுளம் பற்றுகிறார். பெண் களுடைய சரீரத்திலே பாதாதி கேச பரியந்தமுள்ள லட்சணங்களைப் பார்த்தால் பதிவிரதை என்கிறதும்,

தீர்க்காயுசு செல்வமுண்டென்கிறதும் புத்திரருடென்பதும், மலடென்பதும், தீர்க்கமுண்டென்பதும், அழகுண்டென்பதும், இல்லையென்பதும், கவடுண்டில்லை என்கிறதும், அவள் நினைத்தபடி முடியும் முடியாதென்பதும் அவரவர் சரீரத்தில் இருக்கிற லட்சணத்திலே அறியலாமென்று குமாரசுவாமி திருவுளம் பற்றி அருளினார்.

ஆ. முடிவு
வலதுதோள் முதல் நடுவிரல் நுனிமட்டுங் கண்ட அளவை இரட்டித்துக் கால் பெருவிரல் தொடுத்து நெற்றிமட்டும் வந்தால் வயசு 100, செல்வம்; புருவம் நடுவந்தால் வயசு. . . செல்வமுண்டு; மூக்குவரை இருந்தால் வயசு 70, இரக்கம்; கழுத்து மட்டும் வந்தால் வயசு 50. இந்த லட்சணம் புருஷருக்கும் பெண்களுக்கு மொத்திருக்கும். அளவுக்குறி பெண்ணுக்கு ஒன்பது வயது, புருஷருக்கு வயசு 15இல் பார்க்கிறது. லட்சணக்குறி முற்றும்.

2894. விவேக சிந்தாமணி

1. நூலகக் குறிப்புகள்
அ. 2203
ஆ. ள/108

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. . . . .
ஆ. விவேக சிந்தாமணி
இ. நீதி நூல்கள்
ஈ. செய்யுள் 38

3. தோற்றக் கூறுகள்
அ. 10 ஏடு; 20 பக்கம்
ஆ. நீளம் 19.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீலமும் புகழுங் கீர்த்தி செய்நன்றி பொறுமை கல்வி
சாலவே தரும முந்தான் தயவுமே நிலைத்து நிற்குங்
காலியும் மடமு மிக்கக் கட்டுந்தன் சுற்றத் தாரும்
வாலிபஞ் செல்வம் மேனி வறுமையும் நிலைநில் லாதே. (1)

ஆ. முடிவு

வண்டுபூஞ் சோலை தன்னில்
மதுவினை மருவி யுண்ணும்;
பண்டுடை பெரியோர் தானும்
பழமையைப் பகுத்துச் சொல்வார்;
கன்றுதான் பசுவைத் தேடிக்
கத்தநன் கமிர்த முண்ணும்;
அன்றிலுங் காகூ வென்றால்
அதுமழை பெய்யுந் தானே. (38)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2895. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2204
ஆ. மு/80

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. …………

ஆ. மாந்திரீகம்

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 36 ஏடு; 72 பக்கம்

ஆ. நீளம் 22.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி

ஊ. பல ஏடுகள் முறிந்துள்ளன. 1 முதல் 105 முடிய இருக்க வேண்டிய ஏடுகள் காணப்படவில்லை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சூள்யெழ கல்க்கோட்டை வைத்ததனைப் பாராய்
சூழ்யெழ கோபுரம்ச மைந்ததனைப் பாராய்
அம்பலத்தி லேயன்பு கொண்டாசை யென்றால்
அசையுமோ துன்பமெத்த நாகரே துணக்கென
எழுபதுகூ டலழகியர் பூப்பறித்து வரந்தனிலும்
என்னாது பட்டையைக் காத்துக்கிட நாகரே
உன்னையும் என்னையும் படையாதி பரமேசுரன்
ஏகிடகெரு டாழ்வார்சீர் பாதந் தானே.
(ஏட்டில் உள்ளவாறு அப்படியே எழுதப்பட்டது.)

ஆ. முடிவு

காளி மந்திரம்:

எட்டுத்திக்கும் எட்டுக்காளி நடவடி பின் பேயைக் குத்தி ரத்தம் குடியடி; காளி சண்டி சண்டப்பிரசண்டி

முண்டிரண்டி செண்டி காதேவி, நீலி, திருநீலி, நித்தகலியாணி என்னை சேத்திருப்பவளே! வீரபத்திரி விக்கிர மாகாளி, துணுக்குப்பலி கொண்டருளும் சொல்ப்பெரிய காட்டேரி. நான் நினைத்த பேரான பலி தந்தேன், நீயும் உனக்கேற்ற பேயும் இடக்கையில் வாளும் வலக்கை பாத்திரமும் கரடி வாகனமும் கண்டகோடாலியும் ..... மூர்க்கமுடனே கொல்லு, உதிரம் ஒரு கையும் ஓங்கிய சூலமும் பச்சை நிறமும் பவளத்துவர் வாயும் செம்பட்டாடையும் முத்தாபரணமும் மூன்று முகமும் நீண்ட பல்லும் நெருப்பெறிந்த கண்களுமாய்த் துணுக்கெனச் சென்று காலை(வெட்டிடு) கையை இழுத்திடு சென்றுடல் புகுந்து ஈரலைக் கவ்வு. இரணபலி கொள்ளு தாமசங்கள் சொல்லாதே தப்பாதே பின்சொல் கேளாதே பின்னிட்டுப் (போகாதே) என்னை நினையாதே என்பொருளுஞ் சொல்லாதே முப்பத்து முக்கோடி தேவர்களானே நாற்பத்து நாற்கோடி ரிஷிகளானே பிரம்மா விஷ்ணு ருத்திரமும் மூரத்திகளானே அவர்களானே இளைவழியடங்கலும் ....

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2896. சுப்பிரமணியர் ஞானம் 50

1. நூலகக் குறிப்புகள்

அ. 2205_1
ஆ. ந/271

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. சுப்பிரமணியர் ஞானம் 50
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 50

3. தோற்றக் கூறுகள்

அ. 24 ஏடு; 48 பக்கம்

ஆ. நீளம் 13.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6-8 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்வளரும் முப்பொருளு மொன்ற தான
சிறந்தபரா பரத்தினுட அடியில் நின்று
பார்வளரும் கேசரத்தில் ஆடல் தன்னில்
பாசகணந் தன்னையுந்தா னொன்றாய்ச் சேர்த்தே
ஆர்வளரும் சிவகெங்கை தன்னில் மூழ்கி
அகங்குளிர விசுத்தியிடம் கடந்தப் பாலே
தார்வளரும் குண்டலியாம் தீர்க்க மான (1)
தலத்தியலும் பணிந்துமிகச் சாற்று வோமே.

ஆ. முடிவு

பாரப்பா நான்சொன்ன நூல தன்னில்
பரிபாசை சொல்லவில்லை மைந்தா கேளு
ஆரப்பா லாடத்தில் மனந்தான் நிற்க
அகிலாண்டம் பிரமாண்டம் எல்லாம் நீதான்
வீரப்பா செய்யாதே என்னைப் போலே
வேல்வாங்கி அண்டலரை மேவ வேணும்
சாரப்பா இந்நூலைச் சார்ந்து பாரு (50)
சார்ந்தவர்க்கே அன்பதுமே சரண முற்றே.

சுப்பிரமணியர் ஐம்பது முற்றும்.

2897. சுப்பிரமணியர் ஞானம் 1

1. நூலகக் குறிப்புகள்
அ. 2205_2
ஆ. ம/272

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. சுப்பிரமணியர் ஞானம் 1
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 1

3. தோற்றக் கூறுகள்
அ. 1 ஏடு; 2 பக்கம்
ஆ. நீளம் 13.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
நூல் ஓரே பாடலாலானது. காண்க: தொடர் எண் 2079_1.

2898. சுப்பிரமணியர் ஞானம் 32

1. நூலகக் குறிப்புகள்
அ. 2206
ஆ. ம/272

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. சுப்பிரமணியர் ஞானம் 32

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 32

3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்

ஆ. நீளம் 14 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. தெளிவான சிறிய கையெழுத்து

ஊ. நல்ல நிலை!

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாய் எங்கெங்கு மொன்றாய் நின்ற
பொருளையுமே தானறிந்து போத மாகிக்
காரணமாய் வாகடக்கண் திறந்து பார்த்துக்
கருத்தொன்றாய்த் தானிறுத்திக் கபடம் நீக்கி
நாரணனார் பதிகடந்து கெவுன மாக
நந்தியுட பார்வையினால் நடனங் கண்டு
தாரணையாய் முப்பாழுங் கடந்து நின்ற
தந்தியையும் பணிந்துமிகச் சாற்று வோமே. (1)

ஆ. முடிவு

ஆமடா யத்தனையு முப்பத்தி ரெண்டில்
அடக்கிவிட்டே னாறுமுக வேலன் நானும்
ஓமடா பொறித்தமுட்டை மூன்று தன்னில்
ஒருமுட்டை இல்லாமல் அறிந்து கொண்டேன்

காமடா கருவையெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
கதிரொளிபோல் சுழிமுனையைக் காண வென்று
வாமடா முப்பத்தி ரெண்டுக் குள்ளே
வந்தவருக்கு என்னாலும் வருத்த முற்றே. (32)

முற்றும்.

2899. சுப்பிரமணியர் ஞானம் 16

1. நூலகக் குறிப்புகள்
அ. 2207
ஆ. ற/273

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. சுப்பிரமணியர் ஞானம் 16
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்
அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 14 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான சிறிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
முந்தியே உகாரசுடர் மூன்றி னாலே
முனைதாண்டி முச்சந்தி நடுவே சென்று

செந்தியே சிறுவாசற் குள்ளே நின்று
சீவாத்மா பரமாத்மா ரெண்டு மொன்றாய்
நந்தியே நாற்பத்து முக்கோண மார்பில்
நடுவிருக்குங் குண்டலியாம் நடனம் பெற்று
சந்தியில் முப்பழமும் அமிர்த முண்ட
தந்தியையும் பணிந்துமிகச் சாற்று வோமே. (1)

ஆ. முடிவு
செய்யப்பா இந்நூல்தான் பதினா றுக்குள்
திரட்டிவைத்தேன் ஞானமெல்லாந் தீர்க்க மாக
மெய்யப்பா பன்னிரெண்டு வருடங் காத்து
மேன்மையுடன் திரிந்தாலும் வீண ருக்குக்
கையப்பா இந்நூலைக் காட்டி டாதே
கர்மம்வந்து சேருமடா கண்டு பாரு
வையப்பா என்னூலாம் பதினாறு முற்றும்
வஷ்த்தினுட பாதமலர் வணங்கு முற்றே. (16)

ஞானம் முற்றும்.

2900. சுப்பிரமணியர் ஞானம் 8

1. நூலகக் குறிப்புகள்
அ. 2208
ஆ. ற/272

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. சுப்பிரமணியர் ஞானம் 8
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 8

3. தோற்றக் கூறுகள்
அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 14 செமீ, அகலம் 3 செமீ,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான சிறிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணத்தில் தானடங்கி பொறிகள் ஐந்தும்
போதமய மாய்நிறுத்திப் புருவ மேவிக்
காரணத்தின் குண்டலியாங் கதிருக் குள்ளே
கடந்தெழுந்த கேசரியைக் கடந்தப் பாலே
மாரணத்தில் நெருப்பாறும் மயிர்ப்பா லத்தில்
மனதடக்கித் தான்கடந்து மவுனம் பெற்று
வாரணத்தின் முகத்தானை வணங்கி யேதான்
வஸ்த்துவுட நிர்ணயத்தை வழுத்து வோமே. (1)

ஆ. முடிவு

எடுத்ததினா லாவதென்ன மவுனம் பாரு
எட்டாத சுழிமுனையி லிருந்து கொண்டு
அடுத்துமிக மனந்தனையும் போக்கி டாமல்
அட்டட்ச ரத்தினுட அருமை பெற்றுத்
தொடுத்துமிகக் கற்பமெல்லாம் அறிந்தே உண்டு
சுத்தசிவந் தன்னிலேயுஞ் சுகுர்த மாகத்
தடுத்துமிக முழுகியிடக் காந்தி மீறுஞ்
சார்ந்தவர்க்கே என்னூலா மெட்டு முற்றே. (8)

2901. சுப்பிரமணியர் ஞானம் 5

1. நூலகக் குறிப்புகள்
அ. 2209
ஆ. ற/273

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. சுப்பிரமணியர் ஞானம் 5

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 5

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 14 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான சிறிய கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்மேவும் நாவினா லடைத்தி டாமல்
செலுத்தடா மனந்தனையும் அண்ணாக்கில் நேராய்ப்.

பார்மேவும் அண்டவுச்சி தன்னி லேதான்
பாயுமடா வாசியுந்தான் பரத்தி னூடே
தார்மேவு மூலமடா தன்னில் லிங்கந்
தண்டுமண்டத் துக்குந்த மர்த்தூ னிற்குங்
கார்மேவும் விந்துவடா பிடரி மார்க்கங் (1)
கனிந்துமிக இரங்குமடா கண்டு பாரே.

ஆ. முடிவு

எடுத்திடவே மெழுகுபோல் திரண்டு நிற்கும்
எந்தெந்தச் சரக்குவகை எல்லாம் நீறும்
அடுத்துமிகத் தாம்புரத்தில் நீரை வாங்கும்
அடங்காத வியாதியெல்லாம் அருண்டே யோடுந்

தடுத்துமிகப் பேசாமல் அண்ட மேவித்
தன்மனமே சாட்சியதாய்த் தவமே செய்து
கடுத்துமிகத் திரியாதே அகத்தி யோனே
கந்தனுட நூலிதுவாங் கருத்தஞ்சு முற்றே. (5)

முற்றும்.

2902. அகத்தியர் புலத்தியருக்கு உபதேசம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2210

ஆ. ற/274

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் புலத்தியருக்கு உபதேசம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 43

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்

ஆ. நீளம் 14 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. தெளிவான சிறிய கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

விதித்தவட் டத்தினில் மேவுந் திருவடி
பதித்ததோர் பிரமனின் பதியிட மாகி

உதித்ததோர் அவ்விடம் ஓங்காரத் துள்ளே
சதித்ததோர் பூரணந் தானது வாமே. (1)

ஆ. முடிவு
சரணமென்ற புலத்தியனே உன்னைப் போலே
தர்க்கமிட்ட பேர்களில்லை வைய கத்தில்
சரணமென்ற பிள்ளையைத்தான் எடுத்தே அப்பா
சந்தோச உபதேசஞ் சொல்ல வாருஞ்
சரணமென்ற உந்தியிலே சிங்கென் றூணிச்
சார்ந்தவுடன் மேல்நோக்கி வங்கென் றூணு
சரணமென்ற கண்மணியே வெளிதான் போதச்
சந்தோச மாயிருந்து வாழி தானே. (43)

அகத்தியர் புலத்தியருக்கு உபதேசம் முற்றும்.

2903. அகத்தியர் ஞானம் 20

1. நூலகக் குறிப்புகள்
அ. 2211
ஆ. ட/266

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் ஞானம் 20
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 21

3. தோற்றக் கூறுகள்
அ. 7 ஏடு; 14 பக்கம்
ஆ. நீளம் 14 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான சிறிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அண்டமென்ற சிரசப்பா அமிர்த பீடம்
ஆயிரத்தெட் டிதழினுட அமிர்த பீடம்
பிண்டபஞ்ச பூதமது அஞ்சுக் குந்தான்
பெலமான ஊண் உறக்கம் பெருமை பீடம்
வண்டர்கள்தா மிதையறிய மாட்டா ரப்பா
மவுனகொ லுச் சிங்கார மதுரத் தேனைத்
தொண்டனெனக் குணவானா யிருந்தா னானால்
சொல்லுவாய் ஊமையுட சூட்சந் தானே. (1)

ஆ. முடிவு

சித்தான புலத்தியனே அய்யா கேளு
செகத்திலே என்னூல்போல் செப்பா தொன்றும்
முத்தான முத்தியெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
மோசமில்லை முனைமேலே ஆமை யாமை
பத்தான பத்திநடு மையந் தன்னில்
பாம்பப்பா ஊமையப்பா சொல்லார் சொல்லார்
வத்தாத பொருளுரைக்கும் நாயன் மார்தம்
மலரடியை நிதங்கருத்தில் அர்ச்சிப் பாயே. (21)

ஞானம் முற்றும்.

2904. அகத்தியர் வாக்கியம் 16

1. நூலகக் குறிப்புகள்

அ. 2212
ஆ. ம/275

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் வாக்கியம் 16
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்
ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியென்ற மூலமுதல் கணபதியின் பாதம்
ஆடினதோர் சூத்திரந்தான் பதினா றப்பா
(தேடியதோர்) அண்டபிண்டம் எல்லாம் சேர்த்துச்
சீராகப் பாடியதே எண்ணூ றப்பா
பாடினேன் பூரணசூத் திரத்துக் காகப்
பதிவாகப் பாடிவிட்டேன் சூத்ர நூலை
நாடியே நந்தீசர் சொன்ன வாக்கியம்
நன்றான மூலமுதல் கணபதியே காப்பாம். (1)

ஆ. முடிவு

காணேநீ நூற்றிலே மெய்ய தாகும்;
கருவதுதான் ஐம்பதிலே மெய்ய தாகும்;
பூணேநீ தானிந்த நூல்காண் பிக்கும்;
பூட்டினதோர் பூட்டெல்லா மஞ்சில் காணும்

தோணவே கருக்குருவு மிதொன் றுள்ளி
துறையஞ்சு மாகும்வேதை வழியோடே யேறு
பேணவே பதினாறும் இதுவே யாகும்
பெலமாக அகத்தியரின் வாக்யம் முற்றே. (16)

(மூன்றாவது அடி தெளிவாக இல்லை.)

2905. ஆரூட நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2213
ஆ. வ/123

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. ஆரூட நூல்
இ. சோதிடம்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 75 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 100 ஏடு; 200 பக்கம்
ஆ. நீளம் 14 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. முதல் 8 ஏடுகள் இல்லை. உள்ளவை நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இந்தக் களவு போனது வருமோ வராதோ:

இந்தக் களவு போனது வரும்.
இந்த வியாபாரம் பண்ணலாம்; அதிகமாகும்,
இந்த இராசாவை முடிசூட்ட நன்று,
இந்தச் சிவலிங்கம் வைக்க மிகவும் நன்று.

ஆ. முடிவு

இந்த காணி கொள்ள நன்றோ தீதோ:

இந்த மச்சிட கெட்டுப் போகும்; மத்திபம்.
இந்த இராசாவின் பேரில் படைவருவது நன்றாகும்
இந்த வாய்க்கால் வெட்ட அனேக பலன் உண்டு
இந்த மணியஞ் செய்ய லாபமுண்டு. நல்லது.

2906. பலசாத்திரத் திரட்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 2214
ஆ. ற/276

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. பலசாத்திரத் திரட்டு
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 39 ஏடு; 78 பக்கம்
ஆ. நீளம் 26 செமீ, அகலம் 3 செமீ,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நெஞ்சறி விளக்கம்:
நித்திரை வந்த போது நினைவுதான் இருந்த தெங்கே
புத்திரன் தானு மெங்கே புணர்ந்திடும் மனைவி எங்கே
பத்திர பூசை எங்கே பலதொழிற் செய்வ தெங்கே
சித்திர நாக நாதர் செயல்தனை யறிவாய் நெஞ்சே.

ஆ. முடிவு
பார்ப்பதற்கு நீண்டதுவாய் குறுகி வட்டம்
பருதிமதி யங்கியெனப் பளிங்கா காயத்
தார்ப்பதிலே மூன்றுசுழி முன்பின் முனையாஞ்
சாக்கிரத்தில் அடையாளந் தாக்கிப் பாரு;
சேர்ப்பதற்குச் சுழிமுனையே நுனியா மந்தத்
திரிகோண குண்டலியே விஸ்வ ரூபங்
கார்ப்பதற்கு நடுநாடி யூடே சென்று
கண்ணிறுத்திப் பிடரிவழிக் கண்ணைப் பாரே. (27)

முற்றும்.

5. பிற செய்திகள்
இதில் நெஞ்சறி விளக்கம், ஞானவெட்டி, அகத்தியர் தீட்சைவிதி 200, நிகண்டு, அகத்தியர் சாலம், கந்தபுராணம், கொங்கணர் தண்டகம், கலைக்கியானம், சுந்தரானந்தர் பலதிரட்டு யோகம், பூசாவிதி, அகத்திய மனோலய பட்சனி 51 போன்ற நூல்களில் இருந்து பாடல்கள் திரட்டப்பட்டுள்ளன.

2907. வைத்திய சார சங்கிரகம் (வைத்தியத் திரட்டு)

1. நூலகக் குறிப்புகள்

அ. 2215

ஆ. ல/464

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. வைத்திய சார சங்கிரகம் (வைத்தியத் திரட்டு)

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 72 ஏடு; 144 பக்கம்

ஆ. நீளம் 24.5 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7, 8 வரிகள்

உ. தெளிவான சிறிய கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வாத நாடி:

வாதமெனு நாடியது தோன்றிற் சீதம்
மந்தமொடு வயிறுபொருமல் திரட்சி வாயுச்
சீதமுறுங் கிராணிமகோ தரநீ ராமை
திகழ்வாயுச் சூலைகடு கடுப்புத் தீர
நீதமுறுங் கிருமிகுண மண்ட வாத
நிலையுநீர்க் கிரிச்சனங்கள் தத்து மேகம்
பேதகமா முடற்பிணிகள் மூல ரோகம் (1)
பேசவேகும் பிணிகளுமே பொருள தாமே.

ஆ. முடிவு

புறவளையம்: சுக்கு, கடுக்காய் இரண்டையும் முலைப் பாலில் அரைத்துக் கொதிப்பித்துக் கண்ணைச் சுற்றிப் புறவளையம் பூசி உச்சியிலும் பூசக் கண்ணிடி, சிவப்பு மாறும்.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

5. பிற செய்திகள்

மருத்துவம் பற்றிய பல செய்திகள் இச்சுவடியில் இடம் பெற்றுள்ளன.

2908. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 2216

ஆ. ல/465

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ......

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 250 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 272 ஏடு; 544 பக்கம்

ஆ. நீளம் 19.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சன்னி தோஷத்துக்கு மருந்து

வலுக்கின்ற நோயறிந்து செய்யும் போது
வலுவான மாத்திரைக்குச் சுரசங் கேளு
குலுக்கின்ற வாதசன்னி பித்தசன்னி தனக்குக்
குருவான உபாயபட்டை முருங்கைப் பட்டை
பிலக்கின்ற மாவிலங்கு புங்கம் பட்டை
பெருக்கவே யிஞ்சிதட்டிப் பிழிந்து கொண்டு
நுலுக்குகின்ற சன்னிபதி மூன்றுக் குந்தான்
கூடேத்திச் சட்டியிலே விட்டுக் கொண்டே.

ஆ. முடிவு

முசிறிமுட்டை, குழியானை, முந்திரிப்பழம், ஈச்சம்பழம், பசுந்தோல், மிளகு, உள்ளிருத்திராட்சம் இவை வகைக்குக் கழஞ்சு 1 கூட்டி முலைப்பால் விட்டரைத்து எடுத்துக் குளிகை செய்து இஞ்சி நீரில் உள்ளுக்குக் கொடுக்கவும். நாக்கில் தேய்க்கவும். தேய்த்தால் சன்னியும், உள்குத்து, புறவீச்சு, நாக்குத்தம் மாறுகிறதற்குஞ் சன்னி தோசம், விகாரஞ் செய்கிறது, கண்சிவக்கிறதும், செவியடைப்பும் சௌக்கியமாகும். இது கைகண்டது.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2909. சிந்தாமணி 1500 - நாடியின் குணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2217
ஆ. ல/466

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. சிந்தாமணி 1500 - நாடியின் குணம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 37

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்
ஆ. நீளம் 29.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான பெரிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சாற்றுகிறேன் நாடியுட புருவ மோடு
 தாக்கான நாக்குமல மூத்திரம தாகும்
காற்றினேன் கண்ணோடு பேச்சுத் தானுங்
 காரியமா மெட்டுவகை பரீட்சை தன்னில்
ஆற்றினே னவையினுள்ள குணங்க ளெல்லாம்
 சாத்தியம சாத்தியம றிந்துசமயம் பார்த்து
நாற்றினேன் நாடியுட நன்மை யெல்லாம்
 நலமுடனே துர்க்குணமு நயந்து பாரே. (1)

ஆ. முடிவு

வண்ணவே யெட்டுவகைப் பரீட்சை பார்த்து
 வகையான நாடியுட குணமும் பார்த்துத்
திண்ணவே தேகத்தி னியல்பும் பார்த்துத்
 தேசதே சாபேதச் செயலும் பார்த்துக்

கண்ணவே காலாகா லங்கள் பார்த்துக்
கனமான வக்கினித னாட்டம் பார்த்துப்
பண்ணவே பலபலவா நூலும் பார்த்துப்
பரிகாரப் பயனறிந்து பார்த்துச் சொல்லே. (37)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2910. அகத்தியர் திருநடன சூத்திரம் 48

1. நூலகக் குறிப்புகள்
அ. 2218
ஆ. ல/467

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் திருநடன சூத்திரம் 48
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 45

3. தோற்றக் கூறுகள்
அ. 21 ஏடு; 42 பக்கம்
ஆ. நீளம் 22 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
நாடியதோர் பூரணமாம் வேதாந் தத்தில்
நடனதிரு சூத்திரத்தைப் பாடு தற்குச்

சூடியதோர் கணபதியும் கந்தன் காப்பு
அருள்பெருகும் சித்தர்முதல் ரிஷிகள் காப்பு
கூடியதோர் ஞானபர வாலை யாலே
கூறுகிறேன் அகாரமுடி சிகாரத் தாலே
பாடியதோர் பலநூல்கள் பொய்யாய்ப் போகப்
பாலகர்க்கு மெந்தனுட நூலு தானே. (1)

ஆ. முடிவு
பாகமாய்ச் செந்தூரம் பணவி டைதான்
பறந்திடுமே நோயெல்லாம் பறந்து போகும்;
தேகமே வச்ரமிட்ட காய மாகும்;
சிவசிவா ரிஷிகள்சித்த ரெல்லாம் செய்வார்;
ஆகமே பூரணசூத் திரந்தான் ....
அதைப்பாடி யடக்கிட்டேன் பண்பாய்ப் பாரு
தாகமே நீறான நாற்பத் தெட்டுஞ்
சாடினேன் வயித்தியனின் பாட்டு முற்றே. (45)

5. பிற செய்திகள்
இதனைத் தொடர்ந்து மூன்று ஏடுகளில் வேறுசில மருத்துவக் குறிப்புகள் காணப்படுகின்றன.

2911. தட்சிணாமூர்த்தி சித்திர வெண்பா

1. நூலகக் குறிப்புகள்
அ. 2219
ஆ. ல/468

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. தட்சிணாமூர்த்தி
ஆ. தட்சிணாமூர்த்தி சித்திரவெண்பா
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 70

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு; 32 பக்கம்
ஆ. நீளம் 22 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆரியமாம் வாகடத்தின் நுண்பொருளை யாராய்ந்து
சீரியதோர் செந்தமிழால் செப்புகிறேன் - கூரியதாய்
உள்ளநீ தானிச்சை யாவாய் விநாயக
வள்ளலே என்மனத்து வா. (1)

ஆ. முடிவு

காமாலை பொற்கடுகு காய்ச்சியநீர் நெய்யிலிட்டு
ஏர்மிளகு கொடுக்க யெப்போதது - போமாகில்
பக்குவம்பார்த் துண்டுவிடப் பாய்ந்துபித்தக் ராணியறும்
திக்கெனவே மூலத் திசை. (70)

(மூன்றாம் அடி தெளிவாகவில்லை.)

இ. முற்குறிப்பு

தி. நாராயணத் தேவர். தட்சிணாமூர்த்தி சித்திர வெண்பா எடுத்தவர்கள் வாசித்துப் பார்த்துக் கொடுக்கவும்.

5. பிற செய்திகள்

ஐந்தாம் ஏடு மீண்டும் வேறொருவரால் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது.

2912. அகத்தியர் பச்சை 16

1. நூலகக் குறிப்புகள்
அ. 2220
ஆ. ல/469

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் பச்சை 16
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்
அ. 6 ஏடு; 12 பக்கம்
ஆ. நீளம் 22 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
காண்க: தொடர் எண். 2090_3

ஆ. முடிவு
ஏற்றிடிற் சன்னி தோஷம் எழும்பிடிற் குட்ட ரோகம்
வேற்றிட வியாதி யெல்லாம் வெருண்டுபோம் ரெண்டு கண்ணில்
பார்த்திடும் பரங்கி சூலை பல்கடி முதலா யுள்ள
புகைத்திடிற் தீரு மென்னு பொருப்புமே லிருந்து கொண்டு
சேர்ந்திட மருந்து சொன்னார் அகத்திய முனிவர், தாமே. (16)

அகத்தீச நயினார் பதினாறு வைத்தியம் முற்றும்.

(இப்பாடல் ஐந்தடி உடையதாகவும், எதுகை இன்றியும் காணப்படுகிறது.)

2913. சிவஞான குரு தோத்திரப் பத்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 2221
ஆ. த/51

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. சிவஞானகுரு தோத்திரப் பத்து
இ. பிற தோத்திரங்கள்
ஈ. செய்யுள் 10

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்
ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5, 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சற்றே செல்லரித்த நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதிமுத லந்தமுமி லாதபரி பூரணம
தாகின்ற ஞானவடிவே

யகிலபுவ னங்கருணை யன்றிவே றில்லாத
கன்றிடா னந்தமுதலே

சோதிமய மானதொரு நிஷ்களசொ ரூபமே
துன்னிநிறை கின்றபொருளே
சுத்தமாய் நின்றிலகு மொன்றான தெய்வமே
துரிசிலா மோனநிலையே

நீதியா யொருபோது மழியாத வஸ்துவே
நிறைவான பேரின்பமே
நின்னையே துணையாக நம்பினே னய்யனே
நின்கழற் சேரவென் றுஞ்

சேதமற நின்றிலகு முன்னுட னென்னையுஞ்
சேர்த்துக் கலந்துகொள்வாய்
சிந்தைதனில் குடிகொண்ட அறிவான தெய்வமே
சிவஞான குருநாதனே.

ஆ. முடிவு
ஒண்டதிலி ரண்டாகி மூன்றாகி வுள்கருவா
யோங்கியே யஞ்சுமாகி
உடலாகி உயிராகி உலகமுத லளவாகி
(ஒளியாகி) வெளியுமாகி

மண்டலம் முதலான யாவினுந் தானாகி
மகிழ்கின்ற சோதிமயமாம்
வள்ளலே ஈதெலா மேதென்று பார்க்கில்நின்
மகிமைவிளை யாட்டிதன்றோ?

கண்டவர்கள் மனமகிழு மானந்த செல்வமே
கருத்துக்கி சைந்தபொருளே
கனவினிலு முனையன்றி வேறுநினை வில்லாத
கருத்தெனக் காக்கிவைத்துத்

தெண்டனிட் டேனென்னை யுன்பதந் தன்னிலே
சேர்த்துக் கலந்துகொள்வாய்
சிந்தைதனில் குடிகொண்ட அறிவான தெய்வமே
சிவஞான குருநாதனே. (10)

குருதோத்திரம் முகிந்தது முற்றும்.

2914. அகத்தியர் தண்டகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2222-1

ஆ. மு/81

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் தண்டகம்

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுள் 53

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்

ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கரிமுகக் கடவுளைக் கவுரி மைந்தனை
விரிகடல் வாயனை வேத நாதனை
அரிதிரு மருகனை ஆதி சோதியைப்
பரிவுடன் தொழுதுபொற் பாதம் போற்றுவாம்.

அந்தணர் பாதம் போற்றி அறிவுடன் வாழ்வோர்க்
(கெல்லாஞ் /
சந்தடி பூமி மீதில் சாத்திய தண்டகந் தானே
வந்தனார் பிள்ளை யெல்லாம் இதுவறிந் துள்ளே
கொண்டு /
பிந்தபின் பிரம வித்தாம் பெரியவ ளுக்குந் தானே. (1)

ஆ. முடிவு
உரைத்த கடல்நுரை விரித்த நரைதலை
சரப்பை அருவினார் பரத்தைக் கிடுவதே. (53)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2915. அகத்தியர் 1200 முதற்காண்டம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2222_2
ஆ. மு/81

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் 1200 முதற்காண்டம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 308

3. தோற்றக் கூறுகள்
அ. 42 ஏடு; 84 பக்கம் (116 முதல்157 முடிய)
ஆ. நீளம் 27 செமீ., அகலம் 3.5 செமீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆயிரத் திருனூர் முன்னூல் ஆய்ந்துமுதற் காண்ட சூத்ரம்
பாயிரத் தொகுதி யொன்று பாடிய வைத்ய பாகம்
ஓயிரக் கவிமுன் னூரும் உழைக்கர னுரைக்க யீன்ற
தாயெனக் குரைக்க யானுஞ் சாற்றிய விதிநூல் தானே. (1)

ஆ. முடிவு

உண்டுபார் குருவுண்டு மருந்து முண்டு
உலகமுண்டு நன்மையுண் டுதவி யுண்டு
கண்டுபார் சிவனுண்டு பூசை யுண்டு
கருத்துண்டு வழியுண்டு விழியு முண்டு
திண்டுமுண்டு செய்யாதே குலையே றாதே
தீவினைக்குள் ளாகாதே செடம்போக் காதே
பண்டுசொன்ன குருமுறையை விண்டி டாதே
பண்டிதனே வைத்தியநூல் காண்ட முற்றே.

(இது 295ஆவது கவி)

2916. அகத்தியர் 1200 - இரண்டாங்காண்டம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2222_3

ஆ. மு/81

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் 1200_இரண்டாங்காண்டம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: 299

3. தோற்றக் கூறுகள்

அ. 36 ஏடு; 72 பக்கம் (158 முதல் 193 முடிய)
ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்டமென்ன நாகாசஞ் சொல்லக் கேளு
 குடியகோ டகசாலை கொடுப்பை வீழி
யாண்டகொடி வேலிச்சா ரணையின் சாறும்
 அப்பனே செருப்படியின் சாறுங் கூட்டி
மீண்டசட்டி யில்வார்த்து நாகம் வாங்கி
 விளங்கியசா றுடன்கலந்தே எரிப்பாய் சாமம்
மாண்டுமா விரியுமடா கட்டிப் போச்சு
 வாதமென்ன இம்மருந்தை மாட்டு மாறி. (1)

ஆ. முடிவு

காப்பேது வாதங் கடந்த குறைபாடத்
தாப்பேது சாலத்தே சாற்றவே - மாப்பேது
வாதநூல்முன் னூறும் வகாரத் துரைசரிதான்
வேதமே சொல்லி விளம்பு. (299)

ஆகக்காண்டம் 2க்குப் பாட்டு 590.

2917. அகத்தியர் 1200 - மூன்றாங்காண்டம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2222_4

ஆ. மூ/81

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் 1200 - மூன்றாங் காண்டம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 203

3. தோற்றக் கூறுகள்

அ. 36 ஏடு; 72 பக்கம் (194 முதல் 229 முடிய)

ஆ. நீளம் 27 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காரணமாஞ் ஞானவெளி கடந்து நின்ற
கற்பகமே விற்பனமே கருணை மேவும்
பூரணமே பஞ்சகர்த்த ரூபி யான
புண்ணியமே நிர்ணயமே பொருளே வேத
வாரணமே நிறைந்தபிர ணவமே சேவல்
மயில்க்குகனே குமரகுரு பரனே ஆதி
நாரணனே நான்முகனே முகமைந் தான (1)
நாதபர விந்துமவு னங்காப் பாமே.

ஆ. முடிவு
காண்டவழி முன்பின்னா யல்லால் வேறே
கருநவில்லை வேறொருத்தர் நூல்பா ராதே
தூண்டவிளக் கெரியுமென்று முன்னோர் சொன்ன
சொற்படியே வித்தைவயித் தியம்பொன் வாதம்
வேண்டியபூ மாந்திரீகம் நால்வே தத்தால்
விளம்பினேன் வேதாந்த மேவும் மேவும்
ஆண்டவனே விட்டகுறை யுரைத்தார் சொன்னேன்
ஆழ்ந்ததிரி காண்டம்முன் னூறு முற்றே. (203)

2918. ரோமரிஷி 16

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2223_1
   ஆ. ல/470

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. ரோமரிஷி
   ஆ. ரோமரிஷி 16
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்
   அ. 5 ஏடு; 10 பக்கம் (1 முதல் 5 முடிய)
   ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. நல்ல நிலை
   எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூலாதா ரப்பொருளின் மூர்த்தி காப்பு
முப்பா லுக் கப்பாலின் முதலே காப்பு
மேலாதா ரத்தில்வாழ் ஆயி பாதம்
வேண்டிக்கொண் டைநூறும் வெளியாய்ச் சொன்னேன்

ஏலாமல் புதைத்தாரே அந்த நூலை
இரண்டான ஐம்பதுக்குள் இசைந்து சொன்னேன்
பாலான நூறதனில் சிங்கி வித்தை
பாடினேன் வைத்தியமும் வாதந் தானே. (1)

ஆ. முடிவு

மணிபூரம் வீரமல்லோ சாரங் காரம்
மன்னவனும் தேவியுமாய் மகிழ்ந்த வீடு
கெணியாரே சரமறிந்த பெரியோ ரப்பா
கணேசனுட பட்டணத்தின் கெடிமே லப்பா
பணியார மோஉனக்குக் கிறுகி றுப்போ
பசியமர்ந்தால் பலனவர்க்குப் பலித்தி டாதோ
வணிகனல்லோ திராசின் நுனை கண்டாப் போலே
மக்களே பதினாறு வன்னி முற்றே. (16)

ரோமரிஷி நாயனருளிச் செய்த 16 முற்றும்.

2919. மாந்திரீகம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2223_2
ஆ. ல/470

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. மாந்திரீகம்

இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை; அச்சில் ஏறத்தாழ 5 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம் (7 முதல் 11 முடிய)
ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. 6ஆம் ஏடு இல்லை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மோகினி மந்திரம்:
திருக்காலேறி யப்பொரியேறி யத்தீயேறி யத்திருகி முருகிக் கொண்டேறிக் கொண்டாடி வாநீ; தீபரமாகாளி கங்காளகாளி காருணியத் தேவி யமுத சண்டாளி அம்அம் தாக்கு தாக்கு; தாக்காதிருக்கில் கங்கைக் கரையில் புல்லின்மேல் மேய்ந்துவரும் காராம்பசுவைக் கொன்ற பிரமதோஷத்தில் போவாராகவும்.

ஆ. முடிவு

சாத்தான் ஆவேச மந்திரம்:
அகார உகார ஆதித்தியப் பிரபவே அரிகர புத்திரா
ஆருபேரிலேயும் நீயே வா.
ஓம் பிராமணியே நமா. ஓம் கவுரியே நமா.
ஓம் மயேசுபரியே நமா. ஓம் விஷ்ணு ரூபியே நமா.
ஓம் இந்திராணியே நமா. ஓம் லட்சுமியே நமா.
இதுக்குச் சக்கரம்.

(இதுக்குமேல் எழுதப்படவில்லை).

2920. சருவ பட்சணி

1. நூலகக் குறிப்புகள்
அ. 2223_3
ஆ. ல/470

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ......
ஆ. சருவ பட்சணி
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 15

3. தோற்றக் கூறுகள்
அ. 4 ஏடு; 8 பக்கம்
ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்மேவு வாலையபி ராமி சூலி
திரிபுரைசங் காரிகவு மாரி வாமி
தார்மேவு மகிடசங் காரி துர்க்கை
சாமுண்டி கங்காளி தந்த மைந்தன்
சூர்மேவுந் தந்திமுக னொற்றைக் கொம்பன்
கருணைதிரு நயனனிரு கமலப் பாதம்
பார்மீதில் அறுமுகவன் குறுமு னிக்குப் (1)
பகர்சருவ பட்சணிக்குக் காப்புத் தானே.

ஆ. முடிவு

விட்டுவிடாத் தந்திரவாய் அலட்டுச் சன்னி
விருத்தவிப் பிரமங்கண் டருச் ... சன்னி
சட்டமுள்ள கம்பீர சன்னிருத்தி ராக்கச்
சன்னியுஞ் சத்திசன்னி முதல்ப்பண்மூன் றினுக்குந்
திட்டமுடன் சிதம்பர ....

(இது 15ஆவது பாடல். இதற்குமேல் ஏடுகள் இல்லை)

3. பிற்குறிப்பு

1950-ஆம் வருடம் டிசம்பர் மாதம் 1ஆம் தேதி கொல்லம் 1209ஆம் வருடம் விஜய வருடம் கார்த்திகை மாதம் 16ஆம் தேதி ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா ராஜபாளையம் சீவல்பட்டித் தெரு, அ. புளுகாண்டியா பிள்ளை என்ற சாந்தலிங்கம். அழகப்பப் பிள்ளை குமாரர் ஏடு.

2921. நவலோக மாரணச் சுருக்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2224
ஆ. ல/471

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .....
ஆ. நவலோக மாரணச் சுருக்கம் 205க்கு சூத்திரம் 16
இ. மருத்துவம்
ஈ. செய்யுள், 16

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்
ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கேளப்பா நவலோக மார ணந்தான்
கெடிதான வயித்தியமா மிருநூற் றஞ்சும்
தேளப்பா கொட்டுதல்போ லிந்த சூத்ரம்
திறஞ்சொல்வேன் இரும்புக்குத் தாரங் கெந்தி
வாளப்பா வெள்ளியிடு வங்கத் துக்கு
மால்தேவி வெடியுப்பு வெள்ளைச் சீனம்
சூளப்பா செம்புக்குக் கெந்தி வங்கஞ்
சூதமொடு துருசுவெள்ளை சார மூன்றே. (1)

ஆ. முடிவு

காச்சடா இருப்பவல தயிலத் துக்குக்
கரிமஞ்சள் கஸ்தூரி மஞ்சள் ரெண்டும்
மாச்சடா வகைக்குப்பல வீதங் கூட்டி
மறவாமல் தயிலத்தை வைய்யு மப்பா
பூச்சடா தயிலமுதல் பற்பத் துக்கும்
புரிவாக உட்கருவும் நாலில் சொன்னேன்
ஆச்சடா இருநூற்றஞ் சுக்குச் சூத்ரம்
ஆகுமப்பா பதினாறுந் தீர முற்றே. (16)

குருவே துணை. முற்றிற்று.

5. பிற செய்திகள்

நூலையடுத்து நான்கு ஏடுகளில் 14 மருத்துவப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவை வேறு கையெழுத்தில் அமைந்தும் மிகச் சிதைவுற்றும் காணப்படுகின்றன.

2922. சர நூல் மூலமும் உரையும்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2225
ஆ. வ/124

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ......
ஆ. சர நூல் மூலமும் உரையும்
இ. சோதிடம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 8 ஏடு; 16 பக்கம்
ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7, 8 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
ஐய்ந்துகரத் தெந்தை யணியம்பொற் றாள்பணிந்தால்
சிந்தையருள் மெஞ்ஞானஞ் சித்திக்கும் - பந்தம்
அரிக்கும் சர நூலை ஆய்ந்தபொருள் தன்னைத்
தரிக்கும் இதுவுண்மை தான்.

ஆ. முடிவு
பார்த்திடிலே இடமதுவே திங்க ளாகும்
பகலவனாம் பிங்கலையே வலம தாகும்

ஏர்க்கவுரைக் குஞ்சுமுனை நடுவே யங்கி
இடையான சந்திரனே யமுர்த மாகும்
தீர்க்கமுடன் பொருள்விளைக்குங் கரிய வண்ணன்
திரராசி யாமெனவே செப்புங் காலை
வேற்றடங்க... ....
....

(இஃது ஆறாம் பாடலாக இருக்கவேண்டும். இதற்குமேல் எழுதப்படவில்லை.)

2923. விவேக சாரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2226
ஆ. ப/267

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. விவேக சாரம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 50

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்
ஆ. நீளம் 28 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

விநாயகர் துதி:

செம்பொனெனு மம்பலவர் பங்கிலுறை
 மங்கைசிவ காமி யருளுங்
கம்பமத கும்பகளி றெங்களிதை
 யங்களுறை கற்பக சரணம்.

குருவணக்கம்:

பட்டமரந் துளிர்தழையச் சித்தர்வனந் தனிலே
 பத்தர்முனி வருந்தொழுகப் பரமகலி யாணர்
முட்டனிவ னறியாத மூடனிவ னென்று
 முனியாம லுபதேசம் வைக்கவென வந்து
சிட்டர்தொழும் பாதகம லங்களையென் சிரசிற்
 சிந்தைதனில் வைத்துவினை தீர்த்தருளுந் தேவன்
இட்டமுட னெனையாளுஞ் சிதம்பரே சுரனாம்
 எனதுகுரு கமலபதஞ் சிரசின்முடி யணிவாம். (1)

ஆ. முடிவு

அறியுமுத லன்னைபிதா குருவும் வாழி
 ஆனதெய்வ வாலயமுந் தேவர் வாழி
நிறமையுட னறனுணர்ந்தோ ரடியார் வாழி
 நீதிபஞ்சாக் கரம்வேதா கமமே வாழி
பொறுமையுள வரசர்களு நீதிகளும் வாழி
 பொய்யில்லாப் பத்தர்பத் தினிகள் வாழி
திறமுடைய பொன்மன்றின் நடனம் வாழி
 தேசமெலாஞ் செழித்துமிக வாழி வாழி. (50)

விவேக சாரம் மூலபாடம் முற்றிற்று.

2924. இராமதேவர் கருக்கடை சூத்திரம் 500

1. நூலகக் குறிப்புகள்

அ. 2227

ஆ. ல/472

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. இராமதேவர்

ஆ. இராமதேவர் கருக்கடை சூத்திரம் 500

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 431

3. தோற்றக்கூறுகள்

அ. 97 ஏடு; 194 பக்கம்

ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து. இடை யிடையே சில ஏடுகள் வேறொருவரால் எழுதப் பட்டுள்ளன

ஊ. 2_8க்குள் இருக்க வேண்டிய ஏடுகள் காணப்பட வில்லை. சுமாரான நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்க: தொடர் எண் 2130

ஆ. முடிவு

தியானமாஞ் சுடலையிலே ஆடு மாய்கை
செப்பாதே இருந்தபே ரோடு வார்கள்
மயானமாஞ் சாம்பலிலே கம்ப மூட்டி
மாட்டிடவே நல்குமங் கென் று ஊண

அயானமா மடங்கிவிடுங் கூத்தா டாது
அப்பனே வருணசெலம் அழைக்கக் கேளு
தியானமாங் கபாலத்தில் செலத்தை வாங்கிச்
சிறப்பான முற்கருவாந் தயில மூட்டே (431)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2925. சட்டைமுனி ஞானக்குறம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2228

ஆ. ம/277

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சட்டைமுனி

ஆ. சட்டைமுனி ஞானக்குறம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 93

3. தோற்றக்கூறுகள்

அ. 11 ஏடு; 22 பக்கம்

ஆ. நீளம் 20.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூலமுத லாறுதலங் கணேசன் காப்பு
முதிர்ந்துநின்ற உண்மனையின் பாதங் காப்பு

காலமுத லகண்டபரி பூரணமே காப்பு
சதாநித்ய மம்பரமா னந்தங் காப்பு
கோலமுதல் பனிரெண்டுஜம் பத்தொன்றின் காப்பு
குறிப்பறிந்த ஆதியந்த சித்தர் காப்பு
ஞாலமுதல் திசைதீட்சை யருளிச் செய்த
நாதரெந்தன் கணநாதன் பாதங் காப்பு

ஆ. முடிவு
வித்தையத்த போதுநித்திய போதமோ சிங்கி
மெத்தவுத்த திதுமேலோ ருரைத்தது சிங்கா (91)

உருக்கியநெய் வெண்ணையுள் ளுறையாதொடி சிங்கி–அதில்
திருக்கென்று மில்லைதெளிந்த தெளிவடா சிங்கா. (92)

தெளிந்துசெக முழுதாமென நின்றதோ சிங்கி
தெளிந்துவிண்ணெங்குந் தேகியாய் நின்றது சிங்கா. (93)

சட்டைமுனியார் குறம் முற்றிற்று.

2926. ஞான நூல்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2229
ஆ. ப/268

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. ஞான நூல்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 55

3. தோற்றக்கூறுகள்
அ. 6 ஏடு; 12 பக்கம்
ஆ. நீளம் 16.5 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8, 9 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீராரும் ஆத்தாளின் சேவடியைக் கண்டதற்பின்
ஆராயும் வேதமெல்லா மருங்கள(வு) போலாச்சே (1)

வட்டெழுத்தி னுள்ளே மணிவிளக்கு நின்றெரிய
துட்டநவக் கிரகமெல்லாஞ் சொல்லாமற் போனதுவே (2)

ஆ. முடிவு

உருத்தரித்த எழுத்துடனே உச்சரித்த எட்டெழுத்தும்
கருத்தில் நினைக் கரியருனைக் கண்ணாரக்
கண்டோர்கள் (54)

மூட்டுகின்ற மூலமதில் முளைத்தெழுந்த
எழுத்தையெல்லாம்
காட்டுகின்ற குறிப்பைநம்பார் கண்ணாரக்
கண்டோர்கள். (55)

ஞான நூல் முற்றும்.

2927. அகத்தியர் வாகடம் 1500

1. நூலகக் குறிப்புகள்

அ. 2230
ஆ. ல/473

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் வாகடம் 1500
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 1442

3. தோற்றக்கூறுகள்
அ. 266 ஏடு; 532 பக்கம்
ஆ. நீளம் 34.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. முதல் 1442 பாடல்களே தொடர்ச்சியாக எழுதப்பட்டுள்ளன
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
ஆ. முடிவு
காண்க: தொடர் எண் 2163_2

2928. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்
அ. 2231
ஆ. ல/474

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்

3. தோற்றக்கூறுகள்

அ. 119 ஏடு; 238 பக்கம்

ஆ. நீளம் 23 செமீ., அகலம் 3.5 செமீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7,8 வரிகள்

உ. சுமாரான பெரிய கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சுக்குத் தயிலம்:

மாச்சுக்கைத் தோலைப் போக்கிக் கரணை கரணையாக நறுக்கிப் பலம் 80 நிறுத்துப் பானையில் போட்டு 8 மரக்கால் ஆற்று ஜலம்விட்டு அடுப்பேற்றித் தாமரை யக்கினியாக எரித்து 8இல் ஒரு பங்காக்கித் தையல் பாத்திரத்தில் வடித்து இக்கஷாயத்தில் இரண்டுபடி நல்லெண்ணெயும் இரண்டு படி பசுவின் பாலும் கூடவிட்டுச் சிற்றரத்தை, சுக்கு, மிளகு, திப்பிலி, கோரைக்கிழங்கு, மஞ்சட்டிவேர், கடுக்காய், நெல்லிக் காய், தான்றிக்காய், அகில்கட்டை, தண்ணீர்விட்டான் கிழங்கு, எருக்கின் வேர்ப்பட்டை, கடுகுரோகிணி, கோவிடம், கொடிவேலிவேர், தேவதாரிக் கட்டை, சந்தனக் கட்டை, ...

ஆ. முடிவு

கபாடலேகியம்:

ஓமம், கிராம்பு, சிறுநாகப்பூ, கருவாப்பட்டை. ஆதிவிடையம், சுக்கு, வால் மிளகு, கசகசா, சாதிக்காய், சாதிபத்திரி, எண்ணெய்ப் பொரிகாரம், குரோசாணி, ஓமம் வகைக்குப் பலம்4; அபின் விராகனிடை 1/4, கஞ்சா விராகனிடை 1/4, தேன் படி 1, கருப்புக் கட்டி பலம் 2, வருக்கப்பட்டை சாமான் இளவருப்பாய்

வருத்து இடித்து வஸ்திரகாயம் செய்து கஞ்சாவைப் பாலில் அவித்துச் சுத்திசெய்து இளவருப்பாய் வருத்து அம்மியில் வைத்து மேற்படி மருந்தில் சேர்த்துக் கருப்புக் கட்டி சேர்த்து லேகியப் பதத்தில் அரைத்து வைத்துக் கொள்ளவும்.

தீரும் வியாதி: கிராணி, வயிற்றளைச்சல், வயிற்றோட்டம், கொம்பன் பேதிக்கு முதல் கொடுக்கவும். மேற்படி பேதிக்குச் சாராயம் விட்டரைக்கவும்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2929. ஞானானந்த தீபம்

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2232
   ஆ. டி/269

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. ....
   ஆ. ஞானானந்த தீபம்
   இ. தத்துவம்
   ஈ. செய்யுள் 36

3. தோற்றக்கூறுகள்
   அ. 12 ஏடு; 24 பக்கம்
   ஆ. நீளம் 32 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
   உ. தெளிவான பெரிய கையெழுத்து
   ஊ. சிறிதே செல்லரித்துள்ளது
   எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருவுறுங் கனக மன்றிற் திருநட மிடுந்தே வீன்ற
கருநிற முகிற்றோய் மேலைக் கனசிக ரிக்கண் வாழும்
அருளுறுங் கற்பகத்தி னடியிணை அகத்துள் வைப்பாம்
மருளுறுஞ் சனன நோயாய் மருவிய பகைமாய் தற்கே (1)

ஆ. முடிவு

அருள்வெள்ளந் ததும்பியுமை யொடுநடஞ்செய் யரசே
அருணகிரி யெனுநாமந் தரித்தெழுமென் குரவன்
சுருதிகளின் சித்த. . மா மேதுசொரு பஞ்சூழ்
காரியம தவதியே பலமிவையை எடுத்துப்
பரிவினோடு பனுவலாய்ச் செய்ததுவு மன்றிப்
பாவாக வென்னுளிருந் தருளுமதி சயத்தை
உரைசெயவோர் விதத்தினுமொவ் வாதவன்றா
ளிணைப்போ
தோய்வறவே நீடூழி வாழிசகம் வாழி . (31)

ஞானானந்த தீபம் முற்றிற்று. ஆகப் பாயிரமுட்படத் திருவிருத்தம் 36.

2930. அகத்தியர் சூத்திரம் 51

1. நூலகக் குறிப்புகள்

அ. 2233
ஆ. ல/475

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் சூத்திரம் 51
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 51

3. தோற்றக்கூறுகள்

அ. 16 ஏடு; 32 பக்கம்

ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியென்ற பூரண நூ லிருநூற்றிற் சொச்சம்
அடக்கிவிட வேணுமென்று ஆயி பாதம்
போதியென்ற மனத்தேற்றி ஆண்டு தோ(றும்)
பூசித்தேன் அவளும்வந்து அறிக்கை யிட்டாள்
கோதியென்ற மதியாளுங் கருப்பறிவா யென்று
சொன்னாளா . . . மயனுங் காணேன்
வாதியென்ற புலத்தியனே கருவைப் பார்த்து
வாயடங்கி நாலெழுத்து மதியிற் காணே (1)

ஆ. முடிவு

ஒன்றான குருமுடிந்த மார்க்க மெல்லாம்
ஓலையிலே எழுதிவைத்தேன் கருவைப் பார்த்தால்
அன்றான குருமுடிந்த வார்த்தை யெல்லாம்
அடையோலை கிட்டியது சொச்சம் பாரு
வண்டான தும்பியதன் ரசனை யுண்டு
வாங்குமப்பா ஓலையிலே யிய்யே ஆகும்
சென்றான ஓசையிலே நாலெழுத்து வாசி
சிறப்பான யீயெழுத்து அஞ்சு முற்றே. (51)

சோடசம் ஐம்பத்தொன்று எழுதி நிறைந்தது முற்றும்.

2931. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்
அ. 2234
ஆ. ல/476

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. நோய்க்கு மருந்து
இ. மருத்துவம்
ஈ. உரைநடை/ அச்சில் ஏறத்தாழ 125 பக்கம் வரும்

3. தோற்றக்கூறுகள்
அ. 78 ஏடு; 156 பக்கம்
ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வாந்தி, கிறுகிறுப்பு, விக்கலுக்கு மருந்து:
பருத்தி விரைப் பருப்பு, நெல்பொறி, விளாவிலை, வில்லைவிரை, திரிகடுகு, ஏலம், சீரகம், வேப்பம்பூ, இந்துப்பு இவைகளை வெதுப்பிப் பொடிசெய்து மாதுளம்பழச் சாறும் தேனும் விட்டுக் குழப்பி மேற்படி பொடியைப் போட்டு குழப்பிக் கொள்ள, சகல வாந்தி, கிறுகிறுப்பு, விக்கல் தீரும்.

ஆ. முடிவு

வசியம்:
பெண்வசியம், லோகவசியம், செக வசியம், தெய்வ வசியம், மிருக வசியம், சகலத்துக்கும் பலிக்கும். வாழாத பெண்ணுக்கு இந்திரியஞ் சேர்த்து மேற்படி விபூதியில் கலந்து கொடுக்க வாழ்வுண்டாகும். இந்தப்படிக்குச் சத்தியம். இந்த விபூதி ஞானியர் செய்யவேண்டிய முறை. மற்றவர்கள் செய்யக்கூடாது.

5. **பிற செய்திகள்**
இதில் இடையிடையே மாந்திரீகச் செய்திகளும் உள்ளன.

2932. பரமானந்தர் ஞானம்

1. **நூலகக் குறிப்புகள்**
அ. 2235
ஆ. ட/270

2. **உள்ளீடு: நூல் விவரம்**
அ. பரமானந்தர்
ஆ. பரமானந்தர் ஞானம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 51

3. **தோற்றக்கூறுகள்**
அ. 15 ஏடு; 30 பக்கம்
ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. சற்றே சிதைவுற்ற நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அத்தனா ரருளின் பாதம் அரியயன் தந்தாள் பாதம்
சுத்தனார் பெரியோர் பாதம் கரிமுகன் குருவின் பாதம்
சுத்தனார் துரிய பாதஞ் சுப்பிர மணியர் பாதம்
பித்தனார் விதியின் பாதம் பிரணவங் காப்புத் தானே (1)

ஆ. முடிவு

பாரப்பா மனோன்மணியை நாவில் வைத்துப்
பாடினேன் ஞானாந்த மைம்பத் தொன்றும்
காரப்பா கணபதியான் .... வாக்கால்
களியெடுத்துக் கோர்த்ததுபோல் நூலில் சொன்னேன்
பாரப்பா சித்தர்களே யுமது பாதம்
பரமானந் தம்பாட விதுபணிந்தென் றாலுங்
காரப்பா நீடூழி காலம் வாழக்
கடாட்சமுற்ற மனோன்மணியே காத்து முற்றே. (51)

பரமானந்தர் ஞானம் முற்றும்.

2933. திருவாலவாய்க் கட்டளை

1. நூலகக் குறிப்புகள்

அ. 2236
ஆ. ப/271

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. திருவாலவாயக் கட்டளை

இ. தத்துவம்

ஈ. உரைநடை/அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்

3. தோற்றக்கூறுகள்

அ. 23 ஏடு; 46 பக்கம்

ஆ. நீளம் 22 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரிகள்

உ. அழகிய கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சித்தியுந் தந்து சிவஞான முந்தந்தென் சிந்தையுள்ளே
பத்தியுந் தந்து பரகதி யுந்தந்து பல்கலைநூல்
வித்தையுந் தந்து விவேகமுந் தந்திந்த மேதினியிற்
புத்தியுந் தந்தெப் பொழுதிலுங் காக்கப் பொறியுனக்கே.

ஆ. முடிவு

ஆனந்த மேலீட்டிலே யழுந்தி நிற்பதே நேயத் தழுந்தல். இந்த நிட்டை கூடுதற் கரிதாகில் அருளிலே யுறைத்து நிற்பது; அதுவுங் கூடுதற் கரிதாகில் பூத முதல் நாத மளவாகப் பொய்யென்று கண்டு நீங்கித் தன்னையுங் கண்டு நீங்கித் தானும் அருளும் நிற்கிற முறைமையை யறிந்து அருளே நாவாக முத்திபஞ்சாக்கரத்தைச் செவியாமற் செவிப்பது; அதுவுங் கூடுதற்கரிதாகில் ஞான நூலோதலாதி சிந்தித்து அந்தரியாகம் பண்ணவும். இப்படிச் செய்ய உண்மை வந்து கூடும். இந்தப்படி நேயத்தழுந்த.....

(இதற்கு மேல் ஏடுகள் இல்லை)

2934. நெஞ்சறி விளக்கம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2237
ஆ. ள/109

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. கணபதி தாசர்
ஆ. நெஞ்சறி விளக்கம்
இ. நீதி நூல்
ஈ. செய்யுள்: 93

3. தோற்றக் கூறுகள்
அ. 19 ஏடு; 38 பக்கம்
ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7, 8 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வஞ்சக மனத்தின் ஆசை மாற்றிய பெரியோர் தாளில்
கஞ்சமா மலர்விட்டு ஏத்தும் கணபதி தாசன் அன்பால்
நெஞ்சறி விளக்க ஞான நீதிநூல் நூறும் பாடக்
குஞ்சர முகத்து மூலக் குருபரன் காப்ப தாமே.

ஆ. முடிவு

எத்தனை புத்தி சொல்லி யெடுத்தெடுத் துரைத்தும் நீதான்
பித்தனைப் போல ஓடிப் பிறவீசர் கரத்தின் வீழ்ந்தாய்
முத்தமிழ் நாக நாதர் முண்டக மலர்த்தாள் போற்றின்
சுத்தமுன் னுடலில் தோன்றுந் துரியத்தைப் பார்ப்பாய்
நெஞ்சே) (93)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை).

2935. அகத்தியர் வைத்தியம் 50

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2238_1
   ஆ. ஸ/477

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. அகத்தியர்
   ஆ. அகத்தியர் வைத்தியம் 50
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 50

3. தோற்றக்கூறுகள்
   அ. 8 ஏடு; 16 பக்கம்
   ஆ. நீளம் 20 செ.மீ., அகலம் 4 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 11, 12, 13 வரிகள்
   உ. கிறுக்கலான கையெழுத்து
   ஊ. ஓரங்கள் சிதைவுற்ற நிலை
   எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
ஆ.முடிவு
காண்க: தொடர் எண் 2167_2

2936. அகத்தியர் குழம்பு

1. நூலகக் குறிப்புகள்
அ. 2238_2
ஆ. ல/477

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் குழம்பு
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 23

3. தோற்றக்கூறுகள்
அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 20 செ.மீ., அகலம் 4 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 12, 13 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
பருவதந் தன்னில் வாழும் பரமனார் அருளி னாலே
பெருமையாய் உலகில் வாழும் புண்ணிய சனங்க ளுக்கு

வரும்பிணி வியாதிக் கெல்லாம் உண்மையாய்த் தீர
வென்றே
பிரபல முனிவர் நாமும் பேசிய மருந்து கேளே. (1)

ஆ. முடிவு

கேளாய் இந்த வகைக்கெல்லாம்
கிளியே பேதி மிகவுண்டாம்
பாளே மயங்காய் வசம்புதட்டி
பாங்காய்க் கிசாயம் வைத்ததனிற்
சூளாய் வெண்ணெய் பாக்களவு
சுருக்காய்ப் போட்டுக் குடிப்பீரால்
மீளே பேதி யுள்ளதெல்லாம்
மின்னே சொன்னேன் தீரும்மே. (23)

நாயன் துணை.

2937. ஈஸ்வரர் குழம்பு

1. நூலகக் குறிப்புகள்

அ. 2238_3
ஆ. ல/477

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. ஈஸ்வரர் குழம்பு
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்: அச்சில் ஏறத்தாழ 8 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்
ஆ. நீளம் 20 செ.மீ., அகலம் 4 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 13 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
சருவேஸ் வரனார் சகலமும் படைத்த
அருமறை முனிவரும் யாவரும் பிழைக்கக்
குருபரன் சீடர்க்குக் குழம்புசூ ரணத்தைத்
திருவரு ளிரண்டும் சேவித்த பேர்க்கு
இருவினை நானூற் றெண்பதும் தீரச்

ஆ. முடிவு
செய்யான் கொடிய எலிக்கடிகள்
சுருகன் அலவன் வண்டுகடி
செய்யான் பூரான் சிறுபாம்பு
....
அய்யா பிற(வாம்) விஷக்கடிகள்
அறுபத்து நாலும் ....
மெய்யாய் நாலா யிரநானூற்று
நாற்பத் தெட்டு வியாதியும் தீருமே.

வாலையானந்த சுவாமிகளுடைய பாதாரவிந்தமே துணை.

(பாடல் வடிவம் திருத்தமாக இல்லை).

2938. அகத்தியர் வைத்திய சூத்திரம் 86

1. நூலகக் குறிப்புகள்
அ. 2238_4
ஆ. ல/477

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் வைத்திய சூத்திரம் 86
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 66

3. தோற்றக் கூறுகள்
அ. 11 ஏடு; 22 பக்கம்
ஆ. நீளம் 20 செ.மீ., அகலம் 4 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 12 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. முதல் 4 ஏடுகள் இல்லை. உள்ளவை நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
வருப்பதற்கு மேல்பொடியைக் கேளு கேளு
வளயலுப்புப் பொடியதைத்தான் மஞ்சள் தானும்
நிறுத்தபொடி பலமதைத்தான் உப்பில் சேர்த்து
நினைவாகச் சிறுகத்தாள் போட்டுப் போட்டு
ஒருக்காமல் வருத்திடுவாய் பொடிதீய்ந் தாக்கால்
உத்தசெந்நா யுருவிசமூ லங்கண் டித்து
முருக்கமுடன் சிறுகவிட்டுச் சிவக்கு மட்டும்
முசியாமல் வருத்திடச்செந் தூர மாச்சே. (21

ஆ. முடிவு
வாங்கியொரு துளியனுபா னத்தி லுண்ண
வலியகனக் குன்மமெட்டு மாண்டு போகும்
தாங்கொணா வகைவைகெண்டை கவுசி பாண்டு
சாற்றரிய பெருவயறு பிறநீர்க் கோவை

ஓங்குமகோ தரங்குளிசை யுதிர வாய்வு
ஓடுமிது தப்பதென் றுல(க)த் தோர்க்குத்
தேங்குபுகழ் பொதியமென்னுங் குவட்டில் மேவுஞ்
செந்தமிழ்மா முனியுரைத்தார் தெளிந்து செய்யே. (86)

அகத்தியர் வைத்திய சூத்திரம் எண்பத்தாறு முற்றும்.

2939. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்

அ. 2238_5
ஆ. ல/477

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 51 ஏடு; 102 பக்கம்
ஆ. நீளம் 20 செ.மீ., அகலம் 4 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 11, 12 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் ஏராளம்
ஊ. பல ஏடுகள் சிதைந்துள்ளன. இடையிடையே வெற்றிடம் விடப்பட்டுள்ளது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சூதக வாய்வுக்குத் தேங்காய் நெய்:
தேவர்கடமைத் துதித்திட முதலிலுடைப்பதைத் துருவி இருபது பாகமாய்ச் சீறாகப் பாலெடுத்து இருகழஞ்சு அதில் சேர்க்கும் அகுதாவதென்னில் பாவலர் மகிழந்துரை மண்ணும் விண்ணும் பூரம் பகர் மனோசிலை சத்தியும் பார்த்தவர் பதுங்கியும் திருடியும் சீரமும் அப்பால் கானகப் பாலுமே தூவி....

ஆ. முடிவு

லிங்கம், மாசம், தாளகம், மனோசிலை, கெந்தி வகைக்கு 1 வராகனெடை; வீரம், நற்கற்பூரம் வகைக்கு 1/4 வி; பொடித்து உடன் காயவைத்து அதில் உள்ளங்கையகலம் மேனிச்சார் பிழிந்து கருகினதின் பேரில் மேற்படி இலையில் தேய்த்துச் சுரண்டிவிட்டு இன்னும் மேனிச்சார் விட்டுத் தடவிக் கருகினதின் பேரில் மேற்படி இலையில் தேய்த்துத் துடைத்துவிட்டு மேற்படி சார் தேய்த்த அளவில் பொடியை வைத்துக் கொட்டுக்கூடையால் சுழற்றி மூடிமருந்து இளகி வருகிற பருவங்கண்டு அகலங்கொண்ட இரண்டு கத்தியால் இளக இளக ஒண்ணு சேர்த்து நெடுமாத்திரையுரு வரும்படி எடுத்துகொண்டு அனுபானங்களில் சன்னி சுரங்களுக்குக் கொடுக்கவும். நீள சீசாவில் மணலெரிப்பிலும் வைக்கலாம்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை).

5. பிற செய்திகள்

இடையிடையே மாந்திரீகச் செய்திகள் சிலவும் உள.

2940. யமன் தோத்திரப் பத்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 2239

ஆ. த/52

2. உள்ளீடு நூல் விவரம்

அ. ......

ஆ. யமன் தோத்திரப் பத்து

இ. பிறதோத்திரங்கள்

ஈ. செய்யுள் ; 11

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்

ஆ. நீளம் 20.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. அழகிய கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உலகினிற் கருவாரி திக்கொடிய அழல்தாவி
உள்வருதீ யினில்மூழ்கியே
உருவாகி இருவினைக் குளராகி யேகாசி
னியில்மேவி யேஉதித்துப்
பலபூஷ ணமுமிகவ ணிந்துநட மாடியே
பகரரிய மழலைபேசிப்
பருவமத ரூபவடி வாகியே கருவிதப
ராக்ரமத ரூபனாகிக்
கலவிமட வார்கள்தரு மயல்கபட நாடகக்
கடல்முழ்கி யேயுழன்று

கருணைபெறு மடியரடி பரவுநெறி யறிகிலேன்
காத்தருள்வ தெந்தவிதமோ
இலகுபல உயிர்களுக் குயிராய்நி றைந்துவளர்
எந்தையே அந்தகா!வா
இணையிலா மேதிக்க டாவேறி யெனையாளும்
ஈசனே எமராசனே. (I)

ஆ. முடிவு
எறும்புகடை யானைமுத லெண்பத்து நான்குநூ
றாயிரமி சைந்தபேதம்
ஏழுரா சர்சேர்ந்து நிறைவாய் விளங்கிவளர்
எமதர்ம ராசன்மீதில்
திறம்பொருள் பரந்திலகு செந்தமிழ்ப் பாவினால்
செய்தோத்தி ரப்பத்தையும்
சிந்தையிற் றினந்தினம் நினைந்துமன தன்பினாற்
செப்புமடி யார்களெவரும்
பெறும்புக ழுடன்சகல பாக்கியமும் மனவியொடு
புத்திரரு மித்ராதியும்
பெற்றுவிர தாதியொடு குறைவின்றி நாளுமே
பிரபலம தாகிவாழ்வர்;
உறும்பிணி தொடாஊழின் மரணாந்த காலவதை
யொன்றுமணு காது;மேலும்
உலகிலுரு வாகிவரு மாகில்அறி வாகிநிலை
உணர்ஞான வீடடைவரே. (II)

2941. அவத்தை லட்சணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2240
ஆ. ப/273

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. அவத்தை லட்சணம்

இ. தத்துவம்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 5 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்
ஆ. நீளம் 20.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
உ. அழகிய பெரிய கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அவத்தா உலகாச கிரந்த உரை:
அவத்தை லட்சணம் வசிட்டரிஷி ராமசுவாமிக்கு உபதேசிக்கும் கிரமம்: வாரும், ரெகுராமரே இந்தத் தூலதேகம், சூட்சும தேகம், காரண தேகங்கள் மூன்றும்அநித்தியமென்றுந் துக்க யேதுவென்றுஞ் சடமென்றுங் கண்டாலிந்திர சாலமாயிருக்கிறசகல செகத்தும் பாவமாய்ப் போம்; இது மித்தை யென்றும் தான் சச்சிதானந்தமாயிருக்கிற சாட்டி சைதன்னியமே நித்தியமென்றும் எல்லாத்திலும் பிரகாசமென்றுங் கண்டால் ரெகுநாதா! ஆத்தும ஞானிகள் சாக்கிரத்திலே சாக்கிரமென்று சொல்லுவார்கள். இது தொம்பதார்த்த தரிசனம். (1)

ஆ. முடிவு

இந்த அவத்தா உலகாச கிரந்தத்தை அப்பியாசம் பண்ணினவன் சகல ஆவரணமும் நீங்கிச் சுபானுபவ மோட்சத்தையடைவன். காணப்படுகிற பிரபஞ்சவிகல்பம்

இதுக்கு அதிட்டானமாய் இருக்கிற பிரம நிருவிகர்ப்பம் நானே பிரமமென்கிற வாக்கிய நித்தியத்தினாலே இந்தப் பிரமமே நானென்று சொல்லுகிறதுஞ் சொல்லப் படுகிறதும். குருவே தெய்வம்.

2942. அகத்தியர் 205

1. நூலகக் குறிப்புகள்

அ. 2241

ஆ. ல/478

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் 205

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 204

3. தோற்றக் கூறுகள்

அ. 37 ஏடு; 74 பக்கம்

ஆ. நீளம் 26 செ.மீ., அகலம் 4.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. மிகச் சிதைவுற்ற நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆ. முடிவு

காண்க: தொடர் எண் 2167_4.

2943. சமரசனுக்கு உபதேசம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2242_1
ஆ. ட/273

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. . . . .
ஆ. சமரசனுக்கு உபதேசம்
இ. தத்துவம்
ஈ. உரைநடை: அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 18 ஏடு; 36 பக்கம்
ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
சமரசனுக்கு வேதாகம சமரச சித்தாந்தம் அனுக்கிரகிக்கும்படி எப்படியென்றால், படியொழுங்கு சமாதி 25ம், அறிவித்துச் சித்த நிரோதனமாகும் பொருட்டு 13 விதமுண்டு. அதேதென்னில், 25படி சமாதி தெரிசனம் 1, அதற்குச் சமாதி நாமம் 1, மறைப்பு 1, நிவர்த்தி 1, குற்றம் 1, இருவகைத் திரிபுடி 2, இதையறியுஞ் சத்தி 1, இருபத்துநாலு சமாதி சாதனா பேதம் 1, சத்தி பேதம் 1, சமாதி தெரிசனத்திடையில் சரீரம் விழுந்தாற் பலன் 1, சமாதி சித்த பேதம் 2, ஆக 13.

ஆ. முடிவு
ஒரு வேளையிற் பழுதையென்றறிந்தவுடனே பாம்பில்லாத தாய்ப் போய்ப் பழுதை மாத்திரமா யிருந்தாப்போல் இந்த இருபத்தைந்து மோனாதீதமான தன்னையறிந்தவுடனே இதுகள் பொய்யாய்த்தானே தானாயிருக்கவுங் கூடும்.

இந்த ஐந்தனுபவமும் விதேக கைவல்லியபரியந்தம் தோன்றுமென்றறிக. இதே முத்தியும் நிலையுமென்றறிக.

5. பிற செய்திகள்
இறுதியில் குருதோத்திரப் பாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

2944. ஒருமொழிக்கருத்தம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2242_2
ஆ. டி/273

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. ஒருமொழிக்கருத்தம் சம்பிரதாயக்கொத்துமணி
இ. தத்துவம்
ஈ. உரைநடை- அச்சில் ஏறத்தாழ 12 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 11 ஏடு; 22 பக்கம்
ஆ. நீளம் 23 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
ஒருமொழி ஐந்து பேதமாயிருக்கும்; அதேதென்றால் வைதீகம், சைவஞ், சத்தி, வைஷ்ணவஞ், சாங்கியம் ஆக 5.

வைதீகத்துக்கு வாக்கியம்: அது, நீ, ஆனால் ஆக 3.

சைவத்துக்கு வாக்கியம்: பிரகிருதி, புருஷன், பரமாத்மா ஆக 3.

சத்திசம்பிரதாயத்துக்கு வாக்கியம்: அபின்னம், பின்னம், அவித்தை ஆக 3.

வைஷ்ணவத்துக்கு வாக்கியம்: சாதாரணம், சமானம், சமூகம் ஆக 3.

சாங்கியத்துக்கு வாக்கியம்: பிரகிருதி, புருஷன், விவேகம் ஆக 3.

ஆ. முடிவு
அதுவதுவாய் நின்ற வநுபவங்க ளையைந்
ததுவதுவாய் நின்றங் கறிவித் ததுவிதுவுந்
தானல்லால் வேறில்லை யென்றான் தனிநின்றால்
தானறிவா னந்தனருள் தான்.

5. பிற செய்திகள்

இதனையடுத்து இருபத்தைந்து படியொழுங்குக்குஞ் சம்பந்தஞ் சொல்லப்பட்டிருக்கிறது.

2945. பாரத அம்மானை

1. நூலகக் குறிப்புகள்
அ. 2243
ஆ. ர/93

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. பாரத அம்மானை
இ. நாட்டுப்புற இலக்கியம்
ஈ. செய்யுள் அச்சில் ஏறத்தாழ 125 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 127 ஏடு; 254 பக்கம்
ஆ. நீளம் 43 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்திகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. மிகவும் பழுதுற்ற நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
நாழு முகுர்த்தம் நல்முகுர்த்த வேளையிலே
வாழுமர சாணியது மாணிக்கத் தூணாட்டி
அன்னசுற்ற மெல்லாம் அலங்கார மாய்க்கூடித்
தென்னவர்கள் மன்னர் தேசத்து மாமகுடர்
திக்கிலுள்ள கோத்திரமும் சிறப்பாகத் தான்கூடி
முக்கியமாய்க் கலியாணம் முகிப்பிக்க வந்தனராம்;

ஆ. முடிவு
தாமும்பின் தம்பியருந் தையலையுந் தான்பி(ன்னே)
கானகத்தி னூடே கடுகி வருகையி(னால்)
வானகத்துச் சிங்கம் மலைவளைஞ்சிக் குள்ளிருந்(து)
வந்து பதுங்கி வருவாரைத் தான்பார்த்(து)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2946. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2244
   ஆ. ல/479

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. . . . .
   ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள்; 721

3. தோற்றக் கூறுகள்
   அ. 114 ஏடு; 228 பக்கம்
   ஆ. நீளம் 32.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. மிகவும் பழுதடைந்த நிலை. 1-5, 8-16, 118-122 ஆகிய ஏடுகள் இல்லை
   எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
வீரமென்ற நடுவான அகாரஞ் சொன்னேன்
        விசையான முடிமூலஞ் சொல்லக் கேளு
தாரமென்ற மவுனமா கார சூட்சம்
        தயவான மவுனமடா ஆதி யாதி
பாரமென்ற சமாதியென்று மிதற்குப் பேரு
        பரமான சத்தமென்று மிதற்குப் பேரு
காரமென்ற வெடியுப்பே என்றும் பேரு
        கமலமென்றுஞ் சிப்பிஎன்று மிதற்குப் பேரே. (29)

ஆ. முடிவு
கட்டிநின்ற பாசாணந் தன்னை வாங்கிக்
        கணக்காக அதுக்குரெட்டி முப்புச் சேர்த்துத்
திட்டமுடன் துக்கிடைதான் ரசத்தை வார்த்துத்
        திருவான அமுரியினா லாட்டிக் கொண்டு
நெட்டடங்க அரைத்ததனை விழித்து ருட்டி
        நேர்மையுட னாவிதனில் காய வைத்துச்
சட்டமுடன் காயாத வில்லை யோடு
        சேர்த்துவமாய்ச் சீலைசெய்து வைத்துக்
                கொள்ளே. (748)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2947. குருநாடி சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2245
ஆ. வ/480

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. குருநாடி சாத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் '99

3. தோற்றக் கூறுகள்

அ. 32 ஏடு; 64 பக்கம்
ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. மிகவும் பழுதடைந்த நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
காண்க: தொடர் எண். 2075_1

ஆ. முடிவு
சுக்கிலத்தைத் தானெரிக்குங் கிருமி சென்று
துமக்கையுடன் பரபரத்துச் சொரிந்தே வூறும்
சிக்கிமலஞ் செறித்துவிழுங் கிருமி யாலே
சீரான மூலமெல்லாம் மழுக்கிப் போகும்
தொக்குகின்ற விஷநரம்பு வீணாந் தண்டு
சூழ்ந்திருக்குங் கிருமிசென்று துள்ளித் துள்ளி
எக்கிநின்ற தாதுகெட்டுச் சூடாம் பின்னை
இணங்கிநின்ற பிரமேக மெழும்புந் தானே. (99)
குருநாடி சாத்திரம் எழுதி நிறைந்தன.

இ. பிற்குறிப்பு
இந்தக் குருநாடி சாத்திரம் மேல்ப்பிரதி எழுதினபேர் எள்ளவும் வாசிப்பில்லாத பேரானதால் அவ்வளவும் சுத்த

அபத்தமாகி எழுதி இருந்ததைச் சாஸ்த்திரப் பிரதியினாலே எழுத வேண்டியதாய் மனதிலுதித்து மேல்ப்பிரதியில் எழுதி இருந்தபடிக்கு எழுதி வைத்திருப்பதாய்ப் பெரியோர்கள் கோபஞ்செய்யாமல் சித்தத்தில் கொண்டருளிச் சொற்குற்றம் பொருள் குற்றம் அட்சரவித்தியாசங் களிருப்பதை இன்னபடியென்று என்போலொத்த பேதைகளுக்கு அறிவுண்டாகும்படிக் கொடுத்து ரெட்சித்துக் காப்பாற்ற வேண்டுவது.

2948. தட்சிணாமூர்த்தி வைத்தியம் 50

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2246
   ஆ. வ/481

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. தட்சிணாமூர்த்தி
   ஆ. தட்சிணாமூர்த்தி வைத்தியம் 50
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 48

3. தோற்றக் கூறுகள்
   அ. 11 ஏடு; 22 பக்கம்
   ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. மிகவும் பழுதுற்ற நிலை
   எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
காண்க: தொடர் எண். 2180_3

ஆ. முடிவு
போமிது பொன்னாங் காணி புகல்சிறு கீரை முத்தம்
ஓமிதில் சீந்தில் நிஷ்பம் உயருஞ்செண் பகப்பூ வங்க
மாமிது மதுர மெல்லாந் வளருஞ்செங் கழுநீர் கோஷ்டம்
நாமிது சொன்னோ மெண்ணெய் நற்பதஞ் செய்துசூ
மூழ்கே. (48)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

5. பிற செய்திகள்

இந்நூற்பெயர் அகத்தியர் வாதத்திரட்டு எனவும் சில சுவடிகளில் காணப்படுகிறது.

2949. யோகமுனி நாடிசாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2247
ஆ. ல/482

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. யோகமுனி
ஆ. யோகமுனி நாடிசாத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 47

3. தோற்றக் கூறுகள்
அ. 10 ஏடு; 20 பக்கம்
ஆ. நீளம் 15.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 6, 7, 8, 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. மிகவும் பழுதுற்ற நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
காண்க: தொடர் எண். 1955_1

ஆ. முடிவு
ஓங்கியே மருந்துடனே புகைய துந்தான்
உயர்ந்ததொரு மாத்திரையும் நசிய முந்தான்
ஏங்கியே வைத்தியந்தான் செய்தா யானால்
இயல்பாக வருசமது உடலில் நிற்கும்
பாங்கியரே இந்தமொழி தப்பா தென்று
பகர்ந்தங்கே யோகமுனி கூறி னாரே.

(இப்பாடல் 47ஆவது பாடலாக இருக்கவேண்டும். இதற்குமேல் எழுதப்படவில்லை)

5. பிற செய்திகள்
இந்நூற்பெயரை நாடி நிதானம் எனவும் ஒரு சுவடியில் எழுதப்பட்டுள்ளது.

2950. அகத்தியர் வசூரி சூத்திரம் 80

1. நூலகக்குறிப்புகள்
அ. 2248
ஆ. ல/483

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் வசூரி சூத்திரம் 80

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 82

3. தோற்றக்கூறுகள்

அ. 25 ஏடு; 50 பக்கம்

ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. மிகவும் பழுதுற்ற நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆ. முடிவு

காண்க: தொடர் எண் 2196_1

2951. மருத்துவச் செய்திகள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2249

ஆ. ல/484

உள்ளீடு:நூல் விவரம்

அ. ......

ஆ. மருத்துவச் செய்திகள்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள். அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்

3. தோற்றக்கூறுகள்

அ. 61 ஏடு; 122 பக்கம்
ஆ. நீளம் 15 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. மிகவும் பழுதுற்ற நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முழங்கால் பிடரி முடிமீது
    மூட்டும் பொருத்தும் வலிகண்டால்
முழங்கால் முகமுங் கையெரிக்கும்
    முறித்து டம்பை வேர்விக்கும்
வழங்கா துடம்பை வளையாது
    மலமுஞ் சலமு மாறிநிற்கும்
விளங்கா வாத சுரமென்று
    விடுநாள் நீதம் பதினொன்றே (2)

ஆ. முடிவு

பத்தியாய் வெளவுந்தா னொன்றாய்ச் சேர்த்துப்
    பண்புடனே யுள்கொடுத்துத் துவளை போட்டுத்
தித்தியாய் மூன்றுநாள் செய்த பின்பு
    திறமாகக் குடோரிசெய்து பழச்சார் தேய்த்து
வெத்தியாங் குளக்கரையில் வைத்துக் கொண்டு
    வேகமிரு நூறுகுடந் தண்ணீர் விட்டால்
சித்தியாய்த் தெளிந்துவிடும் பயித்யம் போகுந்
    திறமாக யிம்மருந்தைச் செய்து பாரே.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2952. மருத்துவச் செய்திகள்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2250_1
ஆ. ல/485

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. மருத்துவச் செய்திகள்
இ. மருத்துவம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 175 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 124 ஏடு; 248 பக்கம்
ஆ. பலவகை அளவுடையது
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்குப் பல பத்திகள்
உ. கிறுக்கலான கையெழுத்து
ஊ. மிகவும் பழுதுற்ற நிலை. வாரிப் பதப்படுத்தப்படாத ஏடுகள் பல உள்ளன
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
நெஞ்சிலே சிங்குவை தாக்கி நின்றுதான் சுரமே காயில்
வஞ்சியே மார்பில் குத்தும் வரைந்திடுங் குவளை யங்கே
இஞ்சியே இருகிப் பின்னை இளைப்பொடும் இருமல் கண்டால்
அஞ்சினில் ஏழி லங்கே அவத்தைவந் துற்ற வாறே.

ஆ. முடிவு

நாசியில் நிறுத்த நெய்:
ஆடுதீண்டாப் பாளையிலையை அரைத்துத் தகடாய்த் தட்டி அஞ்சு தகடு நெய்யிலிட்டு மெழுகு பதத்தில் வடித்து நாசியில் நிறுத்தவும்.

நாவில் ரேகத்துறா எண்ணெய்:
நல்லெண்ணெய் நாழி, மிளகு பலம் 4, ஆவின் நெய் படி 1/4, மஞ்சள் பலம் 2, குப்பைமேனி வேர் பலம் 2, அரைத்து எண்ணெயிலிட்டு மெழுகிலுரைச்ச பதத்தில் வடித்து முழுகவும்.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2953. பலதிரட்டு

1. நூலகக் குறிப்புகள்
அ. 2250_2
ஆ. ல/485

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ......
ஆ. பலதிரட்டு
இ. மருத்துவம்
ஈ. செய்யுள். அச்சில் ஏறத்தாழ 700 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்
அ. 435 ஏடு; 870 பக்கம்
ஆ. நீளம் 50 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்குப் பல வரிகள்
உ. பலவகையான கையெழுத்து
ஊ. மிகவும் பழுதுற்ற நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நண்ணிய புளியிலை பாண்டு நாசமாம்
புண்ணோடு வீக்கமும் புரையும் போக்குமே
கண்ணுறு பட்டையால் கரப்பன் குன்மம்போம்
மண்ணுள வேர்மலக் கடுப்பை மாற்றுமே

ஆ. முடிவு

வீரிய முண்டாம் விரைப்புட்டிண தாகம்போம்
கூரிய கண்ணோய் ..... விலி போகும்
நாரியர் சூதக வாய்வு நாசமாம்
ஆரியன் சொன்னார் அறிந்துகொள் ளீரே.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

5. பிற செய்திகள்

பல மருத்துவ நூல்களிலிருந்து பாடல்கள் திரட்டப் பட்டுள்ளன.

2954. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்

அ. 2251
ஆ. ல/486

2. உள்ளீடு: நூல்விவரம்

அ. ....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. உரைநடை. அச்சில் ஏறத்தாழ 350 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 250 ஏடு; 500 பக்கம்

ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

லோகபற்பம்:
நெல்லிப் பட்டையும் நெல்லியிலையும் இடித்துப் பிழிந்து மூன்றுநாள் அரப்பொடியை ஊறப்போட்டு மேற்படி அரப் பொடியை எடுத்து வெயிலில் பரத்தி உலரவிட்டுப் பால்விட்டு விரவி வெயிலில் காயவைத்து இந்தப்படி எட்டுநாள் வைக்கவும். ஒன்பதாம் நாள் ஓட்டிலே வைத்துச் சீலைமண் செய்து காடைப்புடமிடவும். பற்பமாய் வெளுக்கும்.

ஆ. முடிவு

வீரமாத்திரை சுரங்களுக்கு
இஞ்சிச் சாற்றில் கொடுக்கவும். சவ்வீரம் பலம் 1/2 மேனிச் சாற்றில் ஒருநாள் ஊறப்போட்டு மறுநாள் வில்லயிலைச் சாற்றில்

சாற்றில் 30 நாழிகை அரைக்கவும். சிறுபயறு அளவு உருட்டிக் கொள்ளவும். அனுபானத்தில் கொடுக்கவும். சுரம், வாய்வு, சூலை, சன்னி தீரும். பணகுடி கருமேனி வைத்தியர் முறை.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2955. மருத்துவ நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ.2252_1

ஆ. ல/487

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 69

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு; 32 பக்கம்

ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8, 9 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. நல்ல நிலை. முதல் 33 ஏடுகள் காணப்படவில்லை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நீரே நின்ற சிலேற்பனந்தான்

நெருங்கில் குளிருஞ் சுரங்காயும்

ஈரே யிரும லிளைப்புண்டாம்
ஏங்குந் தண்ணீர் தாகிக்கும்
மாரே நொந்து விலாப்பக்கம்
வலித்தே வயிறு மலங்கட்டி
நீரே திரண்ட நீருவை
நெருங்குஞ் சாலக் கோவையுமாம். (46)

ஆ. முடிவு
காணுங் கடுக்காய் ....
..... கொன்றை வேர்ப்பட்டை
வேணும் வெட்பால் பெருங்குமிளும்
விளங்குந் திப்பிலி முந்திரிகை
சேணு ...... பற்படகம்
சேர்ந்த ...... நாலொன்றாய்
ஊணுங் கற்கண் டங்கிட்டே (114)
உகந்து கொடுநீ யொண்ணுதலே.

குருவே துணை.

2956. சுர நிதானம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2252_2
ஆ. ல/487

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ......
ஆ. சுர நிதானம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 6

3. தோற்றக் கூறுகள்
அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. ஏட்டெண் 49 இல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
சுருதி நான்முகத் தோனருள் தோன்றலாம்
பொருவி லாத பொதியைப் பொருப்பினான்
உரிய ஆயுள் மறைதெரிந் தோதிய
சுரநி தானம தின்குணம் சொல்லுவாம்.

ஆ. முடிவு
என்றிடு பித்தந் தன்னில் இயலிரு பத்து நான்கில்
வென்றிய பித்த வெப்பு மேவிய சிலேற்ப னத்தில்
ஒன்றுமே யொன்ப துந்தான் சாத்தியம் உண்மை யென்று
வண்டலங் குழலிக் கீசன் வகுத்துரை செய்த வாறே.

2957. கடுக்காய் சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2252_3
ஆ. ல/487

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ......
ஆ. கடுக்காய் சாத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 3

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. ஏட்டெண் 52 இல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மருவிய பிணிக ளாலே மானிடர் மாளா வண்ணம்
கரியவ னமுதை யூட்டக் கையிடை தப்பிப் போந்து
பெருநிலம் தன்னில் வீழ்ந்தே எழுகடுக் காய்யென் றேபேர்
உருவளி மொழிநல் லாளே யுரைத்திட உற்றுக் கேளே.

ஆ. முடிவு

வாதம்போம் விசையணையும் எண்ணெயுட னருந்தில்
வருக்குங்கால் ரோகணிராச சன்னி தீரும்
பேசுங்கால் பிரதமையார் பிரமை போக்கும்
பேரமுதம் சிலேட்டுமத்தைப் பிரியப் பண்ணும்
ஓதுங்கால் சீவநதி மூலம் போக்கும்
உற்றகணம் புணர்ந்ததிரி விசையம் நாட்டும்
மிக்கவாதி யாருரைத்த உபையன் தானும்
அனேகதோ ஷங்களெலாம் அகற்றும் என்றே.

2958. மருந்து செய்முறை

1. நூலகக் கூறிப்புகள்
அ. 2252_4
ஆ. ல/487

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. .....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 75 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்
அ. 48 ஏடு; 96 பக்கம்
ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8, 9 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. ஏட்டெண் 53 இல் நூல் தொடங்குகிறது. 57 முதல் 62 வரையிலான ஏடுகள் இல்லை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நீரழிவுக்கு உருண்டை:

ஏலம் 11 பலம், இலவங்கம் 11 பலம், செங்கழுநீர்க் கொட்டம் 11 பலம், நல்ல சந்தனம் 11 பலம், செண்பக மொட்டு 11 பலம், அதிமதுரம் 11 பலம், சாத்திரவேதி 10 பலம், கடறாஞ்சிப் பட்டை 11 பலம், சாதிக்காய் 10 பலம், சாதிபத்திரி 11 பலம், அவின் 11 பலம், ஆவிரை விதை 11 பலம், ஆவரை அரும்பு 11 பலம், ஆவரை வேர்த்தோல் 11

பலம், அகத்தியிலைப் பொடி 4, அரசங்கொழுந்து பொடி 4, ஆலம்விழுது பொடி 4, பருத்திக் கொட்டை, அல்லிப்பொடி இருநாழி ஆகக் கூட்டிச் சரக்கெல்லாம் பசுவின் பால்விட்டரைத்து.........

ஆ. முடிவு

திரிசங்கை மறக்கவும்:

சாத்திரவேதி பலம் 4, சீனாக்காரம் பலம் 4, திப்பிலி பலம் 2, பச்சை மஞ்சள் பலம் 10, எலுமிச்சம் பழம் தண்ணீர் படி 2, சுண்ணாம்புக் கல்லு படி 2, வெற்றிலை 20, ஈரவெங்காயம் படி 4, கள்ளு படி 4, கெண்டை மீன் .. படி2 இதுக்கு சிறுகீரை கொடுப்பை, நீர்முள்ளி, புரசை வகை ஒன்றுக்கு படி 1 சாணாகப்பால் படி 2, இது சுத்தி பண்ணி பச்சை மஞ்சள் எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து வெற்றிலையை இடித்துச் சட்டிக்குள் வைத்து சட்டி மூடிச் சீலைமண் பூசி 10 நாழிகை எரித்து வெந்தான பிறகு எடுத்து கெண்டைவிரவியிரண்டு நேரமும் 6 கழஞ்சு பொடி கஞ்சியிலே போட்டுக் கொடுக்கவும். இதுக்குப் பத்தியம் உப்பு ஆகாது. இந்தப்படி 20 நாள் கொடுக்கவும்.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2959. பித்த எண்ணெய் அகவல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2252_5
ஆ. ல/487

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ......
ஆ. பித்த எண்ணெய் அகவல்

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் அச்சில் ஏறத்தாழ 5 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்
ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. ஏட்டெண் 107 நூல் இல் தொடங்குகிறது. 110-ஆம் ஏடு இல்லை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பித்தவெண்ணெய் தன்னைப் பெரும்பாரி லேயாரும்
வைக்கும் படிக்கு மருந்துகேள் - தக்கதோர்
ஆல்விழுது தாழை யதன்விழுது பற்படகம்
சீல மிகுகோவை சீந்தில்தண்டு - ஏலவே
ஓரிலைத் தாமரை யொண்டா மரைவளையம்
சீரியவி ராணி சிறுகீரை - கூரிய

ஆ. முடிவு

கண்ணொடு நீர்ப்பாய்ச்சல் காயம் கடுத்துளைவு
எண்ணிய நோய்களெல்லாம் ஏகுமே - திண்ணமே
சொன்னார் முனீந்திரர் சூழ்ந்த இருடிகட்கு
முன்னூ லினையிம் முறை.

5. பிற செய்திகள்

நூற்பெயர் அகவல் என இருப்பினும் இது கலிவெண்பா ஆகும்.

2960. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்

அ. 2252_6

ஆ. ல/487

2. உள்ளீடு:நூல் விவரம்

அ. .....

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும். அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 57 ஏடு; 114 பக்கம்

ஆ. நீளம் 21 செ.மீ., அகலம் 3 செ.மீ

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. நல்லநிலை. ஏட்டெண் 127 இல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

.... அனுபான

மானவட்டத் துத்திச்சாற் றஞ்சுருண்டை தேனேகேள்

மண்டலங்கொண் டாற்சரீர மானவும் தூலிக்கும்

தண்டா வரைச்சாற்றில் தான்விரும்பி மண்டலங்கள்

மூன்றுகொண்டால் பொன்னிறமாம் மொய்குழலே

மேனியெல்லாம்

(இது கோடாகடி குளிகை)

ஆ. முடிவு

வெள்ளைபடுகிறதுக்கு:
முருங்கை விரை 9 விரை எடுத்து நன்றாயரைத்து வெந்நீரில் கொடுக்கவும். இப்படி ஏழுநாள் கொடுக்கத் துவாலைபடும்.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2961. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்

அ. 2253
ஆ. ல/488

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. உரைநடை அச்சில் ஏறத்தாழ 250 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 133 ஏடு; 266 பக்கம்
ஆ. நீளம் 36 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. 64_71, 74_76, 90_93, 118_180, 183_207, 209, 223_226 ஆகிய ஏடுகள் இல்லை
எ. குறை

4.சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தாம்பிரம் 35 விராகனெடை, பொன்னரிதாரம் 35 விராகனெடை, கெந்தகம் 15 விராகனெடை, பச்சைநாவி 15விராகனெடை இவை பொடியாக்கி வைத்துக் கொண்டு தாம்பிரத்தை ஈசலிறகுபோலே தட்டி இந்தப் பொடியைக் கீழுமேலுமொரு குகையிலிட்டுக் குகையைச் சீலைமண் செய்து மறுபாத்திரத்தில் கவித்து அதில் உப்பு நிரம்பயிட்டு அதுக்குஞ் சீலைமண் செய்து பெரிய தாளிச்சட்டியிலிட்டுப் பருமணலாக நிரம்பக்கொட்டி அதுக்குமொரு சட்டி கொண்டு மூட்டிச் சீலைமண்செய்து அடுப்பில் வைத்து நாலுசாமம் கடுந்தீயாக எரித்து ஆறவிட்டெடுத்துக் கொள்ளவும்.

ஆ. முடிவு

குடல் வாதத்துக்கு

பெருங்குறிஞ்சா வேர் வெட்டி அரைத்து எருமைத் தயிரில் கொடுக்க நிற்கும். வேறு, புல்லாமணக்கு வேர், புத்தேரி கண்டைவேர், திப்பிலி, நீர்ச்சீரகம் சாணையிலுரைத்துத் தேங்காய்த் தண்ணீரில் கொடுக்க நிற்கும். வலியும், இளைப்பும் வாயுவும் தீரும்.

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2962. நாடி சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2254_1

ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. நாடி சூத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 60

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்

ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சிறிது பழுதடைந்த நிலை. ஏட்டெண் 15இல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மண்ணெனுஞ் சடத்தில் வானு மருவிய காற்றுந் தீயும்
தண்ணில மடைத்து மூலந் தனிலெழு சுழினைக் கப்பால்
எண்ணிரு கோடி தன்னில் எழுபத்தீ ராயி ரத்தில்
கண்ணெனு மூன்று பத்தும் கலந்திடும் நாடி தானே. (1)

ஆ. முடிவு

சோதி சதைய மாயிலியம்
துலங்குங் கேட்டை முப்பூரம்
தீது பரணி யாதிரைநாள்
செவ்வாய் சனிஞா யறுதன்னில்
ஓதில் நவமி துவாதேசி
உதையம் ஷஷ்டி பிரதமையும்
பேத முறுவர் பிணிகொண்டால்
பிரமா வரினும் பிழையாரே. (60)

முற்றும்.

2963. திசை நாடி சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2254_2

ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ......

ஆ. திசைநாடி சாத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 25

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்

ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சிறிது பழுதடைந்த நிலை. ஏட்டெண் 22 இல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இடையெனும் நாடி தானும் இசைந்திடும் வலது காலில்
அடவிடும் பெருவி ரல்லில் அமர்ந்துதான் பின்னி மாறி
விடவிடு வீணா தண்டின் மூலமே பற்றி நின்று
நடமிடும் பிரம தேவ னால்சதிர் நிறையுந் தானே. (1)

ஆ. முடிவு
(நித்தமே) இடையும் பற்றி நிகர..... கலையு மூல
பத்தியே பாக மாறிப் பயின்றகத் திரிக்கோல் போலச்
சுத்தியே சுழினை யோடே தொடர்ந்திரு புறத்தே சென்று
(முத்தியே) சிரசில் பொன்றும் முகமென நாசி முத்தும். (25)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2964. சென்ம நிதானம்

1. நூலகக் குறிப்புகள்
   அ. 2254_3
   ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்
   அ. ....
   ஆ. சென்ம நிதானம்
   இ. மருத்துவம்
   ஈ. செய்யுள் 22

3. தோற்றக் கூறுகள்
   அ. 2 ஏடு; 4 பக்கம்
   ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
   இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
   ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
   உ. தெளிவான கையெழுத்து
   ஊ. சிறிது பழுதடைந்த நிலை. ஏட்டெண் 24 இல் நூல் தொடங்குகிறது. 25ஆம் ஏடு இல்லை
   எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருவடி வான மாதர் செய்தவப் பயன்க ருப்ப
முருவடி வாகுஞ் செய்கை யுடம்பினில் வியாதி யின்றி
வருமிடி பசிநோ யின்றி வளர் புழு வாயு வின்றி
எரிகலை இயக்கம் இன்றி இருதுவாங் காலந் தன்னில் (1)

ஆ. முடிவு

பாதச்சுற் றொருப தாகும் பாதத்து ளடியில் பத்தாம்
மோதிய வியாதி மூவா யிரத்துநா னூற்றுநால்
பத்தெட்டும்
ஓதிய தொகையி ரண்டி லுரைக்கின்ற வியாதி யாவான்
தீதுநா லாயி ரத்து நானூற்று நாற்பத் தெட்டே (22)

சென்ம நிதானம் முற்றும்.

(இரண்டாம் அடியில் யாப்பமைதி சரியில்லை)

2965. வால்மீகர் பூதநாடி சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2254_4
ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. வால்மீகர்
ஆ. வால்மீகர் பூதநாடி சாத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்
அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
ஆ. முடிவு
காண்க: தொடர் எண் 2190_4

2966. உதர கிரிசை

1. நூலகக் குறிப்புகள்
அ. 2254_5
ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. உதர கிரிசை.
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்
அ. 16 ஏடு; 32 பக்கம்
ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. சிறிது பழுதடைந்தநிலை. ஏட்டெண் 29 இல் நூல் தொடங்குகிறது. 33-ஆம் ஏடு இல்லை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உற்றிடு முதரந் தன்னில் உற்றநூற் றெட்டு ரோகம்
பற்றிய குணங்கள் தன்னைப் பரமனா ரருளிச் செய்தார்
சொற்றமிழ் நூல தாகச் சுருதிநோய்க் குவகை கண்டால்
மற்றுமா மலையி லுள்ள மாமுனி யருளிச் செய்தார். (1)

ஆ. முடிவு

கண்ணொளி குறைந்து காணும் கனக்கவே வருத்தங் காணும்
பெண்ணிட மிந்த ரோகம் பெருக்கவே உண்டாய்க் காணும்
திண்ணிய ரத்தம் தன்னில் வாயுவே சேர்ந்தொன் றாகும்
நண்ணிய திரட்சி காணும் என்பது நவிலும் நூலே. (140)

2967. சுர நிதானம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2254_6
ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. சுர நிதானம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 18

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 38 செமீ., அகலம் 3.5 செமீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. மிகவும் பழுதடைந்த நிலை. ஏட்டெண் 46 இல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
ஆ. முடிவு
காண்க: தொடர் எண் 2252_2

5. பிற செய்திகள்

நூலை அடுத்து சுரத்தின் 64 வகைகளும் ஓர் அகவலில் பட்டியலிடப்பட்டுள்ளன.

2968. உடலறி விளக்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2254_7
ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ......
ஆ. உடலறி விளக்கம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 9

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு, 12 பக்கம்

ஆ. நீளம் 38 செமீ., அகலம் 3.5 செமீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சிறிது பழுதடைந்த நிலை. ஏட்டெண் 50 இல் நூல் தொடங்குகிறது. இதற்குமுன் ஓர் ஏடு இல்லை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வாதபித்த சிலேற்பன சுரத்தின் குணம்:

பேதையீர் வாத பித்த சிலேற்பன சுரத்தின் கூறு
வோதிய தீபம் போலே யுறுசுரங் குளிர்ச்சை வேர்வை
நீதியாந் தரிப்பு உளைவு நிசர்தலை வலித்துச் சோர்தல்
பேதியா மலச லங்கள் பெருகுமஞ் சளிக்கு மென்னே (11)

ஆ. முடிவு

சுரமாந்தை சுரம்:

இடைக்கிடை சுரமுந் தோன்றும் இடைவிடா கிருமி காட்டும்
அடிக்கடி அப்பு வாங்கும் அதனுளே யனலாய்க் காயும்
படிப்படி முறையே யாகிப் பழுத்துளே சீழுங் கட்டும்
கொடியிடை மயிலே கேளாய் குலைசெய்யும் சுரத்தின் மாந்தை. (58)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2969. சுர நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2254_8

ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ......

ஆ. சுர நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 9

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து

ஊ. சிறிது பழுதடைந்த நிலை. ஏட்டெண் 56 இல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திக்குமனுப் புகழுமறை சாத்தி ரங்கள்
சிறந்தசிதம் பரமேவும் ஞான தேகி
பக்கமிரு புறமுமா ணாக்கர் சூழப்
பன்னிரண்டு சமையத்துள் பல்லோர் கூடித்
தக்கமிடுங் கனகசபை யருளு டையான்
சங்கரா சாரியிரு தாள்ப ணிந்து
மிக்ககுரு பரனேஐம் பூத மென்று
விளம்புவதே னடியேற்கு விதிக்க வென்றான். (1)

ஆ. முடிவு

மூன்றான மலமூன்று குணமு மூன்று
முறையான ஏடணைமூன் றாதார மாறு
தான்றான தாது ....
.... அவத்தையைந்து மாகத் தானே
ஆன்றான தத்துவங்கள் தொண்ணூற் றாறும்
ஒத்துநிற்கு முடம்புக்குள் ளாகத் தானே
வீன்றான பூதமைந்தின் விவரந் தானே
விதவிதமாய்ச் சொல்லுகிறேன் விரைந்து தானே. (9)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2970. சன்னி நிதானம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2254_9
ஆ.ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. சன்னி நிதானம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 40

3. தோற்றக் கூறுகள்
அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 38 செமீ., அகலம் 3.5 செமீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. சிறிது பழுதடைந்த நிலை. ஏட்டெண் 38 இல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
செய்யமால் தங்கை பெற்ற செந்திலான் தனக்கு மூத்த
பையலின் பாதம் போற்றிப் பசுமுனி தமிழைத் தேர்ந்து
எய்யவே சன்னி செய்யும் இயல்குணம் சாத்தி யங்கள்
பய்யவே பரிகா ரங்கள் பாரினிற் பகர லுற்றாம். (1)

ஆ. முடிவு
செப்பினோம் ரெத்தமதில் பித்த மேவிச்
சேர்ந்துநின்ற வாயுவதால் ரெத்த திட்டி
யொப்பினால் வந்தசன்னி தீர்க்க வேண்டில்
உகந்தவயி ரவவாச முலைப்பால் கண்ணில்
வெப்பினா லிஞ்சியுட னசியஞ் செய்ய
விட்டுவிடும் ரெத்ததிட்டி சன்னி தோஷம்
நப்பினால் நாம்செய்த தவத்தால் தீரும்
நல்முனிவர் தமிழுரையால் நவின்றார் தாமே. (40)

சன்னி நிதானம் முற்றும்.

2971. வலியஞ்சின் குணம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2254_10
ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. .....
ஆ. வலியஞ்சின் குணம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 15

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8,9 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. சிறிது பழுதடைந்த நிலை. ஏட்டெண் 64 இல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அண்ணலுமை யீன்றெடுத்த அன்பார் (பாலன்)
அஞ்சுகரம் உடையானின் அருள்தாள் போற்றி
மண்ணுலகில் மாமுனிவர் வளமா யஞ்சு
வலிதனக்கும் வருகுணங்கள் சாத்தி யங்கள்
நண்ணுதலா யாராய்ந்து தேர்ந்து நன்றாய்
நானிலத்தில் மானிடர்க்கு நயந்து நல்கி
விண்ணுலகில் வலியானால் மேயா வண்ணம்
விளம்பினார் செந்தமிழின் விளங்கு நூலே. (1)

ஆ. முடிவு

கண்டாய் சிலேற்பன மோரைந்தும்
கருதும் வாத முள்கலந்து
குன்றா தக்கினி மந்தமுடன்
கூடிக் கலந்து முசல்வலியாம்;
விண்டார் கடிகை மூவேழில்
மீளும் மீளுந் தப்பாது
நின்றே சிலேற்பன மதிகமுற்றால்
நிற்குங் கடிகை யறுபதினில். (15)

இவை முற்றும்.

2972. வாத நிதானம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2254_11

ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. வாத நிதானம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 72

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்

ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8,9,10 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து; பிழைகளும் விடுபாடுகளும் மிகுதி

ஊ. சிறிது பழுதடைந்த நிலை. ஏட்டெண் 66 இல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஓதிய துவர்க ளான ஒருபண்டம் பொசிக்க லாலுங்
கோதறு ருட்ச மான பதார்த்தங்கள் கொள்கை யாலுந
தாதுக்கள் கெட்டு நாடி தளர்ந்ததில் வாயு சேர்ந்து
போததி லுபத்தி ரங்கள் பொருந்தியே வாத மாமே. (1)

ஆ. முடிவு

பத்தியுடன் இம்மருந்துச் சரக்குவகை யெல்லாம்
பரிசுடனே பொடிசெய்து வரிசை போலே
உத்தபண் பானசீனி நெய்தே னோடும்
ஓரொன்று பகையாமல் ஓர்நா ழிய்யும்
பாகுசேர் மண்டலம் கொண்ட பின்(பு)
மண்டைநோய் பகர்கின்ற சூலை வாதம்
பதைபதைத் தோடுமே லிங்க வாதம்
பத்தியதா துக்கள்வர்த் திக்குமெனல் நலமே. (72)

இவை முற்றும்.

2973. பித்தம் நாற்பதின் குணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2254_12
ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. பித்தம் நாற்பதின் குணம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 40

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து; பிழைகள் மிகுதி
ஊ. சிறிது பழுதடைந்த நிலை. ஏட்டெண் 74 இல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நல்லிளமை தனில்நரைத்தல் நாளும் வேர்த்தல்
நயனங்கள் கண்சிவத்த லுடல்வெ ளுத்தல்
சொல்லுமுன்னே தோன்றலுடல் மனந்திக் கென்றல்
துடியிடையார் மேலின்பந் தோன்றல் கண்டால்
நெல்லனுதின் நீராடல் நீரை வேண்டல்
நெடுவழிபோய்ச் சிக்கிநிற்கும் நேரந் தோறும்
பல்லதனைக் கடிக்குமிந்த குணமே கண்டால்
பயித்தியத்தின் குணமிதெனப் பகர லாமே. (1)

ஆ. முடிவு

மூலபாண்டுவின் குணம்:
கால்கை யோய்ந்துடல் கனத்து வெளுத்திடும்
சால வேபலந் தாது குறைந்துபின்
மூல பாண்டுவி தென்ன மொழியலாம்
மாலை நேர்சுரம் வந்து தோன்றிடும். (40)

2974. சிலேற்பன நிதானம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2254_13
ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. . . . .
ஆ. சிலேற்பன நிதானம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 28

3. தோற்றக் கூறுகள்
அ. 4 ஏடு; 8 பக்கம்
ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து; பிழைகள் மிகுதி
ஊ. சிறிது பழுதடைந்த நிலை. ஏட்டெண் 79 இல் நூல் தொடங்குகின்றது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
செந்திரு உமையே கேளாய் சிலேற்பனப் பேர்க்கு ணங்கள்
அந்தமு மதின்பேர் சாத்யம் அசாத்திய மதனின் வேகம்
வந்துறு குறிகள் செய்யும் மருந்துறு செய்கை மற்றும்
சிந்தனை யிவையொன் பானும் கேள்வியால் தெளிந்தி
டாயே. (1)

ஆ. முடிவு
அய்யது கதித்த போது அரியதோ ரிருமல் காசம்
நய்யுறு மாந்தை யீளை நளிர்குளிர் விக்கல் சத்தில்
செய்யுமூச் சடைப்பு நாளும் தீதுறு காச ரோகம்
தொய்யுமே விளைப்புச் சன்னி தோன்றுமென் றிருடி
சொன்னார். (28)

முற்றும்.

2975. அரையாப்பு அஞ்சின் குணம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2254_14
ஆ. வ/489

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. அரையாப்பு அஞ்சின் குணம் .

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்)7

3. தோற்றக் கூறுகள்

அ. 1 ஏடு; 2 பக்கம்

ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. சிறிது பழுதடைந்த நிலை. ஏட்டெண் 83 இல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

செய்வினையால் மாதரிடம் சேருகையால் சேர்ந்தவினைக்
கைவினையால் வாய்க்கால் கடக்கையால் - தொய்யில்
வரையாப் பணைத்தமுலை மாதே மனிதர்க்கு
அரையாப்பில் அஞ்சுவித மாம்.

ஆ. முடிவு

மூளையரையாப்பு:

மூளைதனில் தோன்(றி) முளைத்திடை சுற்றிமெள்ள
வாழுமரைத் தாமரையின் வண்மைதான் - நீளுலகில்
பணமாயி ரங்கொடுத்தெப் பாடுபட் டாலும்
குணமாகா தென்றே குறி.

அரையாப்பு முற்றும்

2976. கிரந்தியின் குணம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2254_15
ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. கிரந்தியின் குணம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் /10

3. தோற்றக் கூறுகள்
அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. சிறிது பழுதடைந்த நிலை. ஏட்டெண் 84 இல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கிரந்தி வருகுறி லட்சணம்:
தாயெரி தந்தை தன்னில் சா(ர்)ந்திடும் தோஷம் தன்னில்
தீயதாம் பொசுப்பே தன்னில் செய்யவே கிரிகை தன்னில்
மேயது கிரந்தி யாகும் விசப்புத்து வெடிகி ரந்தி
ஆயமே தைக்கி ரந்தி கர்ப்பத்தில் கிரந்தி யைந்தே. (1)

ஆ. முடிவு

ஓடுமே பின்னே வீங்கும் உலாவியே திரியுங் கண்டாய்
வாடுமே பின்னே யுள்ளம் வருமுறை வகையைப் போல;
பாடிய மிடறு கன்றிப் பண்புடன் எரிவு தோன்றில்
தேடிய வயண மாகிச் சிலபல கரைப்ப னாமே. (10)

கிரந்தி குணம் முற்றும். சுபம்.

2977. விக்கல் நிதானம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2254_16

ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ......

ஆ. விக்கல் நிதானம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 18

/

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. சிறிது பழுதடைந்த நிலை. ஏட்டெண் 86 இல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மாறிலாத் தாகத் தாலும் மலம்விடா மந்தத் தாலுஞ்
சோறுணில் புரைசேர்ந் தாலும் தொலையிலா நடையி
னாலும் ;
கூறுமுட் டினத்தி னாலும் கொடியசஞ் சாரத் தாலும்
வீறிய வகையா லஞ்சு விக்கலே எய்து மன்றே. (1)

ஆ. முடிவு

நெய்யு முலைப்பாலும் நேர்கவிளக் கெண்ணெயுமாய்
மையனைய பூங்குழலே மத்திச்சக் - கையினால்
பஞ்சதனி லூட்டிப் பதமாக நெஞ்சிலிட
மிஞ்சவரும் விக்கல்போ மே. (18)

விக்கல் நிதானம் முற்றும்.

5. பிற செய்திகள்

தொடக்கத்தில் 'விக்கல் அஞ்சின் குணம்' எனத் தலைப்பிடப் பெற்றுள்ளது.

2978. சத்தில் அஞ்சின் குணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2254_17

ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. சத்தில் அஞ்சின் குணம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 14

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்

ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. சிறிது பழுதடைந்த நிலை. ஏட்டெண் 89 இல் நூல் தொடங்குகிறது

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

செரியா மந்தந் தீரையினால்
சிரசில் பித்தம் வாயுவாகில்
அரியா குடாரி நாமத்தால்
அடரும் பீலிகை பிரளியினால்
உரிய மந்தஞ் சிலப்பகையால்
உருமே சறத்தில் சுரோணிதத்தால்
அரிய மேனி முனிவோர்கள்
கண்ட சத்தில் அஞ்சாமே. (1)

ஆ. முடிவு

ஆவின் காட்டம் பழஞ்சீலை
அனலில் சுட்டுக் கருகவெந்து
தாவிப் பொடித்துத் தண்ணீரில்
தானே போட்டு மிகத்தெளித்து
நீவே சம்பா வரிசியிட்டு
நீர்க்கக் காய்ச்சி உண்பீரால்
மாவீர் மயிலே அதுகொண்டால்
மாறுஞ் சத்தில் தப்பாதே. (14)

முற்றும் சுபம்.

2979. வேர்வை அஞ்சின் குணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2254_18
ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. வேர்வை அஞ்சின் குணம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 10

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8, 9 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. ஏட்டெண் 92-இல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சினமுறு கோபத் தாலும் சிரசிடி முடியி னாலும்
மனமுற வெயில்க ளன்றி மதமுற நடக்கை யாலும்
இனமதி காமச் சிற்றின் பம்மதே மிகுக்கை யாலும்
வினையறு ரெத்தத் தாலு மிகுந்திடும் வேர்வை தானே. (1)

ஆ. முடிவு

மயிலின் இறகு தனைநறுக்கி
வசம்பு கூட்டி ......
பயிலும் மாதே மிகவறுத்து
பருக்கக் கிழியை மிகக்கெட்டி

குயிலே வேர்வை தனக்கொத்த
கொடிய வேர்வை மிகத்தீரும்
மயில்சேர் பொதிகை முனியுரைத்தார்
வேர்வை யஞ்சுக் கவுடதமே. (10)

வேர்வை முற்றும்.

2980. மூத்திரக் கிரிச்சரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2254_19
ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. மூத்திரக் கிரிச்சரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 7

3. தோற்றக் கூறுகள்

அ. 1 ஏடு; 2 பக்கம்
ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. ஏட்டெண் 94 -இல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மாதருடன் மாமயலின் மால்மிகுதி தண்டிப்பால்
சேதமுற வேவருநோய் தேடியே - யாதலால்

வந்துநொந்து மெள்ள வளரும் பிரமியத்தில்
சிந்தைதனிக் காண்பார் தெளிந்து. (1)

ஆ. முடிவு
மொழிந்திடும் பழைய பிரமியந் தன்னில்
முடுக்கிடும் சடுப்பொடு வாதம்
வளர்ந்திடும் பிளவை பவுந்திரம் மிக்க
வருத்தமா மண்டத்தின் சூலை
தளர்ந்திடு மாங்கி வூத்தடைப்பு . . .
தாக்கிடும் வெகுசலக் கழிச்சல்
பொழிந்திடும் மழைபோ லெடுக்கினு மதனின்
போக்கினை போக்குவ துரைப்பாம். (7)

இவைமுற்றும். சுபம்.

2981. மேகம் வருகுறி லட்சணம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2254_20
ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. . . . . . .
ஆ. மேகம் வருகுறி லட்சணம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 9

3. தோற்றக் கூறுகள்
அ. 1 ஏடு; 2 பக்கம்
ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. ஏட்டெண் 95- இல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
போகத்தை மிகுதி யாக்கிப் போசனம் பருகும் போது
தாகத்தை விரும்பிக் கொண்டு தர்மத்தை மறப்பா னாகில்
ஆகத்தைக் கெடுக்க வேண்டி லருந்துத லிறைச்சி மீனை
பாகொத்த மொழியாய் கேளாய் பலுகுநீ ரழிவு தானே. (1)

ஆ. முடிவு
உற்றதொரு (தா)க மேகம் ஒழிவுள்ள தண்ணீர் போல
யத்தியைச் சார்ந்த மேகம் அழகுள்ள பெண்ணைப் போல
வத்ததோ ரிக்கி மேகம் வருந்திய கர்ப்பம் போலப்
பத்திய கரமே கந்தான் பனங்கள்ளு ருரைந்து நாறும். (9)

மேகம் வருகுறி லட்சணம் முற்றும்.

2982. வாத மேகம் நாலுக்கும் பொதுப்பெயர்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2254-21
ஆ. ல/ 489

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. வாதமேகம் நாலுக்கும் பொதுப் பெயர்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 21

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. நல்ல நிலை, ஏட்டெண் 95_ இல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வாதத்தின் சுரத்தின் மேகம் வருணனும் வளைப்பன்
காளை.

சாதசா பத்தி தானும் தனித்தனிக் குறும்ப ராகும்
சீதமே நாலு பேரும் செய்மருந் ததுவால் கேளார்
வேதமே பேசுங் கண்டாய் மெய்யிது குணங்க ளின்னம். (1)

ஆ. முடிவு

ஓர ரைக்கால் குணவிந்தம்
ஒழுகு கருவேல் பிசினரைக்கால்
ஈர ரைக்கால் மரமஞ்சள்
இருப தரைக்கா லாவதான
தேர ரைக்கால் கடுகரைக்கால்
சேர அரைத்துத் தின்பீரால்

(இது 22_ஆம் பாடல். இதற்குமேல் ஏடுகள் இல்லை)

2983. பவுந்திரக் குணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2254_22
ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. பவுந்திரக் குணம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 11

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. சிறிது பழுதடைந்த நிலை. ஏட்டெண் 104-இல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

புவிமிசை வாழும் மாந்தர் புருடர்மங் கையர்க்குத் தானே
சவிகெட வரும்ப வுந்திரம் தான்செயும் குறிகு ணங்கள்
அவையினில் சாத்தி யங்கள் அசாத்திய மதன்பேர் தானும்
குவிமுலை மடவீர் சொல்லக் கேட்டுநீர் குறித்துக்
கொள்ளே. (1)

ஆ. முடிவு

அண்டத்தில் வெடித்த தாலும் அதனின்கீழ் கொடியி
னாலும்
உண்டியில் பீசத் துக்கு முன்பாக வெடித்த தாலும்
கண்டித்த மருந்தி னாலுங் கருவியி னாலும் தீராது
அண்டத்து முனிவோர் சொன்ன ஆயுரு வேத மாமே. (11)

முற்றும். சுபம்.

2984. கிரிகை பதினெட்டின் குணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2254_23

ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. கிரிகை பதினெட்டின் குணம்

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுள், 21

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்

ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து; பிழைகள் மிகுதி

ஊ. சிறிது பழுதடைந்த நிலை. ஏட்டெண் 106_ இல் நூல் தொடங்குகிறது

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தாரணியில் மனுகுலத்தோர் வருந்தாமல்
பயித்தியநோய் வாரா வண்ணம்
காரணமாங் கிரிகைபதி னெட்டுவித
...... மூங் கண்டு பாட
வாரணியும் பூமுலையாள் வல்லபையை
இடப்பாகம் வைத்து வாழும்
சீரணியு மும்மதக்கை யானைமுகன் (1)
மலர்ப்பாதம் சிந்தை செய்வாம்.

ஆ. முடிவு

தாம்பூல மெருக்கின் வேரும் தனிக்கொழுந் தனிவ சம்பு
வேம்பிய பாலை வார்த்து ஒக்கவே அரைத்து உள்ளே
போம்படி கொடுக்க நன்று புணர்முலை மாதி னாளே
தேன்புனை மந்தி ரத்தைச் செவிக்கநோய் ஒழியுந் தானே. (21)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2985. சூலை நிதானம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2254_24
ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. சூலை நிதானம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 14

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. சிறிது பழுதடைந்த நிலை. ஏட்டெண் 109 - இல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
காண்க: தொடர் எண். 2098

ஆ. முடிவு
ஏலவே யிடிபொ டித்தே யிதைநறு நெய்யில் தூவிச்
சாலவே திரள வெந்து தரும்பதத் திறக்கிக் கொண்டு
காலமோர் கரண்டி கொள்ளக் கடுஞ்சுர சூலை யெல்லாம்
ஞாலமே யறியத் தீரும் நாடிநீ யறிந்து கொள்ளே. (14)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2986. பிள்ளைப் பிணி நிதானம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2254_25
ஆ. ல/489

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. பிள்ளைப்பிணி நிதானம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள், 30

3. தோற்றக் கூறுகள்
அ. 5 ஏடு; 10 பக்கம்
ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 3.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து; பிழைகள் மிகுதி
ஊ. சிறிது பழுதடைந்த நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
பொருமுங் களியும் புரண்டுவலி யுண்டாம்
அருவிமுலை யுண்ணா தயரும்-வெருவிமிகச்
சத்திசெய்யும் கண்குழியும் தான்மயங்கி யேயிருக்கும்
மத்தியுறு பேர்மாந்த மாம். (1)

ஆ. முடிவு
கடுக்கா யொன்று பொடிசெய்து
கற்றா ழஞ்சார் சீரகமும்
இடுமோர் சங்கி னளவாக
இதுபோல் மூன்று நாழிவைத்துக்
கொடுமே இனித்தான் நாய்முள்ளு
குலைந்து வளைந்து போவதென்ன
விடுமே யென்று வேள்விசெய்யும்
வேத முனிவ னுரைத்தானே. (30)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2987. அகத்தியர் கடைக்காண்டம் 600

1. நூலகக் குறிப்புகள்

அ. 2255
ஆ. ல/490

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் கடைக்காண்டம் 600
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்[1] 625

3. தோற்றக் கூறுகள்

அ. 159 ஏடு; 318 பக்கம்

ஆ. நீளம் 29 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 6, 7, 8 வரிகள்

உ. சுமாரான கையெழுத்து

ஊ. நல்ல நிலை. 13, 25 ஆகிய ஏடுகளில் ஒரு பக்கம் மட்டும் எழுதப்பட்டுள்ளது. 58-ஆம் ஏட்டின் செய்தி இரண்டு ஏடுகளில் வேறொவரால் எழுதிச் சேர்க்கப் பட்டுள்ளது.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கருணைதரு மைங்கரனே காப்பு வாணி
கலந்திந்தச் சூத்திரந்தான் கருவாய்ப் பாடத்
திருவுமையாள் மனோன்மணித்தாய் செப்பக் கேட்டுத்
தெளிந்தகுரு நூலாகத் திரட்டிப் பாடக்
குருமகிமை சித்தியுண்டாம் ஞானம் வாய்க்குங்
குபேரனென்ற நிதியனந்தங் கூடுங் கூடும்
பெருமை மிக்க கீர்த்தியுண்டாம் சித்தர்க் கெல்லாம்
பெருநூலைக் குறுக்கியிந்த அறுநூறு தானே. (1)

ஆ. முடிவு

பின்பு சொல்வார் பூரணத்தின்
பெலக்கும் வாசித் தாரணையும்
நம்பி நூல்க ளுள்ளதெலாம்
நலமாய்ப் பாரு மெனத்தருவார்
அன்பா யாயிரத் திருநூறுக்
கழகாஞ் சூத்ர மெண்பதுண்டு
பண்டாங் குருவொரு நூற்றன்
பதில் பாரு வழலை பேர்க்கைம்பது

உண்டு வேண்டாம் நூல்கள்இது போதும்
விடாதே நூல்களொருத் தருக்கும்
....
கண்டா யறுநூறு வெளிவிடாதே
கடாசி யெழுதி முகிந்ததுவே. (625)

குருவே துணை.

2988. அகத்தியர் கடைக்காண்டம் 600

1. நூலகக் குறிப்புகள்

அ. 2256
ஆ. ல/491

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் கடைக்காண்டம் 600
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 625

3. தோற்றக் கூறுகள்

அ. 67 ஏடு; 134 பக்கம்
ஆ. நீளம்36.5 செ.மீ., அகலம் 4 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரிகள்
உ. சுமாரான கையெழுத்து
ஊ. இறுதி இரண்டு ஏடுகள் பழுதடைந்துள்ளன. மற்றவை நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்; ஆ. முடிவு
காண்க: தொடர் எண். 2255

2989. அகத்தியர் நிகண்டு 116

1. நூலகக் குறிப்புகள்

அ. 2257_1

ஆ. ல/492

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் நிகண்டு 116

இ. மருத்துவம்

ஈ. செய்யுள், 116

3. தோற்றக் கூறுகள்

அ. 22 ஏடு; 44 பக்கம்

ஆ. நீளம் 40.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து, பிழைகள் மிகுதி

ஊ. நல்ல நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியாம் பராபரமே குருவே அய்யா
அகண்டசரா சரமான நிர்க்குணமே அய்யா
பேதியா நிர்மலமே சூட்சா சூட்சம்
பெரிதான வல்லபையுங் கணபதியுங் காப்பு
நீதியாம் நிகண்டுநூற்றுப் பதினாறுக் குள்ளே
நிகழ்த்தினேன் கருக்கிடையுங் குருக்கிடையு நன்றாய்
வாதிகள்தா னின்னூலை கண்ணில் காட்டார்
வகுத்திட்டேன் நிகண்டுநூல் நன்றாய்ப் பாரே. (1)

ஆ. முடிவு

சொன்னதோ ரிந்தவகை நிகண்டுக் குள்ளே
 சூட்சமுதல் பார்த்தவர்க்கு எதிர்கருவு மில்லை
பின்னையொரு மூலியென்ற பேச்சு வேண்டாம்
 பிரிவான சித்தருட தொழிலும் வேண்டாம்
தின்னதொரு கோடிதவம் புரிவோர்க் கப்பா
 செகந்தனிலே இந்தநூல் கிட்டுங் கிட்டும்
முன்னமே பதினெண்மர் நூல்க ளெல்லாம்
 முறைப்படியே உள்ளகரு நிகண்டில் முத்தே. (116)

முற்றும்.

2990. வால்மீகர் நாடி சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்
 அ. 2257_2
 ஆ. ல/492

2. உள்ளீடு: நூல் விவரம்
 அ. வால்மீகர்
 ஆ. வால்மீகர் நாடி சாத்திரம்
 இ. மருத்துவம்
 ஈ. செய்யுள் 104

3. தோற்றக் கூறுகள
 அ. 12 ஏடு; 24 பக்கம்
 ஆ. நீளம் 40.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
 இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
 ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
 உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி
 ஊ. நல்ல நிலை. ஏட்டெண் 23_இல் நூல் தொடங்குகிறது
 எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
காண்க: தொடர் எண். 1955_1

ஆ. முடிவு
மலக்குறி வான்மீ கர் தான் வாழ்முனி தேவர்க் கெல்லாம்
நலக்குறி சாவு தானும் நலம்பெற வுரைத்த வாறு
மிகக்குறி யுலகத் தோர்க்கும் யாதொரு பேர்க்கு மப்பா
இகத்தொரு மருந்து வேண்டாம் மெய்க்குறி பார்க்க
லாமே. (104)

வான்மீகர் நாடி சாத்திரம் முற்றும்.

2991. வால்மீகர் பூத நாடி சாத்திரம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2257_3
ஆ. ல/492

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. வால்மீகர்
ஆ. வால்மீகர் பூத நாடி சாத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள், 16

3. தோற்றக் கூறுகள்
அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 40.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்

உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி
ஊ. நல்ல நிலை. ஏட்டெண் 34- இல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
ஆ. முடிவு
காண்க: தொடர் எண். 2190 -4.

2992. மணிக்கிடை கயறு சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2257-4
ஆ. ல/492

உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. மணிக்கிடை கயறு சூத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 27

3. தோற்றக் கூறுகள்
அ. 2 ஏடு; 4 பக்கம்
ஆ. நீளம் 40.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8, 9 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. ஏட்டெண் 37 -இல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கமலக்கை மணிக்கிடை கயறு சூத்திரம்
விமலனைப் போற்றியே வேத மாமுனி
திமலமாம் பிணியது சேரச் செப்பிடில்
அமலமாங் குறுமுனி மகிழ்ந்து ரைத்ததே. (1)

ஆ. முடிவு

நண்ணிய பதினொன் றுமொன் றுங் கண்டக்கால்
எண்ணிய மருந்துட னியலு மில்லையேல்
அன் றுதான் விதித்த விதியு மாக்கையால்
தண்ணொன் று சாவது தடுப்ப தில்லையே. (27)

குருவே துணை.

5. பிற செய்திகள்

இதற்குமுன் ஓர் ஏட்டில் கிரந்தியின் குணம், தோஷமேழின் குணம் ஆகியன ஐந்தைந்து செய்யுள்களில் காணப் படுகின்றன.

2993. குஷ்ட நிதானம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2257_5
ஆ. ல/492

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . .
ஆ. குஷ்ட நிதானம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள், 27

3. தோற்றக் கூறுகள்
அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 40.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. ஏட்டெண் 39 -இல் நூல் தொடங்குகிறது
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
சீராகச் சருவத் தையும் சிக்கபட்ட சிக்க வல்ல
காரண யேக னான கடவுளைப் போற்றி செய்து
பார்தனில் நரர்க்கு வந்த பதினெட்டுக் குட்டத் துக்கும்
பேர்குண வடநூல் கண்டு பிரித்துநா னறிவித் தேனே. (1)

ஆ. முடிவு
ஓராறி லுயிரைப் பெற்ற ஒருபொரு ளதனைப் போற்றி
ஈராறோ டாறு ரோகம் எய்திய குணங்கள் சொன்ன
பாரோடு குருப ரன்னும் சுற்றமும் பக்கத் தோரும்
சீராக வாழ்க வென்று செகந்தனில் புகல்வர்
முன்னோர். (27)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2994. மருத்துவச் செய்திகள்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2257-6
ஆ. ல/492

ஆ. முடிவு

வாரணக் களிறு தன்னை வன்மையாய்ப் பூசை பண்ணி
ஏரணி தெய்வத் தானம் இலங்கவே சிறப்புச் செய்து
ஆரண வேதத் தோருக்கு அன்னமே புசிக்கப் பண்ணப்
பார்தனில் பாண்டு தோஷம் பறந்திடு மென்பார்
முன்னோர். (79)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

2996. வாகட தத்துவம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 2257_8
ஆ. ல/492

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....
ஆ. வாகட தத்துவம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் / 238

3. தோற்றக் கூறுகள்

அ. 25 ஏடு; 50 பக்கம்
ஆ. நீளம் 40.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை. ஏட்டெண் 97-இல் நூல் தொடங்குகிறது.
107, 108 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
காணுறு கண்மூன் றாலும் காண்பவர் காணு மாக்கை
பூணுறு சிறிய னாலே புகலுதற் கெளிய தாமோ
நாணுறும் தசைக ளாதி நரம்பொடு நிறுத்துக் காட்டும்
தோணுற மெய்யும் பொய்யும் துலங்கவே வழுத்து
வோமால்

ஆ. முடிவு
சொன்னதோர் தயில வர்க்கம் தூத ....மல்லால்
அன்னபூ .....கொம்பு ஆகியசத் திரந்தன் னோடு
இன்னமுங் கேளாய் ரெட்சை இதுமுதல் நயன ரோகம்
முன்னமே இறக்கு மென்று மொழிந்தனர் முனிவர்
தாமே. (238)

2997. சூலை நிதானம்

1. நூலகக் குறிப்புகள்
அ. 2257_9
ஆ. ல/492

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. சூலை நிதானம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள், 142

3. தோற்றக் கூறுகள்
அ. 31 ஏடு; 62 பக்கம்
ஆ. நீளம் 40.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரிகள்
உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி
ஊ. நல்ல நிலை. ஏட்டெண் 122 -இல் நூல் தொடங்குகிறது
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
காண்க: தொடர் எண். 2098

ஆ. முடிவு
கொடுநீ கரண்டி மண்டலமும்
கூறு மண்ட சூலையுடன்
இடராம் குன்மங் குடல்வாயு
இரைக்கு மாந்திர வாய்வினுடன்
கொடிதாஞ் சலப்பிர மேகமதால்
கூறுந் தொந்தச் சூலையெலாம்
பொடியாம் பக்கச் சூலையிவை (142)
போது மென்று புகன்றனரே.

முற்றும்.

2998. மருந்து செய்முறை

நூலகக் குறிப்புகள்
அ. 2258
ஆ. ல/493

2. உள்ளீடு: நூல் விவரம்
அ. ....
ஆ. மருந்து செய்முறை
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 24

3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்
ஆ. நீளம் 38 செ.மீ., அகலம் 2.5 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரிகள்
உ. தெளிவான கைய்யெழுத்து. பிழைகள் மிகுதி
ஊ. நல்ல நிலை
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கருங்கோழி சூரணம்:
தக்ககருங் குக்குடத்தின் சூர ணத்தைத்
    தாரணியில் மனிதருக்காய்ச் சாற்றக் கேளு
மிக்கதொரு சுக்குடனே திப்பிலியின் மூலம்
    விளங்கமொடு திப்பிலிவால் மிளகோ ரிரண்டும்
ஒக்கநல்ல சீரகமும் குரோசானி ஓமம்
    ஓரொன்றுக் கோர்பலமாய் நிறுத்துக் கூட்டிப்
பக்கமுள்ள அரத்தைசித்ர மூலம் ஓமம்
    பாங்காக வகைக்கிரண்டு பட்டை பத்தே. (1)

ஆ. முடிவு
மேகங் கிரந்தி மிகுந்த சூலை
கைகால் பிடிப்பு மெய்யெலாங் கடுப்பு
கபால சூலை கனமா ரிளைப்பு
வாத சூலை வலிகுன் மத்துடன்
நீரடைப் புடனே நெற்றித் தலைவலி
பறந்திடும் என்றே பரமர் தம் அருளால்
அறிந்து சொன்னோம் அருந்து மவர்க்கே. (24)

2999. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 2259

ஆ. ல/494

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும் அச்சில் ஏறத்தாழ 400 பக்கம் வரும்

3. தோற்றக் கூறுகள்

அ. 168 ஏடு; 336 பக்கம்

ஆ. நீளம் 36 செ.மீ., அகலம்4.5 செ.மீ.,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது

ஈ. ஒரு பக்கத்திற்கு 12 வரிகள்

உ. கிறுக்கலான கையெழுத்து

ஊ. நல்ல நிலை

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சந்தனாதி எண்ணெய்:

குறுந்தொட்டி வேர் பலம் 12, நறு—கிழங்கு பலம் 16, முளை . . . . கிழங்கு பலம் 6, வெல்லம் விராகனெடை 24, குறிகோல் விராகனெடை 6, கல்கரி வி1, சாதிக்காய், கிராம்பு, ஏலம், சடாமஞ்சில், செண்பகமொட்டு, பட்சா, . . . சந்தனம், மஞ்சள்பொடி, கோரோஜனை, குங்குமப்பூ, வெருகின் சட்டம், தாழம்பூ, பிச்சிவேளை, ... அரிச்சிக் கொள்ளவும். சுபம்.

ஆ. முடிவு

அரைத்ததில் சேர்த்தரைக் கின்பா லுர மாமூாக்
'கதில்கலந்து'

விரைத்தனல் வெந்துநெய் யான பதத்தில் மிகவடித்து
உரைத்திடு பத்தியத் தோடே யருந்திட் டொருகரண்டி
யிரைத்திடு கெற்பத்தின் வாயுவும் குன்மமு மேகிடுமே.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

3000. அகத்தியர் 12

1. நூலகக் குறிப்புகள்

அ. 2260
ஆ. ல/495

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் 12
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 12

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்
ஆ. நீளம் 31.5 செ.மீ., அகலம் 3 செ.மீ.,
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்
உ. தெளிவான கையெழுத்து
ஊ. நல்ல நிலை
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தாயான உன்மனையாள் பாதம் போற்றிச்
சாத்திரமோர் ஆயிரத்தி யிருநூற் றுக்குள்
தோயாத கருவொன் று மில்லை யில்லை;
சொல்லடக்க மாயுரைத்தேன் வாலை யொன் று
காயாகு மதைக்குறுக்கி யிருநூறுஞ் சொன்னேன்
கனிபோலே யிந்தநூல் பனிரெண் டுக்குள்
வாயாரச் சொல் லுகிறேன் வகார மார்க்கம்
மதியிரவி அண்டபிண்டம் வளமை கேளே. (1)

ஆ. முடிவு

தானென்ற அண்டபிண்ட குருவைச் செய்யத்
தவம்வேணும் செபம்வேணும் சத்தி வேணும்;
வானென்ற அக்கினியாம் உப்பைக் காண
மதிவேணும் .... வாசம் வேணும்;
நானென்ற ஆணவத்தை யொடுக்க வேணும்;
நலமான சிவயோக நாட்டம் வேணும்;
தேனென்ற சற்குருவைக் காக்க வேணும்;
சித்தியாம் பன்னிரண்டுந் தீர்க்க முற்றே. (12)

நூலாசிரியர் அகர வரிசை

(எண்: நூல் வரிசை எண்)

அகத்தியர்	2503, 2514, 2516, 2528, 2571, 2577, 2597, 2602, 2612, 2653, 2680, 2681, 2704, 2712, 2722, 2732, 2746, 2747, 2781, 2792, 2799, 2803, 2805, 2810, 2811, 2815_2818, 2820, 2824_2827, 2829, 2831, 2851, 2852, 2861, 2876, 2881, 2883, 2884, 2890, 2902_2904, 2910, 2912, 2914_2917, 2927, 2930, 2935, 2936, 2938, 2942, 2947, 2950, 2987_2989, 3000.
அகத்தியர் முதலியோர்	2650
அதிவீரராம பாண்டியன்	2560, 2700, 2763, 2887
அம்பிகைதாசன்	2586
அமிர்தானந்தச் சித்தர்?	2786
ஆசுகவிராசர்	2773
ஆளவந்தார் - வீரை	2536, 2546
ஆறுமுக முனிவர்	2618
இடைக்காடர்	2758
இரத்தின கவிராயர்	2564, 2777, 2778
இராம தேவர்	2517, 2636, 2661, 2668, 2765, 2857, 2858, 2886, 2924

உமாபதி சிவாசாரியார்	2544, 2625
உலகநாத பண்டிதர்	2782
ஏலேல சிங்கர்	2768
ஔவையார்	2558, 2559
கச்சியப்ப சிவாசாரியார்	2568
கச்சியப்ப முனிவர்	2542, 2555
கடவுள் மா முனிவர்	2501, 2543
கடிகைப் புலவர்	2565
கடைப்பிள்ளை	2690, 2727
கணபதி தாசர்	2934
கயிலாச மூர்த்தி	2823
கருவூரார்	2595, 2627, 2676, 2859
கல்லாடர்	2593
கவிராச பண்டிதர்	2659, 2793
கவுசிகர்	2515
கனகசபைத் தம்பிரான்	2538
காக புசுண்டர்	2518, 2688
காங்கேயன்	2637
குகை நமசிவாயர்	2585
குருபாததாசர்	2581
கூடலூரர் கிழார் - மதுரை	2566
கொங்கணர்	2603, 2705, 2726, 2767
கோரக்கர்	2614, 2779
சட்டை முனி	2596, 2599, 2682, 2730, 2731, 2736-2740, 2770, 2791, 2821, 2822, 2845, 2879, 2925
சமண முனிவர்கள்	2775
சிதம்பரநாத முனிவர்	2570
சிவஞான முனிவர்	2540, 2550, 2557

சிவப்பிரகாசர் - துறை மங்கலம்	2551
சுந்தரானந்தர்	2812, 2814
சுப்பிரமணியர்?	2846
செயமுனி	2604
சேக்கிழார்	2556
சேந்தனார்	2549
சேஷம்மாள்	2576
தட்சிணாமூர்த்தி	2794, 2840, 2880, 2911, 2948
தன்வந்திரி	2830, 2847, 2875, 2885
தாயுமானவர்	2502
திரிகூடராசப்ப கவிராயர்	2539
திருஞானசம்பந்தர் முதலியோர்	2529, 2533
திருமலைநாதர் - புராண	2553
திருமாளிகைத் தேவர் முதலியோர்	2548
திருமூலர்	2562, 2677, 2703, 2787, 2870
திருவள்ளுவர்	2580, 2611
நஞ்சையப் புலவர் - திங்களூர்	2592
நமச்சிவாயக் கவிராயர் - விக்ரமபுரம்	2552
பதஞ்சலி முனிவர்	2862
பரஞ்சோதி முனிவர்	2561, 2567
பரமானந்தர்	2796, 2797, 2932
பவனந்தி முனிவர்	2534
பாப விநாச முதலியார்	2783
பிரமமுனி	2660, 2665, 2860, 2863

புலத்தியர்	2839
போகர்	2598, 2600, 2613, 2638, 2691, 2710, 2854
மச்சமுனி	2632, 2670, 2702, 2709, 2865
மண்டல புருடர்	2591, 2742
மறைஞான சம்பந்தர்	2563, 2569
மாணிக்க வாசகர்	2547, 2608
மீனாட்சி சுந்தரம்பிள்ளை – மகாவித்வான்	2537, 2545, 2554
மீனாட்சிதாசன்	2587
யூகி முனி	2835
யோக முனி	2949
ரோமரிசி	2513, 2628, 2918
வரரிசி பகவான்	2807
வாமதேவர்	2745
வால்மீகர்	2873, 2965, 2990, 2991
வில்லிப்புத்தூராழ்வார்	2535, 2772
வீரமாமுனிவர்	2878
வைத்தியநாத தேசிகர்	2594
ஆசிரியர் பெயர் இல்லாத நூல்கள்	2504–2512, 2519–2527, 2530–2532, 2541, 2572–2575, 2579, 2582–2584, 2588–2590, 2601, 2605–2607, 2609, 2610, 2615–2617, 2619–2624, 2626, 2629–2631, 2633–2635, 2640–2645, 2647–2649, 2651, 2652, 2654–2658,

2662_2664, 2666, 2667,
2669, 2671_2675, 2678,
2679, 2683_2687, 2689,
2692_2699, 2701, 2706_
2708, 2711_2714, 2716_
2721, 2723_2725, 2728,
2729, 2733_2735, 2741,
2743, 2744, 2748_2757,
2759_2762,2764, 2766,
2769, 2771, 2774, 2776,
2780, 2784, 2785, 2788_
2790, 2795, 2798, 2800_
2802, 2804, 2806, 2808,
2809, 2813, 2819, 2828,
2832_2834, 2836_2838,
2841_2844, 2848_2850,
2853, 2855, 2856, 2864,
2866_2869, 2871, 2872,
2874, 2882, 2888, 2889,
2891_2901, 2905_2909,
2913, 2919_2923, 2926,
2928, 2929, 2931, 2933,
2937, 2939_2941, 2943_
2945, 2951_2961, 2963,
2964, 2966_2969, 2971_
2986, 2992_2999.

பின்னிணைப்பு : 2

நூற்பெயர் அகர வரிசை.

(எண். நூல் வரிசை எண்)

அகத்தியர் இரச வர்க்கம் 2818

அகத்தியர் இரத்தினச்சுருக்கம் 2829

அகத்தியர் கடைக்காண்டம் 600 2987, 2988

அகத்தியர் கர்மகாண்டம் 300 2826

அகத்தியர் கர்மசூத்திரம் 300 2803

அகத்தியர் கனகமணி லட்சியச் சுருகம் 2528

அகத்தியர் குழம்பு 2936

அகத்தியர் சார்ப்பராஜ மாத்திரை 2516

அகத்தியர் சாலம் 1200 இரண்டாம் காண்டம் 2811

அகத்தியர் சூத்திரம் 2653

அகத்தியர் சூத்திரம் 10 2881

அகத்தியர் சூத்திரம் 51 2930

அகத்தியர் சூத்திரம் 80 2816

அகத்தியர் ஞானகாவியம் 1000 இரண்டாம் சருக்கம் 2747

அகத்தியர் ஞானகாவியம் 1000 முதல் சருக்கம் 2746

அகத்தியர் ஞானம் 20 2903

அகத்தியர் ஞானம் 100 2817

அகத்தியர் தண்டகம் 2914

அகத்தியர் திருநடன
சூத்திரம் 41 — 2910
அகத்தியர் தீட்சாவிதி 850 — 2810
அகத்தியர் தீட்சை 10 — 2722
அகத்தியர் நிகண்டு 116 — 2989
அகத்தியர் பச்சை 16 — 2704, 2824, 2912
அகத்தியர் பரிபூரணம் 1200 — 2503
அகத்தியர் பின்நூல் 80 — 2820
அகத்தியர் புலத்தியருக்கு
உபதேசம் — 2902
அகத்தியர் பூசாவிதி — 2602
அகத்தியர் பூசாவிதி 36 — 2815
அகத்தியர் பூரணசூத்திரம் 216 — 2577
அகத்தியர் முப்பு 16 — 2861
அகத்தியர் யோகம் — 2514
அகத்தியர் லோக மாரணம் — 2712, 2781, 2792
அகத்தியர் வசூரி சூத்திரம் 80 — 2884, 2950
அகத்தியர் வாக்கியம் 16 — 2904
அகத்தியர் வாகடம் 1500 — 2805, 2890, 2927.
அகத்தியர் வாதத்திரட்டு 48 — 2852
அகத்தியர் வைத்தியக் கும்மி — 2876
அகத்தியர் வைத்தியக்கும்மி — 2876
அகத்தியர்
வைத்திய சூத்திரம் 86 — 2938
அகத்தியர் வைதியம் 50 — 2825, 2935
அகத்தியர் வைத்தியம் 108 — 2831
அகத்தியர் 8 — 2597
அகத்தியர் 12 — 3000
அகத்தியர் 16 — 2883
அகத்தியர் 36 — 2799

அகத்தியர் 205	2827, 2942
அகத்தியர் 1200 இரண்டாம் காண்டம்	2916
அகத்தியர் 1200 முதற் காண்டம்	2915
அகத்தியர் 1200 மூன்றாம் காண்டம்	2917
அகத்தியர் 1500	2571
அட்டகர்ம நிகண்டு	2750
அணியரங்கப்பத்து	2574
அபரோட்ச ஆத்மாநுபவ தீபிகை	2526
அம்மன் அகவல்	2693
அரிச்சந்திர புராணம் மூலமும் உரையும்.	2773
அருணகிரி அந்தாதி மூலமும் உரையும்	2585
அருணாசல வருகைப்பத்து	2589
அருணாசாலப்பத்து	2588
அருள் மலையாண்டவர் திருப்புகழ்	2592
அரையாப்பு அஞ்சின் குணம்	2975
அவத்தைக் குறிலட்சணம்	2642
அவத்தை லட்சணம்	2941
ஆதிமூலப்பத்து	2610
ஆருட நூல்	2725, 2905
ஆறாதார தரிசனம்	2721
இந்தர சாலம்	2940
இயமன் தேர்த்திரப்பத்து	2771
இரணிய சம்மார நாடகம்	2778

இராசி ஆருடம்	2715, 2760
இராமதேவர் ஆயிரத் திரட்டு	2636
இராமதேவர் கருக்கடைச் சூத்திரம் 500	2765, 2857, 2858, 2924
இராமதேவர் சூத்திரம் 216	2886
இராமதேவர் சோதிடம்	2517
இராமதேவர் பட்சணி	2661
இருநூற் சமரசம்	2618
இலவண பஞ்சாட்சரம்	2657
ஈஸ்வரார் குழம்பு	2937
உடலறி விளக்கம்	2968
உதர கிரிகை	2966
உதர நிதானம்	2523
உபமான சங்கிரகம் - கேசாதிபாதம்	2564, 2777
உபமான சங்கிரகம் - பாதாதிகேசம்	2565
உரிச்சொல் நிகண்டு	2637
உலகந்தாதி	2552
உலக நீதி	2782
எழுத்தாணி லட்சண நூல்	2584
ஒருமொழிக் கருத்தம்	2944
கடுக்காய் சாத்திரம்	2957
கடைப்பிள்ளை ஏகாட்சர பூரணம்	2727
கடைப்பிள்ளை நவக்கிரக சுகிஷம்	2690
கந்தபுராணம்	2528
கம்பரந்தாதி	2557

கயிலாச மூர்த்தி வாதம் -	
நடுநூல் ஞானம்	2823
கருக்கடை சூத்திரம்	2662
கரும சாந்தி	2780
கருவூரார் பலதிரட்டு	2676, 2859
கருவூரார் பூசாவிதி	2595
கருவூரார் ரசவாத நொண்டி	2627
கல்லாடத் திரட்டு	2593
கவுசிகர் கருத்த குழம்பு	2515
கற்ப முப்புக் குருநூல் 100	2869
கஷாய மருந்துகள்	2509
காகபுகண்டர் ஞானம் 80	2518, 2688
காய கற்பவிதி 51	2768
காவிய சூத்திரம் 16	2864
கிரந்தியின் குணம்	2976
கிரிகை பதினெட்டின்	
குணம்	2984
கிரிகை 18	2841
கிரியாக் கிரமம்	2669
குசலவ நாடகம்	2774
குடந்தையந்தாதி	2545
குணவாகடம்	2804, 2837, 2844
குமரேச சதகம்	2581
குருநாடி	2764
குருநாடி சாத்திரம்	2680, 2681, 2851, 2947
குருநாடி 15	2734
குளிகை விதி	2531
குற்றாலத் தலபுராணம்	2539
குஷ்ட நிதானம்	2993
கூப சாத்திரம்	2755

கூவல் சல்லியம்	2753
கூவல் சாத்திரம்	2752
கொக்கோகம்	2763, 2887
கொக்கோகம் மூலமும் உரையும்	2700
கொங்கணர் கருக்குளிகை 8	2705
கொங்கணர் தண்டகம்	2726
கொங்கணர் நடுக்காண்டம் 1000	2767
கொங்கணர் மௌன உபதேசம்	2603
கொடிக்கவி மூலமும் உரையும்	2625
கோயிற்புராணம்	2544
கோரக்கர் கற்பம்	2614
கோரக்கர் பூரண நூல்	2779
சச்சிதானந்த மாலை	2579
சசிவன்ன போதகம் மூலமும் உரையும்	2766
சட்டைமுனி காயகற்பம் 100	2739
சட்டைமுனி காயகற்பம் 200	2770
சட்டைமுனி சூத்திரம் 8	2599
சட்டைமுனி சூத்திரம் 16	2879
சட்டைமுனி சூத்திரம் 200	2740
சட்டைமுனி ஞானக் குறம்	2925
சட்டைமுனி ஞானம் 100	2596, 2738, 2822
சட்டைமுனி நிகண்டு	2682, 2730
சட்டைமுனி முன்ஞானம் 100	2737, 2821
சட்டைமுனி வகாரம்	2731, 2736, 2791

சட்டைமுனி வைத்திய மரணநாடி 25	2845
சடாதார தேவிபூசை	2664
சண்டமாருதக் குழம்பு	2671
சத்தில் அஞ்சின் குணம்	2978
சத்துரு சங்காரம்	2658
சமரசனுக்கு உபதேசம்	2943
சர்ப்ப நூல் - சுருக்கம் 36	2846
சர நூல் உரை	2634
சர நூல் மூலமும் உரையும்	2635, 2743, 2922
சரஸ்வதி தோத்திரங்கள்	2527
சருவ பட்சணி	2920
சல்லியம்	2578, 2651, 2718, 2795
சற்குணக்குரவன் றன்னொடு புலம்பல்	2621
சன்னி நிதானம்	2522, 2970
சாமுத்திரிகா லட்சணம்	2893
சித்தர் ஆனந்தக் களிப்பு	2786
சித்தர் தத்துவத்திரட்டு	2650
சித்தர் வெண்பா 105	2877
சிதம்பர புராணம்	2553
சிந்தாமணி 1500 - நாடியின் குணம்	2909
சிலேற்பன நிதானம்	2974
சிவசமவாத கண்டனம்	2620
சிவஞான குருதோத்திரப் பத்து	2913
சிவஞான தீபம்	2541
சிவஞானபோதச் சிற்றுரை	2626

சினேந்திரமாலை	
மூலமும் உரையும்	2641
சீவசம்போதனை	2776
சுந்தரானந்தர் கேசரி 56	2812
சுந்தரானந்தர் வாதமுறை 110	2814
சுப்பிரமணியர் ஞானம் 1	2686, 2897
சுப்பிரமணியர் ஞானம் 5	2901
சுப்பிரமணியர் ஞானம் 8	2900
சுப்பிரமணியர் ஞானம் 16	2899
சுப்பிரமணியர் ஞானம் 32	2898
சுப்பிரமணியர் ஞானம் 50	2896
சுப்பிரமணியர் மகாவிஞ்சை	2692
சுர சிகிச்சை - குளிகை	2570
சுர நிதானம்	2508, 2956, 2967
சுர நூல்	2669
சூடாமணி நிகண்டு (11)	
மூலமும் உரையும்	2591, 2742
சூரனூர் நொண்டி நாடகம்	2759
சூலை நிதானம்	2720, 2985, 2997
செயமுனி மனை நூல்	2604
சென்ம நிதானம்	2964
சேக்கிழார் பிள்ளைத் தமிழ்	2537
சேஷம்மாள் கீர்த்தனைகள்	2576
சைவ சமயநெறி	2563, 2569
சோதிடச் செய்திகள்	2605, 2606, 2751
சௌந்தரிய லகரி	2659, 2793
சௌமிய சாகரம் 1000	2668
ஞானக் கும்மி	2586
ஞான நூல்	2926
ஞானமார்க்க அட்சரம்	2590

ஞான வாசிட்டம் 2546
ஞான வாசிட்டம்
மூலமும் உரையும் 2536
ஞானாகம விளக்கம் 2622
ஞானானந்த தீபம் 2929
தட்சிணாமூர்த்தி ஆதாரக்
கட்டளை 2519
தட்சிணாமூர்த்தி
சாலநிகண்டு 2794
தட்சிணாமூர்த்தி
சித்திரவெண்பா 2911
தட்சிணாமூர்த்தி நயனவிதி 2840
தட்சிணாமூர்த்தி
வைத்தியம் 21 2880
தட்சிணாமூர்த்தி
வைத்தியம் 50 2948
தணிகைப்
பதிற்றுப்பத்தந்தாதி 2555
தத்துவக் கட்டளை 2679
தத்துவக் கீர்த்தனைகள் 2785
தர்க்க நூல் 2607
தன்வந்திரி நிகண்டு 300 2830
தன்வந்திரி வைத்தியக்
கும்மி 300 2875
தன்வந்திரி வைத்தியம் 200 2847
தன்வந்திரி வைத்திய
முப்புத்திரட்டு 2885
தாயுமானவர் பாடல்கள் 2502
திசைநாடி சாத்திரம் 2963
திரிபுரை மாலை 2744

திருக்குறள்-ஓர் உரையுடன்	2580, 2611
திருப்பல்லாண்டு	2549
திருமந்திரம்	2562
திருமுல்லைவாயிலந்தாதி	2540, 2550
திருமூலர் ஞானம்	2787
திருமூலர் நாடி	2870
திருமூலர் 8 - கிரந்தி எண்ணெய்	2703
திருமூலர் 200	2677
திருமூலரகவல்	2756
திருமேனி விளக்கம்	2624
திருவாசகம்	2547, 2608
திருவாட்போக்கிப் புராணம்	2594
திருவாதவூரர் புராணம்	2501, 2543
திருவாலவாய்க் கட்டளை	2933
திருவிசைப்பா	2548
திருவிடைமருதூர்த் திரிபந்தாதி	2554
திருவிளையாடற் புராணம்	2561, 2567
திருவொற்றியூர் நவரத்தினம்	2573
திருவொற்றியூர் வடிவுடையம்மன் பிள்ளைத்தமிழ்	2538
தென்கரை நாட்டுப் பட்டயம்	2789
தேவாரப் பதிகங்கள்	2529, 2533
தொடுகுறி சாத்திரம்	2716
தோற்ற ஒடுக்கம்	2601
நசகாண்ட வெண்பா 100	2878
நபிகள் வரலாறு	2802

நயனவிதி	2530
நல்வழி	2559
நவக்கிரக சுகிஷம்	2689
நவகண்ட சுகிஷம்	2612
நவமத கண்டனம்	2623
நவலோக மாரணச் சுருக்கம் 205க்குச் சூத்திரம் 16	2921
நன்னூல்-சங்கர நமச்சிவாயர் விருத்தி	2534
நாடி சாத்திரம்	2648
நாடி சூத்திரம்	2962
நாடி நிதானம்	2505
நாதாந்தத் திறவுகோல்	2784
நாலடியார் மூலமும் உரையும்	2775
நித்திய கன்ம நெறி	2570
நிதிபெறு தீபம்	2511
நிழல் குத்துச் சூத்திரம்	2512
நெஞ்சறி விளக்கம்	2934
நோய்க்கு மருந்து	633, 2640, 2643, 2667, 2674, 2675, 2696, 2699, 2708, 2713, 2714, 2723-2735, 2761, 2769, 2806, 2809, 2838, 2850, 2853, 2856, 2868, 2871, 908, 2931, 2999.
பட்சி சாத்திரம்	2647, 2762
பதஞ்சலி வாத சூத்திரம் 20	2862
பரப்பிரம வாக்கியம்	2617
பரமானந்தர் ஞானம்	2932
பரமானந்தர் புலம்பல்	2797

பரமானந்தர் மௌனஞானம் 2796
பலசரக்கு நிதானம் 320 2832
பலசாத்திரத் திரட்டு 2906
பலதிரட்டு 2790, 2953
பவுந்திரக் குணம் 2983
பாபவிநாச முதலியார் பதம் 2783
பாரத அம்மானை 2945
பாலக்கிரக தோஷம் 2507
பால கிரிகை 2849
பித்த எண்ணெய் அகவல் 2959
பித்தம் நாற்பதன் குணம் 2973
பிரபுலிங்க லீலை 2551
பிரமமுனி கருக்கிடைச்
சூத்திரம் 250 2863
பிரமமுனி வைத்திய சூத்திரம் 2660
பிரமமுனி வைத்தியம் 700 2665, 2860
பரமீசர் பதிற்றுப்பத்தந்தாதி 2542
பிள்ளைத் தோஷம் 2995
பிள்ளைப்பிணி நிதானம் 2986
புசிப்புவிதி - நாடி நிதானம் 2506
புலத்தியர் 1200 2839
புவன கோசரம் 2638
புவனை அகவல் 2583
பூசாவிதி 2813
பூமி சல்லியம் 2754
பூரண சந்திரவாலை 2828
பெரிய சுர ராமபாணக்
குளிகை 2707
பெரிய புராணம் 2556
போகர் சூத்திரம் 8 2600

போகர் சூத்திரம் 68	2710
போகர் பூசாவிதி	2598, 2613, 2854
போகர் முதற்காண்டம் 360	2691
மங்கை வெண்பா	2891
மச்சமுனி சூத்திரம் 80	2709
மச்சமுனி தீட்சைவிதி	2670
மச்சமுனி வேதாந்தம் 800	2632
மச்சமுனி 8	2702
மச்சமுனி 800	2865
மணிக்கிடை கயறு சூத்திரம்	2992
மணிவாசகர் தெளியுண்மைப் போதகம்	2788
தன மோகன விலாசம்	2888
மயில் பத்து	2575
மரண நாடி	2874
மருத்துவச் செய்திகள்	629, 2654, 2833, 2866, 2951, 2952, 2994.
மருந்து செய்முறை	525,2532, 2645, 2652, 2673, 2678, 2694, 2706, 2711, 2733, 2800, 2819, 2834, 2836, 2867_ 2892, 2928, 2939, 2954, 2958, 2960, 2961, 2998.
மலைவாகடம்	2728
மனையலங்காரம் மூலமும் உரையும்	2724
மாந்திரீகம்	615, 2630, 2639, 2644, 2649, 2672, 2683, 2695, 2697, 2698, 2701, 2712, 729, 2741, 2757, 2798, 2872, 2895, 2919.
மீனாட்சியம்மன் விருத்தம்	2749

மீனாட்சியம்மை அகவல்	2587
முத்ததிகாரம்	2616
முதுமொழிக் காஞ்சி	2566
முந்திரிலக்கம்	2504
முந்நூற் சமரசம்	2619
மூத்திரக் கிரிச்சரம்	2980
மூலிகை அகராதி	2848
மேகக் கோடாலி	2521
மேக நிதானம்	2520
மேகம் வருகுறிலட்சணம்	2981
யூகிமுனி வாதவைத்தியம் 1000	2835
யோகமுனி நாடி சாத்திரம்	2949
ரோமரிஷி ஞானம் 51	2628
ரோமரிஷி பாடல்	2513
ரோமரிஷி 16	2918
வடிவேல் சதகம்	2582
வரரிஷிபகவான் வாகடம்	2807
வருடாதி நூல்	2758
வலியஞ்சின் குணம்	2971
வள்ளி திருமணக் கீர்த்தனைகள்	2748
வாக்குண்டாம்	2558
வாகட தத்துவம்	2996
வாத நிதானம்	2972
வாத மேகம் நாலுக்கும் பொதுப்பெயர்	2982
வாமதேவர் சூத்திரம்	2745
வால்மீகர் நாடி சாத்திரம்	2990

வால்மீகர் பூதநாடி சாத்திரம்	2873, 2965, 2991
விக்கல் நிதானம்	2977
விநாயகர் அடைக்கலப் பதிகம்	2609
விரணரோக குணவாகடம்	2843
வில்லிபாரதம்	2535
வில்லிபாரதம் மூலமும் உரையும்	2772
விவேகசாரம்	2923
விவேக சிந்தாமணி	2894
விஷபாக நிதானம்	2524
வெற்றி வேற்கை	2560
வேர்வை அஞ்சின் குணம்	2979
வைத்திய அகராதி	2572, 2801
வைத்திய அட்டவணை	2889
வைத்தியக் கடைக்காண்டம் 600	2719
வைத்திய சார சங்கிரகம்	2907
வைத்திய தர்க்கம்	2656
பெயர் தெரியாத தத்துவ நூல்கள்	2663, 2687
பெயர் தெரியாத தீட்சை நூல்	2684
பெயர் தெரியாத மருத்துவ நூல்கள்	631, 2646, 2655, 2666, 2685, 2808, 2842, 2855, 2882, 2946, 2955.

பின்னிணைப்பு - 3.

பொருட் பகுப்பு வரிசை

(எண்: சுவடிகளின் தொடர் எண்)

இலக்கணம்(ச)	1971, 1998, 2018, 2041, 2112, 2142 ஆக 6 சுவடிகள்.
உரைநடை இலக்கியம்(ம)	2161 ஆக 1 சுவடி
காப்பியம்(ந)	1951, 1972, 1980, 1986, 2000, 2137, 2138 ஆக 7 சுவடிகள்.
சிற்றிலக்கியம்(ய)	1974, 1975, 1977, 1979, 1982, 1985, 1987, 1989, 1990, 1992, 2004, 2009, 2010, 2013, 2015, 2016, 2056, 2114, 2124, 2154 ஆக 20 சுவடிகள்.
சைவத்திருமுறை(ண)	1968, 1970, 1984, 1991, 1996, 2026 ஆக 6 சுவடிகள்
சோதிடம்(வ)	1961, 2012, 2038, 2039, 2044, 2049, 2095, 2102, 2113, 2120, 2123, 2125, 2127, 2202, 2213, 2225 ஆக 16 சுவடிகள்
தத்துவம்(ட)	1963, 1965, 1973, 1978, 1983, 1997, 2001, 2007, 2017, 2023, 2030, 2031, 2035, 2042, 2059, 2065, 2074, 2116, 2131, 2141, 2148, 2149, 2156, 2211, 2226, 2229, 2232, 2235, 2236, 2240, 2242 ஆக 31 சுவடிகள்

தலபுராணம்(ப)	1976, 1981, 1988, 1995, 1999, 2021 ஆக 6 சுவடிகள்
நாட்டுப்பாடல்(ர)	2243 ஆக 1 சுவடி
நீதிநூல்(ள)	1993, 1994, 2146, 2203, 2237 ஆக 5 சுவடிகள்
பதினெண்கீழ்க் கணக்கு(ங)	2008, 2027, 2140 ஆக 3 சுவடிகள்
பல்வகை நூல்கள்(ற)	1952, 1954, 1956, 1958, 1959, 1962, 2014, 2020, 2022, 2024, 2025, 2040, 2052, 2063, 2064, 2071, 2072, 2078, 2079, 2081, 2088, 2099, 2101, 2103, 2107, 2110, 2115, 2117, 2119, 2121, 2128, 2136, 2147, 2150, 2152, 2184, 2198, 2199, 2205_2210, 2212, 2214, 2228 ஆக 48 சுவடிகள்
பிற தோத்திரங்கள்(த)	1966, 2011, 2019, 2118, 2221, 2239 ஆக 6 சுவடிகள்
மருத்துவம்(ல)	1953, 1955, 1960, 1964, 1967, 1969, 2002, 2003, 2005, 2034, 2037, 2045, 2047, 2048, 2050, 2054, 2055, 2057, 2058, 2060_2062, 2066, 2068_2070, 2073, 2075, 2076, 2083, 2085, 2087, 2090_2094, 2097, 2098, 2100, 2104, 2106, 2108, 2109, 2126, 2129, 2130, 2132_2135, 2143, 2145, 2151, 2153, 2155, 2158_2160, 2162 _ 2173, 2175_2178,

	2180_2183, 2185 _ 2197, 2200, 2201, 2215_2220, 2223, 2224, 2227, 2230, 2231, 2233, 2234, 2238, 2241, 2244 _2260 ஆக 126 சுவடிகள்
மாந்திரீகம்(ழ)	1957, 2006, 2028, 2029, 2036, 2043, 2046, 2051, 2053, 2067, 2077, 2080, 2082, 2084, 2086, 2089, 2096, 2105, 2114, 2122, 2144, 2157, 2174, 2179, 2204, 2222 ஆக 26 சுவடிகள்
மெய்கண்ட சாத்திரம்(ரு)	2032, 2033 ஆக 2 சுவடிகள்.

பின்னிணைப்பு-4.

தமிழ்ப் பல்கலைக்கழகம்

ஓலைச்சுவடித்துறை சுவடி நூலகம்
தமிழ் ஓலைச்சுவடிகளின் பொருள்வாரி எண்ணிக்கை
சுவடி எண்ணிக்கை

வ.எண்	பொருள்	தொகுதிகள்						மொத்தம்
		1	2	3	4	5	6	
1.	இலக்கணம்	20	11	2	12	12	6	63
2.	உரைநடை இலக்கியம்	5	6	7	14	11	1	44
3.	காப்பியம்	50	33	22	33	24	7	169
4.	சிற்றிலக்கியம்	28	22	20	45	47	20	182
5.	சைவத்திருமுறை	21	12	13	12	2	6	66
6.	சோதிடம்	14	27	14	20	33	16	114
7.	தத்துவம்	64	94	57	18	9	31	273
8.	தலபுராணம்	25	12	7	19	9	6	78
9.	திவ்வியப் பிரபந்தம்	-	2	92	1	-	-	95
10.	நாட்டுப் பாடல்	4	4	24	28	32	1	93
11.	நீதிநூல்	4	4	27	37	32	5	109
12.	பதினெண் கீழ்க்கணக்கு	6	7	8	6	1	3	31
13.	பல்வகை நூல்கள்	16	28	36	63	86	48	277
14.	பாட்டும் தொகையும்	1	1	-	-	-	-	2
15.	பிற தோத்திரங்கள்	10	12	8	3	13	6	52
16.	மருத்துவம்	59	132	62	44	72	126	495
17.	மாந்திரீகம்	6	19	6	13	11	26	81
18.	மெய்கண்ட சாத்திரம்	13	5	6	-	-	2	26
	மொத்தம்	346	431	411	368	394	310	2260